ஸ்ரீ

1918 - இண்டர்மீடியட்

தமிழ்ப்பாட புத்தகம்

முதற்பாகம்

1. வில்லிபுத்தூரார் பாரதம்,
2. திருக்கருவைவெண்பாவந்தாதி,
3. நன்னூற் பாயிரம்

உரையுடன்

சே. கிருஷ்ணமாசாரியரால்

சென்னை புரசை:

கணேச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

விலை ரூபாய் - 2.

1916.

வில்லிபுத்தூராழ்வார் வரலாறு.*

வில்லிபுத்தூராரென்பவர், தமிழில் மகாபாரதம்பாடிய ஒருமகாகவி. இவர் பிராமணசாதியிற் பிறந்தவரென்பது, இந்நூற் சிறப்புப்பாயிரத்தில் "வண்ண நான்கினு முயர்ந்துளோ னொருமுனி வந்தான்" என்றதனால் விளங்கும்.

இவருடைய மதம் வைஷ்ணவ மென்பது, சிறப்புப்பாயிரத்தில் "பைந் துழாய்முடிப் பரமனைப் பலகவித்துறையுஞ், சிந்தையான்மொழிந் தன்பர்தந்திருவுளம்பெற்றோன்" என வருதலினாலும், இவர் இப்பாரதத்தின் முதலிலும் இந்நூற்சருக்கங்களின் தொடக்கத்திலும் ஸ்ரீமகாவிஷ்ணுவின்விஷயமாகவே பலவாறு கடவுள்வாழ்த்துக் கூறியுள்ளதனாலும், "எங்கள்மாதவன்" என்று நூலைத் தொடங்கியிருப்பதனாலும், வில்லிபுத்தூராழ்வாரெனத் திருநாமமுடைமையாலும், தெளிவாகத் தெரியவருகின்றது.

இவர் ஒன்பதாம்போர்ச்சருக்கத்துக் காப்புச்செய்யுளில் "ஓராறுபேதசமயங்களுக்கு முருவாகிநின்ற வொருவ, னீராறுநாம முறைசெய்து மண்கொடிடுவார்கள்காணு மிமையோர்" எனத் துவாதசோர்த்துவபுண்டரத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளதனால், இவர் திருமண்காப்புச்சாத்தும் ஸ்ரீவைஷ்ணவரென விளங்கும். இன்னும், இவர் திருமாலினிடத்துமாத்திரமேயன்றி அப்பெருமானடியார்களுட் சிறந்தவரான ஆழ்வார்களிடத்தும் ஈடுபாடுடையவ ரென்பதை, பதினைந்தாம் போர்ச்சருக்கத்துக்காப்பில் "கொத்தவிழ்த்த சோலைமன்னு குருகையாதி நெஞ்சிலே, வைத்த முத்திநாதன்" என நம்மாழ்வாரையும், பத்தாம்போர்ச்சருக்கத்துக் காப்பில் "கலியனெங்கள் மங்கையாதி கண்டுகொண்ட நாமமே" எனத் திருமங்கையாழ்வாரையுங் கூறியுள்ளதனாற் காண்க.

இவர் திருவவதரித்த ஊர், நடுநாட்டிலுள்ள சனியூ ரென்பது.

நடுநாடென்று சொல்லப்படுகிற திருமுனைப்பாடிநாட்டிற் சனியூரிலே பிராமணசாதியிலே வைஷ்ணவமதத்தில் வீரராகவாசாரியரென்பவர்க்குத் திருக்குமாரராய்த் திருவவதரித்த இவ்வில்லிபுத்தூரார், இளமையிலேயே நல்லாசிரியரையடுத்துக் கல்விகற்று, இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழிலும் மிகவல்லவராய், வடமொழியிலும் மிக்கதேர்ச்சி பெற்று, ஆசு மதுரம் சித்திரம் விஸ்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் மிகஎளிதில் அமிழ்தினும் இனியனவாகப் பாடவல்லராய், சேரசோழபாண்டிய ரென்னுந் தமிழ்நாட்டுமூவேந்தர்களாலும் மிக்க சிறப்புடன் விரும்பியழைக்கப்பட்டு ஆங்காங்குச்சென்று தமதுகல்வித்திறத்தைப் பலவகையாலுங்காட்டி அவர்களைக் களிப்பித்து, அவர்கள் அன்போடு அபிமானித்து மிகுதியாகவழங்கிய சிறந்த பல பெரும்பரிசுகளைப் பெற்று, பற்பலகவித்துறைகள்பாடித் திருமாலை இரவும்பகலும் எப்பொழுதுந் துதித்துக்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் தமது கல்விப்பெரும்புகழைப் பரவச்செய்துவந்தார். அங்ஙனம் வருகையில், முற்கூறிய திருமுனைப்பாடிநாட்டிலே வக்கபாகையென்னும் இராசதானியில் வீற்றிருந்து செங்கோல்செலுத்தி, தலை இடை கடையென்னும் மூவகைச் சங்கத்திலே வளர்ந்துவந்த தமிழ் பின்பு பங்கத்தையடை

---

* இவ்வரலாறு, இவர்குமாரராகிய வரந்தருவார் [வரதாசாரியர்] இருபத்திரண்டு செய்யுள்களாற் செய்துள்ள சிறப்புப்பாயிரத்தைப் பிரதான ஆதாரமாகக் கொண்டும், மற்றுஞ்சில ஆதாரங்களால் வேறு சில விஷயங்களைச் சேர்த்தும் ஒருவாறு காட்டப்படுகிறது.

யாதபடி நான்காவதொரு சங்கம்போல அதனைப்பாதுகாத்து, அருங்கவிப்புலவர்களை அன்புடன் ஆதரித்துவந்த வள்ளலும், கல்வி அறிவு ஒழுக்கங்களாலும் செல்வம் அதிகாரம் முதலிய நலங்களாலுங் குறைவின்றி மிகச்சிறப்புற்றுவிளங்கியவனுமாகிய கொங்கர்குலத்துத்தோன்றிய வரபதியாட்கொண்டா னென்கிற அரசன், இவ்வில்லிபுத்தூராரது கல்வி கேள்வித் திறமைகளையும் அடக்கம் ஒழுக்கம் அன்பு அருள் வாய்மை முதலிய நற்குணங்களையுங் கேள்வியுற்று அறிந்து 'இக்குணங்களெல்லாம் ஒருவரிடத்திலே ஒருங்கு அமைந்திருப்பது அருமை அருமை!' என்று மிக ஆச்சரியமுற்று இவரை வரவழைத்து அநேக சன்மானங்கள் செய்து தனது ஆஸ்தானபண்டிதராக அமைத்துவைத்து, ஒருநாள் இவரை நோக்கி 'உமக்கும் நீர் எழுந்தருளியுள்ள இந்த எனது சம்ஸ்தானத்துக்கும் உலகமுள்ளவளவும் அழியாப்பெருங்கீர்த்தி உண்டாகி நிலைபெறும்படி, வடமொழியில் ஸ்ரீவேதவியாசமகாமுனிவரால் விரித்துரைக்கப்பட்ட மகாபாரதசரித்திரத்தைத் தமிழ்பயில்வோரனைவரும் ஓதியுணர்ந்து உய்யுமாறு செந்தமிழில் விருத்தப்பாடல்களினால் ஒருபெருங்காப்பியமாகப் பாடித்தந்தருளல் வேண்டும்' என்று பிரார்த்திக்க, இவர் அவ்வேண்டுகோளுக்கு இசைந்து (இதிகாசமிரண்டனுட் பெரியதாகிய) மகாபாரதத்தை மகாகாவியமாகச் சொற்சுவைபொருட்சுவைகள் மிக்குவிளங்கும்படி நல்லநடையிலே பாடியருளினர். இது நிற்க:

இவர் பாரதம்பாடியகாரணம், இன்னும் இரண்டுவகையாகவுங் கூறப்படும்.

அவற்றுள், முதலாவது வருமாறு:—இந்தவில்லிபுத்தூரார்க்கும் இவர் தம்பியார்க்கும் தாயபாகத்தைப்பற்றி விவாதமுண்டாக, அவ்விஷயத்தை அவர்கள் அரசனிடம் அறிவித்தனர்; அரசன் இவரதுகல்வித்திறத்தை முன்னமே கேள்வியுற்று அறிந்துள்ளவனாதலால் 'இவ்வளவு கற்றறிந்தவர்க்கும் உண்மையறிவு உண்டாகவில்லையே!' என்று மிகவும்விசாரமடைந்து 'அவ்வுண்மையறிவை இவர்க்கு உண்டாக்குவதற்கு ஏற்றஉபாயம், (தாயபாகங்காரணமாகத் துரியோதனாதியர் மாறுபட்டு அழிந்ததைக் கூறும்) மகாபாரதநூலில் இவரைப் பழகும்படி செய்வதே' என்று நிச்சயித்து 'மகாபாரதத்தை நீர் தமிழிற் பாடவேண்டும்; பாடினபின்புதான் உங்கள் வழக்குத் தீர்க்கப்படும்' என்று கட்டளையிட்டான்; உடனே இவர் அவ்வாறே அப்பாரதத்தைப்பாடி அந்நூலின்நீதியிற் கருத்து ஊன்றியவராய், பின்பு தாமே தம்தாயபாகத்தில் வெறுப்புற்று, அதனையும் தம்பிக்கே கொடுத்துவிட்டன ரெனக் கூறுவர் சிலர்.

வேறுசிலர் கூறுமாறு:—இவ்வில்லிபுத்தூரார் தம்மோடு வாதஞ்செய்து தோற்றவர்களது காதுகளைத் தோண்டியறுக்குந் துறட்டைக் கையிற் கொண்டு சென்று ஆங்காங்குஉள்ள பலபுலவர்களையுஞ் சயித்துவருகிறபொழுது திருவண்ணாமலைக்குப் போயினர்; அங்குத்தங்கிய கல்விமான்கள் இவரைக்கண்டும் இவர்செய்கையைக்கேட்டும் அஞ்சியோடிச்சென்று தமது தலைவரும் திருப்புகழ் பாடியவருமாகிய *அருணகிரிநாத ரென்னும் பெரும் புலவர்க்குச் செய்தியை அறிவித்தார்கள்; அப்புலவர்பெருமான் வில்லிபுத்தூராரதுசெருக்கையடக்கக் கருத்துக்

* இவர் பிரபுடதேவமகாராஜா காலத்தி லிருந்தவரென்றும், அவன்காலம் இப்பொழுதைக்கு ஏறக்குறைய சஐ௦-வருடங்கட்குமுன்பென்றும் கூறுவர்.

கொண்டு அவரைவருவித்து 'யான் இப்பொழுது நூதனமாகப்பாடுகின்றதொரு நூலுக்கு யான் பாடிவரும்பொழுதே பொருள்கூறிவருவீராயின், உமது கல்வித்திறம் விளங்கும்' என்று அலட்சியமாகச் சொல்லினர்; சொல்லவே, இவ்வாசிரியர், கடுஞ்சினங்கொண்டு, தம்மையெதிர்க்கிற அவரை வென்று அங்குந் தமது வெற்றிக்கொடியை நாட்டக்கருதி, அக்கொள்கைக்கு உடன்பட்டார்; உடனே அருணகிரிநாதர் ஆசுகவியாக நூறுபாட்டில் முருகக்கடவுள்விஷயமாக 'கந்தரந்தாதி' என்னும் யமகவந்தாதியைப் பாடத்தொடங்கிப் பாடிவர, வில்லிபுத்தூரரும் உடனுக்குடனே ஒவ்வொரு செய்யுட்கும் பொருள்கூறிவந்து இடையில் ஐம்பத்துநான்காம் பாட்டாகிய

> " திதத்தத்தத்தித்தத்திதிதாதைதாததுத்தித்தத்திதா
> திதத்தத்தத்தித்ததிதித்தித்ததேதுத்துதித்திதத்தா
> திதத்தத்தத்தித்தத்தைதாததிதேதுதைதாததத்து
> திதத்தத்தத்தித்தித்திதீதீதிதிதுதிதீதொத்ததே "

என்னும் ஒருமெய்யால் வந்த செய்யுட்குப் பொருளுரைக்கமாட்டாமற் போனமையால் தோல்வியடைந்து தம்துறட்டைபெறிந்துவிட்டு அவ்வூரினின்றும் புறப்பட்டுப்போவாராயினர்: போம்வழியிற் சிவாலயமொன்று இருக்க, அது தம் கண்ணிற்படாதபடி தம்மைச்சுற்றித் திரையிடும்படி வில்லிபுத்தூரார் தம்பரிசனங்களையேவிச் சிவநிந்தனைசெய்து, அதுகேட்டு அளவிறந்த கோபங்கொண்ட அருணகிரிநாதரது சாபத்தாற் கண்ணிழந்து, அச்சாபநீங்குதற்பொருட்டுச் சிவவிஷயமாக ஒருநூல் செய்யும்படி அவரால் ஆஜ்ஞாபிக்கப்பட்டார்; பட்டும் வீரவைஷ்ணவராதலால் தம் மதாபிமானத்துக்குப் பங்கம் வராமல் சிவஸ்துதி சிற்சிலவிடத்து விரவிவரும்படி இப்பாரதத்தைச் சாபநிவிருத்தியின்பொருட்டுப் பாடிக் கண்பெற்றார் என்பது.

இந்த இரண்டுவகை வரலாறுகளும், இந்நூலின் பாயிரத்தோடு மாறுபடுகின்றதனாலும், இவர்மகனார் கூறிய பாயிரத்தை மறுக்கத்தக்க பிரபல ஆதாரமொன்றும் இவ்வரலாறுகட்கு இல்லையாதலாலும், இவை யாவராலுந் தகுதியென ஏற்றுக்கொள்ளத்தக்கனவல்லவென்று தோன்றுகின்றது.

இவர், தம்காலத்திற் கல்விச்செருக்கடைந்திருந்த புலவர்கள் பலரையும் தமது வித்தியாசாமர்த்தியத்தால் வென்று, அவ்வெற்றிக்கு அடையாளமாக, தோற்றுப்போன புலவர்களின் காதுகளைத் தமதுகையிலே எப்பொழுதும் ஆயுதமாகவைத்துக்கொண்டுள்ள துறட்டுக்கோலால் மாட்டியிழுத்து அறுத்துவந்தன ரென்பது,

> " குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டிய னிங்கில்லை
> துரும்பியளவாக் காதைக் துடைந்து தோண்டி
> யெட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
> யிரண்டொன்று முடிந்து தலையிறங்கப்போட்டு
> வெட்டுதற்கோ கவி யொட்டக்கூத்த னில்லை
> விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
> தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
> தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே "

என வழங்குந் தனிப்பாடலினால் அறியப்படும்.

ஒருவன் பாடும் பாட்டில் ஏதாவது குற்றங் கண்டால், கண்டவுடனே அவனது தலையில் நறுக்கென்று குட்டுவது, பிள்ளைப்பாண்டிய னென்னும் அரசனது செய்கை; அவனிடம் பரிசுபெறவந்த வித்துவான்கள் பலரும், 'குட்டுப்பட்டாலும் மோதிரக்கையாற் படவேண்டும்' என்கிற பழமொழியைப் புது மொழியாக ஞாபகப்படுத்திக்கொண்டு, வந்தவழியே திரும்பிப்போய் மேன்மேற் கல்விகற்க முயல்வது, அவன்காலத்தில் இயல்பா யிருந்ததாம். கவிபாடிவருபவர் களையெல்லாம் சயித்துப் பிடித்துச் சிறைச்சாலையிலடைப்பித்து, தேவி கொலு விருக்கின்ற நவராத்திரிகாலத்திற் சிறைக்கூடத்திலிருந்து வெளிப்படுத்தி அவர் களை இருவரிருவராகக் குடுமியோடு குடுமி முடிபோட்டு இறங்கிநிற்கத் தேவி முன்பாக நிறுத்திப் பிடாரிக்குச் சோடுகடா வெட்டுவதுபோலச் சற்றும் இரக்க மில்லாமல் அவர்கள் தலைகளைப் பதைக்கப் பதைக்க வெட்டிப் பலிசெலுத்துவது ஒட்டக்கூத்தரென்னும் புலவரது வழக்கமாம். அவைபோலவே, இவ்வில்லிபுத் தூராரும், வாதஞ்செய்யும்பொழுது எதிரி தோற்றால் அவன்காதில் துறட்டை மாட்டிப் பிடித்திழுத்துக் காதை ஒட்ட அறுத்து, யானையின் மதக்களிப்பை அங்குசத்தால் அடக்குவதுபோல அவர்கள்கல்விச்செருக்கைத் தம்துறட்டினு லொழிப்பதைத் தமது வழக்கமாக வைத்துக்கொண்டு விருதுகூறிச்சென்று திக்குவிசயஞ் செய்துவந்தார். இவர்காலத்து அரசர்கள் இவரிடத்தில் மிகவும் அன்புவைத்திருந்ததனால், இவர் இங்ஙனஞ்செய்ய இடங்கொடுத்துவந்தார்கள்.

இவருடைய காலம் இப்பொழுதைக்குச் சற்றேறக்குறைய ஐந்நூறுவருஷத்துக்கு முன் என்பர்.

பாயிரத்தில் "நான்காஞ்சங்கமென முச்சங்கத் தண்டமிழ்நூல் கலங்காமல் தலைகண்டானே" என்று இவர்காலத்திலிருந்த வரபதியாட்கொண்டானென்னும் அரசனைக் கூறியிருத்தலால், இவர்காலம் கடைச்சங்கத்தார் காலத்துக்குப் பின்பு என்பது மாத்திரமே தெளிவாகத் தெரியவருகிறது.

இவர்க்கு வில்லிபுத்தூராரென்றும் வில்லிபுத்தூராழ்வாரென்றும் வழங்கி வருகிற பெயர் யாதுகாரணத்தால் வந்தது? பாண்டியநாட்டில் திருநெல்வேலிப் பிராந்தத்திற் பிரசித்தமாகவுள்ள விஷ்ணுஸ்தலமான ஸ்ரீவில்லிபுத்தூரிற் பிறந்தவரா? அன்றி, அங்கு வளர்ந்தவரா? அல்லாக்கால், அவ்விடத்து வாழ்ந்தவரா? என்றால்,—இக்காரணங்க ளொன்றுமன்று, இவர்க்கு இப்பெயர் வந்தது; பின்னை யென்னையோ வெனில்,—வைஷ்ணவசம்பிரதாயத்திற் சிறந்தபக்தர்களென்று சொல்லப்படுகின்ற ஆழ்வார்கள்பன்னிருவருள் ஒருவரும், பெரியாழ்வாரென்றும் பட்டர்பிரானென்றும் விஷ்ணுசித்தரென்றும் வேறுதிருப்பெயர்களை யுடையவரும், ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்ததனால் வில்லிபுத்தூராழ்வா ரென்று வழங்கப் படுபவரு மாகிய பாகவதசிகாமணியினுடைய இத்திருநாமத்தையே தந்தைதாயர்கள் இவர்க்குப் பெயராக இட்டு வழங்கினார்க ளென்று உணர்க; (பரிசுத்திகர மென்கிறகாரணத்தால், கடவுள்பெயரும் அடியார்களின் பெயரும் மனிதர்கட்கு இட்டு வழங்கப்படும்.) இவருடைய தந்தைதாயர் பெரியாழ்வார்பக்கல் மிக்க பக்தியுடையராய் அவர்க்கு வழிபாடுசெய்ய, அவ்வாழ்வாரருளால் இம்மகன் பிறக்க, இக்குமாரனுக்கு அவ்வாழ்வார்பெயரையிட்டன ரென்னலாம். அல்லது, அந்தப்பெரியாழ்வார் பாலியத்திலே எவரிடத்தும் யாதொருநூலும் படியாதவரா

யிருந்தும் பின்பு பகவானருளாற் பெரியதிவ்வியப்பிரபந்தம் பாடவல்ல மகாபண்டிதராய்விட்டதுபோல, இவரும் தெய்வகடாக்ஷம்பெற்ற வரகவியென்கிற காரணம்பற்றி, இவர்க்கு வில்லிபுத்தூராழ்வாரென்று பெயர்வந்ததென்றுங் கொள்ளலாம். [ஆழ்வார்என்பதற்கு - எம்பெருமானுடைய திருக்கலியாணகுணகணங்களாகிய பெருங்கடலில் அமிழ்ந்து நெஞ்சுருகி ஈடுபடுபவ ரென்று பொருள். இப்பெயரால் மற்றுஞ்சிலபக்தர்களை வழங்குவதைப் பரதாழ்வான், சத்துருக்கனாழ்வான், பிரகலாதாழ்வான், கஜேந்திராழ்வான், சுதரிசனாழ்வான், கம்பநாட்டாழ்வார் முதலிய பெயர்களிலுங் காண்க.]

விஷ்ணுவின் அம்சாவதாரமாகிய கிருஷ்ணனுடைய சரித்திரம் மகாபாரதத்தில் இடையிடையே வருகிற தென்ற சிறப்புப்பற்றியே இவ்வாசிரியர் பாண்டவசரித்திரத்தைப் பாடுதற்கு உடன்பட்டுப் பாடினர்; இது,

"முன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமு மிடையிடை வழங்கு
மென்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்"

என இவர்தாமே தற்சிறப்புப்பாயிரத்திற் கூறியுள்ளதனாற் பெறப்படும். [வேதவியாசபகவானும் வடமொழிமகாபாரதத்தில் இவ்வாறேகூறியிருக்கின்றார். இனி, இச்செய்யுளின்மூன்றாமடியின்முதலில் 'மன்னுமாதவன்' என்பதை மன்னும் மாதவன் எனப்பிரித்து-நித்தியனாகிய திருமகள்கொழுநனை திருமாலென்று பொருள்கொள்வதை விட்டு, மன்னும் மாது அவன் என்றாவது மன் உமா தவன் என்றாவது பதம்பிரித்து - ஸ்தாணுவாகிய உமாபதியான சங்கர னெனப் பொருள்கொண்டு, சிவபிரானதுசரித்திரம் இந்நூலின் இடையிடையே வழங்குவதென்ற விருப்பத்தால் தாம் இதனைப்பாட இசைந்ததாகக் கூறினா ரென்று உரைப்பாருமுண்டு;அது சரியன்று: ஏனெனில்,—இந்நூலில் ஆதிபருவத்தில் அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கத்திலும், ஆரணியபருவத்தில் அருச்சுனன் தவநிலைச்சருக்கத்திலும், துரோணபருவத்தில் பதின்மூன்றாம்போர்ச்சருக்கத்திலும் ஆக மூன்றிடத்தில் மாத்திரமேயன்றி நூல்முழுவதும் இடையிடையே (கண்ணனுடைய சரித்திரங் காணப்படுவதுபோலச்) சிவபிரானுடைய பிரஸ்தாபம் இல்லாமையாலும், வைஷ்ணவராகிய இவர் சிவசரித்திரம் வருவதென்று பாடினரென்பது உசிதமல்லாமையாலும் எனக் காண்க.]

அன்றியும், இவர் இந்நூலில் ஒவ்வொருசருக்கத்தின் தொடக்கத்திலும் திருமால்விஷயமாகக் காப்புச்செய்யுள் கூறியுள்ளதனாலும், "மறந்தும்புறந்தொழா" நல்லவைஷ்ணவ ரென்பது நன்குவிளங்கும். [சிலசருக்கங்களிலே காப்புச்செய்யுள் காணப்படவில்லை; அதற்குக் காரணம் - ஆசிரியராற் பாடப்பட்ட செய்யுட்கள் பிற்காலத்தில் ஏடெழுதுவோரால் எழுதாதுவிடப்பட்டு இல்லையாயினவென்றாவது, * தொல்காப்பியம் முதலிய சில நூல்களிற்போலச் சிலசருக்கங்களின் ஆரம்பத்தில் மானசிகமாத்திரமாகக் கடவுள் வணக்கஞ் செய்யப்பட்டுச் செய்யுளுருவமாய் வாசிகமாகக் காப்புச் செய்யப்படவில்லை யென்றாவது கொள்க.

* 'தொல்காப்பியம் முதலியவற்றில் நூற்குப் புறமாகவே மங்கலம் செய்யப்பட்டது' என்பது, தருக்கசங்கிரகவுரை.

ஆயின், வைஷ்ணவராகிய இவர் இந்நூலின் முதற்காப்பாக

"நீடாழியுலகத்துமறைநாலொடைந்தென்றுநிலைநிற்கவே
வாடாததவவாய்மைமுனிராசன்மாபாரதஞ்சொன்னநாள்
ஏடாகவடமேருவெற்பாகவங்கூரெழுத்தாணிதன்
கோடாகவெழுதும்பிரானைப்பணிந்தன்புகூர்வாமரோ.

முருகார்மலர்த்தாமமுடியோனையடியார்முயற்சித்திறந்
திருகாமல்விளைவிக்குமதயானைவதனச்செழுங்குன்றினைப்
புருகூதன்முதலாயமுப்பத்துமுக்கோடிபுத்தேளிரும்
ஒருகோடிபூதேவருங்கைதொழுங்கோவையுறவுன்னுவாம்"

என்ற இரண்டுபாடல்களால் சிவகுமாரராகிய விநாயகரை ஸ்தோத்திரஞ் செய்வானேன்? என்றால்,—தம்மைச் சரணமடைந்தவர்கள் தொடங்குந் தொழில்கட்கு வருகிற விக்கினங்களைப் போக்குதலாலும் தம்மையடையாமல் அகங்கரித்தவர்கள் ஆரம்பிக்கிற செய்கைகட்குப் பல இடையூறுகளை உண்டாக்குதலாலும் 'விக்நேச்வரர்'என்று திருநாமம்பெற்றுள்ள ஸ்ரீவிநாயகமூர்த்தி சைவர்கட்குமாத்திரமேயன்றிச் சிறுபான்மை பிறர்க்கும் ஒருசார் வழிபடுகடவு ளாதலாலும், வேதவியாசர் மகாபாரதத்தை இயற்றிவருகிறபொழுது விநாயகர் அந்நூலை மகாமேருமலையிலே எழுத்தாணிகொண்டு எழுதிவந்ததும் இடையிலே அவ்வெழுதுகருவி ஒடிந்து போனபொழுது 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்றவகையாய் யானைமுகக் கடவுளாகிய தாம் தமது தந்தங்களில் ஒன்றைப் பறித்து அதனையே கருவியாகக் கொண்டு எழுதிமுடித்தருளியதுமாகிய இந்த முக்கியமான காரணத்தைக்கொண்டு நோக்குமிடத்து விநாயகர் இந்நூலின்முதலில்வைத்தற்கு ஏற்ற இயைபுடையவராதலாலும், வைஷ்ணவர்கள் விநாயகரை விஷ்வக்ஸேந ரென்கிற சேனைமுதலியாரது அம்சமென்று கொண்டாடுவது மரபாதலாலும், இவரும் விநாயகரைப் பாடினரென்க.

இவ்வில்லிபுத்தூரார் சிவத்வேஷம்பாராட்டுகிற வீரவைஷ்ணவரல்லர். அந்அருச்சுனன் தீர்த்தயாத்திரைச்சருக்கத்திலும், அருச்சுனன் தவநிலைச்சருக்கத்திலும், பதின்மூன்றும்போர்ச்சருக்கத்திலும் சைவசம்பிரதாயத்துக்கு வழுவுறாதபடி சிவபிரானைச்சிறப்பித்தும் இதரதேவர்களைத் தாழ்த்தியுங் கூறியதனால், நன்கு புலனாகின்றது.

வியாசர் புராணங்களில் ஒவ்வொருதேவரை ஒவ்வோரிடத்திற் சந்தர்ப்பத்துக்கேற்பச் சிறப்பித்துக்கூறியிருத்தல்போலவே, இவரும் தமது நூலில் சூரியன் அக்கினி முதலிய மற்றைத்தேவர்களையும் சமயம்வந்தவிடத்துப் பக்ஷபாதமில்லாமற் சிறப்பித்துக்கூறியிருக்கின்றார். பதினேழாம்போர்ச்சருக்கத்தில் "மூவர்தந்தம்வடிவாமுதல்வன்" எனச் சூரியபகவானைச் சிறப்பித்துக்கூறியுள்ளவாறும், பிறவுங் காண்க; [இதற்கு - திரிமூர்த்திகளின் சொரூபமாகவுள்ள தலைவனான சூரியனென்று பொருள்.]

கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவராகிய பெருந்தேவனாரென்பவர், மகாபாரதத்தைத் தமிழில் வசனமும்பாடலுமாக விரவிவருகிற 'சம்பு'என்கிற நடையிலே பாடியிருக்கின்றனர்; பெரும்பாலும் வெண்பாக்களால் அமைந்ததுபற்றி, அந்நூலுக்குப் பாரதவெண்பா வென்று பெயர். அது, இப்பொழுதைக்கு ஏறக்குறைய

ஆயிரத்தெண்ணூறு வருஷத்துக்கு முந்தியது. * இவ்வில்லிபுத்தூரார் அந்தப் பாரதவெண்பாவின் சொல்லையும் பொருளையும் ஆங்காங்கு வெகுவாகத் தழுவி நாலாயிரத்து முந்நூற்றுச்சொச்சம் பாடல்களாற் பாரதத்தைப் பாடினர். இவர் பாடிய பாரதம் வடமொழி வியாசபாரதத்தின் வழி நூலென்னத் தட்டில்லை.

"மண்ணி லாரண நிகரென வியாதனூர் வகுத்த
எண்ணிலா நெடுங்காதையை யானறிந் தியம்பல்"

என்று இவர்தாமே அவையடக்கத்திற் கூறியிருக்கின்றார். ஆயினும், இவர் பாடிய நூல் ஸம்ஸ்கிருதபாஷையில் அகஸ்தியபட்டரென்பவர் இயற்றியுள்ள பாலபாரத மென்னுங் காவியத்தின் பொருளமைதியோடு பலவிடங்களி லொத்திருக்கின்றது; ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, இந்நூலுக்கும் அந்நூலுக்கும் இடையிடையே பலவேறுபாடுகளும் உள்ளனவாயினும், சிற்சிலவிடங்களில் இந்நூல் அந்நூலின் மொழிபெயர்ப்பென்றே சொல்லலாம்படியுள்ளது.

வில்லிபுத்தூரார் தமதுபாரதத்திற் பாடியது, முதற்பத்துப்பருவமே; மற்றை யெட்டுப் பருவங்கள் அவராற் பாடப்படவில்லை. அதற்குக்காரணம் - அவற்றைப் பாடுவதற்குமுன் அவர் காலஞ்சென்றிருக்கலாம்; அல்லது, நூல் முழுவதையும் பாடினால், பாண்டவர்கள் கிருஷ்ணபகவான் என்கிற மகாபுருஷர்களது (கேட்பவர்க்கு வருத்தத்தையுண்டாக்கத்தக்க) மரணசரித்திரத்தைத் தம்வாயாற் சொல்ல வேண்டுமேயென்று கருதி, 'பாண்டவர்கள் இராச்சியம் ஆண்டு வாழ்வாராயினர்' என்பதனோடு முடித்துவிட்டதாகக் கூறலாம். பாண்டவசரித்திரங்கூறுகிற பாரத சம்பு முதலிய சில நூல்களிலும் பின்னிட்ட கதை காணப்படவில்லை. [கம்பர் இராமாயணத்தில் உத்தரகாண்டம் பாடாமல் விட்டதற்கும் இப்படிப்பட்ட காரணத்தையே முக்கியமாகக்கொள்ளலாம்; இப்பொழுதும் இராமாயணபாராயணஞ் செய்பவர்கள் உத்தரகாண்டம் படிப்பதில்லையன்றோ?] அவ்வாறே இவரும் பின்னையசரித்திரத்தைக் கூறாமல் "கனைகடற்பா ரளித்து அவரு மங்கரி லறநெறியே கருதி வாழ்ந்தார்" என மங்களகரமாகச் சரித்திரத்தைப்பாடி முடித்தன ரெனக் கொள்வது தகுதியுடையது. இனி, இந்நூலின் பின்னையபருவங்களும் பாடப்பட்டுப் பிற்காலத்திற் கிடைத்தற்கு அரியவையாயின வென்று கொள்வாரு முளர். † வில்லிபுத்தூரார்பாடிய பாரதத்திலே சுருக்கமாகக்கதையைத் தொகுத்துக்கூறும் முந்நூறு நானூறு பாடல்கள் தவிர மற்றை நாலாயிரஞ்செய்யுட்களை யெடுத்துக்

* அந்நூல் பன்னீராயிரம் பாடல்களை யுடையதென்று தொண்டைமண்டல சதகத்திற் கூறியிருப்பினும், அது இப்பொழுது முழுவதும் கிடைப்பதில்லை. உத்தியோகபருவந் தொடங்கித் துரோணபருவம் வரையிலும் எண்ணூறுபாடல்களே கிடைக்கின்றன.

† "கலியுகவியாதன்சொல்லக்கணபதியெழுதுபாடல்
பொலிவுறுதமிழிலாறுயிரமெனவிருத்தம்போற்றிச்
சலிவறவில்லிபுத்தூரிறைவனுஞ்சார்வபௌம
னெலிகெழுமறையோர்சோமானுயர்ந்தவருவப்பச்சொன்னான்"

என ஒருசெய்யுள் வில்லிபுத்தூரார்பாரதத்து எட்டுப்பிரதியொன்றிற் பாயிரத்துடனே காணப்படுகின்றது. இது பழையபாடலாக இருக்குமாயின், இதிற்கூறிய ஆறுயிரம்பாடல்களிற் பத்துப்பருவங்களான நாலாயிரத்துமுந்நூற்றுச் சொச்சம்போக மற்றவை இவர்பாடிய எட்டுப்பருவங்களெனக் கொள்ளலாம்.

கொண்டு, பிற்காலத்தில் நல்லாப்பிள்ளையென்பவர், புதிதாகத் தாம் பதினோராயிரம் பாடல்பாடி இடையிடையிற்கோத்தும் இறுதியிற் சேர்த்தும் பாரதம் பதினெட்டுப் பருவங்களையும் பூர்த்திசெய்தார்; அது 'நல்லாப்பிள்ளைபாரதம்' என வழங்கும்: அந்நூலாசிரியர், இற்றைக்கு நூறுவருஷங்களின்முன் இருந்தவர். இதுதவிர, இற்றைக்கு கூ௦ - வருடங்களின்முன் இருந்த அஷ்டாவதானம் - அரங்கநாதகவிராயர் பாடிய பாரதத்தின் பிற்பகுதியும் ஒன்று உளது; அது, ஏறக்குறைய உ௫௦௦ - செய்யுளுடையது.

இப்பாரதத்துக்கும் இதன்முதனூலாகிய வியாசபாரதத்துக்கும் இடையிடையே கதையமைதிகள் சிற்சில வேறுபடுவது "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப், பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி, அழியா மரபினது வழிநூலாகும்" என்ற வழிநூலிலக்கணவிதிப்படி இவ்வாசிரியராற் பிறநூல் மேற்கோள்கொண்டு அமைக்கப்பட்டதாதல் வேண்டுமென அறிக.

இவர் மகாபாரதமொன்றுதவிர வேறுநூ லெதுவும் பாடியிருப்பதாகத் தெரியவரவில்லை.

இவர், தமக்குப்பலசெல்வமுங்கொடுத்து ஆதரித்துத் தம்மைக்கொண்டு பாரதத்தைப் பாடும்படி செய்வித்த வரபதியாட்கொண்டானென்னும் அரசனை இப்பெருங்காப்பியத்தில் இடையிடையே புகழ்ந்துபேசியிருக்கிறார்.

இப்படி, பாலில்விஷங்கலப்பதுபோலப் பெரிய இதிகாசத்தி னிடையிலே ஒருமனிதனைத் துதித்தல் தகுமோ? நர கவனம் நரக வன மன்றோ? என்று ஓர் ஆட்சேபந் தோன்றலாம்: இங்ஙனந்தோத்திரிப்பது தகுதியன்றாயினும், அரசன் தமக்குச்செய்த நன்றியை மறவாமல் உபகாரஸ்மிருதியாகப்பாடின ரென்பதுபற்றிப் பலரும் அங்கீகரிப்பார்கள்; அன்றியும், ப்ரஸ்துதமான உபமேயமுகத்தால் அவன்பெயரைப் பிரஸ்தாபிக்காமல் அப்ரஸ்துதமான உபமானமுகத்தாற் புகழ்ந்து கூறியதும் ஒருசமாதானமாகலாம். இங்ஙனமே தம்மைப்பாதுகாத்த பிரபுக்களைத் தாம்செய்யும்நூல்களில் நன்றியறிவுகாரணமாக எடுத்து எத்துவது, புலவர்களின் இயற்கை. கம்பர் இராமாயணத்தில் திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்பவள்ளலையும், புகழேந்திப்புலவர் நளவெண்பாவில் முரணைநகர்ச் சந்திரன்சுவர்க்கியையும், மண்டலபுருஷன் சூடாமணிநிகண்டில் கிருஷ்ணதேவராயனையும் சிறப்பித்துக்கூறியவாறு காண்க. இன்னும், இவர், தமதுநூலில், தமிழ்நாட்டரசராகிய சேரசோழபாண்டியர்களைப்பற்றிப் பிரஸ்தாபம்வருகிறபொழுது மிக்கசிறப்பாகக் கூறுவர்.

"காவிரியென்னத்தப்பாக்கருணையான்" என, நளசக்கரவர்த்தியினது கருணைக்கு, தமிழ்நாட்டிற் பிரசித்திபெற்ற காவேரிநதியைத் தண்மைக்கும் தவறாமைக்கும் உவமையெடுத்துக் கூறினர்.

"தங்கள்மால் வரையில் வைகுந் தமிழ்முனிதன்னைப் போலப்
பொங்குவெண்டரங்க முந்நீர்ப் புணரிக ளேழுஞ் சேர
வெங்கையால் வாருங் கொற்ற வேழமா மேற்கொண்டானே"

என்றதனல், தமிழுக்கு ஆதியிலக்கணநூலாசிரியராகிய அகஸ்தியமகாமுனிவர் கடலைக்குடித்தருளிய கதையைக் கொண்டாடினர். இன்னமும் "தங்கள் தமிழ்க்

குழலிசையைத் தன்செவிக்கு விடமென்னும்" என்றதனல், வேய்ங்குழலின் இசைப்பாட்டின் இனிமைக்கு, தமிழ்ப்பாஷையை உவமைகூறினர். "தங்கள் மூவகைத்தமிழும் போலச், சிந்தையிற்குளிக்குமாறு சிலீமுகமூன்று விட்டான்" என்றதில், அம்புகள் நன்ருகப் பகைவர்நெஞ்சிற் பதிந்திடுதற்குத் தமிழ்ப்பாஷை கற்றவர்மனத்திற்பதிதலை உவமையாக்கினர்.

இங்ஙனம் தமது தேசாபிமான பாஷாபிமானங்களை வெளிப்படுத்துவது பலர்க்கும் வழக்கமேயாம்.

இவர் தமதுநூலிற் பெரும்பாலும் வடமொழிகளைத் தனிமொழியாகவும் தொடர்மொழியாகவும் இன்னமொழியின் சம்பந்தமானதென்று எளிதில் தெரியவொண்ணுதபடி திரித்தும் மொழிபெயர்த்தும் உபயோகித்திருத்தலால், வடமொழியிலும் மிகவல்லவரென நன்குவிளங்குகின்றது.

தமிழில் எந்தநூலாசிரியரும் வடமொழிகளை இவரவ்வளவு எடுத்துக்கொள்ளவில்லை. வடசொற்களைத் தமிழ்க்காப்பியத்தில் நுழைக்கிற வழக்கம் இவர்காலந் தொடங்கித்தான் அதிகமாயிருத்தல்வேண்டும். சங்கத்தார்காலத்துப் பழைய நூல்களில் அத்தனையாக வடமொழிகள் அகப்படா; சுத்த தமிழ்ப்பதங்களே மிகுதியாயிருக்கும்.

இவரது பாடல்களில் உவமை, உருவகம், எடுத்துக்காட்டுவமை, தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள்வைப்பு, பிறிதுமொழிதல், உயர்வுநவிற்சி முதலிய பொருளணிகள் அமைந்திருப்பதுமாத்திரமேயன்றி, மடக்கு (யமகம்), பிராசம் முதலிய சொல்லணிகளும் ஆங்காங்கு அமைந்திருத்தலையும், இவரதுசெய்யுள் நடை பலவிடத்துமுடுகுடையதாதலையும், பலவகைச்சந்தங்கள் சந்தப்போலிகள் வண்ணங்கள் பொருந்தியிருத்தலையும் காணலாம்.

"பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலா லொருவர்பகரொணுதே" என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள படிக்காசுப்புலவரும், திருப்புகழ்பாடிய அருணகிரிநாதரும் முதலிய சிலர்போலவே இவ்வில்லிபுத்தூராரும் சிறந்த சந்தக்கவி யென்று இவர் நூலால் தெரிகிறது.

சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நவின்ருேர்க்குஇனிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல் முதலிய நூலழகுகளெல்லாம் இவர் நூலில் நன்குஅமைந்திருத்தல், இப்பாரதத்தைப் பார்க்கப் பார்க்கச் செவ்விதிற் புலனும்.

'குன்றக்கூறல்' முதலிய குற்றங்களி லொன்றும் இந்நூலிலில்லை யென்று பொதுப்படக் கூறலாம்; அன்றியும், பலநூல்களிற் காணக்கூடிய 'சென்று தேய்ந்திறுதல்' என்னுங் குற்றம் இந்நூலிலில்லை யென்பது, இந்நூலை ஆதியோடந்தமாக நோக்குவார்க்குத் தானேதெரியும். யுத்தவருணனை, எல்லாநூல்களினும் இந்நூலிற் சிறத்தல் காண்க.

"முன்னோர்மொழிபொருளேயன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்றவாறு, இவருடைய நூலில் ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களின் சொற்பொருட்கருத்துக்கள் சிற்சில இடத்து எடுத்து ஆளப்பட்டிருத்தல், உய்த்து நோக்குமிடத்து விளங்கும்.

இனி, இப்பொழுதைக்குப் பத்துவருடங்களின் முன்பு இருந்த முருகதாசரென்பவர் இயற்றிய 'புலவர்புராணம்' என்னும் புதுநூலிற் கூறப்பட்டுள்ள வில்லிபுத்தூரார்சரித்திரம், இதுவரையிற்கூறிய வரலாற்றோடு சிற்சிலவேறுபாடுடையது; அதனை அனைவரும் அறிதற்பொருட்டு, அந்நூலிலுள்ளவாறு அச்சரித்திரம் அடியிற் குறிக்கப்படுகின்றது:—

பெண்ணைநாட்டில் சனியூரில் பிராமணசாதியில் வைஷ்ணவசமயத்தில் தோன்றிய இரண்டுசகோதரர், கல்வியில்தேர்ந்து திருமாலைத்துதித்து அப்பெருமானருளால் அக்கல்விப்பொருளோடு செல்வப்பொருளும் நிரம்பியவராய் ஒருவரோடொருவர் மிக அன்புபூண்டு பாண்டியநாட்டிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரையடைந்து அங்குத் தம்தம் மனைவியருடனே ஏககுடும்பமாய் இல்லறவாழ்க்கை நடத்திவந்தார்கள். அவர்களில் மூத்தவர், வில்லிபுத்தூராரென்று சிறப்புப்பெயர் பெற்றார். இங்ஙனமிருக்கையில், கொங்குநாட்டரசனான ஆண்டான்பிள்ளையென்பவன், வடமொழியிலுள்ள மகாபாரதத்தைத் தமிழ்ச்செய்யுள்களாற் செய்விக்கக் கருதி, 'அங்ஙனஞ்செய்யவல்லவர் யார்?' என்று விசாரிக்கையில், வில்லிபுத்தூராரும் அவர்தம்பியாருமே அதற்குத் தக்கவரென்றும், அவர்கள் மிக்கசெல்வமுடையோராதலால் அரசரையும் பொருள்செய்யாரென்றும், ஒருவர்க்கொருவர் உற்ற துணைவராகிய அவர்களாற் பிறருதவி வேண்டப்படுவதில்லையென்றும் அறிந்து, அவர்கட்குள் ஏதேனும் சிறிதுமாறுபாட்டையுண்டாக்கி அந்தச்சந்தர்ப்பத்தில் தன்கருத்தை முடித்துக்கொள்ளக்கருதியவனாய், விதவையாகிய ஒருபார்ப்பனக்கிழவியை அழைத்து வணக்கத்தோடு உபசரித்துச் செய்திகூறி 'அம்மா! நீர் அவர்கள்வீட்டுக்குச் சென்று அவர்கட்குள் கலகத்தை உண்டாக்கவேண்டும்' என்று கூறி அவளுக்கு வேண்டியபொருளையுங் கொடுத்து அனுப்பிவிட்டு, பின்பு மதுரைக்குச்சென்று பாண்டியனைக்கண்டு அவனிடம் ஏகாந்தத்தில் இச்செய்திமுழுவதையுஞ்சொல்லி, 'அவர்களுடையவழக்கு வந்தால் எவ்விதத்திலும் என்னிடத்தில் அனுப்பவேண்டும்' என்று வேண்டி, 'அங்ஙனமேஆகுக' என்று அதற்கு இணங்கிய அப்பாண்டியனது அநுமதியைப் பெற்று மீண்டனன். இது நிற்க:

அரசனிட்டகட்டளைப்படியே அக்கிழவி வில்லிபுத்தூரார்வீட்டுக்குச்சென்று அவர் மனையாளிடத்தும் அவர்தம்பிமனையாளிடத்தும் கலந்து இனிமையாகப் பேசிப்பழகி அவ்விருவரும் தன்னைநல்லவளென்று நம்புமாறு நடந்துகொண்டே அவர்கட்குள் ஒருத்திமேல் ஒருத்தியிடம் பொல்லாதபலகோட்சொற்களைக் கூறி உட்பகைமையை விளைவித்து அவர்கள் ஒருவரோடொருவர் எதிர்த்துப்பேசிக் கலகஞ்செய்யவும் தம்தம்கணவரைத் தம்தம்வசமாக்கி நடத்தவும் மூட்டிவிட்டாள். அதனால் மாறுபாடுகொண்ட வில்லிபுத்தூராரும் அவர்தம்பியாரும் தமதுபொருளைப் பாகஞ்செய்து தருதலை வேண்டித் தங்கள்நாட்டரசனான பாண்டியனிடம் வர, அவ்வேந்தன், முற்கூறியபடி அவர்களைக் கொங்குநாட்டரசனிடத்தே செலுத்தினன். அவ்வாறேசென்ற அவர்களைக் கண்டு கொங்கராசன் மகிழ்ச்சிகொண்டு அவர்கட்கு மிக்கஉபசாரஞ்செய்து வடமொழிமகாபாரதத்தை இரண்டுபாகமாப் பிரித்து அவ்விருவரிடமுங் கொடுத்து 'நீங்கள் இந்நூலைத் தமிழ்ப்பாடலாகச் செய்தபின்னரே நான் உங்கள்செல்வத்தைப் பாகித்துக்கொடுப்பேன்' என்று கூறினன். அச்சொல்லை அவர்கள் திருமால்கட்டளையாகவே சிரமேற்கொண்டு

அங்ஙனமே சிலநாள் அவன்வசத்தில் இருந்து, சொற்சுவையும் பொருளழகும் ஓசைச்செறிவும் சந்தப்பொலிவும் வண்ணப்பொருத்தமு முள்ள ஆறுயிரங்கவி களாற் பாரதத்தைப் பாடி முடித்திட்டார்கள்.

இப்படி தன்கருத்து முற்றியதனுற் களிகூர்ந்த கொங்கர்கோமான், தானே ஒருபார்ப்பனக்கிழவியைக்கொண்டு குடும்பக்கலகம் விளைத்தவிதத்தை அவர்கட்கு விவரமாகத்தெரியக்கூறி, அவர்கட்குஉண்டான விரோதத்தைத்தணிவித்து, அவர் களைநோக்கி 'நீங்கள் என்விருப்பத்தை நிறைவேற்றியதால், நான் உங்கள்விருப் பத்தை நிறைவேற்றச் சித்தனயிருக்கிறேன் ; நீங்கள் விரும்புவதைக் கூறுமின்' என்று கூற, வில்லிபுத்தூரார், 'என்னேடு மாறுபட்டுச் சந்தம்பாடத்தொடங்கி அதில் தவறியவர்களுடைய காதுகளைத் துணிக்குமாறு வாள் கொடுக்கக்கடவாய்' என்று தம்விருப்பத்தை வெளியிட, அரசன் அங்ஙனமே வாள்கொள்ளுமாறு அருள் செய்தான். தமையனரிடத்து முதிர்ந்த அன்பையுடைய தம்பியார் 'எனக்கென்று தனியே உரியது யாதுமில்லை' என்று கூற, அரசன், தமையனுர்க்கு அடங்கிநடக் கிற அவரதுமனநிலைமையைக்கண்டு மகிழ்ந்து அவர்க்குப்பலவிருதுகளைக்கொடுத் தான். அவற்றைப்பெற்றுக்கொண்டு அவரிருவரும் தம்ஊர்சேர்ந்தனர். முன்பு பகைமூட்டிய மூதாட்டியும் பின்பு அவர்கள்மனைவியர்க்குப் பற்பலநியாயங்களை யெடுத்துக்கூறித் தனதுசொற்றிறத்தால் அவர்களது மாற்சரியத்தைத் தீர்த்து அவர்களைப் பழையபடி கூட்டுறவாக்கிவைத்திட்டனள். முன்பு தலைவிரிகோலங் கொண்ட ஒருத்தியால் முடிந்த மகாபாரதத்தைக்குறித்து இப்பொழுது 'மொட் டைச்சியொருத்தியால் முடிந்தது' என்று பலர் பேசலுற்றனர்.

வில்லிபுத்தூரார், புலவர்திலகராய், தம்மோடுமாறுபட்டுத் தோற்றபுலவர்க ளுடைய காதுகளைக் கொய்வதே தொழிலாகக்கொண்டு கவிதாசார்வபௌம ரென்று ஒருசிறப்புப்பெயர்பெற்று, புலவர்களது செருக்கையெல்லாம் ஒழித்து வந்தார். அவர்தம்பியாரோ, புலமைத்திறம் வாய்ந்திருந்தும் சாந்தகுணத்தையே மேற்கொண்டிருந்தனர்.

கீழ்க்கூறியவாறு வில்லிபுத்தூரார் பெருமிதங்கொண்டு வாழுநாட்களுள் ஒரு நாள், அநந்தனென்னும்பெயருள்ள பெரிய புலவனெருவன், தனது கவித்திறத் துக்கு மெச்சிப் பற்பலஅரசர்தந்த பரிசுகளைப் பெற்றவனுய் அவரிடத்தில் வந்து சேர்ந்தான். அவர் அவனைப் பலவாறு பரீக்ஷித்து, அதிலெல்லாம் அவன் தவருது தேறிவந்தமை கண்டு, பின்னர், பாடுதற்கு அரியதொரு பெரியசந்தக்குழிப்பைக் கொடுத்து 'இதற்குஏற்ப நீ ஒருசந்தக்கவி பாடுதி, பார்ப்போம்' என்ன, அங்ங னமே அந்தஅநந்தகவி உடனே ஒருசந்தக்கவிபாட, அதிற்பிழைகண்டு இவர்ஆடம் பரத்தோடு அவனது காதை யறுக்கப்போகையில், அவன், 'ஐயா! என்பெயர் கொண்ட கட்செவியாகிய ஆதிசேஷனுக்குச் செவியுறுப்பில்லை; நீவிர் இதனை ஆராய்ந்து செய்ம்மின்' என்றுதுணிந்துகூற, அதுகேட்ட வில்லிபுத்தூரார் 'இப் பொழுது நாம் இவன்காதையறுப்பின் இவ்வநந்தன் அவ்வநந்தனேடு ஒப்பாய் விடுவனே!' என்பதை உன்னி அவன்செவியை யறுக்கத்துணியாராய், அவன் சொன்ன சமயோசிதமான வார்த்தைக்கு உவப்படைந்து, 'நீ சொன்ன இந்தச் சாதுரியமானவார்த்தைக்கு ஒருவெகுமதியாக உனக்குச் செவியைக்கொடுத்தேன், போ' என்று கம்பீரமாகக்கூறி அவனை அனுப்பிவிட்டனர்.

பிறகு வில்லிபுத்தூரார், அருணகிரிநாதரென்னும் புலவரது பெருமையைக் கேள்வியுற்றுப் பொறாமைகொண்டு திருவண்ணாமலைக்குச் சென்று அவருடன் மாறுபட்டு, அவர்பாடுங் கந்தரந்தாதிச்செய்யுள்கட்கு உடனுக்குடனே உரைகூறி வருபவராய் இடையிலே தோற்றுச் செருக்கொழிந்து வாட்படையையிழந்து அருணகிரிநாதரோடு நண்புபூண்டு, அவர்பாடிய கந்தர்திருப்புகழுக்கு ஈடாகத் தாமும் இராமகாதைத்திருப்புகழ் பாடிப் பெருமைபெற்றுத் தம்மூர்க்கு மீண்டு அடக்கத்தோடு வாழ்ந்திருந்தனர்.

நற்குண நற்செய்கைகளுடன் திருமாலடிக்கே தொண்டுபூண்டொழுகுபவராய்ச் சிலகாலங்கழித்தபின் வில்லிபுத்தூரார் முன்னும், அவர்தம்பியார் பின்னுமாக இருவரும் பரமபதமடைந்தார்கள்.

ஸ்ரீ

கடவுள் துணை.

மகாபாரதம்.

பாரதம் என்னுஞ் சொல்லுக்கு - பரதனது வம்சத்தவரைப்பற்றிய நூல் என்று பொருள். இங்குக் குறித்த பரதனென்பவன் - சந்திரவம்சத்தில் துஷ்யந்த மகாராசனுக்குச் சகுந்தலையினிடந் தோன்றிப் பிரசித்திபெற்ற ஓரரசன். [இராமன் தம்பியான பரதனும், பரதகண்டமென்றற்குக் காரணனான சடபரதனும், பரதநாட்டியமென்றற்குக் காரணனான பரதனு மல்லன்.] பரதவம்சத்துத் தோன்றினவர், பாரதர்; அவராவார் - பாண்டவரும், துரியோதனாதியரும்: அவர்களது சரித்திரத்தை உணர்த்தும் நூல், பாரத மெனப்பட்டது. இது - வடமொழித் தத்திதாந்தநாமம். [ஒருவடசொல் சிறிதுமாறித் தன்னோடு இயைபுடைய பொருளையேனும் தன்பொருளையேனும் உணர்த்துவது, தத்திதாந்தநாமம்.] இனி, வருணாச்சிரமதருமம் இராசதருமம் மோக்ஷதருமம் நீதி முதலிய சிறந்த உறுதிப்பொருள்களை யெல்லாம் அறிவிப்பதனால் முனிவர்கள் சீர்தூக்கிப்பார்க்குமிடத்து மற்றை யெல்லா நூல்களினும் மிகுந்த பாரம் [அதாவது - மகிமை] உடைமைபற்றி, இந்நூலுக்குப் பாரத மென்னும் பெயர் இடப்பட்டதென்றுங் கொள்ளலாம்; முன்னொருகாலத்தில் தேவர்யாவரும் நான்குவேதங்களையும் ஒரு தட்டிலும் பாரதத்தை மற்றொருதட்டிலு மாகத் துலாக்கோலில் வைத்துநிறுக்க, வேதமனைத்தையும் வைத்த பக்கத்தினும் இந்நூலை வைத்த பக்கம் வலிதாயிருந்ததென வடநூற்பாரதத்தின் அநுக்ரமணிகை யத்தியாயம் கூறும்.* [இனி, இந்தச் சொல்லை, பார் அதம் என இரண்டுசொல்லாகப் பிரித்து, அதம் என்பதை ஹதம் என்னும் வடமொழிப்பெயரின் திரிபாகக்கொண்டு, பூமியிலுள்ள பல துஷ்ட அசுரர்களும் கெட்ட அரசர்களும் முதலியோரது நாசத்தைக் கூறுவ தொரு நூலென்று பொருள்கூறுவாரு முளர்; அது பொருந்தாது: எனெனில்,—பாரதம் என்னும் வடமொழி ஒருமொழியாதலாலும், அதற்கு வடமொழிக்கு ஏற்பப் பொருள்கூறுவது தகுதியே யன்றித் தமிழ்மொழிக்கு ஏற்பப் பொருள்கூறுதல் தகாமையாலு மெனக் காண்க.]

யாவரும் மேற்கொண்டு பூசிக்கத்தக்க மேம்பாட்டை யுடைத்தாயிருத்தல் பற்றி, இந்த இதிகாசத்துக்கு 'மகா' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது. அம்மேம்பாடாவது - இருக்குமுதலிய நான்குவேதங்களோடு ஒப்ப ஐந்தாம்வேதமென்று சிறப்பித்துக்கூறப்படும் மகிமை; "பாரதஃ பஞ்சமோவேதஃ", "நீடாழி

* 'முனிவர் ஏனையஇதிகாசபுராணங்களுக்கும் பாரதத்திற்கு முள்ள வேற்றுமை யறியக் கருதி அவற்றிற்கு ஒருமணியும் பாரதத்திற்கு ஒருமணியும் தராசில்வைத்துச் சீர்தூக்கி நோக்குங்கால் பாரதமணித்தட்டு பாரமுடைத்தாய்க் கீழ் இறங்கினமையின்' என்றல், வியாசபாரதத்தோடு முரணும்.

யுலகத்து மறைநாலோ டைந்தென்று நிலைநிற்கவே, வாடாத தவவாய்மை முனி ராசன் மாபாரதஞ்சொன்னநாள்," "மண்ணிலாரணநிகரென வியாதனூர் வகுத்த, எண்ணிலாநெடுங்காதை" என்பன காண்க. அன்றியும், மிகச்சிறந்த பகவத் கீதையைத் தன்னுள் பீஷ்மபர்வத்திலும், விஷ்ணுஸஹஸ்ரநாமஸ்தோத்ரத்தை ஆநுசாஸநிகபருவத்திலும் அடக்கிக்கொண்டிருப்பது, இந்நூலுக்கு எல்லா நூல் களினுஞ் சிறந்த மேம்பாடாம். மகாபாரதம் என்னும் பண்புத்தொகைநிலைத்தொ டர்மொழி - வடமொழிப் புணர்ச்சி யாதலால், வருமொழி முதல் வலி இயல்பா யிற்று; [நன்னூல் - மெய்யீற்றுப் புணரியல் - ருசு.] இந்நூலை முதலில் வட மொழியிற் செய்தவர், ஸ்ரீவேதவியாசமகாமுனிவர்: இவரால் வைக்கப்பட்ட 'பாரதம்'என்கிற முதனூலின்பெயரே "முதனூல் கருத்த னளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும், இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே" என்னுஞ் சூத்திரத்து விதிப்படி வழிநூலாகிய இத்தமிழ்நூலுக்கும் பெயராயிற்று. பாரதத்துக்கு 'ஜயம்' என்றும் ஒரு சிறப்புப்பெய ருண்டு; (நால் வகைப்புருஷார்த்தங்களையும் பெறுதற்குக் காரணமாகும் நூல் ஜய மெனப் பெயர்பெறு மென்பது வடமொழிநிகண்டு.)

உபதேசபரம்பரையில்வந்த ஒருவருடைய பழைய சரித்திர மொன்றைப் பிரதானமாகஎடுத்துப் பலகிளைக்கதைகளோடுபுணர்த்து விரித்துக்கூறும் நூல் - இதிகாச மென்றும் [இதிகாசம் - பழையவரலாறு], உலகத்தின் தோற்றம், ஒடுக் கம், முனிவர்கள் அரசர்கள் மரபு, அவர்கள் சரித்திரங்கள், மநுவந்தரம் என்னும் ஐந்து விஷயங்களை விரவிக்கூறும் நூல் - புராணமென்றும் [புராணம் - ஐந்து இலக்கணங்களுடன் பழையவரலாறுகளை யுணர்த்தும் நூல்] வேறுபாடு உணரத் தக்கது. இதிகாசம் - இராமாயணமும், பாரதமும். புராணம் - பிராம்மம் முத லாகப் பதினெட்டுவகைப்படும். இந்த இதிகாசபுராணங்கள் - வேதத்தின்கருத்து இன்னதென்று நியாயப்பிரமாணங்களால் தேற்றிவிளக்குதல்பற்றி, வேதத்திற்கு உபப்ருஹ்மணங்க ளென்று சொல்லப்படும்; உபப்ருஹ்மண மென்றால் வளர்ப்பதென்று பொருளாம். இவற்றுள், புராணங்களினும் இதிகாசம் பிரபல மான பிரமாண மென்றும், அதுபற்றியே இதனை முன்னர்வைத்து 'இதிகாசபுரா ணம்' எனக் கூறுவ தென்றும் அறிக.

பெருங்காப்பியமாவது - வாழ்த்து, தெய்வவணக்கம், தலைமைப்பொரு ளுரைத்தல் என்கிற மூன்றுவகை மங்களங்களுள் ஒன்றை முதலிற் பெற்று, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளையுந் தருந்தன்மையதாய், சிறந்தஒருதலைவன்மேலதாய், நாடு நகரம் மலை கடல் காலம் சந்திரசூரியர் உதய அத்தமனம் விவாகம் முடிகவித்தல் • பொழில்விளையாட்டு நீர்விளையாட்டு மதுபானம் மக்கட்பேறு கலவியிற்களித்தல் புலவியிற்புலத்தல் மந்திரம் தூது போர்ச்செலவு போரிடல் வெற்றி முதலிய பலவகை வருணனைகளை யுடைய தாய், சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் முதலான பாகுபாடு பொருந்தி, வீரம் முதலிய சுவைகளும் அவற்றைவிளக்குங் கருத்துக்களும் விளங்க, காதுக்கினிய ஒருதிறப்பாட்டாலேனும் பலதிறப்பாட்டாலேனும் கட்டுரையாலேனும் கற்றோ ராலியற்றப்பட்டு நிற்பதாம். இங்குக்கூறிய வருணனைகளுள் சில குறைந்து வரினும் குற்றமில்லை. இங்ஙனம் கூறியதனால், இது ஒருகதையின்மேலதென்ற

தாயிற்று. இப்பாரதத்தில் இப்பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவும் வருவதை ஆங்காங்குக் காண்க. [முற்கூறியவாறு பலவருணனைகளைப்பெருமலும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினுள் ஒன்றும் பலவுங் குறைந்தும் வருவன - சிறுகாப்பியமென்றும், காப்பியமென்றுங் கூறப்படும்; அவை - உலா, பரணி, ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ், கோவை, கலம்பகம், அந்தாதி, மாலை முதலாயின.]

பாரதம்-அந்தந்தப்பாகத்தின் விஷயத்தைக் குறிக்குஞ்சொற்களால் ஆதிபருவம், சபாபருவம், ஆரணியபருவம், விராடபருவம், உத்தியோகபருவம், பீஷ்மபருவம், துரோணபருவம், கர்ணபருவம், சல்லியபருவம், ஸௌப்திகபருவம், ஸ்திரீபருவம், சாந்திபருவம், ஆநுசாஸநிகபருவம், அசுவமேதபருவம், ஆசிரமவாசபருவம், மௌசலபருவம், மகாபிரஸ்தாநபருவம், ஸ்வர்க்காரோகணபருவம் எனப் பெயர்பெற்ற பதினெட்டுப் பருவங்கள் அடங்கியுள்ளது; அவற்றுள்,

முதலாவது

ஆதிபருவம்.

ஆதிபர்வம் என்ற வடமொழித்தொடர் - முதலாகிய பருவம் என விரியும்; பண்புத்தொகை. இரட்டுறமொழித லென்னும் உத்தியால், இத்தொடருக்கு - கதாநாயகர்களான பாண்டவர்கள் அவர்களுக்குப் பங்காளிகளான துரியோதனாதியர்கள் என்னும் இவர்களது முதல்வரலாற்றைக் கூறுவதாகிய பாகமென்றும், இந்நூலின் பருவம் பதினெட்டனுள் முதலாவது பருவமென்றும் பொருள் கொள்ளலாம். இவர்கள் பிறந்த சந்திரகுலத்தின் சரித்திரமும், இவர்களுடைய பிறப்புவரலாறும், இளம்பருவத்தில் நிகழ்ந்த செய்திகளும் இப்பருவத்திற் கூறப்படுகின்றன. பர்வம் - கணு; கரும்பு மூங்கில் முதலியவற்றிற்கு ஏகதேசமாகிய [ஏகதேசம் - ஒருபகுதி] கணுப்போல நூலுக்கு ஏகதேசமாகிய உறுப்பை 'பருவம்' என்பது - உவமவாகுபெயர். இத்தொடரில் வருமொழிமுதல்வலி இயல்பானது வடமொழிப்புணர்ச்சியாதலி னென்க; [நன்-மெய்-கூசு.] "இணைந்தியல் காலை" என்ற சூத்திரத்து 'ரவ்வழி உவ்வுமாம்' என்றதனால், பர்வம் பருவமென ரகரத்திற்குப்பின் உகரம்வந்தது; இனி, அச்சூத்திரத்து 'மவ்வக்கு உகரமும்' என்றதனால் வகரத்துக்குமுன் உகரம்பெற்ற தெனக் கூறினும் இழுக்காகாது.

மூன்றாவது

வாரணாவதச் சருக்கம்.

வாரணாவத மென்ற ஊரில் நடந்த செய்தியைக் கூறுகின்ற பாகமென்று பொருள். வாரணாவதத்தைப் பற்றிய சருக்கமென விரியும்: இரண்டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. வாரணாவதத்தினது சம்பந்தமான சருக்க மென விரித்தால், ஆறும்வேற்றுமைத் தொகையாம். இச்சருக்கத்தின் முதல்நூற்றெட்டுப்பாடல்கள் வரையில் பாண்டவதுரியோதனாதியர்களது இளம் பருவத்து நிகழ்ச்சிகள் பலவற்றை எடுத்துக்கூறி, அதன்பின், துரியோதனாதியர் பாண்டவரை வாரணாவத நகரத்துக்குச் செலுத்தின செய்தியைக் கூறுகின்றாராதலின், இதற்கு வாரணாவதச்சருக்கமென்ற பெயர் தலைமைபற்றி வந்ததென்க. சருக்கம் - ஸர்க்கமென்ற வடசொல்லின் திரிபு; முடிபு அல்லது படைப்புஎன்று

பொருள்; அது - சங்கேதத்தால், ஒரு பெரிய வகுப்பி னுட்பட்ட சிறியபாகத் தைக் குறிக்கும்.

கதைத்தொடர்ச்சி.

[பாரதகதை பிரசித்தமான தாதலால், இந்தச் சருக்கத்துக்கு முன்கதைத் தொடர்ச்சி சுருக்கமாகவே எழுதப்படுகின்றது.]

சந்திரகுலத்திலே புதன் புரூரவா ஆயு நகுஷன் யயாதி பூரு பரதன் ஹஸ்தி குரு முதலிய பலஅரசர்கள் தோன்றியபின் அம்மரபில் உதித்து இப்பரதகண்டத் தில் அஸ்திநபுரியில் செங்கோல்செலுத்திய சந்தனுவென்னும் அரசனுக்கு முதல் மனைவியாகிய கங்கையின் குமாரன் பீஷ்ம னென்பவனும், இரண்டாம்மனைவி யாகிய யோஜநகந்தியின் மகன் விசித்திரவீரியனென்பவனும் இருந்தார்கள். [முன் னர்ச் சத்தியவதியென்னும் பெயரோடு இருந்து பராசரமுனிவனோடு சேர்ந்து வியாசமுனிவனைப்பெற்றுப் பின்பு அப்பராசரனருளாற் கன்னிப்பருவமடைந்த கந்தவதியென்னும் மறுபேருடைய இந்த யோஜநகந்தியினிடம் சந்தநுவுக்குப் பிறந்த முதற்குமாரனான சித்திராங்கதன், அப்பேருள்ள ஒரு கந்தருவனாற் கொல் லப்பட்டு இளமையில் இறந்தான்.] முன்னைய விரதத்தின்படி வீடுமன் விசித்திர வீரியனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தான். விசித்திரவீரியன் மகப்பெறாது இறந்ததன்பின் அவனது பத்தினிகளுள் அம்பிகையினிடத்துத் திருதராஷ்டிர னும், அம்பாலிகையினிடத்துப் பாண்டுவும் சந்ததிவிருத்தியின்பொருட்டுத் தாய் சொற்கடவாத வியாசபகவானது திருவருளாற் பிறந்தனர். அம்பிகையால் ஏவி யனுப்பப்பட்ட தாதிப்பெண்ணினிடத்து வியாசனருளால் அவதரித்த விதுர னென்னுங் குமாரனும் இருந்தான். திருதராட்டிரன் பிறவிக்குருடனானதலால், விதுரனை மந்திரியாக வைத்துக்கொண்டு, பாண்டு, திருதராட்டிரனுக்கு முடி சூட்டித் தானே இராசாங்ககாரியம் பார்த்துவந்தான். பாண்டுவுக்கு மனைவியுடன் சேரக்கூடா தென்று சாபம்நேரிட்டதனால், அவனனுமதிப்படி, அவனது மூத்த மனைவியாகிய குந்தி, தனக்கு இளமையில் துருவாசமுனிவன் உபதேசித்திருந்த மந்திரத்தின் மகிமையால் வந்த யமதருமராசனால் யுதிஷ்டிரனையும், வாயுதேவனால் பீமசேனனையும், தேவேந்திரனால் அருச்சுனனையும் பெற்றாள். [முன்பு கன்னிப் பருவத்துச் சூரியனாற் குந்தியினிடம் பிறந்தவன், கர்ணன்.] அவளுடைய சக்க ளத்தியான மாத்திரி அவளால் அம்மந்திரம் உபதேசிக்கப்பெற்று அசுவினிதேவர்க ளால் நகுலன் சகதேவன் என்னும் இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றாள். திருத ராட்டிரனுக்குத் துரியோதனன் துச்சாசனன் முதலிய நூறுபிள்ளைகளும், துச் சளையென்னும் ஒருபெண்ணும் காந்தாரியினிடம் பிறந்தார்கள். [பஞ்சபாண்ட வர்களுள் தருமன் துரியோதனாதியர் நூற்றுவரினும் மூத்தவ னென்றும், வீமன் முதலிய மற்றைநால்வரும் துரியோதனனுக்கு இளையவ ரென்றும் அறிக.] பாண்டு, சிலகாலத்துக்குப் பின் இறந்துபோனான். அப்பொழுது மாத்திரி சக கமனஞ்செய்தாள். பின்பு பாண்டவரும்துரியோதனாதியரும்கூடி அத்திநாபுரியில் விளையாட்டயர்கையில் வீமன் துரியோதனாதியரினும் மிக மேம்பட்டுத்தோன்றி னான். அதனால் அவனிடம் அவர்கள் மிகப்பொறாமைகொண்டார்கள்.

[இவ்வரலாறு - கீழ்க் குருகுலச்சருக்கத்திலும், சம்பவச்சருக்கத்திலும் பரக் கக் கூறப்பட்டுள்ளது.

தெய்வவணக்கம்.

அருமறை முதல்வனை யாழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமக டலைவனைத் தேவ தேவனை
யிருபத முளரிக ளிறைஞ்சி யேத்துவாம்.

இது - காப்புச் செய்யுள். இதனால், தாம் எடுத்துக்கொண்ட சருக்கம் இடையூறில்லாமல் இனிது முடியும்பொருட்டு, உயர்ந்தோர்வழக்கத்தின்படியே கவி கடவுள்வணக்கங் கூறுகிறார். கடவுள்வணக்கம் இரண்டுவகைப்படும்; வழிபடுகடவுள்வணக்க மென்றும், ஏற்புடைக்கடவுள்வணக்க மென்றும். வழிபடு கடவுள்வணக்கமாவது - தாம்தாம் குலதெய்வமாகக்கொண்டு ஆராதிக்கின்ற கடவுளை வணங்குதல்; இதற்கு உதாரணம் - வைஷ்ணவ சமயத்தார் விஷ்ணுவையும், சைவமதத்தவர் சிவனையும், ஜைநர் ஜிநனையும், பௌத்தர் புத்தனையும் வணங்குதல் போல்வன. ஏற்புடைக்கடவுள் வணக்கமாவது - தாம்தாம் செய்ய எடுத்துக்கொண்ட காரியத்துக்குத் தகுதியையுடைய கடவுளை வணங்குதல்; இதற்கு உதாரணம் - இராமாயணங் கூறுபவர் இராமனையும், பாகவதஞ்சொல்பவர் கண்ணனையும், கந்தபுராண முரைப்பவர் சுப்பிரமணியமூர்த்தியையும் வணங்குதல் போல்வன. ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயத்தவரான இந்நூலாசிரியராற் கூறப்பட்ட இவ்வாழ்த்து, தமக்கு வழிபடுகடவுளும் எடுத்துக்கொண்ட இதிகாசத்துக்கு ஏற்புடைக்கடவுளு மாகிய திருமாலைப் பற்றிய தென அறிக. திருமாலின் திருவவதாரமாகிய கண்ணபிரான் இந்நூலுக்கு ஏற்புடைக் கடவுளென்பது, இந்நூலாசிரியர் தற்சிறப்புப்பாயிரத்தில் "முன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும், பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன், மன்னு மாதவன் சரிதமு மிடையிடை வழங்கு, மென்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்" எனக் கூறியதனாற் பெறப்படும். இத்தன்மை, வியாசபாரதத்தின் அநுக்கிரமணிகை யத்தியாயத்திலும் நன்குவிளங்கும்.

(இதன்பொருள்.) அரு மறை முதல்வனை - அறிதற்கு அரிய வேதங்களின் முதலாகவுள்ளவனும், ஆழி மாயனை - சக்கராயுதத்தையேந்திய மாயவனும், கருமுகில் வண்ணனை - காளமேகம்போன்ற திருநிறமுடையவனும், கமலம் கண்ணனை - செந்தாமரைமலர்போலுந் திருக்கண்களையுடையவனும், திருமகள் தலைவனை - இலக்குமிக்கு நாயகனும், தேவ தேவனை - தேவர்களுக்கெல்லாம் ஆதிதேவனுமான திருமாலை, இரு பதம் முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம் - உபயதிருவடித்தாமரைமலர்களில் வணங்கித் துதிப்போம்; (என்றவாறு.)

'அருமறைமுதல்வன்' என்பது முதலிய ஆறும் - ஒருபொருள்மேல் வந்த பலபெயர்கள்: இவற்றுக்கு இறுதியில் ஒருவினை கொடுக்கப்பட்டது; [நன் - பொதுவியல் - சக.] அருமறை, கருமுகில், இருபதம் - பண்புத்தொகைகள். வேதங்களிற்கூறப்பட்ட முதற்பொருளாகுபவனும், வேதங்களை முதலில் வெளியிட்டவனும் இவனே யென்பது, 'மறைமுதல்வன்' என்பதன் கருத்து. சிலசாதியார்க்கும் பெண்பாலார்க்கும் ஓதுவிக்கவும் ஓதவும் கேட்கவும் ஆகாதென மறுக்

கப்படுதலாலும், மறைந்தபொருளையுடைமையாலும், வேதத்துக்கு மறையென்று பெயர்; (முந்தினபொருளில் மறு - பகுதி, ஐ - செயப்படுபொருள்விகுதி யென்றும், பிந்தினபொருளில் மறை என்ற பகுதி முதனிலைத்தொழிலாகுபெயராயிற்றென்றுங் கொள்க.) முதல்வன், தலைவன் என்பவற்றில், வ் - பெயரிடைநிலை. பகைவரையழிப்பதனாலும், வட்டவடிவமாகவுள்ளதனாலும், சக்கரத்துக்கு ஆழியென்றுபெயர். திருமாலின் திருவாழி, சுதர்சநமெனப் பெயர்பெறும். இது - சங்கம், கதை, வில், வாள் என்ற திருமாலுக்குஉரிய மற்றைப்படைகள் நான்கிற்கும் உபலக்ஷணம்; [உபலக்ஷணமாவது - ஒருசொல் ஒழிந்த தன் இனத்தையுங் குறிப்பது ; நன் - பொது - எ.] இனி, ஆழி என்பதற்கு - எங்கும் தனது ஆஜ்ஞாசக்கரத்தைச் செலுத்துகிற என்றும், கடலிற்பள்ளிகொண்டருளுகிற என்றும், கடல்போலுங் கருநிறமுடைய என்றும் பொருள்கொள்ளலாம். கடலென்ற பொருளில் ஆழ்ந்துள்ளது ஆழியெனக் காரணக்குறியாம்; ஆழ் - பகுதி, இ - கருத்தாப்பொருள்விகுதி. மாயன் - மாயையையுடையவன்; மாயையாவது - பிறராற்செய்தற்கு அரிய காரியங்களை எளிதிற்செய்துமுடிக்குந் திறம் ; ஆச்சரியகரமான குணங்களுஞ் செயல்களும் எனினுமாம். மாயன் என்ற பெயர்க்கு - மாயைபோலக் கருநிறமுடையானென்று பொருள்கூறுவாரு முளர். வண்ணம் - வர்ணமென்ற வடசொல்லின் திரிபு. கருமுகில் வண்ணன் என்பதற்கு - கரியமேகம் போன்ற குணமுடையவனென்றும் பொருள்கொள்ளலாம்; வண்ணம் - குணம்: அதாவது - கைம்மாறு கருதாது கருணைமழைபொழிந்து குளிர்ச்சிசெய்தல். கமலம், தேவதேவன், பதம் - வடசொற்கள். கண்ணுக்குத்தாமரைமலருவமை, செம்மை மென்மை அழகுகளுக்கு என்க; காலுக்கும் இப்படியே. கமலம் என்பதற்கு- நீரை அலங்கரிப்பதென்று காரணப்பொருள்கூறுவர் வடநூலார். காண்பது, கண். திருமகள் - செல்வத்துக்கு உரியதலைவி. பதமுளரிகள் என்பதற்கு - திருவடியாகிய தாமரைமலர்களில் என்று உருவகமாக உரைத்தலினும், தாமரைமலர் போன்ற திருவடிகளில் என்று உரைத்து முன்பின்னாகத்தொக்க உவமைத்தொகையெனக் கொள்ளுதலே மேலாம்; தொடர்ச்சிதோன்றக் கூறுமையின். தேவதேவனையென முதற்பெயரில் இரண்டனுருபு வந்ததனால், பதமுளரிகள் என்ற சினைப்பெயரில் எழனுருபு விரிக்கப்பட்டது; "முதலை ஐஉறிற் சினையைக் கண் உறும்" என்பதுகாண்க. முளரிகளை இறைஞ்சியென இரண்டனுருபுவிரித்தால், இரண்டு செயப்படுபொருள் வந்த வினையாம். முளரி - முட்களையுடைய அரியை [தண்டை] யுடையதெனக் காரணப்பொருள்படும்; வேற்றுமைத்தொகையன்மொழி. கமலம், முளரி என்ற கொடியின் பெயர்கள் - இங்குப் பூவைக் குறித்தலால், முதலாகுபெயராம். ஏத்துவாம் என்றது, கவிகளுக்குஉரிய இயற்கைத் தனித்தன்மைப்பன்மை; கவி தமதுபரம்பரையோரையும், தம்மாணாக்கர்களையும், இந்நூல் பயில்வோரையும், மற்றும்திருமாலடியார்களையும் உளப்படுத்திக்கூறிய தன்மைப்பன்மை யென்றலும் உண்டு. இதற்கு, யாம் என்பது - தோன்றா எழுவாய்.

இங்ஙனம் வேதப்பிரதிபாத்யனான விசித்திரசக்தியையுடைய கருணாநிதியாகிய ஆதிதேவன்விஷயமாக வணக்கங் கூறியதனால், கவி தாம்தொடங்கிய காரியம் இடையூறின்றி இனிதுமுடியு மென்பது கருத்து.

ஆசீர்வாதம் [வாழ்த்து], நமஸ்காரம் [வணக்கம்], வருபொருளுரைத்தல் [வஸ்துநிர்த்தேசம்] என்ற மூன்றுவகை மங்களங்களுள் இது நமஸ்கார மென்னும் வணக்கமாம்.

இப்பாட்டு, மொழிமாற்று முதலியன இன்மையால், யாற்றுநீர்ப்பொருள்கோள்; [நன் - பொது - சுக.]

இதுமுதல் முப்பத்தொரு கவிகள் - பெரும்பாலும் மூன்றாஞ்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களு மாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். இவற்றில் நான்காஞ்சீர் கூவிளச்சீராகவே நிற்கும். (க)

[துரியோதனன் கர்ணனைத் தனக்குஉற்றதுணையாக் கொள்ளுதல்.]

ஆங்கவரம்முறையயருமாயிடைத்
தீங்கொருவடிவமாந்திறற்சுயோதனன்
பாங்கிவனமக்கெனப்பரிதிமைந்தனை
வாங்குபுதழீஇயினன்வலிமைகூரவே.

(இ - ள்.) ஆங்கு - அவ்விடத்தில் [அஸ்திநாபுரியில்], அவர் - அவர்கள் [பாண்டவர்களும் துரியோதனாதியர்களும்], அ முறை - அவ்வாறு, அயரும் - விளையாடுகிற, ஆயிடை - அப்பொழுது,—தீங்கு ஒரு வடிவம் ஆம் திறல் சுயோதனன் - தீக்குணமே ஒருமனிதவடிவங் கொண்டாற் போன்ற [மிகக்கொடிய] வலிமையையுடைய துரியோதனன், பரிதி மைந்தனை - சூரியனுடைய மகனான கர்ணனை, இவன் நமக்கு பாங்கு என - இவன் நமக்குஉரிய நண்ப னென்று கருதி, வலிமை கூர - (தனக்கு) வலிமை மிகும்படி, வாங்குபு தழீஇயினன் - அழைத்துச் சேர்த்துக்கொண்டான்; (எ - று.)—ஏகாரம் - ஈற்றசை.

இளமையில் விளையாடும்போது பாண்டவருள் வீமனது வலிமைக்குமுன் தங்கள் நூற்றுவர்வலிமையும் ஆற்றாமையைக் கண்டு, துரியோதனன், தங்களுக்குப் பக்கபலம் மிகுதற்பொருட்டு, பலபராக்கிரமங்களிற்சிறந்த கர்ணனை வரவழைத்துத் தனக்கு ஏற்றதுணைவனாக்கிக்கொண்டனன் என்பதாம்.

ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணரநின்ற அங்கு என்ற இடைச்சொல், ஆங்கு என நீண்டது. தாமரைமலர்களும் ஆம்பல்மலர்களும் ஒருகுளத்திற் பொருந்திவளர்தல்போலப் பாண்டவர்களும் துரியோதனாதியர்களும் அத்தினபுரியில் ஒருங்குவளர்வாராயின ரென்றும், அங்ஙனம்வளர்ந்து விளையாடுகையில் வீமன் கருடனைப் போன்றான் துரியோதனாதியர்கள் நாகங்களைப்போன்றன ரென்றும் கீழ்க்கூறியதனை 'அம்முறை' என்றதனாற் சுட்டினார்; "அனுசநிருபன் புதல்வ ரைவரு மகீபன், றனய ரொருநூற்றுவரு மன்பினொடு தழுவிக், கனகுல முகந்துபெய் கருங்கய நெருங்கும், வனச மலருங் குமுத மலருமென வளர்வார்", "எயினலம்புனை கோபுர மாபுரத் தெழுது மாளிகைதோறும், வெயினிலாவுமிழ் கனக நீள் வீதியில் விலாச முற்றிடு நாளிற், பயினன்மேல்வரு கல்லெனச் செறிந்தமெய்ப் பவனன் மைந்தனு மொத்தான், வயினதேயனைக் காத்திரவேயரை மன்னன்மைந்தரு மொத்தார்" என்ற சம்பவச்சருக்கத்துச்செய்யுள்களைக் காண்க. அ + இடை = ஆயிடை; சுட்டுநீள யகரமெய் தோன்றிற்று; [நன் - உயிர் - கரு.] இடை - இடம்; இங்கு, காலமென்ற பொருளில் வந்தது.

'தீங்கொருவடிவமாம்' என்பதற்கு - தீமையின் ஒருருவம் போன்ற என்று உரைப்பினும் அமையும். தீங்கு - 'கு' விகுதி பெற்ற பண்புப்பெயர். ஆம் - உவமவுருபு. திறல் என்ற அடைமொழி, துரியோதனனது மிக்க வலிமையைக் காட்டும். ஸுயோதநன் என்ற வடசொல் - நல்ல போரையுடையவ னென்று பொருள்படும்; தனக்கு வெற்றியுண்டாம்படி போர்செய்யவல்லவ னென்பது கருத்து. பாங்கு - பாங்கன்; நண்பையுணர்த்தும் 'பாங்கு' என்னுங் குணத்தின் பெயர், குணிமேல் நின்றதென்க: பண்பாகுபெயர். நமக்கு என்பது - தனது தம்பியரை யுட்படுத்திக்கூறிய தாதலால், படர்க்கை யுளப்பாட்டுத் தன்மைப் பன்மை. பரிதி - வடசொல். மைந்து - இளமை; அதனையுடையவன், மைந்தன். வாங்குபு - செய்பு என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்; 'பு' விகுதியே காலங்காட்டும். தழுவினன் என்பது 'தழீஇயினன்'என விகாரப்பட்டு அளபெடுத்தது; இது - சொல் விகாரப்பட்டதனால், சொல்லிசையளபெடையின பாற்படும். இங்கே, உயிரளபெடை, செய்யுளோசைக்கு இன்றியமையாததன்றாதலால், அலகுபெறவில்லை. கூர - மிகுதிப்பொருளுணர்த்தும் 'கூர்' என்னும் உரிச்சொல்லடியாப் பிறந்த செயவெனெச்சம் ; இங்கு, இது, காரியப்பொருளதாதலால், எதிர்காலங் காட்டும்.

கர்ணனை 'சூரியன்மைந்தன்' என்றதன் விவரம்:—பாண்டவர்கள் தாயாகுங் குந்திதேவி கன்னிகையாயிருக்கும்பொழுது தனக்குத் துர்வாசமுனிவன் உபதேசித்த மந்திரத்தைப் பரீக்ஷித்தறியும்பொருட்டுச் சூரியனை நினைத்து அந்தமந்திரத்தை உச்சரிக்க, உடனே அத்தேவன் வந்து அவளுக்கு அனுக்கிரகித்ததனால் அவளிடம் பிறந்த புத்திரன் இவன். இவனைப் பிறந்தபொழுதே குந்தி பழிக்கு அஞ்சி ஒரு மிதக்கும்மரப்பெட்டியில் வைத்துப்பூட்டிக் கங்கையாற்றில் விட்டிட, அதனைத் திருதராட்டிரனது தேர்ப்பாகனான அதிரதனென்பவன் கண்டு எடுத்துத் திறந்து பார்த்துக் கொண்டுபோய்த் தன்மனைவியாகிய ராதையுந் தானுமாக வசுசேனனென்று பெயரிட்டு வளர்த்தான். இவனுக்குக் கர்ணனென்ற பெயர் ஆகாசவாணி இட்டது. இவன் இளமையில் பரசுராமனை அடுத்து வழிபட்டு அவனருளால் அஸ்திரசஸ்திரங்களை மிகுதியாகப்பயின்று தேர்ச்சி பெற்று நின்றான். (உ)

[பாண்டவரும் துரியோதனாதியரும் கங்கையில் நீர்விளையாட்டுநிகழ்த்தல்.]

ஒருபகனிலமகளுய்யமங்குலின்
வருபகீரதிநதிவாசநீர்படிந்
திருதிறப்புதல்வருமியைந்தகேண்மையாற்
கரையடைந்தனரிளங்கடவுளோரனார்.

(இ - ள்.) இள கடவுளோர் அனார் - தேவகுமாரர்கள் போன்றவர்களாகிய, இரு திறம் புதல்வரும் - (பாண்டு திருதராஷ்டிரன் என்பவர்களது) புத்திரர்களான இரண்டுவகுப்பினர்களும்,—இயைந்த கேண்மையால் - பொருந்திய நண்புடனே,—ஒரு பகல் - ஒருநாள்,—நிலமகள் உய்ய மங்குலின் வரு பகீரதி நதி வாசம் நீர் படிந்து - பூமிதேவி வாழ்வுபெறும்படி ஆகாயத்தினின்று வந்த கங்கா

நதியினது நறுமணமுடைய தீர்த்தத்திலே தோய்ந்து விளையாடி, கரை அடைந்தனர் - (பின்பு அந்நதியின்) கரையை அடைந்தார்கள்; (எ - று.)

பகீரதி - பாகீரதீ என்னும் வடமொழித் தத்திதாந்தநாமத்தின் குறுக்கல்; பகீரதனாற் கொணரப்பட்டதென்று காரணப்பொருள்படும். பகீரதன், சூரிய குலத்துப் பிரசித்தனான ஓரரசன். இவன், கபிலமுனிவனது கண்ணின் கோபத் தீக்கு இலக்காய் உடலெரிந்து சாம்பலாய் நற்கதியிழந்தவரும், சகரசக்கரவர்த்தியின் குமாரரும், தனது பாட்டனுக்குச் சிற்றப்பன்மாருமாகிய அறுபதினாயிரவரை நற்கதிபெறுவித்தற்பொருட்டு அவர்களுடற்பொடியை நனைத்தற்காக நெடுங் காலந் தவஞ்செய்து தேவலோகத்திலிருந்து ஆகாசகங்காநதியை முன்பு கீழுலகத்துக்குக் கொணர்ந்தனனென வரலாறு காண்க. ("சகரர்தம்பொருட் டருந் தவம்பெரும்பகல் தள்ளிப், பகிரதன் கொணர்ந்திடுதலாற் பகீரதியாகி" என்றது கம்பராமாயணம்.) 'நிலமகளுய்யவரு' என்றது, பூலோகத்தவர்கள் தன்னில் நீராடி அருவினைதீர்ந்து உயர்கதிபெறும்படி வந்த என்றவாறு. திருமால் உலகளந்தகாலத்தில் மேலே சத்தியலோகத்திலே சென்ற அப்பிரானது திருவடியைப் பிரமன் தன்கைக்கமண்டலதீர்த்தத்தாற் கழுவிவிளக்க, அந்த ஸ்ரீபாததீர்த்தமாகப் பெருகிய கங்காநதி, தன்னிடத்து ஒருகால் மூழ்கினவரது கருமமனைத்தையும் ஒழிக்கும் மகிமையுடையதென்பது பிரசித்தம். இங்கு 'நிலமகள்' என்றது, இடவாகுபெயராய், பூமியில் வாழும் உயிர்களைக் குறித்தது. ("நலந்திகழ் சடையான் முடிக்கொன்றைமலரும் நாரணன்பாதத்துழாயுங், கலந்திழி புனலாற் புகர்படு கங்கை" என்றும், "கற்பகமலருங் கலந்திழி கங்கை" என்றும் பெரியாழ்வார் அருளிச்செய்தபடி) கங்காநதி பற்பல திவ்வியமலர்களை அடித்துக்கொண்டு வருதலால், அதன் நீர் 'வாசநீர்' எனப்பட்டது.

நிலம் - (சலியாது) நிற்பதெனக் காரணப்பொருள்படும்; நில்-பகுதி, அம் - கர்த்தாப்பொருள்விகுதி: வடமொழியில் பூமிக்கு வழங்கும் 'அசலா' என்ற பெயர் இப்பொருளதே. மங்குலின், இன் - ஐந்தனுருபு, நீக்கம். நதி - ஈயீறுஇகரமான வடசொல். வாஸம் - வடமொழி. ஒருவர்க்கொருவர் க்ஷேமங்கேட்குந்தன்மையதாதலால், கேண்மையென்று நட்புக்குப் பெயர். இதில், 'ஆல்' உருபு - 'ஒடு' உருபிற்குரிய அடைமொழிப்பொருளில் வந்தது. கடவுளர் கடவுளோர் எனச் சிறுபான்மை விகுதியீற்றுஅயல்அகரம் ஓவாயிற்று. இவ்வுலகசம்பந்தத்தைக்கடந்த தன்மையுடைமையால், கடவுளரென்று தேவர்க்குப் பெயர். கடவுள்-கடத்தல்; தொழிற்பெயர்: உள் - விகுதி; விக்குள், விளையுள் என்பவற்றிற்போல. அனார் - அன்னார் என்பதன் தொகுத்தல்; 'அன்' என்னும் உவமவுருபிடைச் சொல்லடியாப் பிறந்த பலர்பாற் பெயர். குருகுல குமரர்க்குத் தேவகுமாருவமை - சிறப்பிற்கும், ஒளிக்கும், இன்பத்திற்கு மென்க. அன்றியும், இங்குக் கங்கையில்நீராடிக்கரையேறுதல் இருவர்க்கும்பொதுத்தன்மை யென்னலாம். (௩)

[பாண்டவ கௌரவரது உண்டாட்டு.]

தைவருநவமணிச்சயிலமென்னவே
யைவகைநிறங்களுமமைத்தியற்றிய
தெய்வவாடகமனைச்செல்வப்போனகங்
கைவரநுகர்ந்தபின்கண்ணுந்துஞ்சினார்.

(இ - ள்.) தைவரு - (மாசுதீரத்) துடைக்கப்பட்ட, நவ மணி-ஒன்பதுவகை யிரத்தினங்களையுடையதொரு, சயிலம் என்னவே - மலை யென்று (கண்டவர்) சொல்லும்படியாகவே, ஐவகை நிறங்களும் அமைத்து இயற்றிய - ஐந்துவகை நிறங்களையும் பொருத்திச் செய்யப்பட்ட, தெய்வம் ஆடகம் மனை - தெய்வத் தன்மையையுடைய [மிகச்சிறந்த] பொன்னின்மயமான மாளிகையிலே, (இரு திறப்புதல்வர்களும்,) செல்வம் போனகம் - செல்வச்சிறப்புக்கு உரிய சிறந்த உணவை, கைவர நுகர்ந்த பின் - கையார உண்டபின்பு, கண்ணும் துஞ்சினர்- நித்திரையையுஞ் செய்தார்கள்; (எ - று.)

தைவருதல் - தடவுதல்; தைவா என்ற பகுதி, குறுக்கலும் விரித்தலும்பெற்றது. நவமணி - கோமேதகம், நீலம், பவழம், புஷ்யராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. ஐவகைநிறம் - பஞ்சவர்ணம்; அவை - கருமை, செம்மை, பசுமை, பொன்மை, வெண்மை. 'ஐவகைநிறங்களு மமைத்தியற்றிய' என்பதற்கு - ஐந்துவகை நிறங்களையுடைய இரத்தினங்களைப் பதித்துச் செய்யப்பட்ட என்று உரைப்பினும் அமையும்; இவ்வுரைக்கு, நிறம் - பண்பாகுபெயராம். ஆடகம் - நால்வகைப்பொன்களுள் ஒன்று; மற்றவை - கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்பன. தெய்வவாடகம் - மிகச்சிறந்த பொன் என்றபடி. உம்மை இரண்டனுள், முன்னது - முற்றுப்பொருளதும், பின்னது- இறந்ததுதழுவிய எச்சப்பொருளதுமாம். நவமணி - வடமொழித்தொடர். சயிலம்- சைலமென்ற வடசொல்லின் முதற்போலி. சைலமென்பது - சிலைமயமான தெனக் காரணப்பொருள்படும்; சிலை - கல். 'என்ன' என்பதை உவமவுருபாக வுங் கொள்ளலாம். தெய்வம், ஆடகம் - தைவம், ஹாடகம் என்ற வடசொற்களின் திரிபு. போனகம் - போஜந மென்ற வடசொல்லின் சிதைவென்பர். மாளிகையின் பருமைக்கும், சிறப்புக்கும், மணிமலையை உவமைகூறினர். மணிஉவமை - நிறங்கட்கு. கண்துஞ்சுதல் - கண்மூடி யுறங்குதல். இச்செய்யுளுக்கு எழுவாய், முன்செய்யுளிலிருந்து வருவிக்கப்பட்டது. (அ)

[தூங்குகிற வீமனைத் துரியோதனுதியர் கொடிகளாற் கட்டுதல்.]

கண்படைக்கங்குலிற்கன்னசௌபல
ரெண்படைக்குமரனோடெண்ணிப்பாவக
னண்பன்மெய்ப்புதல்வனைநார்கொள்வல்லியாற்
றிண்பதத்தொடுபுயஞ்சிக்கயாத்தபின்.

இதுவும், அடுத்தகவியும் - குளகம்; ஒருதொட ரெனப்படும். குளகமாவது - பலபாடல் தொடர்ந்து ஒருவினை கொண்டு முடிவது. "குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்." குளகமல்லாதது, முத்தக மெனப்படும் ; அது - ஒருசெய்யுள் தனியேநின்று முடிவது: "முத்தகச்செய்யுள் தனிநின்று முடியும்".

(இ - ள்.) கண் படை கங்குலில் - நித்திரைசெய்கின்ற இரவிலே, கன்ன சௌபலர் - கர்ணனும் சகுனியும், எண் படை குமரனோடு எண்ணி - எண்ணங்களின் தொகுதியையுடைய இராசகுமாரனான துரியோதனனோடு ஆலோசித்து, பாவகன் நண்பன் மெய் புதல்வனை- அக்கினியின் தோழனான வாயுவினது மெய்யன்புக்கு உரிய மகனாகிய வீமனை, நார் கொள் வல்லியால் - கயிற்றின் தன்மை

யைக்கொண்ட நீண்டகொடிகளால், திண் பதத்தோடு புயம் சிக்க யாத்தபின் - வலிய கால்களும் கைகளும் இறுகும்படி கட்டியபின்பு, (எ - று.)—'பெருநதியூடு வீழ்த்தினர்' என வருங்கவியோடு முடியும்.

கண்படை - கண்படுதல், கண்மூடியுறங்குதல்: 'ஐ' விகுதிபெற்ற தொழிற் பெயர்: அதனையுடைய கங்குலென இரண்டனுருபும் பயனுந்தொக்க தொகையா கக்கொள்க. கன்னன் + சௌபலன் = கன்னசௌபலர்; உயர்திணை யும்மைத் தொகை யாதலின், பன்மைவிகுதி பெற்றது; [நன் - பொது - உக.] "எண்பது கோடி நினைந்தெண்ணுவன" என்றபடி துரியோதனன் வீமனை வெல்லும்பொரு ட்டுக் கொண்ட எண்ணங்கள் அளவிறந்தன வாதலால், 'எண்படைக்குமரன்' என்றார். இனி, இதற்கு - எண்ணத்தக்க தொகுதியையுடைய துரியோதன னென்று உரைத்தலு மொன்று; இவ்வுரைக்கு, தொகுதி-தம்பிமார்கூட்டம். குமரன் - குமாரனென்பதன் குறுக்கல். பாவகன், வல்லீ, பதம், புஜம் - வடசொற் கள். நெருப்புப் பற்றியெரிதற்குக் காற்று உதவியாதல்பற்றி, காற்றுக்கு அக்கினி சகாய னென்றும், நெருப்புக்குக் காற்றின்சகாய னென்றும் பெயர்வழங்கும். "தேங்காத மள்ளர் திரள்தோளிணை சிக்க யாத்த" என்ற சீவகசிந்தாமணிச் செய் யுளின் உரையில் நச்சினார்க்கினியர் 'சிக்க - அகப்படக்கோல; திசைச்சொல்' என்றது உணரத்தக்கது; சிக்குஎன்ற வினைப்பகுதி அகப்படுதலென்ற பொரு ளில் கன்னடத்திலும், தெலுங்கிலும் வழங்குகிறது. 'ஆர்த்தபின்' என்றும் பாட முண்டு; பொருள் இதுவே.

கன்னன் - கர்ணனென்ற வடசொல்லின் திரிபு; இப்பெயர் - கர்ணகுண் டலங்களோடு பிறந்தமைபற்றியது:காதின்வழியே பிறந்ததனால் வந்த பெயரென் பர் ஒருசாரார்; கர்ணம் - காது. ஸௌபலன் - ஸுபலனென்னும் அரசனது புத் திரன்; வடமொழித் தத்திதாந்தநாமம்; இவன், திருதராட்டிரனது மனைவியாகிய காந்தாரியி னுடன்பிறந்தவன்: ஆதலால், துரியோதனாதியர்க்கு மாமன்; காந்தார தேசத்து அரசன்; சூதாடுதலில் மிகவல்லவன். பாவகனென்ற பெயருக்கு உற் பத்தியருத்தம் - பரிசுத்திசெய்பவ னென்பது. நண்பன் - நண்பையுடையவன்; நண்பு - தொழிற்பெயர்: நள் - பகுதி, பு - விகுதி, ளகரம் ணகரமானது, சந்தி. 'எண்படக் குமரரோ டெண்ணி' என்ற பாடத்துக்கு-துரியோதனாதியர்களுடனே நன்றாக ஆலோசித்து என்க; எண் - எண்ணம். (௫)

[அவர்கள் வீமனைக் கங்கையில் எறிதல்.]

அரவினிற்பிணித்தெழுமரவம்பொங்கிட
வுரனுடைப்பொருப்பையன்றும்பர்நாயகன்
பரவையிற்செறித்தெனப்பயனில்செய்கையால்
விரவுமப்பெருநதியூடுவீழ்த்தினர்.

(இ - ள்.) உம்பர் - தேவர்களும், நாயகன் - அவர்கள்தலைவனான இந்திரனும், அன்று - முன்னொருகாலத்தில், உரன் உடை பொருப்பை - வலிமையையுடைய மந்தரமலையை, அரவினில் பிணித்து - (வாசுகியென்னும்) பாம்பினாற் கட்டி, எழும் அரவம் பொங்கிட - மிக்க ஓசை யுண்டாம்படி, பரவையில் செறித்து என - (பாற்) கடலில் இட்டாற்போல,—(கர்ணன் முதலியோர் வீமனை), பயன் இல்

செய்கையால் - பிரயோசனமற்ற செயலால், விரவும் அ பெருநதியூடு வீழ்த்தினர்- பொருந்திய அந்தப் பெரிய கங்கைநதியின் நடுவிற் போகட்டார்கள்; (எ - று.)

உவமையணி. பெரிய வலிய வீமனுடலுக்கு மந்தரகிரியும், நீண்ட திண்ணிய கொடிக்கு வாசுகியென்னும் மகாநாகமும், கர்ணசௌபலர்க்குத் தேவர்களும், துரியோதனனுக்குத் தேவராசனான இந்திரனும், கங்கைப்பெருக்குக் கடல்வெள்ளமும் உவமையெனக் காண்க. மேல் வீமன் தனது வலிமையால் தப்பியெழுதலின், இவர்கள் தொடங்கிய காரியம் பயன்பெறுதலின்று என்பது தோன்ற, 'பயனில் செய்கையால் வீழ்த்தினர்' என்றார். இவர்செய்த செய்கை இம்மை மறுமைகளில் நற்பயனைத்தராமல் பழிபாவங்களையே விளைப்பதென்பதும் இதில் தோன்றும்.

முன் ஒருகாலத்தில் இவ்வண்டகோளத்துக்கு அப்புறத்திலுள்ள விஷ்ணுலோகத்துச் சென்று திருமகளைப்புகழ்ந்துபாடி அவளால் ஒருபூமாலை யளிக்கப்பெற்ற ஒரு வித்தியாதரமகள், மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன்கைவீணையில் தரித்துக்கொண்டு பிரமலோகவழியாய் மீண்டுவருகையில், துர்வாசமாமுனி எதிர்ப்பட்டு அவளை வணங்கித்துதிக்க, அவ்விஞ்சைமங்கை அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள். அதன்பெருமையை யுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட முனிவன், ஆனந்தத்தோடு தேவலோகத்துக்கு வருகையில், மிகஉல்லாசமாக ஐராவதயானையின்மேல் பவனிவந்துகொண்டிருந்த தேவேந்திரனுக்கு அம்மாலையைக் கைநீட்டிக்கொடுக்க, அவன் அதனை அங்குசத்தால் வாங்கி யானையின் பிடரியில் இட்டவளவில், அம்மதக்களிறு அதனைத் துதிக்கையாற்பிடித்து இழுத்துக் கீழ்எறிந்து காலால் மிதித்துத்துவைத்தது. அதுகண்டு முனிவரன் கடுங்கோபங்கொண்டு 'இங்ஙனஞ் செல்வச்செருக்குற்ற நினது எல்லா ஐசுவரியங்களும் கடலில் ஒளித்துவிடக்கடவன' என்று சாபங் கொடுக்க, உடனே தேவர்செல்வம் யாவும் ஒழிந்தன. ஒழியவே, அசுரர் வந்து பொருது அமரரை வெல்வாராயினர். பின்பு இந்திரனுந் தேவர்களுஞ் சென்று திருமாலைச் சரணமடைந்து, அப்பிரான் அபயமளித்துக்கட்டளையிட்டபடி அசுரர்களையுந் துணைக்கொண்டு மந்தரமலையை மத்தாக நாட்டி, வாசுகியென்னும் பாம்பைக் கடைகயிறாகப்பூட்டிப் பாற்கடலைக் கடைந்தனரென்பது, இங்குக் குறித்த கதை.

'உம்பர்நாயகன்' என்பதற்கு - தேவர் தலைவனான திருமாலென்று உரைப்பது சிறப்பன்று. அரா என்னுங் குறியதன்கீழ் ஆக் குறுகி உகரமேற்று அரவுஎன நின்றது; [நன் - உயிர் - உஉ.] இன் - சாரியை, இல் - ஏதுப்பொருளில் வந்த ஐந்தனுருபு; கருவிப்பொருள் ஏதுப்பொருளில் அடங்கும். அரவம் - ரவமென்ற வடசொல், "ரவ்விற்கு அம்முதலாம் முக்குறிலும்" என்றதனால், முதலில் அகரம் பெற்றது. உரன் - உரமென்பதன் இறுதிப்போலி; [நன் - எழுத்து - சுஎ.] உடை- உடைய என்னுங் குறிப்புப்பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல். உம்பர் என்னும் மேலிடத்தின் பெயர் - அங்குள்ள தேவர்க்கு இடவாகுபெயராம். இதன் எதிர்மொழி - இம்பர். நாயகன் - வடசொல். பரவியது பரவையெனக் காரணக்குறி; ஐ-கருத்தாப்பொருள் விகுதி. செறித்து - எச்சத்திரிபு; [நன் - வினை - உஎ.] இனி, செறித்ததென என்பது செறித்தெனத் தொக்கதெனினும் அமையும். என- உவமவுருபு.

'ஆர்வம் பொங்கிட' என்ற பாடத்துக்கு, ஆசைமிக என்று பொருள். 'பய னில்செய்கையான்,' 'வீழ்த்தினன்' என்று பாடமானபோது, பயனில்செய்கை யானை துரியோதனன் கன்னசௌபலரோடும் குமாரர்களோடும் [தம்பிமாரோ டும்] கலந்து ஆலோசித்து வீழ்த்தினனென்க: இவனுக்கு உம்பர்நாயகன் உவமை. இப்பாடமே சிறத்தலை உய்த்துநோக்குக. (சு)

வீமன் கட்டுவிடுவித்துக் கரையேறுதல்.

வீழ்ந்தவனனந்தரநிமிர்ந்துமெய்யுறச்
சூழ்ந்தனபிணிகளைத்துணிகளாக்கியே
யாழ்ந்திலனேறிமீண்டவசத்தோடவட்
டாழ்ந்திலனிராகவனறம்பிபோன்றுளான்.

(இ - ள்.) இராகவன் தம்பிபோன்று உளான் - இராமனது தம்பியானஇலக்கு மணனை யொத்துள்ளவனாகிய, வீழ்ந்தவன் - (கங்கைப்பெருக்கில்) விழுந்த வீமன் அனந்தரம் - பின்பு, நிமிர்ந்து - (இறுகப்பிணிக்கப்பட்ட கைகால்களை) நிமிரப் பண்ணி, மெய் உற சூழ்ந்தன பிணிகளை துணிகள் ஆக்கி - தன் உடம்பை அழுந் தச்சுற்றியுள்ள கட்டுக்களை(த்தன் உடல்வலியால்) துண்டுகளாக்கிவிட்டு, ஆழ்ந்தி லன் ஏறி - (அந்நீர்ப்பெருக்கில்) ஆழாமலே கரையேறி, மீண்டு - திரும்பி, அவ சத்தோடு - (துயில்மிகுதியாலாகிய) பரவசத்துடனே, அவண் தாழ்ந்திலன் - அங் குத் தங்காதவனாய் (ப்படுக்க)ச் சென்றான்; (எ - று.)

அருள் அறம் முதலிய நற்குணங்களிற்சிறந்த தருமனது தம்பியான வலிமை மிக்க வீமனுக்கு, அத்தகைய இராமபிரானது தம்பியான ஆற்றலிற்சிறந்த இலக்கு மணனை உவமைகூறினர். அன்றியும், இராமராவண யுத்தத்தில் இந்திரசித்தினது நாகபாசபந்தத்தினின்று விடுபட்டு எழுந்த இலக்குமணன்போல, இப்பாசபந் தத்தினின்று விடுபட்டு வீமன் பிழைத்தெழுந்தன னென்னுங் கருத்துப்பட இவ் வுவமை கூறின ரெனினுமாம். அநந்தரம் - வடசொல். பிணி - பிணிப்பு; முத னிலைத் தொழிலாகுபெயர். துணி - துணிக்கப்பட்டது; செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. ஆழ்ந்திலன் - எதிர்மறை இறந்தகால முற்றெச்சம். ந+வசம்; அவசம்: வடமொழிச்சந்தி; ந - எதிர்மறை குறிப்பது. அவண் என் பதில், அண் - இடப்பொருள்காட்டும் விகுதி. ராகவன்என்ற வடசொல்லுக்கு- ரகுவென்னும் அரசனது குலத்திற் பிறந்தவனென்று பொருள்; தத்திதாந்தநாமம். சூரியவம்சத்தில் இரகுவென்பவன் கல்விகேள்விகளிலும் கொடையிலும் பராக் கிரமத்திலும் சிறந்தவனாதலால், இராமனை அவன் மரபின் பெயராற் கூறினர். தம்பி என்பதில், தாம் - பகுதி, பி - முறைப்பெயர்விகுதி. தமது பின்பிறந்தவ னென்று பொருள்படும் 'தம்பின்' என்ற பெயர் தம்பியென மருவிய தென்பர் ஒருசாரார். 'அந்தர நிமிர்ந்து' என்றும், 'தாழ்ந்தனன்' என்றும் பாடம்; அவை - முறையே, மேலெழுந்து என்றும், படுத்துக்கொண்டான் என்றும் இனிது பொருள்படும். முதலடி - தொடைமுரண். (எ)

பின்பு துரியோதனன் வீமன்மேற் பாம்புகளைக் கடிக்கவிடுதல்.

வாளிரவியையொளிமறைக்கும்வெஞ்சினக்
கோளரவினையனகொடியநெஞ்சின
னீளரவினங்களானித்திராலுவை
மீளவுங்கொல்லுவான்வீரனேவினான்.

(இ - ள்.) வாள் இரவியை ஒளி மறைக்கும் - கிரணங்களையுடைய சூரியனது ஒளியைமறைக்கின்ற, வெம் சினம் கோள் அரவினை - கொடிய கோபத்தையுடைய கிரகமாகிய (இராகு கேது என்னும்) பாம்பை, அன - ஒத்த, கொடிய நெஞ்சினன் - கொடுமனத்தையுடையவனாகிய, வீரன் - துரியோதனன்,—நித்திராலுவை - தூங்கிக்கொண்டிருக்கிற வீமனை, நீள் அரவு இனங்களால் - நீண்ட பாம்புகளின் கூட்டத்தைக்கொண்டு, மீளவும் கொல்லுவான் - மீண்டுங் கொல்லத் துணிபவனாய், ஏவினான் - (அவன்மேல் அவற்றை) ஏவினான்; (எ - று.)

வீமன்மீது பாம்புகளைக் கடிக்கவிட்டு அவனைக் கொல்லுமாறு பிடாரர்களை ஏவினனென்பது கருத்து. பாம்புவடிவமான இராகுகேது வென்னுங் கிரகத்தின் வாய்ப்பட்ட சூரியன் விரைவில் அத்துயரொழிந்து எளிதில் வெளிப்படுதல் போல, பாம்பின்வாய்ப்பட்ட வீமன் உடனே அத்துயரொழிந்து அழிவின்றி இனிது எழுந்தனனென்னுங் கருத்துப்பட, சூரியனை மறைக்குங் கிரகத்தை வீமனைக்கொல்லத்தொடங்கிய துரியோதனனுக்கு உவமைகூறினரென்க. வாள் - ஒளியையுணர்த்துகையில், உரிச்சொல். ரவி, நித்ராலு, வீரன் - வடசொற்கள். பகையை எதிர்த்துப்பொருது கொல்லும் வீரத்தாலன்றி வஞ்சனையால் வீமனைக் கொல்லத்துணிந்தவனை, இங்கே 'வீரன்' என்றது, இகழ்ச்சிக்குறிப்பு. கொல்லுவான் - முற்றெச்சம். கோள் - க்ரஹமென்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு; (காலத்தை யளந்து) கொள்வதென்று காரணப்பொருள்படும். அன - அன்ன; தொகுத்தல். 'கோளரவனையன கொடியநஞ்சின, நீளரவினங்களால்' என்றபாடம், இராகுகேதுக்கள் போன்றனவும் கொடுவிஷமுள்ளனவுமான பாம்புகளென்று பொருள்படும்.

ஒவ்வொருசமயத்திற் சூரியசந்திரரை மறைக்கிற சந்திரனது சாயையையும், பூமியினது சாயையையும் இராகு கேது வென்னுங் கரும்பாம்பு செம்பாம்புகளாகக்கூறுதல், கவிசமயம்; அன்றியும், பாற்கடல்கடைகையில் உண்டான அமிருதத்தை எடுத்துக்கொண்ட திருமால் மிகஅழகிய மோகினி யென்னும் பெண்வடிவத்தால் அசுரர்களைமயக்கித் தேவர்களுக்கே அமிருதத்தைப் பங்கிட்டுக்கொடுத்து வருகையில், ராகுவென்னும் ஓர்அசுரன் தான் இருத்தற்கு உரிய அசுரர்கூட்டத்தைவிட்டுத் தந்திரமாகத் தேவர்கோட்டியினிடையிலே புக்குக் கையேற்று அமிருதத்தை வாங்கியுண்ண, அதனைச் சூரியசந்திரர் குறிப்பித்தமாத்திரத்தில், எம்பெருமான் அவனை அகப்பையால் அடித்துத் தலைவேறு உடல்வேறாக்க, அமிருதமுண்டதனால் உயிர்நீங்காத அத்தலையும் உடம்பும், விஷ்ணுவின் அநுக்கிரகத்தால் இராகுகேதுக்களென இரண்டுகிரகங்களாகி, சூரியன்முதலிய எழுகிரகங்களோடு சேர்ந்து, தம்மேற் கோள்சொன்ன சூரியசந்திரர்க்குப் பகையாய், சிற்சில காலத்தில் அவர்களை மறைக்கின்றன வென ஒரு புராணகதையும் உண்டு. (அ)

பாம்புகளை அழித்திட்டு வீமன் உயிர்பிழைத்தல்.

கடித்தனபன்னகநகங்கொள்கைகளாற்
றுடித்திடமற்குணத்தொகுதிபோற்பிசைந்
திடித்திடுமுகிலெனவெழுந்துமாநகர்
வடித்தவேற்றுணைவரோடெய்திமன்னினான்.

(இ - ள்.) கடித்தன பன்னகம் - (அவ்வேவலின்படி தன்னைக்) கடித்திட்ட பாம்புகளை, (வீமன்), நகம் கொள் கைகளால் - (கூரிய) நகங்களைக்கொண்ட தன் கைகளால், துடித்திட - துடிக்கும்படி, மற்குணம் தொகுதிபோல் பிசைந்து - மூட்டைப்பூச்சிக் கூட்டங்களைப்போல (எளிதிலே) பிசைந்தொழித்துக் கொண்டே, இடித்திடும் முகில் என எழுந்து - இடியிடிக்கிற மேகம்போல (முழக்கஞ்செய்து கொண்டு) எழுந்து, வடித்த வேல் துணைவரோடு எய்தி - கூரியவேலாயுதத்தை யுடைய அந்த உடன்பிறந்தவர்களுடனே கூடி, மா நகர் மன்னினான் - பெரிய அஸ்தினாபுரியைச் சேர்ந்தான்; (எ - று.)

கொடியபாம்புகளைக் கொல்லுதற்கு ஏற்ற கருவிகளை யுடைமை தோன்ற 'நகங்கொள் கை' என்றும், தூங்கிக்கொண்டிருக்கையில் பாம்புகள் கடித்தமையால் திடுக்கிட்டு அதிர்ந்து எழுந்தமை தோன்ற 'இடித்திடுமுகிலென எழுந்து' என்றும், தனக்குநேர்ந்த இரண்டுஆபத்தும் துரியோதனனுதியரால் நிகழ்ந்தன வென்று அறிந்திலனென்பது தோன்ற 'துணைவரோடு எய்தி' என்றுங் கூறினார். கடித்தன - பலவின்பால் வினையாலணையும்பெயர்; எழாஞ்செய்யுளில் 'சூழ்ந்தன' என்பதுபோல. இவற்றைப் பெயரெச்சப்பொருளில் வந்த வினைமுற்றெனினும் இழுக்காது. பந்நகம் என்ற வடமொழி - பத் ந கம் எனப்பிரிந்து, கால்களால் நடவாதது [மார்பினாற்செல்வது] என்றும்; பந்நம் கம் எனப்பிரிந்து, வளைந்துவளைந்து செல்வதென்றும் அவயவப்பொருள்படும். நகம் - வடசொல். 'நகங்கொள்கை' என்பதற்கு - மலைபோன்ற கையென்றலும் ஒன்று. மற்குணம், மா, நகர் - மத்குணம், மஹா, நகரம் என்ற வடசொற்களின் திரிபு. வடித்தல் - நெருப்பிலிட்டுக்காய்ச்சி யடித்துக் கூராக்குதல். வேற்றுணைவர் என்பதற்கு - வேல்போலக் கொடிய பங்காளிகளெனினும் அமையும். துணைவர், வ் - பெயரிடைநிலை. எய்தி, எய்து - பகுதி. 'இடித்திடு முகிலென வெழுந்து' என்ற உவமையால், இடியேறு நாகங்களை அழிக்குந்திறம்போல வீமன் அவற்றை எளிதில் அழித்தனனென்பது விளங்கும். வெல்வது வேல் எனக் காரணக்குறி. (கூ)

துரியோதனன் வீமனைக் கழுவில்விழுத்த அவன் அறிந்து உய்தல்.

வேறொருபகற்கழுநிரைத்துவீமனோ
டாறுபாய்ந்திருவருமாடும்வேலையிற்
றேறலான்வஞ்சகந்தேறிவண்டினா
லேறினான்கடந்தரியேறுபோன்றுளான்.

(இ - ள்.) வேறு ஒரு பகல் - மற்றொருநாளில், தேறலான் - பகைவனான துரியோதனன், கழு நிரைத்து - (வெளித்தெரியாதபடி நீரினுள்ளே) கழுக்களை வரிசையாக நாட்டி, வீமனோடு - வீமனுடனே, ஆறு பாய்ந்து - கங்காநதியிலே

குதித்து, இருவரும் ஆடும் வேலையில் - இவ்விருவரும் விளையாடும்பொழுதில், அரி ஏறு போன்றுளான் - ஆண்சிங்கத்தை யொத்துள்ளவனான வீமன், வஞ்சகம் வண்டினால் தேறி - (அவன்செய்த) வஞ்சனையை (க் கழுமுனையில் தங்கிய) வண்டுகளினால் அறிந்து, கடந்து - (அக்கழுவைக்) கடந்துகுதித்து, ஏறினான் - கரையேறினான்; (எ - று.)

மற்றொருநாள் துரியோதனன் கங்கைத்துறையில் இரும்பினாலும் செம்மரத்தாலும் கூரியகழுக்களை நீரின்மேல்தோன்றாதபடி உள்நாட்டச்செய்து வீமனை 'நீரில்விளையாடலாம் வா' என்று வஞ்சனையாக அழைத்துப்போய் 'இங்கிருந்து நீ நீரில் குதிக்கிறையா பார்ப்போம்' என்ன, அப்பொழுது கண்ணன் கருவண்டினுருவங்கொண்டு கழுமுனைதோறும் உட்கார்ந்திருக்க, வீமன் அதனை நோக்கி 'இதுஎன்ன நீரோட்டத்தில் வண்டுகள் உட்கார்ந்திருக்கின்றனவே!' என்று உற்றுப்பார்க்கும்போது அவற்றின்கீழ் வசிகள் நாட்டியிருக்கக்கண்டு, தன்சங்கேதப்படி அவைநாட்டியிராத இடம் பார்த்துக் குதித்துக் கரையேறி மீண்டானென்பது, இங்குக்குறித்த வரலாறு. இங்ஙனங் கண்ணனருளால் வீமன் உயிர்பிழைத்ததை "பொங்கழற் சிந்தைச் சுயோதனன் கங்கைப்புனல் விளையாட்டிடைப் புதைத்த, வெங்கழுமுனையில் விழாம லோரளியாய் வீமனுக்காருயி ரளித்தாய்" என்று தருமன் (மேற் பதினேழாம் போர்ச்சருக்கத்தில்) பாராட்டியெடுத்துக் கூறிக் கண்ணனைத் துதிக்குமாற்றை யுணர்க.

எளிதிற்பகையழிக்கும் ஆற்றலுடைமையை விளக்க, வீமனுக்குச் சிங்கத்தை உவமைகூறினர். அரி - ஹரியென்ற வடசொல்லின் திரிபு; (யானைமுதலிய பெருவிலங்குகளையும்) அரிக்க வல்லதென்று பொருள்: அரித்தல் - அழித்தல். ஏறு - ஆண்பாற்பெயர். பாய்ந்து ஆடுதலாகிய வினை துரியோதனனுக்கும் உள்ளதனால், 'நிரைத்து' என்ற செய்தெனெச்சத்தைத் தன்கருத்தாவின் வினைகொண்டதென்னலாம். வீமன் - பீமன் என்ற வடசொல் திரிந்தது; (பகைவர்க்குப்) பயங்கரனவனென்று பொருள். தேறலான் - எதிர்மறைவினையாலணையும்பெயர்; நம்பத்தகாத கொடியவனென்று பொருள். வேலை - வேலாஎன்ற வடசொல் ஆவீறு ஐயாயிற்று. மூன்றும் அடியில் 'தேறலான்,' 'தேறி' என்பவை சொல்நிலையில் ஒன்றோடொன்று முரணுதலால், முரண்தொடை. 'கடகரியேறு' என்ற பாடத்துக்கு, சிறந்த ஆண்யானை யென்க. (௬௦)

மற்றொருநாள் துரியோதனன் வீமனுக்கு விஷமூட்டுதல்.

பின்னருமொருபகற்பெற்றம்பெற்றவன்
றன்னையும்மகிபதிதனயனாதரித்
தின்னமுதருத்துவான்போலயாவையுந்
துன்னியவிடங்களாற்றுய்ப்பித்தானரோ.

(இ - ள்.) பின்னரும் - பின்பும், ஒரு பகல் - ஒருநாள், அ மகிபதி தனயன் - திருதராட்டிர மகாராசனது குமாரனான அத்துரியோதனன், பெற்றம்பெற்றவன் தன்னை - வாயுதேவனாற் பெறப்பட்ட குமாரனான வீமனை, ஆதரித்து இன் அமுது அருத்துவான்போல - அன்புகொண்டு இனியநல்லுணவை உண்பிப்ப

வன்போல, துன்னிய விடங்களால் யாவையும் துய்ப்பித்தான் - செறிந்த நஞ்சுகளோடு எல்லாவுணவுகளையும் உண்பித்தான்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

பின் என்ற இடைச்சொல் - இங்கே காலப்பொருளது; அதன்மேல், அர் - சாரியை. உம்மை - கீழ்நடந்த செய்திகளை நோக்குதலால், இறந்தது தழுவிய எச்சப்பொருளது. பெற்றவன்றன்னை யென்பதில், தன் - சாரியை. மகீபதி - பூமிக்குத் தலைவன்; மகீ - பூமி: பெரியது. ஆதரித்து - ஆதர மென்னும் வடமொழிப் பெயரினடியாய்ப் பிறந்த தெரிநிலைவினையெச்சம். இன்னமுது - பண்புத்தொகை; இனிமை யென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் இடை இகரமுங் கெட்டு 'இன்' என நின்றது. அமுது - அம்ருத மென்ற வடசொல்லின் திரிபு; மரணத்தைத் தவிர்ப்பது [சாவாமருந்து] என்று பொருள். இந்தத் தேவாமிருதத்தின் பெயர், இங்கு, அதுபோல் இனிய உணவைக் குறித்தலால், உவமவாகு பெயர். அருத்து - அருந்து என்பதன் பிறவினை; மெலி வலியானது, பிறவினைக் குறி. உண்பன தின்பன பருகுவன நக்குவன எனப் பலவகைப்படுகிற சோறு கறி நீர் முதலிய உணவுகளிலெல்லாம் வீமனுக்குத் தெரியாதபடி மிக்க விஷங் கலந்து உண்பித்தன னென்பார், 'யாவையுந் துன்னியவிடங்களால் துய்ப்பித்தான்' என்றார். விடங்களால் என்பதில், 'ஆல்' உருபு - 'ஒடு' உருபின்பொருளில் வந்தது. விடங்கள் என்ற பன்மையால், பலவகை விஷங்களையுங் குறித்தவாறு. 'அமுதருத்துவான்போல விடங்களால் துய்ப்பித்தான்' என்றது, தொடைமுரணின்பாற்படும். கருப்பம் ஆடவர்வயிற்றில் இரண்டுமாதம் தங்கிப் பின்னர்ப் பெண்டிர்வயிற்றிற் சேர்கிறதென்னும் நூல்வழக்குப்பற்றியும், ஒருவன்மனைவியின் வயிற்றில் தோன்றியவரை அவன் வயிற்றில் தோன்றியவரென்னும் உலகவழக்குப்பற்றியும் 'பெற்றம் பெற்றவன்' என்றனரென்க: இது, ஒருவகை உபசாரவழக்கு; இதனை "தக்கனணிவயிற்றுதித்தாரைம்பதின்மர்" என்றாற்போலக் கொள்க. மஹீபதி, தநயன், விஷம் - வடசொற்கள். (கக)

துரியோதனன் வீமனைக் கயிற்றாற்கட்டிக் கங்கையில் அமிழ்த்துவித்தல்.

விடத்திலேயழிந்தறிவொழிந்தவீமனை
வடத்திலேபிணித்தனன்கங்கைவாரியி
னிடத்திலேயமிழ்த்தினனிதயமொத்தவர்
திடத்திலேமுதிர்ந்தகிங்கரர்திறங்களால்.

(இ - ள்.) விடத்திலே அழிந்து அறிவு ஒழிந்த வீமனை - நஞ்சுண்டதனால் நிலைகுலைந்து அறிவழிந்த வீமசேனனை, (துரியோதனன்), இதயம் ஒத்தவர் - தன்கருத்துக்கு ஒத்தகருத்துடையவர்களான, திடத்திலே முதிர்ந்த கிங்கரர் திறங்களால் - வலிமையில்மிக்க வேலைக்காரர்களுடைய கூட்டங்களைக்கொண்டு, வடத்திலே பிணித்தனன் - கயிற்றாற்கட்டி, கங்கை வாரியின் இடத்திலே அமிழ்த்தினன் - கங்கைநீரிலே அமிழப்பண்ணினான்; (எ - று.)

நான்குஅடியிலும், ஏகாரம் - அசை. விடத்தில், இல் - ஐந்தனுருபு, ஏதுப்பொருளது. வடத்தில்என்பதில், 'இல்' என்ற ஐந்தனுருபு - கருவிப்பொருளில் வந்தது. பிணித்தனன் - வினையெச்சமுற்று. வாரி, கிங்கரர் - வடசொற்கள். இதயம், திடம் - ஹ்ருதயம் த்ருடம் என்ற வடசொற்களின் சிதைவு. தனது அந்த

ரங்கமான செயல்களைப் பிறர்க்கு வெளியிடாதவரென்பது, 'இதயமொத்தவர்' என் பதனாற் பெறப்படும். 'திடத்திலேமுதிர்ந்த' என்ற அடைமொழி, உடல்வலிமை மிகுதியோடு நெஞ்சுறுதிமிகுதியையுங் காட்டும். அமிழ்த்து - அமிழ் என்பதன் பிறவினை; அமிழ்ந்து என்பதன் பிறவினை யென்பாரும் உளர். (௧௪)

பாதாளஞ்சென்ற வீமனை அங்குள்ள நாகங்கள் கடித்தல்.

ஓதவான்கடலிடையொளித்தவெற்பெனப்
பாதலந்தனில்விழுபவனசூனுவை
வேதனைப்படுத்தினர்விடங்கொள்கூரெயிற்
றாதவப்பணமணியரவினஞ்சிறார்.

(இ - ள்.) ஓதம் வான் கடலிடை ஒளித்த வெற்பு என - அலைகளையுடைய பெரியகடலிலே மறைந்த மலைபோல, பாதலந்தனில் விழு - (கங்காநதியிலுள்ள பிலத்துவாரத்தின் வழியாய்ப்) பாதாளலோகத்திற் போய்விழுந்த, பவன சூனுவை - வாயுகுமாரனான வீமனை,—(அங்குள்ள), விடம் கொள் கூர் எயிறு - விஷம் பொருந்திய கூரியபற்களையும், ஆதவம் பணம் மணி - சூரியகாந்திபோலவிளங்குகிற படத்திலுள்ள மாணிக்கத்தையுமுடைய, அரவின் அம் சிறார் - நாகர்களின் அழகிய பிள்ளைகள் [பாம்புக்குட்டிகள்], வேதனைப்படுத்தினர் - கடித்துவருத்தினார்கள்; (எ - று.)

வான் என்ற சொல் - இலக்கணையாய், பெருமையை உணர்த்தும். முன் ஒருகாலத்தில் மலைகளெல்லாம் பறவைகள்போல இறகுடையனவாயிருந்து அவற்றாற் பறந்து திரிந்து பலவிடங்களிலும் உட்கார்ந்துகொண்டு ஆங்காங்குள்ள பிராணிகளையெல்லாம் அழித்துவருகையில், அத்துன்பத்தைப் பார்த்துப் பொறுக்கலாற்றாத முனிவர் முதலியோரது வேண்டுகோளால் திரிலோகாதிபதியான இந்திரன் சினந்து வந்து தனது வச்சிராயுதத்தால் அவற்றின் இறகுகளையெல்லாம் அறுத்துத்தள்ளிவர, அப்பொழுது மைநாகம்முதலிய சிலமலைகள் வாயுதேவனது உதவிபெற்று விரைந்துஓடிக் கடலில் ஒளித்துநின்று உயிர்பிழைத்தனவென்பது, முதலடியிற்குறித்த கதை. இனி, முதலடிக்கு - திருமால் கூர்மாவதாரஞ்செய்து தாங்குதற்குமுன்பு பாற்கடலில் அமிழ்ந்திய மந்தரமலைபோல வென்று உரைப்பினும் அமையும். பாதலம், பவநஸூநு, வேதநா, ஆதபம், பணம், மணி - வடசொற்கள். நாகத்தின் விஷப்பற்கள் - காளி காளாத்திரி யமன் யமதூதி யெனப் பெயர் பெறும். ஆதபம் - நன்றாகத் தபிப்பது என வெயிலுக்குக் காரணக்குறி. சிறார் - சிறுமையென்னும் பண்பினடி 'ஆர்' என்னும் பலர்பால்விகுதி பெற்ற பெயர். கடித்தார்களென்ற பொருளில் 'வேதனைப்படுத்தினர்' என்றது, காரணத்தைக் காரியத்தாற் கூறிய உபசாரவழக்கு. நாகராவார் - படமும் வாலுமுடையராய் மனிதவடிவமுந் தெய்வப்பிறப்புமானதொரு சர்ப்பசாதியார். (௧௫)

அப்பாம்புகளின் விஷத்தால் முந்தினவிஷம் நீங்குதல்.

முற்படுகொடுவிடமுளையெயிற்றுறும்
பிற்படுவிடத்தினாற்பெயர்ந்துபோதலின்
மற்படுபுயகிரிவடப்பிணிப்புமற்
றற்படுமிருள்புலரலரியாயினான்.

(இ - ள்.) முன் படு கொடு விடம் - (வீமனுடம்பில்) முன்பு பொருந்திய கொடிய (உணவின்) விஷம், முளை எயிறு உகும் பின் படு விடத்தினால் - (சிறு நாகங்களின்) முளைத்த பற்களினின்று சொரிந்த பிந்தின விஷத்தால், பெயர்ந்து போதலின் - நீங்கிப்போனதனால், (வீமன்), மல் படு புயம் கிரி வடம் பிணிப்பும் அற்று - வலிமைமிக்க மலைகள்போன்ற (தனது) தோள்களிற் கயிற்றாற் கட்டிய கட்டும் (தனது உடல்வலியால்) துணிபடப்பெற்று, அல் படும் இருள் புலர் அலரி ஆயினான் - இரவில் உண்டாகும் இருளைக் கெடச்செய்த சூரியன் போன்றான்; (எ - று.)

கொடுவிடமும் கடும்பிணிப்பும் அற விளங்கிய வீமனுக்கு, இருளற விளங்கிய சூரியனை உவமைகூறினார். விஷத்துக்கு விஷமே மாற்றாதலால், முந்தினவிஷம் பிந்தினவிஷத்தால் நீங்கிற்று. புஜகிரி - வடமொழித்தொடர்; முன்பின்னாகத் தொக்க உவமத்தொகை. அலரி - பரந்துவிளங்குபவ னெனக் காரணப்பொருள் படும்; அலர் - பகுதி, இ - கருத்தாப்பொருள்விகுதி. ஆயினான் என்றது, உவம வாசகமாய் நின்றது. 'முனையெயிறு' என்றும் பாடம்: கூர் நுனியுடைய பல்.(௧௪)

வீமனுக்கு வாசுகி அன்போடு அமிருதமூட்டுதல்.

வாசுகிதனக்கிவன்வரவுணர்த்தலு
மாசுகன்மதலையென்றறிந்துமற்றவன்
றேசுறுபொற்குடந்தெரிந்துபத்தினு
லேசறுமமுதெலாமினிதினூட்டினான்.

(இ - ள்.) வாசுகிதனக்கு இவன் வரவு உணர்த்தலும் - (நாகராசனான) வாசுகிக்கு இந்தவீமனது வருகையை (நாகங்கள்) அறிவித்தவுடனே,—அவன் - அந்த வாசுகி, ஆசுகன் மதலை என்று அறிந்து - (இவனை) வாயுவின் குமார னென்று அறிந்துகொண்டு, தேசு உறு பொன் குடம் தெரிந்து - ஒளிமிக்க பொன்மய மான (அமிருத) கலசங்களைத் தேர்ந்தெடுத்து, பத்தின் - அக்குடங்கள் பத்திலே உள்ள, ஏசு அறும் அமுது எலாம் - குற்றமில்லாத அமிருதம் முழுவதையும், இனிதின் ஊட்டினான் - இனிமையாக உண்பித்தான் ; (எ - று.)—மற்று, ஆல் அசைகள்.

தன்சாதியாகிய பாம்புகளுக்கு உணவாய் நின்று அவற்றை வளர்க்கிற வாயுவின் மகனென்ற சம்பந்தத்தாலும், அஷ்டதிக்பாலகருளொருவனது குமாரனென்ற கௌரவத்தாலும், பலநாகங்கள் கடித்தும் விஷம்உறைக்காத அவனதுஉடல் வலிமையைக் கண்டதனாலாகிய ஆச்சரியத்தாலும், வீமனுக்கு வாசுகி அமிருது ஊட்டினனென்க. குந்தியின் தாய்மரபினரோடு வாசுகிக்கு உறவுமுறைமை உள்ளதனால், அவன், வீமனுக்கு ஆயிரம்யானைவலிமைகொண்ட திவ்வியரசத்தைப் பானஞ்செய்வித்தன னென்று வியாசபாரதத்திற் கூறியுள்ளது. உணர்த்தலும் - 'உம்' விகுதி பெற்ற இறந்தகாலவினையெச்சம்; அல் - சாரியை: இவ்வினையெச்சம், பிற்பொருளோடு விரைவையுங் காட்டும். ஆசுக னென்ற வட சொல் - விரைவிற்செல்பவ னென்று பொருள்படும்; ஆசு - சீக்கிரம். தேசு, குடம் - தேஜஸ், கடம் என்ற வடசொற்களின் சிதைவு. 'எல்லாம்' என்றது - இங்கே, எஞ்சாமைப்பொருளில் வந்தது. இனிது - பண்படியாப்பிறந்த ஒன்

றன்பாற்குறிப்புமுற்றெச்ச வினையுரி; அதன்மேல், இன் - சாரியை. ஊட்டு - உண்என்றதன் பிறவினை; டு - விகுதி, பகுதிமுதல்நீண்டது - விகாரம். 'இவன் வரவுணர்த்தலு மாசுகன்மதலை யென்றறிந்து' என்றதனால், பலநாகங்கள் கடித்து நஞ்சுசொரிந்தும் இறந்திலனென்ற இவன்வரலாற்றைக் கேட்டமாத்திரத்தால் இத்தகைய பேராற்றலையுடையவன் மகாபலசாலியான வாயுவின் மகனேயாதல் வேண்டுமென்று ஊகித்தறிந்தனனென்பது போதரும். 'பற்றினால்' என்ற பாடத்துக்கு - அன்போடு என்க. (கரு)

அமிருதமுண்டதனால் வீமன் உடல்தணிதல்.

வெங்கனல்கொளுந்தலின்வெந்தவான்புல
மங்குல்பெய்மாரியால்வயங்குமாறுபோ
லங்கெரிவிடநுகர்ந்தழிந்தபேருட
லிங்கமுதருத்தலாலெழில்புரிந்ததே.

(இ - ள்.) வெம் கனல் கொளுந்தலின் வெந்த - வெவ்விய நெருப்புப் பற்றுதலால் எரிந்துபோன, வான் புலம் - பெரிய காடு, மங்குல் பெய் மாரியால் - மேகம் பொழிந்த மழையால், வயங்கும் ஆறுபோல் - தழைத்துவிளங்குந்தன்மை போல,—அங்கு எரி விடம் நுகர்ந்து அழிந்த பேர் உடல் - அவ்விடத்தில் [துரியோதனனிடத்தில்] கொடியவிஷத்தை உண்டதனால் தன்னிலைகுலைந்த (வீமனது) பெரிய உடம்பு, இங்கு அமுது அருத்தலால் எழில் புரிந்தது - இவ்விடத்தில் அமிருதம் உண்பிக்கப்பெற்றதனால் அழகுசெய்தது;(எ - று.)—ஏ - ஈற்றசை; தேற்றமுமாம்.

உவமையணி. எழில் - வளர்ச்சியுமாம்; எழு என்ற பகுதி 'இல்' விகுதி பெற்ற தொழிற்பெயர். எழில்புரிந்தது - மேனிகொண்டது என்றவாறு. எழிலாவது - வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளருமென்பதுபோன்று காட்டுதல். இனி, முதலிரண்டடிக்கு - உஷ்ணமான நெருப்புப்போன்ற சூரியகிரணஞ் சுடுதலால் தீந்துபோன பெரியவயலிலுள்ள பயிர்கள் மழையால் தழைத்துச்செழித்தல்போல என்றும் பொருள்கொள்ளலாம். நுகர்ந்து - காரணப்பொருளதாகிய நுகர வென்னும் செயவெனெச்சத்தின் திரிபு. பேருடல் - பெருமை யென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் ஆதிநீண்டது. 'சொளுத்தலின்' எனவும் பாடம். (கசு)

வீமன் வாசுகியின் மாளிகையில் எட்டுநாள் தங்குதல்.

ஆயிரம்பதின்மடங்கரசுவாக்களின்
மாயிருந்திறல்வலிமலிந்தமேனியா
னேயிருந்தவப்பயனென்னவெண்பகன்
மேயிருந்தனன்பணிவேந்தன்கோயிலே.

(இ - ள்.) ஆயிரம் பதின் மடங்கு அரசு உவாக்களின் - பதினாயிரம் அரசயானைகளினுடைய, மா இரு திறல் வலி - மிகவும் அதிகமான பெரிய வலிமை, மலிந்த - பொருந்திய, மேனியான் - உடம்பையுடையவனான வீமன்,—எய் இரு

தவம் பயன் என்ன - பொருந்திய மிக்க தவத்தின் பயனினாற்போல, பணிவேந்தன் கோயில் - நாகராசனான வாசுகியினது சிறந்தமாளிகையிலே, எண் பகல் மேய் இருந்தனன் - எட்டுநாள் தங்கியிருந்தான்; (எ - று.)

இன்பத்திற்சிறந்த நாகலோகத்தில் மனிதவுடம்போடு சென்று சிலநாள் தங்குதல் அரிதிற்செய்த பெரியதவயோகத்தின் சித்தியினாலன்றி இயலாதாதலால், 'ஏயிருந்தவப்பயனென்ன' என உவமைகூறினார். இனி, இவன் தனது மனையிற் சிலநாள் வந்துதங்குதல் தான்அடைந்த பெருந்தவப்பயனே யென்று வாசுகி கொண்டாடி உபசாரமொழிகூற என்று உரைத்தலும் ஒன்று. அரசுஉவா - சிறந்த யானை; சிறந்ததை அரசென்றல். மரபு. உவா - யுவா என்ற வடசொல் விகாரப்பட்டது. அரசுவாவின் இலக்கணம் - நான்குகால்களும் துதிக்கையும் கோசமும் வாலுமாகிய ஏழுறுப்பு நிலத்தில்தோய்ந்து, பாலையுஞ் சங்கையும்போன்ற வெண்ணிறம் வாய்ந்த கால்நகமுடையதாய், நான்குகால்கள் துதிக்கை உடம்பு வால் தந்தம் இரண்டு ஆகிய ஒன்பது உறுப்புக்களாலுங் கொல்லவல்லதாய், ஏழுமுழம் உயர்ந்து ஒன்பதுமுழம்நீண்டு பதின்மூன்று முழச்சுற்றளவுடையதாகி, தீயுமிழுஞ் சிறியகண்களையும் சிவந்தபுள்ளிகளையுமுடைத்தாய், முன்பக்கம் உயர்ந்து பின்பக்கம் தாழ்ந்திருப்பதாம். மா + இரு = மாயிரு; பொதுவிதிப்படி வகரவுடம்படுமெய்பெறாது யகரமெய்பெற்றது, உரிச்சொற்புணர்ச்சியாதலின். [நன் - மெய்- ௯௬.] திறல், வலி - ஒருபொருட்பன்மொழி; [நன் - பொது - ௬௭.] ஏய் - வினைத்தொகை. மேய் - இறந்தகாலவினையெச்சம்; ஆய், போய் என்பனபோல; மே - பகுதி, ய் - விகுதி. பணம் - படம்; அதனையுடையது, பணீ என வடமொழிக் காரணக்குறி. கோயில் - கோ + இல்: சிறந்தமனை: பொதுவிதிபால் வகரவுடம்படுமெய்பெற்றுக் கோவிலென வரற்பாலது கோயிலென யகரம் பெற்றது, இலக்கணப்போலி, [நன் - மெய் - ௯௬.] தவம் - தபஸ் என்ற வடசொல்லின் திரிபு; தவமாவது - மனம் பொறிவழிபோகாமல் நிற்றற்பொருட்டு விரதங்களால்உணவு சுருக்குதல் முதலாயின. பத்து + மடங்கு = பதின்மடங்கு. [நன் - உயிர் - ௬௭] எட்டு + பகல் = எண்பகல்; [நன் - உயிர் - ௯௮, ௬௯.] இவையிரண்டும் - பண்புத்தொகை. (௧௭)

வீமனின்றித் துரியோதனன்மாத்திரம் நகர் சேர்தல்.

இவனையங்கநதியிடையிட்டபாவியுந்
தவனையுததியிற்சாய்த்தமாலைபோ
லவனிபனகரியினரசவெள்வளைத்
துவனிசெந்தழல்விளக்கெடுப்பத்துன்னவே.

இதுவும், அடுத்தகவியும் - குளகம்.

(இ - ள்.) இவனை அ நதியிடை இட்ட பாவியும் - வீமனை அக்கங்காநதியின்நடுவிலே போகட்ட தீவினையுடையவனான துரியோதனனும்,— தவனை உததியில் சாய்த்த மாலை போல் - சூரியனைக் கடலில்வீழ்த்திய மாலைக்காலம் போல,— அரசர் வெள் வளை துவனி - அரசர்களுக்குரிய வெண்மையான சங்கத்தின் முழக்கத்தோடு, செம் தழல் விளக்கு எடுப்ப - சிவந்தஅக்கினியினாலாகிய தீபத்தை (நகரத்தவர்) எடுக்க,— அவனிபன் நகரியின் துன்னவே - திருதராட்டிர

மகாராசனுடைய நகரத்தில் [அத்தினபுரியில்] சேர்ந்திடவே, (எ - று.)—குந்தி வீமனைக்காணாது மிகவருந்தினளென வருங்கவியோடு முடியும்.

துரியோதனனும் மாலைப்பொழுதும் ஒருங்கு அத்தினபுரிக்கு வரவென்பது, இதன் கருத்து. இக்கருத்தையே உபமேயமும் உபமானமுமாக வைத்து, துரியோதனன் மாலைக்காலம்போலத் துன்ன என்றார். இங்ஙனம் உண்மை நிகழ்ச்சியையே உவமையாக அமைத்துக்கூறுதல், ஒருவகைக்கவிசமத்காரம். அரசவெள்வளைத்தொனியும், விளக்கெடுத்தலும், துரியோதனன் மாலைக்காலமென்னும் இரண்டிற்கும் உரியனவாதல் உணர்க. காலை மாலையாகிய இரண்டு சந்தியிலும் இராசநகரியிற் சங்கொலித்தலும், மாலையில் விளக்கு எடுத்தலும் இயல்பு. இராசகுமாரனான துரியோதனன் நகர்க்கு மீளுகையில் அங்குள்ளார் அவனுக்கு மரியாதையாக மங்களசங்கத்தை முழக்குதலும், அஷ்டமங்கலத்துள் ஒன்றான விளக்கை ஏந்துதலும் இயல்பாதல் காண்க. செந்நிறமுடைய சூரியன் கடலில்மறைந்திடுதற்குக் காரணமான கரிய இருட்பொழுதாகிய மாலையை, செம்மையுடைய வீமன் கங்கைப்பெருக்கில் மூழ்கியிடுதற்குத் தூண்டுகோலான கறுத்த களங்கசித்தமுடைய துரியோதனனுக்கு உவமைகூறினமை நன்குபொருந்தும். அன்றியும், சூரியனைக் கடலிற்சாய்த்த மாலை அவன் அழியாதுநிற்கச் சிறிதுபொழுதிலே தான் அழிதல்போல, வீமனை நதியில் ஆழ்த்திய துரியோதனனும் அவன் இறவாதுநிற்கத் தானே விரைவில் அழிந்திடுதலையும் நோக்குக.

இட்ட-ஏவுதற்கருத்தாவின்வினை; கிங்கரரைக்கொண்டு இடுவித்த வென்க. பாவி, தவனன், நகரி, அரச, துவனி என்பவை-பாபீ, தபநன், நகரீ, ராஜ, த்வநி என்ற வடசொற்களின் திரிபு. பாவியும் என்ற உம்மை - கதைத்தொடர்ச்சியை விளக்குவதாய், இறந்ததுதழுவிய எச்சத்தின்பாற்படும். தபநன் - தபிப்பவன். உததி - நீர் தங்குமிடம்; வடசொல்: உதம் = உதகம்; ஜலம். மணிவிளக்கினின்று பிரித்தற்கு, 'தழல்விளக்கு' என்றார். வெள்வளை, செந்தழல் என்பவற்றில், வெம்மையும், செம்மையும் - இனம்விலக்குதற்கன்றி இயல்பு குறித்தற்கு வந்த அடைமொழி; [நன் - பொது - ௫.] அவநிபன் - பூமியைக்காப்பவன்; வடசொல்: அவநி - பூமி, காத்தற்கு உரியது. நகரியின், இன்-ஏழனுருபு. வளை-உட்சுழியுடையது; விளக்கு - (பொருள்களை) விளங்கச் செய்வது; இரண்டும் - கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்து கெட்ட பெயர்கள். (௧௮)

வீமனைக்காணாது குந்தி மிகவருந்துதல்.

கண்டிலளுதிட்டிரன்கனிட்டனைக்கண்ணுற
வுண்டிலடரித்திலளோரிராவினுங்
கொண்டிலடுயிலிளங்குமரர்தம்மொடும்
விண்டிலளுரையுளம்விம்முகுந்தியே.

(இ - ள்.) உதிட்டிரன் கனிட்டன் - தருமபுத்திரனது தம்பியான வீமனை, கண் உற கண்டிலள்-தன்எதிரில்வரக் காணாதவளாய், உளம் விம்மு - மனம்ஏங்குகிற, குந்தி - குந்திதேவியானவள், உண்டிலள்-உணவு நுகர்ந்திலள்; தரித்திலள்-(மகப்பிரிவினாலான துன்பத்தைச்) சிறிதும்பொறுக்கமாட்டிற்றிலள்; ஓர் இராவி

னும் - (அவனைக்காணாத தினங்களுள்) ஓரிரவிலாயினும், துயில் கொண்டிலள் - நித்திரைகொண்டிலள்; இள குமரர்தம்மொடும் உரை விண்டிலள் - இளமைப்பருவமுடைய (தனது) குமாரர்களுடனும் யாதொருபேச்சும் பேசிற்றிலள்; (எ-று.)

கண்டிலள் - இறந்தகால எதிர்மறை முற்றெச்சம்; மற்றவை - முற்று. உம்மைஇரண்டனுள், முந்தினது - இழிவுசிறப்பு; பிந்தினது - உயர்வுசிறப்பு. இளங்குமரரென்றது, தருமன்முதலிய நால்வரை. 'இளங்குமரரொடும் உரைவிண்டிலள்' என்றதனால், மற்றை யெவரோடும் பேசினளில்லை யென்பது தானே விளங்கும். இனி, 'இளங்குமரர்தம்மொடும்' என்பதற்கு - மிக்கஇளமைப்பருவத்தையுடையராய்த் தாயில்லாப்பிள்ளைகளாதலால் தனதுமிக்கஅன்புக்கு இடமான நகுலசகதேவர்களுடனும் என்று உரைப்பாரும் உளர். தம் - சாரியை. உதிட்டிரன், கனிட்டன்-யுதிஷ்டிரன், கநிஷ்டன் என்ற வடசொற்களின் விகாரம். யுதிஷ்டிரன் என்பது - யுதி ஸ்திரன் என்று பிரிந்து, போரிற் பின்னிடாது நிலைநிற்பவனெனப் பொருள்படும். கநிஷ்டன்-இளையவன். கனிட்டற்கண்ணுற-உயர்திணையிற் சிறுபான்மை இரண்டனுருபு தொக்கது; இரண்டாம்வேற்றுமைத்தொகையாதலின், உயர்திணைப்பெயரீற்றுமெய் வலிவர இயல்பாகாது திரிந்தது; "இயல்பின் விகாரம்" [நன்-உருபு - கசு.] (கக)

தருமன்முதலிய நால்வரும் வீமனைத் தேடிக் காணாது வருந்துதல்.

வீடினனாமெனத்துணைவர்வேறுவே
றோடினர்கானதியோடையெங்கணுந்
தேடினர்காண்கிலஞ்செய்வதென்னென
நாடினர்நடுங்கினர்நடுக்கில்சிந்தையார்.

(இ - ள்.) நடுக்கு இல் சிந்தையார்-கலக்கமற்ற மனத்தையுடையவர்களான, துணைவர் - உடன்பிறந்தவர்நால்வரும், வேறு வேறு ஓடினர்-வெவ்வேறாய் ஓடிச்சென்று, கால் நதி ஓடை எங்கணும் தேடினர் - வாய்க்கால் நதி ஓடை ஆகிய எவ்விடங்களிலுந் தேடி, காண்கிலம் செய்வது என் என நாடினர் - எங்குங்காண்கின்றிலோம் இனிச்செய்யக்கடவது என்ன வென்று சிந்தித்து, வீடினன் ஆம் என - (வீமன்) இறந்தான்போலு மென்று சங்கித்து, நடுங்கினர் - மிகவும் அஞ்சினர்கள்; (எ - று.)

வேறொருகாரணத்தாலும் மனஞ்சலியாதவர் அருமையான உடன்பிறந்தவனைக் காணாமையாற் கலங்கின ரென்பார், 'நடுங்கினர் நடுக்கில்சிந்தையார்' என்றார்.உட்புக்கவர் உடனே காணாதொழிவது நீரின்கண்ணே யாதலால்,கானதியோடை யெங்கணுந் தேடுவாராயினர். கான் எனப் பிரித்து, காடு என்றலும் ஒன்று. வீடுதல் - உயிர்விடுதல். ஓடை - நீர் ஓடுவது. எங்கண் - எக்கண் என்பதன் மெலித்தல். காண்கிலம் - எதிர்மறைமுற்று; கு - சாரியை. நடுங்குதல் - அன்பினாலும் அச்சத்தாலும் உள்ளமும் உடலும் துளங்கல். நடுக்கு - நடுங்கு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். சிந்தை - ஆவீறு ஐயான வடசொல். என் - எவன் என்னும் அஃறிணைப்பொதுக்குறிப்புமுற்றின் விகாரம். நடுங்கினர் நடுக்கில்சிந்தையார் - முரண்தொடை. (உ)

தருமன் முதலியோர் சிந்தைப்படும் விதம்.

கூற்றனசுயோதனகுமரனேயிவ
ணுற்றலின்வெரீஇயழுக்கற்றசிந்தையா
னேற்றதையுணர்கிலமென்றுதந்தையாங்
காற்றினுமலமருங்கருத்தராயினர்.

(இ - ள்.) 'கூற்று அன - யமனை யொத்த, சுயோதன குமரனே - துரியோதனனாகிய இராசகுமாரனே, இவன் ஆற்றலின் வெரீஇ - இவ்வீமனுடைய வலிமையினால் அஞ்சி, அழுக்கற்ற - (இவனிடம்) பொறாமைப்பட்ட, சிந்தையான் - மனத்தையுடையவன்: (இவ்வளவேயன்றி), ஏற்றதை உணர்கிலம்-(வீமனுக்கு) நேர்ந்தநிலையை அறியோம்' என்று - என்று எண்ணி, தந்தை ஆம் காற்றினும் அலமரும் கருத்தர் ஆயினர்-(தருமன்முதலிய நால்வரும்) அவ்வீமனது தந்தையாகிய காற்றைக்காட்டிலும் விரைந்துசுழலுகின்ற மனத்தையுடையவரானார்கள்; (எ - று.)—இக்கவிக்கு எழுவாய், கீழ்க்கவியில் வந்த 'துணைவர் என்பதே'

துரியோதனனே இவன்மேற் பொறாமையுடையவனாதலால், அவன் இவனை யாதுசெய்தனனோ வென்று சங்கித்தன ரென்பதாம்.

பிராணிகளின் உடம்பையும் உயிரையும் வெவ்வேறுகூறாகப் பிரித்தலால், யமனுக்குக் கூற்று என்று பெயர்; இதற்கு - பொதுப்படச் செல்லுங் காலத்தைப் பிராணிகளுக்குஏற்பக் கூறுபடுத்துபவனென்று காரணப்பொருளுரைத்தலும் உண்டு. சுயோதனகுமரன் - சுயோதனனாகிய குமா னென இருபெயரொட்டு. ஏ - தேற்றம்; பிரிநிலையுமாம். வெரீஇ - வெருவி யென்பது விகாரப்பட்ட சொல்லிசையளபெடை; இங்கு அளபெடை அலகுபெறவில்லை. அழுக்கற்ற என்ற இறந்தகாலப்பெயரெச்சத்தில், அழுக்கறு - பகுதி; அழுக்கறுத்தல் - பிறராக்கம் பொறாமை. அழுக்கறு என்பது - ஒருசொல். இனி, அழுக்கு அறு எனப்பிரித்து, குற்றம்நீங்குதலென்று பொருள்படும் இது குற்றமுடைமையாகிய பொறாமைக்கு எதிர்மறையிலக்கணையாய் வழங்கிய தென்றலும் ஒன்று. இது முதனிலைதிரிந்த தொழிற்பெயராம்போது, அழுக்காறு என நிற்கும். தந்தையென்றதில், தாம் - பகுதி, தை - முறைப்பெயர்விகுதி; இனி, இதற்கு - தந்தவனென்று காரணப்பொருள் கூறுவாரும் உளர். ஆம் - ஆகுமென்பதன் விகாரம்; [நன் - வினை - உஉ.] காற்றின், இன்-ஐந்தனுருபு, எல்லைப்பொருளது; உம்மை- உயர்வுசிறப்பு. அலமரும் - அலமா என்ற பகுதி, குறுக்கலும் விரித்தலும் பெற்று 'அலமரு' என நின்றது. கருதுவது, கருத்து. சிறிதேனும் ஒருநிலை நில்லாமல் எப்பொழுதுஞ் சஞ்சரிக்குந் தன்மையுடைய காற்றினும் மிகுதியாக மனஞ்சலித்தன ரென்பது, ஈற்றடியின் கருத்து. தந்தை ஆங்கு ஆற்றினும் என்று பதம்பிரித்து உரைக்கச் சந்தர்ப்பமின்று. (உக)

மக்களுடன்வருந்திய குந்திக்கு வீடுமன் தேறுதல்கூறல்.

ஊதையில்பூதமொத்துள்ளம்வெம்பிய
தாதையில்சிறுவரைத்தாதைதாதைபாற்
கோதையில்குழலினாள்கொண்டுசேறலும்
வாதையின்றவற்கெனவருத்தமாற்றினான்.

(இ - ள்.) ஊதை இல் பூதம் ஒத்த - வாயுவையொழிந்த மற்றநான்கு பூதங்கள் போன்ற, உள்ளம் வெம்பிய - (வீமனைக்காணாது) மனந் தவித்த, தாதை இல் சிறுவரை - தந்தையை யிழந்த மைந்தரான (தருமன்முதலிய) நால்வரையும், கோதை இல் குழலினாள் - (அமங்கலியாதலால்) மாலையில்லாத கூந்தலையுடைய குந்திதேவியானவள், தாதை தாதைபால் - (அக்குமாரர்களின்) தந்தையான பாண்டுவினது (பெரிய) தந்தையாகிய வீடுமனிடத்தில், கொண்டுசேறலும் - அழைத்துக்கொண்டுபோனவளவிலே,—(அவ்வீடுமன்),அவற்கு வாதை இன்று என - அவ்வீமனுக்கு வருத்தமொன்றுமில்லை யென்று (தனது ஞானக்கண்ணால் உணர்ந்து) கூறி, வருத்தம் மாற்றினான் - (அவர்களுடைய) துன்பத்தை நீக்கினான்; (எ - று.)

ஒத்த என்னும் பெயரெச்சத்து அகரவீறு தொகுத்தல். ஒத்தசிறுவர், வெம்பியசிறுவர் எனத் தனித்தனி இயையும். ஒன்றற்கொன்று தொடர்புடைய ஐம்பெரும்பூதங்கள் தம்மில் ஒன்றாகிய வாயு ஒழிந்தால் தமதுநிறைவு குறைந்து நான்காய் நிற்றல்போல, உள்ளும்புறமும் ஒத்த உடன்பிறந்தவரான பஞ்சபாண்டவர்கள் தம்மில்ஒருவனான வீமனை யிழத்தலால் குறைகொண்டு நின்றன ரென்பது, 'ஊதையில்பூதமொத்தசிறுவர்' என்பதன் கருத்து. இங்கே பூதம் - நிலம், நீர், தீ, வானம். வாயுகுமாரனுக்கு அவ்வாயுவையே உவமைகூறினார். இனி, உயிர்ப்பில்லாத பிராணிகள் போன்று வீமனை யிழத்தலால் அழிவடைந்த மற்றைநால்வ ரென்று உரைத்தலும் ஒன்று; இவ்வுரைக்கு, பாண்டவர் ஐவருள் ஒருவனை யிழந்து மற்றையநால்வரும் வாழ்வுறா ரென்பது கருத்து: "உய்வருஞ் சமரி லாவி யொருவர்போ யொருவ ருய்யார்" என மேல் கிருட்டிணன்தூதுசருக்கத்து வருவதும், "ஐவர்க்கு மோருயிரே யைந்துருப்பும்" என்ற பெருந்தேவனார்பாரதமும் உணரத்தக்கன. இனி, தந்தையையிழந்த மைந்தர்க்கு உயிர்ப்பையிழந்த பிராணிகள் உவமையென்னுங் கருத்துப்பட உரைப்பதும் ஒன்று. உள்ளம் - அகத்துறுப்பு. தாதை - தாத என்னும் வடசொல்லின் திரிபு. சேறலும் என்ற இறந்தகால வினையெச்சத்தில், செல் - பகுதி, முதல்நீண்டது; 'உம்' விகுதி, காலங்காட்டிற்று; து, அல் - சாரியைகள்: தகரம் றகரமானதும், உகரங்கெட்டதும், பகுதியீற்று லகரங்கெட்டதும் - சந்தி. வாதை - பாதா என்ற வடசொல்லின் திரிபு. வருத்தம் ஆற்றினா னெனப் பிரித்தும் உரைக்கலாம். (உஉ)

பலநந் தேற்றவும் தந்தி தேறாதுநிற்றல்.

தருமமன்னனுநகர்ச்சனங்கள்யாவையுந்
தெருமரறேற்றவுந்தெய்வங்கூறவும்
பெருமிதநிமித்தங்கள்பெற்றிபேசவும்
வரும்வருமெனமனமறுகிவைகினாள்.

(இ - ள்.) வரும் வரும் என - (வீமன்) வருவான் வருவா னென்று கூறி, தரும மன்னனும் - யமதருமராசனது அம்சமான விதுரராசனும், நகர் சனங்கள் யாவையும் - பட்டணத்துச்சனங்களெவையும், தெருமரல் தேற்றவும் - மனக்கலக்கத்தைத் தெளிவிக்கவும், தெய்வம் - தெய்வங்கள், கூறவும் - ஆவேசப்பட்டுச்சொல்லவும், பெருமிதம் நிமித்தங்கள் - நல்ல சகுனங்கள், பெற்றி பேசவும் -

(அவன்வருவதற்கு உரிய) அடையாளங்களைக் கூறவும், (குந்திதேவி), மனம் மறுகி வைகினள் - (தேறாமல்) மனங்கலங்கியே யிருந்தாள்; (எ - று.)

தேற்றவும், கூறவும், பேசவும் என்ற உம்மைகள் - எண்ணுப்பொருளோடு உயர்வுசிறப்புப்பொருளு முடையன. யாவையும் என்ற உம்மை - முற்றுப்பொருளோடு "எண்ணுப்பொருளுமுடையது. விதுரன் யமதருமராசனது அம்சமாதலை "உம்பரிற் பெறு வரத்தினால் தருமன்வந் துதித்திடும்பதம்பெற்றான், வெம்படைத்தொழில் விதுர னென் றவன் பெயர்" என்று கீழ்ச் சம்பவச்சருக்கத்தில் வந்ததனால் அறிக: இனி, இங்கே, 'தருமமன்னன்' என்பதற்கு - தருமபுத்திரனென்று உரைத்தல் அத்துணையாச் சிறவாது. சனமென்றது - பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் இருதிணைக்கும் பொதுவாதலால், 'சனங்கள்யாவையும்' என அஃறிணைப்பாற்படுத்துக் கூறினர். யாவை யென்பதில், 'யா' வினா எஞ்சாமைப்பொருளது. தெருமரல் என்ற தொழிற்பெயரில், தெருமா என்ற பகுதி தெருமரு என விகாரப்பட்டது; அல்-விகுதி. தேற்று - தேறு என்பதன் பிறவினை; தன்னொற்றிரட்டியது, பிறவினைக்குறி. ஜநம், தைவம், நிமித்தம், மநஸ்- வடசொற்கள். பெரும் இதம் நிமித்தங்கள் எனப்பிரித்து, மிக்க நன்மைக்கு உரிய சகுனங்க ளெனினுமாம். பேச - உணர்த்த என்றபடி; இது - ஒருவகை உபசார வழக்கு. வரும்வரும் என்ற அடுக்கு - துணிவையும், விரைவையும் விளக்குவது. 'வைகுநாள்' என்ற பாடத்துக்கு - குந்தி இங்ஙனம் மனம்மறுகியிருக்கும் நாள்களி லென்க. 'வைகினார்' என்ற பாடத்துக்கு, யுதிட்டிரன் முதலிய நால்வரும் குந்தியும் - எழுவாய். (உ௫)

வீமனை நாகங்கள் சுமந்து கங்கைக்கரையிற் கொண்டுசேர்த்தல்.

இருந்திளைப்பகன்றபினிவனைமற்றைநா
ளருந்திறற்போகிகளரசனேவலால்
வருந்தியுற்றெடுத்துமுன்வந்தநீர்வழிப்
பொருந்திரைக்கங்கையின்கரையிற்போக்கவே.

இதுமுதல் மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) இருந்து - (வீமன் வாசுகியின்மாளிகையில் எட்டுநாள்) இருந்து, இளைப்பு அகன்ற பின்-இளைப்பாறியபின்பு, மற்றை நாள் - அடுத்தநாளில், அருதிறல் போகிகள் - (பிறவுயிர்க்கு) அரிய வலிமையையுடைய நாகங்கள், அரசன் ஏவலால் - (தங்கள்) அரசனான வாசுகியினது கட்டளையினால், இவனை வருந்தி உற்று எடுத்து-இவ்வீமனை வருந்திச் சுமந்தெடுத்து, முன் வந்த நீர்வழி - முன்பு (இவன்) வந்த நீரின் வழியாய் (க்கொண்டுவந்து), பொரும் திரை கங்கையின் கரையில் போக்க - மோதுகின்ற அலைகளையுடைய கங்காநதியின் கரையிலே செலுத்திவிட, (எ - று.)—வீமன் மிகவிளங்கினான் என இருபத்தாறாங் கவியோடு முடியும்.

இக்கவி கீழ்ப்பதினேழாங்கவியோடு தொடர்புடைய தாதலால், இதன்முதலில் 'இருந்து' என்றது, அக்கவியின்முடிவில் 'எண்பகல்மேயிருந்தனன் பணிவேந்தன் கோயிலே' என்றதன் அநுவாதமாம். வீமன் பதினாயிரம் அரசயானை

களின் வலிமையுடையவனாதலால், அருந்திறற்போகிகள் வருந்தியுற்று எடுத்தன வென்க. போகி என்ற வடசொல் - போகத்தையுடையதென்று பொருள்படும்; போகமென்று பாம்பினுடலுக்குப் பெயர். (உச)

வீமனைச் சுமக்கும் ஆற்றல் நாகங்கட்கு உண்டு என்றல்.

பாழியம்புயகிரிப்பாண்டவன்றனைச்
சூழிகற்பணிக்குலஞ்சுமக்கவல்லவோ
வாழியக்குலங்களின்மன்னனல்லனோ
வேழிருபுவனமுமினிதினேந்துவான்.

(இ - ள்.) பாழி - வலிமையையுடைய, அம் - அழகிய, புய கிரி - மலைகள் போன்ற தோள்களையுடைய, பாண்டவன் தனை - வீமனை, சூழ் இகல் பணி குலம் - மண்டலமிடுந்தன்மையுள்ள வலிமையையுடைய பாம்புகளின் கூட்டங்கள், சுமக்க வல்லவோ - சுமத்தற்கு வல்லமையுடையனவோ? (எனின்),—ஏழ் இரு புவனமும் இனிதின் ஏந்துவான் - பதினான்கு உலகங்களையும் இனிமையாகச் சுமப்பவனான ஆதிசேஷன், அ குலங்களின் மன்னன் அல்லனோ - அப்பாம்புக்கூட்டங்களின் அரசனல்லனோ? (எ - று.)—ஆதலால், அவைகளும் இவனைத் தாங்க வல்லன என்பதாம். வாழி - அசை.

வீமனைச்சுமக்கவல்ல வலிமை நாகங்கட்கு உள்ளது என்ற கருத்தைக் கவி தாமே ஆக்ஷேபசமாதானங்களால் விளக்கினார். இக்கவியில், முன்இரண்டுஅடி - வினாவும், பின்இரண்டுஅடி - விடையுமாம். ஓகாரம் இரண்டனுள், முன்னது - வினா; பின்னது - எதிர்மறை. அல்லனோ என்பது - இரண்டுஎதிர்மறையால் உடன்பாட்டை யுணர்த்தி, தேற்றப்பொருளை விளக்கிற்று. பாண்டவன்-பாண்டுவின்மகன்; வடமொழித் தத்திதாந்தநாமம். இப்பொதுப்பெயர், சிறப்பாய், இங்கே வீமனை யுணர்த்திற்று. பொதுப்பெயர் சிறப்புப்பொருளையும், சிறப்புப்பெயர் பொதுப்பொருளையும் உணர்த்தல், ஒருவகைப் பாஷைநடை. 'பாழியம்புயகிரி' என்ற அடைமொழி, வீமனது வலிமைமிகுதியை யுணர்த்தவந்தது. மன் - பெருமை; அதனையுடையவன், மன்னன். குலம், புவனம் - வடசொற்கள். ஏழிருபுவனம் - பூலோகம் புவர்லோகம் சுவர்லோகம் மஹர்லோகம் ஜனலோகம் தபோலோகம் சத்தியலோகம் என்ற மேலேழுலகங்களும், அதலம் விதலம் சுதலம் தராதலம் ரஸாதலம் மஹாதலம் பாதாளம் என்ற கீழேழுலகங்களும்; உம்மை-முற்று. சர்ப்பராசனான ஆதிசேஷன் உலகங்களின் கீழிருந்து அவற்றைத்தாங்குகின்றனனென்பது, நூற்கொள்கை. கீழ்ச்செய்யுளில், 'இவனைப் போகிகள் எடுத்து' என வந்ததன்கண் உண்டான ஐயத்தை அகற்றுதலால், இச்செய்யுள் - இடைப்பிறவரலாய், குளகச்செய்யுள்களின் நடுவில் நின்றதென்று உணர்க. 'பாண்டுமைந்தனை' எனவும் பாடம். (உரு)

வீமன் முன்னினும் மிகவிளங்குதல்.

விதியினாலொளித்தலினுயங்கிமீளவு
நதியினால்வருதலினலங்கொண்மேனியான்
பதியினால்விளங்குமென்பங்கயங்களு
மதியினாற்குளிர்நெடுவானுமாயினான்.

(இ - ள்.) விதியினால் - (முற்பிறப்பிற் செய்த) வினையின் பயனால், ஒளித்தலின் - (யாற்றில் தள்ளப்பட்டு) அழுந்தியதனால், உயங்கி-வாட்டமுற்று, மீளவும் நதியினால் வருதலின் நலம் கொள்-பின்பு அந்நதியின்வழியால் மீண்டுவந்ததனால் நல்லவிளக்கத்தைக் கொண்ட, மேனியான் - உடம்பையுடையவனான வீமன்,—பதியினால் விளங்கும் மெல் பங்கயங்களும் - (தமது) தலைவனான சூரியன் (மறைதலாற் குவிந்து அவன்) உதித்தலால் மலர்ந்த மெல்லிய தாமரைமலர்களும், மதியினால் குளிர் நெடு வானும் ஆயினான் - (சூரியனால் வெப்பமடைந்து) சந்திரனாற் குளிர்ச்சியடைந்த பெரிய ஆகாயமும் போல் ஆனான் ; (எ - று.)

விதி, பதி, பங்கஜம் - வடசொற்கள். விதியாவது - இருவினைப்பயன் செய்தவனையே சென்றுஅடைதற்கு ஏதுவாகிய நியதி; ஊழ். ஒளித்தல் - இங்குத் தன்வினை; இனி, 'விதியினா லொளித்தலின்' என்பதற்கு - (துரியோதனனது) கட்டளையின்படி (கிங்கரர் நதியில்) வீழ்த்தியதனால் என்று பொருளுரைப்பினும் அமையும்; இவ்வுரைக்கு, ஒளித்தல் - பிறவினை. நலம் - 'அம்' விகுதிபெற்ற பண்புப்பெயர். பங்கஜம் - சேற்றில் முளைப்பது; தாமரைக்குக் காரணவிடுகுறி. சூரியனைக் கண்டபொழுது தாமரை மலர்தலும் காணாதபொழுது குவிதலுமாகிய இயல்புபற்றி, தாமரையாகிய பெண்ணுக்குச் சூரியனைக் கணவனென்றல், மரபு. மதி - மதிக்கப்படுவது. 'நலம்கொள்மேனியாள்......வானுமாயினாள்' என்ற பாடத்துக்கு - வீமனைக்காணாதபொழுது வருந்திப் பின்புவரக்கண்டதனால் மகிழ்ச்சி கொண்ட குந்தி சூரியனால் விளங்கிய தாமரையும் சந்திரனாற் குளிர்ச்சிபெற்ற வானமும் போன்றன ளென்று உரைக்க. (உசு)

வீமன் உற்றார்க்கு மகிழ்ச்சியையும் உறதார்க்கு அச்சத்தையும் விளைத்தல்.

வேதியர்குரவர்வில்விதுரன்வீடும
னாதியர்துணைவரந்நகருளார்களென்
றோதியசனங்களுக்குவகைநல்கினான்
ஞாதியர்கிளைக்கெலாநடுக்கநல்கியே.

(இ - ள்.) (இத்தன்மையனான வீமன்),—ஞாதியர் கிளைக்கு எலாம் நடுக்கம் நல்கி - பங்காளிகளாகிய துரியோதனாதியரது கூட்டத்துக்கெல்லாம் மிக்க அச்சத்தைக்கொடுத்து,—வேதியர் - பிராமணர்களும், குரவர் - (தாயும் தமையனும் முதலிய) பெரியோர்களும், வில் விதுரன் வீடுமன் ஆதியர் - வில்வித்தையில்தேர்ந்த விதுரனும் பீஷ்மனும் முதலானவர்களும், துணைவர் - (தனது) தம்பிமாராகிய (அருச்சுனன்முதலிய) மூவரும், அ நகர் உளார்கள் - மற்றும் அந்நகரத்திலுள்ளவர்களும், என்று ஓதிய - என்றுசொல்லப்பட்ட, சனங்களுக்கு - சனங்களுக்கெல்லாம், உவகை நல்கினான் - மகிழ்ச்சியைக் கொடுத்தான் ; (எ - று.)

வேதியர் - வேதம்வல்லவர்; வேதங்களை ஓதுதலோடு ஓதுவித்தற்கும் உரியவர் அந்தணரேயாதலால், வேதியரென்ற பெயர், அவரையே குறிக்கும். குரவர்-குருஎன்ற வடசொல்லின் பன்மையாகிய குரவஃ என்பதன் திரிபு. "அரசனுவாத்தியான் தாய் தந்தை தம்முன், நிகரில் குரவர் இவர்" என்பவாதலால், குரவர்என்பதற்கு - ஐப்பெருங்குரவரிற் சேர்ந்த தாயும் தமையனும் குலகுருவும் கொள்க.

"வெற்றி விதுரன்கை வில்லிருக்க மேதினியில், மற்றவனை வெற்றிகொள்ளு மாறுண்டோ" என்னும்படி விதுரன் வில்வித்தையிற் சிறத்தலால், வில்விதுர னென அடைமொழிகொடுத்துக் கூறினார்.

வீடுமன் - பீஷ்ம னென்ற வடசொல்லின் திரிபு; இச்சொல்லுக்கு - பயங் கரனானவனென்று உற்பத்தியருத்தம்: பயங்கரமான விரதமுடையவனென்று கருத்து. இவன், தனது தந்தைக்குச் சத்தியவதியை இரண்டாவது மணஞ்செய் வித்தற்கு அவளைவளர்த்ததந்தையான செம்படவன் இசைதற்பொருட்டு, தான் மணஞ் செய்துகொள்வதில்லை யென்றும், மூத்தவனாய்ப் பட்டத்துக்கு உரிய தனது இராச்சியத்தையும் மற்றையெல்லாச் செல்வங்களையும் தனக்குச் சிறிய தாயாக வருமவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்கே கொடுப்பதாகவும், இங்ஙனம் ஒழித் தற்கரிய மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையென்னும் மூவகையாசையை யும் இளமையிலேயே ஒழித்து, கேட்போர் அஞ்சும்படியான சபதங்களைச் செய்த தனால், இவனுக்கு இப்பெயர். தேவர்கள் முன்னிலையில் இந்த விரதத்தை ஏற் படுத்திக்கொண்டதனால் தேவவிரதனென்றும், சந்தனுமைந்தனாதலால் சாந்தனவ னென்றும், கங்கைகுமாரனாதலால் காங்கேயனென்றும் இவனுக்குப் பெயர்கள் உண்டு.

ஆதி, ஜ்ஞாதி - வடசொற்கள். உவகை - தொழிற்பெயர்; உவ - பகுதி, கை- விகுதி. மரத்தைக்கிளைபோலப் பந்துவர்க்கம் ஒருவனைத்தழுவிநிற்றலால், அதற்கு, கிளையென்பது - உவமவாகுபெயர். முன் இரண்டுஅடி - பெயர்ச்செவ்வெண். உவகைநல்கினான், நடுக்கநல்கி என மாறுபட்டசொற்கள் வந்தது, தொடைமுர ணாம். (உஎ)

வீமன் அத்தினபுரிசேர்ந்து தாயைத் தேற்றி வாழ்தல்.

குந்தியைமகிழுரைகூறிக்கற்பினா
லந்திமீனனையவளருளின்வாழ்த்தவே
செந்திருமகளுறைசெல்வமாநகர்
வந்திவன்முன்புபோல்வளருநாளிலே.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) இவன் - இந்த வீமன், செம் திருமகள் உறை செல்வம் மா நகர் வந்து - செம்மையுடைய இலக்குமி வசிக்கின்ற செல்வங்கள்நிறைந்த பெரிய அத் தினபுரிக்கு வந்து, குந்தியை மகிழ் உரை கூறி - (தனதுதாயாகிய) குந்தியை நோக்கி (அவளுக்கு) மகிழ்ச்சியைத்தரும் இனியவார்த்தைகளைச் சொல்லி, கற்பி னால் அந்தி மீன் அனையவள் அருளின் வாழ்த்த - பதிவிரதா தருமத்தால் அருந் ததியையொத்த அக்குந்திதேவி அருளோடு தன்னை வாழ்த்த, முன்புபோல் வள ரும் நாளிலே-முன்போல வளர்கின்ற காலத்திலே, (எ-று.)—கிருபாசாரியன் வில் முதலியன பயிற்றிவைத்தனன் என அடுத்த இரண்டு கவிகளோடு குளகமாக முடிபு காண்க.

அருந்ததி - வசிஷ்டமுனிவனது மனைவி. கற்புடையார் பலரினும் இவளு க்கு மேன்மை, நக்ஷத்திரநிலையிலுங் கணவனைப் பிரியாதிருத்தல். கற்பாவது -

கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்; நற்குண நற்செய்கைக ளோடு கணவனை வழிபடுதல்; பாதிவிரத்தியம். இவ்வொழுக்கம் தாய்தந்தைகளா லும், தமையன் தமக்கைகளாலும், கணவன் மாமன் மாமி முதலியோராலும் கற் பிக்கப்பட்டு உண்டாகி நிலைபெறுதல்பற்றி, இதற்குக் கற்பு என்பது காரணப் பெய ரென்பர். கற்பு - கற்றல்; கல் என்னும் பகுதி பு என்னும் விகுதிபெற்ற தொழிற்பெயர்: இது, கற்கப்படும் ஒழுக்கத்துக்குத் தொழிலாகுபெயர்.

மகிழுரை யென்பதில், காலங்கரந்த பெயரெச்சம் [வினைத்தொகை] காரியப் பொருளது. வானத்தில் மின்னுவதுபற்றியும், கரியபெரிய வானமாகிய கடலுக்கு மீன்போல விளங்குதல்பற்றியும், நக்ஷத்திரத்துக்கு 'மீன்' என்பது - காரணக் குறி. அந்திமீன் - மாலைச் சந்தியிலே விளங்கும் நக்ஷத்திர மென்க. விண்மீனுக்கு அந்தியென்றது - இயற்கையடைமொழியாய் வந்தது. அந்தி - ஸந்த்யா என்ற வடசொல்லின் சிதைவு; காலை மாலை யென்னும இருசந்திக்கும் உரிய இச்சொல், இங்கே, சிறப்பாய், மாலையைக்குறித்தது. "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்றபடி கற்புடைமகளிர் வாய்ச்சொல் தவறாது பலிக்குந் தன்மை விளங்க, 'கற்பினு லந்திமீனனையவள் அருளின் வாழ்த்த' என்றார். திருவுக்குச் செம்மை - செந்நிறமும், நன்மைக்குணமும். ஏகா ரம் இரண்டும் - ஈற்றசை; செய்யுளிறுதியிலேயன்றிச் செய்யுளடியினிறுதியிலும் வாக்கியத்தினிறுதியிலும் நிற்கும் இடைச்சொல் பொருள் தராதாயின் அதுவும் ஈற்றசை யெனவேபடும். முன்பு, பு - சாரியை. (உஅ)

கிருபாசாரியனது வரலாறு.

கோதமன்மகன்மகன்குனிவிலாதியா
மேதகுபடைக்கலம்யாவும்வீறுடம்
மாதவன்வயிற்பயில்வரதன்வன்றிறற்
கேதமில்சிந்தையான்கிருபனென்றுளான்.

(இ - ள்.) கோதமன் மகன் மகன் - கோதமமுனிவனது குமாரனாகிய சரத் துவான் என்னும் முனிவனது புத்திரனும்,—குனி வில் ஆதி ஆம் - வளைக்கப் படுகின்ற வில் முதலாகிய, மே தகு படைக்கலம் யாவும் - மேன்மைமிக்க ஆயுதங் களையெல்லாம், வீறுடு - மிக்கசிறப்போடு, அ மாதவன்வயின் பயில் - பெருந் தவமுடைய அச்சரத்துவந்த முனிவனிடத்துக் கற்றுத்தேர்ந்த, வரதன் -(தன்னை வேண்டினார்க்கு) வரம் அருளத்தக்க சிறப்புடையவனும், வல் திறல் - மிக்க வலி மையையும், கேதம் இல் சிந்தையான் - களங்கமில்லாத மனத்தையுமுடையவ னும் ஆகிய, கிருபன் என்று - கிருபாசாரியனென்று பெயர்கூறப்பட்டு, உளான்- (ஓர் அந்தணன்) உள்ளான்; (எ - று.)

கோதமனென்னும் முனிவனது குமாரனும், தான் பிறந்தபொழுது அம்புக ளுடனே பிறந்ததனால் 'சரத்வாந்' என்று பெயர்பெற்றவனுமான (சரம் - அம்பு) முனிவன் இளமையில் வேதமோதுதலினும் வில்வித்தை தேர்தலில் மிக்கவிருப் புற்று அதில் நன்கு தேர்ந்து பின்பு பெருந்தவஞ்செய்து வருகையில், தனது தவத்தைக் கெடுத்தற்பொருட்டு இந்திரனு லேவப்பட்டுவந்த ஜாநபதியென்னும்

தேவகன்னிகையைக்கண்டு காமுற்றதனால், அவன்விருப்பத்திற்கு ஏற்ப அருகிலுள்ள நாணற்கட்டையில் ஓராண்மகவும் ஒருபெண்மகவும் உண்டாயின. தனது தவநிலை குலைந்ததற்குக் கழிவிரக்கங்கொண்ட அம்முனிவன் உடனே அக்குழந்தைகளையும் தனது வில் அம்புகளையும் அங்கே விட்டிட்டு அப்பாற் சென்றான். பின்பு வேட்டைக்குச்சென்ற சந்தனுமகாராசன் கதியற்றிருந்த அக்குழந்தைகளைக் கிருபையோடு எடுத்துவந்து வளர்த்ததனால், அவர்கட்கு முறையே கிருபனென்றும் கிருபியென்றும் பெயர்கள் உண்டாயின. பிறகு ஒருகால் அந்தச்சரத்வானென்ற முனிவன் அத்தினபுரிக்குவந்து தன்மகனான கிருபனுக்கு வில்வித்தைமுழுவதையும் கற்பித்துக்கொடுத்துச் சென்றனனாதலால், கிருபன், சிறந்த வில்லாசிரியனாய் அங்கு விளங்கினனென்ன வரலாறு அறிக. இதற்குப் பிறவாறு கூறுவது, நூற்கொள்கைக்கு மாறாம்.

கௌதமகுலத்தார் ஆதியில் க்ஷத்திரியசம்பந்த முடையராதலால், க்ஷத்திரியத்தன்மையோடுகூடின பிராமணராயிருந்தார்க ளாதலின், வில் முதலிய படைக்கலங்கட்கு உரியராயின ரென அறிக. இதன் உண்மை, புராணநூற்பயிற்சிகொண்டு உணரப்படும்.

மகன்மகன் - பௌத்திரன். ஆ - ஆகவென்பதன் விகாரம். படைக்கலம் - போருக்கு உரிய கருவி. வீறு - வேறொருவர்க்கில்லாத சிறப்பு. கோதமன், வரதன், கேதம், க்ருபன் - வடசொற்கள். வன்திறல் - ஒருபொருட் பன்மொழி. நல்லாசிரியர்க்கு இன்றியமையாக் குணங்களான "குலனருள் தெய்வங்கொள்கை மேன்மை, கலைபயில்தெளிவு கட்டுரைவன்மை" என்றவற்றுள் உயர்குடிப்பிறப்பு 'கோதமன் மகன்மகன்' என்றதனாலும், பலகலைபயின்ற தேர்ச்சி 'குனிவிலாதியா மேதகுபடைக்கலம்யாவும் வீறொடு அம்மாதவன்வயின்பயில்' என்றதனாலும், அருளுடைமை 'வரதன்' என்றதனாலும், கட்டுரைவன்மை 'வன்திறல்' என்றதனாலும், நல்லாசிரியர்க்கு உரியனவல்லாத "மொழிகுணமின்மையும் இழிகுணவியல்பும், அழுக்காறு அவா வஞ்சம் அச்சமாடலும், கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை, முடத்தெங் கொப்பென முரண்கொள்சிந்தையும்" இல்லாமை 'கேதமில் சிந்தையான்' என்றதனாலுங் கூறப்பட்டன. மக - இளமை: உரிச்சொல்; அதனையுடையவன், மகன். (௨௬)

கிருபன் கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் வில்வித்தை பயிற்றல்.

மற்றிவன்சந்தனுமைந்தனேவலாற்
கொற்றவரருள்குருகுலகுமாரரை
வெற்றிகொள்சிலையும்வெவ்வேலும்வாளமும்
பற்றலர்வெருவரும்படிபயிற்றினான்.

(இ - ள்.) இவன் - இந்தக்கிருபன்,—சந்தனு மைந்தன் ஏவலால் - சந்தனுவென்னும் அரசனது குமாரனான வீடுமனது கட்டளையால்,—கொற்றவர் அருள் குரு குல குமாரரை - வெற்றியையுடைய (திருதராட்டிரன் பாண்டு என்ற) அரசர்கள் பெற்ற குருகுலத்துக்கு உரிய மக்களாகிய நூற்றைவரையும், வெற்றி கொள் சிலையும் வெம் வேலும் வாளமும் - சயத்தைக்கொள்ளுகிற விற்படையை

யும் கொடிய வேற்படையையும் வாட்படையையும்,பற்றலர் வெருவரும்படி பயிற்றினான் - பகைவர்கள் அஞ்சும்படி கற்பித்தான்; (எ - று.)—மற்று - அசை.

தன்கையால் தொடப்படுபவர்களை உடனே இளமையடைந்து இன்பமுறச் செய்யுந் தன்மையனென்ற காரணம் பற்றிவந்தது, சந்தநு என்னும் பெயரென அறிக; சம் - சுகத்தை, தநு - செய்பவன்: "கையினிற் றனிதொடப்படு மாக்கையைக் கவின்சேர், மெய்யெனப்பெற விளக்குவனாகலின் விழுப்பே, ரையமற்ற சீர்ச்சந்தனுவென விவணடைந்தான்" என்பது காண்க.

குமாரரைச் சிலையும் வேலும் வாளும் பயிற்றினான் என்பது, இரண்டு செயப்படுபொருள் வந்த வினை; இதனை வடநூலார் த்விகர்மகர்த்தரிப் பிரயோகமென்பர். குமாரரை யென்பதைக் குமாரருக்கு என உருபுமயக்க மாக்குதலும் ஒன்று. குரு வென்பவன், சந்திரவம்சத்திற் பிரசித்திபெற்ற ஓரரசன்; இவனால், அக்குலம் குருகுலமென்றும், அக்குலத்தவர் கௌரவரென்றும், அந்நாடு குருநாடென்றும் பெயர்பெறுதல் காண்க. குருகுலகுமாரர் - வடமொழித்தொடர். குமாரரென்றது, கு மாரர் எனப்பிரிந்து, மன்மதனையுங் குற்சிதரூபமாக்கவல்லவரென்று காரணப்பொருள்படும்; மிக அழகியவரென்று கருத்து. வெற்றி - தொழிற்பெயர்; வெல் - பகுதி, றி - விகுதி. வெம்மை யென்னும் பண்புப்பெயர் ஈறு போய் முன்நின்றமெய் திரிந்து 'வெவ்' என நின்றது. வாளம் - வடசொல்;வாள் என்ற தமிழ்மொழி 'அம்' சாரியை யேற்ற தென்பர் ஒருசாரார். பற்றலர் - அன்போடு சேராதவரென்று பொருள்படும் எதிர்மறைப்பலர்பால் வினையாலணையும் பெயர். வெருவு என்ற பகுதியும், வா என்ற துணைவினையும் சேர்ந்து வெருவா என ஒருசொல்தன்மைப்பட்டு, பின்பு 'வெருவரு' என விகாரமடைந்தது. பயிற்று - பயில் என்பதன் பிறவினை; று - விகுதி. (௫)

வீடுமன் கிருபனினுஞ் சிறந்த ஒரு குருவை நாடுதல்.

பரிவுட னிவன்படை பயிற்றப் பின்னருங்
குருபதி வேறொரு குருவைத் தேடினா
னிருளற மதிநில வெறித்த தாயினும்
பரிதியை நயக்குமிப் பரவை ஞாலமே.

(இ - ள்.) இவன் - இந்தக்கிருபன், பரிவுடன் - அன்புடனே, படை பயிற்றவும் - ஆயுதவித்தையைக் கற்றுக்கொடுத்துவரவும்,—பின்னர் - பின்பு, குருபதி- குருகுலத்துக்குத் தலைவனான வீடுமன், வேறு ஒரு குருவை தேடினான் - (இவனினுஞ்சிறந்த) வேறோ ராசிரியனைத் தேடுபவனானான்; மதி - சந்திரன், இருள் அற நிலவு எறித்தது ஆயினும் - இருளொழியும்படி தனது ஒளியை வீசிவந்ததாயினும், இ பரவை ஞாலம் - கடல்சூழ்ந்த இந்நிலவுலகம், பரிதியை நயக்கும் - (அச்சந்திரனினும் மிக்கவொளியையுடைய) சூரியனை விரும்புமன்றோ! (எ - று.)

இச்செய்யுளில் உபமேயத்தையும் உபமானத்தையும் வெவ்வேறு வாக்கியமாக நிறுத்தி, இடையில் உவமவுருபுகொடாமற் கூறினமையால், எடுத்துக்காட்டுவமையணி; இதனை வடநூலார் த்ருஷ்டாந்தாலங்கார மென்பர். இச்செய்யுளை வேற்றுப்பொருள் வைப்பணி யென்றலும் பொருந்தும்; சிறப்புப் பொருளும்

பொதுப்பொருளு மாக நிற்றலி னென்க. படை - (பகைவரைப்) படுத்தற்குக் கருவியானது; படு - பகுதி, ஐ - கருவிப்பொருள்விகுதி. உம்மையிரண்டும் - உயர்வுசிறப்பு. குரு என்ற வடசொல் - ஆசிரியனென்ற பொருளில், அஜ்ஞாந விருளை யொழிப்பவனென்று காரணப்பொருள்படும்; கு - இருள், ரு - ஒழிப்பவன். ஞாலம் என்பது - பூலோகத்து உயிர்களைக் குறித்தலால். இடவாகுபெயர்.

வேறு.

இதுவும், அடுத்தகவியும் - துரோணன் வரலாறு.

பரத நாத வேத பரத்து வாச னென்பான்
விரத வேள்வி தன்னின் மேன கையா லான
சுரத தாது வீழ்ந்த துரோண கும்பந் தன்னில்
வரத னொருவன் வந்தான் வசிட்ட முனியை யொப்பான்.

(இ - ள்.) பரதம் - தாளவகையோடு சம்பந்தமுடைய, நாதம் - இசையோடு பொருந்திய, வேதம் - வேதங்களைவல்ல, பரத்துவாசன் என்பான் - பரத்துவாசனென்னும் முனிவன், விரதம் வேள்விதன்னில் - விரதானுட்டானத்தோடு கூடிய யாகஞ் செய்துகொண்டிருக்கையில், மேனகையால் - மேனகையென்னுந் தேவமாதைக்கண்டு காமுற்றதனால், ஆன - ஆகிய, சுரத தாது - இன்பமயமான வீரியம், வீழ்ந்த - விழப்பெற்ற, துரோணகும்பந்தன்னில் - பதக்களவு கொண்டதொரு பாத்திரத்தினின்று, வசிட்டமுனியை ஒப்பான் வரதன்ஒருவன் வந்தான்- வசிஷ்டமகாமுனியைப் போன்றவனான ஒருமுனிவன் தோன்றினான்; (எ - று.)

அங்கிரஸ் என்னும் முனிவனது குலத்தில் தோன்றிய பரத்துவாச மகாருஷி கங்கைத்தலைப்பில் யாகஞ்செய்துகொண்டிருக்கையில் அங்கு நீராடவந்த ஒருதேவமாதின் கட்டழகைக் கண்டு காதல்கொண்டு நெகிழ்ந்துஉருக, அவனது விருப்பத்தால் ஒருதுரோணகலசத்திலிருந்து ஒருகுமாரன் பிறந்தான்; அவனுக்குத் துரோணனென்று பெயராயிற்று என்று அறிக. அந்தத் தேவமாதின்பெயர் கிருதாசி யென்று வடநூல் கூறும்.

பரதநாதவேதபரத்வாஜன், வ்ரதம், மேநகா, ஸுரததாது, த்ரோணகும்பம், வரதன், வஸிஷ்டமுநி - வடசொற்கள். பரத மென்ற நாட்டியசாஸ்திரத்தின் பெயர், இங்கே, இலக்கணையாய், நாட்டியத்தின் அங்கமான தாளத்தைக் குறித்தது. "ச்ருதிர் மாதா லய: பிதா" என்றபடி இசையும் தாளமும் மிகநெருங்கிய சம்பந்தமுடையன வாதலால், நாதத்திற்கு 'பரதம்' என்றது, இயற்கை யடைமொழியாகக் கொடுக்கப்பட்டது. வேதம், உதாத்தம்முதலிய நால்வகைச்சுவரத்தோடு கூடியிருத்தலேயன்றி 'வேதகீதம்' 'ஸாமகாநம்' என்றபடி மற்றும் இசைவகைக்கும் உரியதாய் நிற்றலால், 'நாதவேதம்' எனப்பட்டது. வேதம் - நன்மை தீமைகளை விதிவிலக்குக்களால் அறிவிப்பதென்று பொருள்படும்; வித் -அறிவித்தல். பரத்வாஜன் என்ற பெயருக்கு - பிரசைகளைப் பாதுகாப்பவ னென்று பொருள்கூறுவர்; பரத் - பரிப்பவன், வாஜம் - ஜநம். வரதன் - வரம் அருள்பவன். தவவலிமையால் தவறாதுபயன்படும் நிறைமொழிகளைக் கொண்டு, வேண்டுவார்க்கு வேண்டிய வரங்களைத் தருந்தன்மைய னாதலால், முனிவனுக்கு, வரத

னென்று ஒருபெயர் வழங்கும். துரோணம் - இரண்டுமரக்கால். வஸிஷ்டனென்பதற்கு - (இந்திரியங்களை) வசப்படுத்தியவ னென்பது, உற்பத்தியருத்தம். முநி-மநநசிலன்: அதாவது - எப்பொழுதுங் கடவுளைத் தியாநஞ்செய்பவன்; இனி, முனிஎன்பதற்கு - முனிபவன் [பொருட்பற்றை விடுபவன்] என்று காரணப் பொருள் கூறலாகாது: வடசொல் திரிபாதலின். வைதிக லௌகிக விஷயங்களெல்லாவற்றிலுந் தேர்ந்திடுந் திறத்தை நோக்கி, துரோணனுக்கு வசிட்டனை உவமைகூறினர்.

இதுமுதற் பதினாறு கவிகள் - எல்லாச்சீரும் மாச்சீர்களாய் வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள்.

இச்செய்யுளில் 'மேனகையால்' என்பதிலுள்ள ஐகாரம் குறுக்கமாயினும் அதனை இயற்கை நெடில்போலவே கொண்டு அழுத்திப்படிக்க: நெடிலுக்குஉரிய ஓசையை நிறைக்கும்பொருட்டு. (௬௨)

ஈரேழ்விஞ்சைத்திறனுமீன்றோன்றன்பாலெய்தி
நீரேழென்னயாவுநிறைந்தகேள்விநெஞ்சன்
பாரேழெண்ணும்படைகள்பரசுராமன்றன்பா
லோரேழ்பகலினுலகுக்கொருவனென்னக்கற்றான்.

(இ - ள்.) (அந்தத்துரோணன்), ஈர் ஏழ் விஞ்சை திறனும் - பதினான்கு வித்தைகளின் வகைகளையும், ஈன்றோன் தன்பால் எய்தி - தனது தந்தையான பரத்துவாசமுனிவனிடத்திலே பெற்று [கற்றறிந்து],—நீர் ஏழ் என்ன கேள்வி யாவும் நிறைந்த நெஞ்சன் - ஏழுகடல்போல நூற்கேள்விகளெல்லாம் நிரம்பின மனத்தை யுடையவனாய்,—பரசுராமன் தன்பால் - பரசுராமனிடத்தில், பார் ஏழ் எண்ணும் படைகள் - ஏழுலகத்தாரும் மதிக்கத்தக்க அஸ்திரங்களை, ஓர் ஏழ் பகலின் - ஏழுநாளிலே, உலகுக்கு ஒருவன் என்ன கற்றான் - உலகத்திற்கு (இவன்) ஒருவனேயென்று சொல்லும்படி பயின்று தேர்ந்தான்; (எ - று.)

துரோணன் வேதங்களையும் வேதாங்கங்களையும் மற்றும்பல சாஸ்திரங்களையும் இளமையிலேயே தனதுதந்தையினிடத்திற் பயின்றபின்பு பரசுராமனிடஞ் சென்று இரந்து அவனிடமுள்ள அஸ்திரமனைத்தையும் பெற்று வல்லனாயினனென அறிக. இவன் அக்நிவேசனென்னும் முனிவனிடத்தும் படைக்கலந் தேர்ந்தன னென்பது, மேல் ௬அ - ஆங் கவியில் விளங்கும்.

("இடையிருவகையோ ரல்லது நாடிற், படைவகை பெறாஅ ரென்மனார் புலவர்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் உரையில் "நாடின்' என்பதனான் ஒருசார் அந்தணரும் படைக்கு உரியரென்பது கொள்க; அவர் இயமதங்கியாரும், துரோணனும், கிருபனும் முதலாயினாரெனக் கொள்க' எனஉரைத்தது, உணரத்தக்கது.)

பதினான்கு வித்தைகள் - ருக் யசுஸ் சாமம் அதர்வணம் என்ற வேதம் நான்கு, சிக்ஷை வியாகரணம் சந்தஸ் நிருக்தம் சோதிடம் கல்பம் என்ற வேதாங்கம் ஆறு, மீமாம்சை தர்க்கம் புராணம் தர்மசாஸ்திரம் என்ற உபாங்கம் நான்கு என இவை. ஈரேழ் - பண்புத்தொகை. விஞ்சை - வித்யா என்ற வடசொல்லின்

சிதைவு; வித்யை வித்தியை வித்தை விச்சை விஞ்சை யெனக் காண்க. திறன் - திறம் என்பதன் போலி. உம்மைகள் - முற்று. ஈன்றோன் - பெற்றவன்; ஈன் - பகுதி. நீர் - கடலுக்கு இலக்கணை. கடலேழ் - உவர்நீர், கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், பால், நன்னீர் என இவற்றின் மயமானவை. நீர்நிரம்பிய கடல்போல நூற்கேள்வி நிரம்பிய மனமென்க. கேள்வியாவது - கேட்கப்படும் நூற்பொருள் களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்; தொழிற்பெயர்: வி - விகுதி. கல்வியோடு அதற்கு இனமான கேள்வியுமுடைமையை விளக்கினர். கற்றவழி அதனாலாகிய அறிவை வலியுறுத்தலாலும், கல்லாதவழி அவ்வறிவை உண்டாக்குதலாலும், கல் வியின்பின் கேள்வி கூறப்பட்டது. யா - அஃறிணைப் பன்மை வினைப்பெயர்; இதில், பலவின்பாலுணர்த்தும் 'வை' விகுதி புணர்ந்துகெட்டது. நெஞ்சன் - குறிப்புமுற்றெச்சம். பார் என்பதற்கு - பருமையை யுடையதென்றாவது, பார்க் கப்படுவதென்றாவது காரணப்பொருள் காண்க; இது - இங்கு, இடவாகுபெயர். பரசுராமன் - கோடாலியை ஆயுதமாகவுடைய இராமன். ராமனென்ற வடமொழி (தனது குணஞ் செயல்களால் உலகத்தைக்) களிப்பிப்பவ னென்று காரணப் பொருள்படும். வில்லையும் கலப்பையையும் ஆயுதமாகவுடைய தசரதராம பலராமர் களினும் வேறுபாடு விளங்கப் பரசுராமனென்று பெயர்பெற்ற இவன், விஷ்ணு வின் ஆறும் அவதாரம்; ஜமதக்நி முனிவனது குமாரன்; மூவுலகையும் வென்ற இராவணனைச் சயித்திட்ட கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்றவன்; உலகத்துச் செருக்குக்கொண்ட அரசர்பலரையும் அழித்தொழித்தவன்; மகாபலபராக்கிரம சாலி. பகல் - தினத்துக்கு இலக்கணை. உலகுக்கு என்பதை, உருபுமயக்கமாக, உலகில் எனக் கொள்க. ஒருவன் - ஒப்பற்றவன். (ருரு)

வீடுமன் துரோணனை வரவழைத்தல்.

வெற்பின்வலியதிண்டோள்வேந்தனேவுந்தூதா
லற்பின்மிக்கசிந்தையறஞ்சான்மொழியவ்வாசான்
கற்பின்பன்னியோடுங்கையின்மதலையோடும்
பொற்பினமராவதியேபோலுநகரிபுக்கான்.

(இ - ள்.) அற்பின் மிக்க சிந்தை - அன்பினால் நிறைந்த மனத்தையும், அறம் சால் மொழி - தருமம்நிறைந்த சொல்லையுமுடைய, அ ஆசான் - அந்தத் துரோ ணாசாரியன்,--வெற்பின் வலிய திண் தோள் வேந்தன் ஏவும் தூதால் - மலையி னும் மிகவலிய தோள்களையுடைய வீடுமராசன் அனுப்பின தூதனால்,—கற்பின் பன்னியோடும் - கற்பையுடைய தன் மனையாளுடனும், கையின் மதலையோடும்- கையிற்குழந்தையோடும், பொற்பின் அமராவதியே போலும் நகரி புக்கான் - அழ கினால் அமராவதிநகரத்தையேபோன்ற அஸ்திநாபுரியை அடைந்தான்; (எ - று.)

இச்செய்யுள், கீழ் முப்பத்தோராஞ்செய்யுளோடு கதைத்தொடர்புடையதாத லால், இங்கே 'வேந்தன்' என்ற பொதுப்பெயர் - வீடுமனைக் குறித்தது. துரோ ணன்மனைவி, கிருபி. மகன், அசுவத்தாமன். தூது - உயர்திணைப்பொருளுணர்த் தும் அஃறிணைச்சொல். அன்பு அற்பு என மென்றொடர் வன்றொடராயிற்று; [நன் - உயிர் - ருச.] அறமாவது - மனுமுதலிய நூல்களில் விதித்தவற்றைச் செய் தலும், விலக்கியவற்றை ஒழிதலுமாம்; அறம் - (நூல்களால்) வரையறுக்கப்பட்ட

தெனக் காரணப்பொருள்படும்: அறு - பகுதி, அம் - செயப்படுபொருள் விகுதி. ஆசான், பன்னி - ஆசார்யன், பத்நீ என்ற வடசொற்களின் சிதைவு. பொற்பு - பொன் பு எனப் பகுதியும் விகுதியுமாகப் பிரிந்து, பொன்னின்தன்மையெனக் காரணப்பொருள்படும். அமராவதி என்பதற்கு - தேவர்களைத் தன்னிடத்தில் உடையதென்பது எதுப்பொருள்; இது, சுவர்க்கலோகத்து இராசதானி. ஏ - பிரிநிலையோடு உயர்வுசிறப்பு. புக்கான் என்பதில், புகு என்ற குறிலிணைப்பகுதி ஒற்றிரட்டி இறந்தகாலங் காட்டிற்று. இரண்டாமடி - துரோணனிடத்து நல்லாசிரிய ரிலக்கணவமைதி யுண்மையை விளக்கும். (ருச)

வீடுமன் துரோணனை எதிர்கொண்டு உபசரித்தல்.

வந்தான்வரதனெனலுமந்தாகினியாண்மைந்தன்
பைந்தாரசையவெதிர்போய்ப்பணிந்துபூசைபண்ணிச்
சிந்தாசனத்தோடொக்குஞ்சிங்காசனத்தினேற்றி
யெந்தாய்வரநீயடியேனென்னதவத்தேனென்றான்.

(இ - ள்.) வரதன் வந்தான் எனலும் - துரோணாசாரியன் வந்தானென்று (தூதர்) சொல்ல அறிந்தவுடனே,—மந்தாகினியாள் மைந்தன் - கங்காதேவியினது குமாரனான வீடுமன், பைந் தார் அசைய எதிர் போய் - பசுமையான (தனது) பூமாலை அசைய எதிர்கொண்டுசென்று, பணிந்து - வணங்கி, சிந்தாசனத்தோடு ஒக்கும் சிங்காசனத்தின் ஏற்றி - (தனது) மனமாகிய ஆசனத்தோடு ஒத்ததொரு சிங்காதனத்திலே (அவனை) எழுந்தருளப்பண்ணி, பூசைபண்ணி - பூசித்து,—'எந்தாய் - சுவாமீ! நீ வர-நீ (இங்கே)எழுந்தருளுதற்கு, அடியேன் என்ன தவத்தேன்- நான் என்ன தவஞ் செய்திருந்தேனோ!' என்றான் - என்று (உபசாரமொழி) கூறினான் ; (எ - று.)

வீடுமன் துரோணனை வில்வித்தையில் மிகச்சிறந்தவனென்று நன்குமதித்து எப்பொழுதுந் தனது மனத்தில் நீங்காதுவைத்திருந்தனன் என்பதுபற்றி, வீடுமன் துரோணனுக்குச் சமர்ப்பித்த சிங்காதனத்துக்கு அவன்மனமாகிய ஆசனத்தை உவமைகூறினர். இதுவரையிலுந் தன் மனத்தில் வைத்திருந்ததுபோல, அப்பொழுது சிங்காசனத்தில் வைத்தனனென்க. சிந்தாஸநம், ஸிம்ஹாஸநம் - வடசொற்கள்; சிந்தா + ஆஸநம், ஸிம்ஹ + ஆஸநம் என்றவை தீர்க்கசந்தி பெற்றன: 'அ ஆமுன் அஆவரின் இரண்டுங்கெட ஓர் ஆகாரம் தோன்றும்.' சிங்காசனம் - சிங்கத்தின் முகமுங் கால்களுந் தோன்றச் சித்திரவேலைசெய்து அமைக்கப்பட்ட பீடம். மந்தாகிநீ என்ற வடமொழிப் பெண்பாற்சொல், ஈறுதிரிந்து 'ஆள்' என்னும் பெண்பால்விகுதி யேற்றது. மந்தாகினியென்றது, தேவகங்கையின் பெயர். தேவலோகத்திலுள்ள கங்கைக்கு மந்தாகினியென்றும், பூலோகத்தில் வந்ததற்குக் கங்கையென்றும், கீழுலகத்திற் பாய்வதற்குப் போகவதியென்றும் பெயரென அறிக. பசுமை + தார் = பைந்தார்: "ஈறுபோதல்" என்னுஞ் சூத்திரவிதி. தார் – இங்கே, அடையாளப் பூமாலை. பூசை – பூஜா என்ற வடசொல்லின் திரிபு. 'சிந்தாசனத்தோடொக்கும்' என்பதில், ஒப்புப்பொருள் மூன்றும்வேற்றுமைக்கு வந்தது. எந்தாய் - எந்தை யென்பதன் ஈறுதிரிந்த விளி. எந்தை - எம் தந்தை: தலைவனென்ற பொருளில், எந்தை யென்றது - உபசாரவழக்கு. அடி

யேன் - அடிமை யென்னும் பண்பினடியாகப் பிறந்த தன்மையொருமைப்பெயர். என்னதவத்தே னென வியந்தவாறு. என்னஎன்பதில், அ - சாரியை. 'வரவிங்கு' என்றது, நல்ல பாடம்.

கங்கைமகனென்ற விவரம்:—முன் ஒருகாலத்தில் தேவர்கள் யாவருங்கூடிய பிரமதேவனதுசபையிற் சென்று கங்காநதியின் பெண்தெய்வம் வணங்கியபொழுது, அங்கு வந்திருந்த வருணன், அவளழகை உற்றுநோக்கிக் காதல்கொண்டான்; கங்கையும், அவன்மீது காதல்கொண்டு எதிர்நோக்கினாள்; அதனை யறிந்த நான்முகக்கடவுள், வருணனைப் பூமியில் மானுடப்பிறப்பெடுக்கவும், கங்கையை மானுடமகளாய் அவனைச் சிலநாள் மணந்திருக்கவுஞ் சபித்திட்டான்; அங்ஙனமே வருணன் குருகுலத்திற் சந்தனுவாய்ப் பிறந்தான்; கங்கையும் ஓர்மனிதமகளாகி 'யான் எந்தெந்தத்தீச்செயல் செயினும் மறுக்கலாகாது' என்னும் ஏற்பாட்டினோடு அவனை மணஞ்செய்து கொண்டாள். இது நிற்க. பிரபாச னென்னும் வசு, தன் மனைவியின் சொல்லைக்கேட்டு வசிட்டமுனிவனிடமுள்ள காமதேநுவைக் கொள்ளைகொள்ள எண்ணினன்; மற்றை யேழுவசுக்களும் அவனுக்கு உதவிசெய்யவே, எண்மரும் இரவிற்சென்று பசுவைக் கவர்ந்தனர். அதனையறிந்த வசிஷ்டமகாமுனிவன், அஷ்டவசுக்களையும் மானுடசன்மமெடுக்கவும், அவர்களுள் மனைவி சொற்கேட்ட பிரதானனான பிரபாசனைப்பூமியிற் பலநாள்வாழ்ந்து பெண்ணின்பமற்றிருக்கவும் சாபங்கொடுத்தான்: எட்டுவசுக்களும் சந்தனுவுக்குக் கங்கையின் வயிற்றிற் பிறந்தனர். முதலிற் பிறந்த எழுகுழந்தைகளையும் தாய் பிறந்த அப்பொழுதே கங்காநதியில் எடுத்தெறிந்துவிட்டாள். எட்டாவதுபிள்ளை பிறந்தவுடனே தந்தை 'இக்குழந்தையைக் கொல்லலாகாது' என்று மறுக்க, கங்கை கணவனைவிட்டு நீங்கினள். அவ்வெட்டாவதுமகனே, இவ்வீடுமன். (சுரு)

துரோணன் வீடுமனுக்கு வாழ்த்துக் கூறல்.

மூசிவண்டுமொய்க்குமுருகார்செவ்விமாலை
வாசிமான்றேர்வெம்போர்மன்னர்மன்னன்றன்னை
யேசில்கடவுள்வாய்மையிருக்காலெண்ணில்கோடி
யாசியன்பாலோதியருள்செய்திருந்தபின்னர்.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) வண்டு மூசி மொய்க்கும் - வண்டுகள் நெருங்கி மொய்க்கப்பெற்ற, முருகு ஆர் செவ்வி மாலை - தேன் நிறைந்த அழகிய பூமாலையைத் தரித்த, வாசி மான் தேர் வெம் போர் மன்னர் மன்னன்தன்னை - குதிரைகள் பூண்ட தேரையுடையவனும் கொடிய போரைச் செய்யவல்லவனும் அரசர்கட்கு அரசனுமாகிய வீடுமனை, ஏசு இல் கடவுள் வாய்மை இருக்கால் - குற்றமில்லாத தெய்வத்தன்மையுடைய சத்தியமான வேதமந்திரங்களைக்கொண்டு, எண் இல் கோடி ஆசி அன்பால் ஓதி அருள் செய்து - அளவற்ற கோடிக்கணக்கான ஆசீர்வாதங்களை அன்போடு சொல்லி அனுக்கிரகித்து, இருந்த பின்னர் - வீற்றிருந்தபின்பு, (எ - று.)— துரோணன் 'மொழியொன்றுரைப்பான்' என வருங்கவியோடு முடியும்.

முருகு ஆர் - நறுமணம் நிறைந்த என்றுமாம். செவ்வி - இகர விகுதி பெற்ற பண்புப்பெயர். வாஜி, கோடி - வடசொற்கள். வாசி மான் - குதிரையாகிய

விலங்கு என இருபெயரொட்டு. மான், ன் - சாரியை; "ஆ மா கோ னவ்வணைய வும் பெறுமே." போர் - பொருதல்; பொரு என்ற முதனிலை திரிந்த தொழிற் பெயர். மன்னர்மன்னன் - ராஜராஜன்; சந்தனுவின் மூத்தகுமாரனாய்ப் பலபராக்கிரமங்களிற் சிறந்த வீடுமனே அரசுக்கு உரியா னென்பதுபற்றி 'மன்னர்மன்னன்' என்றார். ஏசு - பழிக்கப்படுதல்: முதனிலைத் தொழிற்பெயர்: செய்வினை செயப்பாட்டுவினைப்பொருளது. வேதத்துக்குத் தெய்வத்தன்மை - எவராலும் இயற்றப்படாது கடவுள்போல நித்தியமாயிருத்தல்; அதற்கு வாய்மை - பயன் தவறுமையும், பொய்ம்மை கூறுமையும், யாதொன்றுந் தீமையிலாதவை சொல்லலும், புரைதீர்ந்த நன்மை பயத்தலும். இனி, 'கடவுள்வாய்மை' என்பதற்கு - கடவுளின் திருவாய்மலரினின்று ஆதிகாலத்தில் வெளிப்பட்டதாகிய வென்று உரைப்பாரு முளர். இருக்கு - ருக் என்ற வடசொல்லின் திரிபு; இது - ஒருவேதத்திற்குச் சிறப்புப்பெயராதலே யன்றி, எல்லாவேதங்கட்கும் பொதுப்பெயராகவும் வழங்கும். ஆசீஸ் என்ற வடசொல், ஆசியென விகாரப்பட்டது. தேர் - யானை குதிரை காலா ளென்னும் மற்றையங்கங்களுக்கும் உபலக்ஷணம். (௬௬)

இதுமுதல் ஒன்பது கவிகள் - ஒருதொடர்: துருபதன்செய்தியைத் துரோணன் வீடுமனுக்குக் கூறல்.

வேதமுனிவனிருந்தவேத்துமுனியைநோக்கிப்
பூதந்தன்னிநிகழ்ந்தபுன்மைமொழியொன்றுரைப்பா
னேதமெய்பெற்றனையயாகசேனனென்பான்
போதமில்லானென்பாற்பூட்டுநண்புபூண்டான்.

(இ - ள்.) வேதம் முனிவன் - வேதம்வல்ல அந்தணனாகிய துரோணன், இருந்த வேந்து முனியை நோக்கி - தனது அருகிலிருந்த இராசருஷியான வீடுமனை நோக்கி, பூதந்தன்னில் நிகழ்ந்தபுன்மைமொழி ஒன்று உரைப்பான் - கழிந்த காலத்தில் நடந்த ஓர்எளிமையைப் புலப்படுத்துஞ் சொல்லைச் சொல்பவனானான்:—ஏதம் மெய் பெற்று அனைய - தீமைதானே ஒருவடிவ மெடுத்தாற்போன்ற, யாகசேனன் என்பான் - யாகசேன னென்னும் பெயரினனான, போதம் இல்லான் - அறிவில்லாதவன், என்பால் - என்னிடத்தில், பூட்டும் நண்பு பூண்டான் - தொடர்பையுண்டாக்கும் நட்பைப் பொருந்தினான்; (எ - று.)

வேதமுனிவன் = பிரமவிருடி. வீடுமன் இம்மையின்பங்களில் விருப்பமற்று விவாகமின்றி விரதம்பூண்டுநின்றன னாதலின், 'வேத்துமுனி' எனப்பட்டான். பூதம் - வடசொல்; விசேடணப்பெயர் விசேடியத்தின்மேல் நின்றது. யாகசேனன் - பாஞ்சாலதேசத்து அரசன்: துருபதனென்னும் மறுபெயருடையவன்; சோமகனது மகனான பிருஷதனென்பவனது குமாரன். பரத்வாஜ மகாமுனிவனும் பிருஷதமகாராஜனும் ஒருவர்க்கொருவர் மனங்கலந்த நண்பராதலால், பரத்வாசகுமாரனான துரோணனிடத்துப் பிருஷதகுமாரனானதுருபதன் இளமையில் நண்புகொண்டிருந்தா னென அறிக. அவன் பின்பு தொன்மைமறந்து மெய்ம்மை யொழிந்து தொடர்பற்றுத் தன்னை இழித்துப்பேசின கொடுமையை உள்ளத்திற்கொண்டு துரோணன் 'ஏதமெய்பெற்றனைய' என்றும், 'போதமில்லான்

என்றும் அவனை இகழ்ந்து கூறினன். அனைய, ஐ - சாரியை. என்பான் எனப் படுவான்; செய்வினை, செயப்பாட்டுவினைப் பொருளது. போதம் - வடசொல். என்பால், பால் - ஏழனுருபு. பூட்டு - பூண் என்பதன் பிறவினை; டு - விகுதி. புன்மைமொழி - இரண்டனுருபும் பொருளுந் தொக்க தொகை. (ரு௭)

யானுமவனுமுறையாலிளையோமானவெல்லைப்
பானுநிகர்தொல்லங்கிவேசன்பாதம்பணிந்து
வானுமண்ணும்வியக்கமறவெம்படைகள்கற்றுத்
தானும்வல்லனாகித்தன்போலென்னைவைத்தான்.

(இ - ள்.) யானும் அவனும் - நானும் அந்த யாகசேனனும், இளையோம் ஆன எல்லை - இளமைப்பருவமுடையோமா யிருந்த காலத்தில், பானு நிகர் தொல் அங்கிவேசன் பாதம் பணிந்து - (பிரமதேஜசினால்) சூரியன்போல் விளங்குகின்ற பெரிய அக்கினிவேசனென்னும் முனிவனது திருவடிகளை வணங்கி, வானும் மண்ணும் வியக்க - விண்ணுலகத்தோரும் மண்ணுலகத்தோரும் கண்டு அதிசயிக் கும்படி, மறம் வெம் படைகள் - வலிமையையுடைய கொடிய படைக்கலங்களை, முறையால் - முறைமைப்படி, கற்று-பயின்றவர,—(அவ்யாகசேனன்), தானும் வல்லன் ஆகி - (என்னைப்போலவே) தானும் வல்லவனாய், தன்போல் என்னை வைத்தான் - (இராசகுமாரனாகிய) தன்னைப்போலவே (எளியவனாகிய) என்னை யும் பாவித்தான்; (எ - று.)

இளையோம் - இளமை யென்னும் பண்பினடியாப் பிறந்த தன்மைப் பன் மைப்பெயர்; படர்க்கையை உட்படுத்திய உளப்பாடு. ஆன என்பதில், 'இன்' என்ற இறந்தகால இடைநிலை முதல்தொக்கது. பாநு - வடசொல்; விளங்குபவ னென்பது, அவயவப்பொருள். அங்கிவேசனுக்குத் தொன்மை - பருவம் அறிவு ஒழுக்கம் இவற்றில் முதிர்ச்சி. அங்கிவேசன் - வடமொழித்திரிபு; இவன் அக் கினியினின்று பிறந்தவ னென்றும், பரத்வாஜ முனிவனிடமிருந்து ஆக்நேயாஸ் திரம் பெற்றவ னென்றும், பின்பு அந்த அஸ்திரத்தைத் துரோணனுக்குக் கொடுத் தன னென்றும் வடநூலால் விளங்கும். வான், மண் - ஆகுபெயர். தானும் என்ற உம்மை - எச்சம். கற்று - கற்க வென்னும் செயவெனெச்சத்தின் திரிபு; "சொல் திரியினும் பொருள்திரியா வினைக்குறை." 'பானுநிகரங்கிவேசன்' என்றது, சூரியன் புறவிருளொழித்தல்போல முனிவன் அகவிருளொழிப்ப னென்றவாறு. 'சொல்லங்கிவேசன்' என்ற பாடத்துக்கு, சொல் - புகழ். 'மறைவெம்படைகள்' என்ற பாடம், மந்திரங்களோடு கூடிய அஸ்திரங்க ளென்று பொருள்படும். (ரு௮)

பின்னையிரவும்பகலும்பிரியேமாகித்திரியத்
தன்னையடைந்தநண்பின்றகவான்மிகவாதரியா
வென்னைவானமெய்தியானேயிறைவனானா
லுன்னையாளவைப்பேனுலகிற்பாதியென்றான்.

(இ - ள்.) பின்னை - பின்பு, இரவும் பகலும் - எப்பொழுதும், பிரியேம் ஆகி திரிய-(நாங்கள் ஒருவரையொருவர்) பிரியாதவர்களாய் ஒழுக,—(அவ்யாகசே னன்), தன்னை அடைந்த நண்பின் தகவால் - தன்னை (நான்) அடைந்த சிநேகத்

தின் விசேடத்தால், மிக ஆதரியா - (என்னிடத்து) மிகவும் அன்புகொண்டு, (என்னைநோக்கி), 'என் ஐ வானம் எய்தி - என்தந்தை சுவர்க்கமடைய [இறந்த பின்பு], யானே இறைவன்ஆனால் - நானே அரசனானால், (அப்பொழுது), உலகில் பாதி ஆள உன்னை வைப்பேன் - (எனது) நாட்டிற் பாதியை (நீ) அரசாளும்படி உன்னை அரசனுக்கிவைப்பேன்', என்றான் - என்று சொன்னான் ; (எ-று.)

தகவு - தகுதி. ஆதரியா - ஆதர மென்னும் வடமொழிப்பெயரின்மேற் பிறந்த செய்யாஎன்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகாலவினையெச்சம். வானம், அம் - சாரியை; வான் என்ற இடத்தின் பெயர், ஆகுபெயராய், அங்குள்ள சுவர்க்கத்தைக் குறித்தது. எய்தி - எய்த வென்னும் எச்சத்தின் திரிபு. இறைவன் - இறைமையென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர்; வ் - பெயரிடைநிலை. உலகு - லோக மென்ற வடசொல்லின் விகாரம். பாதி - பகுதி யென்பதன் மரூஉ. (௬௬)

நன்றுநன்றுன்வாய்மைநன்றுநண்புக்கினியா
யென்றுபோந்துநானுமியன்றதவத்தினிருந்தேன்
வென்றுகொண்டபுவியைவேந்தன்மகவுக்களித்துச்
சென்றுவானம்புகுந்தான்சிறுவன்றலைவனானான்.

(இ - ள்.) (அப்பொழுது), நானும்—, (அவனைநோக்கி), 'நன்று ஆம் நண்புக்கு இனியாய் - நல்லதான சினேகத்திற்கு இனியவனே! உன் வாய்மை நன்று நன்று - உன்வார்த்தை நல்லது நல்லது!' என்று - என்று (உபசாரமொழி) கூறி, (பின்பு), போந்து-(குருவினிடத்தை விட்டுத் தனியே) சென்று, இயன்ற தவத்தின் இருந்தேன் - (எனதுசாதிக்குப்) பொருந்தின தவத்தைச் செய்தலில் இருந்துவிட்டேன்;—வேந்தன் - (யாகசேனனுடைய தந்தையான) பிருஷத மகாராசன், வென்று கொண்ட புவியை - (பகைவரை) வென்று அரசாண்டுவந்த இராச்சியத்தை, மகவுக்கு அளித்து - தன்மகனுக்குக் கொடுத்து, சென்று வானம் புகுந்தான் - இறந்து சுவர்க்கத்தை யடைந்தான்: (ஆகவே), சிறுவன் தலைவன் ஆனான் - யாகசேனன் அரசனானான்; (எ - று.)

நன்று நன்று - அடுக்கு, மகிழ்ச்சிபற்றியது. இனியாய் - இனியா னென்பதன் ஈறுதிரிந்த விளி. போந்து - புகுந்து என்பதன் மரூஉ. புவி - வடசொல். மகவு, உ - சாரியை; இவ்விளமையின் பெயர், மகனைக் குறித்தலின், பண்பாகு பெயராம். சிறுவனென்றது, அவனது இளமையோடு இழிகுணத்தையும் உணர்த்தும். (௬௭)

தனத்திலாசையின்றித்தவமேதனமென்றெண்ணி
வனத்திலுண்டிகொண்டேமகிழ்வுற்றொருசார்வைகிச்
சனத்திலருளாலில்வாழ்தருமந்தவறுவண்ண
மினத்தின்மிக்ககிருபற்கிளையாளிவளைவேட்டேன்.

(இ - ள்.) தனத்தில் ஆசை இன்றி - செல்வத்தினிடத்து ஆசை யில்லாமல், தவமே தனம் என்று எண்ணி - தவத்தையே செல்வமென்று நினைத்து, வனத்தில்உண்டி கொண்டே - காட்டிற்கிடைக்கிறஉணவுகளை உட்கொண்டே,

மகிழ்வு உற்று - திருப்தியடைந்து, ஒரு சார் வைகி - (அக்காட்டில்) ஓரிடத்தில் இருந்து, சனத்தில் அருளால் - சனங்களிடத்தில் நிகழ்ந்த கருணையினால், இல் வாழ் தருமம் தவறு வண்ணம் - இல்லறவாழ்க்கை தவறுதபடி, இனத்தில் மிக்க கிருபற்கு இளையாள் இவளை வேட்டேன் - குலத்திற் சிறந்த கிருபனது தங்கையாகிய இவளை விவாகஞ்செய்துகொண்டேன்; (எ - று.)

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும், நல்லாற்றி னின்ற துணை" "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கும், இல்வாழ்வானென்பான் துணை" என்றபடி பிரமசாரி வானப்பிரஸ்தன் ஸந்யாஸி என்ற மற்றை மூன்று ஆச்சிரமத்தார்க்கும், கதியற்றவர் ஏழைகள் முதலானவர்களுக்கும் உணவும் இடமும் முதலிய வேண்டுவன கொடுத்து உதவுதற்கு உரிமை கிருகஸ்தாச்சிரமத்தினர்க்கே இருக்கின்றமையைக் கருதி அதனிமித்தம் இல்வாழ்க்கைபூண்டேனென்பான், 'சனத்திலருளால்' என்றான். இனி, இதற்கு-எனது பிதிருக்களாகிய சனங்களைக்குறித்து எழுந்த அன்பினா லென்று உரைப்பினும் அமையும்; சந்ததியில்லாதவனது பிதிரர்கள் நற்கதியுறா ரென்பது நூல்துணிபாதலால், அவர்களை நற்கதிபெறுவித்தற்பொருட்டுச் சந்ததி விருத்திக்காக மணஞ்செய்துகொண்டேனென்பது கருத்தாம். சாஸ்திரவிதிப்படி உயர்குடிப்பிறப்புடையவளை மணந்தேனென்பான், 'இனத்தில் மிக்க இவளை வேட்டேன்' என்றான். இனி, இனத்தில் மிக்க என்பதற்கு - உறவினத்தால் மிகுந்த என்று உரைத்தலும் ஒன்று; பந்துவர்க்கமில்லாத கன்னிகை மணத்திற்குச் சிறந்தவளல்ல ளென்பது நூற்கொள்கை. தவமே தனமென் றெண்ணி - எல்லாநன்மைகளையுந் தருவதும், வருந்திப் பாதுகாக்கப்படுவதும் தவமே யென்று கருதி யென்றபடி. வனத்திலுண்டி - காய் கனி கிழங்கு இலை சருகு நீவாரப்புல்லரிசி முதலியன. தநம், வநம், ஜநம் - வடசொற்கள். உண்டி - உண்ணப்படுவது; இ - செயப்படுபொருள் விகுதி: ட் - எழுத்துப்பேறு. இல்-வீடு. கிருபற்கு இளையாள், நான்காம்வேற்றுமை - முறைப் பொருளது. இளையாள் - இளமை யென்னும் பண்பினடியாப் பிறந்த பெண்பாற் பெயர். தவறு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஆசை - ஆவீறுஐயான வடசொல். இவள் - அண்மைச்சுட்டு. வேட்டேன், வேள் - பகுதி. (சக)

கந்தமகவையீன்றகாளகண்டனருளால்
வந்தமகவிம்மகவும்வறுமைவளரவளர்ந்தா
னிந்தமகவுமையாண்டிளமையறியாதெனலாற்
றந்தமகவைநோக்கித்தாயும்பெருகத்தளர்ந்தாள்.

(இ - ள்.) இ மகவு-இந்தக் குழந்தை, கந்தன் மகவை ஈன்ற காளகண்டன் அருளால் வந்த மகவு - முருகக்கடவுளாகிய மைந்தனைப் பெற்ற சிவபிரானது கருணையினாற் பிறந்த குழந்தை; இ மகவும் - இக்குமாரனும், வறுமை வளர - தரித்திரம் அதிகப்பட, ஐ ஆண்டு - ஐந்து பிராயமளவும், இளமை அறியாது - இளமைப்பருவத்துக்குஉரிய யாதோரின்பத்தையும் அறியாமலே, வளர்ந்தான்—:என லால் - இக்காரணத்தால், தந்த மகவை நோக்கி தாயும் பெருக தளர்ந்தாள் - தான் வளர்த்துவந்த பிள்ளையைப் பார்த்துத் தாயும் மிகவருந்தினாள்; (எ - று.)

குழந்தைப்பருவத்துக்கு இன்றியமையாத பசுவின்பால் முதலிய நுகர்ச்சி யொன்றையும் அறியா னென்பதுபட 'இளமையறியாது வளர்ந்தான்' என்றும், இளமையில் வறுமை இன்னுதாதலால் 'எனலால் தளர்ந்தாள்' என்றும், குழந் தைக்கு உள்ள குறையைக் கருதிப் பாராட்டி வருந்துபவள் அதனை வளர்த்தற்கு உரிய தாயே யாதலால் 'தாயும் பெருகத்தளர்ந்தாள்' என்றுங் கூறினன். இளமை- அப்பருவத்து நுகர்ச்சிக்குப் பண்பாகுபெயர். காளகண்டன் - வடசொல்; (விட முண்டதனற்) கறுத்த கழுத்தையுடையவன். வறுமை - நுகரப்படுவன யாவும் இல்லாமை.

துரோணன்மனைவியாகிய கிருபியின் கட்டழகைக் கேட்டும் ஒருகால் கண் டும் அவளிடம் மிகக்காமுற்ற சிவபிரானது அருளினல் ஒரு குதிரையினிடமாக ஒரு ஆண்குழந்தை தோன்றிற் றென்றும், அதன்பெயர் அசுவத்தாமனென்றும் அறிக. ("அந்த மாது கற்பை யறிய வேண்டி யீசன், வந்து மாதவத்தர் வடிவி னுண்டி கேட்ப, விந்த மாது மன்பா லிசைவுகொண் டளிப்பான், வந்தனுதி செய்ய வரத னென்று சொல்வான்", "தூசி லாமல் வந்து துய்க்க நல்குவாயேல், ஆசிலா யருந்த லன்றி யுண்டிலோமென், றேசிலா னுரைப்ப விவளு மந்தவாறு, கூசி லாடை நீத்துக் குழன்மறைப்ப வந்தாள்", "காவி யொத்த கண்ணள் கற்பு ணர்ந்துகந்து, தேவி யொத்த மங்கை செங்கை கொண்ட வள்ளத், தாவி யொத்த பெம்மா னமுதுகுத் தகன்றன், பாவி யத்தை யங்கொர் பரியின்முன்னர் வைத் தாள்", "புரவி யுண்ட போதிற் பொற்பின் மிக்க மைந்த, னரவினுண் டெறிக்கு மரதனத்தை மான, விரவியுண்டினித்தா னில்லை யென்னு நீரான், பரவ வண்ட ரிந்தப் பார்துதிக்க வந்தான்", "முனியு மந்த மாது முடிவி லின்ப மெய்தித், தனய னந்துரங்கதாம னென்னு நாமம், புனைய வந்தியாரும் புகழ வைகு நாளில்" என்பன, நல்லாப்பிள்ளைபாரதம்.) துரோணனுக்குக் கிருபியினிடம் சிவாம்சமாகப் பிறந்த பிள்ளை அசுவத்தாம னென்றும் நூற்கொள்கை உண்டு.

கந்தன் + மகவு = கந்தமகவு; "சிலவிகாரமா முயர்திணை." கந்தன் - ஸ்கந்த னென்ற வடசொல்லின் திரிபு; இதற்கு - (பகைக்கடலை) வற்றச்செய்பவ னெ ன்றும், உமாதேவியினுற் சேர்க்கப்பட்டவ னென்றும், பிறவாறும் பொருள் உரைக்கப்படும். சூரபதுமன் முதலிய அசுரர்கள் செய்துவந்த உபத்திரவங்களைப் பொறுக்கமாட்டாத தேவர்கள் முதலியோரது வேண்டுகோளால் அவ்வசுரர்களை அழிக்கும்பொருட்டுச் சிவபிரான் தனது அம்சமாகக் குமாரக்கடவுளைத் தோன்று வித்தன னென வரலாறு அறிக.

"தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்" என்ற விடத்திற் போல, தருதல்- வளர்த்தற்பொருளதாயிற்று. (சஉ)

மாவின்பாலேயன்றிமரபுக்குரியமைந்த
னுவின்பால்கண்டறியானதனல்வருந்தியந்தக்
கோவின்பாலெய்துதலுங்கோமான்யார்நீயென்ன
நாவின்பாலானடுங்கிநானுன்னண்பனென்றேன்.

(இ - ள்.) மரபுக்கு உரிய மைந்தன்-(எனது) வம்சத்துக்கு உரிய அப்புதல் வன், மாவின் பாலே அன்றி - மாப்பாலையே யல்லாமல், ஆவின் பால் கண்டு

அறியான் - பசுவின்பாலைக் கண்டும் அறியான்; அதனால் - அந்தக்காரணத்தால், (நான்), வருந்தி - மனம்வருந்தி, அந்த கோவின்பால் எய்துதலும் - (ஒருபசுப் பெற்றுவரக் கருதி) அந்த யாகசேனராசனிடத்திற் சென்றவளவிலே, கோமான்- அவ்வரசன், யார் நீ என்ன - 'நீ யார்?' என்று (முகமறியாதவன்போல என்னை) வினவ, (அதுகேட்டவுடனே), நடுங்கி - மிகக்கூசி, நாவின்பாலால் நான் உன் நண்பன் என்றேன் - (எனது) வாயால் 'நான் உன்சிநேகிதன்' என்று சொன்னேன்; (எ - று.)

மாவின்பால் - மாவைக் கரைத்துக் காய்ச்சிப் பால்போலச்செய்த உணவு; ஒருவகைக் கஞ்சி: இன் - சாரியை. இதற்கு - குதிரைப்பாலென்று கூறுவாரும் உளர்; அதற்கு யாதோரியைபும் இன்று: முதனூலிலும் 'பிஷ்டாஸம்' என்றே கூறப்பட்டிருக்கிறது. கோமான், மான்-பெயர் விகுதி. 'யார்' என்ற வினாவினைக் குறிப்புமுற்று - இருதிணை ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாக வழங்கும். நாவின்பால் என்பதில், பால் - இடம். 'நா னுன்னண்ப னென்றேன்' என்ற விடத்து 'நாவின்பாலால்' என வேண்டாதுகூறியது, எனது நா இங்ஙனம் எளிமை கூறுதற்கு உரியதன் றெனத் தனக்குவேண்டியதன்சிறப்புமுடித்தற் கென்க. இனி, நாவின்பாலால் நடுங்கி யெனஎடுத்து, இங்ஙனம் பேசின அவனது நாவின் செயலால் யான் நடுங்கி யென உரைப்பினுமாம். (சரு)

மன்னன்யானீமுனிவன்மரபாலெனக்குமுனக்கு
மென்னநண்புண்டென்னவேசிநகைசெய்திகழ்ந்தா
னன்னதுருபன்றன்னையவையிலரசர்கேட்பச்
சொன்னவாய்மைநீயேசோர்ந்தாயானேசோரேன்.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) (அதுகேட்டு அவ்வியாகசேனன் என்னை நோக்கி), 'மரபால் - சாதியினால், மன்னன் யான் - நானே அரசன்: நீ முனிவன் - நீயோ அந்தணன்: எனக்கும் உனக்கும் என்ன நண்பு உண்டு - எனக்கும் உனக்கும் என்ன சிநேகம் இருக்கிறது?' என்ன - என்றுசொல்லி, ஏசி - பழித்து, நகை செய்து - சிரித்துப் பரிகாசம் பண்ணி, இகழ்ந்தான் - அலட்சியஞ்செய்தான்: அன்ன துருபன் தன்னை - அந்தத் துருபதராசனை நோக்கி, (நான்), அவையில் அரசர் கேட்ப - அவன்சபையி லுள்ள அரசர்களெல்லாங் கேட்கும்படி, 'சொன்ன வாய்மை நீயே சோர்ந்தாய் - சொன்ன வார்த்தையை நீயே தவறினாய்: யானே சோரேன் - நானோ தவறேன்; (எ - று.)—இச்செய்யுளில் 'துருபன்தன்னை' என்பதும், 'கேட்ப' என்பதும், அடுத்த செய்யுளில் வரும் 'என்றேன்' என்னும் முற்றைக் கொள்ளும். 'அன்ன நிருபன்' எனவும் பாடம்; நிருபன் - அரசன்.

அரசனோடு அரசனுக்கும் அந்தணனோடு அந்தணனுக்கும் நண்பு உண்டாதல் இயல்பே யன்றிச் செல்வம்நிரம்பிய அரசனுக்கும் வறுமைநிரம்பிய அந்தணனுக்கும் ஒருகாலும் நண்பு உண்டாகாது, ஒப்புமையாலன்றி வேற்றுமையால் நண்பு உண்டாமோ? என்னுங் கருத்துப்பட 'மன்னன்யான், நீமுனிவன், மரபால் எனக்கும் உனக்கும் என்னநண்புஉண்டு' என்றான். நகை - நகைத்தல்;

முதனிலைத்தொழிற்பெயர்; நகு - பகுதியெனக் கொண்டால், 'ஐ' விகுதிபெற்ற தொழிற்பெயராம். துருபன், அவை - த்ருபதன், ஸபா என்ற வடசொற்களின் விகாரம். துருபதனென்பது, யாகசேனனுக்கு வழங்கும் வேறொரு பெயர். நீ முன்பு எனக்குப் பாதியரசுகொடுப்பதாக வாக்குத்தத்தஞ்செய்ததை இப்பொழுது நிறைவேற்றாமல் தவறினையேயாயினும், நான் இப்பொழுது உன்விஷயமாகச் சொல்லும் சபதத்தைத் தவறாது நிறைவேற்றுவேன் என்பது, ஈற்றடியின் கருத்து. ஏ - பிரிநிலை. ஒ - தெரிநிலை. (சச)

புகன்றபடிநீயாளும்புவியும்பாதிகொள்வே
னிகன்றசமரிலுன்னையிரதத்துடனேகவர்வே
னகன்றமெய்ம்மையுடையாயறிதியென்றேனென்று
சுகன்றன்ஞானம்பெற்றதுரோணன்சொல்லக்கேட்டான்.

(இ - ள்.) அகன்ற மெய்ம்மை உடையாய் - நீங்கின உண்மையுடையவனே! புகன்ற படி - (நீ முன்பு எனக்குச்) சொன்னபடி, நீ ஆளும் புவியும் பாதி கொள்வேன் - நீ அரசாளும் நாட்டிலும் பாதியைக் கைக்கொள்வேன்; (அன்றியும்), இகன்ற சமரில் - பகைமைகொண்டுசெய்யும் போரில், உன்னை இரதத்துடனே கவர்வேன்-உன்னைத் தேர்க்காலுடனே கட்டிக் கைக்கொள்வேன்; அறிதி - (இதனை) அறிவாய்', என்றேன்-என்றுசொல்லிச் சபதஞ்செய்தேன், என்று—, சுகன்தன் ஞானம் பெற்ற துரோணன் சொல்ல - சுகமுனிவனுக்கு உள்ள தத்துவஞானம் போன்ற தத்துவஞானத்தைப் பெற்றவனான துரோணாசாரியன் சொல்ல, கேட்டான் - (வீடுமன் அதனைக்) கேட்டான்; (எ - று.)

புவியும் என்ற உம்மை - எதிரது தழுவிய எச்சப் பொருளது. சமர் - ஸமரமென்ற வடசொல்லின் விகாரம். இரதம் - ரத மென்ற வடமொழி ரகரத்துக்கு முன் இகரம் பெற்றது; "ரவ்விற் கம்முதலா முக்குறிலும்." அகன்ற மெய்ம்மையுடையாய் என்றது, வடமொழிநடை; சத்தியத்தை விட்டவனே யென்று கருத்து. அறிதி யென்ற ஏவலொருமைமுற்றில், த் - எழுத்துப்பேறு. ஜ்ஞாநம்-வடசொல். புகன்ற, இகன்ற, அகன்ற புகல், இகல், அகல் - பகுதி.

சுகன் - வியாசமுனிவனது புத்திரன்; அவ்வியாசபகவானினும் மேம்பட்ட வைராக்கியத்தையும் உண்மையுணர்வையும் உடையவன்; பகவானது அம்சமானவன்; பரமபாகவதர்களில் ஒருவன்; சுகப்பிரஹ்மமென்று சிறப்பித்துக் கூறப்படுபவன். "சுகனிகர் துரோணனொடு" என மேற் பதின்மூன்றும் போர்ச்சருக்கத்திலும் துரோணனுக்குச் சுகனை உவமைகூறுதல் காண்க. (சரு)

கௌரவ பாண்டவரை வீடுமன் துரோணனிடம் ஒப்பித்தல்.

கேட்டவரசனழைக்கக்கிருபனுடன்வந்திறைஞ்சும்
பூட்டுவரிவிற்றடக்கைப்புதல்வர்புதல்வர்தம்மைக்
காட்டிநீயேயிவரைக்கடிதிற்படைமைக்கல்வி
மூட்டிநின்வஞ்சினமுமுடித்தியென்றுமொழிந்தான்.

(இ - ள்.) கேட்ட - (இங்ஙனந் துரோணன் சொல்லக்) கேட்ட, அரசன் - வீடுமன், அழைக்க - வரவழைத்ததனால், கிருபனுடன் வந்து இறைஞ்சும் - (ஆசி

ரியனாகிய) கிருபாசாரியனுடனே வந்துவணங்கின, பூட்டு வரி வில் தட கை புதல்வர் புதல்வர்தம்மை - நாணேற்றிய கட்டமைந்த வில்லையேந்திய பெரிய கையையுடைய தனதுபேரப்பிள்ளைகளை, காட்டி - (அவ்வீடுமன் துரோணனுக்குக்) காண்பித்து, 'நீயே இவரை கடிதில் படைமை கல்வி மூட்டி - (இனி) நீயே இவர்களுக்கு விரைவில் ஆயுதவித்தையைக் கற்றுக்கொடுத்து, நின் வஞ்சினமும் முடித்தி - (இவர்களைக்கொண்டு) உன்சபதத்தையும் முடித்துக்கொள்வாய்,' என்று மொழிந்தான் - என்றுசொன்னான்; (எ - று.)

'கிருபனுடன் வந்திறைஞ்சும்' என்றதனால், இனித்துரோணனைக்கொண்டு கல்விகற்பித்தற்கு முந்திய ஆசிரியனான கிருபனை வருவித்து அவனது உடன் பாடுபெற்றமை தொனிக்கின்ற தென்னலாம். புதல்வர் புதல்வர் - தன்தம்பியான விசித்திரவீரியனது குமாரர்களாகிய திருதராட்டிரன் பாண்டு என்பவரது புத்திரர்கள். கடிது - கடுமையென்னும் பண்பினடியாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்றெச்ச வினையுரி; இன் - சாரியை. படைமையென்பதில், 'மை' விகுதி - வேறு பொருளுணர்த்தாததனால், பகுதிப்பொருள் விகுதியாம். காட்டு, மூட்டு - காண், மூள் என்பவற்றின் பிறவினை; டு-விகுதி. வஞ்சினம் - துருபதனரசிற் பாதிகொள்ளலும், அவனை உயிரோடு கட்டிக்கொணர்தலும். அரசன் - ராஜந் என்ற வடசொல்லின் திரிபு. (சசு)

அரசர்க்குஉரிய வரிசைகளை வீடுமன் துரோணனுக்கு அளித்தல்.

முனிநீ யையா விதற்கு முன்ன மின்று முதலா
வினியிவ் வுலகுக் கரசா யெம்மி லொருவ னாகிக்
குனிவில் வலியா லமருங் கோடி யென்று கொடுத்தான்
பனிவெண் குடையு நிருபர்க் குரிய வரிசை பலவும்.

(இ - ள்.) 'ஐயா - சுவாமீ! இதற்கு முன்னம் முனி நீ - இதற்குமுன்பு நீ அந்தணன்: இன்று முதல் ஆ - இன்றைத்தினம் முதற்கொண்டு, இனி - இனிமேல், (நீ), இ உலகுக்கு அரசு ஆய் - இந்த இராச்சியத்துக்குத் தலைவனாய், எம்மில் ஒருவன் ஆகி - எங்களில் ஒருத்தனாய், குனி வில் வலியால் அமரும் கோடி - வளைந்த வில்லின் வலிமையாற் போர்செய்தலையும் மேற்கொள்வாய்,' என்று - என்றுசொல்லி, (வீடுமன் துரோணனுக்கு), பனி வெள் குடையும் - குளிர்ச்சி தரும் வெண்கொற்றக் குடையையும், நிருபர்க்கு உரிய வரிசை பலவும் - அரசர்க்குஉரிய மற்றும்பல சிறப்புச்சின்னங்களையும், கொடுத்தான்—; (எ - று.)

'மாணாக்கரது உடைமை யெல்லாம் குருவுக்கு உரியன' என்ற கருத்தால், 'இவ்வுலகுக்கு அரசாய்' என்றான். 'குருகுலத்தவர்க்கு இராச்சியம் முதலிய செல்வம் எவ்வளவு உண்டோ, அவ்வளவுக்கும் நீயே அரசன்' என்று வீடுமன் துரோணனுக்கு உபசாரமொழிகூறினதாக முதனூல் கூறுவதையும் உணர்க. அரசு - உயர்திணைப்பொருள்தரும் அஃறிணைச்சொல். அமர் - ஸமரமென்ற வடசொல் திரிந்தது. கோடி-ஏவலொருமைமுற்று; கொள்-பகுதி, முதல் நீண்டது - விகாரம், இ - விகுதி, த் - எழுத்துப்பேறு, தகரம் டகரமானதும் ளகரம் கெட்டதும் - சந்தி. நிருபர் - வடசொல்; மனிதரைக் காப்பவர். வரிசைபல - தேர்,கொடி,

விருது, கழல் முதலியன. "படையுங் கொடியுங் குடையும் முரசும், நடைநவில் புரவியும் களிறுந் தேரும், தாரும் முடியும் நேர்வன பிறவும், தெரிவுகொள் செங் கோலரசர்க்குஉரிய" என்ற தொல்காப்பியச்சூத்திரங் காண்க. ஆர்ய என்னும் வட சொல் ஐயனெனத்திரிந்து ஐயாஎன விளியேற்றது; சிறந்தவனென்று பொருள்.

வேறு.

கௌரவ பாண்டவர் அதுமுதல் துரோணனிடம் கல்விதேர்தல்.

அன்றுமுத லாகவரி வெஞ்சிலைமு தற்படைக ளானவைய னைத்து மடைவே, தொன்றுபடு நூன்முறையின் மறையினொடு திட்டிரசு யோ தனர்க ளாதியெவரு, மொன்றியது ரோணனரு ளாலும்வலி யாலுமுய ருணர்வுடைமை யாலு முதலே, நின்றகுறை யாலுமொரு வர்க்கொரு வர் கல்வியினி ரம்பினர்வ ரம்பி னிதியோர்.

(இ - ள்.) வரம்பு இல் நிதியோர் - எல்லையில்லாத செல்வங்களையுடையவர் களான, உதிட்டிர சுயோதனர்கள் ஆதி எவரும் - தருமபுத்திரனும் துரியோதன னும் முதலிய ஐவரும் நூற்றுவரும்,—அன்று முதல் ஆக - அந்தநாள்முதலாக, ஒன்றிய துரோணன் அருளாலும் - (தங்களிடத்துப்) பொருந்திய துரோணாசாரி யனது கருணையினாலும், வலியாலும் - தங்கள் உடல்வலிமையாலும், உயர்உணர்வு உடைமையாலும் - (தாங்கள்) சிறந்த இயற்கையறிவையுடைமையாலும், முதலே நின்ற குறையாலும் - முற்பிறப்பிலே கற்றுநின்ற சேஷத்தாலும்,—வரி வெம் சிலை முதல் படைகளானவை அனைத்தும் - கட்டமைந்த பயங்கரமான வில்முத லிய ஆயுதங்க ளெல்லாவற்றிலும், கல்வியின் - (அவற்றின்) சாஸ்திரத்திலும், தொன்று படு நூல் முறையின் - பழமைபொருந்திய நூல்களிற் கூறிய முறைப் படியே, மறையினொடு - (அஸ்திரங்களுக்கு உரிய) மந்திரங்களோடு, அடைவே - முறைமையாக, ஒருவர்க்கு ஒருவர் நிரம்பினர் - ஒருத்தர்போலவே அனைவரும் தேர்ச்சியுற்றார்கள்; (எ - று.)

படைக ளானவை யென்பதில், ஆனவை யென்பது - பகுதிப்பொருள் விகுதி. அத்தனைத்து என்பதன் மரூஉவாகிய அனைத்து என்பது - விகுதிபற்றி ஒருமையாயினும் பகுதிபற்றிப் பன்மைப்பொருளையே குறிக்கும். தொன்று - பண்புப்பெயர்; தொல் - பகுதி, று - விகுதி: மைவிகுதி பெறுகையில், தொன் மையென நிற்கும். பஞ்சுகொண்டு நூல்நூற்கப்படுதல்போலச் சொற்கொண்டு யாக்கப்படுதலாலும், மரம்முதலியவற்றின் கோணலைத் தீர்க்கும் எற்றுநூல்போல மனத்தின் மாறுபாட்டை யொழித்தலாலும், நூலென்பது - சாஸ்திரத்துக்கு, உவமையாகுபெயராகிய காரணக்குறி. மந்திரம், பிரயத்தின பூர்வமாக மறைக்கத் தக்கதாதலால், மறையென்று பெயர்பெறும்; செயப்படுபொருள்விகுதி புணர்ந்து கெட்டது. பாண்டவ கௌரவர்க்குத் தலைமைபற்றி, யுதிட்டிரனையும் சுயோதன னையும் எடுத்தார். உதிட்டிர சுயோதனர் - உயர்திணை யும்மைத்தொகை பன்மை யீறுபெற்றது; கள் - விகுதிமேல்விகுதி.

ஒன்றிய அருளென இயையும்: ஒன்றியதுரோணனென்று எடுத்து, தமக்கு ஏற்ற நல்லாசிரியனாகப் பொருந்திய துரோண னெனினுமாம். துரோணனருளை

முன்வைத்ததனால், மாணாக்கர் கல்விநிரம்புதற்கு ஆசிரியனதுகருணையே முக்கியமாகவேண்டுவதென்பது பெறப்படும், 'முயலுணர்வு' என்று பாடமோதி, ஊக்கம்விளக்கும் அறிவென்று உரைப்பாருமுளர். "ஒருமைக்கட் டான்கற்றகல்வி யொருவற்கு, எழுமையு மேமாப் புடைத்து" என்றபடி ஒருவன் ஒரு பிறப்பிற் கற்ற கல்வி வினைபோல அவனுயிரோடு தொடர்புடைத்தாய் அவனது மறுபிறப்புக்களிலுஞ்சென்று உதவுதலாலும், "தவமுந் தவமுடையார்க்காகும் அவமதனை, அஃதிலார் மேற்கொள்வது" என்றாற்போல அறிவும் ஆற்றலு முடையராய்க் கல்விமுற்றக்கற்றல் முற்பிறப்பிற் பரிசயமுடையார்க்கன்றி முடியாததலாலும், 'முதலேநின்ற குறையாலும்' என்றார்; இனி, இதற்கு - முதலிற் கிருபாசாரியனிடத்துக் கற்றுநின்ற சேஷத்தாலும் என்று உரைத்தலும் ஒன்று. பெருஞ்செல்வராயுள்ள இராசகுமாரர்கள் செல்வச்செருக்கின்றிக் கல்விப்பிரியமுடையராய் "உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்" என்றபடி செல்வர் முன் வறியவர் நிற்குமாறுபோல அடங்கி யொடுங்கி வணங்கி நின்று ஆசிரியனைவழிபட்டு அவனருள்பெற்றுக் கல்விநிறைந்தனர் என்பது விளங்க, 'வரம்பினிதியோர்' என்றார். 'கல்வியுநிரம்பினர்' என்ற பாடத்துக்கு- இயல்பிலேபொருட்செல்வம்நிறைந்தவர் இப்பொழுது கல்விச்செல்வமும் நிறைந்தனரென்க.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - பெரும்பாலும் முதலைந்து சீர்களும் விளங்காய்ச்சீர்களும், மற்றையிரண்டும் மாச்சீர்களும் ஆகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள். (சஅ)

அவர்களில் அருச்சுனன் சிறந்து துரோணர்க்குப்பிரியனாதல்.

வெஞ்சிலையினு லிவனிராகவனையொக்குமென விசயன்விசயத்தின் மிகவே, யெஞ்சியகுமாரர்கள் பொறாமையின் மிகுந்தனர்க ளிரவியெதிர் மின்மினிகள்போ, லஞ்சொன்முனிதானு மிவன்மேலெவரினும் பெருக வன்புடையனாகியகலா, னெஞ்சுறவருங்கலைகள்கற்குமவர்தம்மளவினேய நிகழாதவர்கள்யார்.

(இ - ள்.) விசயன் - அருச்சுனன்,—வெம் சிலையினால் இவன் இராகவனை ஒக்கும் என - (பகைவர்க்குக்) கொடிய வில்லின் தேர்ச்சியால் இவன் இராமபிரானைப்போல்வானென்று (அனைவரும்) சொல்லும்படி, விசயத்தில் மிகவே - கல்வித்தேர்ச்சியில் மேம்படவே,—(அதுகண்டு), எஞ்சிய குமாரர்கள் - ஒழிந்த துரியோதனாதியர்கள், இரவி எதிர் மின்மினிகள்போல் - சூரியனெதிரில் மின்மினிப் பூச்சிகள் போலாகி, பொறாமையில் மிகுந்தனர்கள் - (இவனிடத்துப்) பொறாமை கொள்ளுதலில் மேம்பட்டார்கள்: அம் சொல் முனி தானும் - அழகிய சொற்களையுடைய துரோணாசாரியனும், எவரினும் பெருக இவன்மேல் அன்பு உடையன் ஆகி - மற்றை மாணாக்கரெல்லோரிடத்தினும்பார்க்க இவ்வருச்சுனனிடத்தில் மிக அன்புடையவனாய், அகலான் - (அந்த அன்பினின்று என்றும்) நீங்காதவனானான்; அரு கலைகள் நெஞ்சு உற கற்குமவர்தம் அளவில் - அரியகல்விகளை மனத்தில் ஊன்றப் படிக்குமவரிடத்து, நேயம் நிகழாதவர்கள் - அன்பு கொள்ளப் பெறாத ஆசிரியர், யார் - யாவர் உளர்? [எவரும் இல்லை என்றபடி]; (எ - று.)

மற்றையோரினுங் கல்வியில் நன்குதேர்ந்த அருச்சுனனிடம் துரோணன் மற்றையோரிடத்தினும் மிக்க அன்புவைத்தானென்ற சிறப்புப்பொருளை, நன்குக் கல்விதேர்பவரிடம் அன்புகொள்ளுதல் ஆசிரியர்க்கு இயல்பேயென்ற பொதுப் பொருள்கொண்டு விளக்கியதனால், வேற்றுப்பொருள்வைப்பணி; [அர்த்தாந்தர ந்யாஸாலங்காரம்.] ஸ்ரீமகாவிஷ்ணுவின் எழாவது அவதாரமாய்த் தசரதகுமார னாய்த்தோன்றிய ஸ்ரீராமன் ஒத்தாரும் மிக்காரும் இல்லையாம்படி தநுர்வேதத்தில் தேர்ந்து கோதண்டராமனென்று பிரசித்திபெற்றதனால், அப்பெருமானை உவமை கூறினர். விசயன் தனக்கு உரிய விசயத்தில் மிகத் துரியோதனாதியர் தமக்கு உரியபொருமையில் மிக்கார்கள் என அவரவரியல்பு தோன்ற வேறுபாடு எடுத் துக்காட்டியவாறு. பற்குநன், பார்த்தன், கிரீடி, சுவேதவாகநன், பீபற்சு, விசயன், கிருஷ்ணன், சவ்வியசாசி, தநஞ்சயன், நரன் என்பன - அருச்சுனனது மறு பெயர்களாம். விஜயனென்ற பெயர்-விசேஷமான வெற்றியையுடையவனென்று பொருள்படும்; தன்னைச் சயிப்பவர் எவருமில்லாதவனென்று பொருள் கூறலும் உண்டு.

இவன் இராகவனை ஒக்கும் - செய்யுமென்முற்று, ஆண்பாலுக்கு வந்தது; [நன் - வினை - உக.] ரவி, கலா - வடசொற்கள். மின்மினி - காரணப்பெயர். உவமை - அருச்சுனன்முன் சிறிதும் ஒளிபெருது நிற்றலை விளக்கும். எற்புழிக் கோடலென்ற உத்தியால், 'எஞ்சிய குமாரர்கள்' என்றது, துரியோதனாதியரையே குறிக்கும்; தருமன் முதலிய மற்றைப்பாண்டவர் நால்வரும் பொருமைக்கு உரியாரன்மை உணர்க. 'இரவியெதிர் மின்மினிகள்போல் பொருமையில் மிகுந்த னர்கள்' என்றது, தமக்கும் அவனுக்கும் சிறிதும் ஒப்புமையில்லாமல் மிக்கவேறு பாடு இருக்கையிலும் பொருமையுற்ற தன்மையை உணர்த்தியபடி. சொல்லுக்கு அழகு - சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல் முதலியன. 'அகலான்' என்ற தனால், அருச்சுனனைத் துரோணன் அந்தரங்கசிஷ்யனாக்கிக்கொண்டமை விளங் கும். வருங்கலைகள் என்றும் பிரித்து உரைக்கலாம். நெஞ்சுற வருங்கலைகள் கற் றல் - "செவி வாயாக நெஞ்சுகளனாகக், கேட்டவை கேட்டவை விடாது உளத்து அமைத்தல்". 'நேயமகிழாதவர்' என்ற பாடத்துக்கு - அன்போடு மகிழ்ச்சிகொள் ளாதவரென்று பொருள். யார் என்ற வினா, எதிர்மறையுணர்த்திற்று. (சக)

ஏகலவ்ய னென்ற வேடனது செய்தி.

ஏகலைவனென்றொருகிராதன் முனியைத்தனியிறைஞ்சி யிவனேவ லின்வழா, னாகலையடைந்து மிகுபத்தியொடு நாடொறு மருச்சுனனை யொத்துவருவான், மேகலைநெடுங்கடல்வளைந்த தரணிக்க ணொருவில்லி யெனவின்மையுடையான், மாகலைநிறைந்துகுருதக்கிணைவலக்கையினில் வல்விரல்வழங்கியுளனால்.

(இ - ள்.) ஏகலைவன் என்ற ஒரு கிராதன் - ஏகலவ்யனென்ற பெயரை யுடைய ஒருவேடன், முனியை தனி இறைஞ்சி - துரோணாசாரியனைத் தனியே வணங்கி, மிகு பத்தியொடு - மிக்கபக்தியுடனே, இவன் ஏவலின் வழான் ஆகலை அடைந்து - இத்துரோணனது கட்டளையினின்று தவருதவனாயிருத்தலை அடை

ந்து, (அவ்வழிபாட்டின் பயனால்), நாள்தோறும் அருச்சுனனை ஒத்துவருவான் - தினந்தோறும் (கல்வித்தேர்ச்சியில்) அருச்சுனனை ஒத்துவருபவனாய், மேகலை நெடு கடல் வளைந்த தரணிக்கண் ஒருவில்லி என வின்மை உடையான் - மேகலை யென்னும் இடையணியாகப் பெரியகடலாற்சூழப்பட்ட பூமியிலே ஒப்பற்றதனி வில்வீரனென்று (அனைவரும் தன்னைச்) சொல்லும்படி விற்றொழில் வன்மை யுடையவனாகி, மா கலை நிறைந்து - பெரிய தநுர்வித்தை முழுவதும் நிரம்பப் பெற்று, (பின்பு), குரு தக்கிணை - அந்தக்குருவுக்குத் தக்ஷிணையாக, வலக்கையி னில் வல் விரல் - (தனது) வலக்கைப் பெருவிரலை, வழங்கிஉளன் - கொடுத்திட் டான்; (எ - று.) — ஆல் - ஈற்றசை.

கீழ்க்கூறியபடி துரோணன் அருச்சுனனிடத்து மிக்க அன்பு கொண்டு அவனைநோக்கி'உன்னினும் மேம்பட்ட மாணாக்கர் எனக்கு எவரும் இல்லை'என்று கூறி அனைவர்க்கும் கல்விகற்றுக்கொடுத்துவருகையில், இரணியதநுஸ் என்ற வேடர்தலைவனது குமாரனான ஏகலவ்யனென்பவன் துரோணனையடுத்து 'என க்கு வில்வித்தை கற்றுக்கொடுக்கவேண்டும்' என்று கேட்க, அக்குரு, வேடனை மாணாக்கனாகக்கொள்ள விரும்பாமல் இராசகுமாரர்களுக்குத் தான்பயிற்றிவருவத னால் தனக்குப்பொழுதில்லையென்று சொல்லிவிட, அவன் வணங்கி விடைபெற் றுத் தான் இருக்கும் வனத்திற் சென்று தன்குடிசையில் துரோணனைப்போல ஒருபிரதிமை செய்துவைத்து அவ்வுருவையே துரோணனாகப் பாவித்துக் குரு வாகக்கொண்டு மிகுந்தபக்தியோடு அவ்விக்கிரகத்துக்குப் பூசைபண்ணி அப் பூஜையின்பலனால் அஸ்திர சஸ்திரப் பயிற்சிவகை யனைத்தும் தன் மனத்தில் தானேதோன்றப் பெற்றுத் துரோணனுக்குத் தெரியாமலே வில்வித்தையில் அருச்சுனனினும் தேர்ந்துவந்தான்; இங்ஙனம் இருக்கையில், துரோணன் கட் டளைப்படி வேட்டைக்குச்சென்ற குருகுலகுமாரர்கள் தம்முடன்சென்ற ஒரு நாயின்முகத்தில் ஒருவனால் ஒருங்கே ஏழம்புகள் பிரயோகிக்கப்பட்டமையைக் கண்டு வியந்து நாணி அங்ஙனம்பிரயோகித்தவனை நாடிக் கண்டு விசாரித்துத் துரோணசிஷ்யனென்று அறிந்து மீண்டு நகருக்குவந்து நிகழ்ந்தசெய்தியனைத் தையுங் குருவினிடம் கூறினர்; பின்பு அருச்சுனன் ஏகலவ்யனையே சிந்தித்தவ னாய் ஏகாந்தத்தில் துரோணனையடுத்து 'என்னினும் மேம்பட்ட சிஷ்யன் இல்லை என்று முன்பு நீசொல்லியிருக்க, இங்ஙனம் ஒருவன் உளனே' என்று குறைகூற, துரோணன் சிறிதுசிந்தித்துத் தேர்ந்து அருச்சுனனை அழைத்துக்கொண்டு ஏக லவ்யனிடம் வந்து, தன்னைவணங்கியுபசரித்த அவனை நோக்கி 'சிஷ்யனாகிய நீ குருவாகியஎனக்குத் தக்ஷிணைகொடுக்கக்கடவாய்' என்ன, அதற்கு அவன் 'என்ன வேண்டும்? கட்டளையிட்டது எதுவாயினும் கொடுப்பேன்' என்றவளவிலே, துரோணன் அருச்சுனனுக்கு முகோல்லாசமாக வேடனை நோக்கி 'உன் வலக் கைக் கட்டைவிரலைக் கொடுப்பாய்' என்றுகூற, ஏகலவ்யனும் வாக்குத்தவறாமல் மகிழ்ச்சியோடு அவ்விரலைத் துணித்துக் குருதக்ஷிணை கொடுத்தனன்; பின்பு அவன் மற்றையவிரல்களால் அம்புதொடுக்கமுயன்றும் முன்போலச் சிறப்புறா னாயினன்; அதனால் அருச்சுனன் மகிழத் துரோணனும் அருச்சுனனுக்கு முன்பு சொன்னசொல் தவறாதவனாயினன் என வரலாறு அறிக. மேல் அருச்சுனன் தவ நிலைச்சருக்கத்தில் வேடவடிவங்கொண்ட சிவபிரான் அருச்சுனனைநோக்கி "வீறிய

லெங் குலத்திலொரு வேடன்றன்னை வின்மைபொரு தவன்றடக்கை விரலுங் கொண்டாய்'' என்றுகூறுவதுங் காண்க. இவ்வரலாற்றால், குருபக்தியின்மகிமையும், துரோணன் அருச்சுனனிடம் வரம்புகடந்துவைத்திருந்த மிக்க பேரன்பும், பெரியோர் தம்வாய்மைகாத்தற்பொருட்டுச் செய்யும் முயற்சியும் வெளியாம்.

ஏகலவ்யன், பக்தி, அர்ஜுநன், மேகலா, தக்ஷிணா என்ற வடசொற்கள் திரிந்தன. கிராதன், தரணி - வடசொற்கள். தரணி - (எல்லாப்பொருள்களையுந்) தரிப்பது. அருச்சுன னென்பதற்கு - வெண்ணிறமுடையவ னென்று பொருள்; இது - முதலில், இந்நிறமுடைய கார்த்தவீரியமகாராசனுக்குப் பெயராயிருந்து, பின்பு, அவனைப்போன்ற சௌரியதைரியங்களையுடைய இப்பார்த்தனுக்கு இட்டு வழங்கப்பட்டது: இது - உவமவாகுபெயரின்பாற்படும். பார்த்தன் கருநிறமுடையவ னாதலால், அவனுக்கு அருச்சுன னென்பது - நிறம்பற்றிவந்த இயற்பெயரென்றல் பொருந்தாது. இனி, அருச்சுனன் என்பதற்கு - பசுமைநிறமுடையோ னென்று பொருள் கூறுவாரு முளர். அன்றியும், பார்த்தன் (பார்வதிபோல) முதலிற் பிறந்தபொழுது வெண்ணிறமுடையவனாயிருந்து பின்பு கருநிறமடைந்தா னென்று கூறலும் உண்டு. ஆகல் - தொழிற்பெயர்; ஆகு - பகுதி: ஆ - பகுதி யென்றால், கு - சாரியை. மேகலை - எண்கோவையிடையணி. பூமியைச்சூழ்ந்த கடலை, அப்பூமியாகிய பெண் அணியும் மேகலையணி யெனக் கூறுதல், கவிமரபு. என்றொரு - என்றவொரு என்பதன் தொகுத்தல்விகாரம். (கூ)

அருச்சுனன் வில்திறத்தின் சிறப்பு.

அங்குலிகமொன்றுபுனலாழ்தருகிணற்றில்விழ வந்தமுனிதேடுமி னெனப், புங்கமொடுபுங்கமுறவெய்திவனெடுத்தமைபுகன்றருகுநின்ற வரைநீ, ரிங்கிதனிலைத்தொகைகள்யாவுமுருவப்பகழி யேவுமினெனா முன்விசயன், றுங்கவில்வளைத்தொருகணத்தினில்வடத்திலைதுளைத்தன னிலக்கிறொடையால்.

(இ - ள்.) அங்குலிகம் ஒன்று-மோதிரமொன்று, புனல் ஆழ்தரு கிணற்றில்-ஆழ்ந்தநீரையுடையதொரு கிணற்றிலே, விழ - விழுந்திட,—அந்த முனி - துரோணாசாரியன், தேடுமின் என - (குருகுலகுமாரரை நோக்கி அதனை நீங்கள்) தேடியெடுங்க ளென்று சொல்ல,—(மற்றையோரால் இயலாமற்போகவே), இவன் புங்கமொடு புங்கம் உற எய்து எடுத்தமை - அருச்சுனன் அம்புடனே அம்பு பொருந்தும்படி பாணப்பிரயோகஞ்செய்து (அதனால் அம்மோதிரத்தை) எடுத்தமைக்கு, புகன்று - மகிழ்ந்து,—(துரோணன் பின்பு), அருகு நின்றவரை - பக்கத்தில்நின்ற அம்மாணாக்கரனைவரையும் நோக்கி, 'நீர் - நீங்கள், இங்கு - இங்குஉள்ள, இதன் - இந்தஆலமரத்தினது, இலை தொகைகள் யாவும் - இலைகளையெல்லாம், உருவ - ஊடுருவித் துளைக்கும்படி, பகழி ஏவுமின் - அம்புதொடுங்கள்', எனா முன்-என்று கட்டளையிடுமுன்னே [கட்டளையிட்டவுடனே, விரைவில் என்றபடி], (மற்றையோரால் ஆகாமற்போகவே), விசயன் - அருச்சுனன், துங்கம் வில் வளைத்து - சிறந்த தனதுவில்லை வளைத்து, இலக்கு இல் தொடையால் - எதிரில்லாத அம்பை எய்து அதனால், ஒரு கணத்தினில் வடத்து இலை துளைத்தனன் - ஒருகணப்பொழுதிலே அவ்வாலமரத்தின் இலைகளெல்லாவற்றையுந் துளைபடுத்தினான்; (எ-று.)

"செய்யுட்கு எற்புழி" [நன் - பொது - ௬௬] என்றபடி செய்யுளாதலின், 'இவன்' என்றும், 'இதன்' என்றும் சுட்டுப்பெயர்கள் முன்வந்தன; விஜயன், வடத்து என்ற இயற்பெயர்கள் பின்வருதல் காண்க. புகலல் - மகிழ்தலென்னும் பொருளதாதலை "புல்லார் புகல" எனச் சிந்தாமணியிலும், "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" எனப் புறநானூற்றிலுங் காண்க. இனி, புகன்று என்பதற்கு வியந்து பேசியென்று உரைப்பாரும் உளர். எனமுன் என்றது, விரவைக் காட்டும். இலக்கில் தொடை என்பதற்கு - அளவிறந்த அம்பென்று உரைத்தல் சிறப்பன்று. அங்குலிகம் - அங்குலீயக மென்ற வடசொல்லின் திரிபு; விரலில் அணியப்படுவ தென்பது அவயவப்பொருள்: அங்குலி - விரல். புங்கம், துங்கம்,வடம்- வடசொற்கள். கணம் - க்ஷண மென்ற வடசொல் திரிந்தது. தொடை - தொடுக்கப்படுவது; ஐ - செயப்படுபொருள்விகுதி. (௫௧)

அருச்சுனன் துரோணனை முதலையினின்று உய்வித்தல்.

முத்திமுனிதாளிணையைநீர்படிதடந்துறையின்முதலைகவர்வுற்ற தெனலுஞ், சித்திரவில்வீரர்பலருந்தமவெறுங்கையொடு சென்றருகு நின்றுவிடவே, பத்தியின்விரைந்துபொதுவேயிபமழைக்கவொரு பறவைமிசைவந்தநெடுமால், கைத்திகிரிபோல்கணையின்விசயனதனைப்ப ழையகார்முதலையிற்றுணிசெய்தான்.

(இ - ள்.) முத்தி முனி - வீடுபெறுதற்குஉரிய [ஞானவொழுக்கங்களிற் சிறந்த] துரோணாசாரியன், நீர் படி தட துறையில் - நீராடுகிற பெரியநீர்த்துறையிலே, தாள் இணையை - (தனது) கால்களிரண்டையும், முதலை கவர்வுற்றது - ஒருமுதலை பிடித்துக்கொண்டது, என்லும் - என்றுசொன்னவளவிலே, சித்திரம் வில் வீரர் பலரும் - அழகிய வில்லை யேந்திய வீரர்களான குருகுல குமாரர்கள் எல்லோரும், தம வெறு கையொடு - தங்கள்வெறுங்கைகளுடனே, அருகு சென்று - பக்கத்திற் போய், நின்றுவிடவே - திகைத்துச் சும்மாநின்றுவிட, விசயன் - அருச்சுனன்,—இபம் - ஒருயானை [கஜேந்திராழ்வான்], பத்தியின் - பக்தியோடு, விரைந்து - விரைவாக, பொதுவே அழைக்க - (ஆதிமூலமேயென்று) பொதுவாகக் கூப்பிட, (அதனைப் பாதுகாக்கும்பொருட்டு), ஒரு பறவைமிசை வந்த - ஒப்பற்ற கருடவாகனத்தின்மேல் ஏறிவந்த, நெடு மால் - பெருமைக்குணமுடைய திருமாலினது, கை - கையினால் எறியப்பட்ட, திகிரி - சக்கராயுதத்தை, போல் - ஒத்த, கணையின் - ஒருபாணத்தால்,—அதனை - அம்முதலையை, பழைய கார் முதலையின் - (அச்சக்கரம்பிளந்த) பழைய கரிய முதலையைப்போல, துணிசெய்தான் - பிளந்து தள்ளினான்; (எ - று.)

ஒருநாள் துரோணன் மாணாக்கர்களுடனே சென்று கங்கைத்துறையில் நீராடுகையில், வலியதொருமுதலை அவனது பாதங்களை முழங்காலளவும் பிடித்துக்கொள்ள, அவன்அதனை விடுவித்துக்கொள்ள வல்லவனாயினும், சிஷ்யர்களைப் பரீட்சிக்கும்பொருட்டு அவர் அனைவரையும் நோக்கி 'முதலையைக் கொன்று என்னை விடுவியுங்கள்' என்று விரைந்துகூற, மற்றையாவரும் இன்னது செய்வதென்று அறியாமல் திகைத்துநிற்க, உடனே அருச்சுனன் கூரிய சிறந்த அம்பு தொடுத்து முதலையைக் கொன்று குருவைக் காத்தனனென அறிக.

இனி, முதலடிக்கு - முனிவனது பாதத்தை முதலைகவர்ந்ததென்று சிலர் சொல்லவென்று உரைத்தல், முதனூலுக்கு முரணும். இங்ஙனம் துரோணனை முதலைவாயினின்று காத்த அருச்சுனனுக்கு, கஜேந்திரனை முதலைவாயினின்று காத்தருளிய திருமாலை உவமைகூறுவார், அவன் எய்த அம்புக்குத் திருமால் எறிந்த திருவாழியையும், இம்முதலைக்கு அம்முதலையையும் உவமைகூறினர்.

திருமால் யானைகாத்த கதை:— இந்திரத்யும்நனென்னும் அரசன் மிக்க விஷ்ணுபக்தியுடையவனாய் ஒருநாள் விஷ்ணுபூசைசெய்கையில், அகஸ்தியமகாமுனிவன் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவன் தன்கருத்து முழுவதையும் திருமாலைப்பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனால் அவ்விருடியின் வருகையையறிந்திடானாய் அவனுக்கு உபசாரமொன்றுஞ் செய்யாதிருக்க. அம்முனிவன், தன்னை அரசன் அலட்சியஞ்செய்தானென்று கருதிக் கோபித்து, 'நீ யானைபோலச் செருக்குற்றிருந்ததனால் யானையாகக்கடவை' என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒருகாட்டில் யானையாகத்தோன்றினனாயினும் முன்செய்தவிஷ்ணுபக்தியின் மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்களைக்கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசித்து வருகையில், ஒருநாள் பெரியதொரு தாமரைத்தடாகத்தில் அருச்சனைக்காகப் பூப்பறித்தற்குப்போய் இறங்கினபொழுது, அங்கே (முன் நீர்நிலையில் நின்று தவஞ்செய்துகொண்டிருந்த தேவலனென்னும் முனிவனது காலைப் பற்றியிழுத்து அதனாற்கோபங்கொண்ட அவனது சாபத்தால்) பெரியமுதலையாய்க்கிடந்த ஹூஹூ வென்னுங் கந்தருவன் அவ்யானையின் காலைக் கௌவிக்கொள்ள, அதனை விடுவித்துக்கொள்ள முடியாமல் கஜேந்திரன் ஆதிமூலமே யென்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனாய் அங்கு எழுந்தருளித் தனதுசக்கரத்தைப் பிரயோகித்து, முதலையைத் துணித்து, யானையை அதன்வாயினின்று விடுவித்து, இறுதியில் அதற்கு முத்தியை அருள்செய்தனன் என்பதாம். யானையும் முதலையு மானவர் குருகுலத்தரசர் இருவரென்றலும் உண்டு; "மீனமாகிய விண்ணவன் விநதை முன்பயந்த, யானமீதெழுந்தருளிவந் திருபதம் வழங்கக், கானநாண்மலர்க் கயத்திடைக் கயமும் வெங்கராவு, மான மானவ ரிருவரு மக்குலத்தவரே" என்ற குருகுலச்சருக்கச் செய்யுளைக் காண்க. கஜேந்திராழ்வான் ஆதிமூலமேயென்று பொதுப்படக் கூப்பிட்டபொழுது எம்பெருமானல்லாத பிறதேவரெல்லோரும் தாம்தாம் அச்சொல்லுக்குப் பொருளல்லரென்று கருதியொழிய, அதற்குஉரிய திருமால் தானேவந்து அருள்செய்தனனென நூல்கள் கூறும்; "அழைத்தது செவியிற் கேட்டும் அயனரனாதியாயோர், புழைக்கை வெங்கரிமுன் காப்பப் புகுந்தில ராதியாகித், தழைத்த காரணனேயென்ற தனிப்பெயர்ப்பொருள் யாமல்லோம், இழைத்தகாரியம் யாமாவோம் என்செய்துமால் இன்றென்றார்" என ஸ்ரீபாகவதத்திலுங் காண்க: "அண்டரெலாம் யா மூலமலே மென்றகல் போழ்திற், புண்டரிகக்கட் புண்ணிய னன்புள்ளரசின்மேற், கொண்டெதி ரெய்திக் கரியா செய்துங் கொடுவெங்நோய், கண்டுளெனக்கா னஞ்சலை யஞ்சேல் களிறென்னா" என்ற காஞ்சிப்புராணமுங் காண்க; "வாரணமேபொதுவே யொருபேரிட வந்தருளும்புயலே" என்பர் மேற் கிருட்டினன் தூதுசருக்கத்தும்.

இப்படிப்பட்ட மகிமையைக் கருதி 'நெடுமால்' என்றும், முதலைவாய்ப் பட்ட காலுக்கு யாதோருறுபாடுஞ் செய்யாது அதனைப்பற்றிய முதலையின் வாயையே துணித்துக் குறிக்கொண்டு காத்த திறத்தை வியந்து 'மால்கைத்திகிரி போல் கணை' என்றும் கூறினர். 'முத்திமுனி' என்பதற்கு - சீவன்முக்திநிலையி லுள்ள முனியென்றுங் கூறலாம்; அத்தன்மை, கீழ் சடு - ஆங் கவியில் சுகனை உவமைகூறியதனாலும் விளங்கும். தட - பெருமையுணர்த்தும் உரிச்சொல். தட + துறை=தடந்துறை; பொதுவிதிப்படி வலிமிகாமல் மெலிமிக்கது, உரிச்சொற் புணர்ச்சியாதலின். [நன் - மெய் - ௩௬.] முக்தி, சித்ரம், இபம் - வடசொற்கள். முக்தி - (உலகப்பற்றை) விட்டு அடையுமிடமென அவயவப் பொருள்படும். இங்கே, 'வீரர்' என்றது, இகழ்ச்சி. பறப்பது, பறவை; ஐ - கருத்தாப்பொருள் விகுதி; இங்கே, பொதுப்பெயர் சிறப்பாய், பக்ஷிராசனான கருடனைக் குறித்தது. போல்கணை - உவமவுருபிடைச்சொல் வினைத்தன்மைப்பட்டு வினைத்தொகையாய் நின்றது. கார் - கருமை யென்னும் பண்பின் விகாரம். முதலையின், இன் - ஒப்பு. தம, அ - ஆறனுருபு : கையென்ற பால்பகாவஃறிணைப்பெயர் இங்குப் பன்மை யாதலால், 'அ' என்ற ஆறனுருபு வந்தது; "ஆறனொருமைக்கு அதுவும் ஆதுவும், பன்மைக்கு அவ்வும் உருபாம்." மால் - பெருமை, மாயை, விருப்பம் இவற்றை யுடையவன். (௩௨)

துரோணன் அருச்சுனனுக்கு ஒருசிறந்த அஸ்திரம் அளித்தல்.

ஒருதனுவினலிதயமகிழ்குருவினுக்கிவனுமுயிருதவினனுதவலுங், குருவுமிவனுக்கு நிலையாலுமறையாலும் வலிகூர்பகழியொன்றுதவின, னிருவருநயந்தருளும் வினயமுமிகுந்தனர்க ளின்னுயிருமனமுமென மேன், மருவிவருநல்வினைவயத்தின்வழிவந்தபயன் மற்றொருவருக்கு வருமோ.

(இ - ள்.) இவனும் - இந்த அருச்சுனனும், இதயம் மகிழ் குருவினுக்கு - (தன்னிடத்து) மனமகிழ்ச்சிகொண்ட குருவாகிய துரோணனுக்கு, ஒரு தனுவினால் - ஒப்பற்ற வில்லின் திறத்தைக்கொண்டு, உயிர் உதவினன் - (இவ்வாறு) உயிரைப் பாதுகாத்தான் ; உதவலும் (இங்ஙனம்) உயிர்கொடுத்தவளவிலே, குருவும் - (மிகமகிழ்ச்சிகொண்ட) துரோணனும், இவனுக்கு - அருச்சுனனுக்கு, நிலையாலும் மறையாலும் வலி கூர் பகழி ஒன்று உதவினன் - நிலையினாலும் மந்திரத்தினாலும் வலிமைமிக்க ஓர் அஸ்திரத்தைக் கொடுத்தருளினன்; (இப்படிஒருவர்க் கொருவர் சிறந்தபொருளைக்கொடுத்து), இருவரும் - (துரோணனும் அருச்சுனனுமாகிய) இவ்விருவரும், இன் உயிரும் மனமும் என - இனியஉயிரும் மனமும் போல, (ஒற்றுமைப்படக்கலந்து), நயந்து - (ஒருவரையொருவர்) விரும்பி, அருளும் வினயமும் மிகுந்தனர்கள் - கருணையிலும் வணக்கத்திலும் மிகுந்தார்கள் ; மேல் மருவிவரும் - முற்பிறப்பிற் செய்யப்பட்டுத் தொடர்ந்துவருகிற, நல்வினை வயத்தின் - புண்ணியவசத்தால், வழிவந்த - பிற்பிறப்பில்நேர்ந்த, பயன்-பிரயோசனம், மற்று ஒருவருக்கு வருமோ - (இவ்விருவர்க்கும்போல) வேறெவர்க்கேனும் சித்திக்குமோ? [சித்தியாதுஎன்றபடி] ; (எ - று.)

மாணாக்கர்க்கு நல்லாசிரியர் கிடைத்தல்போலவே ஆசிரியர்க்கு நன்மாணாக்கர் கிடைத்தலும் முன்னை நல்வினைப்பயனே யென்பது, இதனால் விளங்கும். அருச்சுனன்போலக் குருவின்உயிரைப் பாதுகாக்கும் சிஷ்யனும், துரோணன் போல அச்சிஷ்யனுக்குச் சிறந்தஅஸ்திரத்தைப் பரிசளிக்குங் குருவும் வேறு எவரும் இலரென்று வியந்து 'மற்றொருவருக்கு வருமோ' என்றார். முன் இரண்டு அடிகளில் ஒருவர்க்கொருவர் பொருள்கொடுத்தமை கூறியதனால், பரிவர்த்தநாலங்காரம்; இது தமிழில் பரிமாற்றவணி யென்றும், மாறாட்டணி யென்றும், மாற்றுநிலையணி யென்றும் வழங்கும்: "பொருள் பரிமாறுதல் பரிவருத்தனையே" என்று இதன்இலக்கணங்கூறினர் தண்டியாசிரியர். குரு அருளிலும், மாணாக்கன் விநயத்திலும் மிக்கனரென்றும், குரு உயிரும், மாணாக்கன் மனமும் போல்வா னென்றும் முறையே இயைந்து பொருள்படுதலால், மூன்றாமடி - முறைநிரனிறைப்பொருள்கோள்: [நன் - பொது - ௬௬.]

நிலை - விற்பிடித்து அம்பினை எய்வார் நிற்றற்குஉரிய நிலை. அது-பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரதியாலீடம் என நான்குவகைப்படும். இவற்றுள், ஒருகால் நின்று ஒருகால்முடக்கல், பைசாசநிலை. இருகாலும் பக்கல்வளையமண்டலித்தல், மண்டலநிலை. வலக்கால் மண்டலித்து இடக்கால் முந்துறல், ஆலீடநிலை. வலக்கால்முந்துற்று இடக்கால்மண்டலித்தல், பிரதியாலீடநிலை. இங்கு அருச்சுனனுக்கு அளிக்கப்பட்ட அஸ்திரம் பிரமசிரஸ் என்னும் பெயருடையதென முதனூலால் விளங்கும்; அது - தடுக்கவொண்ணாதது, ஒப்புயர்வற்றது.

உயிரும் மனமும் என்ற உவமை, இன்றியமையாத் தொடர்பு விளக்கும். நான்காம் அடியில் - அருச்சுனனுக்கு இருந்ததுபோன்ற நல்வினை மற்றைநூற்றுவர்க்கும் இல்லாமை வெளியாம்.

தனு, இதயம், வினயம், பயன் - தநுஸ், ஹ்ருதயம், விநயம், பலம் என்ற வடசொற்களின் சிதைவு. இன்னுயிர் - இனிமை யென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் இடைஇகரமுங் கெட்டது. ஒருதனுவினால் உதவினானென இயையும். ஒரு தனுவினால் இதயமகிழ் என எடுத்து, ஒப்பற்ற தனது வில்லின்திறத்தைக் கண்டு அதனால் மனமகிழும் என்று உரைப்பினுமாம். ஈற்று ஓகாரம் - எதிர்மறை. ஒருவர் - ஒருமைப்பொருளுணர்த்தும் பன்மைப்பெயர். (௫௬)

துரோணன் மாணாக்கர்கல்வியை அனைவர்க்குங் காட்டலுறல்.

சிலைக்குருவிறற்குருகுலக்குமரருக்குவருசிரமநிலைகாண்மினெனவே, யலைத்தலைநிலாவெழுசரிற்புதல்வனுக்குநல்லறக்கடவுளுக்குமுரையா, நிலைப்படுவிசாலமணியணிதிகழரங்கின்மிசைநிகழ்பலிகொடுத்தரியுடன், கலைப்புரவியூர்திருவையுந்தொழுதுபுக்கனனகத்துணர்வுமிக்ககலையோன்.

(இ - ள்.) அகத்து உணர்வு மிக்க - மனத்தில் அறிவுமிகுந்த, கலையோன் - எல்லாக்கல்வியையு முணர்ந்தவனாகிய, சிலை குரு - வில்லாசிரியனான துரோணன்,—'விறல் குருகுலம் குமரருக்கு வரு - வலிமையையுடைய குருகுல குமாரர்களுக்குக் கைவந்த, சிரமம் நிலை - ஆயுதப்பயிற்சியின் நிலைமையை, காண்மின்-

பாருங்கள்', என - என்று, அலை தலை நிலா எழு சரித் புதல்வனுக்கும் - அலைகள் ஒருநிலையில் நில்லாமல் மேன்மேல் மிக்கு எழப்பெற்ற கங்காநதியினது குமாரனை வீடுமனுக்கும், நல் அறம் கடவுளுக்கும்-சிறந்த யமதருமராசனது அம்சமான விதுரனுக்கும், உரையா-சொல்லி,—நிலைப்படு விசாலம் மணி அணி திகழ் அரங்கின்மிசை - நிலையாகப் பதிக்கப்பட்ட பெரிய இரத்தினங்கள் அழகுவிளங்கப் பெற்ற யுத்தரங்கத்திலே,—நிகழ் பலி கொடுத்து - கொடுத்தற்குஉரிய பலியைக் கொடுத்து,—அரியுடன் கலை புரவி ஊர் திருவையும் தொழுது - சிங்கத்துடனே கலைமானாகிய வாகனத்தை ஏறிநடத்துகிற துர்க்கையை வணங்குதலுஞ்செய்து, புக்கனன் - பிரவேசித்தான்; (எ - று.)

அரங்கின்மிசை புக்கனன் என்க. அரங்கு - ரங்க மென்ற வடசொல்லின் திரிபு; இது - படைக்கலத்திறங்காட்டுதற்கு இடமாக நிருமிக்கப்பட்டது. பலி கொடுத்து என்றது, சில விலங்குகளைப் பலியிடுதலே யன்றி மற்றும் உரியபூசைகள் செய்தலையுங் குறிக்கும். துர்க்கை படைக்கலங்கட்கும் போருக்கும் உரிய தலைவி யாதலால், அத்தெய்வத்தைத் தொழுதான். துர்க்கைக்குச் சிங்கமும் கலைமானும் வாகனமாதலை, அவளது 'அரியேறி,' 'கலையூர்தி' என்ற பெயர்களாலும் அறிக. ச்ரமம், ஸரித், விசாலம், பலி-வடசொற்கள். நிலா-நில்லாமல்; ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம். சரித் - நதி. 'அலைக்கலை நிலாவெழு கதிர்ப் புதல்வருக்கும்' என்ற பாடத்துக்கு - தனக்கு உரிய பதினாறுகலைகளோடும் தனது ஒளியாகிய நிலாவினுடனும் கடலினின்று உதிக்கிற சந்திரனென்னுஞ் சுடரினது குலத்திற் பிறந்த குமாரர்களான வீடுமனுக்கும் திருதராட்டிரனுக்கும் எனப் பொருளாம். புரவி யென்ற குதிரையின் பெயர், வாகனமென்றமாத்திரமாய் நின்றது; சிறப்புப்பெயர் பொதுப்பொருள் குறித்தது. 'மகளிர்யாவரும் இலக்குமியின் சொரூபம்' என்ற சித்தாந்தத்தைத் தழுவி, துர்க்கையை 'திரு' என்றார். திருமகளின் பெயர் மகளென்றமாத்திரமாய் நின்றதென்றுங் கொள்ளலாம். அன்றியும், துர்க்கைக்கு வீரலக்ஷ்மி யென்று ஒருபெயரும் உண்டு. திருவையும் என்ற எச்சவும்மையால், மற்றும் தனது ஆசிரியர் முதலிய வணங்கத்தக்காரையும் வணங்கினனெனக் கொள்ளலாம். யுத்தரங்க பூமியிற் புகும்பொழுது வேண்டியபலி கொடுத்துத் துர்க்கையை வணங்கிச்செல்லுதல், மரபு. அரியுடன் தொழுது என எடுத்து, திருமாலையும் வணங்கியெனக் கொள்ளுதலும் உண்டு. அரங்கின்மிசை, மிசை - எழனுருபு. (௧௪)

அந்த யுத்தரங்கபூமியில் அனைவரும் வந்துசேர்தல்.

புரியிலறிவோர்சனபதத்திலறிவோர்புவிபுரக்குமவர்தம்மிலறிவோர்,
வரிபடவயங்குகொடிமஞ்சவிதமெங்கணும்வனப்புறவிருந்தபொழுதிற்,
றெரிவுறுவிமானமனைதோறுமுறைதேவர்பலர் சித்தர்முதலோர்பலரொ
டுங், கரியநெடுமால்பிரமனிந்திரன்முதற்பலர்கலந்தவகல்வானிகருமே.

(இ - ள்.) புரியில் அறிவோர் - நகரத்திலுள்ள அறிஞர்களும், சனபதத்தில் அறிவோர் - நாட்டிலுள்ள அறிஞர்களும், புவி புரக்குமவர்தம்மில் அறிவோர் - பூமியை ஆளும் அரசர்களில் அறிஞர்களாயுள்ளவர்களும், (ஆகிய அனைவரும்) வரி பட வயங்கு கொடி மஞ்ச விதம் எங்கணும் - (அந்த ரங்கபூமியில் அமைக்கப்

பட்டு) வரிசைப்படவிளங்குகிற ஒழுங்கான ஆசனங்களின் வகைகளிலெல்லாம், வனப்பு உற இருந்த பொழுதில் - அழகுபொருந்த வீற்றிருந்தசமயத்தில்,—(அச்சபையானது),—தெரிவுறு விமானம் மனைதோறும் - விளங்குகிற விமானங்களாகிய மாளிகைகளில், உறை - வசிக்கிற, தேவர் பலர் - தேவர்கள்பலரோடும், சித்தர் முதலோர் பலரொடும்-சித்தர்கள் முதலிய தேவகணத்தவர் பலரோடும், கரிய நெடு மால் பிரமன் இந்திரன் முதல் பலர் - கருமைநிறமும் பெருமைக்குணமுமுடைய திருமாலும் பிரமனும் இந்திரனும் முதலிய பல சிறந்த தேவர்கள், கலந்த - வந்துசெறியப்பெற்ற, அகல் வான் - பரந்தஆகாயத்தை, நிகரும்-ஒக்கும்; (எ - று.)

உவமையணி. மிகப்பரந்த ரங்கபூமிக்கு வானமும், மஞ்சங்கட்கு விமானங்களும், அங்குவந்த அறிவுடையோர்க்குத் தேவர்களும் உவமை யெனக் காண்க. ஜநபதம் - வடசொல்; சனங்கள் வசிக்குமிட மென்று பொருள்படும். 'அறிவோர்' என்றது, இங்கு, யானை குதிரை தேர் படைக்கலம் என்றவற்றின் நூல்களை யறிந்தவரைக் குறிக்கும். 'வரிபடவியங்குகொடி' என்ற பாடத்துக்கு - வரிசைப்பட அசைகிற துவசங்கள் கட்டிய என்று பொருள். மஞ்சவிதம், விமாநம், தேவர், ஸித்நர், ப்ரஹ்மா, இந்த்ரன் - வடசொற்கள். விமானம் - தேவவூர்தி. தேவர் - விண்ணில் வாழ்பவர். சித்தர் - அணிமா முதலிய யோகசித்திகளைப் பெற்றவர்- 'பலரொடும்' என்றவிடத்து, 'பரனொடும்' என்று பாடமோதி, பரமசிவனோடும் என்று உரைப்பாரும் உளர். அகல் வான் - வினைத்தொகை. (௫௫)

யுதிட்டிரன் முதலியோர் தம்தமது வில்திறங் காட்டுதல்.

ஆற்றின்வழுவா மனுமுறைத்தருமன்மைந்தன் முதலாகிய குமாரரடைவே, போற்றியடலாசிரியரிருவரையுமன்பினுயர் பூசைபலசெய்து புரிநா, ணேற்றியசராசனம்வணக்கி வடிவாளியினிலக்க மவை நாலும் வகையான், மாற்றினர்பிளந்து பெருவண்மை சிறுநுண்மை சலநிச்சலமெனச்சொல்வகையே.

(இ - ள்.) ஆற்றின் வழுவா - நல்நெறியில் தவறாத, மனுமுறை - மநுதர்மசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட நீதியை உணர்ந்த, தருமன் மைந்தன் - தருமபுத்திரன், முதல் ஆகிய - முதலான, குமாரர் - குருகுலகுமாரர்கள், அடைவே - முறையே,—அடல் ஆசிரியர் இருவரையும் - வலிமையையுடைய (கிருபன் துரோணன் என்னும் தமது) ஆசாரியர் இருவரையும், போற்றி - வணங்கி, அன்பின் - அன்போடு, உயர் பூசை பல செய்து - சிறந்த பூசைகள் பலவற்றைச் செய்து, புரி நாண் ஏற்றிய சராசனம் வணக்கி - முறுக்குள்ள நாணியை ஏற்றும்படி வில்லை வளைத்து, வடி வாளியின் - கூரிய அம்புகளைக்கொண்டு, பெரு வண்மை சிறு நுண்மை சலம் நிச்சலம் என சொல் வகை இலக்கம் அவை நாலும் - பெருவண்மையும் சிறுநுண்மையும் சலமும் நிச்சலமும் என்று சொல்லப்பட்ட நான்குவகை லக்ஷியங்களை யெல்லாம், வகையால் பிளந்து மாற்றினர் - (அதற்கு உரிய) வகைப்படி பிளந்து தள்ளினார்கள்; (எ - று.)

பெருவண்மை - மிகப்பெரிய இலக்கு. சிறுநுண்மை - மிகச்சிறிய இலக்கு. சலம் - அசையும் இலக்கு. நிச்சலம் - அசையாத இலக்கு. அம்பினைக் கையாடு

தற்கு உரிய வகை - ஆதாநம், சந்தானம், விமோக்ஷம், ஸம்ஹாரம் என நான்கு வகைப்படும்; இவை முறையே எடுத்தலும், தொடுத்தலும், விடுத்தலும், மீட்டலுமாம். அன்றியும், மேல்நோக்கி யெய்தல், கீழ்நோக்கியெய்தல், நேரேயெய்தல் எனச் சிலவகைகளுங் கூறுப. ஏற்றிய என்பது - இங்கே இறந்தகாலப் பெயரெச்சமன்று; செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; இதில், 'இய' என்ற விகுதியே காலங்காட்டும். ஏற்றிய வணக்கியென இயையும். மநு, தர்மன், சராஸநம், சலம், நிச்சலம் - வடசொற்கள். ஆசிரியர், இலக்கம் - ஆசார்யர், லக்ஷ்யம் என்ற வடசொற்களின் திரிபு. மநு என்றது - அவனாற் செய்யப்பட்ட தருமசாஸ்திரத்தைக் குறித்தலால், கருத்தாவாகுபெயர். சராஸநம் என்பது - சர அஸநம் எனப்பிரிந்து, அம்புகளைத்தள்ளுங் கருவியென்று காரணப்பொருள்படும். நால் - நான்கு என்பது ஈறுகெட்டு னகரம்லகரமாயிற்று. தருமந்தவறினவர்களைத் தண்டித்துத் தருமத்தைக் காத்தலால், யமனுக்கு, தருமனென்று பெயர். (௩௬)

மற்றும் படைக்கலத்திறமும், யானைதேர்குதிரை நடத்துந் திறமுங் காட்டுதல்.

ஆயுதமநேகவிதமானவையெனைப்பலவுமழகுறவியற்றியுமதம்
பாயுமிபமாவிரதம்வாசியொருவர்க்கொருவர்பலகதிவரக்கடவியுஞ்
சேயுயருமாடநிலைதெற்றியினிருந்தவர்தெளிந்துளமகிழ்ந்துநவைதீர்
வாயுகதியல்லதுமனித்தர்கதியல்லவெனவல்லனபுரிந்தனரரோ.

(இ - ள்.) எனை அநேகவிதம் ஆனவை - மற்றும் பலவகைப்பட்டவையான, ஆயுதம் பலவும் - படைக்கலங்களை யெல்லாம், அழகு உற இயற்றியும் - அழகாக உபயோகித்தும்,—சேய் உயரும் - மிகவும் உயர்ந்துள்ள, மாடம் நிலை - மாளிகைகளின் உபரிகைகளின்மேலும், தெற்றியின் - மண்டபங்களிலும், இருந்தவர் - (இக்காட்சி காண்டற்கென்று) வந்திருந்தவர்கள், தெளிந்து - கண்டு, உளம் மகிழ்ந்து—, நவை தீர் வாயு கதி அல்லது மனித்தர் கதி அல்ல என - (இக்கதிவிசேடங்கள்) குற்றமற்ற வாயுவுக்குஉரிய கதிகளே யல்லது மனிதர்களுக்கு உரியகதிகளல்லவென்று சொல்லும்படி,—மதம் பாயும் இபம் - மதசலம் பெருகப்பெற்ற யானைகளையும், மா இரதம் - பெரிய தேர்களையும், வாசி - குதிரைகளையும், ஒருவர்க்கு ஒருவர் - ஒருவரினும் ஒருவர் மிகுதியாக, பல கதி வர - அநேகவிதமான நடைவிகற்பங்கள் உண்டாக, கடவியும் - செலுத்தியும்,—வல்லன புரிந்தனர் - தாம்தேர்ந்த கல்வித்திறங்களைச் செய்து காட்டினார்கள் ; (எ - று.)—அரோ - ஈற்றசை.

ஆயுதம், அநேகவிதம், மதம், இபம், ரதம், வாஜி, கதி, வாயு - வடசொற்கள். ந + ஏகம் = அநேகம்; ஒன்றல்லாதன: பல; வடமொழிப் புணர்ச்சி. எனை - ஏனை யென்னும் இடைச்சொல்லின் குறுக்கல். கீழ்க்கவியில் வில் கூறியதனால், மற்றையபடைக்கலங்களைக் குறித்தற்கு 'எனை' என்றார். பலவும் என்றது, எஞ்சாமைப்பொருளில் வந்தது. மா இரதம் - குதிரைகள் பூண்ட தேருமாம். ஒருவர்க்கொருவர் என்பதில், நான்கனுருபு - ஐந்தனுருபுக்குரிய எல்லைப்பொருளில் வந்தது. சேய் - தூரமென்னும் பொருளுணர்த்தும் சேய்மையென்னும் பண்புப்பெயர் ஈறுபோயிற்று. சேய் உயரம்என்பது - ஒருபொருட்பன்மொழியாய், மிக்க உயரத்தைக் குறித்தது. 'மாடநிலைதோ றவையிருந்தவர்' என்ற பாடத்துக்கு -

மாடங்களினிடந்தோறும் கூட்டமாகக் கூடியிருந்த பெரியோர்களென்க. உளம் - அகத்து உறுப்பு. மநுஜ ரென்னும் வடசொல்லின் திரிபாகிய மனிதரென்பது, செய்யுளோசை நோக்கி, மனித்தரென விரித்தல்விகாரம் பெற்றது. (௫எ)

துரியோதனனும் வீமனும் கதைப்போர் தொடங்குதல்.

ஒத்தவலியோர்வலியுமொத்ததிறலோர்திறலு மொத்தவினையோர் வினையும்வன், சித்தமனன்மூளமுகவம்புயமலர்ந் தரசன்மகனுமனிலன் சிறுவனுங், கைத்தலமமர்ந்தகதைகொண்டெதிர் நடந்தனர் களிப்புட னிரண்டுதறுகண், மத்தகயம்வேரொடுமராமரமெடுத்தமர் மலைந்தனைய கோலமறவோர்.

(இ - ள்.) வலியும் - உடல்வலிமையைக்குறித்து நோக்கினாலும், ஒத்த வலியோர் - (ஒருவர்க்கொருவர்) சமமான தேகபலமுடையவர்களும், திறலும் - பராக்கிரமத்தைக்குறித்து நோக்கினாலும், ஒத்த திறலோர் - சமமான பராக்கிரமத்தையுடையவர்களும், வினையும் - படைக்கலத்தொழில் வகைகளைக் குறித்து நோக்கினாலும், ஒத்த வினையோர் - சமமான தொழில்திறமுடையவர்களும் ஆகிய, அரசன் மகனும் அனிலன் சிறுவனும் - திருதராட்டிர மகாராசனது புத்திரனான துரியோதனனும் வாயுகுமாரனான வீமனும், தறுகண் மத்த கயம் இரண்டு - அஞ்சாமையையுடைய மதம்பிடித்தயானைகள் இரண்டு, களிப்புடன் - அம்மதக்களிப்புடனே, மராமரம் வேரொடு எடுத்து - மராமரங்களை வேருடனே (துதிக்கையாற்) பெயர்த்து எடுத்துக்கொண்டு, அமர்மலைந்து அனைய -(அவற்றைக்கொண்டு ஒன்றோடொன்று) போர்செய்தாற்போன்ற, கோலம் மறவோர் - காட்சியையும் யுத்தாவேசத்தையு முடையவர்களாய்,—வல் சித்தம் அனல் மூள - வலிய தங்கள் மனத்திலே கோபாக்கினி எழுந்துபொங்க, முகஅம்புயம் மலர்ந்து - தங்கள் முகமாகிய தாமரைமலர்கள் மலரப்பெற்று, கைத்தலம் அமர்ந்த கதைகொண்டு எதிர் நடந்தனர் - கைகளிற் பொருந்திய கதாயுதத்தை யெடுத்துக்கொண்டு (ஒருவரையொருவர்) எதிர்த்துச்சென்றார்கள் ; (எ - று.)

இவ்விருவரும் மற்றையாயுதங்களினும் கதாயுதத்தில் மிகப்பயின்று தேர்ந்தமையும், இவர்கட்கு இளமைதொடங்கி மூண்டுவந்த உட்பகைமைவிளைவும் இதனால்வெளியாம். இருவரும் பதினாயிரம் யானைபலம் கொண்டவராதலால், 'ஒத்த வலியோர்' எனப்பட்டனர். துரியோதனன், வீமன், கீசகன், சராசந்தன், பகாசுரன் என்ற இவ்வைவரும் சமபலமுடையவரென்பதை அறிக. சித்தம், முகம், அம்புஜம், அநிலன், கதா, மத்தகஜம் - வடசொற்கள். அம்புஜம் - நீரிற்பிறப்பது; தாமரைக்குக் காரணவிடுகுறி: அதன்மலர்க்கு முதலாகுபெயர். விசித்திரவீரியனது மூத்தமகனான திருதராஷ்டிரன், பிறவிக்குருடனாய் அரசாட்சி பூணுதற்கு உரியனல்லனாயினும், தம்பியாகிய பாண்டுவினால் தமையனென்ற அபிமானத்தோடு உபசரித்து முடிசூடப்பெற்றனனாதலாலும், பாண்டு இறந்தபின் அவ்வரசு நிலையில் தான்நின்றதனாலும், அரச னெனப்பட்டான். தறுகண்மை - வன்கண்மை. மராமரம் - ஒருவகை ஆச்சாமரம்; வடமொழியில், ஸால மெனப்படும். மறவோர் - குறிப்புமுற்று வினையெச்சப் பொருளில் வந்தது. மறவர் என்பது மறவோர் எனச் சிறுபான்மை ரகரவீற்றயல்அகரம் ஓவாயிற்று. உவமையணி.(௫அ)

அவர்கள் போரில் மிகுதலை அசுவத்தாமன் விலக்குதல்.

தண்டின்முனையொன்றினுட னொன்றுருமெறிந்தனைய தன்மையொ டுடற்றவிலகு, மண்டலவிதங்களும் வியப்புறநடந்தபின் மறத்தொடு செயிர்த்துவயிரங், கொண்டிருவரும்பொருத லுன்னுபொழுதத்தவர் குறிப்பினையிமைப்பளவையிற், கண்டுகுருவின்சிறுவன்வன்பொடுவிலக் கினன்மெய் கல்விகரைகண்டபெரியோன்.

(இ - ள்.) தண்டின் முனை ஒன்றினுடன் ஒன்று - கதையின் நுனி ஒன்றோ டொன்று, உரும் எறிந்து அனைய தன்மையொடு உடற்ற - இடியிடித்தாற் போன்ற தன்மையோடு தாக்க, விலகு மண்டல விதங்களும் - (அக்கதைகள் தம் மேல்தாக்காதபடி) விலகுகிற மண்டலகதிவகைகளும், வியப்புறநடந்தபின்-(காண் பவர்) அதிசயிக்கும்படி நிகழ்ந்தபின்பு, இருவரும் - (துரியோதனன் வீமனென் னும்) இரண்டுபேரும், மறத்தொடு செயிர்த்து வயிரம் கொண்டு - வீரத்தோடு கோபித்து உட்பகைமைகொண்டு, பொருதல் உன்னு பொழுதத்து - போர்செய் யக்கருதியபொழுது,—அவர் குறிப்பினை - அவர்களுடைய உட்கருத்தை, இமை ப்பு அளவையில் கண்டு - ஒரு மாத்திரைப்பொழுதிலே அறிந்து,— மெய் கல்வி கரை கண்ட பெரியோன் குருவின் சிறுவன் - உண்மையான கல்விகளை முழு வதும் அறிந்த பெருமையுடையவனாகிய குருபுத்திரனான அசுவத்தாமன், வன் பொடு விலக்கினன் - வலிமையோடு விலக்கினான்; (எ - று.)

தண்டம், மண்டலவிதம், வைரம் - வடசொற்கள். இலகு என்றும் பதம் பிரிக்கலாம்; விளங்குகிற என்று பொருள். மண்டலவிதம் - வலசாரி, இடசாரி, மண்டலம், பவுரி என்பன. இமைப்பளவை - மனிதர் இயல்பில் ஒருகால் கண் மூடித்திறத்தற்கு வேண்டும் பொழுது. மகாபலசாலிகளான இருவரையும் போர் விலக்கற்கு வேண்டும் ஆற்றலுடைமையைக் கூறுவார் 'வன்பொடுவிலக்கினன்' என்றும், இருவர் தகுதியின்றிச் சண்டையிடத் தொடங்கினால் நடுவுநிலைமை குன்றாது இடையிற்புகுந்து நயபயங்களாற் பகைவிலக்குதல் கல்வியில்தேர்ந்த பெரியோர்கடனென்பார் 'மெய்க்கல்வி கரைகண்ட பெரியோன்' என்றுங் கூறி னார். மெய்க்கல்வியென்பது, செய்யுளோசையின்பம் நோக்கி, 'மெய்கல்வி' என வலியியல்பாய்நின்றது. இனி, மெய்யுங் கல்வியுமாகியவற்றைக் கரைகண்ட என் றும் உரைக்கலாம்; அப்பொழுது, மெய்கல்வியென உம்மைத்தொகையில் வலி இயல்பாயிற்றென்க. 'கரைகண்ட' என்றதனால், கல்வி கடலெனப்பட்டவாறும். 'அன்பொடுவிலக்கினன்' என்ற பாடத்துக்கு - இருவரிடத்தும் அன்பினுடனே விலக்கினானென்க. (ருக)

அருச்சுனன் தனது வில்லின் திறமையைக் காட்டுதல்.

மீளிமக வான்மதலை யாயுதபுரோகிதன் விலோசனமு ணர்ந்த வன்மலர்த், தாளின்முடி வைத்தெதிர் தரித்தனனி டங்கவரி சாபக்கவ சத்தினனிபம், யாளியர வங்கருடன் வன்னிசலி லந்திமிர மிரவியிவை யேகடவுளாம், வாளியின்வி னோதமுற வெய்தனனி ருந்தமுடி மன்ன வர்ம திக்கும் வகையே.

(இ - ள்.) மீளி - வல்லமையிற் சிறந்தவனான, மகவான் மதலை - இந்திர குமாரனாகிய அருச்சுனன்,—ஆயுத புரோகிதன் விலோசனம் உணர்ந்து - ஆயுதவித்தைக்குக் குருவான துரோணாசாரியனது கண்ணின்குறிப்பை யறிந்து, அவன் மலர் தாளில் முடி வைத்து - அவனுடைய தாமரைமலர்போன்ற திருவடிகளிலே தனது தலையைவைத்து [சாஷ்டாங்கமாக விழுந்து தண்டனிட்டு], எதிர் - அவனெதிரிலே, இடம் கை வரி சாபம் தரித்தனன் - இடக்கையில் கட்டமைந்த வில்லை ஏந்தியவனாய், கவசத்தினன் - (உடம்பில்தரித்த) கவசத்தையுமுடையவனாய், இபம் யாளி அரவம் கருடன் வன்னி சலிலம் திமிரம் இரவி இவையே கடவுள்ஆம் வாளியின் - யானையும் (அதற்குப்பகையான) சிங்கமும் பாம்பும் (அதற்குப்பகையான) கருடனும் அக்கினியும் (அதற்குமாறான) ஜலமும் இருளும் (அதற்குமாறான சூரியனும் ஆகிய இவற்றின் விதமான தெய்வத்தன்மையுள்ள அம்புகளினால் [ஒன்றற்கொன்று பகையாகிய பல திவ்விய அஸ்திரங்களால்],விநோதம் உற - (காண்பவர்க்கு) வியப்பு உண்டாக, இருந்த முடிமன்னவர் மதிக்கும் வகை - (அவ்வரங்கத்தில்) இருந்த கிரீடதாரிகளான அரசர்கள் (தன்னை) நன்குமதிக்கும்படி, எய்தனன் - எய்தான்; (எ - று.)

மீளி - ஆண்பாற் சிறப்புப்பெயர். மகவாந் என்ற வடசொல் - யாகங்களையுடையவனென்று பொருள்படும்; நூறு அசுவமேதயாகங்களைச் செய்து இந்திரபதவிபெறுதலால் அவனுக்கு இப்பெயர். புரோஹிதன் என்ற வடசொல் - (காரியங்களில்) முன்வைக்கப்படுபவன் என்று காரணப்பொருள்படும். விலோசநம் - பார்வை; வடசொல். எல்லாமலர்களுள்ளுந் தாமரை சிறத்தலால், அதுவாளா'மலர்' எனப்பட்டது; "பூவிற்குத் தாமரையே", "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை", "பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்பன காண்க. சாபம், கவசம், கருடன், வஹ்நி, ஸலிலம், திமிரம், விநோதம் - வடசொற்கள். முன்பு தானே ஓர் அஸ்திரத்தை எய்து அதன் திறத்தை வெளிக்காட்டி வியப்பு உண்டாக்கி உடனே அதற்குப் பகையான அஸ்திரத்தை எய்து அதனால் முந்தின அஸ்திரத்தைத் தணித்து இங்ஙனமே மிக்கவிநோதக்காட்சிகளை விளைத்தன னென்க. எய்தனன், எய் - பகுதி. கருத்தைக் குறிப்பால் உணர்த்தலும், அதனைக் குறிப்பால் அறிதலும் அறிவுடையாரியல்பாதலின், 'விலோசனமுணர்ந்து' என்றார். அரவம் - அரா என்பது குறுகி 'அம்' சாரியை பெற்றது. மயிர்முடியப்படுவதென்ற காரணத்தால் தலையைக்குறிக்கும் முடி யென்ற பெயர் - அதில் அணியுங் கிரீடத்துக்கு இடவாகுபெயராம். 'இபம்யாளி அரவங்கருடன் வன்னிசலிலம் திமிரம்இரவி' என்ற தொடரில் தொடைமுரண் இருத்தலை உணர்க. (சுo)

வேறு.

அப்பொழுது கர்ணன் எழுந்து சிங்கநாதம் செய்தல்.

மங்குல் சூழ்வி மான முன்றின் மஞ்ச கோடி திகழவே
யங்கண் வான மீன மென்ன வவையி ருந்த வரசர்முன்
சிங்க மென்னு மாறெ ழுந்து சிங்க நாத முஞ்செய்தான்
பங்க சாத பரிம ளங்கொள் பானு ராச சூனுவே.

(இ - ள்.) மங்குல் சூழ் விமானம் முன்றில் - மேகங்கள் படியப்பெற்ற மேல்நிலையையுடைய மண்டபத்தின் முன்னிடத்திலுள்ள, மஞ்ச கோடி - மஞ்சங்களின் வரிசை, திகழ - (தாம்வீற்றிருத்தலால்) விளங்கும்படி, (அந்த மஞ்சங்களில்), அம் கண் வானம் மீனம் என்ன - அழகிய இடத்தையுடைய வானத்திற் பொருந்திய நக்ஷத்திரங்கள்போல, அவை இருந்த - சபையாகத் திரண்டு வீற்றிருந்த, அரசர்முன் - அரசர்களுடைய முன்னிலையிலே,—பங்கசாத பரிமளம் கொள் பானுராச சூனு - தாமரைமலர்களை மலர்த்துந் தன்மையுள்ள சூரியனாகிய தலைவனது மகனான கர்ணன்,—சிங்கம் என்னும் ஆறு எழுந்து - சிங்கம் (தனக்கு உவமை) என்று சொல்லும்படி (கம்பீரமாக) எழுந்து, சிங்கநாதமும் செய்தான் - சிங்கநாதத்தையுஞ் செய்தான்; (எ - று.)

'மங்குல்சூழ்' என்ற அடைமொழி, அம்மண்டபவிமானத்தின் உயர்ச்சியைக் காட்டும். மேகத்துக்கும் விமானத்துக்கும் சம்பந்தமில்லாதிருக்கச் சம்பந்தத்தைக் கற்பித்துக் கூறியதனால், தொடர்புயர்வுநவிற்சி யணி; வடநூலார் சம்பந்தாதிசயோக்தி யென்பர். முன்றில் - வீட்டின்முன்னிடத்தை யுணர்த்தும் இல்முன் என்றது முன்பின்னாகச்சொல்நிலைமாறி விகாரப்பட்ட இலக்கணப்போலி. ("முன்னென் கிளவி முன்னர்த்தோன்றும், இல்லென்கிளவிமிசைறகரமொற்றல், தொல்லியன்மருங்கின் மரீஇய மரபே" என்ற தொல்காப்பியச்சூத்திரமும், அதன் உரையில் 'இன்முன் என நிற்கற்பாலது முன்றிலென்று தலைதடுமாறுதலின் மரூஉவாயிற்று' என்று உரைத்ததும் அறிதற்கு உரியன.) இங்கே, முன்றிலென்றது, வடமொழியில் ப்ரேக்ஷாகார மெனப்படும் காட்சிச்சாலையின் முன்னிடம். மஞ்சகோடி, ஸிம்ஹநாதம், பங்கஜாதபரிமளம், பாநுராஜஸூநு -வட மொழித்தொடர்கள். மஞ்சங்களில் வீற்றிருத்தலால் இவர்கட்குப் பொலிவுண்டாவதுஎன்பதன்றி, இவர்கள் வீற்றிருத்தலால் மஞ்சங்கட்குப் பொலிவுண்டாகின்றதென, இவர்கள் சிறப்பைக் குறிப்பித்தவாறு. மீனம், அம் - சாரியை. சிங்கம் - ஸிம்ஹமென்ற வடசொல் திரிந்தது; இது - ஹிம்ஸமென்றதன் எழுத்துநிலைமாறலாய், இம்சிப்பதென்று பொருள்படும். வீரர்க்குச் சிங்கம் உவமை - நடை வலிமை நோக்குத் தைரிய காம்பீரியங்கட்கு என்க. சிங்காதம்-சிங்கங்கர்ச்சிப்பதுபோல வீராவேசத்தால் ஆரவாரஞ்செய்தல்; நாதம் - ஒலி. பரிமளம் கொள்ளுதல் - மணங்கொள்ளுதல். அலர்த்தலாகிய காரணம், பரிமளங்கொள்ளுதலாகிய காரியமாக உபசரிக்கப்பட்டது; உபசாரவழக்கு. தாமரைகள் மலர்ந்து வாசனைவீசுதற்குக் காரணமாகும் சூரியனென்க. ஓர் உத்தமபுருஷன் உயர்ந்த பதுமினிசாதிஸ்திரீயின் மேனிநறுமணத்தை மோந்து உட்கொள்ளல்போல, சூரியனாகிய தலைவன் தனது தலைவியாகிய தாமரையின் மணத்தைக் கொள்ளுகின்றானென்பது தொனிக்கும். பங்கஜாதம் - சேற்றில் உண்டானது; தாமரைக்குக் காரணவிடுகுறி. சூரியன், தேவர்களுள் தலைமையுடையானாதலால், 'பானுராசன்' எனப்பட்டான். பாநுவென்பது- விளங்குபவனென்று காரணப்பொருள்படும். சிங்கநாதமும் என்ற உம்மை-இறந்தது தழுவிய எச்சப்பொருளது. 'விசாலமுன்றில்' என்ற பாடத்துக்கு - விசாலமான முற்ற மென்க.

இதுமுதல் இருபத்திரண்டு கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று விளச்சீரும், மற்றையாறும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எழு

சீராசிரியவிருத்தங்கள். இப்படிப்பட்டவற்றைச் சந்தவிருத்தமென்பது சந்தப் போலியாயிருத்தல் மாத்திரத்தைக் கொண்டேயென அறிக. குழிப்புக்கு ஒத்து வருவனவே சந்தவிருத்தமாம். இவற்றை, முதல் ஆறு சீர்களையும் மூன்றுபெருஞ் சீராகப் பிரித்துக் கலிவிருத்த மென்னவேண்டுமென்பது, ஒருசாரார் கொள்கை. அறுசீராகப் பிரித்தலும் அமையும். (சுகூ)

அருச்சுனனினும் சிறப்பாகக் கர்ணன் தனது வில்திறங் காட்டுதல்.

சிந்தையன்புடன்பணிந்துதேசிகேசனருளினால்
வந்துவெஞ்சராசனம்வணக்கிவீரவாளியா
லிந்திரன்குமாரன்முன்னியாதியாதியற்றினா
னந்தவந்தநிலையுமேவுமவனின்விஞ்சலாயினான்.

(இ - ள்.) சிந்தை அன்புடன் பணிந்து - (கர்ணன் தனது குருவாகிய பரசு ராமனை) மனப்பூர்வமான பக்தியோடு வணங்கி, தேசிக ஈசன் அருளினால் - குரு சிரேஷ்டனான அவனது கருணையினால்,—வந்து - (அவ்வரங்கினிடையே) வந்து, வெம் சராசனம் வணக்கி-கொடிய வில்லை வளைத்து,—இந்திரன் குமாரன் முன் வீரவாளியால் யாது யாது இயற்றினான் அந்த அந்த நிலையும் ஏவும் அவனின் விஞ்சல் ஆயினான் - இந்திரனது மகனான அருச்சுனன் முன்பு திறமையுடைய அம்புகளால் எந்தெந்தவகைத் தொழிலைச் செய்தானோ அதுதற்குஉரிய நிலையிலும் அந்தந்த அம்பைச் செலுத்துதலிலும் அவ்வருச்சுனனினும் மேம்படுதலை உடையவனானான்; (எ - று.)—அருளினால் விஞ்சலாயினான்.

'சிந்தையன்புடன் பணிந்து' என்பதற்கு - மனத்து அன்புடனே அச்சபையிலுள்ளபெரியோர்களை வணங்கியென்றும், 'தேசிகேசனருளினால்வந்து' என்பதற்கு - அவ்வரங்கிற்குத் தலைவனாய்விளங்கும் குருசிரேஷ்டனான துரோணனது அனுமதிபெற்று அதனால்வந்து என்றும் உரைப்பினும் அமையும். தேசிகேசன் - குணசந்திபெற்ற வடமொழித்தொடர்; 'அஆமுன் இஈவரின் இரண்டுங்கெட ஓர் ஏகாரம் தோன்றும்.' முன் + யாது = முன்னியாது; தன்னொழி மெய்ம்முன் யகரம்வர இகரந் தோன்றிற்று; தனிக்குறில் முன் ஒற்று இரட்டிற்று: ஏவும்என்பதை ஏ உம் எனப்பிரித்து, ஏ என்பதை அம்பை யுணர்த்தும் ஓரெழுத்தொருமொழியாகக்கொள்ளுதலும்; ஏவு உம் எனப்பிரித்து, ஏவுஎன்பதை ஏவுதலென்னும் பொருள்தரும் முதனிலைத்தொழிற்பெயராகக் கொள்ளுதலும் பொருந்தும்.

அதுகண்டு அனைவரும் வியக்கத் துரியோதனன்களிக்க அருச்சுனன்நாணுதல்.

கணைகள்போயிலக்கடைந்தவுறுதிகண்டுகண்களித்
திணையில்வீரனென்றதன்றிருந்தராசமண்டலம்
பிணையன்மாலைவிசயனண்ணல்பெற்றிபற்றிநாணினான்
றுணைவரோடுவரிகழற்சுயோதனன்களிக்கவே.

(இ - ள்.) கணைகள் - (கர்ணனுடைய) பாணங்கள், போய் - சென்று, இலக்கு அடைந்த - குறித்த இலக்கில் தவறாதுபட்ட, உறுதி - திறத்தை, கண்டு - பார்த்து,—அன்று இருந்த ராச மண்டலம் - அப்பொழுது(அச்சபையில்) இருந்த அரசர்களதுதிரள், கண் களித்து - கண்கள் களிக்கப்பெற்று, இணை இல் வீரன்

என்றது - (அவனை) ஒப்பற்றவீரனென்று கொண்டாடிற்று: (அதனால்), வரிகழல் சுயோதனன் - கட்டிய வீரக்கழலையுடைய துரியோதனன், துணைவரோடு-தனது தம்பிமார்களுடனே, களிக்க களிப்படைய,—பிணையல் மாலை விசயன் - அடர்ந்த மாலையைத் தரித்த அருச்சுனன், அண்ணல் பெற்றிபற்றி நாணினான் - தனது தமையனான அக்கர்ணனது திறமையைக்குறித்து வெட்கமடைந்தான்; (எ - று.)

"தம்மினுங், கற்றாரைநோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம், எற்றேயிவர்க்கு நாமென்று" என்றபடி, வில்திறத்தில் தேர்ந்த அருச்சுனன் தன்னினும் மேம்பட்ட கர்ணனது திறத்தைக் கண்டு நாணங்கொண்டனனென்க. இலக்கு-லக்ஷ மென்ற வடசொல்லின் விகாரம். ஒப்பில்லாதவனெனவே, உயர்வில்லாதவனென்பது தானே பெறப்படும். ராஜமண்டலம் - வடமொழித்தொடர். பிணையல்மாலை ஒருவகை மாலைவிசேடம்; பின்னியமாலை. கர்ணனும் அருச்சுனனும் அச்சமயத்தில் தம்மில் ஒருவரொடொருவர் அண்ணன் தம்பியென்று அறியாராயினும் 'அண்ணல்பெற்றிபற்றி நாணினன்' என்றது, கவிக்கூற்றென அறிக. கழல் - வீரர்காலணி. (சூரு)

கர்ணன் அருச்சுனனைத் தன்னோடு தொந்தயுத்தஞ் செய்ய அழைத்தல்.

மருவநின்றருக்கன்மைந்தன்வானநாடன்மகனைநா
மிருவருந்தனுக்கொள்போரியற்றவம்மினென்றலுங்
குருகுலந்தழைக்கவந்தகுமரனன்புகூரவே
யுருகிநன்றெனத்தழீஇயுகந்துளந்தருக்கினான்.

(இ - ள்.) அருக்கன் மைந்தன் - சூரியபுத்திரனான கர்ணன், மருவ நின்று- சமீபமாக வந்து நின்று, வானநாடன் மகனை - தேவலோகத்துக்குத் தலைவனான இந்திரனது குமாரனாகிய அருச்சுனனை, நாம் இருவரும் தனு கொள் போர் இயற்ற வம்மின் என்றலும் - 'நாம் இரண்டுபேரும் [நீயும் நானும்] விற்போர்செய்ய வருக' என்று கூப்பிட்டவளவிலே,—குருகுலம் தழைக்க வந்த குமரன் - குரு வென்னும் அரசனது குலம் செழிக்கும்படி பிறந்த மகனான துரியோதனன், அன்பு கூர-அன்புமிக, உருகி-(அக்கர்ணன்விஷயத்தில்) மனவுருக்கங்கொண்டு, நன்று என - இது நல்லதென்று (அவன்செயலைக்) கொண்டாடி, தழீஇ - (அவனைத்) தழுவிப்பிணைத்து, உளம் உகந்து - மனமகிழ்ந்து, தருக்கினான் - பெருமை பாராட்டினான்; (எ - று.)

அர்க்கன் - வடசொல். நாம் - முன்னிலையை உளப்படுத்திய தன்மைப் பன்மை. நாமிருவர் - தன்மைக்குப் படர்க்கைவந்த இடவழுவமைதி; நாம் இருவேம் என்றிருப்பின், வழாநிலையாம். தநுஸ்என்ற வடசொல் தனுவென விகாரப்பட்டது. தனுக்கொள் போர் - விற்கொண்டுசெய்யும் போர். வம்மின்-வா என்ற பகுதியின்மேற் பிறந்த ஏவற்பன்மை. அருச்சுனனொருவனை நோக்கி 'வம்மின்' எனப் பன்மையாற் கூறினது, ஒருமைப்பன்மை மயக்கம். "ஒருமையிற் பன்மையும் பன்மையி லொருமையும், ஓரிடம் பிறவிடந் தழுவலுமுளவே" என்ற சூத்திரம் இங்குக் கருதத்தக்கது. அருச்சுனன் இராசகுலத்து மகனென்பதுபற்றி, பாகன்மகனான கர்ணன் அவனை 'வம்மின்' என்று உயர்வுப் பன்மையால் விளித்தன னெனக் கொள்ளுதல், பெருமைசிறுமைபாராது வீரவாதங்கூறி அறைகூவு

கின்ற இச்சந்தருப்பத்துக்கு அத்துணையாச்சிறவாதென அறிக. துரியோதனனை 'குருகுலந்தழைக்கவந்த குமரன்' என்றது, நூற்றுவரெனத் தொகையால் மிக்கத னாலேயே யென்க; அன்றி, வேறுவகையாகக் கொள்ளத் தகுதியின்மை உணர்க. தழீஇ - சொல்லிசையளபெடை; இங்கு அலகுபெறவில்லை. (சுசு)

அருச்சுனனுக்கும் கர்ணனுக்கும் நிகழும் வீரவார்த்தை.

அனந்தரம்பொரற்குநீகொலந்தரம்மெனக்கெனுத்
தனஞ்சயன்செயிர்த்தல்கண்டுதபனன்மைந்தன்மீளவு
முனைந்தபோரின்முடிதுணித்துன்முகசரோருகத்தினாற்
சினந்தணிந்தரங்கபூசைசெய்வனென்றுசீறினான்.

(இ - ள்.) அனந்தரம் - பின்பு, தனஞ்சயன் - அருச்சுனன், (கர்ணனை நோக்கி), 'பொரற்கு - போர்செய்தற்கு, நீகொல் எனக்கு அந்தரம் நீயா எனக்கு எதிர்?' எனு - என்று சொல்லி, செயிர்த்தல் - கோபித்தலை, கண்டு - பார்த்து, தபனன் மைந்தன் - சூரியபுத்திரனான கர்ணன், மீளவும் - பின்பும், 'முனைந்த போரில்-பகைத்துச்செய்யும் போரிலே, முடி துணித்து-(உன்) தலையை வெட்டி, சினம் தணிந்து - (அதனால் எனது) கோபமாறி, உன் முகசரோருகத்தினால் - உனதுமுகமாகிய தாமரைமலரைக்கொண்டு, அரங்கபூசை செய்வன் - யுத்தரங்கத் துக்குப் பூசைசெய்வேன்', என்று - என்று சொல்லி, சீறினான் - மிகவுங் கோ பித்தான்; (எ - று.)

நீகொல், கொல் - வினு; இங்கு எதிர்மறை காட்டிற்று. அந்தரம் + என க்கு = அந்தரம்மெனக்கு; மகரம்இரட்டினது - விரித்தல்விகாரம். தருமபுத்திரன் இராசசூயயாகஞ் செய்ய வேண்டியபொழுதில், அருச்சுனன் வடக்கிற்சென்று பலஅரசர்களைச் சயித்து அவர்கள்செல்வத்தைத் திறைகொணர்தலால், அவனுக் குத் தநஞ்சய னென்று ஒருபெயர்; இனி, இப்பெயர்க்கு - வெற்றியைச் செல்வ மாகவுடையவனென்றும் ஒருபொருள் கொள்ளலாம். ஸரஸ் + ருஹம் = ஸரோரு கம்; குளத்தில் முளைப்பது: தாமரைக்குக் காரணவிடுகுறி. (சுடு)

அதுகண்டு அனைவருந் திகைக்கக் கிருபன் நீதி கூறத்தொடங்குதல்.

அதிருகின்றவெழிலிபோலருச்சுனன்றனைக்குறித்
தெதிருகின்றவின்மைகண்டியாவருந்திகைக்கவே
முதிருகின்றமெய்யனாகிமுன்னிருந்தகௌதம
னுதிருகின்றவமுதவிந்துவொக்குமென்னவுரைசெய்வான்.

(இ - ள்.) அதிருகின்ற எழிலி போல் - இடிமுழங்குகின்ற மேகம் போல, அருச்சுனன்தனை குறித்து எதிருகின்ற - அருச்சுனனைக்குறித்து (க்கர்ணன்) எதிர்த்து நிற்கிற, வின்மை - வில்வலிமையை, கண்டு - பார்த்து, யாவரும் - எல் லோரும், திகைக்க - பிரமித்துநிற்க,—முதிருகின்ற மெய்யன் ஆகி முன் இருந்த கௌதமன் - மூப்படைந்த உடம்பையுடையவனாய் (அச்சபையில்) முன்னே வீற்றிருந்த கிருபாசாரியன், உதிருகின்ற அமுத விந்து ஒக்கும் என்ன உரைசெய் வான் - சிந்துகிற அமிருதத்துளிகள்போலு மென்று உவமைகூறும்படி (சிலஇன் சொற்களைச்) சொல்பவனானான்; (எ - று.)—அவற்றை, அடுத்தகவியிற் காண்க.

எழிலி-எழுச்சியையுடைய தென மேகத்துக்குக் காரணக்குறி; எழில் என்ற 'இல்' விகுதிபெற்ற தொழிற்பெயரின்மேல், இ-பெயர்விகுதி. சிங்கநாதஞ்செய்து அறைகூவி வீரவாதம்பேசிச் சபதஞ்செய்கிற கர்ணனுக்கு, இடிமுழங்கும் முகில் உவமை. கௌதமன் - கோதமனது குலத்திற் பிறந்தவன்; வடமொழித் தத்தி தாந்த நாமம். அம்ருதபிந்து என்ற வடசொல், அமுதவிந்து வெனத் திரிந்தது. முன்-இடமுன். நிலையில்லாமையாற் பொய்யாகிய உடலை 'மெய்' என்பது, மங்கல வழக்கு. 'அதிருகின்றவெழிலிபோல்' என்பதை அருச்சுனனுக்கு உவமையடைமொழி யாக்குதலும் ஒன்று. இப்பொழுது கிருபன்பேசும் பேச்சு, துரியோதனன் முதலிய சில தீயோர்க்கு வருத்தம் விளைப்பினும், நீதிமுறைமையுணர்ந்த நல்லோர்பலர்க்கும் இன்பத்தைவிளைத்தல்பற்றி, அச்சொற்களுக்கு அமிருதத்துளியை உவமைகூறினர். (கூசு)

கிருபன் நீதிகூறத் துரியோதனன் அதனை மறுக்கத்தொடங்குதல்.

சூதன்மைந்தன்வேலையேழுசூழுமேதினிக்கெலா
நாதன்மைந்தனுடன்வெகுண்டுநவிலுதற்குநண்ணுமோ
வேதமுண்டுசாலவென்னராசராசனிகலியக்
கோதமன்றனக்குளங்கொதிக்குமாறுகூறுவான்.

(இ - ள்.) 'சூதன் மைந்தன் - தேர்ப்பாகனது மகன், வேலை எழு சூழும் மேதினிக்கு எலாம் நாதன் மைந்தனுடன் - ஏழுகடல்கள்சூழ்ந்த பூமிமுழுவதுக்கும் அரசனது குமாரனோடு, வெகுண்டு நவிலுதற்கு நண்ணுமோ - கோபித்து வீரவாதம் பேசுதற்குத் தகுமோ? [தகாது என்றபடி]: சால ஏதம் உண்டு - (இங்ஙனம்பேசுதல்) மிகவுங்குற்றமுடைத்து,' என்ன - என்று (கிருபன்) சொல்ல,— ராச ராசன் - அரசர்க்கரசனாகிய துரியோதனன், இகலி - மாறுபட்டு, அ கோதமன் தனக்கு உளம் கொதிக்கும் ஆறு கூறுவான்-அந்தக்கிருபாசாரியனுக்கு மனம் கொதிக்கும்படி (சிலமறுமொழி) கூறுபவனானன்; (எ - று.)—அவற்றை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

ஸூதன், வேலா, மேதிநீ, ராஜராஜன், நாதன் - வடசொற்கள். சூதன்மைந்தன், மேதினிக்கெலாநாதன்மைந்தன் என்று பொதுப்படக்கூறினும், அவை - இங்கு, திருதராட்டிரனது தேர்ப்பாகனாகிய அதிரதன் வளர்த்த மகனான கர்ணனையும், நிலவுலகமுழுவதையும் அரசாண்ட பாண்டுவினது புத்திரனான அருச்சுனனையும் உணர்த்தும். வேலையென்ற கரையின் பெயர் - கடலுக்கு இலக்கணை. ஆதிகாலத்தில் திருமாலாற் கொல்லப்பட்ட மது கைடப ரென்னும் அசுரர்களது மேதசினால் [மேதஸ்-உடற்கொழுப்பு] நனைந்தமைபற்றி, பூமிக்கு மேதிநீயென்று பெயராயிற்று. நவிலுதற்கு என்ற குகரவீற்று வினையெச்சம், தொழிற்பெயர்த்தன்மைப்பட்டு 'நண்ணும்' என்ற முற்றுக்கு எழுவாயாய் நிற்கும். இனி, சூதன் மைந்தன் நவிலத்தகுவானோ என்று, 'நண்ணும்' என்பதை உயர்திணையாண்பாலில் வந்த செய்யுமென்முற்றாக்கி முடிப்பினும் இழுக்காது. சால - மிகுதியுணர்த்தும் 'சால்'என்னும் உரிச்சொல்லின்மேற் பிறந்த செயவெனெச்சம். 'ராஜராஜன்' என்ற வடசொல், செய்யுளின்பம்நோக்கி, முதலில் இகரம்பெறாது நின்றது. ('நாலடியாரும் தண்டியாசிரியரும் சிந்தாமணியாரும் வடமொழியிற் பிறந்தவண்

ணம் முறையே "யோசனையோர் கேட்பர்", "யுக்தமு மயுக்தமும்", "ரவிகுலதில கன்" எனத் தற்சமமாகக் கூறினாற்போல, யாமும் 'உருவபேதம்' என்னாமலே ரூபபேதம்' என்றும்' என்ற பிரயோகவிவேகவாக்கியம் இங்கு நோக்கத்தக்கது.) இங்கே 'கோதமன், என்றது, கௌதம னென்ற வடசொல்லின் விகாரம்; கௌ சிகன், மௌலி என்றவை-கோசிகன், மோலி எனத் திரிந்து வழங்குதல் காண்க. அன்றி, கோதமன் மகன்மகனைக் கோதமனென்று இலக்கணையாற் கூறின ரென் றலும் ஒன்று. 'மேதினிக்கெலாம்' என்றதில், எல்லாம் என்ற பெயர் - பொரு ளின்பன்மைகுறியாமல், ஒருபொருளின் பலவிடங்குறித்து, எஞ்சாமைப்பொரு ளதாய் நின்றது. (கூஎ)

துரியோதனன் மறுமொழி.

இன்னாரின்னார்க்குச் சாதிபேதம் கருதத்தக்கதன் றென்றல்.

கற்றவர்க்குநலனிறைந்தகன்னியர்க்கும்வண்மைகை
யுற்றவர்க்கும்வீரரென்றுயர்ந்தவர்க்கும்வாழ்வுடைக்
கொற்றவர்க்குமுண்மையானகோதின்ஞானசரிதரா
நற்றவர்க்குமொன்றுசாதிநன்மைதீமையில்லையால்.

(இ - ள்.) கற்றவர்க்கும் - படித்தவர்களுக்கும், நலன் நிறைந்த கன்னியர்க் கும - அழகுநிறைந்த கன்னிகைகளுக்கும், வண்மை கை உற்றவர்க்கும் - ஈகைக் குணம் கைவந்தவர்களுக்கும், வீரர் என்று உயர்ந்தவர்க்கும் - வீரர்களென்று சிறப் பாகமதிக்கப்பட்டவர்களுக்கும், வாழ்வு உடை கொற்றவர்க்கும் - செல்வவாழ்க் கையையுடைய அரசாட்சிபூண்டவர்களுக்கும், உண்மைஆன கோது இல் ஞான சரிதர் ஆம் நல் தவர்க்கும் - உண்மையான குற்றமற்ற தத்துவஞானத்தையும் (அதற்குஏற்ற) ஒழுக்கத்தையும் உடையவர்களாகிய நல்ல தவஞ்செய்யும் முனி வர்களுக்கும், ஒன்று சாதி-சாதி ஒன்றே; நன்மை தீமை இல்லை - (அதில்)உயர்வு தாழ்வு என்னும் பகுப்பு இல்லை; (எ - று.)—ஆல் - ஈற்றசை; தேற்றமுமாம்.

கற்றவர் முதலியோர் எச்சாதியிற்பிறந்திருப்பினும் மேன்மைபெறுவ ரென் றும், கல்லாதவர் முதலியோர் எச்சாதியிற் பிறந்திருப்பினும் கீழ்மையுறுவரென் றும், ஆதலால் இவர்கட்குச் சாதிவேற்றுமை குறிக்கத்தக்கதன் றென்றும் இதன் கருத்து. "சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால், நீதிவழுவா நெறிமு றையின்—மேதினியில், இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர், பட்டாங்கி லுள்ளபடி", "நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன், கற்றில னாயிற் கீழிருப் பவனே", "எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும், அக்குடியிற் கற்றோரை வருக வென்பார்" என்றாற்போல்வன, இதற்கு மேற்கோளாம். ஒன்றுஎன்பதை எண்ணுப்பெயராக்கொள்ளாது,வினைப்பகுதியாக்கொண்டு,வினைத்தொகையாக்கி, பொருந்திய சாதியினால் வரும் நன்மையும் தீமையும் இல்லை என்று உரைப்பினும் பொருந்தும். 'கொற்றவர்' என்றது, அரசசாதியாரைக் குறியாது அரசாள்வாரைக் குறிக்கும். கன்னி – கந்யா என்ற வடசொல்லின் திரிபு; கலியாணமாகாத இளம் பெண்ணென்று பொருள். கொடை கையால் நிகழ்தல்பற்றி, 'வண்மைகையுற்ற வர்' என்றார். ஜ்ஞாநசரிதர், ஜாதி - வடசொற்கள். இல்லை-எதிர்மறைப்பொதுக் குறிப்புமுற்று. (கஅ)

இதுவும் அது: பிறப்பினால் இழிவின்மைக்குச் சில உதாரணங் காட்டுதல்.

அரிபிறந்ததன்று தூணிலரனும்வேயிலாயினன்
பரவையுண்டமுனியுமிப்பரத்துவாசன்மைந்தனு
மொருவயின்கண்முன்பிறந்ததொண்சரத்தினல்லவோ
வரியவென்றிமுருகவேளுமடிகளும்பிறந்ததே.

(இ - ள்.) அன்று - முற்காலத்தில், அரி பிறந்தது - திருமால் அவதரித்தது, தூணில் - தூணினிடத்தேயாம்; அரனும் - சிவபிரானும், வேயில் ஆயினன்-மூங்கிலில் தோன்றினன்; பரவை உண்ட முனியும் - கடலைப்பருகிய அகத்திய மகாமுனிவனும், இ பரத்துவாசன் மைந்தனும் - பரத்வாஜமுனிவனது குமாரனான இந்தத்துரோணாசாரியனும், முன் பிறந்தது - முன்புதோன்றினது, ஒரு வயின்கண் - (கும்பமாகிய) ஓரிடத்திலேயாம்; அரிய வென்றி முருகவேளும் - (பிறரால் வெல்லுதற்கு) அரிய வெற்றியையுடைய முருகக்கடவுளும், அடிகளும்-தேவரீரும், பிறந்தது - தோன்றினது, ஒள் சரத்தின் அல்லவோ - விளங்குகின்ற நாணலிலே யன்றோ? (எ - று.)

மேன்மையுடைய திருமால் முதலியோர் பிறந்தவிடங்காரணமாக இழிக்கப்படாமை போலவே, இக்கர்ணனும் சாதிபற்றி இழித்தற்கு உரியனல்ல னென்பது கருத்து.

திருமால் தூணில் தோன்றினது, நரசிங்காவதாரகாலத்தில்; அவ்வரலாறு வருமாறு:—தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும் ஐம்பெரும் பூதங்களாலும் ஆயுதங்களாலும் தனக்குமரணமில்லாதபடி அளவற்றவரங்களைப் பெற்றுத் தேவர் முதலிய யாவர்க்குங் கொடுமைகளை யியற்றித் தன்னையே கடவுளாக வணங்கச்செய்து வந்தவனும், இரணியாக்கனது உடன்பிறந்தவனுமான இரணியன், தன்புத்திரனும் மகாவிஷ்ணுபக்தனுமான பிரகலாதாழ்வான் தன்பெயர் சொல்லிக் கல்விகற்காமல் நாராயணநாமஞ்சொல்லிவரவே, அவனைக்கொல்லுதற்கு என்னஉபாயஞ்செய்தும் அவன் பகவானருளால் இறந்திலனாக, இரணியன் மகனைநோக்கி 'நீசொல்லும் நாராயணனென்பான் எங்குஉளன்? காட்டாய்' என்ன, அப்பிள்ளை "சாணினு முளனோர் தண்மை யணுவினைச் சதகூறிட்ட, கோணினு முளன் மாமேருக் குன்றினு முளன் இந்நின்ற, தூணினு முளன் நீ சொன்ன சொல்லினு முளன் இத்தன்மை, காணுதி விரைவின்'' என்றுசொல்ல, உடனே இரணியன், நன்று என்று சினந்து 'இங்கு உளனோ?' என்றுசொல்லி, எதிரிலிருந்த தூணைப் புடைக்க, அதினின்றும் பகவான், மனிதவுருவமுஞ் சிங்கவடிவமுங் கலந்த நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றித் திருக்கைந்நகங்களால் அவன்மார்பைப்பிளந்து அழித்திட்டனன் என்பது.

சிவபிரான் மூங்கிலில் தோன்றிய கதை:—எல்லாம் அழியும்பிரளயகாலத்தில் தமக்கும் அழிவுநேரிடுமென்று கவலையுற்று வேதங்கள் பலநாள் சிவனைக்குறித்துத் தவம்புரிந்து அப்பிரானது தரிசனத்தைப்பெற்று 'பிரளயகாலத்தில் நீ தாமிரசபையில்நின்று செய்யுந் திருநடனத்தை நாங்கள் தரிசிக்கவேண்டும்; பிரளயத்திலும் அழிவில்லாத அத்தலத்தில் நாங்கள் மூங்கிலாய் நின்று எப்போதும் நிழலைச்

செய்ய, நீ எங்களிடம் முத்தாய்த்தோன்றி எங்களுக்குப் பிள்ளையுமாகவேண்டும்' என்று வரங்கேட்க, சிவபிரான் அதற்கு இணங்கித் திருநெல்வேலியில் வேணுவனத்தில் மூங்கில்முத்தாகி அம்மூங்கிலின்கீழ் எழுந்தருளியிருக்கின்றனனென்பதாம். இதனால், அத்தலத்துச் சிவபிரானுக்கு வேணுவனநாதனென்று திருநாமம்.

ஏககாலத்தில் ஊர்வசியைக் கண்டு அவளிடங் காதல்கொண்ட மித்திரன் வருணன் என்னுந் தேவர் இருவரது விருப்பத்தால் அருகிலிருந்ததொரு குடத்தினின்று பிறந்தவர் அகஸ்தியரென அறிக. அதனால், அவருக்கு, குடமுனி, கும்பசம்பவர், கலசயோநி என்ற பெயர்கள் வழங்கும். துரோணர் துரோணகும்பத்திற் பிறந்து அதுகாரணமாகப் பெயர்பெற்றமை, கீழ்க்கூறப்பட்டது. கும்பசம்பவர், கலசயோநி என்று துரோணரை வழங்குதலும் உண்டு.

தேவர்கள் வேண்டியபடி சூரபதுமன் முதலிய கொடிய அசுரர்களை அழித்தற்பொருட்டு ஒரு குமாரனை யுண்டாக்கக்கருதிய சிவபிரானது திருமேனியினின்று வெளிப்பட்ட திவ்வியதேஜஸை அக்கினியும் வாயுவும் கங்கையிற் செலுத்த, அதனது ஒருமடுவாய் நாணற்காட்டை யடுத்துள்ள சரவணப்பொய்கையினின்று சுப்பிரமணியமூர்த்தி தோன்றினனென வரலாறு அறிக. கிருபர் நாணற்கட்டையிற் பிறந்தமை, முன்கூறப்பட்டது. நாணலிற்பிறந்ததனால், முருகனுக்கும் கிருபனுக்கும் 'சரஜந்மா' என்று வடமொழியில் ஒருபெயர்.

அரி, அரன் - ஹரி, ஹரன் என்ற வடசொற்களின் திரிபு; அடியவர் துயரையும், அசுரர்முதலிய கொடியோரையும் அழிப்பவனென்று பொருள்படும். தூண் - ஸ்தூணா என்ற வடசொல் திரிந்தது. அரனும் என்ற உம்மை - இறந்தது தழுவிய எச்சத்தோடு, உயர்வுசிறப்பு. மற்ற உம்மைகள் - எண்ணுப்பொருளோடு, உயர்வுசிறப்புப்பொருளு முடையன. 'அன்றே' என்பதுபோல, அல்லவோ என்பதும் - இரண்டு எதிர்மறையால் உடன்பாட்டை யுணர்த்தித் தேற்றப்பொருளை விளக்கும். முருகு - இளமை, அழகு, தெய்வத்தன்மை: அதனையுடையவன், முருகன். காமவேளை விலக்குதற்கு 'முருகவேள்' என்றார். முருகவேள் - முருகனாகிய வேள் என இருபெயரொட்டு; "சிலவிகாரமா முயர்திணை" என்பதனால், நிலைமொழி யுயர்திணைப் பெயரீற்று னகரம் கெட்டது. வேள் - விரும்பப்படுபவன் என்று காரணப்பொருள்படும்; அழகியவனென்பது கருத்து: வினைப்பகுதியின்மேல் செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்டபெயர். அடிகள் என்பது - 'பாதா:' என்னும் வடசொல்லின் வாய்பாடாய், மரியாதைப்பொருளில் வழங்கும். இங்கே அடிகளென்றது, முன்னிலைப்படர்க்கை: இடவழுவமைதி.

கடல் குடித்த கதை:—இந்திரன் முதலிய தேவர்கள், தம்பகைவனாகிய விருத்திராசுரன் மற்றும்பல அசுரர்களுடனே கடலிற்புக்கு ஒளித்துக்கொண்டபோது, அகத்தியமகாமுனிவனை வந்து பிரார்த்திக்க, அவன் அக்கடல்நீரைத் தனது ஒருகையால் முற்றும்முகந்து பருகியருளி, உடனே ஒளித்திருந்த அவ்வசுரனை இந்திரன் கொன்றபின், தேவர்கள் வேண்டுகோளின்படி நீர்முழுவதையும் உமிழ்ந்தன னென்பதாம்.

சரம்என்ற வடசொல்லுக்கு - நீரென்று ஒருபொருள் உள்ளதனால், 'முருகவேளும் - முருகக்கடவுளும், அடிகளும் - (எங்கள்பாட்டனாராகிய) பீஷ்மரும்,

பிறந்தது--, ஒள் சரத்தின் அல்லவோ - சிறந்த (கங்காநதியின்) நீரிலன்றோ?" என்று உரைப்பாரும் உளர். இனி, சிலேடையாக, சரம்என்பதற்கு - அம்பென்று பொருள்கொண்டு, 'கிருபன் பிறந்தது விளங்குகிற அம்பினிடத்தன்றோ?' என்று பொருளுரைத்தல், வழுவாம்; வடமொழி மகாபாரதத்திலும், பாகவதம் ஸ்ரீவிஷ்ணுபுராணம் என்ற சிறந்த புராணங்களிலும் "கிருபனும் கிருபியும் சரஸ்தம்பத்தினின்று தோன்றினர்" என்றவிடத்து, 'சரஸ்தம்பம்' என்றது, நாணற்கட்டையென்று பொருள்படுமேயன்றி, அம்புக்கட்டு என்றாவது அம்புக்கூடு என்றாவது பொருள்படா தென்பதை வடநூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க: ("அப்பொழுதவன்தவ மழித்தலுன்னியே, செப்பரு மகபதி சிரி னோர் கொடி, யைப் பணித் தேவலு மயர்ந்து வீரியம், விப்பிரன் விடுத்தனன் விசிகத்தம்பமேல்" என்ற நல்லாப்பிள்ளைபாரதச் செய்யுளில் 'விசிகத்தம்பம்' என்பதற்கு - இலக்கணையாக நாணற்கட்டை யென்றே பொருள்கொள்ளவேண்டும்; விசிகம், சரம் என்பன - அம்பின் பரியாயநாமங்க ளாதலால், விசிகமென்பது - சரத்தைக் குறிக்க, அது நாணலையுணர்த்தும்: ஆகவே, நாணற்கட்டையை 'விசிகத்தம்பம்' என்பது, பக்தியை 'எட்டிரண்டு' என்றும், புத்திசேனனை 'திங்கள் விரவிய பெயரினன்' என்றுங் கூறுவனபோன்ற லக்ஷிதலக்ஷணையாமென்க.)உண்மை இங்ஙனமிருக்க, சிலர் 'கிருபர் பாணத்திற்பிறந்தமை மகாபாரதத்திற்பிரசித்தம்' என்றெழுதியது, சரியன்று. (சுகூ)

துரியோதனன் கர்ணனை அங்கதேசத்து அரசனாக்குதல்.

என்றுநல்லவுரையெடுத்தியம்பியேனையிழிவினோ
டொன்றிநின்றவாடகத்தையோடவைக்குமாறுபோ
லன்றுசூதன்மதலைதன்னையங்கராசனாக்கினான்
மின்றயங்குமுடிகவித்துவேந்தெலாம்வியக்கவே.

(இ - ள்.) என்று நல்ல உரை எடுத்து இயம்பி - என்று இவ்வாறு நல்ல வார்த்தைகளை எடுத்துச்சொல்லி,—(துரியோதனன்),—ஏனை இழிவினோடொன்றி நின்ற ஆடகத்தை ஓடவைக்கும் ஆறு போல் - மற்றையிழிந்தலோகம் முதலியவற்றோடு கலந்து நின்ற பொன்னைப் புடமிட்டுச் சுத்தமாக்குந் தன்மைபோல,— அன்று - அப்பொழுது, சூதன் மதலைதன்னை - தேர்ப்பாகன்மகனான கர்ணனை, வேந்து எலாம் வியக்க - அரசர்களெல்லாருங் கொண்டாடும்படி, மின் தயங்கு முடி கவித்து - ஒளிவிளங்குகின்ற கிரீடத்தைச் சூட்டி, அங்கராசன் ஆக்கினான் - அங்கதேசத்துக்கு அரசனாகச்செய்தான்; (எ - று.)

'அருச்சுனன் அரசனுடனேயே போர்செய்தற்கு உரியானென்று கருதுகின்றதனால், அதன்பொருட்டு, கர்ணனை இக்கணத்திலேயே அரசனாக்குகிறேன்' என்று சொல்லித் துரியோதனன் கர்ணனுக்கு அப்பொழுதே அங்கநாட்டரசு முடிசூட்டிவைத்தன னென்பதாம். நல்லவுரை என்றது, கர்ணனுக்கும் தனக்கும் அனுகூலமான நீதிவார்த்தை யென்றபடி. ஏனை – பிறிதென்னும் பொருள்தரும் இடைச்சொல். இழிவு - குற்றம். சிவபிரானால் எரிக்கப்பட்ட மன்மதனது அங்கம் [உடம்பு] விழுந்த இடம், அக்காரணத்தால், அங்கதேசமெனப் பெயர்பெற்றது. வேந்து - உயர்திணைப்பொருளில்வரும் அஃறிணைச்சொல்; இது அரசனைக்

குறிக்கும்போது, பண்பாகுபெய ரென்பாரு முளர். மாசுநீங்கித் தூயதாய் ஒளி மிகும்படி பொன்னைப் புடமிடுதல்போல, தேர்ப்பாகன்மகனை கர்ணனை அவ் விழிவுதீர்ந்து அரசனுய்ப் பெருமையுறுமாறு முடிசூட்டினன். (எ0)

துரியோதனன் கர்ணனுக்கு அர்த்தாசனங் கொடுத்துக் கௌரவித்தல்.

தானிருந்தவரிமுகஞ்செய்தாள்சுமந்ததவிசின்மே
லூனிருந்தபடையினனையுடனிருத்திவண்டுசூழ்
தேனிருந்தமாலைவாகுசிகரமீதுதெண்டிரைக்
கானிருந்தமண்டலங்கருத்தினலிருத்தினன்.

(இ - ள்.) (துரியோதனன்),—தான் இருந்த - தான்வீற்றிருந்த, அரிமுகம் செய் தாள் சுமந்த தவிசின்மேல் - சிங்கத்தின் வடிவந்தோன்றச் சித்திரித்துச்செய் யப்பட்ட கால்கள் சுமந்த பீடத்தின்மேல் [சிங்காசனத்தின்மீது], ஊன் இருந்த படையினனை - (பகைவரது) தசைதோய்தற்குஉரிய (வேல்முதலிய) ஆயுதங்களை யுடைய கர்ணனை, உடன் இருத்தி - தன்னுடன் ஒருங்கு வீற்றிருக்கவைத்து,— வண்டு சூழ் தேன் இருந்த மாலை வாகு சிகரம்மீது - வண்டுகள்சூழுந் தேன் பொருந்திய மாலையை யணிந்த (அவனுடைய) தோள்களாகிய மலையின்மேல், தெள் திரை கான் இருந்த மண்டலம் - தெளிவான அலைகளின் தொகுதியை யுடைய கடலின் நடுவிலே யுள்ளதான பூமியின் பாரத்தை, கருத்தினல் இருத்தி னன் - தன்மனக்கருத்தோடு சுமத்தினன்; (எ - று.)

தன் ஆசனத்தில் அர்த்தாசனமளித்து அதில் தன்னுடன் இருத்துதல், அர சர்செய்யும் ஒரு பெருமரியாதை. தோள்வலிமையால் பெரிய இராச்சியத்தை அர சாள வைத்தன னென்பது, பின்னிரண்டடியின்கருத்து. மகாபலபராக்கிரமசாலி யும் ஆயுதவித்தையில் மிகத்தேர்ந்தவனுமான கர்ணனை நண்பனாக்கி இங்ஙனம் பெருமைப்படுத்தி மகிழ்வித்தலால், துரியோதனன், அவனுதவியைக்கொண்டு பின்பு பாண்டவரைவென்று தனியரசாட்சிசெய்யலாமெனக் கருதினனென்பது விளங்க, 'கருத்தின லிருத்தினன்' என்றார். இனி, கருத்தினல் என்பதற்கு - உள்ளத்து அன்போடு எனஉரைத்தலும் ஒன்று. இனி, இச்செய்யுளுக்கு - (துரி யோதனன்) தானிருந்த தவிசில் கர்ணனை உடன் இருத்திக் கௌரவித்து (அத னற்) கடல்சூழ்ந்த நிலவுலகத்து அரசாட்சிமுழுவதையும் தனதுதோளில் இருப்ப தாகக்கருதினன் என்று பதவுரைகூறினும் அமையும். எதிர்த்தபகைவரை விடாது கொல்லவல்லவன் என்பார் 'ஊனிருந்தபடையினன்' என்றார். பாஹு சிகரம் - வடமொழித்தொடர். சிகரம் - மலையுச்சி. தோளுக்கு மலையுவமை, படைக்கலங்க ளால் ஊறுபடாதவலிமைக்கு. 'தெண்டிரைக்கான்'என்றது அன்மொழித்தொகை யாய்,கடலைக்குறித்தது. மண்டலம் - வடசொல்; மண்தலம் என்று பிரித்தலுமாம்.

கர்ணனும் துரியோதனனுங் கூடிச் செருக்குறுதல்.

தவனன்மைந்தனுஞ்சுயோதனனுமிசைந்துதனதனுஞ்
சிவனுமென்னநண்புகொண்டுதிறலுடன்சிறந்துளார்
பவனனும்பர்நாயகன்பயந்தவீரரஞ்சவே
யவனியெங்குநமதெனக்கொள்பெருமிதத்தராயினர்.

(இ - ள்.) தவனன் மைந்தனும் - சூரியன்மகனான கர்ணனும், சுயோதன னும் - துரியோதனனும், இசைந்து - கலந்து, தனதனும் சிவனும் என்ன நண்பு கொண்டு குபேரனும் சிவபிரானும் போலச் சினேகங்கொண்டு, திறலுடன் சிறந் துளார்-வலிமையிற்சிறந்தவர்களாய், பவனன் உம்பர்நாயகன் பயந்த வீரர் அஞ்ச- வாயுவும்தேவேந்திரனும்பெற்றவீரர்களாகியவீமசேனனும்அருச்சுனனும் அஞ்ச, அவனிஎங்கும் நமது என கொள் பெருமிதத்தர் ஆயினர் - பூமிமுழுவதும் இனி நம்முடையதேயென்று எண்ணிய செருக்கையுடையவராயினர்கள்; (எ - று.)

குபேரன் முன்னொருகாலத்தில் கைலாசகிரியின் ஒருசாரலில் இருந்து பெருந்தவஞ்செய்து சிவதரிசனம்பெற்று அப்பிரானருளால் அவனுக்கு நண்ப னாயினனென்ன வரலாறு அறிக. தநதனென்ற வடமொழிப்பெயர் -(தன்னைவேண் டினவர்க்குச்) செல்வத்தைக் கொடுப்பவனென்றும், செல்வத்தைக் காப்பவனென் றும் பொருள்படும். சிவன் - (யாவர்க்கும்) மங்களத்தைச் செய்பவன்; சிவம் - சுபம். பெருமிதம் - பேரெல்லை, இங்கு, வரம்புகடந்த தன்மை. கர்ணனுக்குக் குபேரனும், துரியோதனனுக்குச்சிவனும் உவமையாக முறையேசென்று இயை தலால், முறைநிரனிறைப் பொருள்கோள். கொடைவள்ளலாகுங் கர்ணனுக்கு - தனதனாகிய குபேரனும், கர்ணனுக்கு அரசுஅளித்த ராசராசனான துரியோதன னுக்கு-குபேரனுக்கு வரமளித்த தலைவனான சிவபிரானும் உவமையெனக் காண்க. பாண்டவர்களுள் பலபராக்கிரமங்களிற் சிறந்த வீமனும் அருச்சுனனும் முறையே துரியோதனனுக்கும் கர்ணனுக்கும் எதிரிகளாதலால், அவ்விருவரே இங்கு எடுத் துக்கூறப்பட்டனர். சிறந்துளார் - முற்றெச்சம். மிதம் - வடசொல். (எஉ)

கௌரவ பாண்டவர்களது திறங்கண்டு துரோணன் மகிழ்தல்.

ஆனகாலையெண்ணுகின்றவாயுதங்கள்யாவையும்
யானைவாசியிரதமானயானமுள்ளயாவையுஞ்
சேனையோடுதெவ்வரைச்செகுக்கவல்லவீரமு
மானவீரர்வல்லரென்றுமறைவலாளன்மகிழ்வுறா.

இதுமுதல் மூன்று கவிகள் - குளகம்.

(இ - ள்.) ஆன காலை - (இவையெல்லாம்) நிகழ்ந்த அப்பொழுது,—மறை வலாளன் - வேதம்வல்லவனான துரோணாசாரியன்.—எண்ணுகின்ற ஆயுதங்கள் யாவையும் - எண்ணப்படுகிற படைக்கலங்களெல்லாவற்றிலும், யானை வாசி இர தம் ஆன யானம் உள்ள யாவையும் - யானை குதிரை தேர் ஆகிய வாகனங்களாயுள் ளவை எல்லாவற்றிலும், சேனையோடு தெவ்வரை செகுக்கவல்ல வீரமும்-சேனை யுடனே பகைவர்களை அழிக்கவல்ல வீரத்திலும், மான வீரர் - மானத்தையுடைய இந்தவீரர்கள், வல்லர் - தேர்ந்தவர், என்று - என்று எண்ணி, மகிழ்வு உறா - மகிழ்ச்சியடைந்து, (எ - று.)—'மகிழ்வுறா' என்றது, எடு - ஆங் கவியில் வரும் 'இயம்ப' என்ற எச்சத்தைக் கொள்ளும்.

யானம், ஸேநா, மாந வீரர் - வடசொற்கள். தெவ் - பகைமை யுணர்த்தும் உரிச்சொல்; "தெவ்வுப் பகையாகும்" என்பது தொல்காப்பியம்: அதனையுடைய வர், தெவ்வர். மானமாவது-எப்பொழுதும் தம்நிலையினின்று தாழாமையும், ஊழ் வினையால்தாழ்வுவந்தவிடத்து உயிர்வாழாமையுமாம். ஆயுதங்களென்றது - அவற்

றை உபயோகித்தலேயும், யானமென்றது - அவற்றைச் செலுத்துதலேயுங் குறிக்கும்; இலக்கணே. மகிழ்வுரு - உடன்பாட்டெச்சம். (எரு)

துரோணன் அவர்களைநோக்கித் தனக்கு உரிய குருதக்ஷிணை இன்னதென்றல்.

வம்மினுதிகுருகுலந்தழைக்கவந்தமைந்தர்கா
டம்மினுளேயேயெமக்களிக்கநின்றதக்கிணை
யெம்மினுனெருத்தன்வேறியாகசேனனென்றுளா
னும்மினுடியவனையிம்பரோதல்செய்துகொணர்மினே.

(இ - ள்.) ஆதி குருகுலம் தழைக்க வந்த மைந்தர்காள் - முதன்மைபெற்ற குருகுலம் செழிப்படையும்படி வந்துதோன்றிய குமாரர்களே!—வம்மின்-வாருங்கள்: எமக்கு அளிக்க நின்ற தக்கிணை - எமக்கு (நீங்கள்) கொடுக்கும்படியுள்ள குருதக்ஷிணையை, நாளையே தம்மின்-நாளைக்கே தாருங்கள்: (அத்தக்கிணை), வேறு-வேறுவகைத்து: (அதுஎன்னவெனின்),—யாகசேனன் என்று எம் இனன் ஒருத்தன் உளான் - யாகசேனனென்று எமதுபகைவனெருவன் இருக்கிருன்; அவனை—, நும்மில் நாடி - உங்களுள் (யாவரேனும்) சென்று, நோதல் செய்து - (கொல்லாமல்) வருத்தி [போரில் உயிருடனே தேரோடு பிணித்து], இம்பர் கொணர்மின் - இவ்விடத்திற் கொண்டுவாருங்கள்: (இவ்வளவே); (எ - று)— 'என்று' என அடுத்த கவியோடு தொடரும்.

வம்மின், தம்மின் - வா, தா என்ற பகுதிகளின் ஏவற்பன்மை. மைந்தர்காள் - மைந்தர்கள் என்பது ஈற்றயல்திரிந்த விளி. தக்கிணை - தக்ஷிணு என்ற வடசொல்லின் திரிபு. இனன் - இன்னன் என்பதன் தொகுத்தல்; இனியவனல்லாதவ னென்று பொருள்: இன்னுமையென்னும் எதிர்மறைப்பண்பினடியாகப்பிறந்த பெயர். நாளையே என்றது, விரைவு குறித்தற்கு. (எச)

அதனை முடித்தற்கு அக்குமாரர்கள் பாஞ்சாலநாடுசெல்லுதல்.

என்றுதஞ்சிலைப்புரோகிதன்கனன்றியம்பவே
யன்றவன்பதம்பணிந்தளித்தசொற்றலேக்கொளா
வென்றிநீடுபடைகளோடும்விரவுமங்கநாலொடுஞ்
சென்றுதங்கணுடகன்றுதெவ்வுநாடுகுறுகினர்.

(இ - ள்.) என்று—, தம் சிலை புரோகிதன் - தங்கள் வில்லாசிரியனுகிய துரோணன், கனன்று இயம்ப - (யாகசேனன்மீது) கோபங்கொண்டு சொல்ல,—(அக்குருகுல குமாரரனைவரும்); அன்று - அப்பொழுது, அவன் பதம் பணிந்து - அத்துரோணனது பாதங்களை வணங்கி [விடைபெற்று], அளித்த சொல் தலைக்கொளா-(அவன்) கட்டளையிட்டருளிய வார்த்தையைத் தலைமேற்கொண்டு [மிகவும் நன்குமதித்து], வென்றி நீடு படைகளோடும் - வெற்றி மிக்க ஆயுதங்களோடும், விரவும் அங்கம் நாலொடும் - பொருந்திய சதுரங்கசேனையோடும், சென்று - புறப்பட்டு, தங்கள் நாடு அகன்று - தங்கள்தேசத்தை நீங்கி, தெவ்வு நாடு குறுகினர்-(தமது குருவுக்குப் பகைவனுதலால் தமக்கும்) பகைவனுன யாகசேனனது தேசத்தைச் சமீபித்தார்கள்; (எ- று.)

தலைக்கொளா - உடன்பாட்டெச்சம். அங்கம் நால் - யானை தேர் குதிரை காலாள். தங்கள் நாடு - குருநாடு. தெவ்வுநாடு - பாஞ்சாலதேசம். பகைமையுண

ர்த்தும் 'தெவ்' என்பது-இங்குப் பண்பாகுபெயராய்ப் பகைவனை உணர்த்திற்று; "தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே" என்பதனால், தெவ் என்பது - தெவ்வு என உகரச்சாரியை பெற்றது: 'தெவ்வனொடு' என்றும் பாடம். (எடு)

அக்குமாரர்கள் பாஞ்சாலனரண்மனையை முற்றுகைசெய்தல்.

ஆளிமொய்ம்பரம்முனைக்கணானபோதனீகினித்
தூளிகண்புதைத்தசென்றுசெவிபுதைத்ததுவனிபோ
யோளிகொண்டசெம்பொன்வெற்பினுடல்புதைத்தவெழிலிபோல்
வாளிகொண்டவிருதர்மாமதிற்புறம்புதைக்கவே.

இதுவும், அடுத்தகவியும் - குளகம்.

(இ - ள்.) ஆளி மொய்ம்பர் - சிங்கம்போலும் வலிமையுடையவர்களாகிய அக்குமாரர்கள், அ முனைக்கண் ஆன போது - போர்செய்தற்குரிய அவ்விடத்திலே சென்று சேர்ந்தபொழுது, அனீகினி தூளி - அவர்கள்சேனையால் மேலெழுப்பப்பட்ட பூமியின் துகள்கள், சென்று - முன்சென்று, கண் புதைத்த-(யாகசேனனது) கண்களை மறைத்தன: துவனி - (சேனையின்) போராரவாரவோசைகள், போய் - முன்சென்று, செவி புதைத்த-(அவனது) காதுகளை அடைத்தன; (பின்பு),—செம் பொன் வெற்பின் உடல் புதைத்த-சிவந்தபொன்மயமான மேருமலையின் வடிவை மூடிய, ஒளி கொண்ட எழிலி போல் - வரிசைப்பட்ட மேகங்கள் போல, வாளி கொண்ட விருதர் - அம்பு கைக்கொண்ட (அக்குருசேனை) வீரர்கள், மா மதில் புறம் புதைக்க-(அவ்யாகசேன னகரத்தின்) பெரிய மதிலின் வெளியிடத்தை நெருங்கிச் சூழ்ந்திட, (எ - று.)—'வளைத்த' என வருங்கவியோடு தொடரும்.

இவர்கள் செல்லுமுன்னே இவர்கள்சம்பந்தமான தூளியும் தொனியும் சென்று அவனுக்கு இடர்விளைத்தன வெனச் சமத்காரந் தோன்றக் கூறினர். அநீகிநீ - வடசொல்; அநீகத்தையுடையதென்று பொருள்படும்: அநீகம் - குதிரைமுதலியவற்றின் தொகுதி. தூளீ - வடசொல். இரண்டாம் அடியில், புதைத்த-அன்சாரியை பெறாத பலவின்பால் முற்று. மூன்றாம் அடியில், புதைத்த - பெயரெச்சம். ஒளி-ஒழுங்கு; இனி, ஒளிகொண்ட பொன் எனஎடுத்து, ஒளிகொண்ட பொன் என்று உரைப்பினும் அமையும்: அப்பொழுது, ஒளி - நீட்டல் விகாரம். மதிலுக்கு மேருவை உவமை கூறினது, மிக்கஉயர்வைக் குறித்தற்கு. விருது - வெற்றி; அதனையுடையவர், விருதர். ஆளி - யாளியென்னும் மிருகவிசேஷ மெனினுமாம்; மரூஉ: அது - யானையைக்கொல்வதும் சிங்கம்போல்வதும் துதிக்கையுடையது மான ஒரு விலங்கு. (எசு)

அதனைஉணர்ந்து யாகசேனன் போருக்கு வருதல்.

வளைத்தசேனையானைவாசிவாயினின்றுகுமுறவே
யுளைத்தெழுந்துமுழையைவிட்டடன்றசிங்கவேறுபோற்
றிளைத்ததன்பதாதியோடுமோகயாகசேனனு
மிளைத்தநெஞ்சனன்றிநீடுபுரிசைவாயிலெய்தினன்.

(இ - ள்.) வளைத்த - (இங்ஙனம் மதிற்புறத்து) முற்றுகைசெய்த, சேனை - குருசேனையிலுள்ள, யானை வாசி - யானைகளும் குதிரைகளும், வாயில் நின்று -

(யாகசேனனகரத்து) வெளிவாயிலில் நின்று, குமுற - ஆரவாரஞ்செய்ய,—உளைத்து - கர்ச்சித்துக்கொண்டு, முழையை விட்டு எழுந்து உடன்ற - (தான் இருக்கிற)மலைக்குகையை விட்டுப் புறப்பட்டுக் கோபித்துவருகிற, சிங்கம் ஏறு போல்-ஆண்சிங்கம் போல, மோக யாகசேனனும் - (போரில்) மிக்க ஆசையையுடைய துருபதராசனும், இளைத்த நெஞ்சன் அன்றி - சோர்வடைந்த மனத்தை யுடையவ னாகாமல், திளைத்த தன் பதாதியோடு - நெருங்கிய தனது சேனையோடு, நீடு புரிசை வாயில் எய்தினன் - உயர்ந்த மதில்வாயிலை அடைந்தான்; (எ - று.)

இல்வாய் என்பது, வாயில் என முன்பின்னாகச் சொல்நிலைமாறி, வீட்டின் முன்னிடத்தை உணர்த்தும். பதாதி-காலாட்படை; இங்கே, சேனையென்ற மாத்திரமாய் நின்றது; சிறப்புப்பெயர் பொதுப்பொருளை உணர்த்திற்று. மோகயாகசேனன் என்பதற்கு - செல்வவிருப்பத்தை அல்லது பேதைமையை யுடைய யாகசேன னென்றும் பொருள்கூறலாம்; முன்பு துரோணனுக்குச் சொன்ன சொல்லைப் பின்பு இராச்சியத்தில் ஆசையால் தவறினவ னாதலின். (எஎ)

சோமகரோடு கௌரவர்க்கும், யாகசேனனோடு அருச்சுனனுக்கும் போர் நிகழ்தல்.

சோமகர்க்குமுடுகுசேனைசூழவந்தகுருகுலக்
கோமகர்க்கும்வெஞ்சமர்விளைந்ததாண்மைகூரவே
பூமகற்குமிக்கமாமுனிக்குவாய்மைபொய்த்தவம்
மாமகற்கும்விசயனுக்குமன்னுபோர்வயங்கவே.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) சோமகர்க்கும் - சோமகுலத்து அரசர்களுக்கும், முடுகு சேனை சூழ வந்த குருகுலம் கோமகர்க்கும் - விரைந்து நெருங்கிய சேனைகள் சூழ வந்த குருகுலகுமாரர்களுக்கும், ஆண்மை கூர - வலிமைமிக, வெம் சமர் விளைந்தது - கொடிய போர் உண்டாயிற்று; பூமகற்கும் மிக்க மா முனிக்கு - பிரமதேவனினும் மேம்பட்ட பெருமையையுடைய துரோணாசாரியனுக்கு, வாய்மை பொய்த்த - சொன்ன வாக்குத் தவறின, அ மா மகற்கும் - அந்தச் செல்வமகனான யாகசேனனுக்கும், விசயனுக்கும் - அருச்சுனனுக்கும், மன்னு போர் வயங்க-பெரும் போர் மிக, (எ - று.)—'குமரர் நகரிநோக்கினார்' என வருங்கவியோடு முடியும்.

பாஞ்சாலராசர்கள், சோமகனென்னும் அரசனது குலத்தவ ராதலால், சோமக ரெனப்பட்டனர்; சோமகன் - துருபதனது பாட்டன். கோமகர் - இராசகுமாரர். ஆண்மை - பௌருஷம். பூமகன் - (திருமாலின் நாபித்) தாமரைமலரினின்று தோன்றிய குமாரன்; நான்கனுருபு - எல்லைப்பொருளது; உம்மை - உயர்வுசிறப்பு. (எஅ)

துரியோதனாதியர் பின்னிட அருச்சுனன் துருபதனை அகப்படுத்தல்.

தூறுகொண்டகணைபொழிந்துசோமகேசர்பொருதலா
னூறுகொண்டகுமரர்தங்கணகரிமீளநோக்கினார்
மாறுகொண்டுவிசயன்வீசுவண்ணவாளிவலையினால்
வீறுகொண்டெதிர்ந்தமன்விலங்கரிடுபட்டதே.

(இ - ள்.) சோமக ஈசர் - சோமக குலத் தலைவர்கள், தூறு கொண்டு-கூட்டமாகத் திரண்டு, கணை பொழிந்து - அம்புமழையைச் சொரிந்து, பொருதலால்-போர்செய்ததனால், நூறு கொண்ட குமரர்-நூறு என்னும் எண்ணைக் கொண்ட குருகுல குமாரர்கள் [துரியோதனாதியர் நூற்றுவரும்], தங்கள் நகரி மீள நோக்கினார் - (தோற்று முதுகுகொடுத்துத்) தங்கள் நகரத்துக்குத் திரும்பிப் போனார்கள்; மாறு கொண்டு விசயன் வீசு - பகைமைகொண்டு அருச்சுனன் வீசிய, வண்ணம் வாளி வலையினால் - மேன்மைபெற்ற அம்புகளாகிய வலையினால், வீறு கொண்டு எதிர்ந்த மன் விலங்கர்-மிக்கபெருமிதங்கொண்டு வந்து எதிர்த்த யாகசேன ராசனாகிய சிங்கம், ஈடுபட்டது - அகப்பட்டுக்கொண்டது; (எ - று.)

தூறுகொண்டு என்பதற்கு - மழையைப் போன்று என்று உரைப்பாரும் உளர். சோமகேசர் - குணசந்திபெற்ற வடமொழித்தொடர். எண்ணில் மிக்கிருப்பினும் ஆற்றலில் மிக்கிலர் என்ற இகழ்ச்சி விளங்க, 'நூறுகொண்ட குமரர் தங்கள் நகரி மீள நோக்கினார்' என்றார். இனி, 'நூறுகொண்டகுமரர்' என்றதில், அழிவடையப்பெற்ற குமாரர்களென்ற பொருளும் தொனிக்கும்; நூறுதல்-நொறுங்குதல். வண்ணம் - பலவகையும், ஒளியும்; நிறமும் எனினுமாம். வாளிவலையினால் மன்விலங்கர் ஈடுபட்டது - உருவகவணி. மன் - பெருமை; மன்னனுக்குப் பண்பாகுபெயர். விலங்கு-விலங்கர் என, மென்றொடர்க் குற்றியலுகரத்துக்கு, அர் - போலியாய் வந்தது. விலங்கு - குறுக்காக வடிவம் அமையப்பெற்றதென்று காரணப்பொருள்படும்; இது, 'திர்யக்' என்ற வடசொல்லின் பொருள்கொண்ட பெயர். விலங்கு என்ற மிருகப்பொதுப்பெயர்-தலைமைபற்றி இங்குச் சிறப்பாய், மிருகேந்திரனாகிய சிங்கத்தைக் குறித்தது. கீழ் எஎ - ஆங் கவியில் சிங்கவேறு உவமைகூறப்பட்டதற்கு இயைய, இங்கே 'விலங்கர்' என்பதற்கு - சிங்கமென்று பொருள்கொள்ளப்பட்டது. அருச்சுனன் அம்பின் திறத்தால் யாகசேனனை அகப்படுத்தினன் என்னாது, அருச்சுனனது அம்பினால் யாகசேனன் அகப்பட்டுக்கொண்டான் என்றதில், அருச்சுனனது உயர்வும், யாகசேனனது இழிவும் தோன்றும். யாகசேனனை விவேகமில்லாத மிருகமாக உருவகப்படுத்தினதும், அவனது தாழ்வைப் புலப்படுத்தற் கென்க. (எகூ)

அருச்சுனன் யாகசேனனைக் கட்டிக் குருவின்முன் கொணர்தல்.

தகப்படுஞ்சராசனத்தனஞ்சயன்கைவாள்வெரீஇ
யகப்படுந்தராதிபன்றனற்றவில்லினாணினான்
மிகப்படுந்தடங்கொடேர்மிசைப்பிணித்துவிசையுட
னகப்படுஞ்செயற்கைசெய்துகுருவின்முன்னர்நணுகினான்.

(இ - ள்.) தக படும் சராசனம்-தகுதியாகப் பொருந்திய [பெருமைபொருந்திய] வில்லையுடைய, தனஞ்சயன் - அருச்சுனன்,—கை வாள் வெரீஇ - தனது கையிற்கொண்ட வாட்படைக்கு அஞ்சி, அகப்படும் - அகப்பட்டுக்கொண்ட, தரா அதிபன்தன் யாகசேனராசனது, அற்ற வில்லின் நாணினால் - (தனது அம்புகளால்) துணிபட்ட வில்லின் நாணியைக்கொண்டே, மிக படும் தட கொள் தேர்மிசை பிணித்து - மிகுதியாகப்பொருந்திய பெருமையைக் கொண்ட தனது தேரிலே கட்டி, நகப்படும் செயற்கை செய்து - (பலராலும்) அவமதித்துச் சிரிக்

கப்படுஞ் செய்கையைச் செய்து, விசையுடன்-வேகத்தோடு, குருவின் முன்னர் நணுகினன் - துரோணன்முன்னிலையில் வந்தான்; (எ -'று.)

அவன்கையில்நாணைக்கொண்டே அவனைக் கட்டினனென அருச்சுனனது திறத்தை எடுத்துக் கூறினர். இனி, 'தராதிபன்றனைத் தன்வில்லினணினால்' என்றும் பாடமுண்டு; அதற்கு - அப்பொழுது அருச்சுனன் யாகசேனனைத் தனதுவில்லின் நாணியைக்கொண்டு கட்டினனென்க. அருச்சுனன் கையில் வாளைஉயரஎடுத்து நெருங்கியவளவில்,யாகசேனன் அஞ்சி அகப்பட்டனனென்க. இக்கவியில் 'வாள்வெரீஇ' என்றதற்கு ஏற்பக் கீழ்க்கவியில் 'வாளின் வலையினால்' என்று பாடங் கொள்ளுதலும் தகுதியாம். தரா + அதிபன் = தராதிபன்: தீர்க்க சந்திபெற்ற வடமொழித்தொடர்; பூமிக்குத் தலைவன்: தரா - பூமி; (பொருள்களைத்) தரிப்பது. தட + கொள் = தடங்கொள்; உரிச்சொற்புணர்ச்சியாதலின்,மெலி மிக்கது. நகப்படுதல் - பரிகசிக்கப்படுதல்; இங்கே, நகை - இகழ்ச்சிபற்றியது. ஆசிரியனை மகிழ்வித்தலில் அருச்சுனன்கொண்ட மிக்க ஆதரம் தோன்ற 'விசையுடன்' எனப்பட்டது. 'பிணித்து நகப்படுஞ் செயற்கை செய்து' என்றதனால், வீரனைக் கொல்லுதலினும் உயிரோடு பிடித்தலி லுள்ள அருமை விளங்கும். (அ)

துரோணன் யாகசேனனைப் பரிகசித்தல்.

முறுவல்கொண்டுகண்டசாபமுனியுநாணவெம்மைநீ
யுறுவதொன்றுமுணர்கலாதுரைத்தபுன்சொலறிதியே
மறுவிலந்தணாளன்யானுமன்னனீயும்வாசவன்
சிறுவன்வென்றுனைப்பிணித்தசிறுமையென்னபெருமையோ.

(இ - ள்.) கண்ட சாபம் முனியும் - (அருச்சுனன் துருபதனைக் கட்டிக் கொணர்ந்ததைக்) கண்ட வில்லாசிரியனான துரோணாசாரியனும், முறுவல்கொண்டு - இகழ்ச்சிச்சிரிப்புக் கொண்டு, (அவனை நோக்கி), 'நீ—, உறுவது ஒன்றும் உணர்கலாது - பின்புநேரும் பயனைச் சிறிதும் அறியாமல், நாண எம்மை உரைத்த - யாம் வெட்கப்படும்படி எம்மை அவமதித்துப்பேசிய, புல்சொல்-இழிமொழியை, அறிதியே - அறிவாயன்றோ? யானும் மறு இல் அந்தணாளன் - நானும் குற்றமற்ற பிராமணன்: நீயும் மன்னன் - நீயும் க்ஷத்திரியன்: வாசவன் சிறுவன் வென்று உனை பிணித்த சிறுமை - இந்திரனது மகனான (அருச்சுனனாகிய) இளமகன் உன்னைச் சயித்துக் கட்டின எளிமை, என்ன பெருமையோ - (உனக்கு) என்னபெருமையோ! (எ - று.)—'முனியும்', 'முறுவல்கொண்டு' என்றவை, அடுத்தகவியில் வரும் 'என்ன உயிரும் வாழ்வும் உதவினான்'என்பதைக் கொண்டு முடியும்.

நாண உரைத்த என இயையும். இனி, நாண என்பதையும் அடுத்தகவியோடு இயைத்து, யாகசேனன் வெட்கமடையும்படி துரோணன் பேசினனென்றுங் கொள்ளலாம். சாபமுனி - சபிக்கவல்ல முனியென்றும் உரைக்கலாம்; "வீரசாபமுட னுரைக்கும் வெய்யசாபம் வல்ல வத்தீமன்' என்று மேல் இரண்டாம்போர்ச்சருக்கத்து வருதல் காண்க. சாபம் என்ற வடசொல்திரிபு இவ்விரு பொருளுமுடையதாதலை, "சாபமே சபித்தல் வில்லாம்" என்ற நிகண்டினாலும்

அறிக. முனியும் என்ற உம்மை - கதைத்தொடர்ச்சி பற்றிவந்த இறந்ததுதழுவிய எச்சம். எம்மை யென்ற தனித்தன்மைப்பன்மை - உயர்வுபற்றியது. உறுவது - பெயர். அறிதியே என்ற ஏகாரம் - தேற்றத்தோடு இகழ்ச்சியையுங் காட்டும். முன் யாகசேனன் 'மன்னன்யான்நீமுனிவன் மரபால்எனக்கும்உனக்கும் என்ன நண்புஉண்டு?' என்று ஏசி நகைசெய்து இகழ்ந்ததைக் குறிப்பிட்டு, இங்கு 'மறுவி லந்தணாளன் யானும் மன்னன் நீயும்' என்று துரோணன் ஏசுகிறான். க்ஷத்திரிய னென்று பெருமைபாராட்டிய உன்னை அந்தணனென்று உன்னால் இகழப்பட்ட யான் மாணாக்கனைக்கொண்டு வென்று கவர்ந்து சபதத்தை நிறைவேற்றிக் குறை வற்றவனான திறத்தைப் பார் என்று அவன்மனத்தில் உறைக்க ஏசியவாறும். தனக்கு 'மறுவிலந்தணாளன்' என்று அடைமொழி கொடுத்துக்கூறி, அவனுக்கு அடைமொழி கொடாது 'மன்னன் நீயும்' என்று வாளாகூறினதில், நீ சொன்ன வாய்மைதவறி இங்ஙனந் தோல்வியுமுற்று க்ஷத்திரியாதமனாயினையென்ற இகழ்ச் சிப்பொருள் தொனித்தல் காண்க. யானும் நீயும் என்ற உம்மைகள்-எச்சப்பொரு ளோடு சிறப்புப்பொருளையும் உடையன. ஈற்று ஓகாரம் - எதிர்மறை. வாஸவன் என்ற வடமொழிப்பெயர் - வசுக்களுக்குத் தலைவனென்றும்,ஐசுவரியமுடையவ னென்றும் பொருள்படும்; வசு - தேவரில் ஒருசாதியும், செல்வமுமாம். அந்தணா ளன் = அம் தண் ஆளன்-அழகியகுளிர்ந்த அருளை ஆளுபவன்; காரணவிடுகுறிப் பெயர்: இது, முனிவர்க்குச் சிறப்புப்பெயராய்வழங்கும்; "அந்தணரென்போ ரற வோர் மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற திருக்குறள் இங்கு உணரத்தக்கது. (அக)

துரோணன் யாகசேனனுக்கு உயிர்வாழ்க்கையோடு பாதியரசும் அளித்தல்.

அன்றெ னக்கு நீயி சைந்த வவனி பாதி யமையுமற்
றின்று னக்கு நின்ற பாதி யான்வ ரைந்து தருகுவன்
குன்றெ னக்கு விந்தி லங்கு கொற்ற வாகு வீரனே
யுன்ற னக்கு வேண்டு மென்ன வுயிரும் வாழ்வு முதவினான்.

(இ - ள்.) 'குன்று என குவிந்து இலங்கு - மலைபோலத் திரண்டு விளங்கு கிற, கொற்றம் வாகு - வெற்றிபொருந்திய தோள்களையுடைய, வீரனே—! நீ அன்று எனக்கு இசைந்த - நீ முன்பு எனக்குத் தருவதாக உடன்பட்ட, அவனி பாதி - பாதியிராச்சியம், அமையும் - (எனக்குப்) போதும்: மற்று நின்ற பாதி - (எஞ்சிநின்ற) மற்றொருபாதி யிராச்சியத்தை, இன்று உனக்கு யான்வரைந்து தரு குவன் - இப்பொழுது உனக்கு நான் பங்கிட்டுக்கொடுப்பேன்; (அன்றியும்,) உயி ரும் வாழ்வும் உன்தனக்கு வேண்டும் - உன்உயிரும் வாழ்க்கையும் உனக்கு இரு க்கவேண்டும்,' என்ன - என்றுசொல்லி, உதவினான் - (அம்மூன்றையும் துரோ ணன் அவனுக்குக்) கொடுத்தான்; (எ - று.)

இப்பொழுது நான் உன்னை என் மாணாக்கனைக்கொண்டு வென்றதனால், உனது உடைமையாகிய இராச்சியம் முழுவதும் எனக்குஉரியதே யாய்விடினும் நீ முன்பு எனக்கு "என்னை வானமெய்தி யானே யிறைவ னாக, வுன்னையாள வைப்பே னுலகிற் பாதி" என்று வாக்குதத்தஞ்செய்ததற்கு ஏற்ப நான் பின்பு "சொன்னவாய்மை நீயே சோர்ந்தா யானோ சோரேன்", "புகன்றபடி நீ யாளும்

புவியும் பாதி கொள்வேன்'' என்று சபதங்கூறியுள்ளதனால், அந்த என்வாக்குத் தவறாமல் ஒரு பாதியையே கொண்டு மற்றைப்பாதியை உனக்கே பிரித்துக் கொடுத்திடுவேன் என்பது, முன்இரண்டுஅடியின் கருத்து. பாஞ்சாலதேசத்தில் கங்காநதியின் தெற்கிலுள்ள பகுதியைத் துருபதனுக்குக்கொடுத்து வடக்கிலுள்ள பகுதியைத் துரோணன் தனக்கு உரியதாகக் கொண்டனனென முதனூலால் அறிக. அன்று - அங்கிவேசமுனிவனிடத்துக் கல்விகற்றகாலத்து. மற்று என்னும் இடைச்சொல் - இங்கே, பிறிதென்னும் பொருளது; வினைமாற்றாகவுங் கொள்ளலாம். இங்கே, 'குன்றெனக் குவிந்திலங்கு கொற்றவாகுவீரனே' என விளித்தது, இகழ்ச்சி. அந்தணனாய்ப் பொறுமைக்கு உரிய யான் எனது நண்பனான உனது உயிர்வாழ்க்கையை ஒழித்திடேன் என்று அருளினனென்பார், 'உன் தனக்கு வேண்டுமென்ன வுயிரும் வாழ்வு முதவினான்' என்றார். வேண்டும் என்பது - 'உம்' விகுதிபெற்ற ஒருவகை வியங்கோள். கொற்றம் - (பகைவரைக்) கொன்று அடைவது என எதுப்பொருள்படும்: வெற்றிக்குத் தொழிலாகுபெயராகிய காரணக்குறி. (அஉ)

வேறு.

யாகசேனன் விடுபட்டு அவமானத்தோடு ஊர்சேர்தல்.

புயங்கம் பருகி யுமிழ்மதியம் போல்வான் மீண்டு பூசுரன்றன்
வயங்குஞ் சுருதி வாய்மையினான் மன்னுங் குருக்கள் பதிநீங்கித்
தயங்குஞ் சிலைக்கை வாள்விசயன் சயமும் பிறர்முன் றானகப்பட்
டுயங்குஞ் செயலு நினைந்துநினைந் துள்ளஞ் சுடப்போ யூர்சேர்ந்தான்.

(இ - ள்.) புயங்கம் - (இராகு கேது வென்னும்) பாம்பினால், பருகி - விழுங்கி, உமிழ் - (உடனே மீண்டும்) வெளியுமிழப்பட்ட, மதியம் - சந்திரனை, போல்வான் - ஒப்பவனாய்,—(யாகசேனன்),— பூசுரன்தன் - துரோணாசாரியனது, வயங்கும் சுருதி வாய்மையினால் - விளங்குகிற வேதம்போன்ற தவறாத வாய்மொழியினால், மன்னும் குருக்கள் பதி நீங்கி - நிலைபெற்ற குருகுலத்தாரது நகரத்தை [அஸ்தினாபுரியை] விட்டு நீங்கி,— தயங்கும் சிலை கை வாள் விசயன் சயமும் - விளங்குகின்ற வில்லையேந்திய கையையும் ஒளியையுமுடைய அருச்சுனனது வெற்றியையும், பிறர் முன் தான் அகப்பட்டு உயங்கும் செயலும் - பிறர் முன்னிலையிலே தான் அவனிடத்து அகப்பட்டுக்கொண்டு வருந்திய செய்கையையும், நினைந்து நினைந்து - நினைத்து நினைத்துக்கொண்டே, உள்ளம் சுட - (அங்கினைவு) தன்மனத்தைத்தபிக்க, மீண்டு போய் ஊர் சேர்ந்தான் - மீண்டுசென்று தனது ஊரை யடைந்தான்; (எ - று.)

அருச்சுனனாற் கட்டுண்டு பின்பு அதுநீங்கியமைபற்றி, புயங்கம்பருகி உமிழ் மதி யாகசேனனுக்கு உவமையாயிற்று. புயங்கம் - புஜங்க மென்ற வடசொல்லின் திரிபு; மார்பினால் ஊர்ந்து செல்வது என்றும், வளைந்துசெல்வது என்றுங் காரணப்பொருள்படும்: புஜம் என்ற தோளின்பெயர் - இங்கே மார்புக்கு இலக்கணை. மதி - (யாவராலும்) மதிக்கப்படுவ தென்பதுபற்றி வந்த பெயர்; இதற்கு - மதுவையுடைய தென்று காரணப்பொருள் கூறுவாரும் உளர்; அப்பொழுது, மதுவெனப்பட்டது - அமிருதகிரணம். நீருக்கு உரிய 'பருகி' என்ற சிறப்பு

வினை, இங்கே 'உண்டு' எனப் பொதுப்பொருளை உணர்த்திற்று. மதியம், அம் - சாரியை. பூஸுரன் - வடசொல்; (தனது பிரமதேஜசினால்) பூமியில் தேவன் போல விளங்குபவன்; அந்தணன். ச்ருதி என்ற வடசொல் - எழுதாக்கிளவியாய்க் குருசிஷ்யக்கிரமத்தில் கர்ணபரம்பரையாக வழங்கி வருவதென்று காரணப்பொருள்படுவது. வாள் என்பது - ஒளியை யுணர்த்துகையில் உரிச்சொல்லாதலை, "வாள் ஒளியாகும்" என்ற தொல்காப்பியத்தால் அறிக. அன்றி, வாள் என்பதை வாட்படையென்றே கொள்ளினும் அமையும். வில்லைக்கொண்டு வென்று வாளைக்கொண்டு அச்சுறுத்திக் கைப்பற்றியமைபற்றி, 'தயங்குஞ்சிலைக் கை வாள் விசயன் சயம்' என்று கூறப்பட்ட தென்க. நினைந்து நினைந்து - அடுக்கு, இடைவிடாமைப்பொருளது.

இதுமுதல் பன்னிரண்டு கவிகள் - பெரும்பாலும் மூன்ருஞ்சீரும் ஆருஞ்சீரும் காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (அரு)

துரோணனைக்கோல்ல ஒருமகனையும், அருச்சுனனை மணக்க ஒருமகளையும் துருபதன் வேண்டுதல்.

மறுகிற்பணிலந்தவழ்பழனவளநாடுடையானெதிர்வணங்கி
முறுகிப்புரிவெங்கலைக்கோட்டுமுனியேபோலுமுனிவரரைத்
தறுகட்குருவின்றலைதுணிக்கத்தகவோர்மகவுந்தனஞ்சயன்ருே
ளுறுகைக்கொருபூங்கன்னியையும்பெறுவான்வேண்டியுற்றிரந்தான்.

(இ - ள்.) மறுகில் - வீதிகளிலே, பணிலம் தவழ் - சங்குகள் தவழும்படியான, பழனம் வளம் - கழனிகளின் நீர்வளத்தையுடைய, நாடு - பாஞ்சாலதேசத்தை, உடையான் - உடையவனுன யாகசேனன்,—தறுகண் குருவின் தலை துணிக்க தக - வன்கண்மையையுடைய துரோணுசாரியனது தலையை வெட்டுதற்குத் தகுதியாக, ஓர் மகவும் ஓர்ஆண்பிள்ளையையும், தனஞ்சயன் தோள் உறுகைக்கு - அருச்சுனனது தோள்களை அணைதற்குத் தகுதியாக, ஒரு பூ கன்னியையும் - அழகிய ஒருபெண்ணையும், பெறுவான் - பெற, வேண்டி - விரும்பி,—முறுகி புரி வெம் கலைக்கோட்டுமுனியே போலும் முனிவரரை - மிகவும் முறுக்குள்ள அழகிய கலைமானினது கொம்புபோன்ற ஒரு கொம்பைத் தலையிலுடைய ரிசியசிருங்கமுனிவனையே ஒத்த சிறந்தமுனிவர்களை, உற்று - நாடியடைந்து, எதிர் வணங்கி-(அவர்களை) எதிரிலே நமஸ்கரித்து, இரந்தான்-பிரார்த்தித்தான்;(எ-று.)

மாணுக்கனைக்கொண்டு தன்னை மானபங்கப்படுத்திய துரோணனைத் தன் மகனைக்கொண்டு தலைதுணித்துப் பழிக்குப்பழிவாங்கக்கருதி அப்படிப்பட்ட ஒருபிள்ளையையும், இளமகனுன அருச்சுனனது தோள்வலிமையைக் கண்டு மகிழ்ச்சியுற்றதனால் அவனுக்குத் தன்பெண்ணை மணஞ்செய்து கொடுத்துப் பெருமை பெறவும் தனதுதோள்களைக்கட்டிய அவனது தோள்களைத் தன்மகளைக்கொண்டு கட்டவும் கருதி அதற்குஉரிய ஒருபெண்ணையும் பெற வரம்வேண்டினனென்க. தனது முகத்தின்மேலே மான்கொம்பு போன்ற கொம்பொன்றையுடைய ஒரு முனிவருக்கு, அக்காரணத்தால், வடமொழியில் ரிச்யச்ருங்கரென்றும், தமிழில்

கலைக்கோட்டுமுனி யென்றும் பெயர் வழங்கும்; அவர் - காசியபமுனிவனது குமாரர்களுள் ஒருவராகிய விபாண்டகரென்பவரது குமாரர்; கல்விகேள்விகளி லும் தவவொழுக்கத்திலும் வைராக்கியத்திலும் மிகச் சிறந்தவர்: கோசலதேசத் தில் அயோத்தியாநகரத்தில் அறுபதினாயிரம் வருஷம் அரசாண்ட தசரதசக்கர வர்த்தி புத்திரபாக்கியமின்றி வருந்தியபொழுது, தனதுகுலகுருவாகிய வசிஷ்டர் சொன்னபடி அக்கலைக்கோட்டுமுனிவரைக்கொண்டு அசுவமேதயாகமும் புத்திர காமயாகமுஞ் செய்விக்க, அம்முனிவரருளால் சக்கரவர்த்திக்கு இராமபிரான் முத லிய சிறந்த குமாரர் நால்வர் தோன்றின ரென்ற வரலாறு, இராமாயணத்தில் பிர சித்தம். அம்முனிவர்போலவே உயர்ந்தமக்களை யாகமூலமாக உண்டாக்கவல்ல மகாமுனிவர்களை நாடி வேண்டின னென்பார், 'கலைக்கோட்டுமுனியேபோலு முனிவரரை யுற்றிரந்தான்' என்றார். அம்முனிவர்கள்பெயர், அடுத்த கவியில் விளங்கும். நாட்டின் நீர்வளமிகுதியாற் கழனிகளிலுள்ள சங்கங்கள் வீதிகளிற் சென்று தவழ்கின்றனவென நாட்டுவருணனை கூறியவாறு. 'மறுகிற் பனிநித் திலந்தவழும் வளநாடு' என்ற பாடத்துக்கு - வீதிகளில் குளிர்ந்த முத்துக்கள் பொருந்தும் செல்வவளமுள்ள நாடென்க; முத்துக்கள் சங்கு முதலியவற்றி னின்று தோன்றினவையும், சனங்களுடைய அணிகலங்களினின்று சிந்திய வையுமாம். முநிவரர் - வடசொல்.

முறுகிப் புரி - ஒருபொருட்பன்மொழி; இது, கோட்டுக்கு அடைமொழி. வெம்மையென்பது - விரும்பப்படுவ தென்னும் பொருள் தந்து உரிச்சொல்லா தலை "வெம்மை வேண்டல்" என்னுந் தொல்காப்பியத்தால் அறிக. இது, கலைக் கும், கோட்டுக்கும் அடைமொழியாம். 'முறுகற்புரி' என்ற பாடத்துக்கு - முறுக் குக்கொண்ட என்க. முனியே, ஏ-உயர்வுசிறப்பு. பின்பு 'கன்னி' எனவருதலால், முன்பு 'மகவு' என்ற பொதுப்பெயர்-ஆண்குழந்தையை உணர்த்திற்று. 'மகனும்' என்ற பாடமும் கொள்ளலாம். பூ + கன்னி = பூங்கன்னி; பூப்பெயர்முன் இனமென்மை தோன்றிற்று; அழகாகிய கன்னி யென்றால் பண்புத்தொகையும், அழகையுடைய கன்னியென்றால் வேற்றுமைத் தொகையுமாம். பெறுவான் - 'வான்'விகுதிபெற்ற எதிர்காலவினையெச்சம்; விகுதியே காலங்காட்டும்; இனி, இதனைத் தொழிற்பெயராகக்கொண்டு, பெறுதலைவேண்டி யென்றும் கொள்ள லாம். உறுகைக்கு என்ற நான்கனுருபு - தகுதிப்பொருளில் வந்தது. (அ௬)

உபயாசனும் யாசனும் துருபுதனுக்காக வேள்விசெய்தல்.

ஆறுமுகனைப்பயந்தநதியலையாற்குளிர்வதொருகானி
லீறிறவத்தோருபயாசன்யாசனெனும்பேரிருவோருங்
கூறுமுறையிற்சடங்கியற்றிக்கோவின்வழக்கப்பெருவேள்வி
நூறுமகத்தோனிகரரசைநோன்மைக்கிசையப்புரிவித்தார்.

(இ - ள்.) ஆறுமுகனை பயந்த நதி - ஆறுமுகங்களையுடைய சுப்பிரமணிய மூர்த்தியைப் பெற்ற கங்காநதியினது, அலையால் - அலைகளினால், குளிர்வது - குளிர்ச்சிபெறுவதான, ஒரு கானில் - ஒருகாட்டில், ஈறு இல் தவத்தோர் - எல்லை யில்லாத தவத்தைச் செய்பவர்களான, உபயாசன் யாசன் எனும் பேர் இருவோ ரும் - உபயாசனென்றும் யாசனென்றும் பெயரையுடைய இரண்டுமுனிவர்க

ளும், கூறும் முறையின் சடங்கு இயற்றி - (வேதசாஸ்திரங்களிற்) கூறப்பட்ட விதிமுறைப்படி உரியசடங்குகளைச்செய்து, கோவின் வழக்கம் பெரு வேள்வி - அரசர்க்குஉரிய வழக்கமாகிய பெரியபுத்திரகாமயாகத்தை, நூறுமகத்தோன் நிகர் அரசை - நூறுஅசுவமேதயாகங்களைச் செய்தவனான தேவேந்திரனைப் போன்ற யாகசேனராசனை, நோன்மைக்கு இசைய புரிவித்தார் - அவன் பெருமைக்குத் தக்கபடி [மிக்கசிறப்பாகச்] செய்வித்தார்கள்; (எ - று.)

அரசனை வேள்வியைச் செய்வித்தார் - இரண்டு செயப்படுபொருள் வந்த வினை; இது, வடமொழிநடை; அரசனைக்கொண்டு வேள்விசெய்வித்தாரென்பது கருத்து. கங்கையும் யமுனையும் சங்கமமாகிற இடத்துக்கு அருகிலுள்ள வனத்தில் யாஜன் உபயாஜன் என்ற இரண்டு பிரமவிருடிகள் தவவொழுக்கத்திற் சிறந்து இருந்தன ரென்றும், அவர்களுள் மூத்தவனான யாஜன் தலைவனாய் நின்று, இளையவனான உபயாஜனைப் புரோகிதனாகக்கொண்டு, யாகஞ்செய்வித்தன னென்றும் முதனூலால் விளங்கும். ஆறுமுகன் - ஷண்முகன். கான் - கானநமென்ற வட சொல்லின் திரிபு. ஈறு - இறுதல்; முதனிலை திரிந்த தொழிற்பெயர். சடங்கு என்பது - ஷடங்கமென்னும் வடசொல்லின் விகார மென்றும், (வேதத்தின்) ஆறு அங்கங்களிற் கூறிய முறைக்கு ஏற்பச் செய்யப்படுந் தொழிலென்று எதுப் பொருள்படுவதென்றுங் கூறுவர். பற்பலயாகங்கள்செய்து பழகியவனென்பதும், செல்வத்திற் சிறந்தவனென்பதும் தோன்ற, 'நூறுமகத்தோனிகரரசு' என்றார். அரசு – உயர்திணைப்பொருளில் வரும் அஃறிணைச்சொல். நோன்மைக்கிசைய என்பதற்கு - தமதுதவவலிமைக்கு ஏற்ப என்றும் பொருள்கொள்ளலாம். (அ௫)

உபயாசன் புத்திரகாமயாகத்தை முடித்தல்.

புரிந்தமகப்பேற்றழல்வேள்விப்பொன்றுவோமப்பொருண்மிச்சில்
பரிந்துவிபுதரமுதேய்ப்பப்பைம்பொற்கலத்தினிறைத்தாங்குத்
தெரிந்தமணிப்பூணவன்றேவிக்களிக்கத்தீண்டாளாகியபின்
சொரிந்துகனலினுபயாசனிமைப்பிற்சுதனைத்தோற்றுவித்தான்.

(இ - ள்.) புரிந்த - இவ்வாறுசெய்த, மகப்பேறு வேள்வி - புத்திரகாமயாகத்தில், அழல் ஓமம் - அக்கினியில் ஓமஞ்செய்த, பொன்று பொருள் - குறைவுபாடில்லாத பொருளினது [ஹவிஸ் என்னும் தேவருணவினது], மிச்சில் - சேஷத்தை, விபுதர் அமுது ஏய்ப்ப - தேவாமிருதத்தைப்போல, பைம்பொன் கலத்தின் நிறைத்து - பசியபொன்னினாலாகிய பாத்திரத்திலே வைத்து, ஆங்கு - அப்பொழுது, தெரிந்த மணி பூணவன் தேவிக்கு பரிந்து அளிக்க - தேர்ந்தெடுத்த இரத்தினாபரணங்களை அணிந்த அவ்வியாகசேனராசனது மனையாளுக்கு அன்போடு கொடுக்கப்புக, தீண்டாள் ஆகிய பின் - (அவள் அப்பொழுது) பூப்படைந்தாளாக அதன்பின்பு, உபயாசன்—, கனலின் சொரிந்து - (சேடித்த அந்த ஹவிஸையும்) அக்கினியிலே ஆகுதிசெய்து, (அதனால்), இமைப்பில் சுதனை தோற்றுவித்தான்- ஒருநொடிப்பொழுதிலே புத்திரனைப் பிறப்பித்தான்; (எ - று.)

ஓமசேடத்தைக் கொடுக்குஞ் சமயத்தில் அரசன்மனைவி ருதுமதியானதனால், அதனைவாங்கியுண்ணுதற்குத் தகாதவளாய்விட, முனிவன் மந்திரசுத்தமான அந்த ஹவிசைப் பழுதுபடாதபடி உடனே அனலிற்பெய்து அங்குநின்று

மகனை யுண்டாக்கலானுன் என்க. இச்செயலை யாசன் செய்ததாக முதனூல் கூறுகின்றது. மகப்பேறு வேள்வி-பிள்ளையைப் பெறுதற்கு உரிய யாகம். பேறு-பெறுதல்; பெறு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். பொன்ரு - பயன்தவருத என்க. ஹோமம். விபுதர், தேவீ, ஸூதன் - வடசொற்கள். மிஞ்சியது, மிச்சில்; பகுதி மென்றொடர் வன்றொடராயிற்று: இல் - பெயர் விகுதி. இதனைத் தொழிலாகுபெய ரென்றலும் ஒன்று. விபுதர் - விசேஷபுத்திமான்க ளென்று காரணப்பொருள்படும். பூண் - பூணப்படுவது. (அசு)

திருஷ்டத்யும்நன் தோன்றுதல்.

வலையம்பிறழமுடிதயங்கமணிக்குண்டலம்பேரழகெறிப்பச்
சிலையுங்கையுமெய்யும்வயந்திகழ்போர்வயிரக்கவசமுமாய்க்
கொலைவெஞ்சிங்கக்குருளைபொலங்குன்றின்புறத்துக்குதிப்பதுபோற்
றலைவன்களிக்கத்தடந்தேர்மேற்றனயனொருவன்றலைப்பட்டான்.

(இ - ள்.) வலையம் பிறழ - தோள்வளைகள் விளங்கவும், முடி தயங்க - கிரீடம் பிரகாசிக்கவும், மணி குண்டலம் பேர் அழகு எறிப்ப - இரத்தினகுண்டலங்கள் மிக்க அழகைச் செய்யவும், சிலையும் கையும் - வில்லும் கையுமாய், மெய்யும் வயம் திகழ் போர் வயிரம் கவசமும் ஆய் - உடம்பும் வீரம் விளங்கும் போருக்கு உரிய வச்சிரகவசமும் பொருந்தி, பொலம் குன்றின் புறத்து குதிப்பது கொலை வெம் சிங்கம் குருளை போல் - பொன்மயமான மேருமலையின்மீது குதிப்பதொரு கொலைத்தொழில்வல்ல கொடிய சிங்கக்குட்டிபோல, தட தேர்மேல் தனயன் ஒருவன் - பெரிய தேரின்மீது ஒருகுமாரன், தலைவன் களிக்க தலைப்பட்டான்-யாகசேனராசன் களிப்படையுமாறு (ஓமாக்கினியினின்று) வெளிப்பட்டுத் தோன்றினுன்; (எ - று.)

வலையம் - வலய மென்ற வடசொல்லின் இடைப்போலி; குண்டலம், கவசம் - வடசொற்கள். வில்லேந்திய கையும், உடம்பில் தரித்த கவசமும் உடையவனுய் என்பது, இரண்டாமடியின் பொருள். வயிரம் - வஜ்ர மென்ற வடசொல்லின் திரிபு; இது, நவரத்தினங்களில் ஒன்று; மிகவலியது. கொலை - 'ஐ' விகுதி பெற்ற தொழிற்பெயர். குருளை - இளமைப்பெயர். பொன் + குன்று = பொலங்குன்று;இப்புணர்ச்சி "பொன்னென்கிளவி யீறுகெட முறையின், முன்னர்த் தோன்றும் லகார மகாரம், செய்யுண்மருங்கிற றொடரிய லான" என்ற தொல்காப்பியவிதியால் அமைந்தது; பிற்காலத்தார் பொலமென்றே பொன்னிற்கு ஒரு பெயர் கூறுவர். பொன்மலை - தேருக்கும், சிங்கக்குட்டி - இராசகுமாரனுக்கும் உவமை. பொற்றேராதலால், பொன்மலை உவமை கூறப்பட்டது. குதிப்பது-பெயர். பிறழ, தயங்க, எறிப்ப - வினைச்செவ்வெண். (அஎ)

அதுகண்டு அனைவருங் களித்தல்.

தேரோடருக்கனருணமணிச்சிமயத்துதிப்பச்செவ்வியுட
னீரோடையிற்செந்தாமரைகணிறம்பெற்றலர்ந்துநின்றனபோல்
வீரோதயன்வந்துதிப்பளவின்மேன்மேன்மகிழ்ந்துமெய்களித்துப்
பாரோர்கண்கள்களித்தனவாற்பார்க்குந்தோறும்பரிவுற்றே.

(இ - ள்.) அருக்கன் - சூரியன், தேரோடு - தேருடனே, அருண மணி சிமயத்து - சிவந்த அழகிய உதயகிரியில், உதிப்ப - உதிக்க, (அதனால்), நீர்ஓடையில் - நீர்நிலைகளிலே, செம் தாமரைகள் - செந்தாமரைமலர்கள், செவ்வியுடன் நிறம் பெற்று அலர்ந்து நின்றன போல் - அழகுடனே நிறத்தையும்பெற்று மலர்ந்துநிற்பன போல,—வீர உதயன் வந்து உதிப்பு அளவில் - வீரத்தன்மை உதித்தற்கு இடமாயுள்ள அக்குமாரன் (தேரோடு சிவந்த ஓமாக்கினியினின்று மேலெழுந்து வந்து) தோன்றியவளவிலே,—பாரோர் - பூமியி லுள்ளவர்கள், பார்க்கும் தோறும் பரிவு உற்று - (அக்குமாரனைப்) பார்க்குந்தோறும் அன்புமிக்கு, மேல் மேல் மகிழ்ந்து - மிகவும்அதிகமாக மகிழ்ச்சிகொண்டு, மெய்களித்து-மனம்களிக்க, கண்கள் களித்தன - அவர்கள்கண்கள் மலர்ச்சிகொண்டு களிப்புத்தோன்ற விளங்கின; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

உவமையணி. அருணம், வீரோதயன் - வடசொற்கள். தாமரை - தாமரஸ மென்ற வடசொல்லின் திரிபு. அருண மணிச் சிமயம் என்பதற்கு - சிவந்த இரத்தினங்களையுடைய உதயகிரி யென்றும் பொருள்கூறலாம், சீவகசிந்தாமணியுரையில் நச்சினார்க்கினியர் 'உதயகிரியில் சிந்தூரவருவிவீழ்ந்த சிந்தூராகரத்திற் பிறந்து பதினாறுசதுர்யுகம் சிவப்பேறின முழுமாணிக்கம்' என்றதனால், உதயகிரி செம்மணிகளையுடையதாதலை அறிக. செவ்வி-இகரவிகுதிபெற்ற பண்புப்பெயர். செந்தாமரை யென்பதில், செம்மை – இனம்விலக்கவந்த அடைமொழி; வெண்டாமரை யுள்ளதனால். மெய் என்ற உடம்பின் பெயர் - இலக்கணையாய், அதன் அகத்துறுப்பாகிய மனத்தைக் குறித்தது. இனி, மெய்களித்து என்பதற்கு - உடல்பூரித்து என்றும் பொருள்கொள்ளலாம்; அப்பொழுது, களித்தல் - காரியத்தைக் காரணத்தாற் கூறிய உபசாரவழக்காம். களித்து - களிக்க என்ற செயவெனெச்சத்தின் திரிபு. உற்று - மிகுதியுணர்த்தும் உறு என்ற உரிச்சொல்லின் மேற்பிறந்த செயவெனெச்சம். மேல்மேல் என்ற அடுக்கு, மிகுதிபற்றியது.(அஅ)

நாடெங்கும் விழாக்கொண்டாடுதலும், திசைதெளிதலும்.

சங்கச்சங்கமிகமுழங்கச்சாந்தும்புழுகுமெறிந்தார்த்துத்
துங்கக்கொடியுந்தோரணமுந்தொடையும்பரப்பிச்சோமகனா
டங்கட்சயந்தனவதரித்தவமராவதிபோலார்வமெழத்
திங்கட்குழவியுற்பவித்ததிசைபோன்றனவெண்டிசையெல்லாம்.

(இ - ள்.) சோமகன் நாடு - சோமககுலத்தானான யாகசேனனது பாஞ்சால தேசம்,—சங்கம் சங்கம் மிக முழங்க - சங்குக்கூட்டங்கள் மிகுதியாகஒலிக்க, சாந்தும் புழுகும் எறிந்து ஆர்த்து - சந்தனக்குழம்பையும் கஸ்தூரிப்புழுகையும் (ஒருவர்மேல் ஒருவர்) வீசி ஆரவாரித்து, துங்கம் கொடியும் தோரணமும் தொடையும் பரப்பி - உயர்ந்த துவசங்களையும் தோரணங்களையும் மாலைகளையும் மிகுதியாகஅமைத்து அலங்கரித்து, அம் கண் சயந்தன் அவதரித்த அமராவதி போல்- அழகிய கண்களையுடைய சயந்தன் [தேவேந்திரகுமாரன்] அவதரிக்கப்பெற்ற அமராவதிநகரம்போல, ஆர்வம் எழ - அன்புமிக,—எண் திசை எல்லாம் - எட்டுத் திக்குக்கள்முழுதும், திங்கள் குழவி உற்பவித்த திசை போன்றன - இளம்பிறை உதிக்கப்பெற்ற திக்குக்கள் போலத் தாமாக விளங்கின; (எ - று.)

சோமகனுடு என்பதற்கும், அமராவதி என்பதற்கும் - இடவாகுபெயராக, சோமகனுட்டுச்சனங்க ளென்றும், அமராவதிநகரத்துவாழுந் தேவர்க ளென்றும் பொருள்கொள்க. சங்கம் என்பது - சங்கைக் குறிக்கும்போது ஶங்கமென்ற வடசொல் திரிந்ததும், கூட்டத்தைக் குறிக்கும்போது ஸங்க மென்ற வட சொல் திரிந்ததுமாம். சாந்து - சந்தந மென்ற வடசொல்லின் திரிபு. சாந்தும் புழுகும் போல்வனவற்றை மகிழ்ச்சிக்களிப்பால் ஒருவர்மேல் ஒருவர் தூவி உத்ஸவங் கொண்டாடுதல் இயல்பு; இதனை, கண்ணன் திருவவதரித்தவளவில் திருவாய்ப்பாடியிலுள்ளார் கொண்டாடிய செயல்களைக் கூறுமிடத்துப் பெரியாழ்வார் "கண்ணன் கேசவநம்பி பிறந்தினில், எண்ணெய் சுண்ண மெதிரெதிர் தூவிடக், கண்ணன் முற்றங் கலந்தள றாயிற்றே" என்றதனாலும் உணர்க: "நந்தன் வாழ் பெருந்தண் கானம் நலத்தகு பசும்பொற் சுண்ணஞ், சிந்துரப்பொடிகளோடு திசைதிசை கமழவீசி" என்ற பாகவதமுங் காண்க. திசைகள்தெளிதல் - நல்நிமித்தம்; 'கண்ணன் அவதரித்தருளிய தினமானது, சகல திசைகளும் நிர்மலமாகப் பெற்றதாய்ச் சந்திரனுடைய நிலாப்போலே யாவர்க்கும் சந்தோஷகரமாயிருந்தது' என்ற ஸ்ரீவிஷ்ணுபுராணமுங் காண்க. தோரணம், ஜயந்தன் - வடசொற்கள். திங்கள் என்பதை, தீம் கள் என எடுத்து, இனிமையான அமிருதகிரணத்தை யுடையதென்று காரணப்பொருள் கூறுவர். குழ - இளமை; உரிச்சொல்; அதனையுடையது, குழவி: இ - பெயர்விகுதி. அவதரித்த, உத்பவித்த - வடமொழிப்பெயரின்மேற் பிறந்த பெயரெச்சம். இந்திரகுமாரன் பிறந்தபொழுது அமராவதிநகரத்தில் தேவர்கள் களிப்புற்று விழாக்கொண்டாடியதுபோல, துருபதகுமாரன் தோன்றினபொழுது பாஞ்சாலநகரத்துச்சனங்கள் மகிழ்ச்சிமிக்கு விழாக்கொண்டாடினரென்பது, மூன்றுமடியின்கருத்து. (அக)

பின்பு திரௌபதி தோன்றுதல்.

பின்னுங்கடவுளுபயாசன்பெருந்திப்புறத்துச்சுருவையினுன்
மன்னுங்கடலாரமுதென்னவழங்குசுருதியவிநலத்தான்
மின்னுங்கொடியுநிகர்மருங்குல்வேய்த்தோண்முல்லைவெண்முறுவற்
பொன்னும்பிறந்தாள்கோகனகப்பூமீதெழுந்தபொன்போல்வாள்.

(இ - ள்.) பின்னும் - அதன்பின்பும், கடவுள் உபயாசன் - தெய்வத்தன்மையையுடைய உபயாசனென்னும் அம்முனிவன், பெரு தீப்புறத்து - பெரியயாகாக்கினியிலே, சுருவையினல் - சுருவையென்னும் ஓமத்துடுப்புக்கருவியைக் கொண்டு, மன்னும் கடல் ஆர் அமுது என்ன வழங்கு - பெருமைபொருந்திய பாற்கடலில் தோன்றிய அருமையான அமிருதம்போல ஆகுதிசெய்த [மிகஇனிய தேவருணவாகிய], சுருதி அவி - வேதமுறைமை தவறாத அவிர்ப்பாகத்தினது, நலத்தால் - நற்பயனல்,—மின்னும் கொடியும் நிகர் மருங்குல் - மின்னலையும் பூங்கொடியையும் போன்ற இடையையும், வேய் தோள் - மூங்கில்போன்ற தோள்களையும், முல்லை வெள் முறுவல் - முல்லையரும்புபோன்ற வெண்மையான பற்களையுமுடைய, பொன்னும் - பொன்போல் அருமையான அழகிய ஓர் பெண்ணும், கோகனகம் பூமீது எழுந்த பொன் போல்வாள் - செந்தாமரைமலரினின்று மேலெழுந்த திருமகளை யொப்பவளாய், பிறந்தாள் - தோன்றினுள்; (எ - று.)

பின்னும், பொன்னும்—உம்மைகள் - இறந்தது தழுவிய எச்சம். வைதிக முறைமைவழுவாது செய்யும் தவவேள்விகளின் ஆற்றலால் வேண்டியவற்றை வேண்டினபடியே பெறவல்லதிறமையுடைய முனிவனென்றற்கு, 'கடவுளுபயாசன்' என்றார். பெருந்தீ - மகிமையுடைய தீயுமாம். தீப்புறத்து, புறம்-ஏழனுருபு; [நன் - பெயர் - சடு.] சருவை - ஸ்ருவம் என்ற வடசொல்லின் திரிபு; இது, ஒரு ஓமபாத்திரவிசேடத்தின் பெயர். கடல் என்பதை, கள் தல் என்று பிரித்து, (சகரகுமாரர்களால்) தோண்டப்பட்டதென்று காரணப்பொருள் கூறுவர் ஒருசாரார்; கட்டல்-தோண்டல்: இங்குத்தொழிலாகுபெயர். ஆரமுது-பண்புத்தொகை; ஆர்ந்த அமுது எனக் கொண்டால், வினைத்தொகையாம். அவி - ஹவிஸ் என்ற வடசொல்லின் திரிபு. மின்னுவது, மின். இடைக்கு மின்னல் உவமை - நுண்ணிய வடிவத்துக்கும் ஒளிக்கும், அதற்குக்கொடி உவமை - மெல்லியதாய் ஒல்கியொசியும் வடிவிற்கும், தோளுக்கு இளமூங்கில் உவமை - திரண்டுருண்டுவளைந்தவடிவோடு செய்ப்பிற்கும், பல்லுக்கு முல்லையரும்பு உவமை - வெண்மையோடு வடிவிற்கு மென்க. முல்லை - மலர்க்கு முதலாகுபெயர். பொன் - உவமையாகுபெயர். கோகநதமென்ற வடசொல் திரிந்தது; கோகம் - சக்கரவாகப்பறவைகள், நதம் - கூவியொலித்தற்கு இடமானது என்று பொருள்படும். கோகநகப்பூமிதெழுந்த பொன் - இமயமலையில் மரகதப்பாறையில் பதுமையென்னுங் கயத்தில் தோன்றிய பொற்றாமரையில் திருமகள் தோன்றினளென்றும், திருப்பாற்கடல் கடைந்தகாலத்து அதனினின்று ஒருசெந்தாமரைமலரின்மீது திருமகள் தோன்றினளென்றும் வரலாறுகாண்க. சிவந்த அக்கினியினின்று தோன்றிய திரௌபதிக்குச் செந்தாமரைமலரின்மீது எழுந்த இலக்குமியை உவமைகூறினர். போல்வாள் - முற்றெச்சம். செல்வத்துக்குரிய தலைவியாதலாலும், பொன்னிறமுடைமையாலும், பெறுதற்கருமையாலும், பொன் என்று திருமகளுக்கு ஒருபெயர். சுருவையினுல் வழங்கு என்றும், நலத்தாற் பிறந்தா ளென்றும் இயையும். (கூ)

அப்பொழுது ஆகாயத்திலெழுந்த ஓர் அசரீரிவாக்கு.

மண்மேலொருத்தியரக்கர்குலமாளப்பிறந்தாள்வாமனுதற்
கண்மேலின்றுமிவள்பிறந்தாள்கழற்காவலர்தங்குலமுடிப்பா
னெண்மேலென்கொலினியென்றுங்கெவருங்கேட்பவொருவார்த்தை
விண்மேலெழுந்ததவன்புரிந்தவேள்விக்களத்தினிடையம்மா.

(இ - ள்.) 'ஒருத்தி - ஒருபெண், அரக்கர் குலம் மாள - இராக்கதர்குலம் அழியும்படி, மண்மேல் பிறந்தாள் - (முன்பு) பூமியினின்று தோன்றினாள்: இன்றும் - இப்பொழுதும், இவள் - இப்பெண், கழல் காவலர்தம் குலம் முடிப்பான்- வீரக்கழலை யணிந்த அரசர்களுடைய குலத்தை அழிக்கும்பொருட்டு, வாமனுதல் கண்மேல் - சிவபிரானது நெற்றிக்கண்ணாகிய அக்கினியினின்றும், பிறந்தாள்—; இனிமேல் எண் என்கொல் - இனிமேல் ஆலோசனை யாது உளது?' என்று—, ஒரு வார்த்தை - ஓர் அசரீரிவாக்கு, ஆங்கு - அப்பொழுது, அவன் வேள்வி புரிந்த களத்தினிடை எவரும் கேட்ப - அந்தயாகசேனன் யாகஞ்செய்த சாலையிலுள்ள எல்லோரும் கேட்க, விண்மேல் எழுந்தது - ஆகாயத்தில் உண்டாயிற்று: அம்மா - ஆச்சரியம்! (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல்,

சனகமகாராசா யாகஞ்செய்தற்பொருட்டுச் சாலையமைத்தற்காகக் கலப்பை யைக்கொண்டு பூமியை உழுதபொழுது அவ்வுழுபடைச்சாலினின்று பூமியில் ஒருபெண் தோன்றி அக்காரணத்தால் சீதையென்று பெயரிடப்பெற்று அவ்வா சனுல் வளர்க்கப்பட்டு வந்தனளென்றும், பின்பு அவள் இராமன் மனைவியாய் வாழ்க்கைப்பட்டு அப்பெருமானேடு வனவாசஞ்சென்றபொழுது இராக்கதராச னுன இராவணனுல் காமமோகத்தோடு எடுத்துக்கொண்டுபோய் இலங்கையிற் சிறைவைக்கப்பட்டு அதனுல் அப்பெருமான் இராவணனுதி ராக்ஷசர்குலம் முழுவ தையும் போர்செய்தழித்து வேரறுத்தற்குக் காரணமாயினளென்றுங் கூறப்படும் வரலாறு, இராமாயணத்தில் பிரசித்தம். அங்ஙனமே, திரௌபதி ஒருசமயத்தில் துரியோதனனைப் பரிகசித்து இகழ்ச்சிதோன்றச் சிரித்ததனுல் அவன்மனத்திற் பெருஞ்சினத்தைமூட்டி அதுகாரணமாக அவனுல் சபையில் மானபங்கப்படுத்தப் பட்டுப் பின்பு அதுநிமித்தமாகப் பாரதயுத்தத்தில் பலஅரசர்களும் பந்துமித்திர பரிவாரங்களுடன் இறத்தற்கு மூலமாய் நிற்றல், பாரதத்தில் பிரசித்தம். இது பற்றி, ஒரு வடமொழிமேற்கோளில் 'கிருதயுகத்தில் பரசுராமன்தாயான ரேணு கையும்,திரேதாயுகத்தில் சீதையும், துவாபரயுகத்தில் திரௌபதியும் சனங்களுக்கு மிருத்யுவாயினர்' என்று கூறுதலுங் காண்க. 'இனிமேல் எண் என்கொல்' என் கிறது, இந்நிகழ்ச்சி எவராலுந் தடுத்தற்கரியதெனத் தேற்றக்கருத்தை விளக்கும். உலகிற் பலரை யழிக்குமாறு முன்பு ஒருத்தி பஞ்சபூதங்களுள் நிலத்தினின்று தோன்றினுள், இன்று இவள் அப்பூதங்களுள் நெருப்பினின்று தோன்றினுள் என நயங் காண்க.

வாமன் என்ற பெயர் - சிறந்தவனென்று பொருள்படும். நெருப்பை 'வாம னுதற்கண்' எனப் பிறிதோராற்ருற்குறித்தது, பிறிதினவிற்சியணி; வடநூலார் பர்யாயோக்தாலங்கார மென்பர். வலக்கண் சூரியனும், இடக்கண் சந்திரனும், நெற்றிக்கண் அக்கினியுமாக இறைவனுக்குக் கண்மூன்றும் முச்சுடரென அறிக. அழித்தற்ருெழிற் கடவுளான சிவபிரான் மிகக்கோபங்கொள்ளுங்காலத்து விழிக் குங் கண்ணுய் அகப்பட்ட பொருள்களையெல்லாந் தவருது அழிக்கவல்ல அக் கினியினின்று அரசர்குலத்தை யழிப்பவளான திரௌபதி தோன்றினளெனப் பொருந்தக்கூறியவாறு. காவலர் - காத்தலில் வல்லவர்; அல்லது, காத்தலையுடை யவர்: கா வலர் என்றும், காவல் அர் என்றும் பிரிக்க. முடிப்பான் - 'பான்'விகுதி காலங்காட்டும் எதிர்காலவினையெச்சம். முன்னிரண்டடியிலுள்ள இரண்டுவாக் கியங்களை உபமான உபமேயமாகக் கொண்டு இடையில் உவமவுருபு வருவித்து எடுத்துக்காட்டுவமையணி யென்னலாம். என் என்ற முற்றே வினப்பொருளை விளக்கியதனுல், கொல் - அசை. 'இனி' என்பது - எதிர்காலங் காட்டுவதோர் இடைச்சொல். 'கண்மேனின்றும்' என்றும் பாடம். (கூக)

மகனைபும் மகளையும் பெற்றதனுல் துருபதன் மனமகிழ்தல்.

முற்ருேன்றியதன்குலமுதலான்முரட்போர்முனிக்குமுடிவுமவன்
பிற்ருேன்றியவக்கன்னிகையால்விசயன்றனக்குப்பெருநலமு
முற்ருேர்ந்துள்ளமிகத்தருக்கியுவந்தாங்கமைந்தானுயர்மகத்தாற்
பெற்ருேன்பெற்றபேறுமகப்பெற்ருர்தம்மிற்பெற்ருர்யார்.

(இ - ள்.) உயர் மகத்தால் பெற்றோன் - சிறந்த யாகஞ்செய்ததனால் (இப்ப டிப்பட்ட பிள்ளைகளைப்) பெற்ற யாகசேனன்,—முன் தோன்றிய தன் குலமுத லால் - முதலிற்பிறந்த தனது குமாரனால், முரண் போர் முனிக்கு முடிவும் - வலிய போரையுடைய துரோணாசாரியனுக்கு அழிவு உண்டாதலையும், அவன் பின் தோன்றிய அ கன்னிகையால் - அவனுக்குப்பின்புபிறந்த அப்பெண்ணால் விசயன் தனக்கு பெரு நலமும்-அருச்சுனனுக்குச்சிறந்த இன்பமுண்டாதலையும்' உற்று ஓர்ந்து - கருத்தில் ஊன்றி ஆராய்ந்து, ஆங்கு - அதனால், உள்ளம் மிக, தருக்கி - மனம் மிகக்களித்து, உவந்து அமைந்தான் - மகிழ்ந்து நிரம்பிநின்றான் [திருப்திபெற்றான்]: பெற்ற பேறு - அவன்பெற்ற பாக்கியத்தை, மக பெற்றார் தம்மில் பெற்றார் யார் - பிள்ளைகளைப் பெற்றவர்களுள்ளே அடைந்தவர் எவர்? [எவருமில்லையென்றபடி]; (எ - று.)

துருபதன் தான்கருதியபடி பகைவெல்லுதற்கு மகனையும் மணமுடித்தற்கு மகளையும் தகுதியாகப்பெற்றான் என்ற பொருளை, 'பெற்றபேறு மகப்பெற்றார்தம் மிற் பெற்றார் யார்' என்று விளக்கினர். தான் நினைத்தபடி புத்திரனும் புத்திரியும் புத்திரகாமயாகாக்கினியில் தோன்றியதனால், துரோணனுக்கு அழிவும் அருச்சுன னுக்கு ஆக்கமும் தன்கருத்தின்படி முடிவது நிச்சயமென்று சிந்தித்து மகிழ்ந்தன னென்க. குலமுதல் - குலம் வளர்தற்கு முதலாகுபவன் எனப் பிள்ளைக்கு ஒரு காரணக்குறி. முரண் - மாறுபாடும், பகைமையுமாம்.　(கூஉ)

திட்டத்துய்மனுக்குத் துரோணன் வில்வித்தை முற்றக் கற்பித்தல்.

கரணமறுவற்றிலங்குதிறற்கலைசொல்பவன்பாற்கனல்பயந்தோன்
சரணமலர்தன்றலைக்கொண்டுதனுநூலெனக்குத்தருகென்றான்
மரணமிவனாற்றனக்கென்பதுணர்ந்துங்குருவுமறாதளித்தா
னரணியிடத்திற்செறிந்தன்றோவதனைச்செகுப்பதழலம்மா.

(இ - ள்.) கனல் பயந்தோன் - அக்கினியினாற் பெறப்பட்டவனான அக் குமாரன்,—கரணம் மறு அற்று இலங்கு - அந்தக்கரணமான மனத்தில் களங்க மில்லாது தூய்மையுடையவனாய் விளங்குகிற, திறல் - வல்லமையிற் சிறந்த, கலை சொல்பவன்பால் - (பலர்க்குங்) கல்விகற்பிக்குங் குருவான துரோணாசாரியனிடத் திற்சென்று, சரணம் மலர் தன் தலை கொண்டு - (அவனது) திருவடித் தாமரை மலர்களைத் தன் தலையின்மேற்கொண்டு [காலில் விழுந்து வணங்கி], எனக்கு தனு நூல் தருக என்றான் - 'எனக்கு வில்வித்தையைக் கற்பித்துக் கொடுப்பாயாக' என்று வேண்டினான்; (வேண்ட), குருவும் - அந்தத் துரோணாசாரியனும், இவ னால் தனக்கு மரணம் என்பது உணர்ந்தும் - இவனால் தனக்கு மரணம் நிகழு மென்பதை யறிந்தும், மறாது அளித்தான் - மறுக்காமல் (தனுர்வித்தையைக்) கற்பித் துக் கொடுத்தருளினான்; அழல் அரணியிடத்தில் செறிந்து அன்றோ அதனை செகுப்பது - நெருப்பு அரணிக்கட்டையினின்று பிறந்தன்றோ அதனை அழிப் பது! அம்மா - ஆச்சரியம்! (எ - று.)

அரணி - தீக்கடைகோல்; அத்திக்கட்டை முதலிய சில. நெருப்பு அரணியி னின்று தோன்றியே அவ்வரணியை அழிக்கின்றதன்றோ? என்ற உபமானப்

பொருள், திட்டத்துய்மன் துரோணனிடத்தினின்று கல்வி கற்றே பின்பு அவனை அழிப்பவனாகிறான் என்ற உபமேயக்கருத்தை விளக்குதலால், பிறிது மொழிதலென்னும் அணி; இது வடமொழியில் அப்ரஸ்துதப்ரசம்ஸை யெனப்படும். துரோணன் தனக்குத் திட்டத்துய்மனால் மரணமென்று தெரிந்தும், விதிப்பயன் தவறாதென்பதை நோக்கியும், அவனுக்குத் தான் கல்விகற்பித்துக்கொடுக்கமாட்டேனென்றால் அவனுக்கு அஞ்சினனென்ற பழிமாத்திரமே மிஞ்சுமென்றும் கருதி மனத்திற் களங்கமின்றி உள்ளும்புறமும் ஒத்து அவனுக்கு வில்வித்தை முழுவதையுங் கற்பித்தன னென்க. 'கலைசொல்பவன்பால்' என்றவிடத்து 'கலசோற்பவன்பால்' என்ற பாடம் ஏட்டுப்பிரதியிற் காணப்பட்டது; அது, கலசத்தினின்று உற்பத்தியான துரோணனிடத்து என்று பொருள்பட்டுச் சிறக்கும். அம்மா என்றது, தனக்குக் கல்விகற்பித்துக் கொடுத்தவனையும் தான் அழிக்கவல்லவனாகுந் தன்மையை வியந்துகூறியவாறு. அன்றே - தேற்றம். தருகென்றான்-தருகவென்றான் என்பதில் வியங்கோளின் ஈற்று அகரம் தொக்கது; செய்யுள்விகாரம். (௧௯)

திருதராட்டிரனும் விதுரனும் தருமனை இளவரசுக்கு உரியவனெனமதித்தல்.

இவ்வா றமைந்தாங் கைவருட னீரைம் பதின்மர் நனிவளர
மைவான் மீனிற் பல்கோடி மன்வந் திறைஞ்சிப் புடைசூழத்
தெவ்வா றியவெம் பெருஞ்சேனைத் த்ருதராட் டிரனுந் தம்பியுமற்
றெவ்வா ரிவற்கென் றுதிட்டிரனை யொழுக்கத் தழகா லுட்கொண்டார்.

(இ - ள்.) இ ஆறு அமைந்து - (யாகசேனனுடைய செயல்கள்) இங்ஙனம் நிகழ,—ஆங்கு - அவ்விடத்தில் [அத்தினாபுரியில்], ஐவருடன் ஈர் ஐம்பதின்மர் - பஞ்சபாண்டவர்களும் துரியோதனாதியர் நூற்றுவரும், நனி வளர - நன்றாய்ச் செழித்து வளர்ந்துவர,—மை வான் மீனின் - கருநிறமுள்ள வானத்திற் காணப்படும் நக்ஷத்திரங்கள்போல, பல் கோடி மன் - அநேககோடிக் கணக்கான அரசர்கள், வந்து இறைஞ்சி புடை சூழ-திரளாகவந்து வணங்கிப் பக்கங்களிற் சூழ்ந்து நிற்க, தெவ் ஆறிய வெம் பெரு சேனை - பகைவர்கள் அடங்குதற்குக்காரணமான கொடிய பெரிய சேனையையுடைய, த்ருதராட்டிரனும்—, தம்பியும் - அவன்தம்பியான விதுரனும், இவற்கு மற்று ஒவ்வார் என்று - இவனுக்கு வேறு எவரும் ஒப்பாகமாட்டாரென்று, உதிட்டிரனை - தருமபுத்திரனை, ஒழுக்கத்து அழகால் உள்கொண்டார் - (அவனது) நல்லொழுக்கத்தின் அழகினால் மதித்துக்கொண்டார்கள்; (எ - று.)

அமைந்து - அமைய என்ற செயவெனெச்சத்தின் திரிபு. ஐவர், ஈரைம்பதின்மர் - தொகைக்குறிப்பு. ஈரைம்பதின்மர் - பண்புத்தொகைப் பன்மொழித்தொடர். நனி - மிகுதியுணர்த்தும் விசேடித்த உரிச்சொல். சூழ என்னும் வினையெச்சம், சேனை யென்பதன்பின் வருவிக்கப்பட்ட 'உடைய' என்னும் பெயரெச்சவினையைக் கொள்ளும். ஆறிய சேனை - பெயரெச்சம், காரியப்பொருளது. செய்யுளாதலின், 'இவற்கு' எனச் சுட்டுப்பெயர் 'உதிட்டிரனை' என்ற இயற்பெயரின்முன் வந்தது; பதின்மர் என்ற பெயரில், பத்து என்ற பகுதி ஈற்று உயிர்மெய் கெட்டது; இன்-சாரியை, ம்-எழுத்துப்பேறு, அர் - விகுதி. உட்கொள்ளுதல் - கருதுதல். (௨௦)

வேறு.

வீடுமன் தருமபுத்திரனை மதித்தல்.

பூதிந லந்திகழ் பூருகு லத்திற்
காதிப னாகிய னங்கனை வென்றோ
னீதியி னாலுநி றைந்தன னுண்ணூ
லோதிய கேள்வியு திட்டிர னென்னா.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) பூதி நலம் திகழ் - செல்வமும் மற்றை நன்மையும் விளங்கப்பெற்ற, பூரு - பூருவென்னும் அரசனது, குலத்திற்கு - வம்சத்திற்கு, ஆதிபன் ஆகி - தலைவனாய், அனங்கனை வென்றோன் - (பெண்ணாசையை ஒழித்ததனால்) மன்மதனை வென்றவனான வீடுமன்,—நுண் நூல் ஓதிய - நுட்பமாகச் சாஸ்திரங்களைக் கற்றறிந்த, கேள்வி - நூற்கேள்விகளையுமுடைய, உதிட்டிரன் - தருமபுத்திரன், நீதியினாலும் நிறைந்தனன் - நீதியாலும் நிறைந்தவன், என்னா - என்றுஎண்ணி, (எ - று.)—'அளித்தான்' என வருங்கவியில் முடியும்.

பூதி என்ற வடசொல் - ஐசுவரியத்தைக் குறிக்கும். பூரு - சந்திரகுலத்தில் யயாதியின் மக்களில் ஒருவன்; இவன், தனது தந்தையின் விருப்பத்தின்படி தன்இளமையை அவனுக்குக்கொடுத்து அவன்முதுமையைத் தான்பெற்றதனால் யதுமுதலிய தனது உடன்பிறந்தவர் நால்வரினும் மேம்பட்டு, தன்தந்தை மகிழ்ந்து தனக்கு அளித்த வரத்தின்படி அரசாட்சிச்செல்வத்துக்கும் குலப்பெருமைக்கும் மற்றையோரினுந் தலைமைபூண்டதனால், அச்சிறப்பு விளங்க 'பூதி நலந் திகழ் பூரு' எனப்பட்டான். இனி, 'பூதி நலந் திகழ்' என்பதைக் குலத்துக்கு அடைமொழியாக்குதலும் ஒன்று. இங்கே, பூதியென்பதற்கு - விபூதியென்று பொருள் கூறுதல் பொருந்தாது. தன் இளமையைத் தன் தந்தைக்குக் கொடுத்துப் பின்பு தான் அதனைவாங்கிக்கொண்ட அப்பூரு, தன்தந்தைவிருப்பத்தை நிறைவேற்றுதற்பொருட்டுத் தன்காதலைச் சிறிதுகாலம் ஒழித்துநின்றாற்போ லன்றி, வீடுமன் தன்தந்தைவிருப்பத்தை நிறைவேற்றுதற் பொருட்டுத் தன்காதலை என்றும் வென்று அவனினும் மேம்பட்ட உயர்வுபற்றி, 'பூருகுலத்திற்கு ஆதிபனாகி யனங்கனை வென்றோன்' எனப்பட்டான். இக்கருத்தை, கீழ்க் குருகுலச்சருக்கத்தில் சந்தனு வீடுமனைநோக்கி "முன்தந்தைக், குரிய பேரிளமை கொடுத்த கோமகனு முனக்கெதி ரல்லன்" என்று உரைத்ததனாலும் உணர்க. இனி, 'அனங்கனை வென்றோன்' என்பதற்கு - அழகினால் மன்மதனை வென்றவனென்று உரைத்தல் சிறப்பன்று. ஆதிபன் - அதிபன் என்பதன் விகாரம்; வடசொல். அநங்கன் என்ற வடமொழிப்பெயர் - ந + அங்கம் என்றுபிரிந்து, உடம்பில்லாதவனென்று பொருள்படும். சிவபிரானது தவத்தை யழிக்கத்தொடங்கியபொழுது கோபங்கொண்ட அக்கடவுளால் நெற்றிக்கண்ணின் நெருப்பினால் எரிக்கப்பட்டுச் சாம்பராய் அங்கத்தை [உடம்பை] யிழந்ததனால், அநங்கனென்று பெயராயிற்று. உம்மை - எச்சத்தோடு உயர்வுசிறப்பு. நீதி - தற்சமவடசொல்.

இதுமுதல் பதினான்கு கவிகள் - பெரும்பாலும் நான்காஞ்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களு மாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (கடு)

வீடுமன் தருமபுத்திரனுக்கு இளவரசுமுடி சூட்டுதல்.

மைந்தருடன்செயல்வழுவறவெண்ணிக்
குந்திபயந்தருள்குரிசிலையிவனே
யிந்தநிலக்கினியிளவரசென்றுங்
கந்தண்மதிக்குடைமுடியொடளித்தான்.

(இ - ள்.) மைந்தருடன் - (தனது உடன்பிறந்தவனது) மக்களாகிய திருதராட்டிரன் விதுரன் என்பவர்களோடு, செயல் வழு அற எண்ணி - செய்யவேண்டிய காரியத்தைக் குறித்துத் தவறில்லாதபடி ஆலோசித்து,—குந்தி பயந்தருள் குரிசிலை - குந்தி அன்போடுபெற்ற தலைப்பிள்ளையான தருமனை, இவனே இனி இந்த நிலக்கு இளவரசு என்று - இவனே இனி இந்த இராச்சியத்துக்கு இளவரசனென்றுசொல்லி, ஆங்கு - அப்பொழுது, அம் தண் மதி குடை முடியொடு அளித்தான் - அழகிய குளிர்ந்த பூரணசந்திரன் போன்ற ஒற்றைவெண்கொற்றக்குடையையும் கிரீடத்தையும் (அவனுக்குக்) கொடுத்தான்; (எ - று.)—ஆங்கு - அசையுமாம்.

ஒருவர்க்கொருவருள்ள அன்பின் மிகுதியா லாகிய தகுதியால், உடன்பிறந்தவன்மக்கள் இங்கு 'மைந்தர்' எனப்பட்டனர். குரிசில் - பெருமையிற் சிறந்தவன்; ஆண்பாற்சிறப்புப்பெயர்: இதனை 'குருஸ்ரீ' என்ற வடசொல்லின் சிதை வென்பர்; அச்சொல் வடதேசத்துப் பாஷைகளில் 'குருஜி' என வழங்கும். நிலக்கு = நிலத்துக்கு: அத்துச்சாரியை தொக்கது. குடைக்கு மதியுவமை - வட்டவடிவிற்கும், வெண்மைக்கும், குளிர்ச்சிக்கும், ஒளிக்கும். (கசு)

தருமபுத்திரன் குடையும் முடியும் பெற்று விளங்குதல்.

சந்தனுவின்றிருமரபுதயங்கச்
செந்திருமேவருசிறுவனுமப்போ
திந்துவொடாதபனிருவருமன்பால்
வந்துதழீஇமெய்வயங்கினனொத்தான்.

(இ - ள்.) சந்தனுவின் திரு மரபு தயங்க - சந்தனுவினது மேன்மையான குலம் விளங்க, செம் திரு மேவரு - செந்நிறமுடைய திருமகளோடு [இளவரசாட்சிச் செல்வத்தோடு] கூடிய, சிறுவனும் - இராசகுமாரனான தருமபுத்திரனும்,—அப்போது - அப்பொழுது, இந்துவொடு ஆதபன் இருவரும் அன்பால் வந்து தழீஇ மெய் வயங்கினன் ஒத்தான் - (குடையையும் முடியையும் பெற்றதனால்) சந்திரனும் சூரியனு மாகிய இருவராலும் அன்போடு வந்து தழுவப்பெற்று மேனிவிளங்குபவன் போன்றான்; (எ - று.)

குளிர்ந்து விளங்குகின்ற வெண்கொற்றக் குடைக்குச்சந்திரனும், மிக்க பிரகாசத்தையுடைய கிரீடத்துக்குச் சூரியனும் உவமை யெனக் காண்க. கீழ்க்கவியில் 'குடைமுடியொடு' என்றுவந்த முறைமையைநோக்கி 'இந்துவொடாதபன்' என முறையே நிறுத்தியது, முறைநிரனிறைப்பொருள்கோள். சந்தனுவம்சம் அநீதியுடைய துரியோதனனால் விளங்காது, நீதிநெறியுடைய தருமனாலேயே விளங்குவது பற்றி, 'சந்தனுவின்திருமரபு தயங்கச் செந்திருமேவருசிறுவன்'

என்றார். மேவரு என்பதில், வா - துணைவினை. இந்து, ஆதபன் - வடசொற்கள். ஆதபன் - நன்றாய்த் தபிப்பவன். (கஎ)

அதுகண்டு துரியோதனன் மிகப் பொறாமைகொள்ளுதல்.

துன்மதியானசுயோதனன்மாழ்கித்
தன்மதியாலருடந்தையையெய்திப்
புன்மதியாமுரைசிற்சில்புகன்றான்
மன்மதியாதுமதித்தலிலாதான்.

(இ - ள்.) துன்மதி ஆன சுயோதனன் - துர்ப்புத்தியுடையவனான துரியோதனன்,—மாழ்கி - (தருமனது யுவராசபட்டாபிஷேகத்தைக் கண்டு) வருந்தி,—மன் மதி யாதும் மதித்தல் இலாதான் - இராசநீதியைச் சிறிதும் ஆலோசியாதவனாய்,—அருள் தந்தையை எய்தி - தன்னைப்பெற்ற தந்தையான திருதராட்டிரனை அடைந்து,—தன் மதியால் - தனது எண்ணத்திற்கு ஏற்ப, புல்மதி ஆம் உரை சிற்சில் புகன்றான் - அற்பபுத்தியைக் காட்டுகிற சிலசில வார்த்தைகளைச் சொல்பவனானான்; (எ - று.)—அவற்றை, அடுத்த கவியிற் காண்க.

மூத்தவன் அரசாளுதலே இராசதருமமென்ற மனுநீதிமுறைமையை மதித்தால் இங்ஙனம் பொறாமைகொண்டு பேச இடமில்லை யாதலின், 'மன்மதியாது மதித்தலிலாதான் புகன்றான்' என்றார். துர்மதி - வடசொல். (கஅ)

துரியோதனனது பொறாமைவார்த்தை.

உன்பதம்யாவுமுதிட்டிரனுக்கே
மன்பதையோடுவழங்கினையெந்தா
யன்பதிலாவவனனுசர்மதத்தா
லென்பதமம்மவிறந்ததையின்றே.

(இ - ள்.) எந்தாய் - எமது தந்தையே! உன் பதம் யாவும் - உனது அரசாட்சியுரிமைகளெல்லாவற்றையும், உதிட்டிரனுக்கே - தருமபுத்திரனுக்கே, மன்பதையோடு - மக்கட்பரப்புடனே, வழங்கினை - கொடுத்திட்டாய்: அன்பு அது இலா அவன் அனுசர் மதத்தால் - அன்பில்லாத அவன் தம்பியருடைய செருக்கினால், என் பதம் இன்றே அம்ம இறந்தது - எனது நிலைமை இன்றைக்கே அந்தோ அழிந்திட்டது! (எ - று.)—'என்றலும்' என அடுத்தகவியோடு தொடரும்; ஒருதொடர்.

எந்தாய் - எந்தை யென்பது ஈறுதிரிந்த விளி. அன்பது என்பதில், அது என்பது - பகுதிப்பொருள் விகுதி. அநுஜர், மதம் - வடசொற்கள். அநுஜர் - பின்பிறந்தவர். அம்ம - இரக்கக்குறிப்பிடைச்சொல். இனி விரைவில் நிச்சயமாக அழிந்திடு மென்பான், 'இன்றே யிறந்தது' என்றான்; விரைவுந் துணிவும் பற்றிய காலவழுவமைதி; இறந்ததை யென்பதில், ஐ - அசை; இனி, இறந்ததையென்பதை வினைத்திரிசொல் என்றலும் உண்டு. அவனனுசர் - வீமன்முதலியோர். யா - அஃறிணைப்பன்மை வினாப்பெயர்; 'வை' விகுதி புணர்ந்துகெட்டது. இயல்பில் நற்குணமுடையனான தருமன் என்மேல் சிறிது அன்புகொள்ளினும் அவன்

தம்பியர் அங்ஙனங்கொள்ளாது என்னை அழித்தேவிடுவரென்பான், 'அன்பிலா அநுசர்' என்றான். இனி, 'அன்பிலா' என்பதை, அவன்,' அநுசர் என்ற இரண்டுக்கும் கூட்டலும் ஒன்று. (கூகூ)

அதற்குத் திருதராட்டிரன் கூறும் சமாதானம்.

என்றலுமைந்தனையிந்துகுலத்தோய்
நின்றிலையான்மனுநீதியிலையா
பொன்றியவெம்பிபதம்புதல்வர்க்கே
யன்றிநுமக்கரசாளுதலாமோ.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) என்றலும் - என்று (துரியோதனன்) சொன்னவளவிலே, மைந்தனை - தன்மகனான அவனை நோக்கி,--- (திருதராட்டிரன்), 'இந்து குலத்தோய் - சந்திரகுலத்தவனே! ஐயா—! மனு நீதியில் நின்றிலை - மனுதர்மசாஸ்திரத்திற் கூறப்பட்ட நீதிமுறைமையில் நீ நின்றாயில்லை; பொன்றிய எம்பி பதம்-இறந்து போன எமதுதம்பியான பாண்டுவுக்கு உரியதாயிருந்த இராச்சியத்தை, அரசு ஆளுதல்—,புதல்வர்க்கே அன்றி - அவன்பிள்ளைகளான பாண்டவர்க்கே யல்லாமல், நுமக்கு - (என்மக்களான) உங்கட்கு, ஆமோ - தகுமோ? [தகாதென்றபடி]; (எ - று.)—ஆல் அசை. இக்கவியில், 'என்றலும்', 'மைந்தனை' என்றவை, அடுத்த கவியில் 'என்றான்' என்ற முற்றைக் கொள்ளும்.

தொன்றுதொட்டு உலகத்தில் மிகப்பிரசித்தமான சந்திரகுலத்திற் பிறந்திருந்தும் இராசாங்க நீதிமுறைமையில் நீ நிலைநின்று பேசினாயில்லை யென்ற இழிவு விளங்க, 'இந்து குலத்தோய் மனுநீதியில் நின்றிலை' என்றான். திருதராட்டிரன் தான் பாண்டுவினும் மூத்தவனாயினும் 'மூத்தவன் அங்கவீனம் முதலிய குறைபாடுடையவனா யிருந்தால் அரசுரிமை அவனைவிட்டு அவன் தம்பியைச் சாரும்' என்ற நீதிநூல் முறைமைப்படி அரசாட்சி பிறவிக்குருடனான தனக்கு உரியதன்றித் தன்தம்பியான பாண்டுவுக்கே உரியதானதனால் 'பொன்றியவெம்பி பதம்' என்றான். குலத்தோய் - குலத்தான் என்பது ஈறுதிரிந்து விளியேற்று ஆ ஓவாயிற்று. மைந்தனை 'ஐயா' எனத் தந்தைக்குரிய சொல்லால் விளித்தது, அன்புபற்றிய மரபுவழுவமைதி. (சoo)

இதுவும் அது.

நீதியிலாநெறியெண்ணினைநீயிங்
கோதியவாய்மையினுறுபொருளின்று
லாதிபராயவரைவருநீரு
மேதினியாளுதல்வேத்தியல்பென்றான்.

(இ - ள்.) 'நீ—, நீதி இலா நெறி - நியாயமில்லாத வழியை, எண்ணினை - நினைத்தாய்: இங்கு ஓதிய வாய்மையின் - (அவ்வாறு எண்ணி) இப்பொழுது நீசொன்ன வார்த்தையில், உறு பொருள் இன்று - பொருந்திய சாரமொன்றும் இல்லை; (ஆகவே, இனி), ஆதிபர் ஆயவர் ஐவரும் - (அரசாட்சிக்குத்) தலைவர்களான அப்பஞ்சபாண்டவர்களும், நீரும் - நீங்களும், (ஒற்றுமைப்பட்டு), மேதினி

ஆளுதல் - பூமியை ஆளுதலே, வேந்து இயல்பு - இராசநீதி முறைமை,' என்றான் - என்று (திருதராட்டிரன்) கூறினான்; (எ - று.)—ஆல் - அசை.

தருமன் முதலிய பாண்டவர்கள் இராச்சியத்துக்குத் தலைவராய்நிற்க, நீங்கள் அவரை அனுசரித்து அவர்க்குக் கீழ்ப்படிந்து அவரானுமதியின்படி சிற்றரசராய் நிற்றலே தகுதியென்பது, பின்னிரண்டடியின்கருத்து. வேந்து + இயல்பு =வேத்தியல்பு; வேற்றுமையில் மென்றொடர் வன்றொடராயிற்று. (கoச)

அதனை மறுத்துத் துரியோதனன் கூறுதல்.

இகன்மிகுகன்னனுமென்னிளையோருஞ்
சகுனியுமுண்டுதகுந்துணைநெஞ்சி
லுகவையிலாரொடுறேனினியென்றே
முகமுகுரம்புரைமுதலொடுசொன்னான்.

(இ - ள்.) இகல் மிகு - வலிமைமிக்க, கன்னனும் - கர்ணனும், என் இளையோரும் - எனது தம்பிமார்களும், சகுனியும் - (என்மாமனான) சகுனியும் ஆகிய, தகும் துணை - தக்க துணை, உண்டு - (எனக்கு) உண்டு; (ஆதலால், யான்), நெஞ்சில் உகவை இலாரொடு இனி உறேன் - மனத்தில் (என்பக்கல்) நண்பில்லாத அப்பாண்டவர்களோடு இனிச் சேரமாட்டேன், என்று—, முகம் முகுரம் புரை முதலொடு சொன்னான் - முகம் கண்ணாடியையொத்த தனதுதந்தையான திருதராட்டிரனுடனே (துரியோதனன்) கூறினான்; (எ - று.)—ஏ - தேற்றம்.

பல பராக்கிரமங்களில் அனைவரினும் மிகச்சிறந்த கர்ணனை முக்கியமான துணையாகக்கொண்டு அவனுதவியினாலேயே அரசாளவும், பாண்டவராகிய பங்காளிகளையும் மற்றும் பலபகையாளிகளையும் வென்றழிக்கவுங் கருதினனாதலால், அவனை முதலிற்கூறியதனோடு, அவனுக்கு 'இகல்மிகு' என்ற அடைமொழியையுங்கொடுத்தான். இனி,'இகல்மிகு' என்ற அடைமொழியை இளையோர்க்கும், சகுனிக்குங் கூட்டலும் ஒன்று. பகையொழிக்கக் கர்ணனும்,கூடிக்குலாவி யரசாண்டு இன்புறத் தம்பியரும், சமயத்துக்கு ஏற்ற புத்தியுக்திகளைத் தந்திரமாகக்கூறச் சகுனியும் தக்கதுணையாயுண்டு என்றனனென்க. துணை யுண்டு - துணைவருள்ளார்; துணை - துணைவர்க்குப் பண்பாகுபெயர். இளையோர் - இளமையென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர். உகத்தல் - மகிழ்தல்: தொழிற்பெயர்; உக - பகுதி, வை - விகுதி. முதல் - முதல்வனுக்குப் பண்பாகுபெயர். முகம், முகுரம் - வடசொற்கள்.

'முகம்முகுரம்புரைமுதல்' என்றது, கண்ணாடி தான்பிறராற்காணப்பட்டுப் பிறரைத் தான்காணும் உணர்ச்சியில்லாததுபோலத் தான் பிறரால் காணப்பட்டுப் பிறரைத் தான்காணாத முகத்தையுடையவனென்றவாறு; பிறவிக்குருடனென்பது கருத்து. இனி, கண்ணாடிபோல விளக்கமுடைய முகமுடையவனென்பாருமுளர். அன்றியும், கண்ணாடி புறம்காட்டாதவாறுபோல வீரத்தால் முதுகுகாட்டாத முகமுடையவனென்றலும் ஒன்று; திருதராட்டிரன் அங்ஙனந்தேர்ந்த வீரனாதலைக் கீழ்ச் சம்பவச்சருக்கத்தால் அறியலாம். இனி, பிறவிக்குருடனை 'கண்ணாடிபோலு முகமுடையான்' என இகழ்ந்தவாறுமாம்.

நான்காமடி - 'மகன் முதிரம்பிகைமகனொடு சொன்னான்' என்று சில ஏடுகளிற் காணப்படுகின்றது; அப்பாடத்துக்கு - மகனான துரியோதனன் வயது சென்ற அம்பிகைபுத்திரனான திருதராட்டிரனோடு சொன்னானென்று பொருளாம். (கoஉ)

திருதராட்டிரன் மனம் மாறுபடுதல்.

பாதகனன்றுபகர்ந்தமொழிக்கே
பேதகனானபிதாமருளெய்தா
மேதகவாழ்வுறுவில்விதுரற்கு
நாதகுநல்லுரைநதிமகனுக்கும்.

இதுமுதல் நான்கு கவிகள் - குளகம்.

(இ - ள்.) பாதகன் - பாவியான துரியோதனன், அன்று பகர்ந்த - அப்பொழுது சொன்ன, மொழிக்கே - சொல்லினாலே, பேதகன் ஆன - மனம்மாறுபட்டவனாய்விட்ட, பிதா - அவன் தந்தையான திருதராட்டிரன்,—மருள் எய்தா - (இன்னது செய்வதென்று அறியாமல்) திகைப்படைந்து,—மேதக வாழ்வுறு வில் விதுரற்கும் - மேன்மைமிக வாழுகின்ற வில்வித்தையில் தேர்ந்த விதுரனுக்கும், நா தகு நல் உரை நதிமகனுக்கும் - நாவில்தக்க நல்ல வார்த்தைகளையே யுடைய கங்காபுத்திரனான வீடுமனுக்கும், (எ - று.)—இக்கவியில் 'பிதா', 'மருளெய்தா', விதுரற்கும்', 'நதிமகனுக்கும்' என்றவை, மேல் கoசு - ஆங் கவியில் வரும் 'கூறலும்' என்ற வினையெச்சத்தைக் கொள்ளும்.

பாதகன், பேதகன், பிதா - வடசொற்கள். மொழிக்கு என்பதில் நான்கனுருபு, மூன்றனுருபுக்கு உரிய கருவிப்பொருளில் வந்ததனால், உருபுமயக்கம். எய்தா - உடன்பாட்டெச்சம். அவனது அமைச்சரிற் சிறந்தவன் விதுரனென்பதுதோன்ற அவனுக்கு 'மேதகவாழ்வுறு' என்ற அடைமொழி கொடுத்தும், நடுவுநிலைமைதவறாது நீதியேபேசும் இயல்புடையான் வீடுமனென்பது தோன்ற அவனுக்கு 'நாதகுநல்லுரை' என்ற அடைமொழி கொடுத்துங் கூறினார். 'மேதகு' என்றும் பாடம். (கரு)

திருதராட்டிரன் விதுரனிடத்தும் வீடுமனிடத்தும் கூறும் வார்த்தை.

ஈண்டினியென்செய்வதெண்ணுமினிங்ஙன்
பாண்டவரோடுபயின்றுறையாது
தூண்டுபரித்துரியோதனன்முதலோர்
பூண்டனர்வெம்பகைவாழ்வுபொறாதார்.

(இ - ள்.) தூண்டு பரி துரியோதனன் முதலோர் - விரைவாகச் செலுத்தப்படுங் குதிரையையுடைய துரியோதனன் முதலிய என்பிள்ளைகள், இங்ஙன் - இங்கே, பாண்டவரோடு பயின்று உறையாது - பாண்டுகுமாரர்களோடு கலந்திராமல், வாழ்வு பொறுதார் - (அவர்களுடைய) செல்வவாழ்க்கையைப் பொறுக்க மாட்டாதவர்களாய், வெம் பகை பூண்டனர் - (அவர்களிடத்துக்) கொடிய பகைமையைக் கொண்டார்கள்; ஈண்டு இனி செய்வது என் - இங்கே இப்பொழுது நாம் செய்யவேண்டுவது யாது? எண்ணுமின் - ஆலோசனை செய்யுங்கள்; (எ - று.)

இங்஖ன் - இங்஖ன மென்பதன் விகாரம். பகை - பண்படி. வாழ்வு - பாண்டவரில் மூத்தவன் இளவரசனானமை. (௧0௪)

இதுவும் அது.

ஒருதிறனிந்நகருறைதரினொன்று
திருதிறன்மைந்தருமிகலுவர்மேன்மே
லருகணுகாவகையகலவிருந்தான்
மருவுறுநண்புவளர்ந்திடுமென்றே.

(இ - ள்.) இரு திறன் மைந்தரும் -(துரியோதனாதியரும் பாண்டவருமாகிய) இரண்டு வகைப் புதல்வர்களும், இ நகர் - இந்தநகரத்தில், ஒரு திறன் உறைதரின் - ஒருசேர வசித்தால், ஒன்றாது - ஒற்றுமைப்படாமல், மேல்மேல் இகலுவர் - மேலும்மேலும் பகைமைகொள்வார்கள்; அருகு அணுகா வகை -(ஒருதிறத்தாரோடு மற்றொருதிறத்தார்) சமீபத்தில் நெருங்காதபடி, அகல இருந்தால் -(இருதிறத்தாரும்) தூரத்தில் வெவ்வேறாக இருந்தால், மருவுறும் நண்பு வளர்ந்திடும் - மனங்கலக்கிற சினேகம் (அவர்கட்குள்) வளரும், என்று—, (எ - று.)—'கூறலும்' என வருங்கவியோடு தொடரும்.

உறைதரின், தா - துணைவினை. 'ஒருதிறல்' என்ற பாடம் சிறவாது. 'சேரவிருப்பிற் செடியும்பகை', 'அகலவிருக்கிற் பகையும் உறவாம்' என்ற பழமொழிகள் இங்கு உணரத்தக்கன. திறன் = திறம்: போலி. (௧0௫)

அதற்கு அவர்கள் கூறும் விடை.

இம்மொழிகூறலுமிருவருமெண்ணித்
தெம்முறையாயினர்சிறுபருவத்தே
யெம்முரைகொள்கலரினியவர்மதியே
தம்மதியேமதியாகுவதென்றார்.

(இ - ள்.) இ மொழி கூறலும் - இந்த வார்த்தையை (த் திருதராட்டிரன்) சொன்னவளவிலே,— இருவரும் - (விதுரன் வீடுமன் என்ற) இரண்டுபேரும், எண்ணி - ஆலோசித்து,—'சிறு பருவத்தே தெவ் முறை ஆயினர் - (துரியோதனாதிபர்கள்) இளம்பிராயத்திலேயே பகைத்தன்மை கொண்டிட்டார்கள்; எம் உரை கொள்கலர் - எங்கள் வார்த்தையைக் கேட்டு நடக்கமாட்டார்கள்: இனி - இனிமேல், அவர் மதி எது அ மதியே மதி ஆகுவது - அவர்களறிவு எதுவோ அந்தஅறிவே (அவர்கட்கு உரிய) அறிவாவது', என்றார் - என்று (உபேக்ஷையாகக்) கூறினார்கள்; (எ - று.)

தெவ் + முறை = தெம்முறை; "தெவ்வென் மொழியே தொழிற்பெயரற்றே, மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்" என்ற விதியாற் புணர்ந்தது. 'எம்முறை கேளார்' என்ற பாடத்துக்கு - நாங்கள் சொல்லும் நீதிமுறைகளைக் கேட்கமாட்டார்களென்று பொருளாம். மதியே தம்மதியே என்று பதம்பிரித்துப் பொருள் கொள்ளல், மோனைத்தொடைக்குப் பொருந்தாது. கூறலும் எண்ணி என்றார் என இயையும். மதி - வடசொல். (௧0௬)

பின்பு திருதராட்டிரன் புரோசனனென்னுந் துர்மந்திரியை வருவித்தல்.

விதுரனும்வார்கழல்வீடுமனுந்தம்
மிதயநிகழ்ந்ததியம்பியபின்னர்ப்
பொதுமையிலாதபுரோசனனென்னு
மதியுடைமந்திரிவருகெனவந்தான்.

(இ - ள்.) விதுரனும்—, வார் கழல் - நீண்ட வீரக்கழலையுடைய, வீடுமனும்—, தம் இதயம் நிகழ்ந்தது இயம்பிய பின்னர் - தங்கள் மனத்தில் தோன்றிய கருத்தைச் சொன்னபின்பு,— (திருதராட்டிரன்),— பொதுமை இலாத புரோசனன் என்னும் மதி உடை மந்திரி - நடுவுநிலைமையில்லாத புரோசநனென்னும் பேருள்ள அறிவுடைய மந்திரியை, வருக என - வருவாயாகவென்று அழைக்க, வந்தான் - (அவன் அருகில்வந்து) சேர்ந்தான்; (எ - று.)

பொதுமை - பகைவர் நண்பர் அயலார் என்னும் முத்திறத்தாரிடத்தும் தருமத்தின் வழுவாமல் ஒப்பநிற்கும் நிலைமை. 'மதியுடைமந்திரி' என்றது, வஞ்சனையாகத் தொழில்செய்தற்கு உரிய தந்திரங்களை அறிந்தவனென்றவாறு. இனி, இத்தொடர்க்கு - அறிவுகெட்ட மந்திரியென்றும் பொருள்கொள்ளலாம்; உடை - வினைத்தொகை. பொதுமையிலாத மந்திரிக்கு இங்குக் கொடுக்கப்பட்ட 'மதியுடை' என்ற அடைமொழி இங்ஙனம் இருவகைப் பொருள்பட்டுச் சிறக்கும் நயத்தை உணர்க. மந்த்ரீ - வடசொல்; ஆலோசனை யுடையவனென்று பொருள்படும்: மந்த்ரம் - ஆலோசனை. வருகென - தொகுத்தல். (கoஎ)

திருதராட்டிரனும் துரியோதனனும் புரோசனனுடன் சதியாலோசனைசெய்தல்.

வந்தவ மைச்சனு மைந்தனு மற்றத்
தந்தையு மங்கொரு தனிவயி னெய்திச்
சிந்தனை செய்தனர் தீமைம னத்தோர்
குந்திம காருயிர் கோடல்பு ரிந்தே.

(இ - ள்.) வந்த அமைச்சனும் - வந்த மந்திரியான புரோசனனும், மைந்தனும் - இராசகுமாரனான துரியோதனனும், அ தந்தையும் - அவன் தந்தையான திருதராட்டிரனும், தீமை மனத்தோர் - கொடிய மனத்தை யுடையவர்களாய், அங்கு ஒரு தனி வயின் எய்தி - அவ்விடத்தில் [அரண்மனையில்] ஏகாந்தமான ஓரிடத்தை யடைந்து, குந்தி மகார் உயிர் கோடல் புரிந்து - பாண்டவர்களுடைய உயிரைக் கொள்ளவிரும்பி, சிந்தனைசெய்தனர் - ஆலோசனை செய்தார்கள்; (எ று.) —மற்று - அசை.

அமைச்சன் - அமாத்யன் என்ற வடசொல்லின் திரிபு. குந்திமகார் - குந்தியின் பிள்ளைகள்; மகார்-மகனென்பதன் பன்மை. பஞ்சபாண்டவருள் நகுல சகாதேவர் மாத்திரிவயிற்றிற் பிறந்தவராயினும் அவர்களையும் சேர்த்து 'குந்திமகார்' என்றது, குந்தி மாத்திரிக்குச் சொல்லிக்கொடுத்த மந்திரத்தின் பலத்தினாலேயே அவ்விருவரும் பிறந்தன ராதலாலும், பாண்டுவோடு மாத்திரி சககமனஞ்செய்து இறந்துவிட இளமைதொடங்கி இவர்களையும் குந்தியேவளர்த்துவந்தனளாதலாலு மெனக் காண்க; "அந்தணன் முன்தரு மந்திர மைந்தினி லறுவரையுங் கடவுட், குந்தி பயந்தனன்" என மேற் கிருட்டிணன்தூதுசருக்கத்து வருவதும், "சந்தார்

திரள்தோள் தருமற்குந் தம்பியர்க்குங், கொந்தார்விசயற்குங் கோமாதா" என்ற பெருந்தேவனார் பாரதமும் இங்கு நோக்குதற்கு உரியவை. உயிர்கோடல் - உயிரை உடம்பினின்று பிரித்தல் [கொல்லுதல்.] (௧0அ)

வேறு.

அவர்கள்செய்த துராலோசனை.

ஆர ணாதிப ராரும்பு கழ்வது
நார ணாதியர் நண்ணுஞ்சி றப்பது
தோர ணாதிது லங்குபொற் கோபுர
வார ணாவத மாநக ரங்கணே.

இதுவும், வருங் கவியும் - குளகம்.

(இ - ள்.) ஆரண அதிபர் ஆரும் புகழ்வது - வேதங்கட்குத் தலைவர்களான அந்தணர்களெல்லோராலும் புகழப்படுவதும், நாரண ஆதியர் நண்ணும் சிறப்பது - திருமால் முதலிய தேவர்கள் எழுந்தருளிவாழும் மகிமையையுடையதும், தோரண ஆதி துலங்கு - தோரணம் முதலியவை விளங்கப் பெற்றதும், பொன் கோபுரம் - பொன்னினாலாகிய கோபுரத்தையுடையதுமான, வாரணாவதம் மா நகர் அங்கணே - வாரணாவதமென்னும் பெரிய நகரத்தினிடத்திலே, (எ - று.)— 'சென்றிருக்கத் திருவாய்மலர்க' என அடுத்த கவியோடு தொடரும்.

வேதங்களை ஓதுதலோடு ஓதுவித்தற்கும் உரியவர் அந்தணரே யாதலால், அச்சிறப்புத் தோன்ற, 'ஆரணாதிபர்' என்றார். நாரணாதியர் - நாராயணாதியரென்ற வடசொல்லின் விகாரம். 'தோரணஆதி' என்றது, துவசம் முதலியவற்றை. வாரணாவதம் ஆம் நகர் என்றுபிரித்து உரைத்தல், மோனைத்தொடைக்குப் பொருந்தாது. தலைமைபற்றி, திருமாலை ஆதியாக எடுத்துக் கூறினார். நண்ணும் - விரும்பும் எனினுமாம்.

இதுமுதல் ஒன்பதுகவிகள் - பெரும்பாலும் முதற்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள்.

சென்றிருக்கத்திருவாய்மலர்கென
வொன்றுபட்டுமகன்றொழுதோதினா
னன்றுதொட்டுயிரன்னவமைச்சனா
னன்றுபட்டதந்நன்னகரெங்குமே.

(இ - ள்.) சென்று இருக்க - போய் வசித்திருக்கும்படி, திரு வாய் மலர்க- (பாண்டவர்க்குக்) கட்டளைகூறியருள்வாயாக, என - என்று, மகன் - துரியோதனன், தொழுது ஓதினான்-(தன்தந்தையான திருதராட்டிரனை) வணங்கி (அவனை நோக்கிச்) சொன்னான்; ஒன்றுபட்டு - (அதற்கு அவன்) உடன்பட, அன்றுதொட்டு - அன்றைத்தினம் முதல், அ நல் நகர் எங்கும் - சிறந்த அந்த வாரணாவத நகரமுழுவதும், உயிர் அன்ன அமைச்சனால் - (திருதராட்டிரனுக்கும் துரியோதனனுக்கும்) உயிர்போன்ற மந்திரியான அப்புரோசனனால், நன்று பட்டது - நன்றாகப் புதுப்பிக்கப்பட்டது; (எ-று.)

மலர்கென - விகாரம். ஒன்றுபட்டு-ஒன்றுபட என்னும் எச்சத்தின் திரிபு. (௧௧0)

வாரணவதநகரம் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டமை.

சிற்பநூலிற்றிருந்தியமாக்களாற்
பொற்பமைந்துபொலிந்ததப்பொன்னகர்
கற்பகாடவியல்லதுகண்டவ
ரற்பமென்னவமராவதியையே.

(இ - ள்.) கண்டவர் - பார்த்தவர்கள், கற்பக அடவி அல்லது - கற்பகச் சோலையொன்றினை லல்லாமல், (மற்றையவற்றால்), அமராவதியை அற்பம் என்ன - (தேவலோகத்து) அமராவதிநகரத்தை (இந்நகரத்தினும்) இழிவானது என்று சொல்லும்படி,—அ பொன் நகர் - இயல்பிலேயே அழகுடைய அவ்வாரணவத நகரமானது, சிற்பம் நூலில் திருந்திய மாக்களால் - சிற்பசாஸ்திரத்திற் கைதேர்ந்த மனிதர்களால், பொற்பு அமைந்து பொலிந்தது - (புதுப்பிக்கப்பட்டுச்) செயற் கையழகு பொருந்தி விளங்கிற்று; (எ - று.)

பூலோகத்து வாரணவதநகரத்தினும் தேவலோகத்து அமராவதி நகரத்துக்கு உள்ள ஏற்றம் கற்பகச்சோலையையுடைமை ஒன்றே யன்றி மற்றைப்படி செல்வ வளம் முதலிய எவற்றாலும் அமராவதி வாரணவதத்தினுந் தாழ்ந்ததே யென்று கண்டவர் சொல்லும்படி அப்பொழுது அந்நகரம் புரோசனனால் சிறந்த சிற்பிக ளைக்கொண்டு புதுப்பிக்கப்பட்ட தென்பதாம். சில்பம், கல்பகம், அல்பம் என்ற வடசொற்கள் திரிந்தன. கற்பகம் - வேண்டுவார்க்கு வேண்டினவற்றை அவர் தன்நிழலில் வந்து நினைத்தமாத்திரத்திற் கற்பித்தலால் வந்த பெயர்; கல்பித்தல் - உண்டாக்குதல். சந்தாநம், மந்தாரம், பாரிஜாதம், கல்பகம், அரிசந்தநம் எனத் தேவ தரு ஐந்தாதலால், அவற்றின்தொகுதி, 'கற்பகாடவி' எனப்பட்டது. அடவீ - வடசொல்; காடு. கற்பகமென்பது - ஐந்துதருவுக்கும் பொதுப்பெயராகவும், அவற் றில் ஒன்றற்குச் சிறப்புப்பெயராகவும் வழங்கும். இக்கவி - உயர்வுநவிற்சியணி.

திருதராட்டிரன் பாண்டவரை வாரணவதஞ்செல்லச் சொல்லுதல்.

அறத்தின்மைந்தனுக்காங்கொருநாளவைப்
புறத்திருந்துபுகன்றனன்காவலன்
றிறத்துநின்னிளையோரொடுஞ்சென்றுதோண்
மறத்தினாற்றனிவாழுதியென்னவே.

(இ - ள்.) ஆங்கு - அதன்பின்பு, ஒரு நாள் - ஒருதினத்தில், காவலன் - திரு தராட்டிர மகாராசன், அவைப்புறத்து இருந்து - சபையில் வீற்றிருந்து, அறத் தின் மைந்தனுக்கு - தருமபுத்திரனை நோக்கி, 'திறத்து நின் இளையோரொடும் - வல்லமையுடைய உன்தம்பிமார்களுடனே, சென்று - போய், தோள்மறத்தினால் - புயவலிமையினால், தனி வாழுதி - தனித்து [வாரணவதநகரத்தில்] வாழ்வாயாக,' என்ன - என்று, புகன்றனன் - சொன்னான்; (எ - று.)

உனக்குத் தம்பியர்வலிமையும் தோள்வலிமையும் மிக்கிருத்தலால் அவையே போதும், வேறு சேனைமுதலியன வேண்டா என்பது, உட்கோள். புறம் - ஏழனுருபு. தருமத்தினின்று தவறினவர்களுக்குத் தக்கதண்டனை செய்து தருமத்தைக்

காத்தலால், யமனுக்கு 'தருமன்' என்று பெயர். அப்பெயரே இங்கு அறமெனக் குறிக்கப்பட்டது. 'தேவர்களை இருதிணையாலுங் கூறலாம்' ஆதலால், இங்கு அஃறிணையாற் கூறினர். (ககஉ)

திருதராட்டிரன் புரோசனனைத் தருமனுக்கு மந்திரியாக்குதல்.

புகன்றகேள்விப்புரோசனன்றன்னையிம்
மகன்றனக்குநீமந்திரியாகியே
யிகன்றவர்ச்செற்றினியோர்க்கினிமைசெய்
தகன்றஞாலமிவன்வழியாக்குவாய்.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) (இங்ஙனம் சொன்னபின்பு திருதராட்டிரன்), புகன்ற கேள்வி புரோசனன்தன்னை - சிறப்பித்துச் சொல்லப்பட்ட நூற்கேள்வியையுடைய புரோசனனை நோக்கி,—'நீ—, இ மகன்தனக்கு மந்திரி ஆகி - (இனி) இத்தரும புத்திரனுக்கு மந்திரியாய், இகன்றவர் செற்று - (இவனது) பகைவர்களை அழித்து, இனியோர்க்கு இனிமை செய்து - (இவனது) நண்பர்களுக்கு நன்மையைச் செய்து, அகன்ற ஞாலம் இவன் வழி ஆக்குவாய் - பரந்த நிலவுலகத்தை இவன்வழிப்படுத்துவாய்:' (எ - று.)—'என்ன' என வருங்கவியோடு இயையும். 'புரோசனன்தன்னை' என்ற செயப்படுபொருளுக்கும் 'என்ன' என்பதே முடிக்குஞ் சொல்.

தன்மந்திரியை நோக்கி, 'இனி நீ என் தம்பிமகனுக்கு மந்திரியாய் அவனுக்கு நல்லோரை ஆக்கலும், அல்லோரை அழித்தலுமாகிய அமைச்சுரிமைகளை ஒழுங்குபட இயற்றி அதனால் உலகம் அவன்வழியாம்படி செய்வாய்' என்று திருதராட்டிரன் உள்ளன்புடையான்போலச் சொல்லினனென்க. இனி, பின்னிரண்டடிகளுக்கு உள்ளுறைபொருள் வருமாறு:—இகன்றவர் செற்று - பகைவர்களான அப்பாண்டவர்களை அழித்து, இனியோர்க்கு இனிமைசெய்து - வேண்டியவர்களான துரியோதனாதியர்க்கு நன்மைசெய்து, அகன்ற ஞாலம் - பரந்த இராச்சியம் முழுவதையும், இவன்வழி ஆக்குவாய் - இத்துரியோதனனுக்கு உரியதாம்படி செய்திடுவாய் என்பதாம். 'புகன்று' என்ற பாடத்துக்கு - இவ்வாறு தருமனுக்குச்சொல்லியென்று கீழ்க்கவியின் அநுவாதமாம். இகன்றவர்ச்செற்று - ஐயுருபு உயர்திணையிடத்துத் தொக்கது; இரண்டாம் வேற்றுமைத் தொகையில் உயர்திணைப்பெயர்முன் வலிமிக்கது, "இயல்பின் விகாரம்." செற்றுஎன்பதில் செறு என்ற குறிலிணைப்பகுதி ஒற்றிரட்டி இறந்தகாலங் காட்டிற்று. இனியோர் - இனிமையென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர். (ககங)

புரோசனன் பாண்டவருடன் வாரணாவதஞ் செல்லுதல்.

என்னவாங்கணிறைஞ்சியனந்தரஞ்
சொன்னசொற்படிசூழ்படைவேண்டிவ
வென்னவுங்கொண்டிளவரசோடுமப்
பொன்னகர்க்கொடுபோயினனென்பவே.

(இ - ள்.) என்ன - என்றுசொல்ல, (புரோசனன்), ஆங்கண் - அவ்விடத்தில் [அல்லது அப்பொழுது], இறைஞ்சி - (அத்திருதராட்டிரனை) வணங்கி,

அனந்தரம் சொன்ன சொல்படி சூழ் படை வேண்டுவ என்னவும் கொண்டு - பின்பு (அத்திருதராட்டிரன்) சொன்ன சொல்லின்படி சூழ்ச்சிசெய்தற்குரிய ஆயுதங்களிலும் சேனை முதலிய பரிவாரங்களிலும் வேண்டியவை யெல்லாவற்றையும் உடன்கொண்டு,— இளவரசோடும் - இளவரசனான தருமனுடனே, (மற்றைப்பாண்டவர் நால்வரையுங் குந்தியையும்), அ பொன் நகர் கொடு போயினன்- அழகிய அந்த வாரணாவதநகரத்துக்கு அழைத்துக்கொண்டு சென்றான்; (எ-று.) —என்ப - அசை.

'என்ப' என்பது அசையாய் வருதலை, சீவகசிந்தாமணியுரையிலும், தொல்காப்பியவுரையிலும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியதனாலும் அறிக. இனி, இதனை, பகரவிகுதிபெற்ற பலர்பால் எதிர்காலமுற்றாகக்கொண்டு, என்றுசொல்வர் அறிந்தோர் என்று உரைத்தல், சிறப்பன்று. ஆங்கண் - அங்கண் என்பதன் நீட்டல். இரட்டுறமொழித லென்னும் உத்தியால், படை யென்பதற்கு - ஆயுதமும் சேனையுமாகிய இரண்டுபொருள் ஒருங்கு கொள்ளப்பட்டன. மூன்றாமடியிலுள்ள 'என்ன' என்பது - எவன் என்ற அஃறிணைப் பொதுவினைப் பெயரின் விகாரம்; அது இங்கே எஞ்சாமை யுணர்த்தும். கொடு - கொண்டு என்பதன் விகாரம். (௧௧௪)

பாண்டவரும் குந்தியும் புரோசனனுடன் வாரணாவதஞ் சென்று சிவதரிசனஞ் செய்தல்.

ஆரமார்புடையைவருங்குந்தியும்
பூரஞானபுரோசனநாமனுஞ்
சேரவெண்பிறைச்செஞ்சடைவானவன்
வாரணாவதஞ்சென்றுவணங்கினார்.

(இ - ள்.) ஆரம் மார்பு உடை ஐவரும் - மாலையையணிந்த மார்பையுடைய பஞ்சபாண்டவரும், குந்தியும்—, பூர ஞானம் புரோசனன் நாமனும் - நிறைந்த அறிவையுடைய புரோசனனென்னும் பெயருள்ள அம்மந்திரியும், சேர - ஒருசேர, வெள் பிறை செம் சடை வானவன் வாரணாவதம் சென்று - வெண்மையான கலைகுறைந்தசந்திரனை யணிந்த சிவந்த சடையையுடைய தேவனான சிவபிரான் எழுந்தருளியிருக்கிற வாரணாவதநகரத்திற் போய், வணங்கினார் - (அக்கடவுளைத்) தொழுதார்கள்; (எ - று.)

வாரணாவதநகரத்தில் பிரசித்தமாகக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கிற சிவபிரானது திருவிழாவைத் தரிசிக்கவேண்டுமென்ற ஒருவிருப்பம் தருமபுத்திரன்மனத்தி லுண்டாம்படி துரியோதனன் சில மந்திரிகளைக்கொண்டு தூண்ட, அங்ஙனமே தருமன் அங்குச்செல்ல விருப்பங்கொண்டதுவே வியாசமாகத் திருதராட்டிரன் பாண்டவரை வாரணாவதத்துக்குச் செலுத்தினனென அறிக. ஆரம் - முத்துமாலைக்கும், இரத்தினமாலைக்கும், பூமாலைக்கும் பொதுப்பெயராம். ஆரமார்புடை என்பதற்கு - சந்தனக்குழம்பையணிந்த மார்புடைய என்றும் பொருள் கொள்ளலாம். 'ஆரவெண்குடை' என்ற பாடத்திற்கு - முத்துக்களாலாகிய வெண்கொற்றக்குடையையுடைய வென்க; ஹாரம் - முத்து. பூரம் - பூர்ணம்: வடசொல். சேரச் சென்று வணங்கினாரென இயையும். வெண்பிறை யென்

பதில், வெண்மை - இனம் விலக்கவந்ததன்றி இயற்கைபற்றிவந்த அடைமொழி. பிறப்பது பிறையெனக் காரணக்குறி; பிறஎன்னும் பகுதி ஈறு தொக்கது ; ஐ - கருத்தாப்பொருள்விகுதி. 'வெண்பிறைச் செஞ்சடை' என்றதில், வெண்மையும் செம்மையுமாகிய மாறுபட்ட சொற்கள் வந்தது, முரண்தொடை. சிவபிரானது சடைக்கற்றைக்கு, 'கபர்த்தம்' என்று பெயர்.

'பிறைச்சடை' என்பதி லுள்ள கதை:—சந்திரன் தக்ஷமுனிவனது புத்திரிகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் மணஞ்செய்து கொண்டு அவர்களுள் உரோகிணி யென்பவளிடத்து மிகவுங் காதல்கூர்ந்து அவளுடனே எப்பொழுதுங் கூடிவாழ்ந்திருக்க, மற்றைமகளிரது வருத்தம் நோக்கி முனிவன் அவனை 'க்ஷயமடைவாயாக' என்று சபிக்க, அச்சாபத்தால் சந்திரன் பதினைந்து கலைகளுங் குறைந்து மற்றைக்கலை யொன்றையும் இழப்பதற்குமுன்னம் சிவபிரானைச் சரணமடைய, அப்பெருமான் அருள்கூர்ந்து அவ்வொற்றைக் கலையைத் தன் தலையிலணிந்து மீண்டுங் கலைகள்வளர்ந்துவரும்படி அனுக்கிரகித்தனன் என்பதாம். (குருவாகிய தனது மனைவியான தாரையைச் சந்திரன் கூடியமைபற்றிச் சினந்து பிருகஸ்பதி சபித்தசாபத்தால் அச்சந்திரன் கலைகள்குறைந்து சிவனைச்சரணமடைந்ததாகவுங் கதை கூறப்படும்.)

திருப்பாற்கடல் கடைகையில் அதினின்று உண்டான பலபொருள்களுடனே விஷமும் சந்திரனும் தோன்ற, திருமால் அவற்றில் விஷத்தைச் சிவபிரானுக்குக்கொடுத்து உண்ணச்சொல்லி அதனால் அப்பிரானுக்கு வெப்பம் உண்டாகாமல் தணிந்திருக்கும்பொருட்டு உடனே சந்திரனையுங் கொடுக்க, அதனை அப்பெருமான் சிரமேற்கொண்டனனென்றும் வரலாறு கூறப்படும். (ககடு)

பாண்டவர் வாரணாவதத்திற் கிருகப்பிரவேசஞ் செய்தல்.

அங்கவன் றனருள்பெற் றமைச்சனங்
கிங்கிதத்தொடியற்றியநீள்கொடி
மங்குறோய்மணிமாளிகையெய்தினார்
சங்கம்விம்மமுரசந்தழங்கவே.

(இ - ள்.) அங்கு அவன்தன் அருள் பெற்று - அவ் வாரணாவத நகரத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரானது கருணையைப் பெற்று,—அமைச்சன் அங்கு இங்கிதத்தொடு இயற்றிய - மந்திரியாகிய புரோசனன் அவ்விடத்தில் (தங்களைக் கொல்லவேண்டு மென்னும்) எண்ணக் குறிப்போடு கட்டியமைத்துவைத்த, நீள் கொடி மங்குல் தோய் மணி மாளிகை - உயர்ந்த துவசங்களில் மேகங்கள்படியப்பெற்ற இரத்தினங்கள்பதித்த மாளிகையை,—சங்கம் விம்ம முரசம் தழங்க எய்தினர் - சங்குகள் ஒலிக்கப் பேரிகைகள் ஆரவாரிக்க(ப் பாண்டவர்கள்) அடைந்தார்கள்; (எ - று.)

அருள்பெற்று எய்தின ரென்றும், இயற்றிய மாளிகை யென்றும் இயையும். இங்கிதம், முரஜம் - வடசொற்கள். விம்ம, தழங்க - வினைச்செவ்வெண். மாளிகையின்மேலே கட்டியுள்ள கொடிகளின்மீது மேகம்படிகின்றன வென அம்மாளிகையின் உயர்வையும், கொடியின்நீட்சியையுங் கூறியவாறும். (ககசு)

பாண்டவர் அந்த அரசுவீற்றிருத்தல்.

ஆவி யன்னவ மைச்சன்மொ ழிப்படி
மேவி யத்திசை வேந்தர்கு ழாந்தொழக்
கோவி னாணைந டத்திக்கு வலயத்
தேவி மெய்களிக் கச்சிறந் தாரரோ.

(இ - ள்.) ஆவி அன்ன அமைச்சன் மொழி படி - உயிரையொத்த (புரோசன னென்னும்) அந்த மந்திரியின் சொற்படி, மேவி - (அம்மாளிகையிற்) சேர்ந்து,—அ திசை வேந்தர் குழாம் தொழ - அந்தத்திக்கிலுள்ள அரசர்களுடைய கூட்டம் (தம்மை) வணங்க, கோவின் ஆணை நடத்தி - அரசாட்சிக்கு உரிய கட்டளையைச் செலுத்திக்கொண்டு, குவலயம் தேவி மெய் களிக்க சிறந்தார் - பூமி தேவி உடம்புகளிப்படையும்படி (பாண்டவர்கள்) சிறப்புற்றிருந்தார்கள்; (எ-று.)— அரோ - ஈற்றசை.

அவ்வமைச்சன் அகத்திற் பாண்டவர்க்குக் கேடுசூழ்கின்றன னாயினும், அவ்வுள்ளக்கருத்து எளிதில் வெளிப்படாதபடி புறத்துச் சொற்செயல்களால் அவர்கள் தன்னை மிக இனியனென்று கருதும்படி தந்திரமாக நடந்தமைபற்றி, 'ஆவியன்ன வமைச்சன்' என்றார். மொழிப்படி மேவி நடத்திச் சிறந்தாரென இயையும். இனி, அவ்வமைச்சன் கட்டளைப்படி வேந்தர்குழாம் மேவித்தொழ என இயைத்து உரைத்தலும் ஒன்று. குழாம், ஆணை - குலம், ஆஜ்ஞா என்ற வடசொற்களின் சிதைவு. குவலயம் - வடசொல்; கு - பூமி, வலயம் - மண்டலம். இனி, 'ஆவியன்னவமைச்சன்' என்றதை இகழ்ச்சிக் குறிப்பென்றலும் ஒன்று. குவலயத்தேவி மெய்களிக்க - நாடு நிலவள நீர்வளந் தவறாது செழிக்க என்றபடி.

வேறு.

பாண்டவர் அரக்குமாளிகையைக் கவனித்துப் புரோசனன்மீது சங்கைகொள்ளுதல்.

மன்ன ரைவரும் வாரணா வதந்தனின் மருவித்
துன்ன லார்தொழத் தொன்னிலம் புரந்திடு நாளிற்
பின்ன நெஞ்சுடைப் புரோசனன் பேதுறு மதியான்
முன்ன மேயினி தமைத்திடு மனைச்செயன் முன்னா.

இதுமுதல் மூன்று கவிகள் - குளகம்.

(இ - ள்.) மன்னர் ஐவரும் - பாண்டவராசர் ஐந்துபேரும்,—வாரணாவதந்தனில் மருவி - அவ்வாரணாவதநகரத்தில் வசித்து, துன்னலார் தொழ - பகைவர்கள் வணங்க, தொல் நிலம் புரந்திடும் நாளில் - தொன்றுதொட்டுவந்த இராச்சியத்தை அரசாளும் நாளில்,—பின்னம் நெஞ்சு உடை புரோசனன் - மாறுபட்ட மனத்தையுடைய புரோசனன், பேது உறு மதியால் - மாறுபாடுகொண்ட தன் அறிவினால், முன்னமே இனிது அமைத்திடு - (தாங்கள் அந்நகரத்துக்கு வரு) முன்னமே (தங்களுக்கென்று) அழகிதாகக் கட்டியமைத்துவைத்த, மனை-அரக்கு மாளிகையின், செயல் - அமைப்பை, முன்னா - கருதி, (எ - று.) — 'என்றார்' என கஉ) - ஆங் கவியோடு முடியும்.

திருதராட்டிரனும் துரியோதனனும் புரோசனனுடன் இரகசியமாக ஆலோசனைசெய்தமையை அறிந்த விதுரன் வாரணாவதநகரத்தில் குறிக்கொண்டு தற்காத்து உய்யும்படி பாண்டவர்க்கு அறிவுறுத்தினனாதலின், அம்மூத்தோர்சொல் வார்த்தையை அமிருதமெனக்கொண்ட அவர்கள் அரக்குமாளிகை யமைப்பை நுட்பமாக ஊகித்து உணர்ந்து அதனால் புரோசனன்வஞ்சனையை அறியலானாரென்க. 'இனிதமைத்திடுமனை' என்றதனால், தன்வஞ்சனை பாண்டவர்க்குத் தெரியாதவண்ணம் மிக அழகிதாகவும் எல்லாச்சௌளக்கியங்கட்கும் இடமாகவும் அமைத்து வைக்கப்பட்டிருந்தது அம்மாளிகையென விளங்கும். துன்னலார் - எதிர்மறை வினையாலணையும்பெயர்; சேராதவரென்று பொருள்படும். நிர்ணம்-வடசொல். பின்னநெஞ்சு - புறமாகிய சொற்செயல்களோடு ஒற்றுமைப்படாத அகமென்க. பேது - பேதமென்ற வடசொல்லின் திரிபு.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவும் பத்தொன்பது கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய நெடிலடி நான்கு கொண்ட கலிநிலைத்துறைகள்; இவை-காப்பியக்கலித்துறையெனவும், விருத்தக்கலித்துறையெனவும் வழங்கப்படும். (ககஅ)

மெழுகினானமக்காலயம்வகுத்ததும்விரகே
யொழுகுகின்றதன்னொழுக்கமும்வஞ்சனையொழுக்கே
யெழுகடற்படையாவையுமிவன்வழியனவே
தொழுதகையுளும்படையுளசூழ்ச்சியும்பெரிதால்.

(இ - ள்.) மெழுகினால் நமக்கு ஆலயம் வகுத்ததும் விரகே - நமக்கு (இவன்) மெழுகினால் சிறந்தமாளிகையை அமைத்துவைத்ததும் வஞ்சனையேயாம்; ஒழுகுகின்ற தன் ஒழுக்கமும் வஞ்சனை ஒழுக்கே - (இனியவன்போல) ஒழுகுகிற இவனுடைய ஒழுக்கமும் வஞ்சகமான நடத்தையேயாம்; எழு கடல் படை யாவையும் இவன் வழியனவே - எழுசமுத்திரம்போன்ற [மிகவும் அதிகமான] சேனைகளெல்லாம் இவன்வசத்திலுள்ளனவே:தொழுத கையுளும் படை உள - (பகைவர்களுடைய) குவித்து அஞ்சலிசெய்கிற கைகளினுள்ளும் ஆயுதங்கள் இருக்குமன்றோ! சூழ்ச்சியும் பெரிது - (அவர்களுடைய) சதியாலோசனையும் மிக்கதேயாம்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கீழ் ககச - ஆங் கவியிற் கூறியபடி புரோசனன் அத்தினாபுரியினின்று வரும்பொழுது துரியோதனனது கருத்தின்படியே தன்வசப்பட்டு நடத்தற்கு உரிய சேனைகளை மிகுதியாக உடன்கொண்டு வந்துள்ளா னாதலின், அச்சேனைகளைக் குறித்தும் பாண்டவர் சங்கிப்பாராயினரென்க.

"தொழுதகையுள்ளும் படையொடுங்கு மொன்னா, ரழுதகண்ணீரு மனைத்து" என்ற திருக்குறளும், 'ஒன்னார்குறிப்பை யுணரவல்லார்க்கு அவர்தொழுத கையகத்தும் படைக்கலம் மறைந்திருக்கும்; அவர் அழுதகண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருத்தற்கு இடனாம். தாம் நட்பென்பதனைத் தம் கையானுங் கண்ணானுந் தேற்றிப் பின்கோறற்கு வாங்கவிருக்கின்றபடைக்கலம் உய்த்துணர்வுழித்தேற்றுகின்றபொழுதே அவற்றுள்ளே தோற்றுமென்பார், 'ஒடுங்கும்' என்றார்; பகைவர் தம் மென்மை காட்டித் தொழினும் அழினும் அவர்குறிப்பையே நோக்கிக் காக்க

வென்பதாம். இதனால், அவரைச் செயலால் தெளியற்கவென்பது கூறப்பட்டது' என்ற அதன் பரிமேலழகருரையும், "தொழுததங் கையினுள்ளுந் துறுமுடி யகத் துஞ் சேர, வழுதகண் ணீரினுள்ளு மணிகலத் தகத்து மாய்ந்து, பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுடனொடுங்கும் பற்றா, தொழிக யார்கண்ணுந் தேற்றந் தெளிகுற்றார் விளிகுற்றாரே" என்ற சீவகசிந்தாமணியும், 'கையிலும் முடியிலுங் கண்ணீரிலும் பூணிலும் கொல்லும்படை ஒடுங்கு மாதலால், அப்பழுதை ஆராய் ந்து அக்கூடாநட்புடையோரைத் தம்மிடத்தினின்று நீக்கிப் பின்னும் யாவர் சில ரிடத்துந்தெளிதலைப் பற்றாதொழிக; அன்றித் தெளிதலுற்றார் விளிதலுற்றார்' என்ற அதன்நச்சினார்க்கினியருரையும் உணரத்தக்கன. ஆலயம் - வடசொல். ()

சங்கையுண்டினியுண்டியுஞ்சாந்தமும்பூணும்
பொங்குநுண்ணிழைத்துகிலுமந்தாமமும்பூவு
மிங்கிவன்பரிந்தியற்றியகோடலமென்றார்
கங்கைநீர்தவழ்கழனிசூழ்பழனநாடுடையார்.

(இ - ள்.) 'சங்கை உண்டு-(இவனிடத்து நமக்குச்) சந்தேகமுள்ளது: இனி- இனிமேல், இங்கு இவன் பரிந்து இயற்றிய - இவ்விடத்தில் இவன் (நம்பக்கல்) அன்புடையான்போன்று அமைக்கின்றனவான, உண்டியும் - உணவுகளையும், சாந்தமும் - சந்தனத்தையும், பூணும் - ஆபரணங்களையும், பொங்கு நுண் இழை துகிலும் - சிறந்து விளங்குகின்ற நுண்ணிய நூலினாலாகிய ஆடைகளையும்,அம் தாமமும் - அழகிய மாலைகளையும், பூவும் - மலர்களையும், கோடலம் - (ஆராயாது) கொள்ளோம்,' என்றார் - என்று (தமக்குள்) நிச்சயித்தார்கள்: கங்கை நீர் தவழ் கழனி சூழ் பழனம் நாடு உடையார் - கங்காநதியின் நீர்பாய்கிற கழனிகள் சூழ்ந்த மருதநிலத்தை யுடைய குருநாட்டுக்கு உரியவர்களான பாண்டவர்கள்; (எ - று.)

சங்கை - சங்கா என்ற வடசொல் ஆவீறு ஐயாயிற்று. தாமம் - இரத் தினவாரங்களுக்கும், பூமாலைக்கும் பொது. இயற்றிய - இறந்தகாலப் பலவின் பால் வினையாலணையும்பெயர்; உண்டி முதலியவற்றுக்கு அடைமொழி; இதனைப் பெயரெச்சமாகக் கொள்ளுதல் சிறப்பன்று: முடிக்குஞ்சொல்லுக்குப் பின்னே வந்ததனால். கோடலம் - தன்மைப்பன்மை யெதிர்மறைமுற்று.

அடிசில் நீர்முதலிய உண்ணப்படும்பொருள்களில் தீங்குவராமற் காத்தற்கு அவற்றைக் கருங்குரங்கிற்கு இட்டு ஆராயவேண்டு மென்றும், சந்தனம் முதலிய வற்றை அரசவன்னப்பறவையின் கண்ணிலும் சக்கரவாகப்பறவையின்முகத்தி லும் உறுத்தித் தூய்மைகண்டல்லது கைக்கொள்ளலாகாதென்றும்,நஞ்சுகலந்திரு ப்பின் குரங்கு உண்ணாது, அன்னம் கண்களினின்று இரத்தஞ்சொரியும், சக்கர வாகம் முகங்கடுக்கும் என்றும், இன்னும் இதுபோலவும் சிந்தாமணி முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ள விஷயம் இங்கு அறியத்தக்கது.

("பூந்துகில் மாலை சாந்தம் புனைகலம் பஞ்சவாச, மாய்ந்தளந் தியற்றப்பட்ட வடிசில்நீ, ரின்ன வெல்லாம், மாந்தரின் மடங்க லாற்றற் பதுமுகன் காக்கவென் றான், கேந்துபூண் மார்ப னேவ வின்னண மியற்றி னானே" என்ற சீவகசிந்தா மணிச் செய்யுள் இங்கு ஞாபகத்துக்கு வருகின்றது.) (கஉ)

சிற்பியொருவன் வீமனிடம் வந்து ஒருசெய்திசொல்லத்தொடங்குதல்.

ஐயமுற்றிவரிருப்புழிமயனினுமதிகன்
சையமொத்ததோள்வலனுடைத்தபதியனொருவன்
வையமுற்றுடைவீமனையொருதனிவணங்கி
யையபட்டதையறிந்தருளாமுறையென்றான்.

(இ - ள்.) இவர் - இந்தப் பாண்டவர்கள், ஐயம் உற்று இருப்பு உழி - (இவ்வாறு புரோசனனிடத்திற்) சந்தேகங் கொண்டிருக்கும்பொழுது,--மயனினும் அதிகன் - (சிற்பத்தில் அசுரத்தச்சனான) மயனைக்காட்டிலும் மேம்பட்டவனான, சையம் ஒத்த தோள் வலன் உடை தபதியன் ஒருவன் - மலைபோன்ற தோள்களின் வலிமையையுடைய சிற்பியொருத்தன், வையம் முற்று உடை வீமனை ஒரு தனி வணங்கி - பூமிமுழுவதையும் ஆளுதற்கு உரியவனான வீமனை ஏகாந்தமான இடத்தில் தான் தனியனாய்வந்து கண்டு வணங்கி,—'ஐய - தலைவனே! பட்டதை-நடந்ததொருசெய்தியை, ஆம் முறை-நடந்தபடியே, அறிந்தருள்- (நான்சொல்லக் கேட்டு) அறிந்தருள்வாயாக,' என்றான் - என்று சொன்னான்; (எ-று.)—அச்செய்தி, அடுத்த மூன்றுகவிகளில் விவரமாகக் கூறப்படும்.

இருப்புழி = இருப்பு + உழி; இருப்பு - இருத்தல், 'பு'விகுதி பெற்ற தொழிற்பெயர்: அதனையுடைய உழி - இடம்; இங்கே கால மென்க. மயனினும், உம் - உயர்வுசிறப்பு. அதிகன் - வடசொல். வலன் - பல மென்ற வடசொல்லின் திரிபாகிய வல மென்பதன் இறுதிப்போலி. ஸ்தபதி யென்ற வடசொல், தபதி யென விகாரப்பட்டது; அதன்மேல் அன்-ஆண்பால்விகுதி. வையம்-(பொருள்களை) வைக்குமிடம். வீமன் தனது பல பராக்கிரமங்களால் அனைவரையும் வென்று நிலவுலக முழுவதையும் தனதாக்கிக்கொள்ள வல்லவ னென்பார், 'வையமுற்றுடை வீமன்' என்றார். ஒரு தனி - தன்னந்தனி. பட்டது - இறந்தகால வினையாலணையும்பெயர். அறிந்தருள் - வினைப்பகுதியே ஓசைவேறுபாட்டால் ஏவலொருமையாய்நின்றது. வையமுற்றுஉடை வீமன் என்றதொடருக்கு-நிலவுலகத்தாரெல்லாரும் தன்முன் தோல்வியடைதற்கு ஏற்ற வீமனென்றும் பொருள் கூறலாம். பாண்டவர்க்கு அனுகூலமாக விதுரனிட்ட கட்டளையைப் பிறர் அறியாமல் நிறைவேற்றிய வல்லமையுடைய சிற்பியாதலின், இவனை, 'சையமொத்த தோள்வலனுடைத் தபதியன்' என்று விசேடித்துக்கூறினார். 'வையமுற்றுடை' என்று வீமனுக்குக் கொடுத்த அடைமொழியால், ஆற்றலிற் சிறந்த அவனே பாண்டவரைவரையுங் காக்கும் உபாயத்தைக் கூறக் கேட்டற்கு உரியவ னென்பது தோன்றும். (கஉக)

இதுமுதல் மூன்று கவிகள் - ஒருதொடர்: அச்சிற்பி கூறும் விவரம்.

நுந்தையேவலிற்கம்மியர்நூதனமாக
விந்தமாநகர்த்திருமனையியற்றிடுநாளின்
வந்தமந்திரிவஞ்சனையறிந்தறன்வடிவாந்
தந்தையென்னையுமேவினன்றன்மையினுணர்ந்தே.

(இ - ள்.) நுந்தை-உமது பெரியதந்தையாகிய திருதராட்டிரனது, ஏவலின்- கட்டளையினால், கம்மியர் - சிற்பிகள், நூதனம் ஆக - புதுமையாக, இந்த மா நகர்

திருமனை இயற்றிடு நாளின் - பெரிய இந்த வாரணவதநகரத்திலே அழகிய இந்த மாளிகையைச் செய்தபொழுது, அறன் வடிவு ஆம் தந்தை - தருமசொரூபியாகிய (உமது) சிறியதந்தையான விதுரன், வந்த மந்திரி வஞ்சனை அறிந்து - (மாளிகைகட்டுவித்தற்கு) வந்த புரோசனனென்னும் மந்திரியினது வஞ்சனையை அறிந்து, என்னையும் தன்மையின் உணர்ந்து ஏவினன் - என்னையும் என்குணத்தால் நம்பத்தக்கவனென்று அறிந்து (இம்மாளிகையமைக்குஞ் சிற்பிகளுள் ஒருவனுயிருந்து தொழில்செய்யும்படி) கட்டளையிட் டனுப்பினன்; (எ - று.)—ஏ - ஈற்றசை; தேற்றமுமாம்.

'அறன்வடிவாம்' என்றது - மிக்கதருமமுடையானதலால் தருமத்தின் வடிவமேயாகுபவனென்ற பொருளோடு, யமதருமராசனது அம்சமானவனென்ற கருத்தையும் விளக்கும். நுந்தை - நுந்தந்தை; நுந்தையென்றபெயரில் நகரத்தின் மேலுள்ள உகரம் அரைமாத்திரையாய்க் குறுகியொலிப்பதென்றும், அதனைக் குற்றியலுகரத்தின்பாற்படு மென்றுங் கூறுதல், இலக்கணநூலார்கொள்கை. கர்மம் - சிற்பம் முதலிய தொழில்; அதனையுடையவன், கர்மீ: இவ்வடசொல்; கம்மியெனத்திரிந்து, 'அர்'என்ற பலர்பால்விகுதி பெற்று, கம்மியரென நின்றதென்க. நூதனம் - வடசொல். என்னையும், உம் - இறந்தது தழுவிய எச்சம்.

யமன்விதுரனகப்பிறந்த விவரம்:—மாண்டவியனென்ற முனிவன் வனத்தில் தனது ஆச்சிரமத்தின் வாயிலில் மரத்தடியில் மௌனவிரதத்துடன் தவயோகஞ் செய்துவருகையில், அரசனரண்மனையில் திருடிய கள்ளர்கள் வந்து தாம்கவர்ந்த பொருள்களை அவ்வாச்சிரமத்தினுள் ஒளித்துத் தாங்களும் அங்கு ஒளித்துநின்றனர்; கள்ளரைத் தேடித்தொடர்ந்துவந்த ராஜசேவகர்கள் முனிவனைக்கண்டு கள்ளர்செய்தியைக் குறித்து விசாரிக்க, மௌனியான அவன் யாதொருவிடையும் கூறவில்லை: பின்பு, அக்காவலாளர்கள் அவ்வாச்சிரமத்தினுட் புக்கு நாடிக் கள்ளர்களைப் பொருள்களுடனே கண்டு, முனிவனையும் அவர்கட்கு உடந்தையானவனென்று சங்கித்து, அவர்களுடன் பிடித்துக் கட்டிக் கொணர்ந்து அரசன்முன் விட்டு, அவன் இட்ட கட்டளைப்படி சோரர்களைக்கொன்று முனிவனைக் கழுவேற்றினர்கள்; தருமாத்துமாவான முனிவன் யோகபலத்தால் இறவாமல் வெகுகாலம் அக்கழுமுனையில் நின்று உணவின்றித் தவம்புரிந்து, பின்பு அதனையறிந்த அரசனால் கழுமுனையினின்று கீழிறக்கப்படுமளவில், அச்சூலம் வெளியிழுக்க முடியாமையால் புறத்துள்ள பகுதிமாத்திரமே தறிக்கப்பட்டது: உடலின் அகத்தேயுள்ள சூலத்துடனே சஞ்சரித்து அதனால் ஆணிமாண்டவியனென்று பேர்பெற்ற அம்முனிவன், பின்பு யமபுரிக்குச்சென்று யமனைநோக்கி 'யான்செய்த தீவினை யாது?என் எனக்கு இப்படிப்பட்ட கொடியதண்டனை வாய்த்தது?உள்ளபடி சொல்' என்று வினவ, யமன்'நீ இளமையில் தும்பியைப்பிடித்து அதன்அடியில் துரும்பை ஏற்றினை: அதனால் உனக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது' என்று கூறினன்; அதற்கு முனிவன் சினந்து 'இங்ஙனம் நீ சிறிய குற்றத்துக்குப் பெரியதண்டனையை விதித்ததனால், பூமியில் இழிந்தசாதியில் மனிதனய்ப் பிறப்பாய்' என்று சபிக்க, அதனால் யமன் ஒருதாசியின் மகனய் விதுரனகத் தோன்றினன் என அறிக. (கஉஉ)

அடியனேனுமற்றவருடனரக்குமாளிகையிப்
படியினாலியற்றியதொழிற்பயனெலாங்குறித்து
நெடியகானகத்தளவுநீணிலவறைநெறிபோய்
முடியுமாறொருமண்டபங்கோட்டினேன்முழைபோல்.

(இ - ள்.) அடியனேனும் - உங்கட்கு அடியவனான நானும், மற்றவருடன் - மற்றைய சிற்பிகளுடன் இருந்து, அரக்கு மாளிகை இ படியினால் இயற்றிய தொழில் பயன் எலாம் குறித்து - அரக்கினால் ஒருமாளிகையை இவ்வாறுசெய்த தொழிலினால் இனிநிகழும் பயன்களையெல்லாம் ஆலோசித்து, நீள் நிலவறை நெறி முழை போல் போய் நெடிய கானகத்து அளவு முடியும் ஆறு - நீண்ட நில வறையின் வழி மலைக்குகைபோலச் சென்று நீண்ட காட்டினிடம் வரையில் முடியும்படி, ஒரு மண்டபம் கோட்டினேன் - (இந்தமாளிகையில்) ஒருமண்டபத் தைச் செய்தேன்; (எ - று.)

நிலவறைநெறி - பிறர்அறியாதபடி தரையினுள்ளே அமைக்கப்பட்ட சுரங்க வழி. அடியனேன் என்பதில் பகுதியாகிய அடிமையென்ற பண்புப்பெயர் ஈறு போயிற்று; அன் - சாரியை. இம்மாளிகையில் பாண்டவர்களை நம்பிக்கையுடன் இனிதுவீற்றிருக்கச்செய்து பின்பு தீப்பற்றவைத்து அவர்களை முற்றும் அழிக்கக் கருதிய கருத்து முழுவதையும் ஊகித்தறிந்து என்பான், 'தொழிற்பயனெலாங் குறித்து' என்றான். (கஉரு)

வேறொருத்தருமறிவுறாவிரகினாலொருதூண்
மாறுபட்டுநீபறிக்கலாம்வகைவழிவகுத்தேன்
றேறுதற்கிதுதகுமெனத்திருவுளத்தடக்கி
யூறுபட்டபோதெழுந்தருள்கெனப்பணிந்துரைத்தான்.

(இ - ள்.) வேறு ஒருத்தரும் அறிவுறா விரகினால் - மற்று ஒருவரும் அறி யாதவிதமாக, ஒரு தூண் - (அம்மண்டபத்தில்) ஒருதூணை, நீ மாறுபட்டு பறிக் கல் ஆம் வகை - நீ வலிமைகொண்டு பெயர்த்தெடுத்து விடும்படி, வழி வகுத் தேன் - அந்நிலவறைவழியைச்சார அமைத்துவைத்துள்ளேன்; இது தேறுதற்கு தகும் என திரு உளத்து அடக்கி - இச்செய்தியை நம்பத்தக்கதென்று உனது திருவுள்ளத்திலே கொண்டு, ஊறு பட்ட போது எழுந்தருள்க - தீங்கு நிகழ்ந்த பொழுது (அவ்வழியாகத் தப்பியுய்ந்து) சென்றருள்வாயாக, என - என்று, பணி ந்து உரைத்தான் - வணங்கிச் சொன்னான், (அந்தச்சிற்பி); (எ - று.)

எளிதிற் பெயர்த்தெடுக்கலாம்படி வைத்தால் புரோசனன் ஐயுற்றுக் கண் டுணர்வானென்றுகருதி அங்ஙனம் ஐயம்நிகழாதவண்ணம் நிலைபெற நாட்டிவைக் கப்பட்டது அத்தூண் என்பது, 'மாறுபட்டு நீ பறிக்கலாம்வகை' என்றதனால் விளங்கும். மூன்றாமடியால், எளிய இந்த எனதுவார்த்தை இகழத்தக்க தன்றென் றும், இவ்வுபாயம் அலட்சியஞ்செய்தற்கு உரியதன்றென்றும், இதனைப் பிறர் அறி யாதபடி இரகசியமாகவே மனத்தில்வைத்திடவேண்டுமென்றுங் கூறியவாறாம். ஊறு - உறுவது; முதனிலை திரிந்த பெயர்; நேருந்தீங்கு. அருள்கென - விகாரம்.

வீமன் அச்சிற்பிக்குப் பரிசளித்துப் பின்பு ஜாக்கிரதையுடையனாயிருத்தல்.

தச்சரிற்பெருந்தலைவனுக்குரிமையிற்றனங்கள்
பிச்சரிற்கொடுத்தவன்விடைகொண்டதன்பின்ன
ரச்சமற்றிவனம்மனைக்கம்மனைவழங்கு
நிச்சமின்றுகொலென்றுகொலெனநினைந்திருந்தான்.

(இ - ள்.) (வீமன்), தச்சரில் பெரு தலைவனுக்கு - (இவ்வாறு உய்யும் வழி கூறிய) சிறந்த அச்சிற்பிக்கு, உரிமையின் - தகுதியினால், தனங்கள் - செல்வங்களை, பிச்சரின் கொடுத்து - பித்தர்போலத் தலைதெரியாது [மிகுதியாகக்] கொடுத்து,—அவன் விடை கொண்டதன் பின்னர்-அச்சிற்பி விடைபெற்றுக்கொண்டு சென்றபின்பு,— அச்சம் அற்று - பயம் ஒழிந்து,—'இவன் - இப்புரோசனன், அம்மனைக்கு அ மனை வழங்கும் - அக்கினிக்கு அம்மாளிகையை ஒப்பிப்பான்: நிச்சம் - இது நிச்சயம்: இன்றுகொல் என்று கொல் - (அதுசெய்யும்) நாள் இன்றைக்கோ என்றைக்கோ,' என நினைந்து இருந்தான் - என்று எண்ணிக்கொண்டு கவனிப்புடன் இருந்தான்; (எ - று.)

தச்சரிற் பெருந்தலைவன் - தச்சர்களுள் பெரியதலைவனாகவுள்ள அவன். தச்சர் - தக்ஷரென்ற வடசொல்லின் திரிபு. மரவேலை செய்வார்க்கு உரிய இச்சிறப்புப்பெயர், இங்கே பொதுப்பெயர்த் தன்மைப்பட்டு, சிற்பிகளென்ற பொருளில் வந்தது. உரிமையின் - தம்உயிரைப்பாதுகாத்தற்கு உரிய உபாயத்தை யுணர்த்திய தகுதிக்கு ஏற்ப என்க. இன்னார்க்கு இன்னபொழுது இன்னதுகொடுக்கற்பாலதென்றும், அன்றென்றும் வரையறை கொள்ளாமலும் தமக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமலும் மிக்கபலபொருள்களைக் கொடுத்தனனென்பார், 'பிச்சரிற்கொடுத்து' என்றார். பிச்சர் - பித்தரென்றதன் போலி. விடை - விடுதல்; அனுமதி. 'அச்சமற்று' என்பதைப் புரோசனன்மேல் ஏற்றி, நாம் அவன் வஞ்சனையை அறிந்தோமென்ற சங்கையில்லாமலே யென்று உரைத்தலும் ஒன்று. அம்மனையென்பது - (அம் - நீர், மனை - இடம்) நீர்பிறத்தற்குக் காரணமாயுள்ளதென்ற பொருளால் நெருப்பிற்கு வந்ததோர் ஏதுப்பெயராம்; நெருப்பினின்று நீர் தோன்றியதென வேதமுங் கூறும்: நெருப்பின் வடமொழிப்பெயர்களுள் ஒன்றாகிய 'க்ருபீடயோநி' என்ற சொல் (க்ருபீடம் - நீர், யோநி - உற்பத்தித்தானம்) இப்பொருள்படுதல் காண்க. நிச்சம் - நிஶ்சய மென்ற வடசொல்லின் திரிபு. கொல் என்ற இடைச்சொல் - ஐயப்பொருளில் வந்தது. 'அம்மனைக்கு அம்மனை வழங்கும்' என்பதற்கு - அவ்வீட்டுக்குத் தீயிடுவான் என்றும் பதவுரை கூறலாம். (கஉ௫)

பாண்டவர் பகலில் வேட்டையாடி இரவில் விழிப்புடன் இருத்தல்.

விடவிவன்சினைநெடுங்கொடிதழுவலின்மிடைந்த
வடவியெங்கணும்வேட்டையாற்றங்கள்பேராண்மை
நடவினன்பகலிரவுகண்டுயிலலர்நடந்தார்
புடவிதங்கள்வெண்குடைநிழற்குளிருமாபுரப்போர்.

(இ - ள்.) தங்கள் வெள் குடை நிழல் - தங்கள் வெண்கொற்றக்குடையின் நிழலினால், புடவி குளிரும் ஆ - பூமிமுழுவதுங் குளிர்ச்சியடையும்படி, புரப்போர் - பாதுகாக்கவல்லவரான பாண்டவர்கள்,—நல் பகல் - நல்ல பகற்காலத்தில், விடவி வல் சினை நெடு கொடி தழுவலின் மிடைந்த அடவி எங்கணும் - மரங்களின் வலிய கிளைகளிலே நீண்டகொடிகள் தழுவிப்படர்தலால் அடர்ந்துள்ள காடுமுழுவதிலும், வேட்டையால் - வேட்டையாடுதலால், தங்கள் பேர் ஆண்மை நடவி - தங்களுடைய சிறந்த ஆண்தன்மையை [பலபராக்கிரமங்களை]ப் பரவச்செய்து, இரவு - இராத்திரியில், கண் துயிலலர் நடந்தார் - கண்மூடியுறங்காதவர்களாய் ஒழுகினார்கள்; (எ - று.)

நன்பகலெனப் பகலுக்கு நன்மைகொடுத்துக் கூறியதனால், அவர்கட்கு இரவு சங்கைக்கு இடமாய் இனிதுகழிந்திலதென்பது பெறப்படும். பயிர்செழித்தற்பொருட்டுக் களைபறித்தல் போல நாட்டுச் சனங்களைப் பாதுகாத்தற்பொருட்டு அவர்களுக்குத் தீங்குவிளைக்குங் கொடுவிலங்குகளை வேட்டையாடியழித்தன ரென்பார், 'புடவி தங்கள் வெண்குடைநிழற் குளிருமா புரப்போர்' என்றார். பழிப்பற்ற புகழோடு கூடிய அரசாட்சியை 'வெண்குடைநிழல்' என்றல், மரபு. குளிருமா என்பதில், ஆ - ஆறு என்பதன் விகாரம். வேட்டை - வேடு என்ற நெடிற்றொடர்க்குற்றியலுகரம் தன்னொற்று இரட்டி ஐகாரச் சாரியை பெற்றது; இது, தொழிலுணர்த்தும் பெயர். விடவி - விடபீயென்ற வடசொல்லின் திரிபு; விடபம் - மரக்கிளை: அதனையுடையது விடபீயென மரத்துக்குக் காரணக்குறி. பெண்பாலாகிய கொடி ஆண்பாலாகிய மரத்தின்கிளையைக் கொள்கொம்பாகக் கொண்டு தழுவும் இயல்பை 'விடவி வன்சினை நெடுங்கொடி தழுவலின்' என விளக்கினார். 'துயிலற' என்றும் பாடம் உண்டு. (கஉசு)

இப்படிசிலகாலம் புரோசனனுடன் பாண்டவர் அரக்குமாளிகையில்வசித்தல்.

பாந்தளோடொருமனைவயிற்பயில்பவர்போல
வேந்தரைவருமந்திரவலியினான்மிக்கோர்
காந்துநெஞ்சுடையமைச்சனைக்கைவிடாரணுகித்
தாந்தமெய்யெனவுயிரெனத்தனித்தனிசார்ந்தார்.

(இ - ள்.) மந்திரம் வலியினால் மிக்கோர்-ஆலோசனை வலிமையினால் மேம்பட்டவர்களாகிய,வேந்தர் ஐவரும் - பாண்டவராசர் ஐந்துபேரும்,—பாந்தளோடு ஒரு மனைவயின் பயில்பவர் போல - பாம்புடன் ஒருவீட்டில் வசிப்பவர்போல, காந்தும் நெஞ்சு உடை அமைச்சனை கைவிடார் அணுகி - கொதிக்கிற மனத்தையுடைய அந்தமந்திரியை விலக்கிவிடாமல் அருகிற்கொண்டு, தாம் தம் மெய் என உயிர் என தனி தனி சார்ந்தார் - தங்களில் தாங்கள் உடம்பும் உயிரும்போல ஒருவரோடொருவர் கலந்திருந்தார்கள்; (எ - று.)

இங்ஙனம் தம்மைக் குறிக்கொண்டுகாத்து ஒழுகுவாராயினர் என்பதாம். "ஐவர்க்கு மோருயிரே யைந்துறுப்பும்", "உய்வருஞ் சமரி லாவி யொருவர் போ யொருவ ருய்யார்" என்பவற்றோடு இக்கவியின் நான்காமடியை ஒப்பிட்டுக் கருத்துஉணர்க; ஒருவர்க்கொருவர் இன்றியமையாத அன்பின ரென்பதாம். மந்திர வலிமிக்கவர் பாம்போடு ஒருமனையிற் பயிலக்கூடு மென்க. (கஉஎ)

பாண்டவர் ஒருநாளிரவிற் புரோசனனை அருகிற் படுக்க வைத்தல்.

ஆங்கொர்கங்குலினழைத்துநீடரசியலுசாவி
யீங்குநீதுயில்வைகுதியெம்முடனென்னப்
பாங்கர்மெல்லணைப்பள்ளியும்பரிவுறவழங்கித்
தாங்களும்பொலஞ்சேக்கையிற்றங்கினரன்றே.

(இ - ள்.) ஆங்கு - அங்ஙனம் நிகழும் நாள்களுள், ஓர் கங்குலின் - ஓர் இரவில், அழைத்து - (புரோசனனை) அழைத்து, நீடு அரசுஇயல் உசாவி - பெரிய அரசாட்சிமுறைமையைக்குறித்து (வெகுநேரம் அவனுடன்) ஆராய்ந்து, (பின்பு), நீ ஈங்கு எம்முடன் துயில்வைகுதி என்ன - 'நீ இவ்விடத்தில் எங்களோடு நித்திரை செய்வாய்' என்றுசொல்லி, பாங்கர் - தங்கள் பக்கத்தில், மெல் அணை பள்ளியும் பரிவு உற வழங்கி - மெல்லிய மெத்தையாகிய படுக்கையையும் அன்புமிகக் கொடுத்து, தாங்களும் பொலம் சேக்கையில் தங்கினர் - (பாண்டவர்கள்) தாங்களும் அழகிய படுக்கையிற் படுத்தார்கள்; (எ - று.)—அன்று ஏ - ஈற்றசை.

உம்மைகள் - எச்சப்பொருளன. பாங்கர் என்பதில் பாங்கு என்ற மென்றொடர்க்குற்றியலுகரத்துக்கு அர் - போலி. துயில்வைகுதல் - தூக்கங்கொண்டு தங்குதல் ; இது இங்கு ஒருசொல்தன்மைப்பட்டது. அணைப்பள்ளி - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. காரணமின்றி யழைத்து 'எம் அருகிற் பள்ளிகொள்க' என்று கூறின் ஐயமுறுவா னென்று கருதி, அரசியலுசாவுவார்போன்று அழைத்து நெடும்பொழுது உசாவிப் பின்பு அங்ஙனங் கூறின ரென்க; இது இராசதந்திரம். (கஉஅ)

வீமன் அரக்குமாளிகையில் தீப்பற்றவைத்தல்.

உணர்வறத்துயிலுற்றபோதற்றமங்குணராத்
துணைவரைத்திருத்தாய்பதந்தொழுகெனச்சொல்லி
யணிகொள்கோயிலைத்தாதைநண்பனுக்கிரையளித்தா
னிணையிலாவமுதுரகர்கோனிடைநுகர்ந்திருந்தான்.

(இ - ள்.) உணர்வு அற துயில் உற்ற போது - (புரோசனன்) உணர்ச்சி நீங்க நித்திரை செய்தபொழுது,—இணை இலா அமுது உரகர் கோனிடை நுகர்ந்து இருந்தான் - ஒப்பற்ற அமிருதத்தைச் சர்ப்பராசனான வாசுகியினிடத்தில் (பெற்று)உண்டு (அவன்நகரத்திற் சிலநாள்)இருந்தவனான வீமசேனன்,—அங்கு அற்றம் உணரா - அப்பொழுது சமயமென்று அறிந்து,—துணைவரை திரு தாய் பதம் தொழுக என சொல்லி - (தனது) உடன்பிறந்தவர்களைச் சிறந்ததாயாகிய குந்தியினது பாதங்களை வணங்குவீராக வென்றுசொல்லி,—அணி கொள் கோயிலை - அழகுபொருந்திய அந்தமாளிகையை, தாதை நண்பனுக்கு இரை அளித்தான் - தனது பிதாவாகிய வாயுவினது சிநேகிதனான அக்கினிதேவனுக்கு உணவாகக் கொடுத்தான்; (எ - று.)

எரித்தா னென்ற பொருளை 'தாதைநண்பனுக்கு இரையளித்தான்' என வேறுவாய்பாட்டாற் கூறினது, பிறிதினவிற்சியணி; இதனை இங்கு மங்கலவழக்கின்பாற் படுத்தலுமாம். தனதுதந்தையின் ஒருநண்பனான வாசுகியினிடத்து அமிருதம்பெற்று உண்ட வீமன் அத்தகைய கடப்பாடு வழுவாமல் தனது தந்தையின் மற்றொருநண்பனுக்கு உணவளித்தன னென ஒருவகைச்சமத்காரம்

நிகழக் கூறுவார், 'தாதைநண்பனுக் கிரையளித்தான் இணையிலாவமுதுஉரகர்கோனிடை நுகர்ந்திருந்தான்' என்றார். தனது உடன்பிறந்தவர் நால்வரையும் தாயையும் ஒருங்கே உடன்கொண்டு வெளிச்செல்லக் கருதின னாதலின், தனித்தனி படுத்திருந்த அவர்களை ஒருங்கே தாயிருக்குமிடத்திற் சேர்த்தற்கு, 'தாய்பதந் தொழுக' என்று சொல்லினான்.

அற்றம் - சோர்ந்து கிடந்த சமயம். தாய்பதம் - நிலைமொழி பொதுப்பெயராதலின், அதன்முன் வேற்றுமையில் வலி இயல்பாயிற்று. தொழுகென - விகாரம். உரகராவார் - படமும் வாலு முடையராய் மனிதவடிவமுந் தெய்வப்பிறப்பு மானதொரு சர்ப்பசாதியார். (௰௬)

அரக்குமாளிகை எரிந்தொழிதல்.

முடியுடைத்தடங்கிரியினைமுளிகழைதொறுமுற்
றடிநிலத்துறச்சூழ்வருமாறுபோலழலோன்
கொடிநிரைத்தபொற்கோபுரப்புரிசைசூழ்கோயி
லிடியிடித்தெனவெடிபடச்சிரித்தெழுந்தெரித்தான்.

(இ - ள்.) அழலோன் - அக்கினிதேவன்,—முடி உடை தட கிரியினை - சிகரத்தையுடைய பெரியமலையை, முளி கழை தொறும் உற்று - (அதிலுள்ள) உலர்ந்த மூங்கில்களி லெங்கும் பொருந்தி, அடி நிலத்து உற - அடிப்பரப்பிலே பொருந்த, சூழ்வரும் ஆறு போல் - சூழ்ந்திடும் விதம் போல,—கொடி நிரைத்த பொன் கோபுரம் புரிசை சூழ் கோயில் - கொடிகள் வரிசையாகக்கட்டப்பட்ட அழகிய கோபுரத்தையுடைய மதில்சூழ்ந்த அந்த இராசகிருகத்தை, இடி இடித்து என வெடி பட சிரித்து எழுந்து எரித்தான் - இடியிடித்தாற்போலப் பேரொலியுண்டாக நகைத்து எழுந்து எரித்திட்டான்; (எ - று.)

மலையின் தாழ்வரையில் சுற்றிலும்உள்ள காய்ந்த மூங்கிற்காட்டில் தீப்பற்றியெரிதல்போல, உயர்ந்த அம்மாளிகையைச் சுற்றிலுமுள்ள கொடிகள் கட்டிய மதில்களி லெங்கும் தீப் பற்றியெழுந்து அம்மாளிகையை எரித்ததென்க. உவமையணி. அங்ஙனம் எரிக்கையில் உண்டாகிற பேரொலியையே வீரத்தெழுந்த வெகுளிநகையாகக் கற்பித்து வருணிப்பார், 'இடியிடித்தென வெடி படச் சிரித் தெழுந் தெரித்தான்' என்றார். (௧௭)

வீமன் துணைவரையுந் தாயையும் உடன்கொண்டு கழிந்துசெல்லல்.

அக்கணத்திடையன்னையிலணுகியாங்கவரைத்
தொக்கசித்திரத்தூணடித்துவாரமேவழியாப்
பொக்கெனக்கொடுபோயகல்வனத்திடைப்புகுந்தான்
முக்கணற்புதன்முனிந்தவூர்மூவரோடொப்பான்.

(இ - ள்.) முக்கண் அற்புதன் முனிந்த ஊர் மூவரோடு ஒப்பான் - மூன்று திருக்கண்களையுடைய விசித்திரசக்தியுடையவனான சிவபிரான் கோபித்து எரித்த திரிபுரத்தில் எரியாது தப்பிய மூன்று அசுரர்களோடு ஒப்பவனாகிற வீமசேனன், அ கணத்திடை - அந்தக் கணப்பொழுதிலே, அன்னையில் அணுகி - தாயினிடஞ் சென்று, ஆங்கு அவரை - அவ்விடத்திலுள்ள அவரெல்லோரையும், பொக்கென கொடு-விரைவாக உடன்கொண்டு, தொக்க சித்திரம் தூண் அடி துவாரமே வழி

ஆ போய் - மிக்க சித்திரங்களையுடைய ஒருதூணின் கீழுள்ள சுரங்கமே வழியாகச் சென்று, அகல் வனத்திடை புகுந்தான் - பரந்த இடிம்பவனத்திற் சேர்ந்தான்.

அவரைக் கொடுபோய் அகல்வனத்திடைப் புகுந்த விவரம், அடுத்த சருக்கத்தின் இரண்டாங் கவியில் விளங்கும். சிவபிரான் திரிபுரசங்காரஞ்செய்தபொழுது சுதர்மன் சுசீலன் சுபுத்தி என்ற மூன்று அசுரர்கள் மற்றையசுரர்கள்போலச் சினனது உபதேசத்தாலும் புத்தனது போதனையாலும் சிவத்துவேஷிகளாகாமல் சிவபக்தி முதிர்ந்திருந்ததனால் அந்நகைத்தீக்கு இலக்காகாமல் தப்பிப்பிழைத்துச் சிவபிரானை வேண்டி அக்கடவுளருளால் அவனது கோயில்வாயில் காக்கும் பணியைப் பெற்றனர் என்று அறிக. "முப்புரங்களை முக்கணன் முனிந்தநாள் மூவரம்முழுத்தியில், தப்பினு ருளர்" என்பர் மேல் காண்டவதகனச்சருக்கத்தும். அம்மூவர் திரிபுரத்தெரியினின்று தப்பியுய்ந்தமை போல, வீமன் அரக்குமாளிகைத்தீயினின்று தப்பியுய்தலால், 'முக்கணற்புதன் முனிந்தவூர் மூவரோ டொப்பான்' என்றார். துவாரமே, ஏ - பிரிநிலை. வழியா என்பதில், ஆ என்பது - ஆகவென்பதன் விகாரம். பொக்கெனல் - விரைவுக்குறிப்பு. (கருக)

கண்டவர் பாண்டவரும் குந்தியும் எரிந்தன ரேன்றல்.

புரிந்ததீயினைக்கண்ணினீரவித்திடப்புகுந்து
பரிந்தநெஞ்சினைமீண்டுமப்பாவகன்சுடவே
கரிந்தகோயிலிற்காரிருள்புலர்ந்தபின்கண்டோ
ரெரிந்துவீழ்ந்தனரைவரும்யாயுமீண்டென்றார்.

(இ - ள்.) கார் இருள் புலர்ந்த பின் - கரிய இருள் நீங்கிப் பொழுதுவிடிந்த பின்பு,—புரிந்த தீயினை கண்ணின் நீர் அவித்திட - பற்றியநெருப்பைத் தங்கள் கண்களினின்று பெருகும் சோகநீர் தணிக்கும்படி, கரிந்த கோயிலில் புகுந்து - தீந்துபோன அம்மாளிகையினுள்ளே பிரவேசித்து, மீண்டும் - அங்ஙனம் அவிந்த பின்பும், அ பாவகன் - அந்த அரக்குமாளிகை நெருப்பு, பரிந்த நெஞ்சினை - (பாண்டவர்பக்கல்) அன்புகொண்ட (தங்கள்) மனத்தை, சுட - எரிக்க, கண்டோர் - பார்த்தவர்களெல்லோரும், ஐவரும் யாயும் ஈண்டு எரிந்து வீழ்ந்தனர் என்றார். - 'பஞ்சபாண்டவர்களும் அவர்கள்தாயான குந்தியும் இங்கு எரிந்தொழிந்தனர்' என்றே சிந்தித்தார்கள்! (எ - று.)

அந்நகரத்துச் சனங்களெல்லோரும், பாண்டவர்பக்கல் மிக்கஅன்பு கொண்டவராதலால், அவர்கள் வசித்திருந்த மாளிகை இரவில் எரிபட்டதென்ற செய்தியைப் பொழுதுவிடிந்தவுடன் அறிந்தவளவிலே, அவர்கட்கு என்னுயிற்றோவென்று கண்ணுங் கண்ணீருமாக மிக்க கவலையோடு அங்கு வந்துபார்க்கையில், அச்சனங்கள் கண்களினின்று பெருகிய நீரினால் அந்நெருப்பு அவிந்தது என அவர்களது சோகக்கண்ணீர்ப்பெருக்கின் மிகுதியைக் கூறியவாறு. வந்தவர்கள் 'இத்தீப் பாண்டவரை என்னபாடு படுத்தியதோ?' என்று சிந்தித்து மிகவும் மனந்தவித்தன ரென்பதை 'அங்ஙனம் அவிந்தபின்பும் அப்பாவகன் பரிந்த நெஞ்சினைச் சுட' என விளக்கினர். வேடர் ஐவரும் அவர்கள்தாயும் எரிந்துகிடந்ததைக் கண்டு பாண்டவரைவரும் குந்தியும் எரிந்து கிடந்தன ரென்று கருதின ரென்க; அத்தன்மை, அடுத்த கவியில் விளங்கும். பாவகன்-வடசொல்; பரிசுத்திசெய்பவனென்று அவயவப்பொருள்படும். இறந்தனரென்ற பொருளில் 'வீழ்ந்தனர்' என்

றது, மங்கலவழக்கு. ஏ - அசை. இரண்டாம்அடிக்கு-மாளிகையைச் சுட்ட தன்றி மீண்டும் இரங்கிய தம்மனத்தைச் சுடவென்று பொருளுரைப்பினும் அமையும்.()

இச்செய்தியறிந்து அரசர்கள்பலரும் வருந்துதல்.

விருந்தராய்விடமிடச்செலேவேடருந்தாயு
மிருந்ததீமதியமைச்சனேடிறந்தமையுணரார்
திருந்துமாமதிப்பாண்டவர்செயலுமற்றறியார்
வருந்தினர்தமதுயிரிழந்தெனப்புவிமன்னர்.

(இ - ள்.) புவி மன்னர் - பூமியிலுள்ள அரசர்கள்,—விருந்தர் ஆய் விடம் இட செல் - புதியவர்களாய்(த் துரியோதனன்கட்டளையின்படி பாண்டவர்க்கு) விஷங்கொடுக்க வந்த, ஐ வேடரும் - ஐந்து வேடர்களும், தாயும் - அவர்கள் தாயான வேட்டுவச்சியும், இருந்த தீ மதி அமைச்சனேடு - (முன்னமே அங்கு) இருந்த துர்ப்புத்தியுடைய மந்திரியாகிய புரோசனனுடனே, இறந்தமை - மரித்ததை, உணரார் - அறியாதவர்களாய்,—மற்று - மற்றும், திருந்து மா மதி பாண்டவர் செயலும் அறியார் - திருத்தமுற்ற சிறந்த அறிவையுடைய பாண்டவரது செய்கையையும் அறியாதவர்களாய்,—தமது உயிர் இழந்து என வருந்தினர் - (பாண்டவரையிழந்தோமென்றே கருதியதனால்) தமது உயிரை யிழந்தாற்போல வருந்தினர்கள்; (எ - று.)

இதனால், எல்லாவரசரும் பாண்டவரைத் தமது உயிராகப் பாவித்து அன்பு பாராட்டியமை விளங்கும். பாண்டவர்க்கு விஷங்கலந்ததேனைக் கொடுத்து அவர்களைக்கொல்லும்படி துரியோதனனால் அனுப்பப்பட்ட ஐந்துவேடர்களும் அவர்கள்தாயும் அன்று அங்கு வந்திருந்து தீயின்வாய்ப்பட்டு இறந்தனரென்பதை இதனால் அறிக. விருந்து - புதுமை: பண்புகுறிக்கும் பெயர்; அதனையுடையவர், விருந்தர். மற்று - வினைமாற்று. பாண்டவர்செயல் - அரக்குமாளிகையைத் தீக்கொளுவித் தப்பிச்சென்று உய்ந்தமை. (கருரு)

இச்செய்தியறிந்த முனிவர்கள் முதலியோர் வருத்தம்.

போதுபட்டிருள்புகுந்தொளிபோனவானகம்போன்
மாதுபட்டபார்மடந்தைதன்மதிமுகமழுங்கத்
தீதுபட்டதுகுருகுலச்செல்வமென்றிரங்கி
யேதுபட்டனமுனிவரர்முதலினோரிதயம்.

(இ - ள்.) போது பட்டு - பொழுது சாய [சூரியன் அஸ்தமிக்க], இருள் புகுந்து - இருள் வர, ஒளி போன - ஒளிநீங்கிய, வான் அகம் போல் - ஆகாயம் போல, மாது பட்ட பார் மடந்தைதன் மதி முகம் மழுங்க - அழகு பொருந்திய பூமிதேவியினது சந்திரன்போன்ற முகம் ஒளிமழுங்க,—முனிவரர் முதலினோர் இதயம் - சிறந்த இருடிகள் முதலானவர்களுடைய மனங்கள், குருகுலம் செல்வம் தீது பட்டது என்று இரங்கி - குருகுலத்தினது செல்வம் பழுதுபட்ட,தென்று விசனமுற்று,ஏது பட்டன-என்ன பாடுபட்டன? [மிகவருத்தமுற்றன என்றபடி.]

பட்டு, புகுந்து - பட, புக என்ற செயவெனெச்சங்களின் திரிபு. மாது-மாதரென்ற உரிச்சொல்லின் விகாரம். "மாதர் காதல்" என்ற தொல்காப்பியத்தின்படி விருப்பத்தை யுணர்த்தும் மாதர் என்ற பெயர்,இலக்கணையாய்,விரும்பப்படும்

அழகை உணர்த்தின தென்க. முனிவர் - இருடிச்சிரேஷ்டர்; வடசொல். எவராலுங் கொண்டாடப்படுந் தன்மையரான பாண்டவர் அழிவை, குருகுலச்செல்வம் அழிந்ததெனக் குறித்தார்; செல்வம் - சிறந்தசந்ததி. தீது - 'து' விகுதிபெற்ற பண்புப்பெயர். செல்வம் - (எவரிடத்தும் நிலைத்திராமல் நீங்கிச்) செல்லுந்தன்மையதெனப் பொருள்படுங் காரணக்குறி. (கரு௪)

இச்செய்தியறிந்த துரியோதனாதியர் நிலைமை.

கொட்பனற்சுடவிறந்தமைகேட்டலுங்குருக்க
டெட்பதத்துடனழுதிடுஞ்சுயோதனன்முதலோ
ருட்பனித்துமேல்வெயிலுறவெதும்புநீரொத்தார்
பெட்புறப்புவிமுழுவதும்பெறுங்கருத்துடையோர்.

(இ - ள்.) கொட்பு அனல் சுட - சூழ்தலையுடைய தீ எரிக்க, இறந்தமை - (பாண்டவர்) இறந்த செய்தியை, கேட்டலும் - கேட்டறிந்தவுடனே, துட்பதத்துடன் அழுதிடும் - கொடிய கோட்பாட்டோடு புலம்புகின்ற, சுயோதனன் முதலோர் குருக்கள் - துரியோதனன் முதலிய குருகுலகுமாரர்கள்,—பெட்பு உற புவி முழுவதும் பெறும் கருத்து உடையோர் - ஆசைமிகப் பூமிமுழுவதையும்பெறும் எண்ணத்தை யுடையவர்களாய், வெயில் உற உள் பனித்து மேல் வெதும்பும் நீர் ஒத்தார் - மேலே வெயில்படுகையில் உள்ளே குளிர்ந்து மேலேசுடும் இயல்பையுடைய நீரைப் போன்றார்கள்; (எ - று.)—உவமையணி.

துரியோதனாதியர் அகத்தில் மகிழ்ச்சிகொண்டு புறத்தில் தபிப்புக்காட்டினர் என்பதாம். அப்பொழுது அவர்கட்கு மகிழ்ச்சி இயற்கையும், சோகதாபம் செயற்கையுமாய் நின்றமை, உவமையால் விளங்கும். கொட்பு - சுழற்சி. துஷ்பதம் - வடசொல். பெட்பு - பெட்டல், விரும்புதல்: தொழிற்பெயர்; பெள் - பகுதி, பு - விகுதி. உடையோர் - குறிப்பு முற்றெச்சம். (கருரு)

உண்மையிற் பாண்டவர் எரிந்திடாமையைப் பற்றிய கவிவர்ணனை.

பொன்ன லங்கொள மெழுகினா லாலயம் புனைந்து
துன்னு வெங்கதைப் படைமருச் சுதனையே சுடுவா
னென்ன வாண்மைகொ லெண்ணினா னெண்ணினுஞ் சுடுமோ
வன்னி தன்பெயர் மருச்சக னென்பது மறந்தே.

(இ - ள்.) பொன் நலம் கொள - பொன்னுக்குஉரிய அழகு விளங்கும்படி, மெழுகினால் ஆலயம் புனைந்து - அரக்கினால் மாளிகையைச் செய்து, துன்னு வெம் கதை படை மருச் சுதனையே சுடுவான் - பொருந்திய கொடிய (சத்துருகாதினியென்னும்) கதாயுதத்தையுடைய வாயுகுமாரனாகிய வீமனையே சுடும்படி, எண்ணினான் - (துரியோதனன்) கருதினான்: (அங்ஙனங்கருதியது', என்ன ஆண்மை கொல் - என்ன ஆண்திறமையோ? எண்ணினும்-(அவ்வாறு அவன்) நினைத்தாலும், வன்னி - அக்கினி, தன் பெயர் மருச் சகன் என்பது மறந்து - தனது பெயர் காற்றின்சகாய னென்பதை மறந்து, சுடுமோ - (அவ்வாயுகுமாரனை) எரித்திடுமோ? [எரித்திடாது என்றபடி]; (எ - று.)

துரியோதனனுக்கு நேரெதிரியான வீமன் தப்பியுய்ந்தன னென்ற உண்மையை, காற்றின்நண்பனான அக்கினிதேவன் அக்காற்றின்மகனை எரித்திடானென வருணித்தார்; இது - ஏதுத்தற்குறிப்பேற்றவணியின் பாற்படும். மருத்ஸுதன், மருத்ஸகஃ என்ற வடமொழிப்பெயர்கள் திரிந்தன. கொல் - அசை. ஓ - எதிர்மறை. (கருசு)

வாரணாவதச்சருக்கம் முற்றிற்று.

ஸ்ரீ

திருக்கருவைவெண்பாவந்தாதி.

'திரு' என்னும் பலபொருளொருசொல், வடமொழியிலே 'ஸ்ரீ' என்பது போல, தமிழிலே தேவர்கள், அடியார்கள், ஞானநூல்கள், மந்திரங்கள், புண்ணிய ஸ்தலங்கள் முதலிய மேன்மையையுடைய எப்பொருள்களுக்கும் விசேஷணபத மாகி, அவற்றிற்குமுன் மகிமைப்பொருளை உணர்த்திவரும் : ஸ்ரீஅனந்தேசுவரர், ஸ்ரீமாணிக்கவாசகர், ஸ்ரீவாதுளாகமம், ஸ்ரீபஞ்சாக்ஷரம், ஸ்ரீசாலிவாடிபுரம், ஸ்ரீபாதம் எனவும்; திருமுருகர், திருநாளைப்போவார், திருக்கோவையார், திருவைந்தெழுத்து, திருநெல்வேலி, திருவடி எனவும் வழங்குமாற்றால் அறிக; இதனை ஸ்ரீ என்பதன் சிதைவென்பாரு முளர். இங்கே, 'திரு' என்பது - கருவைக்கு அடைமொழி; வெண்பா வந்தாதிக்கு அடைமொழியாகவுமாம்.

கருவை - சிவஸ்தலங்களில் ஒன்று; இது, பாண்டியநாட்டைச் சேர்ந்த ஆரியநாட்டி லுள்ளது: கரிவலம்வந்தநல்லூர் எனப்படும். குலசேகரபாண்டியன் வேட்டையாடும்போது எதிர்ப்பட்ட ஒருயானையைத் துரத்த, அது வேகமாய்ப் போய்க் கடவுள்இருந்த புதரை வலமாகச்சென்று பிறகு சிவகணமாகப்பெற்றமை யால், அத்தலம், இப்பெயர்பெற்றது. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரான் திருநாமம் - பால்வண்ணநாதர், முகலிங்கர், திருக்களாவீசர். அம்மை - ஒப்பனை தேவி. தலவிருக்ஷம் - திருக்களா.

வெண்பா வந்தாதி - வெண்பாக்களினால் அந்தாதித்தொடையால் நூறு பாடல் பாடுவது. 'கலித்துறையந்தாதி,' 'பதிற்றுப்பத்தந்தாதி என்னும் பிரபந்தங் களினும் வேறுபாடு விளங்குதற்கு, 'வெண்பாவந்தாதி' எனப்பட்டது. பதிற்றந் தாதி நூற்றந்தாதி என்ற வகைகளில் இந்நூல் நூற்றந்தாதியாம். அதாவது - நூறுவெண்பாவினாலேனும், நூறுகட்டளைக்கலித்துறையினாலேனும் அந்தாதித் தொடையாற் கூறுவது. இந்நூல் அந்தாதித்தொடையால் அமைந்த நூறுவெண் பாக்களை யுடையது. அந்தாதி - அந்தத்தை ஆதியாகவுடையது; வேற்றுமைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, வடமொழித்தொடர்: தீர்க்கசந்தி. அந்தாதியாவது - முன்னின்ற பாட்டின் இறுதியெழுத்தாயினும் அசையாயினுஞ் சீராயினும் அடியாயினும் பின்வரும் பாட்டின் முதலாக அமையும்படி பாடுவது. இங்ஙனம்பாடும் நூலினது ஈற்றுச்செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதி யாக அமையவைத்தல் மண்டலித்த லெனப்படும். இது - தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றும். சொற்றொடர்நிலைச்செய்யுள் பொருட்டொடர் நிலைச்செய்யுள் என்ற வகையில், இது - சொற்றொடர்நிலை; "செய்யுளந்தாதி சொற்றொடர்நிலையே" என்றார் தண்டியலங்காரத்தும். எனவே, திருக்கருவை யென்னுந் திருப்பதியைப் பற்றிப் பாடியதோர் நூலென்பது, பொருள்; அத் திருப்பதியில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானைப் பாடிய தென்பது, கருத்து.

ஆசிரியர் தொல்காப்பியனார், செய்யுளியலில் "விருந்தேதானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்பதனால், 'விருந்துதானும் பழங்கதைமேலதன் றிப் புதிதாகத் தாம்வேண்டியவாற்றாற் பலசெய்யுளுந் தொடர்ந்துவரத் தொடுக்கப் படும் தொடர்நிலைமேலது' என்று கூறினமையின், இவ்வந்தாதி அங்ஙனம் கூறிய விருந்தாமென்று உணர்க; இனி, இதனைச் சிறுகாப்பியத்துள் அடக்குவர் பிற்காலத்தார். இப்பிரபந்தம், தோத்திரரூபமானது. இதனை 'குட்டித்திருவாசகம்' என வழங்குவது முண்டு.

அதிவீரராமபாண்டியர்.

இந்நூலாசிரியராகிய அதிவீரராமபாண்டியர் என்பவர், தென்னாட்டில் தென்காசியிற் செங்கோல்செலுத்திய சந்திரவம்சத்துச் சிற்றரசர்களில் ஒருவர். இவர்காலம் ஏறக்குறைய ஆயிரம்வருஷங்களுக்கு முன்பென்றும், இவருடைய ஜ்யேஷ்ட சகோதரரது பெயர் வரதுங்கராமபாண்டிய ரென்றும், அவர் திருக் கருவையில் அரசாண்டுகொண்டிருந்தன ரென்றுங் கூறுவர். இவர்செய்த வேறு நூல்கள் - நைடதம், கூர்மபுராணம், இலிங்கபுராணம், காசிகாண்டம், திருக் கருவைக்கலித்துறையந்தாதி, திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி, நறுந்தொ கை எனப்படும் வெற்றிவேற்கை முதலியன. இவர் செய்துள்ள நூல்களால், இவர் இலக்கிய இலக்கணங்களிலும் பலவகைக் கலைஞானநூல்களிலும் மிகத் தேர்ச்சிபெற்ற மகாகவியென நன்றாகத்தெரிகின்றது. இந்நூல்களில் முதல் நான்கு நூல்களால், இவருக்கு வடமொழிப்பயிற்சி இருத்தல்வேண்டு மெனத் துணியப்படுகின்றது. திருக்கருவை விஷயமாக இவர் பாடிய மூன்று அந்தாதிக ளாலும், இவருக்குப் பரமசிவனிடத்திலுள்ள மெய்யன்பு தெளிவாக வெளியா கின்றது. கொக்கோகம் எனப்படும் மதனநூலும் இவர்செய்ததென்பது, சிலர் கொள்கை.

இவர் இந்த அந்தாதிகள் இயற்றியதற்குக் காரணம்:—இவர்க்குக் காம வொழுக்கமிகுதியால் தொழுநோய் நேர்ந்ததுபற்றிக் கழிவிரக்கங்கொண்டு திருக் கருவைத்தலத்தில் வந்து சிவபிரான்மீது அந்தாதிகள் மூன்றையும் பாடித்துதித்த மாத்திரத்தில் அந்நோய் நீங்கப்பெற்று நற்கதிபடைந்தனர் என்று கூறுவர்.

இவர்க்குக் கல்விகற்பித்த ஆசிரியர்—சுவாமிநாததேவர், தீக்ஷாகுரு— அகோரசிவாசாரியர். இந்த இரண்டு ஆசிரியரையும் பற்றித் தாம் பாடிய சில நூல்களில் வணக்கங் கூறியுள்ளார்.

காப்பு.

காப்பு - காத்தல்; அது - இங்கு, காக்கின்ற கடவுள் விஷயமான வணக்கத் துக்குத் தொழிலாகுபெயர்: ஆகவே, கவி தமக்குநேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தமதுஎண்ணத்தை முடிக்கவல்லதோர் பொருளின் விஷயமாகச் செய்யுந் தோத்திரம் என்பது கருத்து. கடவுள்வணக்கம், இரண்டுவகைப்படும்; வழிபடு கடவுள்வணக்க மென்றும், ஏற்புடைக்கடவுள்வணக்க மென்றும். வழிபடுகட வுள் வணக்கமாவது - தாம்தாம் குலதெய்வமாகக்கொண்டு ஆராதிக்கின்ற கட வுளை வணங்குதல். இதற்கு உதாரணம் - வைஷ்ணவசமயத்தார் விஷ்ணுவை யும், சைவமதத்தவர் சிவனையும் வணங்குதல் போல்வன. ஏற்புடைக்கடவுள்

வணக்கமாவது - தாம்தாம் செய்ய எடுத்துக்கொண்ட காரியத்துக்குத் தகுதியையுடைய கடவுளை வணங்குதல்; இதற்கு உதாரணம் - இராமாயணங் கூறுபவர் இராமனையும், கந்தபுராணமுரைப்பவர் சுப்பிரமணியமூர்த்தியையும் வணங்குதல் போல்வன. இக்காப்புச்செய்யுள், சிவபிரானது மூத்ததிருக்குமாரரான விநாயகரைப் பற்றியது. சைவசமயத்தவரான இந்நூலாசிரியரால் கூறப்பட்ட இக்காப்புச்செய்யுள் தம்மைச் சரணமடைந்தவர்கள் தொடங்குந் தொழில்கட்கு வருகிற விக்கினங்களைப் போக்குதலாலும், தம்மையடையாமல் அகங்கரித்தவர்கள் ஆரம்பிக்கின்ற செய்கைகட்குப் பலஇடையூறுகளை உண்டாக்குதலாலும் 'விக்நேச்வரர்' என்று திருநாமம்பெற்றுள்ள ஸ்ரீவிநாயகமூர்த்தியைக் குறித்ததாதலால், வழிபடுகடவுள்வணக்கமாம்.

நண்பான தென்கருவை நாதனார் தம்பேரில்
வெண்பாவந் தாதி விளம்பவே—பண்பாக
மைம்மலையு மெய்ம்மலையு மாற்று புகழ்படைத்த
கைம்மலையு மாமுகத்தோன் காப்பு.

(இ - ள்.) நண்பு ஆன - (அடியார்கள்பக்கல்) அருளுடையவராகிய, தென் கருவை நாதனார்தம் பேரில்-அழகிய திருக்கருவைப்பதியில் எழுந்தருளியிருக்கிற (யாவர்க்குந்) தலைவராகிய சிவபெருமான் விஷயமாக, வெண்பா அந்தாதி - வெண்பாக்களாற்செய்யும் அந்தாதியென்னும் பிரபந்தத்தை, விளம்ப - சொல்லும்பொருட்டு,—பண்பு ஆக - தகுதியாக, மை மலையும் - ஆணவமாகிய மலையையும், மெய் மலையும் - மாயையாகிய மலையையும், மாற்று - நீக்குகிற, புகழ் படைத்த -கீர்த்தியைப்பெற்ற, கை மலையும் மா முகத்தோன் - கையையுடைய விலங்காகிய யானையின் முகத்தையுடைய விநாயகக்கடவுள், காப்பு - (எனக்குக்) காவலாவர்;(எ-று.)

தென் கருவை - தென்னாட்டிலுள்ள கருவையுமாம். மை - ஆணவம்; ஞானத்தைமறைப்பது. மெய்-மாயை; தனுகரணபுவனபோகங்களுக்குக் காரணமானது. மும்மலங்களுள் இவ்விரண்டுகூறவே, மற்றொன்றாகிய கன்மமும் அடங்கும். அளக்கலாகாத அளவுடைமையும் எளிதில் அசைக்கவொண்ணாத நிலையுடைமையும் பற்றி, மலங்கள் மலை யெனப்பட்டன. மலைதல் - சூடுதல், உடைத்தாதல்.

நூல்.

க. சீரணிந்த தென்கருவைச் செல்வனே யொப்பனையாள்
வாரணிந்த கொங்கை மணநதோனே—காரணிந்த
கண்டனே நின்பொற் கழலல்லாற் காதலித்த
தொண்டனேற் குண்டோ துணை.

(இ - ள்.) சீர் அணிந்த - சிறப்புப்பொருந்திய, தென் கருவை - அழகிய கருவையில் எழுந்தருளிய, செல்வனே - எல்லா ஐசுவரியங்களையு முடையவனே! ஒப்பனையாள் - அழகையுடைய உமாதேவியின், வார் அணிந்த - கச்சைப்பூண்ட, கொங்கை - தனத்தை, மணந்தோனே – கூடினவனே! கார் அணிந்த - (நஞ்சுண்டதனால்) கருமையைப்பொருந்திய, கண்டனே - திருக்கழுத்துடையவனே!

நின் பொன் கழல் அல்லால் - உனது அழகிய திருவடிகளேயல்லாமல், காத லித்த தொண்டனேற்கு - (அதனையே எப்பொழுதும்) விரும்பிய அடியவனுகிய எனக்கு, துணை —, உண்டோ - வேறு உளதோ? (எ - று.)—இல்லையென்றபடி.

எல்லாநூல்களும் மங்கலமொழி முதல் வகுத்துக் கூறவேண்டுதலால், 'சீர்' என்று தொடங்கினர். "வழிபடு தெய்வவணக்கஞ்செய்து, மங்கலமொழி முதல் வகுத், தெடுத்துக்கொண்ட விலக்கண விலக்கியம், இடுக்கணின்றி யினிதுமுடியும்", "சீர் மணி பரிதி யானை திரு நில முலகு திங்கள், கார் மலை சொல் லெழுத்துக் கங்கை நீர் கடல் பூத்தேர் பொன், எருறு மிவை மூவாறும் இதன்பரியாயப் பேரும், ஆரு மங்கலச்சொல் செய்யுளாய்ந்து முன்வைக்க நன்றும்" என்பன நோக்குக. ஒப்பனை - அலங்காரம்; உடையவளுக்குப் பண்பாகுபெயர். ஒப்பனை பென்பது, திருக்கருவைப்பிரானது தேவியார் திருநாம மென்பர். திருப்பாற் கடல் கடைந்தகாலத்து அதனினின்று உண்டான ஆலாகலவிஷத்தைக் கண்டு அஞ்சியோடின தேவர்களின் வேண்டுகோளால் சிவபிரான் அதனை உண்டு கண் டத்தில் நிறுத்தியதனுல், 'காரணிந்தகண்டன்' என்றார். 'காரணிந்தகண்டன்' என்றதனுல் - செய்தற்கரிய செயல்களைச் செய்தாயினுந் தன்னடியார்களின் ஆபத்தைத் தீர்த்தருளுந் தன்மை விளக்கப்பட்டது. பொற்கழல் - பொன்னுலாகிய கழலென்னும் அணியை அணிந்த அடி யென்றுமாம். (க)

உ. துணைவியொடு மால்விடைமேற் றோன்றிவினை நீக்கி
யிணைமலர்த்தா ளென்சிரத்தி லேற்றிப்—பணிவிடைக்கு
வேண்டாத வென்னை வலியிவிலை கொண்டுதடுத்
தாண்டான் கருவை யரன்.

(இ - ள்.) கருவை - கருவையில் எழுந்தருளிய, அரன்-பரமசிவன்,—துணைவியொடு - தன்மனைவியான உமாதேவியுடன், மால் விடைமேல் - பெரியவிருஷபத்தின்மேல், தோன்றி - எழுந்தருளி (எனக்குத்தரிசனந்தந்து), வினை நீக்கி - (எனது) கருமங்களைப் போக்கி, இணை மலர் தாள் - ஒன்றோடொன்றொத்த [வேறுஉவமைபெறாத] தாமரைமலர்போலுந் திருவடிகளை, என் சிரத்தில் ஏற்றி- எனது தலையின்மேல் வைத்து, பணிவிடைக்கு வேண்டாத - (அவ்வெம்பெருமானுக்குத் திருத்தொண்டுகள்செய்ய விரும்பாத, என்னை—, வலிய - பலாத்காரமாக [தானுகவே], விலை கொண்டு - விலைகொடுத்துவாங்கின அடிமையாகக்கொண்டு, தடுத்து - (யான் தீயவழியிற் செல்வதைத்) தடைசெய்து, ஆண்டான் - காத்தருளினுன்; (எ - று.)—இது என்ன திருவருள்! என்று அதன் அருமைபெருமைகளை வியந்தபடி.

மால்விடை - திருமாலாகிய விருஷப மென்றுங் கூறுவர். இணைத்தாள் - உபயபாதமுமாம். அரன் - ஹரன்; (தன்னை அடைந்தவர்களின் துன்பங்களனைத் தையும்) அழிப்பவன். நல்வினையும் பிறப்பிற்கு எதுவாய் நின்று முத்திக்குத் தடையாதலால், பொதுப்பட, 'வினைநீக்கி' என்றார். "இருள்சேரிருவினையுஞ் சேரா" என்று திருவள்ளுவர் கூறுவதும் இதுபற்றியே. தேவஜந்மம் நல்வினைப் பயனுற் பெரிதும் இன்பம் நுகருமாறு நேர்வதாயினும் அத்தேவர்களும் அந்நல் வினை முடிந்தவளவிலே அவ்வுடம்புஒழிய மீளவும் இவ்வுலகத்திற் கருமவசத்

திற்குஎற்ப வேறுபிறவி கொள்பவராதலும், உயிரைப் பந்தப்படுத்துவதிற் பொன் விலங்கும் இருப்புவிலங்கும்போலப் புண்ணியஜன்மமும் பாபஜன்மமும் சமமேயாதலும், இவ்விருவகைக் கருமங்களையும் முற்றும் ஒழித்தவர்களே சிற்றின்பத்துக்கும் பெருந்துன்பத்துக்குமே இடமான எழுவகைப்பிறப்புக்களிலும் புகுதாமற் பேரின்பத்துக்கே இடமான மீளாவுலகமாகிய முத்தியிற் சேர்ந்து மீளவும் பிறத்தலிலராவரென்பதும் உணர்க. (௨)

ஈ. அரவணிந்த தென்கருவை யாளுடையான் வேதம்
பரவுங் களவிற் பரமன்—றிருவடியை
நேர்ந்தார்க் கணித்தாகு நேரா துளமயக்கஞ்
சேர்ந்தார்க்கு முத்தியது சேண்.

(இ - ள்.) அரவு அணிந்த - நாகங்களை ஆபரணமாகத்தரித்த, தென் கருவை- தென்கருவையில் எழுந்தருளிய, ஆள்உடையான் - (யாவரையும்) அடிமையாகவுடையவனும், வேதம் பரவும் - வேதங்களெல்லாம் புகழப்பெற்ற, களவின்-களாமரத்தின்கீழ் எழுந்தருளிய, பரமன் - சிறந்தகடவுளுமாகிய சிவனது, திரு அடியை—, நேர்ந்தார்க்கு - சரணமாகஅடைந்த அடியார்களுக்கு, முத்திஅது - மோட்சம், அணித்து ஆகும் - சமீபத்திலுள்ளதாம்; நேராது - (அதனை) அடையாமல், உளம் மயக்கம் சேர்ந்தார்க்கு - மனம்மயங்குதல்பொருந்தினவர்க்கு, சேண் - (அது) தூரத்திலுள்ளதாம்; (எ - று.)

அரவணிந்த கதை:—ஒருகாலத்திற் பரமசிவன் தம்மைமதியாத தாருகவனத்திலுள்ள முனிவர்களது மனநிலைமையைப் பரீக்ஷிக்க எண்ணித் தாம் ஒரு விடசங்கமத்திருவுருவங்கொண்டு அவரில்லந்தோறுஞ்சென்று பிக்ஷாடனஞ்செய்து தம்மைநோக்கிக் காதல்கொண்ட அம்முனிபத்தினியர்களது கற்பு நிலைமையைக் கெடச்செய்ய, அதுகண்டு பொறுமற்கோபமூண்ட அம்முனிவர்கள் அபிசாரயாகமொன்று செய்து அவ்வோமத்தியினின்றும் எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, முயலகன், வெண்டலை முதலியவற்றைச் சிவனைக்கொன்றுவரும்படிஏவ, சிவபெருமான் தம்மேற்பொங்கிவந்த நாகங்களை ஆபரணங்களாகவும், பூதங்களைத் தமது கணங்களாகவுங் கொண்டு, மானைக் கையில்ஏந்தி, புலியைத் தோலை உரித்துஉடுத்து, முயலகனை முதுகிற்காலால்ஊன்றி, வெண்டலையைக் கையிற்பற்றிச் சடைமேல் அணிந்து, அவற்றையெல்லாம் பயனிலவாகச்செய்துவிட்டன ரென்பதாம்.

இங்கு மயக்கமாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனுங் கடவுளும் இல்லையெனவும் மற்றும் இத்தன்மையனவுஞ் சொல்லும் மயக்கநூல்வழக்குக்களை மெய்ந்நூல்வழக்கென்று துணிதல் ; மயக்கம், மருள்,விபரீதஞானம், அவித்யைஎன்பன- ஒருபொருட்சொற்கள். முத்தியது என்னும் எழுவாய், முன்வாக்கியத்திலுங்கூட்டப்பட்டது; 'அது' - முதல்வேற்றுமைச் சொல்லுருபு, 'சேண்' என இடத்திலுள்ளதை இடமாக உபசரித்தார். இனி, முத்தி சேணது என்றுமாம். (ஈ)

ச. சேணிற் கொடிநுடங்குந் தென்கருவை யம்மானே
கோணைப் பிறையணியுங் கோமானே—பேணித்
தொடுக்குங் கவிதைத் தொழும்பனுக்கு வந்த
விடுக்கண் களையாத தென்.

(இ - ள்.) கொடி - துவசங்கள், சேணில் - ஆகாயத்தில், நடங்கும் - அசையப்பெற்ற, தென் கருவை - தென்கருவையில் எழுந்தருளிய, அம்மானே - தலைவனே! கோணை - வளைந்தவடிவமாகிய, பிறை - ஒற்றைக்கலையிளஞ்சந்திரனை, அணியும் - (திருமுடியில்) தரித்த, கோமானே - கடவுளே! பேணி - விரும்பி [பத்திகொண்டு], கவிதை - பாடல்களை, தொடுக்கும் - (உன்விஷயமாகப்) பாடுகின்ற, தொழும்பனுக்கு - அடியவனாகிய எனக்கு, வந்த - நேர்ந்த, இடுக்கண் - பிறவித்துன்பங்களை, களையாதது - (நீ) நீக்காதது, என் - யாதுகாரணம்? (எ - று.)

பத்தியுடைய அடியார்களது துன்பங்களையெல்லாந் தொடர்ச்சியறத் தொலைத்தல் அருளுடைய கடவுளுக்குக் கடமையன்றோ வென்றபடி. 'சேணிற் கொடிநுடங்கும்' என அங்கரத்து மாடமாளிகை மதில் முதலியவற்றின் உயர்ச்சியைக் கூறினர். கோணை, ஐ - சாரியை. தன்திருவடிகளை அடைந்தார்க்குக் குறை தீர்த்து அருளுந் தன்மையனென்பது தோன்ற 'கோணைப்பிறையணியுங் கோமான்' என்றார். இடுக்கணுவது - மலர்ந்தநோக்கமின்றி மையல்நோக்கம்பட வருந் துன்பம்; இடுங்குகண் என்பதன் சம்பந்தத்தால் வந்தபெயர்.

பிறையணிந்த கதை:—சந்திரன் தக்ஷமுனிவரது புத்திரிகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழுநக்ஷத்திரங்களையும் மணஞ்செய்துகொண்டு, அவர்களுள் உரோகிணியென்பவளிடத்து மிகவுங்காதல்கூர்ந்து அவளுடனே எப்பொழுதுங் கூடிவாழ்ந்திருக்க, மற்றை மகளிரது வருத்தம்நோக்கித் தன்னை 'க்ஷயமடைவாயாக' என்று சபித்த அம்முனிவர்சாபத்தாற் சந்திரன் பதினைந்துகலைகளுங் குறைந்து மற்றைக்கலையொன்றையும் இழப்பதற்குமுன்னஞ் சிவபிரானைச் சரணமடைய, அப்பெருமான் அருள்கூர்ந்து அவ்வொற்றைக்கலையைத் தந்தலையில் அணிந்து மீண்டுங்கலைகள்வளர்ந்துவரும்படி அனுக்கிரகித்தா ரென்பதாம். (ச)

ரு. என்னெஞ்சில் வைத்தற் கினியதவம் யாதுசெய்தேன்
பொன்னஞ் சிலையாற் புரமெரித்த—முன்னவனே
யன்னம் பயில்கருவை யானே யரவுதொழப்
பொன்னம் பலத்தாடும் பூ.

(இ - ள்.) பொன் அம் சிலையால் - அழகிய பொன்மலையாகிய வில்லினால், புரம் - மூன்றுபட்டணங்களை, எரித்த - அழித்த, முன்னவனே - முதற்கடவுளே! அன்னம் பயில் கருவையானே-அன்னப்பறவைகள் சஞ்சரித்தற்கு இடமான கருவைக்கு நாதனே!— அரவு தொழ-ஆதிசேஷனது அம்சமாகிய பதஞ்சலி பகவான் வணங்கும்படி, பொன் அம்பலத்து - பொன்மயமான சபையில் [சிதம்பரத்தில்], ஆடும் - நர்த்தனஞ்செய்த, பூ - (உனது) தாமரைமலர்போலுந் திருவடிகளை, என் நெஞ்சில் வைத்தற்கு - எனது மனத்திலே (எப்பொழுதும்) வைத்துக்கொண்டு தியானிப்பதற்கு, இனிய தவம் யாது செய்தேன் - நல்ல எந்தத் தவத்தை (முற்பிறப்பிற்) செய்தேனோ? (எ - று.)

என்றது, இப்படிப்பட்டமகாபாக்கியம் முற்பிறப்பிற் பெருந்தவஞ்செய்தார்க்கன்றி எளிதிற் கூடா தாதலின்; அன்றிக்கே, யாதொருநல்வினையுஞ் செய்யாத யான் உன்திருவடியை எப்பொழுதுந் தியானிக்கப் பண்ணினது காரணமில்லாம

வியல்பாகவே யுண்டாகின்ற உனதுகருணையினலேயன்றி வேறன்றென்பது கருத்தாகவுமாம். சிலையென்பதற்கு -'இரட்டுறமொழிதலால், மலையென்றும் வில்லென்றும் பொருள்கொள்ளப்பட்டது.

அன்னம் - ஹம்ஸமென்னும் வடமொழியின் திரிபு. 'அன்னம்பயில்கருவை' என அன்னங்கள் வந்துதங்கி வாழ்தற்கு இடமான தாமரையின் செழிப்புக்குக் காரணமாகிய நீர்வளச்சிறப்புக் கூறினர். தேவர்களுக்காகத் திருக்கைலாசத்திலும், காளிக்காகத் திருவாலங்காட்டிலும், பதஞ்சலிபகவான் வியாக்கிரபாதமுனிவர்களுக்காகச் சிதம்பரத்திலும், தடாதகைப்பிராட்டியார் திருக்கலியாணத்துக்கு வந்த மேற்கூறிய முனிவர்க்காகத் தென்மதுரையிலுந் திருநடனஞ்செய்தருளினதென அறிக. பூ - உவமவாகுபெயர். வைத்தற்கு - (நீ) வைப்பதற்கு எனவுமாம்.

புரமெரித்த கதை:— தாரகாசுரனது புத்திரர்களாகிய வித்யுன்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்கதவஞ்செய்து மயனென்பவனற் சுவர்க்கமத்தியபாதாளமென்னும் மூன்றிடத்திலும் முறையே பசும்பொன் வெண்பொன் கரும்பொன்களால் அரண்வகுக்கப்பட்டு ஆகாயமார்க்கத்திற் சஞ்சரிக்குந் தன்மையையுடைய மூன்று பட்டணங்களைப் பெற்று மற்றும்பல அசுரர்களோடும் அந்நகரங்களுடனே தாம்நினைத்த விடங்களிற் பறந்துசென்று பலவிடங்களையும் பாழாக்கிவருகையில், அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால், சிவபெருமான் பூமியைத் தேராகவும், சந்திரசூரியர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும், நான்குவேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், ஆதிசேஷனை நாணகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகமைந்து அக்கினியை முனையாகவுடைய அம்பாகவும், மற்றைத்தேவர்களைப் பிறபோர்க்கருவிகளாகவும் அமைத்துக்கொண்டு யுத்தசந்நத்தராகிச் சென்று போர்செய்ய யத்தனிக்கையில், தேவர்கள் தத்தமது வல்லமையை நினைந்து அகங்கரித்ததனை உணர்ந்து சினந்து அவர்களுதவியைச் சிறிதும் ஏற்றுக்கொள்ளாமல், தாமே புன்சிரிப்புச்செய்து அசுரரனைவரையும் பட்டணங்களோடு எரித்தருளினரென்பதாம். (௬)

சூ. பூமருவு வேதன் புயல்வண்ணன் கண்டறியாத்
தாம மணிமுடியுந் தாளிணையும்—யாமறிய
வாழுங் கருவை வளநகரில் வந்துநின்றான்
றாழுஞ் சடைக்களவீ சன்.

(இ - ள்.) தாழும் சடை-தாழ்ந்துதொங்குகின்ற (கபர்த்தமென்னுஞ்) சடையையுடைய, கள ஈசன்-திருக்களாமரத்தின்கீ ழெழுந்தருளிய சிவபெருமான்,—பூ மருவு வேதன் - (திருமாலின் நாபீகமல)மலரில் தோன்றிய வேதம்வல்ல பிரமனும், புயல் வண்ணன் - மேகம்போன்ற திருநிறமுடைய திருமாலும், கண்டு அறியா - தரிசித்து அறியமாட்டாமற்போன, தாமம் அணி முடியும்-(கொன்றை) மாலையைச் சூடிய திருமுடியையும், தாள் இணையும் - உபயதிருவடியையும், யாம் அறிய - நாமெல்லாம் அறியும்படி, வாழும் கருவை வள நகரில் - எல்லாவாழ்க்கைகளுக்கும் இடமான வளங்களையுடைய திருக்கருவாபுரியில், வந்து நின்றான் - வந்து நிலையாக எழுந்தருளி நின்றான்; (எ - று.)—இது என்ன திருவருளின் சிறப்பு!

கடவுள் பக்தியையுடைய அடியார்களுக்கு மிகவும் எளியவரென்றும், பக்தரல்லாத பிறர்க்கு மிகவும்அரியவரென்றுங் கூறியபடியாம். திரிமூர்த்திகளுள் மற்றையிருமூர்த்திகளாலுங் காணப்பெறாத சிவபெருமான் எனது நல்வினைப்பயனால் எனக்குக் காட்சியளித்தன னென்பதாம். "பாதாரவிந்தமுஞ் செஞ்சடைக் காடும் பஞ்சாயுதனும், வேதாவு மின்னமுங் காண்பரியானை யென்மெய்த்தவத்தா, ஞதாவென்றேத்திக் கருவைக்களாவினறுநிழற்கீழ்க், காதார்வரிவிழி யொப்பனை யாளொடுங் கண்டனனே" என்றார் கலித்துறையந்தாதியிலும். வேதன் - வேதா என்னும் வடசொல்லின் திரிபாய், விதிக்குங்கடவுளாகிய பிரம னென்றுமாம். அடியார்களையெல்லாங்கூட்டி 'யாம்' என்றார்; உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. வளம் - ஜலவளம், நிலவளம் முதலிய பலவளங்கள். சடை - ஜடாஎன்பதன் திரிபு. களா - குறியதன்கீழ் ஆ குறுகிற்று.

முன்இரண்டடி - முறைநிரனிறைப்பொருள்கோள்; வேதன் காணாத முடியும், புயல்வண்ணன் காணாத தாளும் என முறையே இயைத்துப் பொருள்கொள்க. இவ்வாறுகூறியது - தாந்தாங் கடவுளென்னுங் கருத்துக்கொண்டு ஒருவர்க்கொருவர் பகைமைபூண்ட பிரமவிஷ்ணுக்களின் மாறுபாட்டை ஒழிக்கும்பொருட்டுப் பரமசிவன் அவ்விருவர்க்கும் நடுவில் ஒருபெரிய அனற்பிழம்பினுருவமாய்த் தோன்றி நின்று 'இப்பிழம்பின் அடியையும் முடியையுந் தேடுமின்' என்ன, அவ்வடிமுடிகளில்ஒன்றை முன்னங்கண்டவரே முதல்வரென்று சொல்லிப் பிரமன் அம்சரூபியாய் முடியினைக்காண விண்பறந்தும், விஷ்ணு வராகரூபியாய் அடியினைக்காண மண்ணிடந்துஞ் சென்று பலநாள்தேடியும் முடிவுகண்டிலராய்ப் போயினரென்பதோர் கந்தபுராணத்துக்கதையை உட்கொண்டு. (சு)

எ. ஈசனே யென்று மிமயமயி லொப்பனையா
ணேசனே யென்று நினைந்துருகிப்—பேசினே
னல்வினையைக் கண்டே னவையற்றேன் வாழ்வுற்றேன்
வல்வினையைக் கண்டிலேன் மற்று.

(இ - ள்.) ஈசனே என்றும் - தலைவனேயென்றும், இமயம் - இமவத்பர்வதராசன் மகளாகிய, மயில் - மயில்போலுஞ்சாயலையுடைய, ஒப்பனையாள் - அழகையுடைய உமாதேவியின், நேசனே என்றும் - அன்புள்ள கணவனே யென்றும், நினைந்து - தியானித்து, உருகி - (மனங்) கரைந்து, பேசினேன் - சொல்லித்துதித்தேன்; (அதனால்), நல்வினையை-(யான்முற்பிறப்பிற்செய்துள்ள) நல்ல புண்ணியத்தை, கண்டேன் காணப்பெற்றேன்; நவை அற்றேன் - (காமம் முதலிய) குற்றங்கள் நீங்கினேன்; வாழ்வு உற்றேன்-முத்தியுலகத்துப் பேரின்பவாழ்க்கையைப் பெற்றேன்; மற்று - பின்பு, வல் வினையை கண்டிலேன் - வலியதீவினையைக் கண்டேனில்லை; (எ - று.)

இங்ஙனமே யாவருந் தியானித்துத் துதித்து வினையற்று வாழ்வுபெறுவீராக என்றபடி. நேசம் - நேயமென்பதன் போலி. வாழ்வுஉற்றேன் என இறந்தகாலத்தாற்கூறினது, தெளிவும் விரைவும் பற்றி; இவ்வுலகத்திலிருக்கும்பொழுதே உயிர் அவிச்சை முதலிய மாசு நீங்கி நிரதிசயஇன்பம்பெற்று நிற்கும் சீவன்முத்திநிலைமையைக் கருதியாகவுமாம். (எ)

அ. மற்றுமொரு தெய்வத்தை வாழ்த்தேன் முழுக்காதல்
பற்றி யுளத்துவைத்துப் பாவியேன்—சிற்றடியே
னும்பருமா லும்போற் றொருவன் கருவைநகர்
நம்பெருமா னல்லாது நான்.

(இ - ள்.) சிறு அடியேன் - சிறியதொண்டனாகிய, நான்—, உம்பரும் - (பிரமன்முதலிய) தேவர்களும், மாலும் - திருமாலும், போற்று - துதிக்கின்ற, ஒருவன் - ஒப்பற்றவனாகிய, கருவைநகர் நம்பெருமான் அல்லாது - திருக்கருவாபுரியில் எழுந்தருளிய நமக்கெல்லாந்தலைவனாகிய பரமசிவனையே யல்லாமல், மற்றும் ஒரு தெய்வத்தை - வேறொருகடவுளையும், வாழ்த்தேன் - துதிக்கமாட்டேன்; முழு காதல் பற்றி - பூர்ணமானபத்தியினால், உளத்து வைத்து - மனத்திலேவைத்து, பாவியேன் - தியானிக்கவும்மாட்டேன்; (எ - று.)

இங்ஙனம் மறந்தும் புறந்தொழாத தமதுமனவுறுதியை வெளியிட்டவாறு. இனம்பற்றி, கண்ணாற்காணவும்மாட்டேனென்பதுங் கொள்க. மால் - இந்திரனுமாம். அல்லாது - எதிர்மறைக்குறிப்புவினையெச்சம். (அ)

௯. நானிலத்தோர் முன்னே நலனழிந்து நானிருந்தாற்
கான நறும்பூங் களவீச—வீனமுரைத்
தென்னைச் சிரிப்பாரென் றெண்ணாதே யெம்பெருமா
னுன்னைச் சிரிப்பாரு முண்டு.

(இ - ள்.) கானம் - காட்டில்தோன்றுகின்ற, நறு பூ - வாசனைவீசுகிற பூக்களையுடைய, கள ஈச - களாமரத்தின்கீழ்க்கடவுளே! எம்பெருமான் - எமது தலைவனே!—நான் - (உனதுஅடியவனாகிய) யான், நானிலத்தோர் முன்னே - இந்நிலவுலகத்துள்ள மனிதர்களுக்கு எதிரே, நலன் அழிந்து - ஒருநன்மையையும் பெறுமல், இருந்தால் - (இவ்வாறு) இருந்தால்,—(கண்டவர் கேட்டவர் எல்லோரும்), ஈனம் உரைத்து - இழிவானசொற்களைச்சொல்லி, என்னை சிரிப்பார் என்று - என்னையே பரிகசித்து நகைப்பார்களென்று, எண்ணாதே - நினையாதே; உன்னை சிரிப்பாரும் - உன்னை நகைப்பவர்களும், உண்டு—; (எ - று.)

தம்மையே கதியென்று நம்பிச் சரணமடைந்தவரைக் குற்றம்பாராது பாதுகாத்தல் உலகவியல்பு; ஆதலால், உன்னையே நம்பிச் சரணமடைந்த அடியவனாகிய என்னையும் குற்றம்பாராட்டாது பாதுகாக்கவேண்டியது நினது கடமை யென்பதாம். இச்செய்யுளில் அடியார்களது பிழைகளைப் பாராமற் பாதுகாத்தல் தலைவரதுஇயல்பு என்ற பொதுப்பொருளைக்கொண்டு எனதுகுற்றத்தைப் பாராது பாதுகாத்தல் நினதுகடன் என்ற சிறப்புப்பொருளைச் சமர்த்தித்தது, வேற்றுப்பொருள்வைப்பணியின்பாற்படும். சகலகல்யாணகுணபரிபூர்ண னெனப்படுகின்ற இறைவன் "அடியாரிழைத்தபிழைகோடிநெஞ்சினறியாத ஆதிமுதல்வன்" என்றுகூறப்படுமாறு அக்குணங்களெல்லாவற்றினுந் தலைமைக்குணமாகிய கருணையைக் கைக்கொண்டுநில்லாவிடின் அவனதுகுணங்கட்கே ஓரிழிவாதலால், 'களவீச. . . . .உன்னைச்சிரிப்பாருமுண்டு' என்றார். வேறுகதியின்றிச் சரணமடைந்தவரைக் காவாது கைவிட்டால், விட்டவரையே யாவரும் இகழ்வ ரென்றபடி.

"கொண்டாளப்பெற்றவர் தம்மடியார்கள் குறைசெயினுந், தண்டா முனிவுற் றிகழ்தல்செய்யார் தமியேன்பிழைநூ, றுண்டாயினும் பொறுத் தாளுந் தகைமை யுனதுகடன், கண்டார் நகைப்பர் களவீச நீயென்னைக் கைவிடினே" என்றார் திருக்கருவைக்கலித்துறையந்தாதியிலும். நானிலம் - நான்காகிய நிலத்தையுடையது; பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை: நான்கு நிலங்களாவன - முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பவைகளிற் பாலைநீங்க நன் மக்கள் குடியிருத்தற்கு உரிய மற்றை நான்கும். எண்ணுதே - ஏவலொருமை முற்று. பெருமான் - அண்மைவிளி. (௯)

௧0. உண்டுபல குற்ற முனையடைந்தே ஞுதலினுற்
கண்டு பொறுத்தல் கடன்கண்டாய்—பண்டுதிரஞ்
சிந்த வடித்தவனைச் சீறுது பாசுபதந்
தந்தமுக லிங்கநா தா.

(இ - ள்.) பண்டு - முன்னே, உதிரம் சிந்த - இரத்தம் ஒழுகும்படி, அடித்தவனை - (வில்லினுற்) புடைத்த அருச்சுனனை, சீறுது-கோபியாமல், (அவனுக்கு), பாசுபதம் - பாசுபதாஸ்திரத்தை, தந்த - கொடுத்தருளின, முகலிங்கநாதா - திருமுகம்மலர்ந்த லிங்கத்தின் வடிவமாகவுள்ள தலைவனே!—பல குற்றம் உண்டு - (என்னிடம்) பலகுற்றங்கள் உள்ளன; (அவற்றை), உனை அடைந்தேன் ஆதலினுல் - (யான்) உன்னைச் சரணமடைந்தேனுகையால், கண்டு - கடாக்ஷித்து [அருளோடுநோக்கி], பொறுத்தல் - பொறுத்துவிடுதல், கடன் - (உனக்குக்) கடமையாகும்; கண்டாய் - அறிவாய்; (எ - று.)

உயிர்களுக்குத் தலைவனுதலாலும், விருஷபத்துக்குத் தலைவனுதலாலும், பசுபதியென்று சிவனுக்குப்பேர்;அவனது சம்பந்தமானது, பாசுபதம்:தத்திதாந்த நாமம். குற்றத்தைப்பொறுத்து அருள்செய்தற்குத் திருஷ்டாந்தமாக இவ்வரலாற்றை எடுத்துக்கூறினர். உதிரம் - ருதிரம்.

அருச்சுனன் வில்லால் அடித்த கதை :— பாசுபதம்பெறத் தவநிலைநின்ற அருச்சுனனைஅழிக்கத் துரியோதனனேவலாற் பன்றிவடிவாய்வந்த மூகாசுரன்மேல் வேடவடிவாய்வந்த சிவபெருமான் அம்பெய்ய,அதுபிளக்குமுன்னே அருச்சுனன்அம்பொன் றுஎய்து வராகத்தை விழுத்த, அதுகாரணமாக அவ்விருவர்க்கும் உண்டான போரிற் பரமசிவன் எதிரியது வில்நாணியை அறுக்க, பார்த்தன் அவ் விற்கழுந்தாற் கடவுளது முடியில் அடித்தான்; பின்பு சிவபிரான் தமது நிஜரூபத்தோடு காட்சிகொடுத்து அவன் வேண்டுகோளின்படி பாசுபதாஸ்திரத்தையும், வில் அம்பறுத்தூணி முதலியவற்றையும் அருளிப்போயினர் என்பதாம். (௧0)

௧௧. நாதா தமிழ்க்கருவை நம்பா வெனக்கினிய
தாதா வெனவுன் சரணடைந்துங்—காதுசின
வெவ்விடையின் வீதி விடங்கனே நாடோறு
மிவ்விடரின் வாடுவதென் யான்.

(இ - ள்.) காது - (பகைவரை) அழிக்கும்படியான, சினம் - கோபத்தையுடைய, வெம் - (பகைவர்க்குப்) பயங்கரமான, விடையின் - விருஷபத்தை

வாகனமாகவுடைய, வீதி விடங்கனே - வீதிவிடங்கப்பெருமானே ! நாதா - தலைவனே ! தமிழ் கருவை நம்பா - செந்தமிழ் வழங்குந் திருக்கருவைச் சிவனே !— எனக்கு இனிய தாதா என - (நீ) எனக்கு நல்லகொடையாளியென்று எண்ணி, உன் சாண் அடைந்தும் - உனது திருவடியைச் சரணமாக அடைந்தபின்பும், யான்--, நாள்தோறும்—, இ இடரின் வாடுவது - இப்பிறவித் துன்பங்களில் வருந்துவது, என் - யாதுகாரணம்? (எ - று.)

விரைவிற் போக்கியருளவேண்டு மென்றபடி. தமிழ்க்கருவை - இனியகருவை யென்றுமாம். தமிழ்நம்பாஎன இயைத்து,தமிழுக்கு உரியகடவுளே யென்றுமாம். நம்பன் – யாவராலும் நம்பிச்சரணமடையப்படுபவன்; இனி,நமக்குஇன்னுனென்னும் பொருள்பட வருவதோர் உயர்ச்சிச்சொல்லாகவுமாம். சரண் - இரட்டுறமொழிதலால், அடியும் அடைக்கலமும் எனப்பட்டது. காதுசினம் - வினைத்தொகை. வெவ்விடை - விரும்பப்படும் விருஷபமுமாம். விடங்கன்-டங்கத்தினுற் செய்யப்படாதவன்; டங்கம் - உளி: எனவே, சுயம்பு என்றபடி. வீதியில் எழுந்தருளுதலால், வீதிவிடங்கனென்று வழங்குவர்; இனி, வீதிக்கு அழகைச்செய்பவனென்றுங் கொள்ளலாம்: விடங்கம் - அழகு. 'வாடுவதென் னியான்' என்றும் பாடம். (கக)

கஉ. யாவ னமர ரிடர்தீர நஞ்சுண்டான்
யாவன் கருவை யினிதுறைந்தான்—யாவன்
றவநேர்மை கண்டு தனக்கடிமை கொள்வா
னவனே யெனையாண் டவன்.

(இ - ள்.) யாவன் - எக்கடவுள், அமரர் இடர் தீர - தேவர்கள் துன்பம் நீங்கும்படி, நஞ்சு உண்டான் - விஷத்தை உட்கொண்டானோ? யாவன்—, கருவை- திருக்கருவையில், இனிது உறைந்தான் - இனிமையாக எழுந்தருளிநின்றானோ? யாவன்--, தவம் நேர்மை கண்டு - (உயிர்களது) தவத்தின் அமைதியை நோக்கி, தனக்கு அடிமை கொள்வான் - (அவ்வுயிர்களைத்) தனக்கு அடிமையாக்கிக்கொள்வானோ? அவனே - அம்முழுமுதற்கடவுளே, எனை ஆண்டவன் - என்னை அடிமைகொண்டவனாவன்; (எ - று.)

இனிது-குறிப்புமுற்று வினையுரியாய் நின்றது; கிரியாவிசேஷண மென்பர்.

கங. ஆண்டவனே தென்கருவை யாதியே யாடரவம்
பூண்டவனே யென்றுதினம் போற்றிடவு—நீண்டதுயர்
போகா திருக்குமோ பொங்கிருளு நிற்குமோ
மாகா தவன்றேர் வரின்.

(இ - ள்.) 'ஆண்டவனே - அடிமைகொண்டவனே! தென் கருவை ஆதியே - தென்கருவையிலெழுந்தருளிய முதற்கடவுளே! ஆடு அரவம் பூண்டவனே- (படமெடுத்து) ஆடுகிற நாகங்களை ஆபரணமாக அணிந்தவனே!' என்று - என்று சொல்லி, தினம் - நாள்தோறும், போற்றிடவும் - துதிக்கவும், நீண்ட துயர் - மிகுந்த பிறவித்துன்பங்கள், போகாது இருக்குமோ - ஒழியாமல் நிலைநிற்குமோ? [நில்லாவாம்]; (அது எதுபோலவென்றால்),—மாகு - பெரிய ஆகாயத்தில், ஆதவன் தேர் - சூரியனது இரதம், வரின் - உதித்துவந்தால், பொங்கு இருளும் -

(அதற்குமுன்னே) மிகுந்துள்ள இருட்டுமுழுவதும், நிற்குமோ - ஒழியாமல் நிலை நிற்குமோ? [நில்லாது]; (எ - று.)

சிவபிரானைத் துதித்தமாத்திரத்தில் பிறவித்துன்பங்கள் இருந்தவிடந் தெரியாது ஒழிதலை உதாரணங்காட்டி விளக்கினர். எடுத்துக்காட்டுவமையணி. மாகு - மஹாகம் என்னும் வடமொழியின் திரிபு. தேர் - மண்டலம். (கங)

கச. வரந்தருமிப் பார்புரக்கும் வாழ்வுதரும் விண்ணோர்
தரந்தரும்பே ரின்பந் தருமால்—பரந்து
துளவீசன் றேடுந் துணைத்தாட் கருவைக்
களவீச னென்றுரைத்தக் கால்.

(இ - ள்.) துளவு ஈசன் - திருத்துழாய் மாலையையுடைய திருமால், பரந்து - விரைந்துசென்று, தேடும் - தேடின, துணை தாள் - உபயபாதங்களையுடைய, கருவை கள ஈசன் - திருக்கருவைத் திருக்களாவின் கீழ்க்கடவுள், என்று உரைத்தக்கால் - என்று (ஒருதரஞ்) சொன்னால், (அச்சொலவு), வரம் தரும் - வேண்டிய வரங்களையெல்லாங் கொடுக்கும்; இ பார் புரக்கும் வாழ்வு - இந்நிலவுலகமுழுவதையும் (ஏகசக்ராதிபத்தியமாய்) அரசாளும் வாழ்க்கையை, தரும்—; விண்ணோர் தரம் - தேவர்களது பதவியை, தரும்—; பேர் இன்பம் - முத்தியுலகத்து நிரதிசய இன்பத்தையும், தரும்—; (எ-று.)

சிவபிரானது திருநாமசங்கீர்த்தனத்தால் உண்டாகும் பயன்களை விளக்கியவாறு. (கச)

கரு. காலத்தாற் கால படராற் கருமறலி
சூலத்தா லாவி தொலைவனோ—ஞாலத்துட்
டேன்பற்றும் பூங்களவிற் செல்வன் றிருவடியைத்
தான்பற்றும் பற்றுடையான் றான்.

(இ - ள்.) ஞாலத்துள் - பூமியில், தேன் பற்றும் பூ களவின் - தேன் பொருந்தின பூக்களையுடைய களாவின்கீழ் உள்ள, செல்வன் - எல்லாச்செல்வமுமுடைய கடவுளது, திரு அடியை - சீர்பாதங்களை, பற்றும் - சரணமாக அடைந்த, பற்று உடையான் - அன்பையுடைய அடியவன்,—காலத்தால் - யமனாலும், கால படரால் - யமதூதர்களாலும், கரு மறலி சூலத்தால் - கருநிறமுடைய யமனது சூலாயுதத்தாலும், ஆவி தொலைவனோ - உயிர்ஒழிவனோ? (எ - று.)—ஒழியான், முத்திபெறுவ னென்றபடி.

சிவபிரானுக்கு ஆட்பட்டவன் யமபாதையின்றி நற்கதிபெறுவ னென்பதாம். காலன் - உயிர்களின் ஆயுள்நாளைக் கணக்கிடுபவன். தேவர்களை உயர்திணையாகவும் அஃறிணையாகவுஞ் சொல்லலா மாதலால், 'காலத்தால்' என அஃறிணையாற் கூறினர். இனி, காலக்கடவு ளாகவுமாம். (கரு)

கசா. தானேவந் தென்னைத் தடுத்தடிமை கொண்டானை
யானே பிறக்கு மெழுபிறப்பும்—வானிற்
சிறந்திருக்குந் தென்கருவைச் செல்வனையெண் ணுமன்
மறந்திருக்கு மோவென் மனம்.

(இ - ள்.) தானே வந்து என்னை தடுத்து அடிமை கொண்டானை - (என் வேண்டுகோளில்லாமல்) தானாகவே வலியவந்து என்னைத் (தீயவழியிற்செல்வதைத்) தடைசெய்து[நல்லறிவுதந்து] அடிமையாக்கிக்கொண்டவனாகிய, வானின் சிறந்திருக்கும் தென்கருவை செல்வனை-பெருமையினாற்சிறப்புற்றிருக்குந் தென் கருவைக்கடவுளை, யானே பிறக்கும் எழு பிறப்பும் - நானாகவே (ஊழ்வினையாற்) பிறக்கும் எழுவகைப்பிறப்புக்களிலும், என் மனம் - எனது நெஞ்சம், எண்ணாமல் - தியானியாமல், மறந்திருக்குமோ - மறந்துவிடுமோ? [மறவாது] ; (எ - று.)

பேருதவிசெய்த பெருமானை யான் எப்பொழுதும் மறவே னென்றதாம். வானில்சிறந்திருக்கும்-முத்தியுலகத்திற் சிறந்துவீற்றிருக்கிற வென்றுமாம். 'எழு பிறப்பும்' என்பதற்கு - இனித் தொடர்ச்சியாக நேரும் எழுபிறப்பு வரையிலும் என்றபடி; அன்றி, வினைப்பயனால்நேரும் எழுவகைப்பிறப்புக்களில் என்றுமாம். எழுவகைப்பிறப்புக்களாவன-ஊர்வன, நீர்வாழ்வன, மானுடம், பறவை, விலங்கு, தேவர், தாவரம் என்பவை. (கசு)

கஎ. மனமொழிந்து காம மயக்கொழிந்து மாறுச்
சினமொழிந்து வாதனையுந் தேய்ந்தா—லினிய
குருக்களாய் வந்தடிமை கொண்டுவீ டுய்க்குந்
திருக்களா வாழுஞ் சிவம்.

(இ - ள்.) மனம் ஒழிந்து - (ஒருவன்) மனம் (பலவழியிலுஞ்சென்று) தடுமாறுவதை ஒழிந்து [ஒருவழிப்பட்டு], காம மயக்கு ஒழிந்து - காமமயக்கங்கள் நீங்கி, மாறு சினம் ஒழிந்து - நீங்குதற்குஅரிய கோபமும் நீங்கி, வாதனையும் தேய்ந்தால் - பழையபயிற்சிவசத்தால் (இவற்றிற்) செல்லும் நினைவும் நீங்கினால், (பின்பு),—திரு களா வாழும் சிவம்-அழகிய களாவின்கீழ் நித்தியவாசஞ்செய்யும் பரமசிவம், இனிய குருக்கள் ஆய் வந்து நல்ல ஆசாரியமூர்த்தியாய் வந்து(காட்சி தந்து), அடிமை கொண்டு - (அவனை) அடிமையாக்கிக்கொண்டு, வீடு உய்க்கும் - மோக்ஷத்திற் செலுத்தும்; (எ-று.)

காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்றுகுற்றங்களுந் தீவினைக்குக் காரணமாய்ப் பிறவித்துன்பங்களைத் தருதலால், அவைஒழிதல் ஒருதலையாக வேண்டிற்று. அநாதியாகிய அவிச்சையும், அதுபற்றி யானெனமதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருளிற் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன்மறுதலையிற் செல்லுங்கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்தென்றார்; தமிழ்நூலார் அவற்றுள் அகங்காரம் அவிச்சையிலும், அவாவுதல் ஆசையிலும் அடங்குதலால், மூன்றென்பர். "காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற, னாமங் கெடக் கெடுநோய்" என்றார் திருவள்ளுவனார். காம மயக்கு - உம்மைத்தொகை. மயக்கு - முதனிலைதிரிந்ததொழிற்பெயர். வாதனை - வாசனை. இனியகுருக்கள் - நல்லதத்துவஞானத்தைச் செவ்வையாக உபதேசிக்கும் ஆசிரியர். குருக்கள் - மரியாதைப்பன்மை. (கஎ)

கஅ. சிவகருமஞ் செய்யார் திருநீறு சாத்தார்
தவநிலையாஞ் சைவநெறி சாரா—ரவனிதனிற்
கான்பரந்த பச்சைக் களாநிழலைக் கைதொழா
ரேன்பிறந்தார் மானிடரா யின்று.

(இ - ள்.) அவனிதனில் - பூமியில், (சிலர்),—சிவகருமம் செய்யார் - சிவனுக்குஉரிய அடிமைத்தொழில்களைச் செய்கின்றாரில்லை; திரு நீறு சாத்தார் - மேன்மையான விபூதியைத் தரிக்கின்றாரில்லை; தவம் நிலை ஆம் சைவம் நெறி சாரார் - உண்மையான நிலைமையாகிய சைவசமயமார்க்கத்தைச் சேருகின்றாரில்லை;கான் பரந்த - வாசனைவீசுகிற, பச்சை - பசுமையாகிய, களா - திருக்களாவின், நிழலை—, கை தொழார் - கைகூப்பித் தொழுகின்றாரில்லை; (இவர்கள்), இன்று - இப்பொழுது, மானிடர் ஆய் - மனிதர்களாய், என் பிறந்தார்?

மானிடப் பிறப்பெடுத்தற்குப் பயன் சிவகருமஞ்செய்தல் முதலியனவேயாதலால், அவற்றைச்செய்யாதவர் பிறப்புப் பயனற்றதென்பதாம். சைவம் - சிவனைத்தெய்வமாகவுடைய மதம். பசுமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய்த் தன்னொற்றிரட்டி ஐகாரம்பெற்றுப் பச்சையென நின்றது. கைதொழுதல்-அஞ்சலிசெய்து வணங்குதல். என் - எவனென்பதன் விகாரம். (கஅ)

கக. இன்று வருந்துயரந் தீர்ந்தோ மினிச்சிலநாள்
சென்று வருந்துயரந் தீர்ப்பாரா—ரென்று
வருந்தாதே நெஞ்சே மலர்க்களவி னீழ
லிருந்தா னொழிப்பா னிடர்.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!—இன்று வரும் துயரம்-இன்றைக்குவருகிற துன்பத்தை, தீர்ந்தோம் - (கடவுளருளால்) நீங்கினோம்; இனி சிலநாள் சென்று வரும் துயரம் - இன்னுஞ் சிலகாலங்கழித்து வரவிருக்குந் துன்பத்தை, தீர்ப்பார் ஆர் - (அப்பொழுது) எவர் நீக்குவர்? என்று - என்றெண்ணி, வருந்தாதே - வருத்தப்படாதே; மலர் களவின் நீழல் இருந்தான் - பூக்களையுடைய திருக்களா மரத்தின் நிழலில் எழுந்தருளியிருக்கின்ற கடவுள், இடர் - துன்பங்களை, ஒழிப்பான் - (எப்பொழுதும்) நீக்குவான்; (எ - று.)

'இன்றுவருந்துயர்'என்றது - சம்சாரக்கிலேசத்தை; 'சிலநாள்சென்று வருந்துயர்' என்றது - மரணவேதனையையும், மறுமைத்துன்பத்தையும். (கக)

உ0. இடர்க்கடலுக் கோட மிதயவிருட் கிரவி
யுடற்பகையை வேரறுக்கு மொள்வா—ளிடப்புறத்தைச்
சூல்வண்ண மேகச் சுரிகுழலுக் கீந்தருளும்
பால்வண்ண நாதன் பதம்.

(இ -ள்.) சூல் - கருக்கொண்ட [நீர்கொண்ட], வண்ணம் - கருநிறமுடைய, மேகம் - மேகம்போற் கரிய, சுரி குழலுக்கு-கடைகுழன்றகூந்தலையுடைய உமாதேவிக்கு, இடம் புறத்தை - வாமபாகத்தை, ஈந்தருளும் - கொடுத்தருளிய, பால் வண்ண நாதன் - பால்போலும் வெண்மையான திருநிறமுடைய கடவுளது, பதம் - திருவடி,—இடர் கடலுக்கு - பிறவித்துன்பமாகிய கடலைக் கடத்தற்கு, ஓடம் - புணையாம்; இதய இருட்கு - மனத்திலுள்ள அறியாமையாகிய இருளை ஒழித்தற்கு, இரவி-சூரியனும்; உடல் பகையை - உடப்பாகிய விரோதியை,வேர் அறுக்கும் - அடியோடு அழிக்கிற, ஒள் வாள் - ஒளியையுடைய வாளாகும்;(எ-று.)

காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றிவருதலால் 'இடர்க்கடல்' என்றூர் ; கீழ் கஅ - ஆம் பாட்டில் 'நீண்டதுயர்' என்றதும் இதுபற்றியே: "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார், இறைவ னடி சேராதார்'' என்றூர் திருவள்ளுவரும். சுல்வண்ணமேகச்சுரிகுழல் - அன்மொழித்தொகை. திருக்கருவைச் சிவபிரானது திருமேனிநிறம் வெளுப்பு. ஒருபொருளிற் பலபொருளின் தன்மையை ஆரோபித்ததனல், பலபடப்புனைவணி; வடநூலார் உல்லேக மென்பர்.

இடப்புறத்தைச்சுரிகுழலுக்கூந்தது:—பிருங்கிஎன்னும் மகாமுனிவர் பரமசிவனைமாத்திரம் பிரதக்ஷிணஞ்செய்யக்கண்ட பார்வதிதேவி தன்பதியைநோக்கி 'முனிவர் என்னைப் பிரதக்ஷிணஞ் செய்யாமைக்கு ஏது என்ன?' என்று வினவ, உருத்திரமூர்த்தி 'இஷ்டசித்திபெற விரும்புபவர் உன்னையும், மோக்ஷம்பெற விரும்புபவர் என்னையும் வழிபடுவர்' என்ன, அதுகேட்ட தேவி பெருமானேடு பிரியாதிருக்குமாறு தவம்புரிந்து வாமபாகம் பெற்றூ ரென்பதாம். (உ0)

உக. பதமறிந்து வாய்பார்த்துப் பற்றூத புல்ல
ரிதமறிந்தாங் கின்சொ லியம்பி—மதிகலங்கி
நன்னுள் கழித்துவிட்டே னுதமுக லிங்கவுனை
யெந்நா ணினைப்பே னினி.

(இ - ள்.) நாத—! முகலிங்க--! (நான்), மதி கலங்கி - அறிவுகெட்டு, பற்றூத புல்லர் - ஒன்றக்கும்பற்றூத அற்பர்களது, பதம் அறிந்து - சமயத்தைத்தெரிந்துகொண்டு, வாய் பார்த்து - (அவர்கள்) வாயிலை நோக்கிச்சென்று, இதம் அறிந்து - (அவர்களுக்கு) இனியது (இன்னதென்று) அறிந்து, ஆங்கு - அதற்கு ஏற்ப, இன் சொல் இயம்பி - இனிமையானசொற்களைச் சொல்லி, நல் நாள் - (எனது) நல்ல ஆயுள்நாளையெல்லாம், கழித்துவிட்டேன் - வீணுகப்போக்கிவிட்டேன்; இனி—, உனை - உன்னை, எ நாள் - எப்பொழுது, நினைப்பேன் - தியானிப்பேன்? (எ - று.)

"செல்வச் செருக்கர் தலைவாயில் தோறுந் திரிந்துதிரிந்து, அல்லற் றுயர் கொண் டிளைத்துவிட்டே னடியே னினியப், புல்லர்க் கெளிமை புகலாமற் காத்தருள் பூந்தடமு, மல்லற் பழனமுஞ் சூழ் கருவாபுரி வானவனே'' என்றூர் கவித்துறையந்தாதியிலும். பற்றூத - சேரத்தகாத என்றுமாம். வாய் பார்த்து - அவர்கள்வாய்ச்சொல்லைப் பார்த்து என்றுங் கொள்ளலாம். நன்னுள் - பயன்படுதற்கு உரிய நாள். (உக)

உஉ. இனிய வமுதை யிருங்களா வின்கட்
கனியைவளர் முக்கட் கரும்பைப்—பனியிமயக்
கொம்பினெடுங் கண்டேன் கொடும்பாவ மோகவிடாய்
வெம்புதுயர் கண்டிலேன் மேல்.

(இ - ள்.) இனிய - இனிப்பான, அமுதை - அமிருதத்தை, இரு களாவின் கண் - பெரிய களாவின்கீழுள்ள, கனியை - பழத்தை - வளர் (அங்குத்தோன்றி) வளர்ந்த, முக்கண் - மூன்றுகண்களையுடைய, கரும்பை—, பனி இமயம் கொம்பினெடும் - குளிர்ந்த இமயமலையின்மகளாகிய பூங்கொம்புபோன்ற உமாதேவியுட

னே, கண்டேன் - பார்த்தேன்; மேல் - பார்த்தபின்பு, கொடு பாவம் - கொடிய தீவினையாலாகிற, மோகம் விடாய்-மூர்ச்சையையுந் தாபத்தையுந் தருகிற, வெம்பு துயர் - கொடிய பிறவித்துன்பங்களை, கண்டிலேன் - கண்டேனில்லை; (எ - று.)

"உள்ள தில்லதென் றுரைத்திடும் பொருளை யுய்த்துணராக், கள்ளர்நாவினி லினித்திடாக் களாநறுங் கனியைத், தெள்ளு செந்தமிழ்க் கருவையிற் சினகரம் புகுந்து, மெள்ளநான்சென்று காண்டலுந் தீர்ந்தது விடாயே" என்றார் பதிற்றுப் பத்தந்தாதியிலும். அமுது, கனி, கரும்பு என்பன - சிவத்துக்கு உவமவாகுபெயர். உண்ணஉண்ண நாக்குக்கு இனிப்பைத்தரும் அமுதம்முதலியனபோலக் கடவுள் தம்மைத் துதிக்கத்துதிக்க நாவுக்கு இனிப்பைத்தருதலினால், அவையாக உருவகப்படுத்தினர். கனி என்றது - அப்பொழுதே நுகராலம்படி பக்குவபலமாயிருப்ப தென்றபடி. கரும்பு என்றதற்கு ஏற்பக் கண்கூறினர்; கண்என்று கணுவுக்கும் நேத்திரத்துக்கும் பெயர். (உஉ)

உங. மேலாம் பதத்தில் விடுவையோ வன்றியென்னை
யேலா நரகத் திடுவையோ—சீலமிலா
வன்சித்த ருள்ள மருவாக் களவீச
வுன்சித்த மேதோ வுரை.

(இ - ள்.) சீலம் இலா - நல்லொழுக்கமில்லாத, வல் சித்தர் - வலிய மனத்தையுடைய அடியரல்லாதவரது, உள்ளம் - மனத்தில், மருவா - சென்றுசேராத, கள ஈச - களாவின்கீழ்க்கடவுளே ! (நீ)—என்னை - (உன்அடியவனாகிய) என்னை, மேல் ஆம் பதத்தில் - (எல்லாவுலகங்களுக்கும்) மேம்பட்டதான முத்தியில், விடுவையோ - செலுத்துவாயோ? அன்றி - அல்லாமல், ஏலா நரகத்து இடுவையோ- தகாத [மிகக்கொடிய] நரகலோகத்திற் போகவிடுவையோ? உன் சித்தம் - உனது மனம், ஏதோ - எதுவோ? (அறியேன்); உரை - சொல்லு; (எ - று.)

தன்வசமின்றி உன்வசமாய் அடிமையான என்னை நற்கதியிற்செலுத்துவது உனது பாரமே யென்றதாம். வன்சித்தர் - சிவத்தைநினைத்து நெஞ்சுருகாதவர். "பரகதிக்கே வைப்பையோ வறியேன் பெரும்பாதகர்போ, நரகதிக்கே வைப்பையோ வறியே னெங்குநானுறினுஞ், சரகதிக்கேசெல்விடையாய் களாவுறைசங்கரனே, வரகதிக்கேற்ற நின்பாதாரவிந்தம் வழுத்துவனே" என்றார் கலித்துறையந்தாதியிலும். (உங)

உச. உரைகடந்த வேதத் துயர்வெற்பை யுள்ளங்
கரைகடந்த ஞானக் கடலை—விரிபூ
மருக்கோல வண்டுநுகர் வண்களா நீழற்
றிருக்கோயி விற்கண்டேன் சென்று.

(இ - ள்.) உரை கடந்த - சொல்லளவை அதிக்கிரமித்த, வேதத்து - வேதங்களில், உயர் - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, வெற்பை - மலைபோன்றதும், உள்ளம் கரை கடந்த - மனத்தின் எல்லையைக் கடந்து மேற்சென்ற, ஞானம் - அறிவுக்கு, கடலை - கடல்போன்றதுமாகிய சிவத்தை, விரி பூ-மலர்ந்த பூக்களின்

மரு - நறுநாற்றத்தை, கோலம் வண்டு - அழகிய வண்டுகள், நுகர் - உட்கொள்ளு தற்கு இடமான, வள் களா - சிறந்த களாவின், நீழல் - நிழலில், திருகோயிலில்- மேன்மையான திருக்கருவையாலயத்தில், சென்று - போய், கண்டேன் - தரிசித்தேன்; (எ - று.)

வேதங்கள் அனந்தமாதலால், 'உரைகடந்தவேதம்' என்றார். சலியாமையும் பெருமையும் உயர்வும் பற்றி, 'வெற்பு' எனப்பட்டது. நீர்நிரம்பிய கடல்போல அறிவுநிரம்பிய தென்பது, ஞானக்கடல் என்றதன் கருத்து. கோ + இல் = கோவில்: இது கோயில் என யகரம்பெற்றுவந்தது, இலக்கணப்போலி. (உச)

உரு. சென்றது காலஞ் சிதைந்த திளமைநல
நின்றதுசா வென்று நினைந்துருகி—மன்றி
னடிக்கின்ற பால்வண்ணர் நாமமெண்ணு மாந்தர்
படிக்கின்ற நூலெல்லாம் பாழ்.

(இ - ள்.) 'காலம் சென்றது-ஆயுள்நாள் கழிந்தது ; இளமைநலம் சிதைந்தது- இளம்பருவத்தின் நன்மை கெட்டது; சாவு நின்றது - (இனி) மரணம் வரற்பாலதாய் நின்றது,' என்று நினைந்து - என்றுஎண்ணி, உருகி - மனம்உருகி, மன்றில் நடிக்கின்ற பால்வண்ணர் நாமம் எண்ணு - நடனசபையில் திருநிருத்தஞ்செய்கிற பால்வண்ணப்பெருமானது திருநாமங்களைத் தியானியாத, மாந்தர் - மனிதர், படிக்கின்ற—, நூல் எல்லாம் - சாஸ்திரங்களெல்லாம், பாழ் - வீணும்; (எ-று.)

நூல்களைக் கற்றதற்குப் பயன் கடவுளைத்தியானித்தலே யென்றதாம். "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ, னற்றாடொழாஅரெனின்" என்றார் திருக்குறளிலும். நாமம் - பெயர். நூல் - சாஸ்திரத்துக்கு உவமவாகுபெயர்: பஞ்சினால் நூற்கப்படும் நூல்போலச் சொல்லாற் கோக்கப்படுதலாலும், நூல் மரம்முதலியவற்றின் கோணலைத் தீர்ப்பதுபோல மனத்தின் கோணலைத் தீர்த்துச் செப்பஞ் செய்தலாலும் வந்த பெயர் என்று அறிக. (உரு)

உசா. பாழிற் சமயப் படுகுழியில் வீழாம
லூழி லெனைக்காத் துதவினாய்—காழி
வருமதலைச் சொற்கா மலர்ந்தமுக லிங்கா
பெரும தலையாய பேறு.

(இ - ள்.) காழி - சீர்காழியில், வரு - அவதரித்த, மதலை - இளம்பருவமுடைய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது, சொற்கு ஆ - திருப்பதிகச்சொல்லுக்காக, மலர்ந்த - முகம்மலர்ந்த, முகலிங்கா - லிங்கத்தில் முகமமையப்பெற்றவனே! பெரும - பெருந்தன்மையை யுடையவனே! பாழின்-பயனற்றனவாகிய, சமயம் - வெவ்வேறு மதங்களாகிய, படுகுழியில் - பெரும்பள்ளங்களில்,வீழாமல்- விழாதபடி, எனை - என்னை, ஊழில் - முறைப்படி, காத்து - இரட்சித்து, தலை ஆய பேறு - (எல்லாப்பதவிகளினுஞ்) சிறந்ததாகிய முத்தியுலகத்துப் பதவியை, உதவினாய் - (எனக்குக்) கொடுத்தாய்; (எ - று.)

சமயம் - பௌத்தம், ஜைனம், பைரவம், காளாமுகம், லோகாயதம், சூனியவாதம் என்னும் ஆறென்றும்; லோகாயதம், பௌத்தம், சமணம், மீமாஞ்சை,

பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம் என்னும் ஆறென்றுங் கூறுவர். படுகுழி-யானை முதலியவற்றை உள்ளேவிழுந்து அகப்படச்செய்யும் பெருங்குழி. சமயங்கள் தம்மிடஞ்சேர்ந்தவரை மீளவொண்ணாதபடி அகப்படுத்துதலால், படுகுழியாகக் கூறப்பட்டன. பெரும - பெருமான் என்பதன் விளி; ஈறுகெட்டதும், ஈற்றயல் குறுகினதும் - உருபு. ஊழில் - ஊழ்வினையினின்றுங் காத்து என்றுமாம். (உசு)

உஎ. பேறுபெற்றேன் வாழ்ந்தேன் பிறருக் கினியஞ்சே
ளாறுபெற்ற வேணியனுக் காட்பட்டே—னூறுவட்டஞ்
சிந்தித்தே னெஞ்சிற் றிருக்களவைக் கைகூப்பி
வந்தித்தேன் றீர்ந்தேன் மயல்.

(இ - ள்.) ஆறு பெற்ற வேணியனுக்கு - கங்காநதியையுடைய சடையை யுடைய சிவபிரானுக்கு, ஆள்பட்டேன் - அடியவனானேன்; நூறுவட்டம் - நூறு தரம், நெஞ்சில் - மனத்தில், சிந்தித்தேன் - (அவனைத்) தியானித்தேன்; திருகளவை - (அவன் எழுந்தருளியிருக்கிற)மேன்மையான களாமரத்தை, கைகூப்பி- அஞ்சலிசெய்து, வந்தித்தேன் - வணங்கினேன்; (இதனால்), மயல்தீர்ந்தேன் - மயக்கம் நீங்கினேன்; பேறு பெற்றேன் - (நல்ல) பாக்கியத்தை அடைந்தேன்; வாழ்ந்தேன் - பெருவாழ்வு பெற்றேன்; இனி—,பிறருக்கு - (யமன் பஞ்சேந்திரியங்கள் முதலிய) அயலாருக்கு, அஞ்சேன் - (சிறிதும்)அஞ்சமாட்டேன்; (எ-று.)

நூறு - பலவென்னும் பொருள் உணர்த்திற்று. 'நூறுவட்டம்' என்பதனை 'வந்தித்தேன்' என்பதோடுஞ் சேர்க்கலாம். மயல் - அவிச்சை. (உஎ)

உஅ. மயக்கமொழி நெஞ்சே மதிமுகமு மூன்று
கயக்கமல மன்னதிருக் கண்ணும்—வியக்குநடை
யன்ன வயற்கருவை யாரியன்ற ளூந்தொழுதாற்
பின்னைநமக் குண்டோ பிறப்பு.

(இ - ள்.) நெஞ்சே - (எனது) மனமே! மயக்கம் ஒழி - கலக்கத்தை நீங்கு; வியக்கும் நடை - அதிசயப்படத்தக்க [மிக அழகிய] நடையையுடைய, அன்னம்- அன்னப்பறவைகளையுடைய, வயல் - கழனிகளையுடைய, கருவை - திருக்கருவையிலுள்ள, ஆரியன் - சிறந்தகடவுளது, மதி முகமும்-பூர்ணசந்திரன்போன்ற திருமுகத்தையும், கயம் கமலம் அன்ன - நீர்நிலையிலுள்ள தாமரைமலர்களைப் போன்ற, மூன்று திரு கண்ணும் - மூன்று அழகிய கண்களையும், தாளும் - திருவடிகளையும், தொழுதால் - வணங்கினால், பின்னை - பின்பு, நமக்கு—, பிறப்பு - மறுஜனனம், உண்டோ - உளதாகுமோ? (எ - று.)—ஆகாது, மீளாவுலகமாகிய முத்தியைப் பெறலாம்.

குளிர்ச்சியும் ஒளியுங் கண்டவர்கண்களைக் களிப்பித்தலும்பற்றி மதி-முகத்துக்கும், செம்மையுந் தண்மையும் மென்மையும் அழகும்பற்றிக் கமலம் - கண்ணுக்கும் உவமை. பறிக்கப்படாமல் நீரிலேயுள்ள அன்றுமலர்ந்த மலர் என்பது தோன்ற, 'கயக்கமலம்' என்றார். 'வியக்கவுடை' என்றும், 'தாடொழுதால்' என்றும் பாடம் உண்டு. (உஅ)

உகூ. பிறந்த பிறப்பிற் பெரும்பயனை யோரா
திறந்தவுட லெண்ணிறந்த தென்ப—தறிந்திருந்துங்
கானடரும் பச்சைக் களவீச வென்னுமன்
மானிடரா யேன்பிறந்தார் வந்து.

(இ - ள்.) (சிலர்), இறந்த உடல் எண் இறந்தது என்பது அறிந்திருந்தும் - (தாங்கள் பிறந்துபிறந்து ஒருபயனையும்பெருமல்) இறந்துபோன உடம்பு அள வில்லாததென்பதைத் தெரிந்திருந்தும், பிறந்த பிறப்பின் பெரு பயனை ஓராது - தாம் பிறந்தபிறப்பின் பெரியபயனை இன்னதென்று அறியாமல், கான் அடரும் பச்சை கள ஈச என்னுமல் - மணமிகுந்த பசுமையாகிய களாவின்கீழ்க்கடவுளே என்று தியானியாமல், வந்து - (இவ்வுலகத்தில்) வந்து, மானிடர் ஆய் - மனிதர் களாய், ஏன் பிறந்தார்—? (எ - று.)

இதனைக் கீழ்ப் பதினெட்டாங்கவியோடு ஒப்பிடுக. (உகூ)

ரூ0. வந்து மனமறுக்க மாற்றுமல் வல்வினையேன்
வெந்துயரம் பார்த்திருக்க வேண்டினைகொல்—கொந்துமல
ரம்பினன் மேனி யழித்தமுக லிங்கவுனை
நம்பினுர்க் கீதோ நலன்.

(இ - ள்.) கொந்து மலர் அம்பினன் - கொத்துக்களில் உண்டாகிற பூக்களை அம்பாகவுடைய மன்மதனது, மேனி - உடம்பை, அழித்த—, முகலிங்க—! (நீ), வந்து - (எதிரே) வந்து (தரிசனந்தந்து), மனம் மறுக்கம் மாற்றுமல் - (எனது) மனத்தின் கலக்கங்களை ஒழிக்காமல், வல் வினையேன் - வலிய கருமத்தையுடைய எனது, வெம் துயரம் - கொடிய துன்பங்களையே, பார்த்திருக்க - கண்டுகொண் டிருக்க, வேண்டினை கொல் - விரும்பினுயோ? உனை நம்பினுர்க்கு உன்னை நம்பிச் சரணமடைந்தவருக்கு, ஈதோ நலன் - இதுதானே (நீசெய்யும்) நன்மை; (எ-று.)

மறுக்கம் - தொழிற்பெயர்; மறுகு - பகுதி. கொல் - வினு. கொந்து - பூங் கொத்து; மெலித்தல். மன்மதனை மேனியழித்த வரலாறு:—திருக்கயிலாயத்திற் பரமசிவன் சனகர்முதலிய நால்வருக்கு யோகநிலையை உணர்த்துதல்நிமித்தந் தாம் யோகஞ்செய்துகொண்டிருக்கையிற் பிரமனேவலால் மலரம்புகளை எய்து தவத் தைக் கெடுக்கலுற்ற மன்மதனைச் சினந்து நெற்றிக்கண்ணை விழித்து அதன்நெருப் புக்கு இரையாய் உடம்பு எரிந்துபோம்படி செய்தன ரென்பதாம். (ரூ)

ரூக. நலனழிந்து மூப்படைந்து நாணழிந்து நோயாற்
புலனழிந்து கண்புதையும் போதி—லுலக
விறைவியொடும் பால்வண்ணு வென்றென் றனையே
மறுகியழைப் பேனுடி வா.

(இ - ள்.) நலன் அழிந்து - எல்லாநன்மைகளுங்கெட்டு, மூப்பு அடைந்து - கிழத்தனம்அடைந்து, நாண் அழிந்து - நாணங்கெட்டு, நோயால் - வியாதியினுல், புலன் அழிந்து - ஐம்புலன்களும் தத்தம்நிலைகெட்டு, கண் புதையும் போதில் - (யான்) கண்ணைமூடிக்கொண்டு இறக்கும்போதில், மறுகி - மனங்கலங்கி, பால்

வண்ணா என்று என்று - பால்வண்ணனே யென்று பலதரஞ்சொல்லி, உனையே- உன்னையே, அழைப்பேன் - கூப்பிடுவேன்; (அப்பொழுது), உலகம் இறைவி யொடும் - உலகங்களுக்கெல்லாந் தலைவியாகிய உமாதேவியுடனே, ஓடி வா -(நீ) விரைந்து வந்தருளுவாயாக; (எ - று.)

எப்போதும் உன்னைத்துதித்துப்பழகிய பயிற்சியின்மிகுதியால் எனது அந்திமகாலத்திலும் நான் மறவாது உன்னைத் துதிப்பே னென்றாலும் கரணங்கள் ஒடுங்கி அறிவுசோர்கின்ற காலமாதலால் அப்போது பூர்ணசக்தியில்லாது துதிக்கும் என்தோத்திரத்திற்கும் மனமிரங்கிக் காட்சிதந்து யமபாதையை விடுவித்து நற்கதியருளவேண்டுமென்று அப்போதைக்கு இப்போதே கூறுகின்றன ரென்க; "குண்டகழுடுத்த கருவாபுரேச விறுதியிற் கூற்றுவன் கைப்படுநாள் வெருவா தழைத்திடுவேன் வரல்வேண்டும் விடுவிக்கவே'' என்றார் கலித்துறையந்தாதியிலும். புலன்அழிதல் - கண்பஞ்சடைதல், காதுகேளாதாதல் முதலியன. (௬௧)

௬௨. ஓடுஞ் சகட்டி னுருளைபோல் வட்டமிட்டுக்
கூடும் பதத்திலெனைக் கூட்டாம—னாடியருள்
பூமலர்க்காச் சூழ்கருவைப் புண்ணியனே பூந்துளவன்
றாமரைக்கண் வைத்த சரண்.

(இ - ள்.) பூ மலர் கா சூழ் - அழகிய பூக்களையுடைய சோலைகள் சூழ்ந்த, கருவை - கருவையிலுள்ள, புண்ணியனே - நல்வினையின் வடிவமாகவுள்ளவனே! ஓடும் - விரைந்துசெல்லுகிற, சகட்டின் - வண்டியின், உருளைபோல் - சக்கரம் போல, வட்டமிட்டு கூடும் - சுழன்று சுழன்று மீண்டும்வருகிற, பதத்தில்-பிறப்பு வழியிலேயே, எனை - என்னை, கூட்டாமல் - இனிச்சேர்க்காதபடி, பூ துளவன் - பூக்களையுடைய திருத்துழாய்மாலையையுடைய திருமால், தாமரை கண் வைத்த - செந்தாமரைமலர்போலுந் தமது திருக்கண்ணை இட்டு அருச்சித்த, சரண் - திருவடியை, நாடி அருள் - (எனக்கு) விரும்பி அருளுவாயாக; (எ - று.)

"ஊசல் வடம்போ லூர்ச கடம்போ லொழியாமே, நாச வுடம்போ டாவி சுழன்றே நலிவேனோ''என்றார் பிறரும். சகடு - ശകடம். 'பூந்துளவன் தாமரைக் கண்வைத்தசரண்' என்றவரலாறு:— சலந்தராசுரனைக்கொன்ற சக்கராயுதத்தை அரக்கர்முதலியோரைஅழித்தற்குப் பெறும்பொருட்டுத் திருமால் சிவபெருமானை நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்களைக்கொண்டு அருச்சித்து வழிபட்டுவருகையில், ஒருநாள் பரமசிவன் அவ்விஷ்ணுவினது அன்புநிலைமையைப் பரிசோதிக்க எண்ணி ஒருமலரை மறைத்திட, திருமால் மனந்தளர்ந்து தமது செந்தாமரைமலர் போலுங் கண்களைப் பறித்து அருச்சித்தார் என்பது, கூர்மபுராணகதை. (௬௨)

௬௩. சரண கமலந் தலைமேல்வைத் தாண்டு
மரண பவமிரண்டு மாற்றிக்—கருணைசெய்து
பேறான தென்கருவைப் பெம்மா னொழித்தானே
மாறா விதயமன மால்.

(இ - ள்.) பேறு ஆன - (அடியார்களது) பாக்கியமாகிய, தென் கருவை பெம்மான் - தென்கருவைச் சிவபிரான், கருணைசெய்து - திருவருள்புரிந்து, சரண

கமலம் - தாமரைமலர்போலுந் தனது திருவடியை, தலைமேல்வைத்து - (எனது) சிரசின்மேல்வைத்து, ஆண்டு -(என்னை) அடிமைகொண்டு, மரணம் பவம் இரண்டும் மாற்றி - இறப்பு பிறப்பு என்னும் இரண்டையும் (எனக்கு) ஒழித்து, மாறு நீங்காத, இதயம் மனம் மால்-(எனது) இதயமெனப்படும் மனத்தின்மயக்கத்தை, ஒழித்தான் - நீக்கினான்; (எ - று.)

பெம்மான் - பெருமான் என்பதன் மரூஉ. ஹ்ருதயம் என்னும் வடசொல்லுக்குப் புலன்களால் அபகரிக்கப்படுவதென்று பொருளாதலால், இதயமனமென்றார். இனி, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணங்களுள் சித்தம் மனம் என்பவற்றை 'இதயம்', 'மனம்' என்றதாகவுங் கொள்ளலாம். 'அளித்தானே' என்னும் பாடத்துக்கு - என்மனத்தில் என்றும்நீங்காத பக்தியை உண்டாக்கியருளினானென்று பொருள். (கஙா)

கஙச. மாலுண்டு நெஞ்சே வருந்துவதென் பால்வண்ணன்
காலுண் டலர்சொரியக் கையுண்டு—நூலுண்டு
வாழ்த்திடநா வுண்டு வரதன் களாவுண்டு
தாழ்த்திடவு முண்டே தலை.

(இ - ள்.) நெஞ்சே - மனமே! (நீ), மால் உண்டு - மயக்கமடைந்து, வருந்துவது - வருத்தப்படுவது, என் - எதற்காக? [வருந்தவேண்டாமென்றபடி]; பால்வண்ணன் - பால்வண்ணப்பெருமானது, கால் - திருவடி, உண்டு - (புகலிடமாக அடைதற்கு) உள்ளது; அலர் சொரிய - (அதில்) பூக்களை அருச்சித்தற்கு, கை உண்டு - (நமக்குக்) கை உளது; நூல் உண்டு - (அவன்பெருமையை அறிவித்தற்குச்) சாஸ்திரங்கள் உள்ளன; வாழ்த்திட - (அவனைத்) துதித்தற்கு, நா-நாக்கு, உண்டு—; வரதன் - கேட்டவரங்களையெல்லாங்கொடுக்கிற அப்பெருமான் எழுந்தருளியிருக்கிற, களா - திருக்களாமரம், உண்டு - (திருக்கருவையில்) உள்ளது; தாழ்த்திட - (அதனை) வணங்குதற்கு, தலையும்—, உண்டே - (நமக்கு) உள்ளதே; (எ - று.)

கடவுள் தன்னை வழிபட்டு ஈடேறுமாறு நமக்குத் திரிகரணங்களையுந் தந்து, நமக்குத் தீக்கதிநேரவொட்டாது பாதுகாத்தற்கும் தான் சித்தனாக இருக்கையில் மெலிவதற்குக் காரணமொன்றுமில்லை யென்று தமது நெஞ்சிற்கு அறிவுறுத்தியவாறு. "வாழ்த்திடநாவுண்டு பாவிக்கநீயுண்டு மண்ணிலுறத், தாழ்த்திடச்சென்னியுமுண்டு கண்டாய் தண்களவின்மல, ரூழ்த்திடநீழலுறை வாரடியுண்டுனேகிரயம், வீழ்த்திடுவாருமுண்டோ நெஞ்சமேயென்மெலிவதுவே" என்றார் கலித்துறையந்தாதியிலும். வரதன் - சுட்டுப்பெயர்மாத்திரையாய் நின்றது. (கஙச)

கஙரு. தலையாய தென்கருவைத் தாணுவே மேருச்
சிலையாற் புரமெரித்த தேவே—யலகி
லடியவராந் தேவ ரமுதுண்ண நீதான்
கொடியவிட முண்டதென்ன கூறு.

(இ - ள்.) தலை ஆய - (யாவர்க்குந்) தலைவனான, தென் கருவை தாணுவே - தென் கருவைச் சிவபெருமானே! மேரு சிலையால் - மேருமலையை வில்லாகக்

கொண்டு, புரம் எரித்த - திரிபுரத்தைச் சுட்டருளிய, தேவே - தேவனே! அலகு இல் - அளவில்லாத, அடியவர் ஆம் - (உன்) தொண்டர்களாகிய, தேவர் தேவர்களெல்லாரும், அமுது உண்ண - அமிருதத்தை உண்ணுநிற்க, நீ - (அவர்களுக்குத் தலைவனாகிய) நீ, கொடிய விடம் உண்டது - கொடுந்தன்மையையுடைய விஷத்தைப் புசித்தது, என்ன - யாதுகாரணத்தால்? கூறு - சொல்லு; (எ - று.)

நீ வருந்தியாவது உன்னைச்சரணமடைந்த அடியார்க்கு அருள்செய்யுந்திறம் வியக்கற்பாலது என்றவாறு. தாணு - ஸ்தாணு; பிரளயகாலத்திலும் அழிவில்லாம லிருப்பவன். விடமுண்டது - தேவர்கள் வேண்டுகோளினாலுந் திருவருளினாலு மென்க. (௬௫)

௬௬. கூறு படுமதியக் கோடீரம் விண்ணுடைக்க
நாறுமலர்த் தாளுரக நாடுடைக்கப்—பேறுபெற்ற
மாயவனார் போற்ற வளருந் தமிழ்க்கருவை
நாயகனா ராடு நடம்.

(இ - ள்.) தமிழ் கருவை - தமிழ்வழங்குந் திருக்கருவையி லெழுந்தருளிய, நாயகனார் - (யாவர்க்குந்) தலைவராகிய சிவபிரான், ஆடும் - நர்த்தனஞ்செய்கின்ற, நடம் - திருநடனமானது,—கூறு படு-(ஒற்றைக்) கலை பொருந்திய, மதியம் - சந்திரனை அணிந்த, கோடீரம் - திருமுடி, விண் உடைக்க - மேலுலகத்தைத் தாக்கவும், நாறு மலர் தாள் - மணம் வீசுகிற தாமரைமலர்போலுந் திருவடி, உரகம் நாடு உடைக்க - நாகங்கள் வாசஞ்செய்யுமிடமாகிய பாதாளலோகத்தைத் தாக்கவும், பேறு பெற்ற - நல்லபாக்கியத்தைப்பெற்ற, மாயவனார் - திருமால், போற்ற - புகழ்ந்து துதித்து வணங்கவும், வளரும் - சிறப்புற்றிருக்கும் ; (எ - று.)

இங்ஙனம் ஆடுதல் சருவசங்காரகாலத்தி லென்க. "முடிகடந்தது ககனகோளகை நெடுமுகட்டினுக்கப்பாலு, மடிகடந்தது பாதலமேழினுக் கப்புறத்தனலோடுந்,துடிகிடந்த கைகடந்தன திகந்தமாறெல் புகழ்க்களாவீசன், பொடிகிடந்த பான்மேனியன் றிருநடம்புகலுதற்கெளிதோ", "நாற்றடந்தோடிசையெட்டிலுந் தட்டநரகளிக்கும்,—கூற்றடுந்தாளெழுபாதலம்போய்ப்புகக் கொன்றைநறு, வூற்றெழும்பொன்முடி யண்டகடாகமொளிக்கநின்று, பாற்றிருமேனிக் களவீசனாடும் பவுரிகொண்டே" என்றார் மற்றையந்தாதிகளிலும். பேறு - இவ்வாறு புகழ்தல் முதலியன செய்தற்கு எற்றது. 'மாயனார்', 'நாயனார்' என்றும் பாடமுண்டு. தமிழ் வளருங் கருவைநாயனார் நடமாடும் என்று கூட்டலுமாம். (௬௬)

௬௭. நடம்புரிதாள் போற்றிநின்ற நன்முனிய தென்றே
விடங்கொ டமிழ்க்கருவை யீசா—வடுங்கூற்றை
வேலினாற் போர்மழுவால் வெல்லாமற் செங்கமலக்
காலினால் வென்ற கருத்து.

(இ - ள்.) இடம் கொள் - பரப்பைக்கொண்ட, தமிழ் கருவை - தமிழ்க் கருவையிலுள்ள, ஈசா - தலைவனே! அடும் - (மார்க்கண்டேயரைக்) கொல்லவந்த, கூற்றை - யமனை, வேலினால் - வேலாயுதத்தினாலாவது, போர் மழுவால் - போருக்குஉரிய மழுவாயுதத்தினாலாவது, வெல்லாமல் - (பொருது) வெற்றிகொள்ளா

மல், செம் கமலம் காலினல் - செந்தாமரை மலர்போலுந் திருவடியால் (உதைத்து), வென்ற - (நீ) வெற்றிகொண்ட, கருத்து - எண்ணம், நடம் புரி தாள் - நடனஞ் செய்கிற அத்திருவடி, போற்றிநின்ற நல் முனியது என்றே - வணங்கிவழிபட்டு நின்ற நல்ல அம்முனிவருடைய தென்றுதானே? (எ - று.)

திருவடியைப்போற்றும் முனிவனை வருத்தத்தொடங்கிய நமனை அத்திரு வடியைக்கொண்டே வெல்லவேண்டுமென்று எண்ணி அதனுலேயே உதைத்து வென்றாய்போலுமென்று கருத்து. ஊழ்வினையாற் பதினறுபிராயம்பெற்ற மிரு கண்டுபுத்திரராகிய மார்க்கண்டேய ரென்பவர் கூற்றுவன் வந்து காலபாசத்தாற் கட்டியிழுக்குங்காலத்துப் பரமசிவனைச் சரணடைய, அப்பெருமான் யமனைக் காலால் உதைத்துத்தள்ளி முனிகுமாரருக்கு என்றும்பதினறாகத் தீர்க்காயுசு கொடுத்தருளின ரென்பது, வரலாறு. இக்கதையால் அனுபவித்தேதீரவேண்டும் பெருவலியதாகிய ஊழ்வினையையுந் தம் அடியார்க்குக் கடக்கச்செய்கிற கடவுளது திருவருளுடைமை விளங்குகிறது. (ருஎ)

ருஅ. கருத்தழிந்து கன்மக் கலைமறந்து கண்டார்
விருத்தனிவ னென்று வெறுத்துச்—சிரிக்கமுது
காடுகுடி யேற்றுமுற் காத்துமுக லிங்காவுன்
னுடுகுடி யேற்றுவதே நன்று.

(இ - ள்.) முகலிங்கா - முகலிங்கப்பெருமானே! கருத்து அழிந்து - மனந் தடுமாறி, கன்மம் கலை மறந்து - செய்யுந்தொழிலின் வகைகளை மறந்து, கண்டார் விருத்தன் இவன் என்று வெறுத்து சிரிக்க - பார்த்தவர்யாவருங் கிழவன் இவன் என்றுசொல்லி இகழ்ந்து பரிகசித்துச் சிரிக்கும்படி (கிழத்தனம் அடைந்து இற ந்தபின்பு, என்னை), முதுகாடு குடி எற்று முன் - தொன்றுதொட்டு வருகிற மயான வனத்திற் கொண்டுபோய்ச் சேர்ப்பதன் முன்னமே, காத்து - ரக்ஷித்தருளி, உன் நாடு குடி எற்றுவதே - உனது உலகத்திற் சென்று சேரச்செய்வதுவே, நன்று - நல்லது; (எ - று.)

இப்பிறப்பில்தானே என்னைக் காத்துச் சிவலோகத்தை அடையச்செய்ய வேண்டு மென்பது, கருத்து. கருத்தழிதலுங் கன்மக்கலைமறத்தலும், முதுமை யின் முதிர்ச்சியாலாவன. 'காமக்கலைமறந்து' என்றும் பாடம். (ருஅ)

ருகூ. நன்கவிஞ னுகவிய னுவளித்து நாடோறுந்
தன்கழலே பாடுந் தரமளித்தா—னன்கவைத்த
சூலத்தான் றென்பொதியத் தொல்லோன் றொழுதமணக்
கோலத்தான் றென்கருவைக் கோ.

(இ - ள்.) நல் கவைத்த - நல்ல (மூன்று) பகுப்பையுடைய, சூலத்தான் - சூலாயுதத்தை யுடையவனும், தென் பொதியம் தொல்லோன் தொழுத்-தெற்கி லுள்ள போதியமலையிலெழுந்தருளிய பழைய[பெரிய] அகத்தியமுனிவர் வணங் கின, மணம் கோலத்தான் - திருக்கலியாணக்காட்சியை யுடையவனுமாகிய, தென் கருவை கோ - தென்கருவைப்பிரான், நல் கவிஞன் ஆக - (யான்) நல்ல பாடல் களைச் செய்யவல்ல புலவனும்படி, இயல் நா அளித்து-கல்வியோடுகூடிய நாக்கை

(எனக்கு)க் கொடுத்தருளி, நாள்தோறும் - எந்நாளும், தன் கழலே பாடும் தரம் - தனது திருவடியையே புகழ்ந்துபாடுந்தன்மையையும், அளித்தான் - உண்டாக்கியருளினன் ; (எ - று.)

இரும்பை ரஸமிட்டுப் பொன்னாக்குவதுபோல ஐம்பொறிகட்கு இலக்காகிக் கல்நெஞ்சனாய்த்திரிந்த என்னைத் திருவருள் நோக்கஞ்செய்து திருத்திப்பணிகொண்டு எப்பொழுதும் தனது திருப்புகழ்களையே கவிபாடித்துதிக்குங் கவனசக்தியையுங் கொடுத்தருளினன் இறைவ னென்பதாம்; "அல்லும்பகலுமொழியாது தம்புகழாதரித்துச், சொல்லும்படிக்குக் கவிநாவளித் தென்னைத் தொண்டு கொண்டார்" என்ற கலித்துறையந்தாதியும் கருதத்தக்கது. கவிக்கு நன்மை - சொல்லும் பொருளும் முதலியன இனியனவாதல். கவைத்த - கவைஎன்னும் பெயரடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம். கவைஎன்றது - சூலத்தின் தலைகளை. பரமசிவனார் பார்வதிதேவியாரைத் திருமணஞ்செய்துகொள்ளும்பொழுது எல்லாவுலகங்களிலுமிருக்கிற தேவர் முனிவர் முதலிய யாவரும் வந்துசேர்ந்து இமயமலையினிடத்து ஒருங்குதிரண்டதனாற் பூமி வடதிசைதாழ்ந்து தென்திசைஉயர, அதுகண்டு அனைவரும் இதற்கு என்செய்வதென்று அலமர, சிவபெருமான் தமக்குச்சமமான அகத்தியமகாமுனிவரைநோக்கி 'நீர்தாந் தெற்குப்பக்கத்து இருத்தற்கு உரியவர்' என்றுசொல்லி விடைகொடுத்து அனுப்ப, அவரும் சிவாஜ்ஞையை மறுமற் பொதியமலைக்குப் போதுகின்றவர் உமாமகேசுவரர்களது திருமணக்கோலக்காட்சியைக் காணப்பெற்றிலேனேயென்று மிகவும் மனம்வருந்த, அப்பொழுது அவருக்கு உருத்திரமூர்த்தி தென்திசையிற் காட்சிகொடுப்போமென்று அருளிச்செய்து அங்ஙனமே பின்னர்த் தரிசனந்தந்தருளினாரென்பது இங்குக் குறித்தவரலாறு. (௩௯)

௪௦. கோவா யமரர் குழாம்போற்ற வாழ்ந்தாலுந்
தீவாய் நரகிடைப்போய்ச் சேர்ந்தாலும்—பாவையிடத்
தாண்டகையே தென்கருவை யையா வடியேற்கு
வேண்டுவதுன் பேரே மிக.

(இ - ள்.) பாவை இடத்து - சித்திரப்பதுமைபோன்ற உமாதேவியை வாமபாகத்திலுடைய, ஆண் தகையே - ஆண்மைக்குணமுள்ளவனே ! தென்கருவை ஐயா - தென்கருவை நாதனே !—(யான்),—அமரர் குழாம் போற்ற-தேவர்கள்கூட்டம்துதிக்கும்படி, கோ ஆய் - (அவர்களுக்கெல்லாந்) தலைவனாகிய இந்திரனாய், வாழ்ந்தாலும் - வாழ்வுபெற்றாலும், தீ வாய் - நெருப்பின் தன்மை [வெப்பம்] பொருந்திய, நரகிடை - நரகத்தில், போய் சேர்ந்தாலும்—, அடியேற்கு - (உன்) தொண்டனாகிய எனக்கு, உன் பேரே - உனது திருநாமமே, மிக வேண்டுவது - (மனத்திலுஞ் சொல்லிலும்) மிகுந்திருக்கவேண்டியது; (எ - று.)

நான் எந்தநிலையையடைந்தாலும் உனது திருநாமசங்கீர்த்தனமொன்றையே வேண்டுவே னென்பதாம். இதனால், சிவபிரானது விஷயமான பக்தியின்பெருமையும், அப்பக்தியினிடத்துத் தமக்குள்ள வேண்டற்பாட்டின் அருமையும் தோன்றும். (௪௦)

சக. மிகத்தேடு செம்பொன்னும் வேட்டமனை யாளு
மகப்பேறு மங்குதவ வாரா—பகைத்துறுக்கிக்
கையாற் கதையேந்திக் காலன் வரிற்கருவை
யையாவென் றோதா தவர்க்கு.

(இ - ள்.) கருவை ஐயா என்று ஓதாதவர்க்கு-திருக்கருவைநாதனேயென்று (ஒருதரமாயினுஞ்) சொல்லித்துதியாதவர்களுக்கு, காலன் - யமன், பகைத்து - விரோதங்கொண்டு, உறுக்கி - அதட்டிக்கொண்டு, கையால் கதைஏந்தி - கையினால் (தனது) தண்டாயுதத்தை எடுத்துக்கொண்டு, வரின் - வந்தால், அங்கு - அப்பொழுது, மிக தேடு செம் பொன்னும் - அதிகமாத்தேடிவைத்த சிவந்தபொன்னும், வேட்ட மனையாளும் - விரும்பி மணஞ்செய்துகொண்ட மனைவியும், மக பேறும் - புத்திரபாக்கியமும், உதவ - (அவ்யமனைத் தடுத்து) உதவிசெய்தற்கு, வாரா - வரமாட்டாவாம்; (எ - று.)

வேட்ட, வேள் - பகுதி. பொன் பேறு என்னும் அஃறிணைகளும், மனையாள் என்னும் உயர்திணையும் - அடுக்கி, மிகுதியினால் 'வாரா' என்னும் அஃறிணை வினை கொண்டது. கருவை ஐயனேயென்று ஒருகாலாயினும் ஓதியவர்க்கு யமனால்நேரும் வருத்தம் ஒன்றும் உண்டாகாது என்பதாம். (சக)

சஉ. அவல விடக்கை யழியுமலக் கூட்டைக்
கவலை நிறைத்த கடத்தைப்—புவனிதொறும்
வாளாச் சுமக்கும் வருத்தமொழி பால்வண்ண
தாளா வயித்தியநா தா.

(இ - ள்.) பால்வண்ண - பால்வண்ணனே! தாளா - திருவடியின் மகிமையையுடையவனே! வயித்தியநாதா - வைத்தியநாதனென்னுந் திருநாமமுடையவனே! அவலம் - வருத்தத்தைத்தருகிற, விடக்கை - மாம்சமயமானதும், அழியும் - (நிலையில்லாமல்) அழியும்படியான, மலம் கூட்டை - (ஆணவம் மாயை காமியம் என்னும் மூவகை) மலங்களையும் அடைத்துவைத்திருக்கிற கூண்டுபோன்றதும், கவலை நிறைத்த கடத்தை - கிலேசங்களை நிரப்பிவைத்த பாத்திரம்போல இருப்பதுமான உடம்பை, புவனிதொறும் - உலகங்கள்தோறும், வாளா - வீணாக, சுமக்கும் - பரிப்பதனாலுண்டாகிற, வருத்தம் - வருத்தத்தை, ஒழி - (எனக்குப்) போக்கியருள்வாயாக; (எ - று.)

எனதுபிறப்பை ஒழித்து முத்தியளிக்கவேண்டு மென்றதாம். முத்திபெற விரும்புவார்க்குப் பலதுன்பங்களுக்கும் இடமான உடம்பு பாரமாகவும் அவ்வுடம்பை ஓம்புதற்குச் செய்யுந்தொழில்களெல்லாம் வீணாகவுந் தோன்றுமாதலால், இங்ஙனங்கூறினர். "வினையின்வந்தது வினைக்குவிளைவாயது, புனைவனநீங்கிற்புலால் புறத்திடுவது, மூத்துவிளிவுடையது தீப்பிணியிருக்கை, பற்றின்பற்றிடங் குற்றக்கொள்கலம், புற்றடங்கரவிற் செற்றச்சேக்கை, அவலக்கவலை கையாறழுங்கல், தவலாவுள்ளந் தன்பாலுடையது, மக்கள்யாக்கையிது" என்றபடி மக்கள்யாக்கை தூயதல்லாததாகுந் தன்மையை முதலிரண்டடியில் விளக்கினர். புவனி - புவநமென்பதன் திரிபு. (சஉ)

சங. நாதனென வந்துன்னை நானடைந்தே னீயுமெனை
யாதரித்தெ னுள்ளுருக்கி யாட்கொண்டாய்—பேதித்
திடைபோகத் தள்ளா தியற்கருவை நாதா
கடைபோகக் காத்தல் கடன்.

(இ - ள்.) இயல் கருவை நாதா - இலக்கணம்அமைந்த திருக்கருவைக்குத் தலைவனே! நான்—, உன்னை—, நாதன் என - கடவுள்என்று எண்ணி, வந்து அடைந்தேன் - வந்து சரணமடைந்தேன்; நீயும்—, எனை - என்னை, ஆதரித்து- அன்புவைத்து, என் உள் உருக்கி-எனதுமனத்தைக் கரையச்செய்து, ஆள் கொண்டாய் - அடிமைகொண்டாய்; இடை - இடையில், பேதித்து - (நீ) மனம் வேறுபட்டு, போக தள்ளாது-(என்னை) அழிந்துபோம்படி தள்ளிவிடாமல், கடைபோக- முடிய, காத்தல் - பாதுகாப்பது, கடன் - (உனது) கடமையாம்; (எ - று.)

'ஆதுலனென் றுள்ளுருகி' என்றும், 'போதித்து' என்றும் பாடமானபோது- கதியற்றவனென்று எண்ணி மனமிரங்கியென்றும், (தத்துவஞானத்தை) உபதேசித்து என்றும் பொருள்கொள்க. (சங)

சச. கடலுலக மண்டரண்டங் காயழலி னீற்றி
யடலையுடன் முற்று மணிந்து—சுடலைதனிற்
றாழ்சடிலத் தென்கருவைத் தாணு தமியனா
யேழிசையாழ் வாசித் திடும்.

(இ - ள்.) தாழ் சடிலம் - தாழ்ந்த சடையையுடைய, தென் கருவை தாணு- தென்கருவைச் சிவபிரான், கடல் உலகம் - கடலினாற் சூழப்பட்ட நிலவுலகத்தையும், அண்டர் அண்டம் - தேவர்களது உலகங்களையும், காய் அழலின் - எரிகின்ற நெருப்பினால், நீற்றி - சாம்பலாம்படி எரித்து,—அடலை - அச்சாம்பலை, உடல் முற்றும் - உடம்புமுழுதும், அணிந்து - பூசிக்கொண்டு,—சுடலைதனில் - மயானமாகிய அவ்விடத்தில், தமியன் ஆய் - வேறுதுணையில்லாதவராய், ஏழ் இசை யாழ் - சப்தசுரங்களையுடைய வீணையை, வாசித்திடும் - வாசிப்பர்; (எ - று.)

அடலை - அடப்பட்டது; அடுதல் - எரித்தல். சுடலை - சுட்டெரிக்குமிடம். ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன; இவற்றிற்கு எழுத்துக்கள் - ச ரி க ம ப த நி என்பன. (சச)

சரு. வாசித்தே னில்லை வரதன் சிவாகமத்தைப்
பூசித்தே னில்லையவன் பொன்னடியை—நேசித்தே
யொப்பனையாள் கேள்வனென வோதித் துதிக்கிலே
னெப்படியா னீடேறு வேன்.

(இ - ள்.) வரதன் - பரமசிவனால் அருளிச்செய்யப்பட்ட, சிவ ஆகமத்தை - சிவவிஷயமான (காமியம்முதலிய இருபத்தெட்டு) ஆகமங்களு ளொன்றையும், வாசித்தேன் இல்லை - படித்தேனில்லை; அவன் பொன் அடியை - அவ்வெம்பெருமானது பொன்போலரிய திருவடியை, நேசித்து - அன்புவைத்து, பூசித்தேன் இல்லை - அருச்சித்து வழிபட்டே னில்லை; ஒப்பனையாள் கேள்வன் என-

ஒப்பனையம்மையது கணவனென்று, ஓதி - சொல்லி, துதிக்கிலேன் - துதித்தே னில்லை; யான் எப்படி ஈடேறுவேன்-நான் எப்படி கடைத்தேறுவேன்; (எ-று.) —ஈடேறுதல் - நற்கதிபெறுதல்.

'நேசித்து' என்பதை மத்திமதீபமாகப் பின்வாக்கியத்திலுங் கூட்டுக. (சரு)

சசு. ஏறுவது கொல்லே றெரிசுடலை யாடரங்கு
கூறைபுலித் தோன்மணிப்பூண் கோளரா—நாறு
கரந்தை யணிகருவைக் காபாலிக் கென்பால்
வரந்தரவே றுண்டோ வகை.

(இ ள்.) கருவை - திருக்கருவையி லெழுந்தருளிய, காபாலிக்கு - (கையிற்) கபாலத்தையுடைய பரமசிவனுக்கு, ஏறுவது - ஏறிநடத்தும்வாகனம், கொல் ஏறு - கொல்லுந்தன்மையையுடைய விருஷபமாம்; ஆடு அரங்கு - நர்த்தனஞ்செய்யுமிடம், எரி சுடலை - எரிக்குமிடமான மயானமாம்; கூறை - உடுக்கும்உடை, புலி தோல் - புலியின் தோலாம்; மணி பூண் - அழகிய இரத்தினுபரணம், கோள் அரா - உயிர் கொள்ளுந் தன்மையையுடைய நாகங்களாம்; அணி - அணியப்படும் மாலை, நாறு கரந்தை - வாசனைவீசுகிற கரந்தைச்செடியின்மலராம்; (ஆகையால்), என்பால் - எனக்கு, வரம் தர - வரமாக (நான் வேண்டியதை)க் கொடுக்க, வேறு வகை உண் டோ - (அவருக்கு)வேறே வழி உளதோ? (எ - று.)—இல்லை யென்றபடி.

வாகனம் முதலியவைகளில் ஒருவாற்றாலும் சிறப்புப்பெறுத சிவபெருமான் எனக்கு எவ்வாறு வரந்தருவனென வியந்தவாறு; என்றது - விருஷபம் முதலிய வற்றை எனக்குத் தந்து சாரூப்பிய பதவியை எளிதில் அருளுவார் என்றதாம். வஞ்சப்புகழ்ச்சியணி; வடநூலார் நிந்தாஸ்துதிஎன்பர். "எருமையு மையும் பெற றமு மன்ன" இதனால், ஏறென்ருர். காபாலி - கபாலியென்பதன் நீட்டல்; கபா லம் - தலையோடு: ஒருகாலத்திற் பிரமன் தானே முதற்கடவுளென்று கூறிச் செருக்குற்றிருக்கையில், சிவபிரான் தாமேமுதல்வரென்று தெரிவிக்குமாறு திவ் வியசொரூபத்தோடு எதிரில்தோன்ற, அவ்வயனது ஐந்தாமுகம் 'எனதுநெற்றியி னின்றுந் தோன்றிய நீயோ முதல்வன்' என்றுகூறிச் சிவனைப் பழித்தவளவில், அப்பெருமான் தமது அம்சமாகிய வயிரவரை நோக்கியருள, அவர் தமது இடக் கைவிரலின் நகத்துநுனியால் அவ்வைந்தாந்தலையைக் கொய்துவிட, அக்கபாலம் அப்படியே அவர்கையில் ஒட்டிக்கொள்ளுதலும், உருத்திரமூர்த்தி தருமத்தை உல கத்தவர் அறிந்து அனுஷ்டிக்குமாறு தாம் அனுஷ்டித்துக்காட்டும்படி வயிரவரை நோக்கி 'இப்பாவந்தொலையப் பிச்சையெடுக்கவேண்டும்' என்றுஉரைக்க, அவர் அங்ஙனமே பலகாலம் பல தலங்களிலுஞ் சென்று கைக்கபாலத்தோடு பிக்ஷா டனஞ்செய்தன ரென்பது, வரலாறு. (சசு)

சஎ. வகிர்மதியக் கண்ணியான் வாணுதல்பா கத்தான்
புகர்முகக்கைம் மாவுரியைப் போர்த்தான்—முகரித்துத்
தென்னு தெனுவென்று வண்டிரைக்குந் தென்கருவை
யென்னுதன் வானோர்க் கிறை.

(இ - ள்.) வகிர் மதியம் கண்ணியான் - பிளவுபட்ட சந்திரனைத் தலையிற் சூடும் மாலையாக உடையவனும், வாள் நுதல் பாகத்தான் - ஒளியையுடைய நெற்றியையுடைய உமாதேவியை இடப் பக்கத்திற் கொண்டவனும், புகர் முகம் கை மா - புள்ளிகளையுடைய முகத்தையுடைய துதிக்கையையுடைய யானையினது, உரியை - தோலை, போர்த்தான் - மேலே போர்த்துக்கொண்டவனும், வண்டு - வண்டுகள், தென்னு தென என்று—, முகரித்து இரைக்கும் - மிகவும் ஆரவாரிக்கிற தென்கருவை-தென்கருவையிலுள்ள, என் நாதன்-எனது தலைவனும் ஆகிய சிவபிரானே, வானோர்க்கு இறை - தேவர்களுக்கெல்லாந் தலைவனுவன்; (எ-று.)

வாணுதல்-அன்மொழித்தொகை. உரி-உரிக்கப்படுவது; செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயர்: கெடாக்கால் உரிவை என நிற்கும். முகரித்து இரைத்தல் - ஒருபொருட்பன்மொழி.

கைம்மாஉரியைப்போர்த்தகதை:—அருந்தவமியற்றிப்பெருவரம்பெற்ற கஜாசுரனென்பவன் தேவர் முனிவர் முதலியோரை இடைவிடாது வருத்தித்துரத்த, அஞ்சியோடின அவர்களது பிரார்த்தனையாற் பரமசிவன் தம்மைஎதிர்த்துப் போர் செய்யவந்த அவ்வசுரனைக் காலாலுதைத்துத் தள்ளிக் கொன்று தோலைஉரித்துப் போர்த்தருளின தென்றுயினும்; தாருவனமுனிவர் ஏவிய யானையினுட்சென்று உருத்திரமூர்த்தி உடல்பிளந்து அதனுரிவையைப் போர்த்துக்கொண்ட தென்றுயினுங் கொள்க. (சஎ)

சஅ. இறைப்பொழுது நீங்கா திருகண்ணு நெஞ்சுங்
கறைக்களமுஞ் செஞ்சடிலக் காடும்—பிறைக்கொழுந்தும்
புண்டரிக வாண்முகமும் பூங்களவி னீழலோ
ணெண்டரளப் புன்மூர லும்.

(இ - ள்.) பூ களவின் நீழலோன் - பூக்களையுடைய [அல்லது அழகிய] திருக்களாவின் நிழலிலுள்ள பரமசிவனது, கறை களமும் - விஷமுண்டுகறுத்த திருக்கழுத்தும், செம் சடிலம் காடும் - காடுபோல அடர்ந்த சிவந்தசடையும், பிறை கொழுந்தும் - (அச்சடையில்அணிந்த) இளஞ்சந்திரனும், புண்டரிகம் வாள் முகமும் - தாமரைமலர்போல் அழகிய ஒளியையுடைய திருமுகமும், ஒள் தரளம் புல் மூரலும்-ஒளியையுடைய முத்துப்போன்ற [வெள்ளிய] புன்சிரிப்பும்,—இரு கண்ணும் - (எனது) இரண்டுகண்ணையும், நெஞ்சும் - மனத்தையும், இறை பொழுதும் - கணப்பொழுதும், நீங்காது - (தனித்தனி) விட்டுநீங்காது; (எ - று.)

எப்பொழுதும் அக்கடவுளின் களம் முதலியவற்றையே தரிசித்துத் தியானிப்பே னென்றதாம். என்றது - உருவெளிப்பாடுகாணுதலை உட்கொண்டாகவுமாம். நீங்காது - ஒருமைப்பன்மை மயக்கம்; பால்வழுவமைதி. (சஅ)

சகூ. மூரலாற் றுளான் முளரித் திருக்கண்ணாற்
காருலாஞ் சோலைக் கருவேசர்—நேரலரூர்
சுட்டார்வெங் கூற்றை யுதைத்தார்தொல் வேளையெய்ய
வொட்டா தெரித்தா ருடல்.

(இ - ள்.) கார் உலாம் சோலை கருவா ஈசர் - மேகங்கள்வந்து தவழப்பெற்ற [மிகஉயர்ந்த] சோலைகளையுடைய திருக்கருவையிலுள்ள சிவபிரான்,—மூரலால் - (தமது புன்) சிரிப்பினாலும், தாளால் - திருவடியாலும், முளரி திரு கண்ணால் - நெருப்புவடிவான அழகிய நெற்றிக்கண்ணினாலும், (முறையே), நேரலர் ஊர் சுட்டார் - (தேவர்க்குப்) பகைவர்களாகிய அசுரர்களது முப்புரங்களை எரித்தார்; வெம் கூற்றை உதைத்தார் - கொடிய யமனை உதைத்துத்தள்ளினார்; தொல் வேளை - தொன்றுதொட்டுவருகிற மன்மதனை, எய்ய ஒட்டாது - (மலரம்புகளைத் தம்மேல் மீண்டுந்) தொடுக்கவொட்டாமல், உடல் எரித்தார் - உடம்பை எரித்தார்; (எ-று.)

சிவபெருமான் செயற்கரிய தொழிலைச்செய்து தமதுஉறுப்புக்களாற் பகைவரை வலியொடுக்கும் பேராற்றல் படைத்தவ ரென்பதாம். மூரலால் ஊர்சுட்டார், தாளால் கூற்றை உதைத்தார், கண்ணால் வேளைஉடலெரித்தார் என முறையே இயைதலால், முறைநிரனிறைப்பொருள்கோள். நேரலர் - சேராதவர். வேள் - விருப்பம்; ஆண்பெண்களுக்கு விருப்பத்தையுண்டாக்குங் கடவுளுக்கு ஆதபெயர்; இனி, கண்டாரால்விரும்பப்படுங் கட்டழகுடையவ னெனினுமாம்: இச்சொல் முருகவேளுக்கும் பெயராக வழங்குத லுண்டு. இங்கு 'எரித்தாருடல்' என்றதனால், காமவேளை யுணர்த்திற் றென்க. (சகூ)

ருo. உடலி லுயிரா யுயிர்க்குயிரா னானைக்
கடலுலகெல் லாந்தேடிக் காணேன்—கொடியதொரு
புன்கருவை மாற்றிப் புரந்தவனைப் புண்ணியனை
நன்கருவை யிற்கண்டே னான்.

(இ - ள்.) உடலில் உயிர் ஆய் - எல்லாவுடம்புகளுள்ளுந் தங்குகிற ஜீவாத்மாவாய், உயிர்க்கு உயிர் ஆனானை - அவ்வான்மாக்களுள்ளும் மறைந்துதங்குகிற அந்தராத்துமாவுமாகிய பரமாத்மாவும், கொடியது ஒரு புல் கருவை - கொடுந்தன்மையையுடையதாகிய இழிவான பிறப்பை, மாற்றி - (தன் அடியார்களுக்குப்)போக்கி, புரந்தவனை - (அவர்களைக்) காத்தருளினவனும், புண்ணியனை - நல்வினையின்வடிவாக உள்ளவனுமாகிய சிவபிரானை,—நான்—, கடல் உலகு எல்லாம் - கடலாற் சூழப்பட்ட நிலவுலகமுழுவதிலும், தேடி - தேடிப்பார்த்தும், காணேன் - காணாதவனாய், (பின்பு), நல் கருவையில் - நல்ல திருக்கருவைத்தலத்தில், கண்டேன் - தரிசித்தேன்; (எ - று)

உடலுக்குள் உயிர்தங்கியிருத்தல் போலப் பரமாத்துமா ஜீவாத்மாவினுள் வீற்றிருத்தலால், 'உயிர்க்கு உயிரானான்' என்றார். (ருo)

ருக. நானே யறிந்தவனை நாடற் கெளிதாமோ
கானேர் பசிய களாவனத்தான்—றானேயென்
னுள்ளச் சிலையை யுலைவாய் மெழுகெனவே
மெள்ளக் கரைக்கா விடின்.

(இ - ள்.) கான் நேர் - வாசனைபொருந்திய, பசிய - பசுமையாகிய, களாவனத்தான் - திருக்களாவனத்தில் எழுந்தருளியிருக்குங் கடவுள், தானே - தானே

கவே [என்முயற்சியில்லாமலே,] என் உள்ளம் சிலையை - எனது மனமாகிய கல்லை, உலை வாய் மெழுகு எனவே - உலைக்களத்துத் தீயிடத்திற்பொருந்திய மெழுகு உருகுவதுபோல, மெள்ள - மெதுவாக, கரைக்காவிடின் - உருகச்செய்யா விட்டால், அவனை - அப்பிரானை, நானே - நானாகவே, அறிந்து - தெரிந்து, நாடற்கு - விரும்பியடைதற்கு, எளிது ஆமோ - எளியதாகுமோ? (எ - று.)— ஆகா தென்றபடி.

மெள்ள - மெல்ல வென்னுங் குறிப்பு வினையெச்சத்தின் போலி. (௫௧)

௫௨. விட்டேன் பரசமய மேவாது வேர்களைந்து
சுட்டேன்பொய்க் காமத் தொடர்பெல்லாம்—பட்டநுதற்
கைம்மா வுரித்த களவீச னைக்கருவைப்
பெம்மானை யான்பணிந்த பின்.

(இ - ள்.) யான்—, பட்டம் - பட்டத்தையணிந்த, நுதல் - நெற்றியை யுடைய, கை - துதிக்கையையுடைய, மா - யானையை, உரித்த-உரித்துத்தோலைப் போர்த்துக்கொண்ட, கள ஈசனை - களாமரத்தின் கீழ்க்கடவுளும், கருவை பெம் மானை - திருக்கருவைத்தலைவனுமாகிய சிவனை, பணிந்தபின் - வணங்கினபின்பு, —பர சமயம் - வேறுமதங்களை, மேவாது - விரும்பாமல், விட்டேன் - நீக்கி விட்டேன்; பொய் - வஞ்சனைக்கு இடமான, காமம் - காமத்தினது, தொடர்பு எல்லாம் - தொடர்ச்சி முழுவதையும், வேர் களைந்து - வேரோடுஅறுத்து, சுட் டேன் - எரித்தேன்; (எ - று.) (௫௨)

௫௩. பின்னை தழுவுங் கணையேன் பெரும்பாந்தண்
மன்னு நெடுநாண் மலைவில்லே—னென்னே
பகைத்தவர்த முப்புரமோ பால்வண்ணா நீயே
நகைத்தெரிக்கப் போமே நமக்கு.

(இ - ள்.) பால்வண்ணா - பால்வண்ணனே! பகைத்தவர் தம் முப்புரமோ - (தேவர்களை) விரோதித்த அசுரர்களது மூன்றுபட்டணமோ என்றால், நீயே நகைத்து எரிக்க-(வேறுதுணையில்லாமல்) நீமாத்திரமேபுன்சிரிப்புச்செய்து தகிக்க, போமே - அழிந்துபோய்விடுமே; (இப்படியிருக்க), நமக்கு - உனக்கு, பின்னை தழுவும் கணை - (கிருஷ்ணவதாரத்தில்) நப்பின்னைப்பிராட்டியை ஆலிங்கனஞ் செய்த (திருமாலாகிய) அம்பு, என் - எதற்காக? பெரு பாந்தள் - பெரிய (ஆதி சேஷனென்னும்) பாம்பு, நெடு நாண் மன்னு - பெரிய நாணியாகப்பொருந்திய மலை வில் - மேருமலையாகிய வில், என் - எதற்காக? என்னே - (இவற்றைத்துணை யாகக்கொண்டது) என்ன காரணத்தால்? (எ - று.)

எல்லாம்வல்ல இறைவனான நீ திரிபுரசங்காரகாலத்தில் கணைமுதலிய துணை யை விரும்பியது, உனதுமாயை யென்பதாம். பின்னை - ஓர் ஆயர்தலைவன்மகள்; இப்பெயர் கொண்ட அரசன்மகளொருத்தியும் உண்டு: அவளையுங் கண்ணன் மணஞ்செய்துகொண்டான். 'நமக்கு' என்பதில், நாம்என்னும் உளப்பாட்டுத் தன் மை உயர்வுதோன்ற முன்னிலையில் வந்தது; திருக்கோவையாரில் "காமரைவென்ற

கண்ணேன்" என்ற செய்யுளில் "நாமரையாமத்தென்னே வந்து வைகி நயந்ததுவே" என்றவிடத்திலும், கம்பராமாயணத்தில் ஆரணியகாண்டத்தில் சூர்ப்பணகைப்படலத்தில் "செங்கயல்போல் கருநெடுங்கண்" என்னுஞ் செய்யுளில் "தாமரையுறையும், நங்கையிவ ரென நெருநல் நடந்தவரோ நாமென்ன" என்றவிடத்திலும் போல: இடவழுவமைதி; இவ்வாறுகூறுதல் வழக்கத்திலுங்காண்க. நீயே என்றதற்கு ஏற்ப 'நினக்கு' எனச்சொல்லவேண்டும் ஒருமையிற் பன்மைவந்தது, ஒருமைப்பன்மைமயக்கம்; இதுவும், உயர்வுபற்றியதே. (ருங)

ருச. நமரங்கா டென்கருவை நாதனடு வெஞ்சூர்க்
குமரனுக்கா ளாய்ப்பணிந்த கோமான்—றமரக்
கருங்கடனஞ் சுண்ட களவீச னென்றான்
மருங்கடரு மோதுயரும் வந்து.

(இ - ள்.) நமரங்காள் - நம்மவர்களே!—தென்கருவை நாதன்—,வெம் சூர் அடு - கொடிய சூரபதுமாசுரனைச் சங்கரித்த, குமரனுக்கு - முருகக்கடவுளுக்கு, ஆள் ஆய் - அடிமையாய், பணிந்த - வணங்கின, கோமான் - தலைவன், தமரம் - ஆரவாரத்தையுடைய, கரு கடல் - பெரிய பாற்கடலில் தோன்றிய, நஞ்சு-விஷத்தை, உண்ட - புசித்த, கள ஈசன்—! என்றால் - என்றசொன்னால், (பின்பும்), துயரும் - பிறவித்துன்பங்களெல்லாம், மருங்கு வந்து அடருமோ - அச்சொன்னவரிடம் வந்துசேர்ந்து வருத்துமோ? [வருத்தாது என்றபடி]; (எ - று.)

'குமரனுக்காளாய்ப்பணிந்தகோமான்'என்றது, பரமசிவனுக்குச் சுப்பிரமணியக்கடவுள் பிரணவப்பொருளுரைத்ததை உட்கொண்டு. விஷத்தின்நிறத்தாற் பாற்கடலும் வெண்மைநீங்கிக் கருமையடைந்ததென்பார் 'கருங்கடல்நஞ்சு' என்றார்என்றுங் கொள்ளலாம்; கருமையை நஞ்சோடு கூட்டுதலுமாம். நமரங்காள்—நமர், நாம் - பகுதி, அம்-சாரியை: கள் - விகுதிமேல்விகுதி; ஈற்றயல்நீண்டது, விளியுருபு.

குமரன் சூரபதுமனை யட்டகதை:—அசுரேசன்மகளாகிய மாயையென்னும் பெயர்பெற்ற சுரசையென்பவள் காசியபமகாமுனிவரைக் கூடிப்பெற்ற புத்திரர்களாகிய சூரபதுமன், சிங்கமுகன்,தாருகன் முதலான பல்லாயிரம் அசுரர்கள் பரமசிவனைக்குறித்து யாகமுந் தவமுஞ் செய்து அவரருளால் அளவிறந்தவரங்களைப் பெற்றுச் செருக்குற்றுத் தமது குருவாகிய சுக்கிரபகவானது தீயஉபதேசத்தால் இந்திரன்முதலிய தேவர்களனைவரோடும் போர்செய்து வென்று பற்பலவகையாக வருத்தினவளவில்,அத்துன்பம்பொறுக்கலாற்றாது தேவர்கள் திருக்கைலாயமடைந்து பரமசிவனைத்தொழுது துதிசெய்து 'தேவரீரைப்போல ஒருபுத்திரனை உண்டாக்கி அசுரர்களைஅழித்து எங்கள்துன்பத்தைப்போக்கிக் காத்தருளல்வேண்டும்' என்றுபிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வேண்டுகோளுக்கு இரங்கிக் குமாரக்கடவுளை உண்டாக்கி அனுப்பியருள, அவர், வீரவாகுதேவர் முதலான சிவபுத்திரர்களோடும், மற்றும்பலலட்சம்வீரர்களுடனும் போய் யுத்தஞ்செய்து, அவ்வசுரர்களனைவரையும் அழித்துத் தேவர்களைக்காத்தனர் என்பதாம். (ருச)

௫௫. வந்தடர மாட்டாய் பிரிவை மனக்கொண்டு
நைந்து துயருழக்கு நல்குரவே—யைந்துதலை
நாக்கவைத்த பாம்பணியு நாதன்பால் வண்ணனமை
நீக்கவைத்தா லென்செய்வாய் நீ.

(இ - ள்.) வந்து அடர மாட்டாய் - (துணிவாய் எம்மை) வந்து சேர மாட்டாமல், பிரிவை மனம் கொண்டு - (எம்மை விட்டுப்) பிரிந்துபோவதை எண்ணி, நைந்து - தளர்ந்து, துயர் உழக்கும் - துன்பப்படுகின்ற, நல்குரவே - வறுமையே!—ஐந்து தலை - ஐந்துதலைகளையும், கவைத்த நா - பிளவுபட்ட [இரண்டு] நாக்குக்களையுமுடைய, பாம்பு - நாகங்களை, அணியும் - ஆபரணமாகஅணிந்த, நாதன் பால்வண்ணன் - பால்வண்ணநாதர், நமை - எம்மை, நீக்க வைத்தால் - (உன்னினின்றும்) நீங்கும்படி திருவருள்செய்தால், (அப்பொழுது), நீ—, என் செய்வாய் - யாதுசெய்வை? (எ - று.)

சிவபிரான் அருள்செய்வராயின், இருந்தவிடந்தெரியாது ஒழிவாய் என்பதாம். அடரமாட்டாய் - முற்றெச்சம். நல்குரவு - தொழிற்பெயர்; நல்கூர் - பகுதி: நல்குர் எனக் குறுகினது - விகாரம்; அ - சாரியை, வ் - சந்தி, உ - விகுதி. (௫௫)

௫௬. நீயேவந் துற்ற நெடுந்துயரந் தீர்த்திலையே
னாயேனை யார்புரந்து நாட்டுவார்—போயிருவ
ராங்களவா வண்ண மழலுருவாய் நீண்டுவளர்
பூங்களவி னாதா புகல்.

(இ - ள்.) இருவர் - பிரமவிஷ்ணுக்கள், போய் - சென்று, அளவாவண்ணம் - (அடிமுடிகளை) அளந்து காணவொண்ணாதபடி, ஆங்கு - அக்காலத்தில், அழல் உரு ஆய் - அனற்பிழம்பின்வடிவமாய், நீண்டு வளர் - நீட்சியாகிவளர்ந்த, பூ களவின் நாதா - பூக்களையுடைய களாவின்கீழ்க்கடவுளே! நீயே வந்து - நீயாகவே வந்து, உற்ற நெடு துயரம் - (யான்) அடைந்த பெரிய பிறவித்துன்பங்களை, தீர்த்திலையேல் - நீக்காமற்போனால், நாயேனை - நாய்போற்கடைப்பட்ட என்னை, யார் - வேறுயார், புரந்து - காத்து, நாட்டுவார் - (நற்கதியில்) நிறுத்துவார்? புகல் - சொல்லு; (எ - று.)

எவரும் இலர் என்றபடி. துயரம், அம் - சாரியை. உரு - ரூபம். ஏல் - என்னில்; மரூஉ. (௫௬)

௫௭. புகழ்ந்திடுவேன் யானோ புவியேழு மாய
னகழ்ந்திடவுங் காணு வடிக—ளுகந்தோறுந்
தோற்றுமுக நான்காற் சுருதிக் கவிவிரிஞ்சன்
சாற்றுமுக லிங்கநா தா.

(இ - ள்.) சுருதி கவி விரிஞ்சன் - வேதங்களைப்பாராயணஞ்செய்கிற பிரமன், தோற்றும் முகம் நான்கால் - தோன்றிய (தனது) நான்குமுகங்களாலும், உகம் தோறும் - எல்லாயுகங்களிலும், சாற்றும் - துதிக்கின்ற, முகலிங்கநாதா—!

—மாயன் - மாயையையுடைய திருமால், புவி எழும்-கீழேழுலகங்களையும், அகழ்ந் திடவும் - (பன்றிவடிவமாய்த்) தோண்டிச்சென்று தேடிப்பார்க்கவும், காணா - காணமாட்டாமற்போன, அடிகள் - (உனது) திருவடிகளை, யானோ - எளியஅடியேனோ, புகழ்ந்திடுவேன் - துதித்திடவல்லவன்? (எ - று.)

உகந்தோறுஞ் சாற்றுமென இயையும். கருவைப்பிரானைப் பிரமதேவர்வணங்கித் துதித்தலை "சதுரானனனுந் திருநெடுமாலுஞ் சதமகனுங், கதிராயிரம் விரிக்குஞ் சுடரோனுங் கலாதரனும், அதிரார்கலிக்கிறையுந் தொழ தேத்த வருள்புரிந்தோன், முதிரா முகிழ்முலை யொப்பனை கேள்வன் முகலிங்கனே" என்னுங் கலித்துறையந்தாதிச்செய்யுளாலும் அறிக. (ருஎ)

ருஅ. முகலிங்க நாதா முழுதுங்காத் தோம்பும்
புகலிங் கடியனுக்குன் போலச்—சகதலத்திற்
காருண்ட சோலைக் கருவேச நீயன்றி
யாருண்டு சொல்வா யறிந்து.

(இ - ள்.) கார் உண்ட சோலை கருவை ஈச - மேகங்களை அளாவுகின்ற [மிக உயர்ந்த] சோலைகளையுடைய திருக்கருவைக்குத் தலைவனே!—முகலிங்க நாதா—! அடியனுக்கு - (உன்) தொண்டனாகிய எனக்கு, இங்கு - இவ்வுலகில், முழுதும் காத்து ஓம்பும் புகல் - முழுவதும் ரக்ஷித்தருளுகின்ற தஞ்சமாக அடையப்படும் பொருள், நீ அன்றி - நீயேயல்லாமல், உன்போல—, சகதலத்தில் - இந் நிலவுலகத்தில், யார் உண்டு - வேறே யாவருளர்? அறிந்து சொல்வாய் - தெரிந்து சொல்வாயாக; (எ - று.)

காருண்ட சோலை - கருமைபொருந்திய சோலை யென்றுமாம். (ருஅ)

ருகூ. அறியேன்மற் றொன்று மரும்பொருளே யென்றுங்
குறியே னெழுத்தைந்துங் கூறேன்—வறிதே
பிறந்தலுத்தேன் றென்கருவைப் பெம்மானே மீள
விறந்தலுத்தே னென்செய்தே னியான்.

(இ - ள்.) தென் கருவை பெம்மானே - தென்கருவைத்தலைவனே ! மற்று ஒன்றும் அறியேன் - (இவ்வுலகத்து இன்பதுன்பங்களையேயன்றி) வேறொன்றையும் அறிகிறேனில்லை; அரு பொருளே என்றும் குறியேன் - அறிவதற்கரிய தத்துவப் பொருளையே எப்பொழுதும் ஆராய்கின்றேனில்லை; எழுத்து ஐந்தும் கூறேன் - ஸ்ரீபஞ்சாக்ஷரமந்திரத்தை உச்சரிக்கிறேனில்லை; வறிதே-ஒருபயனுமில்லாமல் வீணாக, பிறந்து - பலபிறப்பெடுத்து, அலுத்தேன் - சலித்துப்போனேன்; மீள - மீண்டும், இறந்து - (அப்பிறப்புக்கள்தோறும்) மரித்து, அலுத்தேன்—; யான்—, என் செய்தேன் - வேறென்ன நன்மையைச் செய்தேன்? (எ - று.)

ஒன்றையுஞ் செய்தேனல்லே னென்றபடி. உய்யும்வகை ஒன்றுமில்லாத என்னை அருளாற் காக்கவேண்டு மென்பதாம். (ருகூ)

கூ0. என்செயலுன் றாளி லினியமலர் சாத்துவதே
யுன்செயலென் றுன்ப மொழிப்பதே—மின்புரையும்
வேணியாய் தென்கருவை வேந்தே யனலேந்தும்
பாணியாய் வேதாதி பா.

(இ - ள்.) மின் புரையும் வேணியாய் - மின்னலையொத்துச் செம்மையாய் விளங்குகிற சடையையுடையவனே! தென் கருவை வேந்தே-தென்கருவைக்குத் தலைவனே! அனல் ஏந்தும் பாணியாய் - நெருப்பையேந்தின இடத்திருக்கையையுடையவனே! வேத அதிபா - வேதங்களுக்குத் தலைவனே! என் செயல் - எனது தொழில், உன் தாளில் - உனதுதிருவடிகளில், இனிய மலர் சாத்துவதே - இனிப்பான பூக்களை இட்டு அருச்சிப்பதுவேயாம்; உன் செயல் - உன்தொழில், என் துன்பம் ஒழிப்பதே - எனதுதுன்பங்களைத் தீர்ப்பதுவேயாம்; (எ - று.)

"களவீச மெலியவரும், ஏத மகற்றுவ துன்கடன் என்கட னேத்துவதே" என்றார் கலித்துறையந்தாதியிலும். (கூ0)

கூக. பாகம் பழுத்த பவளக் குணக்குன்றே
மோகங் கடந்த முதல்வனே—யாகமநூ
லாய்கருவை யானே யமலா வடியேனைத்
தாய்கருவை யானே சரண்.

(இ - ள்.) பாகம் பழுத்த - இடப்பக்கங் கனிந்த [உமாதேவி வாசஞ்செய்யப்பெற்ற], பவளம் - பவழமயமான, குணம் - திருக்கலியாண குணங்கள் நிரம்பிய, குன்றே - மலைபோன்றவனே! மோகம் கடந்த - மாயையைக்கடந்துநின்ற, முதல்வனே - முதற்கடவுளே! ஆகமம் நூலாய் - ஆகமசாஸ்திரங்களை யுடையவனே! கருவையானே - திருக்கருவைக்கடவுளே, அமலா - குற்றமற்றவனே! அடியேனை - (உன்) அடியனாகிய என்னை, தாய் கரு வையானே - தாயின்கருப்பத்தில் (மீண்டும்) வைத்திடாதவனே! சரண் - (நீயே எனக்குத்) தஞ்சம்; (எ - று.)

சிவபெருமானது திருநிறஞ் செம்மையாதலால், 'பவளக்குன்று' என்றார்; "வலப்பாகஞ் செழும்பவளச் சோதியென்ன வாணீலச் சோதியென்ன மற்றப் பாகங், கலப்பான திருமேனி" என்றார் பிறரும். எல்லாவற்றையும் பொறுத்தலும், சலியாமையும், அளவிடப்படாத பெருமையும், யாவராலும் அறியப்படும் உயர்ச்சியும், தன்னை யடைந்தவர்களுக்கெல்லாம் எப்பொழுதும் பயன்கொடுக்குந் தன்மையும், அழித்தற்கருமையும் முதலிய குணங்கள்பற்றி, 'குணக்குன்று' எனப்பட்டது. குன்றுபோன்றவனை 'குன்று' என்றது, உபசாரவழக்கு. 'தாய்கருவையான்' - பிறப்பில்லாமல் முத்திபெறுமாறு அருள்பவ னென்று கருத்து. கரு - கர்ப்பமென்னும் வடமொழியின் திரிபு. (கூக)

கூஉ. சரணம் விதியின் றலையழித்தாக் கந்தீர்
பரம கதியருட்கண் பார்க்கிற்—றிருவடியார்
வன்பிறவித் துன்பமெல்லா மாற்றுமுக லிங்காவென்
புன்பிறவித் துன்பமெல்லாம் போம்.

(இ - ள்.) விதியின் - பிரமதேவனது, தலை - (ஐந்தாவது) சிரசை, அழித்து- கொய்து, ஆக்கம் தீர் - (அவனது) செருக்கைப் போக்கியருளின, பரம கதி - (யாவர்க்குஞ்) சிறந்த புகலிடமாகவுள்ளவனே ! திரு அடியார் - மேன்மையான (உனது) தொண்டர்களின், வல் பிறவி துன்பம் எல்லாம் - வலிய பிறப்புத்துய ரங்களெல்லாவற்றையும், மாற்றும் - போக்குகிற, முகலிங்கா—!—சரணம் - (நீயே எனக்குத்) தஞ்சம்; அருள் கண் பார்க்கின் - (நீ என்னை உனது) அருளோடு கூடிய திருக்கண்ணுற் (சற்றே) பார்த்தருளினால், என் - எனது, புல் பிறவி துன் பமெல்லாம் - இழிவான பிறப்புத்துன்பங்களெல்லாம், போம்-போய்விடும்;(எ-று.)

அவ்வாறுபார்த்தருளவேண்டுமென வேண்டியபடி. 'விதியின்றலையழிவாக் கந்தீர்' என்ற பாடத்துக்குப் பொருள் நன்கு விளங்கவில்லை. (௬௨)

௬௩. போத மறியேன் புகன்றகவி விண்ணப்ப
மேதுந் திருச்செவியி லேறுமோ—சீதநிலாத்
திங்க ளணியுந் திருச்சடைமேற் புன்பூளை
தங்கவணி யுங்கருவே சா.

(இ - ள்.) சீதம் நிலா - குளிர்ந்த நிலாவையுடைய, திங்கள் - சந்திரனை, அணியும் - தரித்த, திரு சடைமேல் - அழகிய ஜடையின்மேல், புல் பூளை - இழி வான பூளைச்செடியின்மலரை, தங்க - தங்கும்படி, அணியும் - சூடின, கருவா ஈசா - திருக்கருவைத்தலைவனே! போதம் அறியேன் - தத்துவஞானத்தை அறி யாதயான், புகன்ற - சொன்ன, கவி - பாடல்களாகிய, விண்ணப்பம் - வணக்கத் தோடு சொல்லுஞ் சொல்,ஏதும் - சிறிதாயினும், திரு செவியில் - அழகிய (உனது) காதுகளில், ஏறுமோ - கேட்கப்படுமோ? (எ - று.)

திங்களை அணிந்த திருச்சடையிற் பூளைமலரையும் அணிதல்போலத் தத்துவ ஞானங்கனிந்த சம்பந்தர்முதலிய மெய்யடியார்கள் பத்தியோடு திருவாய்மலர்ந் தருளின திருப்பதிகங்களைக் கேட்டருளின திருச்செவிகளில் அறிவில்லாத எனதுபுன்சொல்லையுங் கேட்டருளல்வேண்டுமெனப் பிரார்த்தித்தபடி; "எத்திய மூவர் தமிழ்மாலை சாத்து மிணையடிக்கென், ஞத்தரும் புன்சொற்றொடை புனை வாய் செம்பொன்ஞட்டிலைந்து, காத்தரு நாண்மலர் சூடும் புரிசடைக்காட்டெருக் கம், பூத்தருமாலை புனைகளவீச புராந்தகனே" என்றார் கலித்துறையந்தாதியிலும். விஜ்ஞாபநம் என்னும் வடமொழி - பிராகிருதபாஷையில் 'விண்ணணம்' எனத் திரிந்து, தமிழில் 'விண்ணப்பம்' எனச் சிதைந்துவந்தது. (௬௩)

௬௪. சாதன் முடுகிற் றனைமறந்து நாவிறங்கு
மாதுயரிற் சற்றும் வழுத்தறியே—னுதலினு
லப்பொழுதைக் கிப்பொழுதே யன்பால் வழுத்துகின்றே
னொப்பனையாள் பாகா வுனே.

(இ - ள்.) ஒப்பனையாள் பாகா - அழகையுடைய உமாதேவியை இடப்பக் கத்திற்கொண்டவனே!—சாதல் முடுகின் - மரணம் நெருங்கினால், தனை மறந்து- தன்னைத் தானே மறந்து, நா இறங்கும் - நாக்குப் பேச எழாமல் மெலிந்துபோ

கின்ற, மா துயரில் - பெருந்துன்பம் நேரும் அக்காலத்தில், சற்றும் - சிறிதும், வழுத்த அறியேன் - (உன்னைத்) துதிக்க அறியமாட்டேன்; ஆதலினால்—, அப்பொழுதைக்கு - அக்காலத்து நற்கதியளித்துக் க ாக்கும்பொருட்டு, இப்பொழுதே—, அன்பால் - பக்தியினால், உனை - உன்னை, வழுத்துகின்றேன் - துதிக்கிறேன் ; (எ - று.)

எனதுகரணங்கள்யாவும் வலியொடுங்கி உயிர்போகின்ற அந்திமகாலத்தில் நின்னைநினைப்பது அரியதொருகாரிய மாதலால், அக்காலத்து என்செயலைக் கருதாது மறுபிறப்பில்லாதபடி அஞ்சாதேயென்று அபயமளித்து நினதுதிருவடிகளைத் தந்தருளவேண்டுமென்று வேண்டியவாறு. "எய்ப்பென்னைவந்து நலியும்போ தங்கேது நானுன்னை நினைக்க மாட்டேன், அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத் தரவணைப் பள்ளியானே" என்றார் பிறபெரியாரும். தன்னை மறத்தல் - தன்வசந்தப்புதல். வழுத்தறியேன் - விகாரம். (௬௪)

௬௫. உனைத்துதித்த நாவா லுறுதியென்றோர் தெய்வந்
தனைத்துதியேன் சென்னியுறத் தாழேன்—றினைத்துணையுஞ்
சிந்தியேன் வாழ்த்தேன் றிருக்களவி னாயகனே
வந்தியேன் பற்றேன் மனம்.

(இ - ள்.) திரு களவின் நாயகனே - திருக்களாவின்கீழ்த் தலைவனே!— உறுதி என்று - (எனக்கு) நன்மையைத்தரும் பொருளென்று எண்ணி, உனை துதித்த நாவால் - உன்னைத் தோத்திரஞ்செய்த நாக்கினால், ஓர்தெய்வந்தனை - வேறொரு தெய்வத்தை, தினை துணையும் - தினையளவும், துதியேன் - தோத்திரஞ்செய்யமாட்டேன் ; சென்னி உற தாழேன் - (என்) தலை அத்தெய்வத்தின் அடியிற் பொருந்த நமஸ்கரிக்கமாட்டேன் ; சிந்தியேன் - தியானிக்கமாட்டேன் ; வாழ்த்தேன் - வாழ்த்தமாட்டேன் ; வந்தியேன் - கைகூப்பித்தொழமாட்டேன் ; மனம் பற்றேன் - மனம்பொருந்தி நினைக்கவும்மாட்டேன் ; (எ - று.)

உறுதியைத் தருவதனை 'உறுதி' என்றது, காரியவாகுபெயர். தினை - ஒருவகைத்தானியம் ; இது, சிறுமைக்குக் காட்டுவதொரு அளவை. (௬௫)

௬௬. பற்று தழற்சுடலை மன்றிற் பதமெடுத்துச்
சுற்று பவுரிகொளுந் தூயோனே—கொற்றவனே
மட்டொழுகும் பூங்களா வள்ளலே யென்றுரைக்கின்
விட்டொழிந்து போமே வினை.

(இ - ள்.) 'தழல் பற்று - நெருப்புப் பற்றி எரிகின்ற, சுடலை - மயானவனமாகிய, மன்றில் - நடனசபையில், பதம் எடுத்து - ஒருகாலைத் தூக்கிக்கொண்டு, சுற்று பவுரி கொளும் - தானே சுழன்று சுழன்று வருதலாகிய பவுரியென்னுந் திருக்கூத்தை ஆடுகின்ற, தூயோனே - பரிசுத்தகுணமுடையவனே!— 'கொற்றவனே - வெற்றியையுடையவனே ! மட்டு ஒழுகும் - தேன்பெருகுகிற, பூ - பூக்களையுடைய, களா - களாவின்கீழுள்ள, வள்ளலே - வரையாதுகொடுக்குந்

தன்மையுடையவனே!" என்று உரைக்கின் - என்று (வாயாற்) சொன்னால், வினை - கருமங்களெல்லாம், விட்டு ஒழிந்து போம் - (சொல்பவரை) விட்டு நீங்கிப்போம்; (எ - று.)

ஏ - தேற்றம். பவுரி - கூத்தின் விகற்பம். (சுசு)

சுஎ. வினைவிலங்கை வெட்டுமருள் வீட்டின்பங் காட்டு
நினையுநினை வெல்லா நிரப்புங்—கனவிதழிப்
பூமாலை யெண்டோட் புனிதன் களாவனத்துக்
காமாரி பொன்னங் கழல்.

(இ - ள்.) கனம் - பருத்த, இதழி பூ - கொன்றைமலர்களினாலாகிய, மாலை - மாலையையுடைய, எண் தோள் - எட்டுத்தோள்களையுடைய, புனிதன் - பரிசுத்தகுணமுடையவனும், களா வனத்து - திருக்களாவனத்திலெழுந்தருளிய, காம அரி - மன்மதனை அழித்தவனுமாகிய சிவபிரானது, பொன் - பொன்போல் அரிய, அம் - அழகிய, கழல் - திருவடி,—வினை விலங்கை - (தன் அடியார்களின்) கருமமாகிய தளையை, வெட்டும் - துணிக்கும்; அருள் - திருவருளினாற் பெறப்படுகிற, வீடு இன்பம் - மோக்ஷசுகத்தை, காட்டும் - (அடியார்கள் அடையக்) காண்பிக்கும்; நினையும் நினைவு எல்லாம் - (அவர்கள்) எண்ணும் எண்ணங்களையெல்லாம், நிரப்பும் - பூர்த்தியாகச்செய்யும்; (எ - று.)

எண்டோளை யுடையனாதல் - ஒரு காலவிசேஷத்தில்; "மாறுப்போர்மணிமிடற் றெண்கையாய்" என்றார் கலித்தொகைக் கடவுள்வாழ்த்திலும். (சுஎ)

சுஅ. கழலாப் பிறவிக் கடற்சுழியிற் பட்டுச்
சுழலா வறிவு தொலைந்தே—னிழல்சுளித்துக்
குன்றதிர்க்கு மாவுரிவைக் கோமானே பால்வண்ணா
வென்றழைப்பேன் வேறறியே னே.

(இ - ள்.) கழலா - மீண்டுகரையேறவொண்ணாத, பிறவி-பிறப்பாகிய, கடல் சுழியில் - கடலின் நீர்ச்சுழியிலே, பட்டு - அகப்பட்டுக்கொண்டு, சுழலா - (பலகாலமாகச்) சுழன்று, அறிவு தொலைந்தேன் - அறிவழிந்தவனாகிய யான்,— 'நிழல் சுளித்து - (தன்) நிழலைக் (கண்டு வேறு யானை யென்று எண்ணிக்) கோபித்து, அதிர்க்கும் - கர்ச்சிக்கின்ற, குன்று - மலைபோன்ற, மா - யானையின், உரிவை - தோலைப்போர்வையாகவுடைய, கோமானே-தலைவனே! பால்வண்ணா—!' என்று அழைப்பேன் - என்று கூப்பிடுவேன்; வேறு அறியேன் - வேறொன்றையும் அறிகிறேனில்லை; (எ - று.)

"தன்னிழல் கண்டு சீறுங் கருத்தது" என்றார் மகாபாரதத்தும். (சுஅ)

சுகூ. ஓத மகற்றி யிருமை பெருமையெனும்
வாத மகற்றியெனை வாழ்வித்தான்—காதுபுலித்
தோலுடையான் பைங்களவின் றாறுடையான் கூற்றுதைத்த
காலுடையான் பஞ்சாக் கரன்.

(இ - ள்.) காது புலி தோல் உடையான் - கொல்லுந்தன்மையையுடைய புலியின் தோலை உடுக்கும் ஆடையாகவுடையவனும், பை களவின் றாறு

உடையான் - பசிய திருக்களாவின் அடியை இடமாகவுடையவனும், கூற்று உதைத்த கால் உடையான் - யமனை உதைத்த திருவடியை யுடையவனும், பஞ்ச அக்கரன் - திருவைந்தெழுத்தை யுடையவனுமாகிய சிவபிரான்,— ஏதம் அகற்றி - (எனது) துன்பங்களைப் போக்கி, இருமை பெருமை எனும் வாதம் அகற்றி-இம்மை மறுமைகளே பெருமையுடையன வென்னுந் தருக்கத்தை ஒழித்து, எனை-என்னை, வாழ்வித்தான்-முத்திவாழ்வுபெறச்செய்தான்; (எ-று.)

இருமை பெருமை எனும் வாதம் அகற்றி - பிறப்புஉயர்ந்ததோ முத்திஉயர்ந்ததோ என்னும் வாதத்தை ஒழித்து [முத்தியே உயர்ந்ததென்று சித்தாந்தஞ் செய்து] என்றுங் கொள்ளலாம். (கூகூ)

எ0. கரங்கொண் டலர்தூவார் கண்கொண்டு பாரார்
சிரங்கொண் டடியிறைஞ்சல் செய்யா—ருரங்கொண்ட
வேற்றில்வருந் தென்கருவை யீசனுக்காட் செய்யாமற்
கூற்றுவற்காட் செய்வார் குணம்.

(இ - ள்.) (சிலர்), கரம்கொண்டு - கையால், அலர் தூவார் - (பால்வண்ணநாதனைப்) புஷ்பங்களையிட்டு அருச்சியார்; கண்கொண்டு - கண்களால், பாரார் - தரிசியார்; சிரம்கொண்டு - தலையால், அடி - (அவன்) திருவடிகளை, இறைஞ்சல் செய்யார் - வணங்குதலைச்செய்யார்; (இவையெல்லாம்), உரம் கொண்ட-வலிமையைக் கொண்ட, ஏற்றில் - விருஷபத்தின்மேலேறி, வரும் - வருகிற, தென் கருவை ஈசனுக்கு - தென்கருவைப்பிரானுக்கு, ஆள்செய்யாமல் - அடிமைசெய்யாமல், கூற்றுவற்கு ஆள் செய்வார் - யமனுக்கு அடிமைப்படுபவர்களது, குணம்- தீக்குணங்களாம்; (எ - று.)

உலகத்துமனிதர்கள் நல்லறிவுடனே தமதுவாணாளை வீணாளாக்காமல் பஞ்சேந்திரியங்களையடக்குதல் மும்மலங்களைப்போக்குதல் கைங்கரியஞ் செய்யத் துணிதல் முதலிய நற்றொழில்கள் புரிந்திடுவராயின் இறுதியில் யமபாதைக்கு உள்ளாகாமல் நற்கதிபெறலாமென்பது கருத்து. இவ்வாறு நற்றொழில்புரியாதவர்க்கோ யமனுக்குக் குற்றேவல்செய்தல் நேரிடு மென்பதாம். "அடைக்கிலரைந்துபுலனையுநெஞ்சத்தழுக்ககலத்,துடைக்கிலர் தொண்டுபுரியத்துணிகிலர் தூய பத்தி, படைக்கிலர் நின்புகழ்பாடிலர் காலபடர்பிடித்துப்,புடைக்கிலென்செய்திடுவார்களவீசபொறியிலரே" என்றது, கலித்துறையந்தாதி. 'கரங்கொண்டு' எனவும், 'கண்கொண்டு' எனவும், 'சிரங்கொண்டு', எனவும் வேண்டாது கூறினர்; அக் கரம் முதலியவற்றைப் பெற்றதற்குப் பயன் அலர்தூவுதல்முதலியன செய்தலே யன்றி வேறன் றென்பதை அறிவித்தற்கு. 'உரங்கொண்ட ஏற்றில் வரும்' என்பதைக் கூற்றுவற்குங் கூட்டி, வலிமைகொண்ட எருமைக்கடாவில் ஏறிவருகிற என்றுமாம். (எ0)

எக. குணக்குன்றே தென்கருவைக் கோவே நறும்பூ
மணக்குங் களாவனத்து வாழ்வே—கணப்பொழுது
மன்னை மறந்த வருங்குழவி யுய்ந்தாலு
முன்னைமறந் துய்யா துயிர்.

(இ - ள்.) குணம் குன்றே - திருக்கலியாணகுணங்களுக்கு மலைபோன்றவனே! தென் கருவை கோவே - தென்கருவைத்தலைவனே! நறு பூ மணக்கும் - நல்ல பூக்கள் வாசனை வீசுகின்ற, களா வனத்து - களாவனத்தி லெழுந்தருளிய, வாழ்வே - எல்லாவாழ்க்கைகளையுந்தருபவனே!—அன்னை மறந்த-தாயை மறந்துவிட்ட, அரு குழவி - அருமையான குழந்தை, உய்ந்தாலும் - பிழைத்தாலும், உன்னை மறந்து—, உயிர் - (எனது) உயிர், கணம்பொழுதும் - க்ஷணப்பொழுதாயினும், உய்யாது - பிழையாது; (எ - று.)

என்றது, எனக்குத் தாயினும் இன்றியமையாதவன் நீ என்றபடி. குழவி - இளமையையுடையது; குழ - இளமை, உரிச்சொல். "மழவுங் குழவு மிளமைப் பொருள;" இ-பெயர்விகுதி. உய்ந்தாலும் என்ற உம்மை, அது உய்தலின் அருமையை விளக்கிற்று. (எக)

எஉ. உயிரிறந்த பொய்க்கூட்டை யுற்றா ரெடுத்து
வயிரவிற கிற்றீ மடுத்துப்—பெயரழியச்
சுட்டுநீ றாக்குமுன்னஞ் சொல்லீர் கருவைமன்றி
னட்டமிடுங் காலி னலம்.

(இ - ள்.) உயிர் இறந்த - உயிர் நீங்கின, பொய் கூட்டை - (நிலையில்லாமையாற்) பொய்யாகிய உடம்பை, உற்றார் - உறவினர், எடுத்து - எடுத்துக்கொண்டுபோய், வயிரம் விறகின் - வயிரம் பொருந்திய விறகுகளால், தீ மடுத்து - நெருப்புப்பற்றவைத்து, பெயர் அழிய - பேரும் அழியும்படி, சுட்டு - எரித்து, நீறு ஆக்கு முன்னம் - சாம்பலாக்குமுன்னமே [பிழைத்திருக்கும்பொழுதே], கருவை - திருக்கருவையில், மன்றில் - நடனசபையில், நட்டமிடும் - திருநடனஞ்செய்கின்ற, காலின் - (சிவபிரான்) திருவடியின், நலம் - நன்மையை, சொல்லீர் - சொல்லித்துதியுங்கள்; (எ - று.)—நற்கதிபெறலா மென்றபடி. நட்டம் - ந்ருத்தமென்னும் வடமொழியின் திரிபு.

பறவைக்குக் கூடுபோல உயிருக்கு உடல் சிலகாலந் தங்குதற்கு இடமாயிருத்தலால், 'கூடு' எனப்பட்டது; "கூடுவிட்டிங் காவிதான் போயினபின்பு" என்றார் ஔவையாரும். "காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே, பாலுண் கடைவாய் படுமுன்னே-மேல்விழுந்தே, யுற்றா ரழுமுன்னே யூரார்சுடுமுன்னே, குற்றாலத்தானையே கூறு" என்பதனோடு இச்செய்யுளை ஒப்பிடுக. (எஉ)

எ௩. நலனழிந்து நல்வினைபோய் நாணழிந்து நல்ல
குலனழிந்து நல்குரவு கூர்ந்து—பலரிகழ
நிற்ப ரனைத்துயிராய் நின்றானைத் தென்கருவைத்
தற்பரனைத் தாந்துதியா தார்.

(இ - ள்.) அனைத்து உயிர் ஆய் நின்றானை - எல்லாவுயிர்களின் வடிவமாய் நின்றவனும், தென்கருவை-தென்கருவையிலுள்ள, தற்பரனை - கடவுளுமாகிய சிவபிரானை, துதியாதார் - தோத்திரஞ் செய்யாதவர்,—நலன் அழிந்து - எல்லா நன்மைகளுங்கெட்டு, நல் வினை போய்-நல்லபுண்ணியமெல்லாம் அழிந்து, நாண்

அழிந்து - இலச்சை கெட்டு, நல்ல குலன் அழிந்து - உயர்ந்த குலத்தின் பெருமை கெட்டு, நல்குரவு கூர்ந்து - வறுமை மிகுந்து; பலர் இகழ நிற்பர் - எல்லோரும் இகழும்படி நிற்பார்கள் ; (எ - று.)

சிவபிரானைத் துதியாதவர்க்கு நேரக்கூடிய தீமைகளை எடுத்துக் காட்டினர். தற்பரன் = தத்பரன்; தானே பரதேவதை. (எங)

எச. தாரமனை மட்டுந் தனையறிந்தோ ரூர்மட்டுஞ்
சேருமுற வவ்வூர்த் தெருமட்டுஞ்—சார்வதன்றி
நங்கருவை யானென்ற நல்வினைபோற் செல்கதியி
னெங்குமுத வாரே யிவர்.

(இ - ள்.) தாரம் - மனைவி, மனை மட்டும் - (இறந்தவனது) வீட்டு வாயில் வரையிலும், தனை அறிந்தோர் - அவனை அறிந்த நண்பர்கள், ஊர் மட்டும் - அவ்வூரெல்லைவரையிலும், சேரும் உறவு - பொருந்திய பந்துக்கள், அ ஊர் தெருமட்டும் - அந்தஊரின் தெருவரையிலும், சார்வது அன்றி - உடன் சென்று மீளுவதேயல்லாமல்,—நம் கருவையான் என்ற-'நமது கருவைப்பிரான்' என்று சொன்னதாலுண்டான, நல் வினைபோல - புண்ணியம்போல, இவர் - இம்மனைவி முதலியவர், செல் கதியின் எங்கும் - மறுமையிற் செல்லுங் கதிகளி னெல்லாம், உதவாரே - சென்று உதவமாட்டார்கள்; (எ - று.)

"மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாசல்மட்டே, யினமான சுற்ற மயானமட்டே வழிக் கேதுதுணை, தினையா மளவெள்ளளவாகினு முன்பு செய்த தவந், தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே" என்றார் பட்டினத்துப்பிள்ளையாரும். உறவு - உறுதல்; சுப அசுப காலங்களில் வந்து நெருங்குதல்; இத்தொழிற்பெயர் - உறவினர்க்கு ஆகுபெயர். (எச)

எரு. இவருறவ ரென்ப ரிவர்பகைஞ ரென்ப
ரவரவராற் செய்வதொன் றங் காமோ—வெவரேனுந்
தேனொழுகும் பூங்களவார் செய்விப்ப தன்றியிந்த
மானிடரா லுண்டோ வசம்.

(இ - ள்.) இவர் உறவர் என்பர் - 'இவர் (எமக்கு) உறவினர்' என்று சொல்வர்கள் ; இவர் பகைஞர் என்பர்-'இவர் (எமக்குப்) பகைவர்' என்றுசொல்வர்கள்; அவர் அவரால் - அவ்வம்மனிதர்களால், செய்வது ஒன்று - (தம் இஷ்டப்படி) செய்யப்படுவதொரு நன்மைதீமை, ஆமோ - உண்டாகுமோ? எவரேனும் - எவராயினும் (அவர்களைக்கொண்டு), தேன் ஒழுகும் பூ களவார் - தேன்பெருகுகிற பூக்களையுடைய திருக்களாவின் கீழ்க்கடவுள், செய்விப்பது அன்றி - நன்மை தீமைகளைச் செய்விப்பதல்லாமல், இந்த மானிடரால் - இவ்வுலகத்து மனிதர்களால், (ஒரு நன்மையையாயினுந் தீமையையாயினுஞ் செய்ய), வசம் உண்டோ - சுவாதீனம் உண்டோ? (இல்லை யென்றபடி); (எ - று.)

ஒருவன் மறைந்துநின்று பிரதிமைகளைக் கூத்தாட்டுதல்போலக் கடவுள் மறைந்துநின்று பிராணிகளைக்கொண்டு எல்லாத்தொழிலையுஞ் செய்விப்பரென்பது கருத்து. அங்கு - அசை. (எரு)

எசு. வசமறுகித் துன்பம் வருத்தமெலிந் தாலு
மசையுறுநோய் கொண்டாலு மையா—விசையளிசேர்
தாமமறு வேணித் தமிழ்க்கருவை நாதாவுன்
னாமமற வாதடியே னா.

(இ - ள்.) ஐயா - தலைவனே! இசை அளி - இசைபாடுதலையுடைய வண்டுகள், சேர் - மொய்க்கின்ற, தாமம் - பூமாலைகள், அறு - நீங்காத, வேணி - சடையையுடைய, தமிழ் கருவை நாதா - தமிழ்வழங்குங் கருவைக்கடவுளே!—துன்பம் வருத்த - துன்பங்கள் வருந்தச்செய்தலினால், வசம் மறுகி - என்வசந்தப்பி [பரவசமாகி], மெலிந்தாலும் - சோர்ந்தாலும், அசை உறு நோய் - கலக்கந்தருதற்குக் காரணமான வியாதிகள், கொண்டாலும் - அடைந்தாலும், அடியேன் நா - (உன்) அடியவனாகிய எனது நாக்கு, உன் நாமம் - உனது திருநாமங்களை, மறவாது - (எப்பொழுதும்) மறக்கமாட்டாது; (எ - று.)

சிவபிரானது திருநாமங்களை மறத்தற்குரிய துன்பக்காலம் நேர்ந்தாலும் நாக்கு அவற்றைஉச்சரித்தலை மறவாது எனத் தமது நாவின் சிவநாமோச்சாரணப் பயிற்சிமிகுதியை விளக்கியவாறு. அசை - கலக்கம்; முதனிலைத்தொழிற்பெயர். இயல்பாகத் தேவர்கள் மாலையில் வண்டுகள் மொய்க்கா என்பது நூற்றுணிபாயினும், இங்கே மொய்ப்பது கடவுளின் திருவருளின் சிறப்பினாலென்க. (எசு)

எஎ. நாவுக் கழகுனது நாம நயந்துரைக்கும்
பாவுக் கழகுனையே பாடுவது—தாவில்
கலைக்கழகுன் ஞானங் கருவையா னேயென்
றலைக்கழகு நின்கமலத் தாள்.

(இ - ள்.) கருவையானே—!—என் - எனது, நாவுக்கு - நாவிற்கு, அழகு - அழகைத்தருவது, உனது—, நாமம் - திருநாமங்களை உச்சரித்தலாம்; நயந்து உரைக்கும் - விரும்பிப்பாடுகின்ற, பாவுக்கு - பாடல்களுக்கு, அழகு—, உனையே பாடுவது - உன்னையே புகழ்ந்துபாடுவதாம்; தா இல் - குற்றமில்லாத, கலைக்கு - கல்விகளைக் கற்றற்கு, அழகு—, உன் ஞானம் - உன்விஷயமான அறிவைப் பெறுதலாம்; தலைக்கு—, அழகு—, நின் கமலம் தாள் - உனது திருவடித்தாமரையைச் சூடுவதாம்; (எ - று.)

தா - உரிச்சொல். 'உன்ஞானம்' என்றது, சிவஞானத்தை. (எஎ)

எஅ. தாளா லெனது தலையெழுத்தை யுஞ்சிதைத்து
மீளா வடிமை விலையெழுதி—யாளா
யுளவருத்தந் தீர வுவந்தெனைவந் தாண்டான்
களவனத்தி லொப்பனைபா கன்.

(இ - ள்.) களவனத்தில் - களாவனத்தில் எழுந்தருளிய, ஒப்பனைபாகன் - ஒப்பனையம்மையை இடப்பக்கத்திலுடைய சிவன்,—தாளால்-(தன்) திருவடியை வைத்தலால், எனது தலை எழுத்தையும் சிதைத்து - என்தலையில் விதித்து எழு

தின எழுத்துக்களையெல்லாம் அழித்து, மீளா அடிமை விலை எழுதி - (என்றும்) மீண்டுபோக வொண்ணாத அடிமையாக விலைப்பட்டவனாக எழுதி, ஆள் ஆய் - (அவனுக்கு) அடிமையாய், உளம் வருத்தம் தீர - (என்) மனவருத்தம் எல்லாந் தீரும்படி, எனை - என்னை, வந்து—, உவந்து - மகிழ்ந்து, ஆண்டான் - அடிமை கொண்டான்; (எ - று.) (எஅ)

எகூ. கன்னற் சிலைவளையக் கால்வளைய நேர்புருவ
வன்னமனை யார்கலவிக் காளாகி—முன்னித்
திரிந்ததெல்லாம் போதுமப்பா தென்கருவை வேந்தே
பரிந்தடிமை கொள்வாயிப் பால்.

(இ - ள்.) அப்பா - சுவாமியே! தென் கருவை வேந்தே - தென்கருவைத் தலைவனே!—கன்னல் சிலை வளைய - (மன்மதனது) கருப்புவில் (போருக்கு) வளையும்படி, கால் வளைய நேர் - அடிவளைதற்கு நேர்கிற, புருவம் - புருவத்தை யுடைய, அன்னம் அனையார் - (நடையால்) அன்னத்தைப்போன்ற மகளிரது, கலவிக்கு - புணர்ச்சியால்வரும் இன்பத்திற்கு, ஆள் ஆகி - அடிமைப்பட்டவனாய், முன்னி - (அதனையே எப்பொழுதுஞ்) சிந்தித்து, திரிந்தது எல்லாம் - (அதன்பொருட்டு) அலைந்ததெல்லாம், போதும்—; இப்பால் - இப்பொழுதாயினும், பரிந்து - அருள்வைத்து, அடிமை கொள்வாய் ; (என்னை) ஆட்கொள்வாயாக; (எ - று.)

மங்கையர்புருவஞ் சிறிதுவளைந்த மாத்திரத்தில் மைந்தரெல்லாங் காமநோயுறுவரென்பது, முதலடிக்குக் கருத்து. இனி, காமனது கருப்புவில்லுந் தோற்கும்படி கால்வளைகிற புருவ மென்றுமாம். 'கால்வளையுமின்புருவத்து' என்றும் பாடம். கலவி - கலத்தல்; தொழிற்பெயர்: வி - விகுதி. திரிந்தது எல்லாம் - ஒருமைப்பன்மைமயக்கம். (எகூ)

அ0. பாலன் பசிக்கிரங்கிப் பாற்கடலை யீந்தருளு
நீல மணிமிடற்ற னீயன்றோ—சோலைதொறுந்
தேனிரங்குந் தென்கருவைச் செல்வா கொடுந்துயரால்
யானிரங்க நீயிரங்கா யென்.

(இ - ள்.) சோலை தொறும் - எல்லாச்சோலைகளிலும், தேன் இரங்கும் - வண்டுகள் ஒலிக்கின்ற, தென்கருவை செல்வா - தென்கருவையிலெழுந்தருளிய செல்வனே! பாலன் பசிக்கு இரங்கி - வியாக்கிரபாதமுனிவரது குமாரராகிய உபமந்யுமகாமுனிவரது பசிநோயைக் கண்டு இரக்கங்கொண்டு, பால் கடலை ஈந்தருளும் - பாற்கடலை (ப்பருகும்படி அவருக்கு) அளித்தருளிய, நீல மணி மிடற்றன் - நீலஇரத்தினம்போலும் கரிய ஸ்ரீகண்டத்தை யுடையவன், நீ அன்றோ—? நீ-அப்படிப்பட்ட அருளுடைய நீ, கொடு துயரால் யான் இரங்க - கொடியதுன்பங்களால் நான் வருந்த, இரங்காய் - (என்பக்கல்) இரக்கங்கொள்ளுகிறாயில்லை; என் - (இதற்கு) யாதுகாரணம்? (எ - று.)

முதலடியிற் குறித்த கதை:—வியாக்கிரபாதமுனிவர் தமது தந்தையின் கட்டளைப்படி வசிட்டமாமுனிவரது உடன்பிறந்தவளை மணஞ்செய்துகொண்டு உபமந்யுவென்னும் குமாரரைப் பெற, அக்குழந்தையை மாமனாகிய வசிட்டரும் அவர்மனைவியான அருந்ததியும் எடுத்துக்கொண்டுபோய்த் தமது பர்ணசாலையிற் காமதேனுவின் பாலை ஊட்டி வளர்த்துவருகையில், ஒருநாள் தந்தைதாயரான வியாக்கிரபாதரும் அவர்மனைவியாரும் அன்பினாற் சென்று அக்குழந்தையைத் தமதுபர்ணசாலைக்கு எடுத்துக்கொண்டுவந்து தமக்குப் பால் கிடையாமையால் மாவை நீரிலேகரைத்து ஊட்ட, அதனை அக்குழந்தை உட்கொள்ளாது உமிழ்ந்துவிட்டுக் காமதேனுவின்பாலைக் கருதி விரும்பி யழ, நல்லபாலூட்டிச் சமாதானப்படுத்த வழியில்லாமல் அக்குழந்தையைத் தந்தை சிவசன்னிதானத்திற் கொண்டுவிட, அங்கு அக்குழந்தை பசியாற்றாது அழுது சிவபிரானருளாற் பாற்கடலைப் பெற்று உண்டு வளர்ந்தது என்பதாம். (அ0)

அக. இரங்கா யெனினு மிரங்கினும்யான் வேண்டும்
பரங்காண் கருவைப் பரனே—நிரந்தரமு
மிற்கணவ னீத்தாலு நீங்கா திருக்குமொரு
பொற்புடைய கற்புடையாள் போல்.

(இ - ள்) கருவை - திருக்கருவையி லெழுந்தருளிய, பரனே - மேம்பட்டவனே! இல் - இல்வாழ்க்கைக்குரிய, கணவன் - புருஷன், நீத்தாலும் - விட்டிட்டாலும், நிரந்தரமும் - எப்பொழுதும், நீங்காதிருக்கும் - (அவனைவிட்டு) நீங்காமலிருக்கிற, ஒரு—, பொற்பு உடைய - நற்குண நற்செய்கைகளை யுடைய, கற்பு உடையாள் போல் - கற்பு நிலைமையையுடைய மனைவிக்குப்போல, (நீ), இரங்காய் எனினும் - (என்பக்கல்) இரக்கங்கொள்ளாமற்போனாலும், இரங்கினும் - இரக்கங்கொண்டாலும், யான் வேண்டும் பரம் - நான் விரும்பி அடையுங்கடவுள், (எனக்கு நீயே யாவை); (எ - று.)—காண் - தேற்றம்.

அணைத்தாலும் அடித்தாலும் கற்புடைய மனைவிக்குக் கணவனை யன்றி வேறொரு கதி யில்லாதவாறுபோல, இரங்கினாலும் இரங்காவிட்டாலும் எனக்கு உன்னையன்றி வேறுகதி இல்லை என்றதாம்; "கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினுங், கொண்டானை யல்லா லறியாக் குலமகள்போல்,விண்டோய் மதில்புடைசூழ் வித்துவக்கோட் டம்மா னீ, கொண்டாளா யாகிலு முன் குரைகழலே கூறுவனே" என்றார் பிறபெரியாரும். (அக)

அஉ. கற்பங் கடந்து கடவுளராய் வாழ்வரோ
பொற்பங் கயன்முதலாம் புத்தேளி—ரற்புதமே
தெவ்வடக்கு சூலத்தார் தென்கருவை நாதனார்
வெவ்விடத்தை யுண்ணா விடின்.

(இ - ள்.) தெவ் அடக்கு - பகைவர்களை அடங்கச் செய்கின்ற, சூலத்தார் - சூலாயுதத்தை யுடையவராகிய,தென் கருவை நாதனார்—,வெம் விடத்தை - கொடிய (பாற்கடலில் தோன்றிய) விஷத்தை, உண்ணாவிடின் - புசித்தருளாவிட்

டால், பொன் பங்கயன் முதல் ஆம் - அழகிய தாமரையில் தோன்றிய பிரமன் முதலாகிய, புத்தேளிர் - தேவர்கள், கற்பம் கடந்து - அநேக கல்பகாலங்களைக் கழித்து அப்பாலும், கடவுளர் ஆய் - தேவர்களாய், வாழ்வரோ - வாழ்வார்களோ? [வாழார்]; அற்புதமே - (இது) ஒரு ஆச்சரியமோ? (எ - று.)

கற்பம் - காலத்தின் ஒரு பெரும் பங்கு. பகைமை யுணர்த்தும் தெவ் என்னும் உரிச்சொல், பகைவர்க்கு ஆகுபெயர். "வானவர் இந்திரன் இந்திரை கேள்வன் மறைவிரிஞ்சன், தானவரென்று புகல்வதுண்டோ சமரிற் சிலையாற், கானவ னெற்றுங் களவீச ரன்று கடல்விடத்தைப், போனகமாக வமுதுசெய்யா விடிற் பூதலத்தே" என்றது காண்க. (அஉ)

அரு. விடக்குடலிற் புக்கு விரிந்தவிருண் மாயைத்
தொடக்கறுத்த ஞானச் சுடரை—நடத்திற்
றலைமைபெற்ற தென்கருவைத் தாணுவைக்கண் டுள்ள
நிலைமைபெற்றே னீடேறி னேன்.

(இ - ள்.) விடக்கு உடலில் - (எனது) மாம்சமயமான [இழிவாகிய] உடம்பினுள்ளே, புக்கு - வந்து எழுந்தருளி, விரிந்த - அங்குப் பரவியுள்ள, மாயை-அவிச்சையாகிய, இருள் - இருளின், தொடக்கு - சம்பந்தத்தை, அறுத்த - போக்கியருளிய, ஞானம் சுடரை - அறிவுமயமான விளக்காக வுள்ளவனாகிய, நடத்தில் தலைமை பெற்ற தென் கருவைத் தாணுவை - திரு நடனத்தில் மேன்மையைப்பெற்ற தென்கருவைச் சிவபிரானை, கண்டு - தரிசித்து, உள்ளம் நிலைமை பெற்றேன் - (யான்) மனம் (பல வழிகளிலுஞ் செல்லாமல்) ஒரு வழிப்படப்பெற்றேன்; (அதனால்), ஈடேறினேன் - கடைத்தேறினேன்;(எ-று.)

நடம் - வடசொல். 'நிலைமைபெற்றே னீடேறி னேன்' என்றதில், வரிவடிவை நோக்காது ஒலிவடிவினால் நகரத்துக்கு னகரம் மோனையாயிற்று. (அரு)

அசு. ஏறுபட்டுங் கல்லா லிருஞ்சிலையா லெற்றுண்டு
மாறுகட்ட மாற்றா லடியுண்டு—ஊறுபட்ட
வாதையா லோகருவை வாணனே பொன்மேனி
பாதியாய்த் தேய்ந்தாய் பகர்.

(இ - ள்.) கருவை வாணனே - கருவையில் வாழ்பவனே! நீ—, கல்லால்-(சாக்கியநாயனாரால் எறியப்பட்ட) கல்லினால், ஏறுபட்டும் - அடிக்கப்பட்டும், இரு சிலையால் - (அருச்சுனனது) பெரிய வில்லினால், எற்றுண்டும் - அடிக்கப்பட்டும், மாறு கட்ட மாற்றால் - பகைவரை அழித்த (அரிமர்த்தன பாண்டியனது) பிரம்பினால், அடியுண்டும் - அடிபட்டும், ஊறு பட்ட - புண்பட்டதனாலாகிய, வாதையாலோ - வருத்தத்தினாலோ, பொன் மேனி பாதி ஆய் தேய்ந்தாய் - அழகிய திருமேனி பாதியாகித் தேய்ந்துவிட்டாய்; பகர் - சொல்லு? (எ-று.)

உமாதேவி பிருங்கிமுனிவரால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைப் பொறுக்கமாட்டாமல் தவஞ்செய்து சிவபிரானது திருமேனியின் ஓர்பாகத்தில் இடைவிடாது தான் உடனுறைதலைக்குறித்து, கல்லாலெறிபடுதல் முதலிய வாதைக

ளால் திருமேனி பாதியாகத்தேய்ந்ததென வேறொருகாரணங்கற்பித்துக்கூறியது, ஏதுத்தற்குறிப்பேற்றவணியின்பாற்படும். அரிமர்த்தன னென்னும் பெயருக்குப் பகைவரை அழிப்பவனென்று பொருளாதலால், அவனது தன்மையைப் பிரம் பின்மேலேற்றி, 'மாறுகட்டமாறு' என்றார்; இனி, உவமைநீங்கிய என்றும் பொருள்கொள்ளலாம். கட்ட - களைந்த ; இறந்தகாலப்பெயரெச்சம்: கள் - பகுதி, ட் - இடைநிலை, அ - விகுதி. 'மாறுபட்ட" என்றும் பாடம். வாதை - பாதா என்னும் வடமொழியின் திரிபு. வாண்ன் - வாழ்நன் என்பதன் மரூஉ. (அச)

கல்லாலெறியுண்ட கதை:—திருச்சங்கமங்கையில் வேளாளர் குலத்தில் உதித்த ஒருவர் பௌத்த சமயத்திற் பிரவேசித்து அது சற்சமயமன்றென்று தெளிந்து பரமசிவனே பதியென்று அறிந்து அச்சாக்கியசமய வேஷத்தைத் துறவாமலே தினந்தோறுஞ் சிவலிங்கத்தைத் தரிசனஞ் செய்தபின்பே போசனஞ் செய்யவேண்டு மென்று விரும்பிச் சமீபத்தி லிருக்கிற ஒரு லிங்கத்தை நாடோறுந் தவறாமல் தரிசித்து அருகிற் கிடக்குங் கல்லை யெடுத்து அன்பினோடு அதன்மேல் எறிந்து அருச்சித்துவர, ஒருநாள் பரமசிவன் உமாதேவியாரோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றிக் காட்சிதந்து, அவரைத் தமது திருவடியிற் சேர்த்தருளினார் என்பதாம்.

சிலையாலெற்றுண்ட கதை:— பாசுபதாஸ்திரம் பெறும்பொருட்டுச் சிவ பிரானைநோக்கித் தவஞ்செய்த அருச்சுனனை அழிக்கத் துரியோதனனேவலாற் பன்றிவடிவாய்வந்த மூகாசுரன்மேல் வேடவடிவாய்வந்த சிவபெருமான் அம்பெய்ய, அது பிளக்குமுன்னே அருச்சுனன் அம்பொன்றுஎய்து வராகத்தைவிழுத்த, அதுகாரணமாக அவ்விருவர்க்கும் உண்டான போரிற் பரமசிவன் எதிரியின் வில்நாணியை அறுக்க, பார்த்தன் விற்கழுந்தால் கடவுளது முடியில் அடித்தவளவிலே, சிவபிரான் தமது நிஜரூபத்தோடு காட்சிகொடுத்து அவன் வேண்டுகோளின்படி அம்புமுதலியவற்றை அருளிப் போயினர் என்பதாம்.

மாற்றலடியுண்ட கதை:—வாதவூரடிகளை வருத்தியதன்பொருட்டு அரிமர்த்தனபாண்டியன்மீது உண்டான கோபத்தாற் சிவபெருமான் வையையாற்றை அவன்நகர்மேல் ஏவ, அந்நதி மதுரையை அழிக்குமாறு பெருகிவர, அந்நகரத்தார் யாவரும் அரசன்கட்டளைப்படி கூலியாட்கள் வைத்துக் கரைகோலுகையில், சோமசுந்தரக்கடவுள் பிட்டுவிற்றுண்ணும் வந்தியென்னும் மலட்டுக்கிழவிக்குத் தன்கருணையினால் வேலையாளாக வந்து அமர்ந்து அவள்சமைத்த பிட்டென்னும் உணவையே கூலியாகக்கொண்டு அதனைத் தின்றுகொண்டே முடியின்மேற் கூடையில் மண்ணைச் சுமந்து கொண்டுபோய்க் கொட்டி அவளது பாகத்துக்கு உரிய கரையைக் கட்டாது திருவிளையாடல்செய்ய, அதுகண்ட பாண்டியன் தனதுகைப்பிரம்பினால் அடித்த மாத்திரத்தில் சிவபிரான் மறைந்தருள, கரை கட்டப்பட்டது என்பதாம்.

அரு. பகர வருமெழுத்திற் பால்வண்ணா நின்னை
யகரமுத லேம்பத்தொன் றாக்கிப்—புகலாதே
யஞ்செழுத்தா னென்பதென் னாதி மறைமுதனா
னெஞ்சமுழுத்தி வாழு நிலம்.

(இ - ள்.) பால்வண்ணு—! ஆதி - பழமையாகிய, மறை முதல் - வேதங்கள் முதலிய, நூல் - சாஸ்திரங்களை, நெஞ்சு அழுத்தி - மனத்திற் பதியவைத்து, வாழும் - வாழ்கிற, நிலம் - நிலவுலகத்துள்ள பெரியோர், நின்னை - உன்னை, பகர வரும் எழுத்தில் - சொல்லப்பட்டுவருகிற எழுத்துக்களில், அகரம் முதல் ஐம்பத்தொன்று ஆக்கி புகலாதே - அகாரம்முதலிய ஐம்பத்தொரு அக்ஷரங்களையுமுடையவனாகச் சொல்லாமல், அஞ்சு எழுத்தான் என்பது - ஐந்துஅக்ஷரங்களையுடையனென்று சொல்வது, என் - யாதுகாரணம்; (எ - று.)

நீ பஞ்சாக்ஷரத்துக்கு மாத்திரமே யன்றிச் சகலாக்ஷரத்துக்கு முரியவனென்றபடி. என்றது, கடவுள் எல்லா வெழுத்துக்களின் வடிவமாக வுள்ளவனென்றும், எல்லா வெழுத்துக்களிலும் ஐந்தெழுத்துச் சிறந்ததென்றுங் கூறியதாம். வடமொழியில் உயிரெழுத்துப் பதினாறும், மெய்யெழுத்து முப்பத்தைந்தும் ஆக எழுத்து ஐம்பத்தொன் றென அறிக. உலகமென்பதுபோல, நிலம் என்பது - இங்கே உயர்ந்தோரை உணர்த்திற்று. (அரு)

அசு. நிலத்திற் பிறந்துடனே நீர்தோய் பசுமட்
கலத்திற் சிதையுமிந்தக் காய—நலத்திற்
கடியேறு பூங்களவிற் கண்ணுதலே மீள
வடியேன் சுமவா தருள்.

(இ - ள்.) நலத்தின் - எல்லாநன்மைகளையுந்தரவல்ல, கடி ஏறு பூ களவில் - வாசனைமிகுந்த பூக்களையுடைய திருக்களாவின்கீழுள்ள, கண் நுதலே - நெற்றியில் திருக்கண்ணையுடைய கடவுளே! நிலத்தில் - பூமியில், பிறந்து - தோன்றி, உடனே - விரைவிலே, நீர் தோய் பசு மண் கலத்தின் - நீரை நெடுங்காலம்பெய்து வைத்த பசிய மண்பாத்திரம்போல, சிதையும் - அழிந்துபோந்தன்மையதாகிய, இந்த காயம் - இந்த உடம்பை, மீள - மீண்டும், அடியேன்—, சுமவாது - எடுக்காமல் [பிறப்பற்று முத்திபெறும்படி], அருள் - அருள்செய்வாயாக; (எ - று.)

"பசுமட், கலத்து ணீர் பெய்திரீஇ யற்று" என்றார் திருவள்ளுவரும். இவ்வுவமை, சிறிதேனும் நிலைத்திராமல் உடனே சிதைதலை விளக்கும். பசுமை - ஈரத்தின்மேலது. கண்ணுதல் - அன்மொழித்தொகை. (அசு)

அஎ. அருளுதவுந் துன்ப மகற்றியறி வாக்குந்
தெருளுதவும் வீட்டின்பஞ் சேர்க்கு—மருவார்
புனக்களவைக் கோயில்கொண்ட புண்ணியனென் றோத
மனக்களவைத் தீர்க்கு மருந்து.

(இ - ள்.) மரு ஆர் - வாசனை மிகுந்த, புனம் - வனத்தில்தோன்றிய, களவை - திருக்களாவை, கோயில் கொண்ட - இருப்பிடமாகக் கொண்டருளிய, புண்ணியன் - பரிசுத்தமூர்த்தி, என்று ஓத - என்று (ஒருகால்) சொல்ல,—மனம் களவை தீர்க்கும் மருந்து - மனத்திலுள்ள மயக்கமாகியநோயைஒழிக்கிற மருந்தாகிய சிவம், அருள் உதவும் - கருணையைச் செய்யும்; துன்பம் அகற்றி - பிறவித்துன்பங்களை ஒழித்து, அறிவு ஆக்கும் - தத்துவஞானத்தை உண்டாக்கும்; தெருள் உதவும் -

(அதனால்) தெளிவை உண்டாகச்செய்யும்; வீடு இன்பம் சேர்க்கும் - முத்தி யின்பத்தை அடைவிக்கும்; (எ - று.)

உடலுக்கு நேரும் நோயைமாத்திரம் நீக்கும் மருந்துபோலன்றி, உயிர்க்கு நேரும் எல்லாத்துன்பங்களையும் சிவபிரான் நீக்குவ னென்பதாம். (அஎ)

அஅ. மருந்தா லொழியா மனத்துன்ப நோயா
யிருந்தா லுனையெவ்வா றேத்தித்—திருந்துபுகழ்ச்
சொன்மாலை சாத்துவேன் சொற்கருவை யாய்கடுக்கைப்
பொன்மாலை மார்பா புகல்.

(இ - ள்.) சொல் - புகழையுடைய, கருவையாய் - திருக்கருவையானே! கடுக்கை பொன் மாலை மார்பா - பொன்னிறமான கொன்றைப்பூ மாலையை யணிந்த திருமார்பையுடையவனே! மனம் துன்பம் - மனத்தின் கவலைகள், மருந்தால் ஒழியா நோய் ஆய் - மருந்தினால் தீராத நோயை ஒத்து, இருந்தால் - வருத்தப்படுத்திக்கொண்டிருந்தால் [இருத்தலால் என்றபடி], உனை - உன்னை, ஏத்தி - துதித்து, திருந்து புகழ் சொல் மாலை - குற்றமில்லாத (உனது) புகழைப் பாடுகிற சொல்லால் தொடுக்கும் பாமாலையை, எ ஆறு - எப்படி, சாத்துவேன் - (உனக்குச்) சமர்ப்பிப்பேன்? புகல் - சொல்லு; (எ - று.)

மனக்கவலையற்று எப்பொழுதும் உன்னையே துதித்துப் பாடும்படி அருள வேண்டு மென்பதாம். (அஅ)

அகூ. புகையுந் தழற்கண்ணிற் பொங்குசினத் தாலே
பகைகொண்டு காலபடர் பற்றி—மிகவுந்
தணவாத் துயர்தருமுன் றண்களா வீசன்
கணநா தனைமனமே காண்.

(இ - ள்.) மனமே - நெஞ்சே!—கால படர் - யமதூதர்கள், பொங்கு சினத்தாலே - மிகுந்த கோபத்தால், புகையும் தழல் கண்ணின் - புகைகின்ற நெருப்புப்பொறியை வீசுகிற கண்களோடு, பகைகொண்டு - விரோதங்கொண்டு வந்து, பற்றி - (என்னைப்) பிடித்து, தணவா துயர் - நீங்காததுன்பத்தை, மிகவும் தரும் முன் - மிகுதியாக (எனக்குச்) செய்தற்குமுன்னமே, கணம்நாதன்-பிரமதகணங்களுக்குத் தலைவனாகிய, தண் களா ஈசனை - குளிர்ந்த திருக்களாவின்கீழ்க் கடவுளை, காண் - தியானிப்பாயாக; (எ - று.)

கணங்களாவார் - எப்பொழுதுஞ் சிவனுடனிருந்து உபசரிக்குஞ் சண்டி, நந்தி, மகாகாளன், பிருங்கி முதலியவர். (அகூ)

கூ0. காவென்றுஞ் சங்கென்றுங் கார்முகிலென் றங்கவர்மேற்
பாவென்றும் பாடப் பதந்தெரிந்த—நாவென்றுந்
தன்னைப்பா விக்கத் தமிழ்க்கருவை நாதனு
ரென்னைப்பா வித்தாரிப் பார்.

(இ - ள்.) தமிழ் கருவை நாதனுர்—, இ பார் - இவ்வுலகத்தில், கா என்றும் - (நினைத்ததைக் கொடுத்தலால்) கல்பக விருக்ஷமென்றும், சங்கு என்றும் - (அள

வில்லாமல் தருதலால்) சங்கினுருவமாய்க் கிடக்குஞ் சங்கநிதியென்றும், கார் முகில் என்று -(கைம்மாறு கருதாமல் ஈதலால்) காளமேகமென்றும், அங்கு - அங்கங்கே, அவர் மேல் - அந்தந்தச் செல்வவான்கள் விஷயமாக, பா - பாடல்களை, என்றும் - எப்பொழுதும், பாட - பாடுவதற்கு, பதம் தெரிந்த - சொற்களை அறிந்த, நா-(எனது) நாக்கு, என்றும்-எந்நாளும், தன்னை-தன்னையே, பாவிக்க - துதிக்கும்படி, என்னை—, பாவித்தார் - அடிமையாக நினைத்தார்; (எ-று.)

'கார்முகிலென்று' என்பதில், எண்ணும்மை விகாரத்தால் தொக்கது. 'நாதனார்,' 'பாவித்தார்' என்றவற்றுக்கு ஏற்ப, 'தம்மை' என்னாமல் 'தன்னை' என்றது ஒருமைப்பன்மை மயக்கம். 'பாலித்தார்' என்றும், 'இப்பால்' என்றும் பாட முண்டு. (கo)

கக. பருவ மழைத்துளியைப் பார்ப்பதுபோ னாயே
னுருகி யுணங்கி யுடைந்தே—னரிவையுமை
வல்லவனே தென்கருவை வள்ளலே நீயுதவு
நல்லருளைப் பார்த்திருந்து நான்.

(இ - ள்.) உமை அரிவை வல்லவனே - உமாதேவியின் கணவனே! தென் கருவை வள்ளலே - தென்கருவையிலுள்ள வரையாது கொடுப்பவனே! பருவம் மழை துளியை - பெய்யும்பருவத்துப் பெய்கிற மேகத்தின் நீர்த்துளியை, பார்ப்பதுபோல - (யாவரும்) எதிர்பார்த்திருப்பதுபோல, நாயேன் - நாய்போற் கடைப்பட்டவனாகிய, நான்—, நீ உதவும் நல் அருளை - நீசெய்யும் நல்லகருணையை, பார்த்து இருந்து - எதிர்பார்த்திருந்து, உருகி - மனமுருகி, உணங்கி - ஓசிந்து, உடைந்தேன் - நெகிழ்ந்தேன் ; (எ - று.)

"வான்பார்க்கும் பைங்கூழ்போல் வாளா வுனதருளே, யான்பார்க்க நீபார்த் திரங்கினாய்" என்றார் பிறரும். அரிவை - தெய்வப்பெண்; இங்கே பருவப்பெயரன்றிக்கேவந்த பொதுப்பெயர். வல்லவன்-வல்லபன்; பிரியமுள்ளவன். (கக)

கஉ. இருக்குந் திருக்கோயி லேழையே னெஞ்சோ
மருக்கொள் கயிலை வரையோ—திருக்களவோ
சோதிமணி மன்றோ சுடர்விசும்போ பால்வண்ணா
வோது மறையோ வுனக்கு.

(இ - ள்.) பால்வண்ணா—! உனக்கு—, இருக்கும் திரு கோயில் - எழுந்தருளியிருக்கும் மேன்மையான இடம், ஏழையேன் நெஞ்சோ - அறிவில்லாத எனது மனமோ? மரு கொள் கயிலை வரையோ - அழகைக்கொண்ட ஸ்ரீகைலாசகிரியோ? திரு களவோ - திருக்களாமரமோ? சோதி மணி மன்றோ - ஒளியையுடைய அழகிய சிதம்பரசபையோ? சுடர் விசும்போ-ஒளியையுடைய மேலுள்ள முத்தியுலகமோ? ஓதும் மறையோ - ஓதப்படுகிற வேதமோ? (எ - று.)

சிவபெருமானை அடியேன் அன்போடு தியானித்தல்பற்றி அப்பெருமான் நான் நினைத்தபடியெல்லாம் எனதுமனத்தில் திருவுள்ளமுவந்து வந்து எழுந்தருளியிருக்கின்றனனென்பது தோன்ற இங்ஙனங் கூறினர். கடவுள் அடியார் மனத்திலும்,' கைலையிலும், களவிலும், மன்றிலும், விசும்பிலும், மறையிலும்

எழுந்தருளியிருக்கிறார் என்றபடி; "உணங்குந்தவத்தர் கருத்திலும் வேதத்தி னுச்சியிலு, மணங்கொண்ட சோலைக் கயிலாயவெற்பிலு மாமறையோர், கணங் கொண்டு போற்றிசெய் பொன்னம்பலத்தும் கருவையிலு, மிணங்கும் பொரு ளென் னிதயாரவிந்தத் திருக்கின்றதே" என்றார் கலித்துறையந்தாதியிலும். (கூஉ)

கூ௩. உனக்கடிமை நானல்லா துண்டுபல ரேனு
மெனக்குநீ யல்லாமல் யாரே—நினைக்கனிவா
னுனழைத்தே னென்றாலு நற்கருவை யானேநீ
தானழைத்தா லன்றோ தரம்.

(இ - ள்.) நல் - நல்ல, கருவையானே—! உனக்கு—, அடிமை - அடியவர், நான் அல்லாது - என்னை யல்லாமல், பலர் உண்டு எனும் - பலர் உளராயினும், எனக்கு—, நீ அல்லாமல்—, யாரே - (வேறுகதி) யாவருளர்? [எவருமில்லை]; நினை - உன்னை, கனிவால் - கனிந்த அன்பினால், நான்—, அழைத்தேன் என்றா லும் - அழைத்தேனாயினும், நீ—, அழைத்தால் அன்றோ - (என்னை) அழைத் தருளினாலன்றோ, தரம் - தகுதி; (எ - று.)

உனக்கு என்னைப்போல அடியார்கள் பலருளரென்பதையும், எனக்கு உன் னையன்றி வேறுகதியில்லையென்பதையும் விளக்கியவாறு. தான் - அசை. கனிவு- தொழிலாகுபெயர். (கூ௩)

கூச. தரம்பிரித்துக் கொள்ளுந் தமிழ்ப்பாடல் கொண்டு
வரம்பிரித்து வாழ்வு வழங்கின்—விரிந்தநிலா
வேணிவைத்த தென்கருவை வெள்ளைவள்ள லேயுனக்கு
நீணிலத்தி லுண்டோ நிகர்.

(இ - ள்.) விரிந்த நிலா - ஒளிபரவிய சந்திரனை, வேணி வைத்த - சடை யிலே வைத்தருளிய, தென் கருவை - தென்கருவையிலுள்ள, வெள்ளை - வெண் ணிறமுடைய, வள்ளலே - வரையாதுகொடுப்பவனே! தரம் பிரித்து கொள்ளும்- தன்மைகளை வகுத்து ஆராய்ந்து கொள்ளப்படுகின்ற, தமிழ் பாடல் - (எனது) தமிழ்ப்பாடல்களை, கொண்டு - (நீ) ஏற்றுக்கொண்டு, வரம் பிரித்து - (யான் வேண்டும்) வரங்களைத் தனித்தனி கூறுசெய்து கொடுத்து, வாழ்வு வழங்கின் - பேரின்ப வாழ்க்கையையும் (எனக்கு) அருளினால் [அருளுதலினால் என்றபடி], உனக்கு—, நீள் நிலத்தில் - பெரிய பூமியில், நிகர் உண்டோ - ஒப்பு உளதோ? (எ - று.)—இல்லை யென்றபடி.

தரம் - சொல், பொருள், தொடை, நடை, துறை, அணி முதலியவற்றின் தன்மைகள். வரம்பு இரித்து எனப் பதம்பிரித்து - யோகிகளுக்கே முத்தியைக் கொடுப்பதென்னும் வரம்பை அழித்து என்றுங் கொள்ளலாம். (கூச)

கூ௫. நிகரற்ற தென்கருவை நித்தனென்னை யாளுந்
தகரக் குழலி தலைவன்—சகமடுத்த
வெள்வடிவ னெந்தை விளங்கியுறை யுங்கோயிற்
கள்வடியுந் தண்பூங் களா.

(இ - ள்.) நிகர் அற்ற - ஒப்பில்லாத, தென் கருவை - தென்கருவையி லுள்ள, நித்தன் - (பிறப்பிறப்பில்லாமல்) என்றும் ஒருபடியா யிருப்பவனும், எனை ஆளும் - என்னை அடிமைகொள்ளுகிற, தகரம் குழலி தலைவன் - தகரமரத்தின் சாந்தை யணிந்த கூந்தலையுடைய உமாதேவியின் கணவனும், சகம்அடுத்த- உலகமெல்லாஞ் சரணமாக அடைகிற, வெள் வடிவன் - வெண்மையாகிய உருவமுடையவனுமாகிய, எந்தை - எமதுசுவாமி, விளங்கி உறையும் - எழுந்தருளி விளங்குகிற, கோயில்-இடம், கள் வடியும் தண் பூ களா - தேனொழுகுங் குளிர்ந்த பூக்களையுடைய திருக்களாவாம் ; (எ - று.)

நித்தன் - நித்யன். தகரமென்னும்மரத்தின் பெயர், அதன் சாந்துக்கு ஆகுபெயர் ; இது, ஐந்து விரைகளி லொன்று. சகம் - ஜகத். (௬௫)

௬௬. களவிட்ட நெஞ்சாற் கருவையாய் நின்சீ
ரளவிட் டுனைத்துதிப்பே னல்லே—னுளவிட்டம்
பெற்றதின்றி நாயேனும் பித்தாய்ப் பிதற்றுபுன்சொல்
குற்றமின்றி நன்றிதெனக் கொள்.

(இ - ள்.) கருவையாய் - திருக்கருவையானே ! (யான்), களவுஇட்ட - வஞ்சனை பொருந்திய, நெஞ்சால் - மனத்தினால், நின் சீர் - உனது புகழை, அளவிட்டு - இவ்வளவினதென்று அறிந்து, உனை - உன்னை, துதிப்பேன் அல்லேன்- தோத்திரஞ் செய்யுந் தன்மையுடைய னல்லேன் ; நாயேன் - நாய்போற் கடைப்பட்டவனாகிய யான், உளம் இட்டம் பெற்றது இன்றி - மனத்தில் பக்தி பொருந்திய தில்லாமலே, பித்து ஆய் - பயித்தியம்பிடித்தவனை யொத்து, பிதற்று - பிதற்றுகிற, புல் சொல்லும் - இழிவான சொல்லையும், குற்றம் இன்றி நன்று இது என - குற்றமில்லாமல் நல்லது இது வென்று, கொள் - அங்கீகரித் தருள்வாயாக ; (எ - று.)

இட்டம் - இஷ்டம். இழிவு சிறப்பும்மை, மாற்றப்பட்டது. (௬௬)

௬௭. கொள்பவனு னீயே கொடுக்குமவன் கொள்பொருட்டால்
விள்வதென் கைம்மாறு வேண்டுமோ—வுள்வதென்கொ
றேனிறைகொன் றைச்சடிலச் செல்வக் களவீச
பானிறமெய் கொண்டாயிப் பார்.

(இ - ள்.) தேன் நிறை கொன்றை சடிலம் செல்வம் கள ஈச - தேன் நிறைந்த கொன்றைப்பூவை யணிந்த சடையையுடைய எல்லாச் செல்வங்களுக்கும் உரிய திருக்களாவின்கீழ்க் கடவுளே ! பால் நிறம் மெய் கொண்டாய் - பால்போன்ற திருநிறத்தையுடைய திருமேனியை யுடையவனே !—கொள்பவன் நான் - (எல்லா இன்பங்களையும் உன்னிடம்) பெற்றுக்கொள்பவனுவேன் யான்; நீயே கொடுக்குமவன்-(அவ்வின்பங்களை யெல்லாம்) கொடுத்தருளுபவன் நீயேயாவை; கொள் பொருட்டு விள்வது கைம்மாறு என் - (யான்) கொள்ளும்பொருட்டாகச் சொல்லப்படுகின்ற பிரதியுபகாரம் யாது? வேண்டுமோ - (உனக்குக் கைம்மாறு) வேண்டுமோ ? (வேண்டுமாயின்), இ பார் - இவ்வுலகத்தில், உள்வது என்கொல்- (நீ) நினைப்பது யாதோ ? (எ - று.)—ஆல் - ஈற்றசை.

யான் அடிமைப்பட்டபொழுதே எனது உடல் பொருள் ஆவி என்னுமிவை யெல்லாம் உனதாயின வாதலால், என்னிடம் யாது உளது என்றபடி. 'உள்ள தென் கொல்' என்றும் பாடம். கைம்மாறு கருதாம லளிக்குங் கடவுளின் கருணையை இதனால் வெளியிட்டார். 'கொள்பவன் நான்,' 'நீயே கொடுக்குமவன்' என்பன - தன்மையிலும் முன்னிலையிலும் படர்க்கை வந்த இடவழுவமைதிகள். (கஎ)

கஅ. பார்முதலாய் வானப் பரப்பா யனைத்தினுக்குங்
கார்முதலா யுண்டியருள் காப்பாகிச்—சீர்முதலா
யார்க்குந் துணையாங் களவீச நின்னையன்றிப்
பார்க்கினுண்டோ வின்பம் பகர்.

(இ - ள்.) பார் முதல் ஆய் - நிலம் முதலிய நான்கு பூதங்களாகியும், வானம் பரப்பு ஆய் - (இவற்றிற்குக் காரணமாகி எங்கும்) பரவியுள்ள ஆகாசமாகியும், முதல் கார் ஆய் - (எல்லாவுயிர்களும் பிழைத்தற்குக்) காரணமாகிய மேகத்தின் வடிவமாகியும், அனைத்தினுக்கும் உண்டி அருள் காப்பு ஆகி - எல்லா வுயிர்களுக்கும் அவ்வவற்றிற்கு ஏற்ப உணவை அளித்துக் காப்பவனாகியும், சீர் முதல் ஆய் - சிறந்த முதற்கடவுளாகியும், யார்க்கும் துணை ஆம் - யாவர்க்குந் துணைவனுமாகிய, கள ஈச - திருக்களாவின் கீழ்க் கடவுளே! பார்க்கின் - ஆராய்ந்து பார்த்தால், நின்னை அன்றி - உன்னை (நினைத்தல் முதலியன) அல்லாமல், இன்பம்—, உண்டோ - வேறு உண்டோ? [இல்லை என்றபடி]; பகர் - சொல்லு; (எ - று.)

உண்டி - உண்ணப்படுவது; இ - செயப்படு பொருள் விகுதி, ட் - எழுத்துப்பேறு. காப்பு, துணை - ஆகுபெயர்கள். (கஅ)

கக. கங்கந் தொடருங் கழுமுட் படையுடையாய்
மங்கையுமை யொப்பனையாள் வாரணிந்த—கொங்கை
தழுவுந் திருமார்பந் தானுணரா நாயேன்
முழுவெந் துயரமும்போ மோ.

(இ-ள்.) கங்கம் தொடரும் - (பகைவரது ஊன்தோய்ந்திருத்தலாற்) கழுகுகள் பின்தொடர்கின்ற, கழுமுள் படை உடையாய் - சூலாயுதத்தை யுடையவனே! மங்கை உமை ஒப்பனையாள் - (எப்பொழுதும்) மங்கைப் பருவத்தையே யுடைய ஒப்பனை யம்மை யென்னுந் திருநாமம் பூண்ட உமாதேவியினது, வார் அணிந்த கொங்கை - கச்சை அலங்கரித்த தனத்தை, தழுவும் - ஆலிங்கனஞ் செய்கிற, திரு மார்பம் - (உனது) அழகிய மார்பை, உணரா - அறியாத, நாயேன் - நாய்போற் கடைப்பட்ட எனது, முழு வெம் துயரமும் - கொடிய துன்பங்களெல்லாமும், போமோ - அழியுமோ? (எ - று.)—அழியுமாறு அருள் செய்யவேண்டுமென்றபடி. (கக)

க00. மோன விரத முனிவர் விழித்துறங்கு
ஞான துரியமுத னண்ணுவோர்—மானதத்தி
னுள்ளுவதுந் தன்னைமறந் தொன்றுவதும் பால்வண்ண
தெள்ளுவது நின்மலர்த்தாட் சீர்.

(இ - ள்.) பால் வண்ணு - பால் வண்ணனே ! மோன விரதம் - மௌன விரதத்தை யுடைய, முனிவர் - முனிவர்களும், விழித்து உறங்கு - கண் விழித்துக்கொண்டே (பிரபஞ்ச விஷயத்தில்) துயிலுகின்ற,ஞான துரியம் முதல் நண்ணுவோர் - ஞான சம்பந்தமான துரீயாவஸ்தையைப் பொருந்திய சன்மார்க்க நிலையுடையோரும், மானதத்தின் - மனத்தில், உள்ளுவதும் - எண்ணுவதும், தன்னை மறந்து - தன்வசந் தப்பிப் பரவசப்பட்டு, ஒன்றுவதும் - இடைவிடாமல் தியானிப்பதும், தெள்ளுவதும் - ஆராய்வதும், நின் மலர் தாள் சேர் - உனது தாமரைமலர்போலுந் திருவடியின் புகழேயாம் ; (எ - று.)

மோனம் - வடசொற்றிரிபு ; பேசாதிருத்தல். இது, சாத்துவிக குணங்களு ளொன்று. விழித்து உறங்குதல் - பரம்பொருளிடத்திலேயே கண்வைத்து இவ்வுலக வாழ்க்கையிற் கருத்துச் செலுத்தா திருத்தல் ; "பாசங், கழித்த கண்ணினு லரனுருக் கண்டுகொண் டுலகில், விழித்த கண்குருடாத்திரி வீரரும் பலரால்" என்றார் திருவிளையாடற் புராணத்தும். துரியம்-நான்காம் அவத்தை ; அதாவது-தியானத்தில் அசைவற் றிருத்தலாகிய அங்க சிவயோக மென்கிற சமாதி. மானதம் - மாநஸம். ஒன்றுதல் - இடைவிடாது நினைத்தல் ; "மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்" என்பதில் சேர்தல் போல. (கoo)

ஸ்ரீ

நன்னூல்.

நூலாசிரியர் வரலாறு. *

இந்நன்னூலாசிரியராகிய பவணந்தி முனிவர், இத் தொண்டைமண்டலத்தில் †சனகாபுரத்தில் பிராமணவருணத்தில்சந்மதிமுனிவர்செய்த தவப்பயனால் அவர்குமாரராய்த் தோன்றி, இளமைப்பருவத்திலேயே, தொல்காப்பியங்களிலும் தொல்காப்பியத்திலும் பல்காற்பயின்று, வடமொழிவியாகரணம் முதலியவற்றிலும் வல்லவராய், தாம் பிறந்துள்ள அருகசமயத்தில் முத்திபெறுதற்குக் காரணமாகிய ஞானநூல்களை ஓதி, அவற்றின்பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்துகொண்டு, அன்பு அருள் அடக்கம் ஒழுக்கம் வாய்மை முதலிய நற்குண நற்செய்கைகளில் மிகச் சிறந்தவராய், துறவறங்கொண்டு ஒழுகுவாராயினர்.

அங்ஙனமிருக்குநாட்களில் ஒருநாள், கல்வி அறிவு ஒழுக்கங்களாலுஞ் செல்வம் அதிகாரம் முதலிய நலங்களாலுங் குறைவின்றி மிகச்சிறப்புற்று விளங்கியிருந்த 'சீயகங்கன்' என்னுஞ் செங்கோல்மன்னன், பவணந்திமுனிவரை நோக்கி 'தொல்காப்பியம்முதலிய பழைய இலக்கணநூல்கள் பேரறிவினர்க்கே புலப்படுந் தன்மையனவாயிருத்தலின், இயற்றமிழின் பாகுபாடான எழுத்து சொல் பொருள் யாப்பு அணியிலக்கணங்களின் பயிற்சி குன்றிப்போவதனால், தமிழாராய்ச்சியால் வலியோரே யன்றி எளியோரும் ஓதியுணரும்படி, நீவிர் ஓர் இலக்கணநூலை இயற்றித்தரல்வேண்டும்' என்று வேண்டினன். பவணந்தி முனிவர், தமிழ்நாடனைத்துக்கும் பேருபகாரமாமென்று எண்ணி, அங்ஙனமே இயற்றத் துணிந்து, தாம் கற்ற இலக்கிய இலக்கணங்களில் இலைமறைகாய்

---

*இது - பெரும்பாலும் இந்நூற்சிறப்புப்பாயிரத்தையே பிரதான ஆதாரமாகக் கொண்டும், சிறுபான்மை மற்றுஞ் சில ஆதாரங்களால் வேறு சில விஷயங்களைச் சேர்த்தும், ஒருவாறு சுருக்கமாக எழுதப்பட்டது.

† "தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்த மைந்தன்
நன்னூ லுரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
(சின்னூ லுரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னூபுரத் திருவன்ன மின்னே) தொண்டை மண்டலமே"

என்று படிக்காசுப்புலவர் தொண்டைமண்டலசதகத்திற் கூறியிருத்தலால், பவணந்திமுனிவர்பிறந்தவூர் தொண்டைநாட்டிலுள்ள தென்று தெரிகின்றது.

"மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்குப்—பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு"

இத்தனிப்பாடலினால், தொண்டைநாட்டின் எல்லையை அறிக.

போல் மறைந்துகிடந்த அரிய பெரிய விதிகளையெல்லாந் தமது நுண்ணுணர்வினால் விளங்க எடுத்துத் திரட்டி, முற்காலத்துவழங்கிய இலக்கணங்களுள்ளே பிற்காலத்து வழங்காதொழிந்தனவற்றை நீக்கி, முற்காலத்து வழங்காது பிற்காலத்து வழங்கிவரும் இலக்கணங்களைத் தழுவி, உலகவழக்குச் செய்யுள்வழக்குக்களோடு சிறிதும்மாறுபடாமல், உடன்படல் முதலிய எழுவகை மதங்களையுந் தழுவி, குன்றக்கூறல் முதலிய பத்துக்குற்றங்களுஞ் சாராது, சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகுகளோடுங் கூடி, நுதலிப்புகுதல் முதலிய முப்பத்திரண்டு உத்திகளும் விளங்க, சாதாரண மாணக்கர்கட்கும் உபயோகமாகத் தக்கதாய், 'நன்னூல்' என்னும் இந்நூலை இயற்றி அவ்வரசனது சபையில் அரங்கேற்றினர்.

இந்நூலின் பெருமையை 'நன்னூல்' என்னும் இதன்பெயரே இனிது விளக்கும்; அன்றியும், இந்நூல் தோன்றியபின்னர் எந்நூலினுஞ்சிறந்த தொல்காப்பியம்முதலிய தொன்னூற்பயிற்சி குன்ற இதுவே தலையெடுத்து வந்தமையொன்றுமே இதன் மாட்சியை நன்குபுலப்படுத்தும்: மேலும், தொல்காப்பியம் முதலிய நூல்களை ஐயந்திரிபறக் கற்றறிந்தவராகிய சுவாமிநாததேசிகர் தாம் செய்த இலக்கணக்கொத்தில் "முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள், நன்னூ லார்தமக்கு எந்நூ லாரும், இணையோ வென்னுந் துணிவே மன்னுக" என இதன்சிறப்பை எடுத்துக்கூறியிருப்பதுங் காண்க.

'பவணந்திமுனிவரையாதரித்தவனும் கங்கர்குலத்திற் பிறந்தவனுமான அமராபரணசீயகங்கனென்பான், இப்பொழுதைக்கு எஉ௰ - வருடங்கட்குமுன் சிங்காதனமேறிய மூன்றாவது குலோத்துங்கசோழராஜனுக்கு அடங்கிய ஒரு சிற்றரசன்' என்று சிலாசாசனபரிசோதகர் வெளியிட்டிருப்பதுகொண்டு, இந்நூல் இற்றைக்குச் சற்று ஏறக்குறைய எ௦௦-வருடங்களின்முன் இயற்றப்பட்டதென்று அறியலாம். இந்நூலின் உரியியலில் கசு - ஆம் சூத்திரத்தில் "பிங்கல முதலாம், நல்லோ ருரிச்சொலில் நயந்தனர் கொளலே" எனப் பிங்கலந்தையென்னும் நூல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளதனால், ஆதி திவாகரனது புத்திரனான பிங்கலமுனிவன் செய்ததும் மண்டலபுருடன்சூடாமணிநிகண்டு சேந்தன் திவாகரம் என்ற நிகண்டுகட்கு முற்பட்டதுமான பிங்கலந்தையென்னும் நிகண்டுக்கு இந்நூல் பிற்பட்டதென்பது விளங்குகின்றது. ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயத்தில் வழங்குகின்ற திவ்வியப்பிரபந்தங்களின் தனியன்கள் முதலியவற்றிற்கு வியாக்கியானஞ் செய்தருளிய பிள்ளைலோகார்யசீயர், "நெஞ்சுக்கிருள்கடி தீப மடங்கா நெடும்பிறவி, நஞ்சுக்கு நல்ல வமுதந் தமிழ நன்னூற்றுறைகள், அஞ்சுக் கிலக்கிய மாரணசாரம் பரசமயப், பஞ்சுக்கனலின்பொறி பரகாலன் பனுவல்களே" என்ற பெரியதிருமொழிச் சிறப்புப்பாயிரத்தில் 'தமிழநன்னூல்துறைகள் அஞ்சுக்கு' என்பதன்பொருளை விளக்குமிடத்து, 'த்ராவிடசாஸ்த்ரம்,எழுத்து சொல் பொருள் யாப்பு அலங்காரம் என்கிற விலக்ஷணமான பஞ்சலக்ஷணத்தோடே கூடியிறே யிருப்பது: அன்றிக்கே, தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சுலக்ஷணத்தையும் அறுதியிடுவதான நன்னூலென்று ஒரு சாஸ்த்ர முண்டு, அத்தைச் சொல்லிற்றுதல்: ஏவம்விதமான த்ராவிட சாஸ்

த்ரமார்க்க பஞ்சகத்துக்கு' என்று எழுதியிருத்தலால், பிள்ளைலோகார்யசீயர் காலத்தில் இந்த நன்னூல் பிரசித்தமாக இருந்ததென்று அறியலாம்; அவர் காலம் இப்பொழுதைக்கு ஏறக்குறைய நானூற்றைம்பது வருடங்கட்கு முன் பென்று அறியப்படுகின்றது. இன்னும், மேற்கண்ட பெரியதிருமொழிச்சிறப் புப்பாயிரச்செய்யுள் கூரத்தாழ்வான் செய்த தாதலால், அதில் 'நன்னூல்' என் பதற்குப் பிள்ளைலோகார்யசீயர் இங்ஙனம் வியாக்கியானஞ் செய்திருப்பது கொண்டு, கூரத்தாழ்வான் காலத்தே யுள்ளது நன்னூலென்று அறுதியிடவும் இடமுண்டு; கூரத்தாழ்வான்காலம், ஏறத்தாழ எண்ணூறுவருடத்துக்கு முன் பாகும்.

தமிழிலக்கண மைந்தனுள்ளும் பெரும்பயன்படுதல் கருதி, எழுத்திலக்க ணம் சொல்லிலக்கணம் என்ற இரண்டுமே இந்நூலிற் கூறப்பட்டுள்ளன; ஆத லால், இந்நூல் - எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு பகுப்புஉடை யது. இனி, இந்நூற்சிறப்புப்பாயிரத்துள் "இருந்தமிழ்க்கடலுள், அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத், தொகை வகை விரியிற் றருகென......மொழிந் தனனாக......வகுத்தனன்" என்று கூறியிருத்தலால், இந்நூலின் எழுத்துச் சொல் லதிகாரங்கள் போலவே மற்றைப் பொருள் யாப்பு அணியதிகாரங்களும் ஆசிரியராற் செய்யப்பட்டு முற்காலத்தில் இருந்து பிற்காலத்திற் கிடைத்தில வென்று கொள்வாரும் உளர்;* அக்கொள்கையே, மேற்காட்டிய 'தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சு லக்ஷணத்தையும் அறுதியிடுவதான நன்னூ லென்று ஒரு சாஸ்த்ர முண்டு' என்ற பிள்ளைலோகார்யசீயர் வியாக்கியானவாக்கியம் வற் புறுத்தும். இனி, இந்நூல் இடையூற்றின் மிகுதியால் முடிவுபெறாத தென்பர், ஒருசாரார். †எங்ஙனமாயினும், நாடெங்கும் வழங்கிவருவன இந்நூலின் எழுத் ததிகாரமும் சொல்லதிகாரமுமே யென்பது, யாவர்க்குஞ் சம்மதமே. இந்நூ லின் மற்றையதிகாரங்களும் இருந்து கிடைத்து வழங்குமாயின், தமிழிலக்க ணங் கற்போர்க்குப் பொருள் யாப்பு அணிகளின் பயிற்சி குன்றிப்போகாமல் எழுத்துச் சொற் பயிற்சி போலவே நின்று நிறைவுறு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை. ஆகவே, இந்நூல்போலத் தெளிவான இலக்கணநூல் வேறு எது வும் தமிழில் இல்லை யென்பதாயிற்று.

இவர்மதம் ஜைந மென்பது, இவர் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத் திலும் முதலிற் கூறியுள்ள கடவுள்வணக்கங்களாலும், மற்றுஞ் சிலவாற்றா லும் விளங்கும்.

இவர் இந்நூலில் ஆங்காங்கு வடமொழிவழக்கைத் தழுவி இலக்கண மெழுதியுள்ளதனால், இவர்காலத்துக்குமுன்னமே வடசொற்கள் தமிழில் மிகு தியாகப் பயிலத்தொடங்கிவிட்டனவென்பது உணரப்படும்; இந்நூலின் இரண் டாம் இயலுக்கு 'மொழியியல்' எனப் பெயர்குறியாது 'பதவியல்'எனப் பெயர் குறித்ததுங் காண்க. (மொழி - தமிழ்ச்சொல். பதம் - வடசொல்.)

---

* 'அரும்பொருளைந்து' எனக் கூறினமையின், இந்நூலுட் கூறியபொருள் யாப்பணிகளென்னும் மூன்று அதிகாரங்களும் அக்காலத்து உள்ளனபோலும்' என்பது, நன்னூல்விருத்தியுரை.

† 'மங்கலங் கூறியவழியும் நன்னூல் முதலியவற்றின் முடிவு காணாமையின், மங்கலங் கூறாதவழியுந் தொல்காப்பியம் முதலியவற்றின் முடிவுகாண்டலின், உடன்பாட்டினும் எதிர்மறையினும் நியமந் தப்புதலின் எனின்:— நன்று சொன்னாய்; நன்னூல் முதலியவற்றில் இடையூற்றின் மிகுதிப்பாட்டால்முடிவு பேறு இன்று' என்ற தருக்கசங்கிரகவுரையைக் காண்க.

பொதுப்பாயிரம்.

[பாயிரத்தின் பெயர்கள்.]

க. முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

(இ - ள்.) முகவுரை......பாயிரம் - முகவுரை பதிகம் அணிந்துரை நூன் முகம் புறவுரை தந்துரை புனைந்துரை என்பன பாயிரத்தின் பெயர்களாம்; ()

பாயிரம் - வரலாறு; இது, வடமொழியில் உபோத்காத மெனப்படும். முகவுரை யென்பதற்கு-நூலுக்கு முன் சொல்லப்படுவ தென்றும், பதிகமென் பதற்கு - ஐந்துபொதுவும் பதினொருசிறப்பு மாகிய பலவகைப்பொருள்களையுந் *தொகுத்துச் சொல்வ தென்றும், அணிந்துரை புனைந்துரையென்பவற்றிற்கு- நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச்சொல்வதென்றும், நூன் முக மென்பதற்கு - நூலுக்கு முகம்போல முற்பட்டிருப்பதென்றும், புறவுரை யென்பதற்கு - நூலிற்சொல்லிய பொரு ளல்லாதவைகளை நூலின்புறத்திலே சொல்வ தென்றும், தந்துரை யென்பதற்கு-நூலிற்சொல்லிய பொருளல்லாத வைகளைத் தந்துசொல்வ தென்றும் பொருள். (க)

[பாயிரத்தின் வகை - உ.]

உ. பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே.

(இ - ள்.) பாயிரம் - (மேற்சொன்ன) பாயிரமானது,-- பொது-பொதுப் பாயிரமும், சிறப்பு - சிறப்புப்பாயிரமும், என - என்று, இரு பாற்று - இரண்டு வகையை யுடையது ; (எ - று.)—ஏ - ஈற்றசை.

தன்னால் உரைக்கப்படும் ஒரு நூலுக்குமாத்திரமே உரியதன்றி எல்லா நூன்முகத்தும் உரைக்கத்தக்கது பொதுப்பாயிர மெனவும், தன்னால் உரைக் கப்படும் ஒரு நூலுக்கே இன்றியமையாமல் உரியதாய் அந்நூன்முகத்திலே உரைக்கப்படுவது சிறப்புப்பாயிர மெனவும் அறிக. (உ)

முதலாவது

பொதுப்பாயிரத்தின் இலக்கணம்.

[பொதுப்பாயிரத்தின் இலக்கணம் இன்ன தென்பது.]

ங. நூலே நுவல்வோன் நுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்
எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்.

(இ - ள்.) நூலே - நூலினது வரலாறும், நுவல்வோன் - (நூலைக்) கற் பிக்கும் ஆசிரியனது வரலாறும், நுவலும் திறனே-(ஆசிரியன் மாணாக்கனுக்கு நூலைப்) பாடஞ்சொல்லுதலின் வரலாறும், கொள்வோன் - மாணாக்கனது வர லாறும், கோடல் கூற்று - (மாணாக்கன்) பாடங்கேட்டலின் வரலாறும், ஆம் - ஆகிய, இவை ஐந்தும் - இவ்வைந்து பொருள்களும், எல்லாநூற்கும் - எல்லா நூல்கட்கும், (பொதுவா மாதலால்), பொதுப்பாயிரம் - (இவற்றைவிளங்கச் சொல்வது) பொதுப்பாயிரத்தின் இலக்கணமாம்; (எ - று.)

---

* "பதிகச் இளவி பல்வகைப் பொருளைத்
தொகுதி யாகச் சொல்லுதல் தானே."

விரிந்துந் தொக்கும் வந்த ஏகாரங்கள் - எண்ணுப்பொருளன; இதனைப் பிறவிடங்கட்குங் கொள்க. திறன், கூற்று என்றது - வரலாற்றை; இதனைப் பிறவற்றோடுங் கூட்டுக. (ரு)

க. நூலின் வரலாறு.

[நூல் இன்ன தென்பது.]

௪. நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோடு
எண்ணான் குத்தியி னோத்துப் படலம்
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

(இ - ள்.) (மேற்கூறிய ஐந்தனுள்), நூலின் இயல்பு-நூலின் வரலாற்றை, நுவலின் - சொல்லப்புகுந்தால்,—ஓர் இரு பாயிரம் தோற்றி - (கீழ்க்கூறிய பொதுவுஞ் சிறப்பு மாகிய) இருவகைப் பாயிரங்களையும் முன்னேயுடையதாய், மும்மையின் ஒன்று ஆய் - மூவகைநூல்களுள் ஒன்றாகி, நால் பொருள் பயத்தோடு-நான்குபுருஷார்த்தங்களாகிய பிரயோசனங்களுடன், எழு மதம் தழுவி- ஏழுவகை மதங்களையும் தழுவி, ஐ இரு குற்றமும் அகற்றி - பத்துவகைக்குற்றங்களையும் நீக்கி, அ மாட்சியோடு - அத்தனை [பத்துவகை] அழகுகளுடனே கூடி, எண் நான்கு உத்தியின் - முப்பத்திரண்டுவகை உத்திகளைக் கொண்டு, ஒத்து படலம் என்னும் உறுப்பினின் - ஒத்தும் படலமும் என்கின்ற அவயவங்களுடனே, சூத்திரம் - சூத்திரமும், காண்டிகை - காண்டிகையுரையும், விருத்தி - விருத்தியுரையும், ஆகும்-ஆகுகின்ற, விகற்பம் நடை - வேறுபட்ட நடைகளை, பெறும் - பெற்றுவரும்; (எ - று.)

'மும்மை' முதலியவற்றை, மேல்வருஞ்சூத்திரங்களிற் காண்க. 'அம்மாட்சி' என்பதில், அகரம் - ஐயிரண்டைச் சுட்டிற்று. ஒத்து, படலம்=இயல், அதிகாரம். ஒத்து - சிற்றுறுப்பு. படலம் - பேருறுப்பு. (௪)

[நூலின் வகை - ரு.]

ரு. * முதல்வழி சார்பென நூல்மூன் றாகும்.

(இ - ள்.) முதல் - முதல்நூலும், வழி - வழிநூலும், சார்பு - சார்புநூலும், என - என்று, நூல்—, மூன்று ஆகும் - மூன்றுவகையாகும்; (எ - று.)

இச்சூத்திரம், முன்னோர்செய்ததை மேற்கோளாகக்கொண்டது. (௫)

[முதனூல்.]

௬. அவற்றுள்,
§ வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

* இறையனாரகப்பொருளுரை மேற்கோள்.
§ தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மரபியல் - ௯௪.

(இ - ள்.) அவற்றுள் - அந்த மூவகைநூல்களுள்,—வினையின் நீங்கி - (இயல்பாகவே நல்வினை தீவினை யென்னும்) இருவினையினின்றும் நீங்கி, விளங்கிய அறிவின் - (தானே இயல்பில்) விளங்கின அறிவையுடைய, முனைவன் - கடவுள், கண்டது - செய்தது, முதல்நூல் ஆகும்—; (எ - று.)

'முனைவன் கண்டது முதனூல்' என்றாராயினும், அம்முனைவனை வழிபட்டுத் தலைவராயினார் செய்ததும் முதனூ லெனப்படு மென அறிக: வருஞ் சூத்திரத்தில் 'முன்னோர் நூலின்' எனப் பன்மையாக் கூறுவதும் இதுபற்றி யெனக் காண்க; அவை - அகத்தியம் முதலியன.

இச்சூத்திரம், தொல்காப்பியத்தினின்று மேற்கோளாக எடுத்துக்கொள்ளப்பட்டது. (௬)

[வழிநூல்.]

எ. * முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
யழியா மரபினது வழிநூ லாகும்.

(இ - ள்.) முன்னோர் நூலின் - கடவுளும் அவனருள்வழிப்பட்டோருஞ் செய்த நூல்களினது, முடிபு - பொருள்முடிபு, ஒருங்கு ஒத்து - முழுவதும் ஒத்து [வேறுபடாமலிருக்க],—பின்னோன் - வழிநூல் செய்யப்புகுந்தவன், வேண்டும் விகற்பம் கூறி - (முதனூல் இருக்கவுந் தான் வேறே வழிநூல்செய்தற்குக் காரணமாக) இன்றியமையாத சில வேறுபாடுகளையும் (அதனோடுகூட்டிச்) சொல்லி,—அழியா மரபினது - (அவ்வேறுபாடுகள் அறிவுடையார் பலர்க்கும் ஒத்திருத்தலால்) அழியாமல் (உலகத்தில்) நிலைநிற்கின்ற தன்மையை யுடையது,—வழிநூல் ஆகும்—; (எ - று.)

எனவே, முதனூலைப் பெரும்பான்மை ஒத்துச் சிறுபான்மை வேறுபட்டிருப்பது வழிநூ லென்றதாயிற்று. பின்னோன் வேண்டும் விகற்பங் கூறலாவது - பழைய இலக்கணங்களாகிப் பிற்காலத்துவழங்காதவை உளவாயின் அவற்றை 'இறந்ததுவிலக்கல்' என்னும் உத்தியால் விலக்கியும், புதிய இலக்கணங்களாகிப் பிற்காலத்து வழங்கிவருபவை உளவாயின் அவற்றை 'எதிரது போற்றல்' என்னும் உத்தியால் தழுவியுங் கூறுதல் முதலியன. வழிநூல் - தொல்காப்பியம் முதலியன. இவ்வழிநூல்களெல்லாம், ஒருவனுக்கு மகனானவன் தன்மகனுக்குத் தந்தையாவதுபோல, முதல்நூலைநோக்க வழிநூலாயும் சார்புநூலைநோக்க முதனூலாயும் நிற்கு மென அறிக.

இச்சூத்திரமும், அடுத்தசூத்திரமும் - முன்னோர்செய்தவற்றை மேற்கோளாகக் கொண்டன. (எ)

* முதனூல் வழிநூல் என்னும் இரண்டே யொழியச் சார்புநூ லென ஒன்று தனியேகொள்ளுதல், ஆசிரியர் தொல்காப்பியனார்க்கு உடன்பாடன்று; "மரபுநிலை திரியா மாட்சிய வாகி, யுரைபடு நூல்தா மிருவகை யியல, முதலும் வழியு மென நுதலிய நெறியின" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தைக் காண்க; அங்ஙனங்கொள்ளாமைக்குக் காரணம், அடியிற் காட்டப்படுகிற நச்சினார்க்கினியருரைவாக்கியத்தால் நன்குவிளங்கும்:—'நுதலியநெறி' என்றது என்னை யெனின்,—இன்னதே முதனூல் இன்னதே வழிநூல் என்பது ஓர்யாப்புறவு

[சார்புநூல்] *

அ. † இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்.

(இ - ள்.) இருவர் நூற்கும் - (கீழ்க்கூறிய) இருதிறத்தார் (செய்த முதனூல் வழிநூல் என்னும் இருவகை) நூல்கட்கும், ஒரு சிறை தொடங்கி - (பொருள்முடிபு) ஒருபுடை [சிறுபான்மை] ஒத்து, வேறு திரிபு உடையது - மற்றவைகளெல்லாம் ஒவ்வாமையை யுடையது,—புடைநூல் ஆகும் - சார்பு நூலாம்; (எ - று.)

எனவே, முதனூல்வழிநூல்கட்குச் சிறுபான்மை ஒத்துப் பெரும்பான்மை வேறுபட்டுள்ளது சார்புநூ லென்றதாயிற்று. இந்நன்னூல் - தொல்காப்பியத்தைநோக்க வழிநூலும், அகத்தியத்தை நோக்கச் சார்புநூலுமாம். (அ)

[வழிநூல் சார்புநூல்கட்குச் சிறப்புவிதி.]

கூ. முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும்—முன்னோரின்
வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்குங்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

(இ - ள்.) முன்னோர் மொழி பொருளே அன்றி - முதனூல்செய்தவர் சொன்ன பொருள்களையே பெரும்பாலும் ஒத்திருக்கவுஞ் சிறுபான்மை ஒத்திருக்கவும் எடுத்துச்சொல்லுவது மல்லாமல், அவர் மொழியும்-அவர்களுடைய சொற்களையும், பொன்னேபோல் போற்றுவம்-பொன்னைப்போலவே விரும்பி வைத்துக்கொள்ளக்கடவோம், என்பதற்கும் - என்னுங் கொள்கைக்கு அடையாளமாகவும்,—முன்னோரின் வேறு நூல் செய்தும் எனும் - முன்னோர்செய்த

இல்லை, ஒருநூல்பற்றி ஒருவன் வழிநூல்செய்தவழி அவ்வழிநூல்பற்றிப் பின் ஒருகாலத்து ஒரு நூல் பிறந்ததாயின் அது வழிநூலெனப்பட்டு முன்னைவழி நூலே முதனூலெனப்படு மென்றற்கு என்பது. இதனைச் சார்புநூ லென்னுமோ வெனின், வழிநூலாஞ்சார்புநூலு மாகலின் அங்ஙனங்கூறுனுயினுன். எற்றுக்கு? சார்புநூலினைப்பற்றி ஒருநூல்பிறந்தவழிச் சார்பின்சார்பெனக் கூற வேண்டுவதாகலானும், அதனைச்சார்ந்து தோன்றின் சார்பென்னுஞ்சொல்லை மும்முறைசொல்லியும் அதன்பின் தோன்றிய நூற்கு நான்முறை சொல்லியும் எண்ணிகந்து ஒடுதலானும் என்பது. மற்று, இரண்டாம் எண்ணும்முறைமைக் கண்நின்ற நூலினையே வழிநூலெனக்கொண்டு, மூன்றுவதுதோன்றிய நூலே சார்புநூலாகவும் அதன்பின்னர் நூல்செய்யப்பெருரெனவுங் கொள்ளாமோவெனின்,'முதனூலிற் கிடந்தபொருளை ஓர்உபகாரப்பட வழிநூல்செய்த ஆசிரியன் செய்தக்கால் சார்புநூலெனப் பின்னர் ஓர் ஆசிரியன் நூல்செய்ததனுற் பயந்ததென்னையென்க' என்றூர்க்கு, 'வழிநூலும் பிற்காலத்து அரிதாமாயின் அதனையும் எளிதாகச்செய்தலன்றே இதனுற்பயந்தது' எனின், 'அதுதானும் பின்னெருகாலத்து அரிதாமாயின் அதனையும் எளிதாகச்செய்வானல்லனே?' என்று மறுக்க. இவ்வாராய்ச்சி வேண்டா வென்றற் கன்றே இவ்விருவகையானும் வருதலே மர பென்பா னுயிற்று என்று ஒழிக.'

† இறையனூரகப்பொருளுரை மேற்கோள்.

நூலையே சொல்லாமல் அந்நூலினின்றும் வழிநூல் சார்புநூல் என வேறுநூலைச் செய்தோமாயினும், மேற்கோள் இல் எனபதற்கும் - ('இந்நூலுள்) ஆசிரியவசனம் இல்லை' என்று சொல்லுங் குறை ஒழிவதற்காகவும்,—பழஞ் சூத்திரத்தின் கோள் கூறு - (அவர்சொல்லிய) பழஞ்சூத்திரங்களையும் ஒவ்வோரிடத்தில் எடுத்துச்சொல்லக்கடவாய்; (எ - று.)

எனவே, வழிநூல் சார்புநூல்களில் முன்னோர்கூறிய செய்யுள் ஒரோவிடத்தில் இருத்தலும் இலக்கணமாயிற்று. தொல்காப்பியத்திலிருந்தும் பிறநூல்களிலிருந்தும் சிற்சில சூத்திரங்கள் இந்நூலில் ஆங்காங்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருத்தல் காண்க.

எனும் - எனினு மென்பதன் விகாரம். ஆசிரியவசனம், மேற்கோள், பழஞ்சூத்திரக்கோள் என்பன - ஒருபொருட்சொற்கள்.

முன்னே 'போற்றுவம்,' 'செய்தும்'என உளப்பாட்டுத்தன்மைப்பன்மை முற்றுக்களாகவும், பின்னே 'கூறு' என முன்னிலையேவலொருமைமுற்றாகவுங் கூறியதனால், இச்சூத்திரம், பலர்கூடிப்பேசிப் பின்பு ஒருவனை நோக்கி முடிவுசொன்னதாகச் செய்யப்பட்ட தென அறிக. (கூ)

[நாற்பொருட்பயன்.]

க0. அறம்பொ ருளின்பம்வீ டடைதல்நூற் பயனே.

(இ - ள்.) அறம் - தருமமும், பொருள் - அர்த்தமும், இன்பம் - காமமும், வீடு - மோக்ஷமும், (ஆகிய இந்நான்கு புருஷார்த்தங்களையும்), அடைதல் - அடைவது,—நூல் பயன் - நூலால் அடையும் பிரயோசனமாம்; (எ-று.)

[எழு மதம்.]

கக. * எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்டல் ஏனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே.

(இ - ள்.) எழு வகை மதம் - எழுவகைமதங்களாவன:—உடன்படல் - (பிறர்மதத்திற்குத் தான்) உடன்படுதலும், மறுத்தல் - (பிறர்மதத்தை) மறுத்தலும், பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவே - பிறர்மதத்தை ஒருவாறு அங்கீகரித்து (ப் பின்பு) மறுத்துவிடுதலும், தான் நாட்டி தனாது நிறுப்பே - தானே ஒருபொருளை எடுத்துத்தாபித்து அதனை (இடந்தோறும்) நிலைநிறுத்துதலும், இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே - ஒன்றற்கு ஒன்று விரோதமாக இருவ

---

* இதுமுதல் நான்கு சூத்திரங்களிலுள்ள சொற்றொடர்களை யெழுதி, 'இவ்வாறுசொன்னார் பாடலனாரென்னும்ஆசிரிய ரெனக் கொள்க' என்பர் யாப்பருங்கலக்காரிகையுரையாசிரியர்.

ராலே கொள்ளப்பட்ட இரண்டு விஷயங்களுள் (ஒன்றைநீக்கி) மற்றொன்றைத் துணிந்து எடுத்துக்கொள்ளுதலும், பிறர் நூல் குற்றம் காட்டல் - பிறர் செய்த நூல்களிலுள்ள குற்றங்களை எடுத்துக்காட்டுதலும், ஏனை - மற்றும், பிறிதொடு படான் தன் மதம் கொளல் - பிறர்மதத்தோடு கலவாதவனுய்த் தன் மதத்தையே தான் கொள்ளுதலுமாம்; (எ - று.)

மதம் - கொள்கை. இம்மதங்கட்கும், மேற்சொல்லப்படும் அழகு உத்தியென்பவற்றிற்கும் உதாரணம், இந்நூலுட் பின்வருமிடங்களிற் பெரும்பாலும் காட்டப்படும். (கக)

[பத்துச் குற்றம்.]

கஉ. குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்றம் நூற்கே.

(இ - ள்.) குன்ற கூறல் - (குறித்தபொருளை விளக்குதற்கு வேண்டுஞ் சொற்களிற்) குறைவுபடச் சொல்லுதலும், மிகைபட கூறல் - (குறித்த பொருளை விளக்குதற்கு வேண்டுஞ் சொற்களினும்) அதிகப்படச் சொல்லுதலும், *கூறியது கூறல் - (முன் தான் ஒருகால்) சொன்ன தொரு பொருளையே (பின்னும்) காரணமின்றி [அவசியமில்லாமற்] சொல்லுதலும், மாறுகொள கூறல் - (முன்சொன்னதற்குப் பின்சொல்வது) விரோதப்படச் சொல்லுதலும், வழூஉ சொல் புணர்த்தல் - குற்றமுடையசொற்களைச் சேர்த்துவைத்தலும், மயங்க வைத்தல்-(இதற்குப்பொருள் இன்னதென்று துணியக்கூடாமல் இதுவோ அதுவோ என்று) மயங்கும்படி வைத்தலும், வெற்றென தொடுத்தல்-(பொருள் என்னுங் கருக்கொள்ளாது) வெளிறுபடச்சொற்களைச்சேர்த்து வைத்தலும், மற்று ஒன்று விரித்தல் - (சொல்லத்தொடங்கிய பொருளைச் சுருக்கி) மற்றொருபொருளை (இடையிலே) விரித்துச் சொல்லுதலும், சென்று தேய்ந்து இறுதல் - செல்லச்செல்ல (ச் சொற்செறிவு பொருட்பொலிவுகள்) தேய்ந்து முடியச் சொல்லுதலும், நின்று பயன் இன்மை - (சொற்கள்) இருந்தும் (அவற்றுக்கு) ஒரு பிரயோசனமும் இல்லாதொழியச் சொல்லுதலும், என்ற இவை—,—நூற்கு - நூலுக்கு, ஈர் ஐங்குற்றம் - பத்துக் குற்றங்களாம்.

என்றிவை - விகாரம். வெற்றெனத்தொடுத்தல் - வியங்கியார்த்தப்பிரதானமாக வல்லாமற் கூறுதல்; (வியங்கியார்த்தம் - குறிப்புப்பொருள்.)

---

*யாதாயினும் ஒருநிமித்தத்தால் ஒன்றனைமுற்கூறி வேறொருநிமித்தத்தால் அதனையே பின்னுங் கூறுதல், அநுவாதமென்னுங் குணமாமென்க.

வடநூலார் கூறுகிற * அவ்யாப்தி, அதிவ்யாப்தி, அஸம்பவம் என்னுங் குற்றங்களும் இவற்றுள்ளே அடங்குமாறு அறிந்து அடக்கிக்கொள்க. (கஉ)

[பத்து அழகு.]

கங. சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலக மலையாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே.

(இ - ள்.) சுருங்க சொல்லல் - (சொற்கள் வீணாக விரியாமற்) சுருங்கி நிற்கச் சொல்லுதலும், விளங்க வைத்தல் - (அவ்வாறு சொல்லினும் யாவர்க்கும் பொருளைச் சந்தேகத்துக்கு இடமாகாமல்) விளங்கித்தோன்ற வைத்தலும், நவின்றோர்க்கு இனிமை - படிப்பவர்க்கு இன்பத்தைத் தருதலும், நல்மொழி புணர்த்தல் - நல்ல சொற்களைச் சேர்த்துவைத்தலும், ஓசை உடைமை - சந்தவின்பமுடையதாதலும், ஆழம் உடைத்து ஆதல் - (பார்க்கப்பார்க்க இவ்வளவென்று வரையறுக்கப்படாமல்) ஆழ்ந்தகருத்துக்களை யுடையதாதலும், முறையின் வைப்பே - (சொல் பொருள் இயல் அதிகாரம் முதலியவற்றை யாதாயினும் ஓர் ஏற்ற) முறைப்படி (வரிசைப்பட) வைத்தலும், உலகம் மலையாமை - உயர்ந்தோர்வழக்கத்தோடு விரோதப்படாமற் சொல்லுதலும், விழுமியது பயத்தல் - சிறந்தபொருளைத் தருதலும், விளங்கு உதாரணத்தது ஆகுதல் - (எளிதில்) விளங்கத்தக்க உதாரணங்களை யுடையதாதலும், (என்னும் இவை), நூலிற்கு அழகு எனும் பத்து - நூலுக்கு அழகென்று சொல்லப்படும் பத்தாகும்.

இங்கு இரண்டு சூத்திரம் பரீக்ஷைக்குப் பாடமில்லை.

[ஒத்து.]

கசஎ. நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை யொருவழி வைப்பது
ஒத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

(இ - ள்.) நேர் இனம் மணியை - ஒருசாதியாயுள்ள இரத்தினங்களை, நிரல் பட - வரிசையாக, வைத்து ஆங்கு - பதித்துவைத்தாற்போல, ஓர் இனம் பொருளை - ஒருசாதியாயுள்ள பொருள்களை, ஒரு வழி வைப்பது - ஒரு வழிப்பட வைத்துச்சொல்வது, ஒத்து - இயலென்னும் உறுப்பாம், என - என்று, உயர் மொழி புலவர் - சிறந்த நூல்களை யறிந்த புலவர்கள், மொழிப - சொல்வார்கள்; (எ - று.)—மொழி - நூலுக்குக் கருவியாகுபெயர்.

* அவ்யாப்தி - இலக்கியத்தின் ஏகதேசத்தில் இலக்கணமில்லாமை; 'பசுவிற்கு வெண்ணிறமுண்டு' என்றல் போல்வன. அதிவ்யாப்தி - இலக்கியமல்லாததிலும் இலக்கணமிருப்பது; 'பசுவுக்குக் கொம்பு உண்டு' என்றல் போல்வன. அஸம்பவம் - இலக்கியமுழுவதிலும் இலக்கணமில்லாமை; 'பசுவுக்கு ஒற்றைக்குளம்பு உண்டு' என்றல் போல்வன.

நேர்தல் - ஒன்றுபடுதல். 'நேரினம்' எனவே, ஒருசாதியாயினும் தம்மில் ஒத்தனவே கூறல்வேண்டு மென்பதாம். 'உயர்மொழிப்புலவர்' என்றது, அங்ஙனம் நூல்செய்தல் உயர்ந்தோர்கட னென்றவாறு. ஒத்தெனினும், இய லெனினும் ஒக்கும்.

இதுவும், வருஞ்சூத்திரமும் - * தொல்காப்பியத்தினின்று இவ்வாசிரிய ரால் எடுத்துக்கொள்ளப்பட்டன. (கசு)

[படலம்.]

கஎ. ஒருநெறி யின்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்.

(இ - ள்.) ஒரு நெறி இன்றி விரவிய பொருளால் - ஒருவழிப்படாமற் கலந்த [பலவேறுவகைப்பட்ட] பொருள்களோடு பொருந்தி, பொதுமொழி தொடரின் - பொதுவகையாகக்கூறினல், அது—, படலம் ஆகும் - படல மென்னும் உறுப்பாம்; (எ - று.)

படலமெனினும் அதிகாரமெனினும் ஒக்கும். † இயலென்பது ஒருசாதிப் பொருள்கொண்டது, படலமென்பது - பலசாதிப்பொருள்கொண்டது என அறிக. இயலென்பதற்கு உதாரணம் - இந்நூலில் எழுத்தியலில் எழுத்திலக்க ணமே வருதலும், பதவியலில் பதவிலக்கணமே வருதலும், புணரியலில் புணர் ச்சியிலக்கணமே வருதலும்; அதிகாரமென்பதற்கு உதாரணம் - எழுத்ததிகாரத் தில் இவ்விலக்கணங்களெல்லாம் பொருந்தி வருதலுங் காண்க. (கஎ)

[சூத்திரம்.]

கஅ. சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்.

(இ - ள்.) ஆடியின்-(பெரியஉருவங்களின் பிரதிபிம்பத்தைத்தன்னுள்ளே செவ்வையாக அடக்கி இனிதாகக்காட்டுகின்ற சிறிய) கண்ணாடிபோல, சில் வகை எழுத்தில் - சிலவகை யெழுத்துக்களாலாகிய சொற்களில், பல்வகை பொருளை - பலவகைப்பட்டு அகன்ற பொருள்களை, செவ்வன் - செவ்வையாக, செறித்து - அடக்கி, இனிது விளக்கி - (நோக்குவார்க்கு) இனியதாக (அப் பொருளை) விளங்கச்செய்து,—திட்பம்-(குற்றமில்லாமையாற்) சொல்வலிமை பொருள்வலிமைகளும், நுட்பம் - (ஆழமுடைமையாற்) பொருள்நுணுக்கங் களும், சிறந்தன - சிறந்துவருவன,—சூத்திரம் - சூத்திரங்களாம்; (எ - று.)

[சூத்திரநிலை.]

கசு. ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத் திரநிலை.

---

* தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல் - களக, ளஉ.
† இத்தன்மை மாறியும் வரும்; திருக்குறள்முதலியவற்றிற் காண்க.

(இ - ள்.) சூத்திரம் நிலை - சூத்திரங்கள் ஒன்றேடொன்று பொருளால் தொடர்ந்துநிற்கும் நிலைகள்,—ஆறு ஒழுக்கு - (இடையறுமல் ஒருமுகமாகவே செல்லுகின்ற) ஆற்றுநீரோட்டத்தையும், அரிமா நோக்கம் - (முன்னும் பின்னும் பார்க்கின்ற) சிங்கத்தின் பார்வையையும், தவளை பாய்த்து - (நடுவேசிறிது இடம்விட்டுக் குதிக்கின்ற) தவளையின் குதிப்பையும், பருந்தின் வீழ்வு-(நெடுந் தூரத்திலிருந்து ஒன்றை வெளவிப்போதற்குத் தலைகீழாக விழுகின்ற) பருந்தின் வீழ்ச்சியையும், அன்ன - போல்வனவாம்; (எ - று.) (௧௯)

[சூத்திரவகை.]

௨௦. பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

(இ - ள்.) சூத்திரம் - சூத்திரங்கள்,—பிண்டம் - (பலதிறப்பொருள்களையும் ஒருங்குதிரட்டிக்கூறும்) பிண்டசூத்திரமும், தொகை - (அப்பலதிறப்பொருள்களையும் வேறுவேருகத் தொகுத்துச்சொல்லுந்) தொகைச்சூத்திரமும், வகை - (அவ்வாறு தொகுத்துச்சொல்லப்பட்டவற்றை வேறுவேருக வகுத்துச் சொல்லும்) வகைச்சூத்திரமும், குறி - (இவைஉயிர் இவைமெய் என்பது முதலாக அறியவருங்) குறிச்சூத்திரமும், செய்கை-(புணர்ச்சி முடிபு முதலியவற்றைச் செய்கின்ற) செய்கைச்சூத்திரமும், கொண்டு இயல் புறன் அடை - (இவற்றையெல்லாம்) ஏற்றுக்கொண்டு (இவற்றின்) புறத்து அடுத்துவரும் புறனடைச்சூத்திரமும் ஆகிய,கூற்றன -(ஆறு) பிரிவையுடையனவாம்;(எ-று.)

இந்நூலில், பிண்டசூத்திரம்-"நன்கியம்புவ னெழுத்தே" என்ருற் போல்வன. தொகைச்சூத்திரம் - "பன்னிருபாற்றதுவே" என்ருற் போல்வன. வகைச்சூத்திரம் - "மொழிமுதற்காரணமாம்" என்ருற்போல்வன. குறிச்சூத்திரம் – "அம்முதலீராருவி" என்ருற்போல்வன. செய்கைச்சூத்திரம்-"ணன வல்லினம்வரட்டறவும்" என்ருற்போல்வன. புறனடைச்சூத்திரம் - "இடையுரி வடசொலின்" என்ருற்போல்வன. (௨௦)

[உரையின் போதுவிலக்கணம்.]

௨௧. பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினுவிடை விசேடம்
விரிவதி காரந் துணிவு பயனேடு
ஆசிரிய வசனமென் றீரே ழுரையே.

(இ - ள்.) பாடம் - மூலபாடமெடுத்துரைத்தலும், கருத்து - (தாற்பரியத்தைச் சுருக்கமாக எழுதுங்) கருத்துரையும், சொல் வகை - பதங்களைப் பிரித்துரைத்தலும், சொல் பொருள் - சொல்லுக்குப் பொருளெழுதும் பதவுரையும், தொகுத்துரை-(பதத்தைத் தனித்தனி எடுத்துப் பொருளெழுதாமல்) தொகுப்பாங் எழுதுகின்ற பொழிப்புரையும், உதாரணம்-உதாரணமெடுத்துரைத்தலும், வினு - (தானே) வினுவிக்கொள்ளுதலும், விடை-(தானே அவ்வினுக்களுக்கு) உத்தரமுரைத்தலும், விசேடம் - சூத்திரத்து உள்ள பொருளன்றியும் அவ்வி

டத்துக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்துரைத்தலும், விரிவு - (வேண்டுவனவற்றையெல்லாம்) விரித்துரைத்தலும், அதிகாரம் - அதிகாரத்தோடு பொருந்தக் காட்டி யுரைத்தலும், துணிவு - (சந்தேகப்பட நின்றவிடத்து இதற்கு இதுவே பொருளெனத்) துணிந்துரைத்தலும், பயனோடு - (இவ்வாறுசொல்லியதனால் வந்த) பயன் இதுவென்று உரைத்தலும், ஆசிரியவசனம் - ஆன்றோர்நூல்களினின்று மேற்கோள்காட்டி யுரைத்தலும், என்று—, உரை - (நூலுக்கு) உரை, ஈர் ஏழ் - பதினான்குவகையாகச் செய்யப்படும்; (எ-று.)

சொல்வகை என்பதற்கு - சொற்களுக்கு இலக்கணம்முதலியன உரைத்தலென்பாரு முளர். (உக)

[காண்டிகையுரை.]

உஉ. கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானுஞ்
சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை.

(இ - ள்.) (மேற்கூறிய பதினான்கனுள்), கருத்து - கருத்துரையும், பதப்பொருள் - பதவுரையும், காட்டு - உதாரணமும் ஆகிய, மூன்றினும் - மூன்று வகைகளாலும்,—அவற்றொடு - அம்மூன்றுடனே, வினா விடை ஆக்கலானும் - வினாவும் விடையும் ஆகிய இரண்டுவகைகளையுங் கூட்டிச்சொல்லுதலாலும்,— சூத்திரத்துள் பொருள் - சூத்திரத்திலுள்ள பொருளை, தோற்றுவ - விளக்கியுரைப்பன,—காண்டிகை - காண்டிகையுரைகளாம்; (எ - று.)

'மூன்றினும்' எனப்பிரித்துக்கூறியதனால், வினாவிடையின்றியுங் காண்டிகையுரை வழங்கு மென்க. (உஉ)

[விருத்தியுரை.]

உங. சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி.

(இ - ள்.) சூத்திரத்துள் பொருள் அன்றியும் - சூத்திரத்தில் உள்ளபொருள்மாத்திரமே யல்லாமலும், ஆண்டைக்கு - அவ்விடத்துக்கு, இன்றி அமையா - இல்லாமல்முடியாத [அவசியமான], யாவையும்-எல்லாப்பொருள்களும், விளங்க - விளங்கும்படி, தன் உரையானும் - தான்உரைக்கும் உரையாலும், பிற நூலானும் - ஆசிரியவசனங்களாலும், ஐங் காண்டிகை உறுப்பொடு-(மேற்கூறிய) காண்டிகையுறுப்பு ஐந்தினாலும், ஐயம் அகல-சந்தேகந் தீர, மெய்யினை-மெய்யான பொருளை, எஞ்சாது - குறைவுபடாமல் [விரித்து], இசைப்பது - உரைப்பது,—விருத்தி - விருத்தியுரையாம்; (எ-று.)

மேற்கூறிய பதினான்கு வகையுங் கொண்டது விருத்தியுரை யென்க.

[நூல் என்னும் பெயர்க்குக் காரணம். *]

௨௪. பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு.

(இ - ள்.) தன் சொல் பஞ்சி ஆ - தன்சொற்களே பஞ்சு ஆகவும், பனுவல் இழை ஆக - செய்யுளே இழையாகவும், செம் சொல் புலவனே சேயிழை ஆ - செவ்வையாகிய சொற்களை யறிந்த புலவனே நூற்கின்ற பெண்ணாகவும், எஞ்சாத வாயே கை ஆக - குறைவில்லாத வாயே கையாகவும், மதியே கதிர் ஆக - அறிவே நூற்குங்கதிராகவும், மை இலா நூல்-குற்றமில்லாத கல்விநூல், முடியும் ஆறு - முடியுந்தன்மை, (இது); (எ - று.)

ஆதலால், நூலென்றது - உவமவாகுபெயராம். பஞ்சுகொண்டு இழைத்து நூற்கப்படும் நூல் போலச் சொற்கொண்டு தொடுத்து அமைக்கப்படுவது நூலென்க. பஞ்சி=பஞ்சு. பஞ்சு இதன் என்றும் பிரிக்கலாம். (௨௪)

[இதுவும் அது.]

௨௫. உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

(இ - ள்.) புரத்தின் உரத்தின் வளம் பெருக்கி - உடம்பினுள் உள்ள அறிவின் வளத்தை வளர்வித்து,—உள்ளிய தீமை வளம் முருக்கி - நினைக்கப்பட்ட தீமையாகிய அறியாமையின் மிகுதியை ஒழித்து,—பொல்லா மரத்தின் கனம் கோட்டம் தீர்க்கும் நூல் அஃதே போல் - கெட்ட மரத்தினது மிக்க கோணலைப் போக்குகின்ற எற்றுநூலின் அம்மாட்சிமை போலவே, நூல் மாண்பு - கல்விநூலின் மாட்சிமை, மாந்தர் மனம் கோட்டம் தீர்க்கும் - மனிதரது மனத்தின் கோணலைப் போக்கும்; (எ - று.)

இதனாலும், நூல் - உவமவாகுபெயராம். மரம் முதலியவற்றின் கோணலைத் தீர்த்துச் செப்பஞ்செய்யும் எற்றுநூல்போல மனத்தின் கோணலைத் தீர்த்துச் செவ்வைசெய்வது நூலென்க. (௨௫)

---

* 'இனி, நூலென்ற சொற்குப் பொருள் யாதோவெனின்.—நூல்போறலின், நூலென்ப; பாவைபோல்வாளைப் பாவையென்றது போல. என்னை? நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவல்மகடூஉத் தனது செயற்கை நலந்தோன்ற ஓரிழைப்படுத்தலாம், உலகத்து நூல்நூற்றலென்பது; அவ்வாறே, சுகிர்ந்துபரந்த சொற்பரவைகளாற் பெரும்புலவன் தனது உணர்வுமாட்சியின் பிண்டம் படலம் ஒத்துச் சூத்திரமென்னும் யாப்புநடைபடக் கோத்து நூற்கப்படலி னென்பது. இனி, ஒருசாரார், நூல்போலச் செப்பஞ்செய்தலின் நூலென்ப. இனி, தந்திர மென்னும் வடமொழிப்பொருளை நூலென வழங்குதல் தமிழ்வழக் கெனக் கொள்க. இது, நூலென்ற சொற்குப் பொருள்' என்ற இறையனாரகப்பொருளுரை அறியத்தக்கது. இனி, நூல் என்ற பெயரை 'ஸூத்ரம்' என்னும் வடமொழியின் பொருளமைந்த தென்பாரும் உளர்.

௨. ஆசிரியனது வரலாறு.

[நல்லாசிரியரிலக்கணம்.]

௨௬. குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே.

(இ - ள்.) குலன் - உயர்குடிப்பிறப்பும், அருள்-ஜீவகாருண்யமும், தெய்வம் கொள்கை - கடவுள்வழிபாடும், மேன்மை-பெருந்தகைமையும், கலை பயில் தெளிவு - (பல) நூல்களிற் பழகிய தேர்ச்சியும், கட்டு உரைவன்மை - (நூற்பொருளை மாணுக்கர் எளிதில் உணரும்படி) தொடுத்துச்சொல்லுகின்ற சொல்வன்மை [போதநாசக்தி] யும், நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும் - பூமியையும் மலையையும் தராசுகோலையும் பூவையும் ஒக்கின்ற குணங்களும், உலகு இயல் அறிவோடு-உலகநடையையறிகிற அறிவும், உயர் குணம் இனையவும் - இவைபோல்வன பிற உயர்ந்த குணங்களும்,அமைபவனே - பொருந்தியிருக்கப் பெற்றவனே,—நூல் உரை ஆசிரியன் - நூலைக் கற்பிக்கும் ஆசிரியனாவான்; (எ - று.)

நில மலை நிறைகோன் மலர் நிகர்மாட்சியை, அடுத்த நான்கு சூத்திரங்களால் முறையே கூறுவர். ஈற்றிலுள்ள பிரிநிலையேகாரம், பிரித்துக்கூட்டப்பட்டது. (௨௬)

[நிலமாட்சி.]

௨௭. தெரிவரும் பெருமையுந் திண்மையும் * பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே.

(இ - ள்.) தெரிவு அரு - (ஓரிடத்தில்நின்று முழுவதுங்) காணுதற்கு அரிய, பெருமையும் - உருவப்பரப்பின் பெருமையும், திண்மையும் - (பெரிய பாரஞ்செய்து தன்மேல் நெருங்கியவைகளாற் கலங்காத) வலிமையும், பொறையும் - (தன்னையடுத்த மனிதர் தோண்டுதல்முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுக்கின்ற) பொறுமையும், பருவம் முயற்சி அளவின் பயத்தலும் - தக்கபருவத்திலே(உழவர்செய்கின்ற) முயற்சியளவுக்குத் தகுதியாக (அவர்க்கு)ப்பயன்கொடுத்தலும்,—நல் நிலம் மருவிய மாண்பு ஆகும்-நல்ல நிலத்தினிடத்துப் பொருந்திய நற்குணங்களாம்; (எ - று.)

பிறரால்வகுத்தறியப்படாத கல்வியறிவின் பெருமையும், பெரியவாதஞ்செய்து தன்மேல்நெருங்கினவராற் கலங்காத வல்லமையும், தன்னையடுத்தவர் இகழ்தல்முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும், மாணு

* "அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை, இகழ்வார்ப் பொறுத்தல் தலை" என்ற திருக்குறளைக் காண்க.

க்கர்செய்யும் முயற்சியளவிற்குத் தக அவர்க்குப் பயனைத் தருதலும் ஆசிரியனிடத்துப்பொருந்துங் குணங்க ளாதலால், நிலம் அவனுக்கு உவமையாமென அறிக. 'தெரிவரு' என்பதைத் திண்மை பொறைகளோடுங் கூட்டுக. (உஎ)

[மலைமாட்சி.]

உஅ. அளக்க லாகா வளவும் பொருளுந்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.

(இ - ள்.) அளக்கல் ஆகா - அளவுசெய்தற்கு அரிய, அளவும் - தன்வடிவத்தின் அளவும், பொருளும் - பலவகைப்பொருள்களையுடைமையும், துளக்கல் ஆகா நிலையும் - (எப்படிப்பட்ட வலிமையுடையவர்களாலும்) அசைக்கப்படாத உருவத்தின் நிலைமையும், தோற்றமும் - (நெடுந்தூரத்திலுள்ளாராலுங்) காணப்படுகின்ற உயர்ச்சியும், வறப்பினும் வளம் தரும் வண்மையும் - (மழை பெய்யாமல்) வறந்துபோனாலும் (தன்னைச்சேர்ந்த உயிர்கட்கு) நீர்வளத்தைக் கொடுக்கின்ற கொடையும்,—மலைக்கு - மலைக்கு (உள்ள நற்குணங்களாம்).

அளவுகாணக்கூடாத கல்வியினளவும், பலவகை நூற்பொருள்களும், எப்படிப்பட்ட புலமையுடையோராலும் அசைக்கப்படாத கல்வியறிவின் நிலையும், நெடுந்தூரத்திலுள்ளாராலும் அறியப்படும் உயர்ச்சியும், பொருள்வருவழி வறந்தாலுந் தன்னைச்சேர்ந்தமாணுக்கர்க்குக் கல்விப்பொருளைக் கொடுக்குங் கொடையும் ஆசிரியனுக்குஉள்ள குணங்களா மாதலால், மலை அவனுக்கு உவமையாமென அறிக. 'அளக்கலாகா' என்பதைப் பொருளோடுங் கூட்டுக. மலைக்கு மாண்பாகும் என முற்சூத்திரத்தினின்று வினை வருவித்து முடிக்க. (உஅ)

[நிறைகோல்மாட்சி.]

உகூ. ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே. *

(இ - ள்.) பொருளை ஐயம் தீர உணர்த்தலும் - (நிறுக்கப்பட்ட) பொருளினளவைச் சந்தேகந் தீரக் காட்டுதலும், மெய் நடு நிலையும் - உண்மைபெறத் தான் (இரண்டுதட்டுக்கும்) நடுவே (ஒருபாற்கோணுமல்) நிற்றலும்,—நிறைகோற்கு மிகும் - தராசுகோலுக்கு (நற்குணங்களாக) மிகும்; (எ - று.)

வினவப்பட்ட சொற்பொருளி னியல்பைச் சந்தேகந்தீர அறிவித்தலும், புலவர்இருவர் மாறுபட்டாராயின் உண்மைபெறத் தான் அவ்விருவர்க்கும் நடுவாகப் பக்ஷபாதமின்றி நிற்றலும் ஆசிரியனிடத்துக் குணங்களாக மிகு மாதலால், நிறைகோல் அவனுக்கு உவமையா மென அறிக. ஆசிரியனுக்கு மெய்ந்நடுநிலை - மாணுக்கர்பலருள் ஒருவனிடத்து விருப்பாகவும் ஒருவனிடத்து வெறுப்பாகவும் உணர்த்தாமையுமாம். (உகூ)

---

* "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற், கோடாமை சான்றோர்க்கு அணி" என்ற திருக்குறள் காணத்தக்கது.

[மலர்மாட்சி.]

௩௦. மங்கல மாகி யின்றி யமையாது
யாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே.

(இ - ள்.) மங்கலம் ஆகி - சுபகாரியங்கட்கு உரியதாய், இன்றி அமையாது - (அலங்கரிக்குந் தான்) இல்லாமல் (யாதொருசெய்கையும்) முடியாதாக, யாவரும் மகிழ்ந்து மேற்கொள - கண்டோரெல்லாரும் விரும்பி மேலாகத் தன்னைச்சூடிக்கொள்ள, மெல்கி - மென்மைக்குணமுடையதாய், பொழுதில் முகம் மலர்வு உடையது - மலர்தற்கு உரியகாலத்தில் முகமலர்தலையுடைமை,—பூ - பூவின் குணமாம்; (எ - று.)

சுபகாரியத்துக்கு உரியனாய்ச் சிறப்பிக்குந் தா னில்லாமல் யாதொருசெய்கையும் முடியாதாகக் கண்டோரெல்லாரும் விரும்பி மேலாகத் தன்னைவைத்துக்கொள்ள மெல்லியகுணமுடையவனாகிப் பாடஞ்சொல்லுதற்குரிய காலத்தில் முகமலர்ச்சியையுடையவனாயிருத்தல் ஆசிரியனுக்குக் குணமா மாதலால், பூ அவனுக்கு உவமையா மென அறிக. (௩௦)

[ஆசிரியராகாதவர்.]

௩௧. மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலும்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே.

(இ - ள்.) மொழி குணம் இன்மையும் - பாடஞ்சொல்லுங்குண மில்லாமையையும், இழி குணம் இயல்பும் - தாழ்ந்த குணமாகிய சுபாவத்தையும், அழுக்காறு -(மாணக்கர்க்கு வருங் கல்வியைக்குறித்துக் கொள்ளும்) பொறாமையையும், அவா - (செல்வத்தின்மேல் அதிகமாகவைக்கும்) ஆசையையும், வஞ்சம் - (மெய்ப்பொருளை மறைத்துப் பொய்ப்பொருளைக்கூறி) வஞ்சித்தலையும், அச்சம் ஆடலும் - (கேட்பவர்க்கு) அச்சமுண்டாகப் பேசுதலையும், கழல்குடம் மடல்பனை பருத்திக்குண்டிகை முடம்தெங்கு ஒப்பு என முரண்கொள்சிந்தையும் - கழற்காய்பெய்தகுடமும் கூரியகருக்குமடல்கள் விரியப்பெற்ற பனைமரமும் பஞ்சுஅடைத்த குடுக்கையும் வளைந்ததென்னைமரமும் (ஆகிய நான்கும் தமக்கு) ஒப்பென்று சொல்லும்படி மாறுபாடுகொண்ட மனத்தையும், உடையோர் - உடையவர்கள்,—ஆசிரியர் ஆகுதல் இலர் - கற்பிக்கும் ஆசிரியராகுதலிலராவர் [ஆசிரியராகார்]; (எ - று.)

இனி, 'மொழிகுணமின்மை' என்பதற்கு - கீழ் நல்லாசிரியர்க்குச்சொன்ன நற்குணங்க ளில்லாமை யென்றும், போதிக்குந் திறமில்லாமை யென்றும், 'அச்சமாடல்' என்பதற்கு - சபைக்கு அஞ்சுதலையுடைமையென்றும் பொருள்

கொள்ளலாம். கழற்குடம் முதலியவற்றின் தன்மையை, மேல் நான்கு சூத்திரங்களால் முறையே கூறுவர். (கூக)

[கழற்குடத்தின் தன்மை.]

கூஉ. பெய்தமுறை யன்றிப் பிறழ வுடன்றருஞ்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

(இ - ள்.) பெய்த முறை அன்றி - (முன்பு தன்னுள்ளே) இட்டமுறையின்படியல்லாமல், பிறழ -(முன் இடப்பட்டவையும் பின் இடப்பட்டவையும் அம்முறை) மாறிப்போம்படி, உடன் தரும் - (கொட்டும்போது) விரைவிலே (தன்னுள்ளே கொண்ட கழற்காய்களைக்) கொடுக்கின்ற, செய்தி - செய்கை,— கழல் பெய் குடத்தின் சீர் - கழற்காய்பெய்த குடத்தின் தன்மையாம்; (எ-று.)

தாம் கற்றுக்கொண்ட முறையினலல்லாமல் முன்பின்னுக அம்முறை மாறுபடப் போதிக்கும்போது தம்முள்ளேகொண்ட நூற்பொருள்களை விரைவிலே தருகின்ற செய்கை ஆசிரியராகாதவரது குற்றமாதலால், கழற்குடம் அவர்க்கு உவமையாமென அறிக. (கூஉ)

[மடற்பனையின் தன்மை.]

கூரு. தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை.

(இ - ள்.) தானே தர - (தன் பழங்களைத்) தானே கொடுக்க, கொளின் அன்றி - கொண்டா லல்லாமல், தன்பால் மேவி - (ஒருவர்) தன்னிடம்நெருங்கி ஏறிவந்து, கொள - பறித்துக்கொள்ளும்படி, கொடாஇடத்தது - இடங்கொடாதது, மடல் பனை - (தன்வடிவமுழுவதும்) கூரிய கருக்கு மடல்கள் விரியப்பெற்ற பனைமரத்தின் தன்மையாம்; (எ - று.)— இம்மடற்பனையி லேறுவார் அம்மடல்களின் கருக்கினுற் கொடும்புண்படுவ ரென்க.

தாமே தம்மிடத்திலுள்ள நூற்பொருள்களைச் சொல்லப் பிறர் அறிந்துகொண்டாலல்லாமல் ஒருவர் தம்மிடம் நெருங்கிவந்து வினவி அறிந்துகொள்ள இடங்கொடாதவர் ஆசிரியராகாதவ ராதலால், மடற்பனை அவர்க்கு உவமையாமென அறிக. கொடாவிடத்தது - விகுதிபிரித்துக்கூட்டப்பட்டது. (கூரு)

[பருத்திக்குண்டிகையின் தன்மை.]

கூச. அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்கு
எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

(இ - ள்.) அரிதின் பெய கொண்டு - (பஞ்சை உட்கொண்டபோதும்) அருமையாக [வருத்தத்தோடு] (சிறிதுசிறிதாக) அடைக்க (த் தன்னுள்ளே) கொண்டு, அ பொருள் - அப்பஞ்சை, தான் பிறர்க்கு எளிது ஈவு இல்லது - (கொடுக்கும்போதும்) தான் பிறர்க்கு எளிதிற்கொடாதது,—பருத்தி குண்டிகை - பஞ்சு அடைத்த குடுக்கையின் தன்மையாம்; (எ - று.)

கல்வியைக் கற்றபோதும் வருத்தத்தோடு சிறிதுசிறிதாகக் கற்பிக்கத் தாம் அறிந்துகொண்டு பாடஞ்சொல்லும்போதும் அக்கல்வியைத் தாம் பிறர்க்கு எளி

திற்கொடாதவர் ஆசிரியராகாதவ ராதலால், பருத்திக்குண்டிகை அவர்க்கு உவமையாமென அறிக. தன்வாய் சிறியதாதலாற் சிறிதுசிறிதாகவேகொண்டு அவ்வாறே கொடுக்கின்ற குண்டிகைபோல, தம் உணர்வு சிறியதாதலாற் சிறிது சிறிதாகவே கற்று மாணாக்கனுணர்வு பெரியதாயினும் அவ்வாறே கொடுப்பவ ரென்றபடி. (௩௪)

[முடத்தெங்கின் தன்மை.]

௩௫. பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே.

(இ - ள்.) பல்வகை உதவி - (நீர்பாய்ச்சுதல் முதலிய) பலவகைகளாலும் உபகரித்து, வழிபடு பண்பின் -(தனக்கு) வழிபாடுசெய்கின்ற [போற்றிவளர்க்கின்ற] தன்மையினின்றும், அல்லோர்க்கு - அல்லாத பிறர்க்கு, அளிக்குமது- (தன்காய்களைத்) தருவது,—முடம்தெங்கு - (வேலிக்குவெளிப்புறத்தே) வளைந்த தென்னைமரத்தின் தன்மையாம்; (எ - று.)

பொருள்கொடுத்தல் முதலிய பலவகைகளாலும் உபகரித்துத் தமக்குவழிபாடுசெய்யும் நன்மாணாக்கர்க்குத் தராமல் அத்தன்மையரல்லாத பிறர்க்குத் தாம் கற்றநூற்பொருளைத் தருபவர் ஆசிரியராகாதவ ராதலால், முடத்தெங்கு அவர்க்கு உவமையா மென அறிக. (௩௫)

௩. பாடஞ்சொல்லுதலின் வரலாறு.

௩௬. ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பிமுக மலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்த லென்ப.

(இ - ள்.) ஈதல் - (ஆசிரியன் மாணாக்கர்க்கு நூலைக்) கற்றுக்கொடுத்தலினது, இயல்பு - முறைமையை, இயம்பும் காலை - சொல்லும்போது,— காலமும் இடனும் - (இருவர்க்கும் உரிய) காலத்தையும் இடத்தையும், வாலிதின் நோக்கி - செவ்வையாக ஆராய்ந்துபார்த்து, சிறந்த உழி இருந்து - மேம்பட்ட இடத்தில் இருந்து, தன்தெய்வம் வாழ்த்தி - தான்வழிபடுங் கடவுளைத் துதித்து, உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து - (தன்னால்) பாடஞ்சொல்லப்படும் நூற்பொருளைத் தன்மனத்திற் பொருத்தமாக முன்னமே நிறைத்துவைத்துக்கொண்டு, விரையான் - விரைவுபடாமலும், வெகுளான் - கோபியாமலும், விரும்பி - விருப்பத்தோடுகூடி, முகம் மலர்ந்து - மலர்ந்த முகமுடையவனாய், கொள்வோன் கொள் வகை அறிந்து - கற்றுக்கொள்ளும் மாணாக்கன் தன்மனத்திற் கொள்ளுந் தன்மையை அறிந்துகொண்டு, அவன் உளம் கொள - அவன் மனத்தில் ஏற்றுக்கொள்ளும்படி, கோட்டம் இல் மனத்தின் - மாறுபாடில்லாத

நன்மனத்துடனே, நூல் - நூற்பொருளை, கொடுத்தல் - கற்றுக்கொடுத்தலாம், என்ப - என்று சொல்வர், (அறிவுடையோர்); (எ - று.)—சிறந்துழி - விகாரம்.

கொள்வோன் கொள்வகை - பாடங்கேட்பவனது அறிவின்திறம். (௩௬)

ச. மாணுக்கனது வரலாறு

[மாணுக்கராதற்கு உரியவர்.]

௩௭ * தன்மக னுசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே.

(இ - ள்.) தன் மகன் - தனது புத்திரனும், ஆசான் மகன் - தனது ஆசிரியனது புத்திரனும், மன்மகன் - அரசனது புத்திரனும், பொருள் நனி கொடுப்போன் - செல்வத்தை மிகுதியாகக்கொடுப்பவனும், வழிபடுவோன் - (தனக்கு) வழிபாடுசெய்பவனும், உரை கோளாளற்கு - (தான்சொல்லும்) உரையை (விரைவிலே) மனத்திற்கொள்ளும் அறிவுடையவனும் ஆகிய இவர்கட்கு, நூல் உரைப்பது - நூல் சொல்லத்தக்கதாம்; (எ - று.)

தன்மகன் முதலிய நால்வர்க்கும் வழிபாடின்றியும் உரைக்கவேண்டுமென்பார் அவரை முன்வைத்து, உரைகோளாளனும் வழிபடுதல் வேண்டுமென்று அறிவித்தற்கு அவனை வழிபடுவோனுக்குப்பின்னே வைத்தார். (௩௭)

[மாணுக்கரின் வகை - ௩.]

௩௮. அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணுக்கர்.

(இ - ள்.) அன்னம் ஆவே - அன்னப்பறவையும் பசுவும் என்னும் இரண்டையும், மண்ணொடு கிளியே - நிலமும் கிளியும் என்னும் இரண்டையும், இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி - சில்லிக்குடமும் ஆடும் எருமையும் பன்னாடையும் என்னும் நான்கையும், அன்னர்-ஒப்பவர்,—தலை இடை கடை மாணுக்கர் - (முறையே) உத்தமமாணுக்கரும் மத்திமமாணுக்கரும் அதமமாணுக்கருமாவர்; (எ - று.)—இது, முறைநிரனிறைப்பொருள்கோள்.

இவற்றுள் அன்னம் பாலையும் நீரையும் வேறுபிரித்துப் பாலைமாத்திரம் உட்கொண்டு நீரை நீக்கிவிடுதல்போல முதல்மாணுக்கர் சாரத்தையும் அசாரத்தையும் வேறுபிரித்துச் சாரத்தை உட்கொண்டு அசாரத்தை விலக்கிவிடுதலாலும், பசு மிக்க புல்லுள்ள இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறுநிரம்ப மேய்ந்து பின்பு ஓரிடத்தில் இருந்து சிறிதுசிறிதாக அதனை வாயில் வருவித்துக் கொண்டு மென்றுதின்று ஜீர்ணப்படுத்துதல்போல முதல்மாணுக்கர் மிக்ககல்வியுள்ள ஆசிரியனைக் கண்டால் அக்கல்வியை உள்ளம் நிரம்பக் கேட்டு உட்

*தொல்காப்பியத்து இளம்பூரணருரை மேற்கோள்.

கொண்டு பின்பு ஓரிடத்தில் இருந்து அதனைச் சிறிதுசிறிதாக நினைவிற் கொண்டுவந்து சிந்தித்துத் தெளிதலாலும், அவர்க்கு இவ்விரண்டும் உவமையாயின. பசுவுக்குப் புல்மேய்தலும் அசைவுபோட்டு மெல்லுதலுமே முக்கியமான தொழில்களாதல்போல, இடைவிடாமற் பாடங்கேட்டலுஞ் சிந்தித்தலுமே தலைமாணுக்கர்க்கு முக்கியமான தொழில்களா மென்றபடி.

நிலம் உழவர் வருந்திப்பயிர்செய்யும் முயற்சியளவுக்குத் தக்க விளைவைத் தருதல்போல நடுமாணுக்கர் ஆசிரியன்கற்பித்த முயற்சியளவுக்குத் தக்க கல்வியறிவையே காட்டுதலாலும், கிளி தனக்குக் கற்பித்த சொல்லை யல்லாமல் வேறொன்றையுஞ் சொல்லமாட்டாமைபோல இடைமாணுக்கர் தமக்குக் கற்பித்த நூற்பொருளையல்லாமல் வேறொருநூற்பொருளையுஞ் சொல்லமாட்டாமையாலும், அவர்க்கு இவ்விரண்டும் உவமையாயின. ஏறுமாற் குறையாமற் சொல்லித்தபடி சொல்வது, கிளிக்கு இயல்பு.

சில்லியுள்ள குடம் நீரை வார்க்கவார்க்கப் புறத்தே ஒழுகவிட்டு எப்பொழுதும் நிரம்பாமைபோலக் கடைமாணுக்கர் ஆசிரியர் தமக்கு நூற்பொருளைக் கற்பிக்கக்கற்பிக்க மனத்திற்கொள்ளாது மறந்து எப்பொழுதும் கல்விநிரம்பாமையாலும், ஆடு ஒருசெடியிலே தன்வயிறுநிரம்பும்படி தழைநிறைந்திருந்தாலும் அதனை வயிறுநிரம்ப மேயாமற் சிறிது கடித்தமாத்திரத்திலே விட்டுப் பலசெடிகளிலுஞ்சென்று சிறிதுசிறிது மேயப்புகுமியல்பினதாய் எங்கும் வயிறு நிரம்பாமைபோல ஓராசிரியனிடத்தே தமக்குப் புலமைநிரம்பும்படி கல்வி மிக்கிருந்தாலும் புலமைநிரம்ப அவனிடங் கற்றுக்கொள்ளாமல் அவனிடம் ஒருநூலைச் சிறிதுகற்றமாத்திரத்திலே விட்டுப் பலரிடத்தும்போய்ச் சிறிதுசிறிதாகப் பலநூல்களைப் பாடங்கேட்கப்புக்கு எங்கும் புலமைநிரம்பாமையாலும், எருமை தெளிந்த நீரைக் கலக்கிக்குடித்தல்போலக் கடைமாணுக்கர் ஆசிரியனது நன்மனத்தை வருத்திக் கலங்கச்செய்து பின்பு அவன் வெறுப்புக்கொண்டு பாடஞ்சொன்னதைக் கேட்டுப் போதலாலும், பன்னாடையானது நெய் தேன் முதலியவற்றை வடிகட்டுதற்பொருட்டுத் தன்மேல்வார்க்கும்போது அவற்றிற் சாரத்தைக் கீழேயொழுகவிட்டு அசாரமான கசட்டையே தன்னிடந் தங்கப்பெற்றுக்கொள்ளுதல்போலக் கடைமாணுக்கர் தமக்கு நல்லாசிரியன் நூல்கற்பிக்கும்போது அவன்வாயினின்று வந்தவற்றில் விதியாகிய நற்பொருள்களையெல்லாம் மறந்துவிட்டு விலக்காகிய தீப்பொருளையே பற்றிக்கொள்ளுதலாலும், இந்நான்கும் கடைமாணுக்கர்க்கு உவமையாயின. (கூஅ)

இங்கு ஒரு சூத்திரம் பரீக்ஷைக்குப் பாடமில்லை.

ரு. பாடங்கேட்டலின் வரலாறு.

[பாடங்கேட்கும் முறை.]

௪௦. கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்

பருகுவ னன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்.

(இ - ள்.) கோடல் மரபு - பாடங்கேட்டலின் விதத்தை, கூறும் காலை - சொல்லும்பொழுது,—பொழுதொடு சென்று - (தக்க) காலத்திலே போய், வழிபடல் முனியான் - வழிபாடு செய்தலில் வெறுப்பில்லாதவனாய் [மிக்க விருப்பமுள்ளவனாய்], குணத்தொடு பழகி -(ஆசிரியனது) குணத்துக்குத் தக்க படி பழகி, அவன் குறிப்பின் சார்ந்து - அவன்குறிப்பின்வழியிலே சேர்ந்து [தான் வரலா மென்ற ஆசிரியன்கருத்தைக் குறிப்பால் நுட்பமாக அறிந்து கிட்டி], இரு என இருந்து - 'இரு' என்று (ஆசிரியன்) சொன்ன பின்பு இருந்து, சொல் என சொல்லி - 'படி' என்று (ஆசிரியன்)சொன்னபின்பு படித்து, பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகி - மிக்கதாகமுள்ளவன் நீரினிடத்துக் கொள்ளும் விருப்பம்போலத் தான் பாடங்கேட்டலில் மிக்கவிருப்பமுடையவனாய், சித்திரம் பாவையின் அத் தகவு அடங்கி - சித்திரத்திலெழுதிய பிரதிமையினது அசைவில்லாத அக்குணம்போல மன மொழி மெய்க ளடங்கி, செவி வாய் ஆக - காது (கல்வியாகியநீரைப் பருகும்) வாயாகவும், நெஞ்சு களன் ஆக - மனம் கொள்ளுமிடமாகிய வயிறாகவும், கேட்டவை கேட்டவை - (ஆசிரியனிடத்திற்) பலமுறைகேட்ட நூற்பொருள்களை, விடாது உளத்து அமைத்து - மறந்துவிடாமல் தன்மனத்தில் நிரம்பப் பதியவைத்துக்கொண்டு, போ என போதல் - 'போ' என்று (ஆசிரியன்) சொன்னபின்பு தான் மீண்டுபோகுதலாம், என்மனார் புலவர் - என்று சொல்வர் அறிவுடையோர்; (எ - று.)— களன் - இங்கே, வயிறு என்றபடி.

இனி, 'சொல்லெனச் சொல்லி' என்பதற்கு - ஆசிரியன் கீழ்நடந்தபாடத்தைச் சொல் என்றவுடனே தான் சொல்லி என்றலுமாம். கேட்டவைகேட்டவை, அடுக்கு - மிகுதிப்பொருளது. கோடல்=கொள் + தல்: கொள்ளுதல்; ஆசிரியன் கற்றுக்கொடுப்பதை மாணாக்கன் பெற்றுக்கொள்ளுதல். (௪௦)

[நூற்பயிற்சிசெய்யும்விதம்.]

௪௧. நூல்பயி லியல்பே நுவலின் வழக்கறிதல்
* பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்.

---

* தொல்காப்பியத்து இளம்பூரணருரை மேற்கோள்.

(இ - ள்.) நூல் பயில் இயல்பு - நூற்பயிற்சிசெய்தலின் தன்மையை, நுவலின் - சொல்லுமிடத்து,—வழக்கு அறிதல் - (உலகவழக்குச் செய்யுள்வழக்கு என்னும்) இருவகைவழக்குக்களை அறிதலும், பாடம் போற்றல் - மூலபாடங்களை (மறவாமற்) பாதுகாத்தலும், கேட்டவை நினைத்தல் - (ஆசிரியனிடத்துக்) கேட்ட நூற்பொருள்களை(ப் பலமுறை) சிந்தித்தலும், ஆசான் சார்ந்து அவை அமைவர கேட்டல் - ஆசிரியனை அடுத்து முன்கேட்ட அவற்றையே குறைவு தீர மனத்திற்பதியும்படி மறுபடியுங் கேட்டலும், அ மாண்பு உடையோர்தம்மொடு பயிறல் - அவ்வாறு கற்குந்தொழிலுடைய மாணக்கர்களோடு பழகுதலும், வினதல் - (தான்சந்தேகித்த பொருள்களைக்குறித்து அவர்களைக்) கேள்வி கேட்டலும், வினயவை விடுத்தல் - (அவர்கள்கேட்ட) கேள்விகட்குத் தான் உத்தரஞ்சொல்லுதலும், என்ற இவை - என்றுசொல்லப்பட்ட இச்செயல்களையெல்லாம், கடன் ஆ கொளினே - (தனக்கு முறைமையாக மாணக்கன்) கொண்டால்தான், மடம் - அறியாமையானது, நனி - மிகுதியும், இகக்கும் - (அவனைவிட்டு) நீங்கும் ; (எ - று.) (சக)

சஉ. * ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே.

(இ - ள்.) ஒரு குறி கேட்போன் - ஒருநூலை ஒருதரம் பாடங்கேட்பவன், இரு கால் கேட்பின் - (ஒருதரங் கேட்டவளவில் அமையாமல்) இரண்டுதரங் கேட்டானாயின், (அவன்),—நூலில் - அந்நூலில், பிழைபாடு - தவறுபடுதல், பெருக இலன் - மிகுதியும் இலனவன் ; (எ - று.)

பிழை - ஐயந் திரிபு. இது, கீழ்ச்சூத்திரத்திற் கூறின 'ஆசாற்சார்ந்து அவை அமைவரக்கேட்ட'லின் பயன் ; அடுத்த சூத்திரமும் இவ்வாறே. (சஉ)

சந. * முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்.

(இ - ள்.) முக் கால் கேட்பின் - மூன்று தரங் கேட்டானாயின்,—முறை அறிந்து - (ஆசிரியன் கற்பித்த) முறைமையை அறிந்து, உரைக்கும் - (தான் பிறர்க்குச்) சொல்லவல்லவனாவான் ; (எ - று.) (சந)

சச. * ஆசா னுரைத்த தமைவரக் கொளினுங்
காற்கூ றல்லது பற்றல னாகும்.

(இ - ள்.) (மாணக்கன்),—ஆசான் உரைத்தது - ஆசிரியன் கற்பித்த நூற்பொருளை, அமைவர கொளினும் - (மேற்சொல்லியவாறு தன்அறிவில்) நிரம்பக் கற்றுக்கொண்டானாயினும்,—கால் கூறு அல்லது பற்றலன் ஆகும் - (ஆசிரியனது புலமைத்திறத்திற்) காற்பங்கு பெறுவனேயல்லது அதற்கு அதிகமாகப் பெறான் ; (எ - று.) (சச)

சரு. * அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகால்
செவ்வித் னுரைப்ப வவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.

* தொல்காப்பியத்து நச்சினார்க்கினியருரை மேற்கோள்.

'(இ - ள்.) அ வினையாளரொடு-அவ்வாறு கற்குந் தொழிலுடைய மாணாக்கர்களோடு, பயில் வகை - பழகும்வகையால், ஒரு கால் - ஒரு காற்பங்கும்,—செவ்வியின் உரைப்ப - (தன்மாணாக்கர்க்குஞ் சபையார்க்குந் தான்) ஒழுங்காகச் சொல்லுதலால், அ இரு காலும்- மற்றை இரண்டு காற் [அரைப்]பங்குமாக,—மை அறு புலமை - குற்றமற்ற புலமைத்திறம், மாண்பு உடைத்து ஆகும் - (நிரம்பி) மாட்சிமை யுடையதாம்; (எ - று.)—இது, 'அம்மாண்புடையோர் தம்மொடு பயிறல், வினாதல், வினாயவைவிடுத்தல்' என்றவற்றின் பயன். மூன்றின சூத்திரம், அவற்றின் இன்றியமையாமையைக் காட்டும். (சடு)

[மாணாக்கர் வழிபாடுசெய்யும் விதம்.]

சசு. அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோடு
* எத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே.

(இ - ள்.) அழலின் - (குளிருக்காக அனல்காய்பவன் விட்டு நீங்காமலும் நெருங்காமலும் இருக்கின்ற) நெருப்பைப் போல (ஆசிரியனை நினைத்து), அஞ்சி நீங்கான் அணுகான் - அச்சங்கொண்டு விட்டுநீங்காமலுங் கிட்டநெருங்காமலும் (இருந்து), நிழலின் நீங்கான் - (அவன்சென்றவிடத்தெல்லாம்) நிழலைப் போல விடாது பின்தொடர்ந்து சென்று, நிறைந்த நெஞ்சமோடு - அன்புநிரம்பின மனத்துடன் கூடி, எத் திறத்து ஆசான் உவக்கும் அத் திறம் - எவ்வகையால் ஆசிரியன் மகிழ்வானோ அவ்வகையோடு பொருந்தி, அறத்தின் திரியா படர்ச்சி - தருமத்தினின்றும் மாறுபடாத நடத்தையானது,—வழிபாடு-(மாணாக்கன் ஆசிரியனுக்குச் செய்யும்) வழிபாடாம்; (எ - று.)

குளிர்காய்வோன் தீயை விட்டுவிலகினால், குளிர்நீங்குதலாகியபயன் சித்தியாது; நெருங்கினால், சூடு தாக்கும்: ஆதலால், மிகவிலகாமலும் மிகநெருங்காமலும் அளவாகச் சார்தல் போல, மாணாக்கன் ஆசிரியனை விட்டுவிலகினால் அவனருள்பெறுதலாகிய கருதியபயன் கைகூடா தாதலாலும், மிகநெருங்கினால் அவனை அவமதித்தான்போன்று அவனது வெறுப்புக்கு இலக்காதலாலும், அளவாகச் சார்ந்து வழிபடுதல்வேண்டு மென்க. (சசு)

பொதுப்பாயிரத்தின் இலக்கணம் முற்றிற்று.

இரண்டாவது

சிறப்புப்பாயிரத்தின் இலக்கணம்.

[சிறப்புப்பாயிரத்தின் பொதுவிதி.]

சஎ. ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே

* தொல்காப்பியத்து இளம்பூரணருரை மேற்கோள்.

கேட்போர் பயனொ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.

(இ - ள்.) ஆக்கியோன் பெயரே - (நூலைச்)செய்தவனது பெயரும், வழியே - (நூல்வந்த) வழியும், எல்லை - (நூல் வழங்கும் நிலத்தின்) எல்லையும், நூல் பெயர் - நூலின் பெயரும், யாப்பே -(தொகுத்தல் முதலிய) நூற்கட்டும், நுதலிய பொருளே - (நூலிற்) சொல்லப்பட்ட பொருளும், கேட்போர் - (இந்நூல்) கேட்டற்குரிய அதிகாரிகள் இவரென்பதும், பயனொடு - (நூல்கற் றதனாற் பெறப்படும்) பயனும், ஆ எண் பொருளும் - அவ்வெட்டுவகைப்பொருள்களையும், வாய்ப்ப காட்டல் - விளங்க உணர்த்துதல்,—பாயிரத்து இயல்பு - சிறப்புப்பாயிரத்தின் இலக்கணமாம் ; (எ - று.)

இனி, யாப்பு - இந்நூல் கேட்டபின் இந்நூல் கேட்கத்தகு மென்னும் இயைபு என்றும், கேட்போர் - நூலையியற்றித்தருக வெனக் கேட்பவர் என்றும் உரைப்பாரு முளர் ; யாப்பு என்பதற்கு - இந்நூல் இன்னவகைச்செய்யுளாற் செய்யப்பட்ட தென்ப தென்றலும் ஒன்று. ஆயெண்பொருள் - சுட்டு நீண்டவிடத்து யகரந் தோன்றிற்று ; ஆய எண்பொருள் என்பதன் தொகுத்தலெனக் கொண்டு உரைக்கவும் அமையும்: ஆய=ஆகிய.

இச்சூத்திரமும், அடுத்தசூத்திரமும் - முன்னோர் செய்தவற்றை மேற்கோளாகக் கொண்டன. * (க)

சச. ❋ காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே.

(இ - ள்.) காலம் - (நூல்செய்த) காலமும், களனே - (நூல்அரங்கேறிய) சபையும், காரணம் - (நூல்செய்தற்குக்) காரணமும், என்ற இ மூவகை-என்ற இந்தமூன்றையும், ஏற்றி - (அந்தஎட்டோடு) கூட்டி, மொழிநரும் - (பதினொன்றாகச்) சொல்வாரும், உளர் - (சிலர்) உண்டு ; (எ - று.)

காலம் முதலிய மூன்றும் நூல்செய்தகாலத்தன்றி நூல்வழங்குங் காலத்து இல்லாமையால், பிறன்கோட்கூறலாகத் தனியே பிரித்துக் கூறினர். (உ)

[நூற்பெயர்க்குச் சிறப்புவிதி : நூற்குப் பெயரிடும்வகை.]

சரு. முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்
இடுகுறி யானும் நூற்கெய்தும் பெயரே.

(இ - ள்.) நூற்கு - ஒருநூலுக்கு,—முதல்நூல் - (அந்நூலின்) முதனூலும், கருத்தன் - (அந்நூல்) செய்தவனும், அளவு - (அந்நூலின்) அளவும், மிகுதி - (அந்நூலிற்சொல்லப்படும் பொருள்களுள்) மிக்கதான பாகமும், பொருள் - (அந்நூலிற் சொல்லப்பட்ட) பொருளும், செய்வித்தோன் - (அந்நூல் செய்வோனுக்குப் பொருளுதவிமுதலியனசெய்து நூலைச்) செய்வித்தவனும்,

* க, உ - சூத்திரங்கள் - இறையனாரகப்பொருளுரை மேற்கோள்.

தன்மை - (அந்நூலின்) குணமும், முதல் - முதலாகிய, நிமித்தினும் - காரணங்களாலும், இடுகுறியானும் - (காரண மில்லாமல்) இடுகுறியாலும், பெயர் எய்தும் - பெயர் வரும் ; (எ - று.)—நிமித்து - நிமித்தம் : விகாரம்.

முதனூலாற் பெயர்பெறுதல் வழிநூல் சார்புநூல்கட்கே அமையுமென்பது, 'ஏற்புழிக்கோடல்' என்னும் உத்தியால் விளங்கும்.

முதனூலாற் பெயர்பெற்றன - தமிழிலுள்ள இராமாயணம், பாரதம் முதலியன. கருத்தனாற் பெயர்பெற்றன - அகத்தியம், திருவள்ளுவர் முதலியன. அளவினாற் பெயர்பெற்றன - பன்னிருபடலம், நாலடிநானூறு முதலியன. மிகுதியாற் பெயர்பெற்றன - களவியல் முதலியன. பொருளாற் பெயர்பெற்றன - அகப்பொருள் முதலியன. செய்வித்தோனாற் பெயர்பெற்றன - சாதவாகனம், இளந்திரையம் முதலியன வென்பர். தன்மையாற் பெயர்பெற்றன - சிந்தாமணி, நன்னூல் முதலியன. இடுகுறியாற் பெயர்பெற்றன - கலைக்கோட்டுத்தண்டு முதலியன வென்பர்; (காண்டிகையென்னும் உரைப்பெயரையும் இடுகுறியென்பர் :) பிறவும் இவ்வாறுவருவன உளவாயின் கண்டுகொள்க.

ஆத்திசூடி, கண்ணிநுண்சிறுத்தாம்பு என்றாற்போல முதற்குறிப்பினாற் பெயர்பெற்றவை முதலியன, இச்சூத்திரத்தில் 'முதல்நிமித்து' என்றதற்கு உதாரணமாம். (௯)

[நூல்யாப்பிற்குச் சிறப்புவிதி.]

௱௦. தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு
எனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப.

(இ - ள்.) தொகுத்தல் - (விரிந்துகிடந்ததைத்) தொகுத்துச் செய்தலும், விரித்தல் - (தொக்குக்கிடந்ததை) விரித்துச்செய்தலும், தொகை விரி - சிலவற்றைத்தொகுத்தும் சிலவற்றைவிரித்தும் செய்தலும், மொழிபெயர்ப்பு - (ஒரு பாஷையிலுள்ளநூலை) மற்றொருபாஷையிற்செய்தலும், என - என்று, தகும் நூல் யாப்பு - தக்க நூல்யாப்பானது, ஈர் இரண்டு - நால்வகைப்படும், என்ப - என்றுசொல்வர், (அறிவுடையோர்); (எ - று.)—நூல் யாப்பு - நூற்கட்டு.

தொகுத்தலுக்கும், மொழிபெயர்த்தலுக்கும் உதாரணம் - வடமொழியில் இருபத்தினாலாயிரஞ் சுலோகமான வால்மீகத்தைக் கம்பர் தென்மொழியிற் பன்னீராயிரஞ் செய்யுளாக்கியது போல்வன; பாரதமும் இது. விரித்தலுக்கு உதாரணம்-திருத்தொண்டத்தொகையென்னும் பதிகத்தைச் சேக்கிழார் பெரிய புராணமாக விவரித்தது போல்வன. தொகைவிரிக்கு உதாரணம் - தொல்காப்பியத்திற் குற்றியலுகரப்புணரியலெனத் தனித்துக்கூறியதனை இந்நூலில் உயிரீற்றுப்புணரியலுள் அடக்கியும், தொல்காப்பியத்திற் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள காலஇடைநிலைகளை இந்நூலில் விரித்துங் கூறியது போல்வன. (௪)

[சிறப்புப்பாயிரஞ்செய்தற்கு உரியவர்.]

௱௧. தன்னா சிரியன் தன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் தகுமுரை காரனென்று
இன்னோர் பாயிர மியம்புதல் கடனே.

(இ - ள்.) தன் ஆசிரியன் - தன்னுடைய ஆசிரியனும், தன்னொடு கற்றோன் - தன்னோடு பாடங்கேட்டவனும், தன் மாணுக்கன் - தன்னுடைய மாணுக்கனும், தகும் உரைகாரன் - (தான்செய்த நூலுக்குத்) தக்க உரைசெய்தவனும், என்ற இன்னோர் - என்றுசொல்லப்பட்ட இந்நால்வரில் ஒருவர், பாயிரம் - சிறப்புப்பாயிரத்தை, இயம்புதல் - சொல்லுதல், கடன் - முறைமை. (ரு)

[சிறப்புப்பாயிரம் பிறர்செய்தற்குக் காரணம்.]

௫௨. * தோன்ரு தோற்றித் துறைபல முடிப்பினுந்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே.

(இ-ள்.) தோன்ரு - (பிறர்க்குத்) தோன்ருத நுட்பமானபொருள்களை, தோற்றி - தான் தோன்றச்செய்து [காட்டி], துறை பல முடிப்பினும் - பல துறைகள் (அமையப் பெரியநூலைச் செய்து) முடித்தாலும்,—தான் தன் புகழ்தல் - தானே தன்னைப் புகழ்ந்துகொள்வது, தகுதி அன்று - தக்கதன்ரும்.

நூல்செய்தவனே சிறப்புப்பாயிரமுஞ் செய்துகொண்டால் தற்புகழ்ச்சி செய்தவனுவ னுதலால், நூல்செய்பவனது புகழாகிய சிறப்புப்பாயிரத்தைப் பிறர் கூறவேண்டு மென்பதாம். † (சு)

[தற்புகழ்ச்சி குற்றமாகாத இடங்கள்.]

௫௩. மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோற்கே.

(இ - ள்.) மன்னுடை மன்றத்து ஓலைத்தூக்கினும் - அரசனதுசபைக்கு எழுதுகிற சீட்டுக்கவியிலும், தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும் - தன்னுடைய (கல்வியின்) வலிமையை அறியாதவரிடத்திலும், மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும் - நிலைபெற்ற சபையிற் (பிறரோடு வாதஞ் செய்து) சயிக்கும்பொழுதிலும், தன்னை மறுதலை பழித்த காலையும் - தன்னை எதிரியாகிய புலவன் இகழ்ந்துபேசிய காலத்திலும், தன்னை புகழ்தலும் - தன்னைத் தான் புகழ்ந்துகொள்ளுதலும், புலவோற்கு - புலவனுக்கு, தகும்—.

'புகழ்தலும்' என்ற இழிவுசிறப்பும்மையால், இவ்விடங்களிலுந் தற்புகழ்ச்சிசெய்யாமையே மேம்பட்ட தென்பது பெறப்படும். (எ)

---

* தொல்காப்பியத்து இளம்பூரணருரை மேற்கோள்.

† சிறுபான்மை நூலாசிரியர் தாமே தம்மைப் பிறன்போலும் பாயிரங் கூறுதலும் உண்டு. பிரயோகவிவேகநூலார் 'இது, தன்னைப் பிறன்போலும் நாந்தி கூறுகின்றது', 'வடநூலார் தாமே பதிகமும் உரையுஞ் செய்வார்', 'இனிச் சம்பந்தர் சடகோபர் முதலாயினரும் திவாகரரும் பதினெண்கீழ்க்கணக்குச் செய்தாரும் முன்னுகப் பின்னுகப் பதிகங்கூறுவதுங் காண்க' என்றவை காணத்தக்கன. அது, தற்சிறப்புப்பாயிர மெனப்படும்.

[பாயிரம் அவசிய மென்பது.]

௫௪. * ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே.

(இ - ள்.) ஆயிரம் முகத்தான் - மிகப்பல வகைகளால், அகன்றது ஆயினும் - விரிந்த நூலாயினும்,—பாயிரம் இல்லது - பாயிரமில்லாதது, பனுவல் அன்று - நூலன்றாம்; (எ - று.)—ஏ - தேற்றம்.

இச்சூத்திரம், முன்னோர்செய்ததை மேற்கோளாகக் கொண்டது.

'எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க' என்பது, இலக்கணம்: என்னை? "ஆயிர முகத்தா னகன்ற தாயினும், பாயிரமில்லது பனுவ லன்றே" என்றாராதலின். பாயிரமென்றது, புறவுரையை. நூல்கேட்கின்றான் புறவுரை கேட்கின், கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறுபோல, அந்நூல் இனிது விளங்குதலின், புறவுரைகேட்டல்வேண்டும்; என்னை? "பருப்பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு, நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்" என்றாராதலின். அப்பாயிரந்தான், தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், நூற்கு இன்றியமையாச்சிறப்பிற்றாயிருத்தலின், அது கேளாக்கால், குன்றுமுட்டிய குரீஇப்போலவும், குறிச்சிபுக்க மான்போலவும், மாணாக்கன் இடர்ப்படுமென்க' என்பது, தொல்காப்பிய நச்சினார்க்கினியருரைத்தொடக்கம். (அ)

பொதுப்பாயிரம் முற்றுப்பெற்றது.

* இறையனாரகப்பொருளுரை மேற்கோள்.